

# தமிழில் தல புராணங்கள்

டாக்டர் வே. இரா. மாதவன்

# தமிழில் தலபுராணங்கள்

(முதற் பகுதி)

**டாக்டர் வே. இரா. மாதவன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்–5*

பாவை வெளியீட்டகம்

முன்றில் எண் : 1 (சி-1), முன்றில் சாலை
தமிழ்ப் பல்கலைக்கழகக் குடியிருப்பு வளாகம்
திருச்சி நெடுஞ்சாலை, தஞ்சாவூர்-613 005.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | : | Thamizhil Thalapuranangal (Sthalapuranas in Tamil - part I) |
| Author | : | Dr. V. R. MADHAVAN, M.A., B.Ed., Ph.D., Senior Lecturer, Dept. of palmleaf Manuscripts, Tamil University, Thanjavur-613 005. |
| Publisher and copy right | : | Mrs. M. Uma Maheswari, Paavai publications C-1, Tamil University Staff Quarters, Trichy High Road. Thanjavur-613 005. |
| Publication No. | : | 10 |
| Language | : | Tamil |
| Date of publication | : | March 1995 |
| Editon | : | First |
| Paper Used | : | 14. 2 kg White Printing |
| Size of the book | : | 21×14 cms |
| Printing types used | : | 10 point |
| No. of copies | : | 1000 |
| No. of pages | : | 32+420=452 |
| Price | : | Rs. 70-00 |
| Printers | : | Kavinkalai Achagam, Kanthasami Nagar, Palavakkam, Madras-600 041 |
| Artist | : | Nathan |
| Subject | : | A Detailed study of Sthalapuranas in Tamil |

# THAMIZHIL THALAPURANANGAL

(Sthalapuranas in Tamil)

PART I

THIS BOOK IS

PUBLISHED WITH THE FINANCIAL ASSISTANCE OF

TIRUMALA TIRUPATI DEVASTHANAMS

UNDER THEIR SCHEME

"AID TO PUBLISH RELIGIOUS BOOKS".

**Dr. V.R. MADHAVAN**

M.A. B.Ed., Ph.D.

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| அணிந்துரை | v |
| சிறப்புரை | xiii |
| FOREWORD | xvii |
| முன்னுரை | xxiii |
| தமிழில் தலபுராணங்கள் | 1—46 |
| சோழநாட்டுத் தலபுராணங்கள் | 47—150 |
| பாண்டிநாட்டுத் தலபுராணங்கள் | 151—221 |
| தொண்டைநாட்டுத் தலபுராணங்கள் | 222—294 |
| நடுநாட்டுத் தலபுராணங்கள் | 295—343 |
| கொங்குநாட்டுத் தலபுராணங்கள் | 344—388 |
| மலைநாட்டுத் தலபுராணங்கள் | 388 |
| துளுவநாட்டுத் தலபுராணங்கள் | 388 |
| சிறப்புப் பெயர் அகராதி | 389—413 |
| பிழை திருத்தம் | 414—419 |

# அணிந்துரை


**டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்**

முன்னாள் இயக்குநர் :

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-600 113

மதிப்புறு இயக்குநர் :

உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், தமிழூர்-627 808


உலகத் தமிழ்க் கல்வி இயக்கத்தார் ஏற்படுத்தியுள்ள பேராசிரியர் டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் மணிவிழா நினைவு அறக்கட்டளையின் ஆறாவது சொற்பொழிவு 17-2-92 அன்று திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் நிகழ்ந்தது. என்னுடைய மாணாக்கர் டாக்டர் வே. இரா. மாதவன் அவர்கள் தமிழில் தலபுராணங்கள் என்னும் தலைப்பில் இச்சொற்பொழிவை நிகழ்த்தியதுடன் ஒரு பெருநூலாகவும் இதனை அன்றே உருவாக்கி அளித்திருந்தார். அந்நூல் இப்பொழுது அச்சு வடிவில் வெளிவருவது கண்டு மிகவும் மகிழ்கிறேன்.

தமிழிலுள்ள தலபுராண நூல்கள் அனைத்தையும் ஒன்றாகத் தொகுத்துக் காண வேண்டுமென்பது என்னுடைய நீண்ட நாளைய எண்ணம். இதை நூல் வடிவில் திரு. மாதவன் அவர்கள் உருவாக்கி அளித்திருப்பது அனைவருக்கும் பயனுடையதாகும்.

தமிழில் தலபுராணம் தோன்றிய காலம் முதல் இருபதாம் நூற்றாண்டின் இறுதி வரையில் கிடைக்கக்கூடிய அனைத்து நூல்களையும் முழுமையாகப் பார்வையிட்டு, அவற்றைத் தொகுத்தும் வகுத்தும் தந்துள்ளமை மிகவும் பாராட்டுக்குரிய தாகும். இவ்வகையில், தமிழில் வெளிவரும் முதல் நூல் இதுவே யாகும்.

சைவ, வைணவ ஆன்மீகப் பெருமக்களுக்கு மட்டுமன்றித் தலபுராண நூல்களை ஆராயும் அனைத்து அறிஞர்களுக்கும் இது ஒரு கருவிநூலாக அமையும் எனக் கருதுகிறேன். இந்நூல் இரண்டு பகுதிகளாக வெளிவருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய நாட்டில் தோன்றிய புராண நூல்களைப் பற்றியும் தமிழில் தோன்றிய புராணங்கள் பற்றியும் முதல் முப்பது பக்கங்களில் மிக விரிவான முறையில் விளக்குகிறார் இந் நூலாசிரியர். தலம் என்பது கோயிலையே குறிக்கும் என்று கூறி, தமிழ்நாட்டுக் கோயில் சிறப்பையும் விரிவாக விளக்குகிறார்.

தேவார, திருவாசக ஆசிரியர்கள் பாடியருளிய திருத்தலங் களையும், ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த திருத்தலங் களையும் அடிப்படையாகக் கொண்டு தமிழிலுள்ள தலபுராணங் களை அணுகியிருப்பது வரலாற்று நோக்கிலும், பக்தி இயக்க நோக்கிலும் மிகவும் பொருத்தமுடையதாகும்.

பாடல் பெற்ற தலங்கள் வரிசையில் சோழ நாடு, பாண்டிய நாடு, தொண்டை நாடு, நடுநாடு, கொங்கு நாடு, மலைநாடு, துளுவ நாடு, வடநாடு, ஈழநாடு எனத் தலபுராணங்களைப் பகுத்துக் காண்பது இவ்வகை இலக்கியம் தமிழில் பல்கிப் பெருகியதை ஆராய்வதாக அமைந்துள்ளது.

தமிழில் இன்று கிடைக்கக்கூடிய தலபுராண நூல்களுள் மிகுதியான எண்ணிக்கையில் கிடைப்பன சோழநாட்டுத் தலபுராணங்களே என்பதை எடுத்துக்காட்டும் இந்நூலாசிரியர் சுமார் நூறு பக்கங்களில் (பக். 47–150) இதை விளக்குகிறார். சோழ நாட்டில் பாடல் பெற்ற தலங்கள் பலவற்றிற்கும் தலபுராணங்கள் கிடைக்கின்றன என்பதும், இவ்வாறு கிடைக்கக் கூடிய 142 தலபுராணங்களுள் பெரும்பான்மை சிவத்தலங்களுக் குரியவை என்பதும் அரிய செய்திகளாகும்.

பாண்டி நாட்டில் நால்வர் பாடல் பெற்ற தலங்கள் பதினாறுக்கும் தலபுராணங்கள் கிடைப்பது குறிப்பிடத்தக்க தாகும். அடுத்துவரும் 117 பக்கங்களில் இவற்றை மிகத் தெளிவாக இவர் விளக்குகிறார். தமிழ்ப் புலவர்கள் பலர் நிறைந்த இப்பாண்டி நாட்டில் இறைவன் கோயில்கொண்டு விளங்கும் பல திருத்தலங்களுக்கும் தலபுராணங்கள் கிடைக் கின்றன. தமிழில் மிகப் பழமையானதாகக் கருதப்பெறுவது நம்பியின் திருவிளையாடற்புராணமே என்பதையும், தமிழில் மிகுதியான பாடல் எண்ணிக்கையையுடைய மிகப் பெரிய புராணம் திருநெல்வேலித் தலபுராணம் (6892 பாடல்கள்) என்பதையும், தமிழ்த் தலபுராணங்களுள் மிகச் சிறிய புராணம் திருமூலநகரப் புராணம் (120 பாடல்கள்) என்பதையும் பாண்டி நாட்டுச் சிறப்புக்களாக இப்பகுதியில் விளக்கக் காணலாம்.

சான்றோர் பலர் நிறைந்த தொண்டை நாட்டில் கற்றவர் மலி காஞ்சி முதலாகப் பல்வேறு திருத்தலங்களுக்கும் சிறப்பான பல தலபுராணங்கள் கிடைத்திருப்பதை அடுத்துவரும் பகுதி விளக்குகிறது. இதே போன்று, நடுநாட்டுத் தலபுராணங்களும் கொங்குநாட்டுத் தலபுராணங்களும் மிக விரிவான முறையில் ஆராய்ந்துரைக்கப் பெறுகின்றன.

தலபுராணங்களை நிரல்பட அறிமுகப்படுத்துவதுடன் அவற்றுள் பொதிந்துள்ள பல்வேறு செய்திகளையும் அங்கங்கே சுட்டிக் காட்டிச் செல்வது இந்நூலின் தனிச் சிறப்பாகும்.

இறைவழிபாடு செய்தலையும், புண்ணியத் தலங்களுக்குச் செல்லுதலையும், அத்தல வரலாறுகளைக் கேட்டறிதலையும் இல்வாழ்க்கைக் கடமைகளாகவே கொண்டு நம் முன்னோர் ஒழுகி வந்துள்ளனர் என்பதை விளக்கும் இந்நூலாசிரியர், அதற்குச் சான்றாக டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை எடுத்துக் காட்டுவது (பக். 36, 37) அனைவரும் அறிந்து போற்றத்தக்கதாகும்.

மக்கள் போற்றும் கலைகளை வளர்க்கும் இடங்களாகவே நம் கோயில்கள் திகழ்கின்றன. இக்கோயில்களை அடிப்படையாகக் கொண்டு அறிவியல், தொழில்நுட்பம், கலைநோக்கு இவற்றோடு சமய வாழ்க்கைக்கும் நிறைவு பயப்பனவாய் முகிழ்ந்ததொரு இலக்கிய வகையே தலபுராணங்கள். இது தமிழுக்கே உரியது என்பதையும் இவர் நிறுவுகிறார்.

மறுமையில் வீடுபேறு அடையலாம் என்பது மட்டு மல்லாமல் இம்மையில் வளமான, இனிமையான வாழ்வு பெறலாம் என்பதையும் விளக்குவதே தமிழ்த் தலபுராணங்களின் அடிப்படை நோக்கமாகும். இதை மிகத் தெளிவாக விளக்கு கிறார் இந்நூலாசிரியர்.

தலங்களாக உள்ளவை மண்வகை தட்பவெப்ப சார்பினால் அங்குச் சென்றவர்களின் உடலிலுள்ள பஞ்சபூதக் கூறுகளையும் வாத பித்த சிலேட்டுமக் கூறுகளையும் சமப்படுத்தும். தல விருட்சங்களின் காற்றும் நிழலும், இலை, தழை, காய் கனிகளும், தீர்த்தங்களின் நீரும் பருவுடம்பின் நோய்களைக் குறைப்படுத்தும். மூர்த்தி வழிபாடு நுண்ணுடம்பின் உணர்வுகளை மாறுபடுத்தும். இவ்வாறு காரணம், நுண்மை, பருமை என்னும் மூவுடம்பும் செம்மையுறுவதை உணர்ந்தே ஆன்றோர்கள் தலப்பெருமை

களையும் தலவழிபாட்டினையும் சமயச் சார்புடன் பொருத்திப் புராணமாக்கிப் பாடியுள்ளனர் (பக். 41) எனக் கூறப்பெறும் கருத்துக்கள் சிந்திக்கத்தக்கன.

கொங்கு நாட்டிலுள்ள உத்தமசோழபுரம் கரபுரநாதர் புராணத்தில் கூறப்பெறும் மூலிகைகள் பற்றிய செய்திகள் பல அறிவியலாருக்கும் பயன்தருவன. வாழ்நாள் வளர்க்கும் மருத்துவ மூலிகைகளேயன்றி 'வாடும் பயிர்க்கு மழையில்லையானால் மழை பெய்விக்கவும்' தமிழ்ச் சித்தர்கள் மருந்து கண்டிருந்தனர் என்னும் செய்திகள் (பக். 360-367) நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

தமிழ் இலக்கிய வகைகளைப் படைத்தளித்த சான்றோர்கள் வெறும் சமயக்கருத்துக்கள் மட்டுமல்லாது மருத்துவ அறிவு போன்ற நுட்பங்களையும் உள்ளடக்கியே இத்தகைய நூல்களை அனைவர்க்காகவும் உருவாக்கிச் சென்றுள்ளனர் என்பது தெளிவு.

இலக்கிய நயங்களை உணரவும், சொல்லணிகளின் சிறப்புக் களை அறியவும், காப்பியச் சுவைகளைப் பருகவும் எனப் பல்வகை நலன்களை நல்கும் தலபுராணங்கள் ஊர்ப்பெயர் ஆய்வுக்கும், வரலாற்று மாந்தர்களைப் பற்றிய ஆய்வுக்கும், தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் ஆய்வுக்கும் பெருந்துணை புரியும் என்பதை ஆங்காங்கே தெளிவுபட விளக்குகிறார் இந்நூலாசிரியர்.

கோயிலுக்குச் செல்லுதல், விரதங்கள் கடைபிடித்தல், சமயச்சடங்குகள் செய்தல் என இவற்றை மட்டுமே தலபுராணங்கள் வலியுறுத்தி அமைதி கொள்ளாமல் அதற்கும் மேலாக, மக்கள் உயரிய குறிக்கோளைக் கொண்டு ஒழுகி நல்வாழ்க்கை நடத்தி மேம்படுதற்குத் தேவையான விளக்கங்களையும் எடுத்துரைப்பதை நாம் உணர்தல் வேண்டும். இவ்வகையில், மக்களுக்குத் தேவையான பல நீதிகள், அரசாங்கப் பொறுப்புகள், நல்லோர் ஒழுகலாறுகள், நல்வினை தீவினைகளின் நுட்பமான பாகுபாடுகள், அறச்செயல்கள், பண்புடைமை, சமய வாழ்க்கைப் பண்புகளில் முதன்மையாக விளங்கும் சமயக் காழ்ப்பின்மை, சமய ஒற்றுமை ஆகியவற்றை விளக்கும் பல தல புராணங்களை இந்நூலாசிரியர் ஆங்காங்கே எடுத்துக் காட்டுவது சிறப்பாகும்.

திருவாரூர்ப் புராணம் போன்றவை கூறும் (பக். 103—105) நல்லறங்களின் தொகுப்பு எல்லாச் சமயத்தாருக்கும் பொதுவானவையே என்பதும் ஈண்டு குறிக்கத்தக்கது. இவ்வாறே, வரும் முன் உரைக்கும் வல்லவர்களாகத் திகழ்ந்த பல தலபுராண ஆசிரியர்கள் யுகங்கள் தோறும் நிகழும் வாழ்வியல் மாறுபாடுகளையும் அறுதியிட்டுக் கூறுவதுடன் தற்கால வாழ்க்கை நிலைகளை அன்றே விளக்கிக் கூறியிருப்பதும் (பக். 106—116) அனைவரும் அறியத்தக்கதாகும்.

தென்தமிழகத்திலுள்ள பாண்டி நாட்டின் சிறப்பிற்குக் காரணம் இப்பாண்டி நாட்டு மக்களின் தமிழுணர்வும் சைவ சமய உணர்வுமே என்பதை விளக்குவது திருமலைத் தலபுராணம் (பக். 213). இப்புராண ஆசிரியர், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பற்றியும், முருகம்மை என்னும் மங்கைநல்லாளின் திறம் பற்றியும் விளக்குவதை நோக்கும்போது, தலபுராண ஆசிரியர்கள் தாம் நேரில் கண்டவற்றையும், தாம் உண்மையென அறிந்தவற்றையும் சேர்த்தே நூல்களைப் படைத்திருக்க வேண்டும் என்ற கருத்தும் (பக். 2¹6) சிந்தனைக்குரியதே.

இவ்வாறு இந்நூலின் முதற்பகுதியாகிய சுமார் நானூறு பக்கங்களிலும் பல தலபுராணச் செய்திகள் விரிவாக ஆராயப் பெற்றுள்ளன.

இந்நூலின் இரண்டாம் பகுதியில் வடநாடு மற்றும் ஈழ நாட்டுத் தலபுராணங்கள் அனைத்தும் ஆராயப்பெற்றுள்ளன. தமிழும் சைவமும் சிறப்பிடம் பெற்றுள்ள ஈழநாட்டின் தமிழ்த் தலபுராணங்களை எடுத்துக் காட்டியுள்ளமை மிகவும் பயனுடையதாகும்.

திராவிட மொழிகளில் தமிழைத் தவிர மற்ற மொழிகளில் தலபுராணங்கள் மிகுதியாக இல்லை என்பதைக் கூறும் இந்நூலாசிரியர், தமிழகத்திலுள்ள சில தலங்களுக்குத் தெலுங்கு மொழியில் புராணங்கள் தோன்றியுள்ளமையையும் விளக்குகிறார். இவ்வாறே, இஸ்லாம் போன்ற பிற சமயத்தாரின் தலபுராணங்களை எடுத்துக்காட்டுவதும் நம் சிந்தனைக்கு விருந்தாம்.

தமிழ்த் தலபுராணங்களின் பொதுவான போக்கையும் சிறப்புக் கூறுகளையும் விளக்குவதுடன் வடமொழிப் புராணங்களிலிருந்து தமிழ்த் தலபுராணங்கள் வேறுபட்டு நிற்பதையும் இவர் பிற்பகுதியில் சுட்டிக் காட்டுகிறார்.

தலபுராண நூலாசிரியர்களையும் உரையாசிரியர்களையும் தனித்தனியே அறிமுகப்படுத்துவதுடன், தலபுராணச் சுவடிகளை இனங்காட்டி அவற்றை நன்கு பதிப்பித்து வெளியிட வேண்டியதன் தேவையையும் இந்நூலாசிரியர் தனியே உரைத்திருப்பது தமிழர் அனைவரும் சேர்ந்து செயலாக்க வேண்டிய நற்பணியாம்.

பாமர மக்களைப் படித்தவர்களாக்கவும், அவர்கட்கு வரலாற்று அறிவினைப் புகட்டவும்; மக்கள்தம் வாழ்க்கையில் தோன்றும் அவலங்களைக் களைந்து நல்வழி காணவும், சுற்றுச் சூழல்களைத் தூய்மையாக வைத்திருந்து சுகாதாரம் பேணவும்; சாதி, சமய, இன நல்லிணக்கத்திற்கும், தேசிய ஒருமைப் பாட்டிற்கும், மக்களிடையே நல்லொழுக்கமும் தன்னம்பிக்கையும் ஒருங்கே வளரவும் இத்தகைய தலபுராணங்கள் பெருமளவில் துணைபுரியும் என்ற கருத்தை மையமாகக் கொண்டே திரு. மாதவன் அவர்கள் இந்நூலை உருவாக்கியுள்ளார் என்பது நூல் முழுமையையும் ஊன்றிக் கற்பார்க்கு நன்கு விளங்கும்.

செய்யுள் வடிவிலான சுமார் நானூறு தலபுராண நூல்களின் விவரப்பட்டியலையும், உரைநடை வடிவிலான சுமார் ஐநூறு தலபுராண நூல்களின் விவரப்பட்டியலையும் முறையாகத் தொகுத்திருப்பதுடன் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ்த் தலபுராணங்களையும் அவற்றின் வடமொழி மூலங்களையும் ஒருங்கே தொகுத்து வழங்கியிருப்பது இந்நூலாசிரியரின் பேருழைப்பைக் காட்டுகிறது. இத்தகைய முறையான, நிறைவான நூல் பட்டியலை இதுவரை எவரும் தரவில்லை திரு. மாதவன் அவர்கள் தந்துள்ள தலபுராண நூல்களின் பட்டியல் தமிழாய்வுக்கு மிகவும் பயனுடையதாகும்.

நூற்றுக்கணக்கான பழைய நூல்களையும் சுவடிகளையும் ஆராய்ந்து, அவற்றை ஒப்பு நோக்கி, உரிய வகையில் பலருக்கும் பயன்படும்படியாக ஒரு பெருநூலாக்கித் தந்திருக்கும் திரு. மாதவனின் ஊக்கத்தையும் உழைப்பையும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

தமிழில் கண் மருத்துவம், சித்திரக்கவிகள், அகத்தியர் வைத்திய காவியம் போன்ற நல்ல பல நூல்களை உருவாக்கிய திரு. மாதவன் இந்நூலையும் அரிதின் முயன்று உருவாக்கியுள்ளார். இதே போன்று அவர் மேலும் பல நூல்களைப் படைத்து தமிழன்னைக்கு அணிசேர்க்க வேண்டுமென விழை

கிறேன். அத்துடன், தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடிப்புலத்தில் பணியாற்றி வரும் அவர் அரிய பல தலபுராண நூல்களையும் பதிப்பித்து வழங்குவார் என நம்புகிறேன்.

தமிழ்த் தொண்டில் திரு. மாதவன் புகழ் உலகம் இருக்கும் வரை நின்று நிலைபெறும். உலகம் இருக்கும் வரை தமிழ்மொழி இருக்கும் என்பது நம்பிக்கை. திரு. மாதவன் அவர்கள் தமிழ்ப் பணி செழிக்க, வளர்க என வாழ்த்துகிறேன்.

தமிழூர்
24-2-95

அன்பன்,
**ச. வே. சுப்பிரமணியன்**

# சிறப்புரை

**முனைவர் சோ. ந. கந்தசாமி**

*பேராசிரியர் மற்றும் தலைவர், இலக்கியத்துறை*

*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்—613 005*

'தமிழில் தலபுராணங்கள்' என்ற தலைப்பில் டாக்டர் வே. இரா. மாதவன் அவர்கள் ஆராய்ந்து எழுதியுள்ள அரிய நூலினை அணுகியும் நுணுகியும் நோக்கினேன். இந் நூலில் பொதிந்துள்ள கருத்துக்கள் பலவும் கேரளப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையில் மொழியியல் பேரறிஞரும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தருமாகிய முது முனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் பெயரில் நிறுவப் பெற்றுள்ள மணிவிழா அறக்கட்டளைச் சொற்பொழிவில் வெளியிட்ட சிந்தனைகளாக அமைந்துள்ளன. பதினாறு—இயல் களில் தாம் ஆராய்ந்துள்ள கருத்துக்களைத் தொகை வகை செய்து தெளிவுறக் கூறியிருத்தல் சிறப்பாகச் சுட்டுதற்குரியது. இந்நூலின் முதற்பாகமே இப்பொழுது அச்சுவடிவில் வெளி வருகிறது. பொதுவாக ஆய்வாளர்களால் மிகுதியான கவனம் செலுத்தப்படாத ஒரு பொருளைப் பற்றி டாக்டர் மாதவன் தீவிரமாகச் சிந்தித்துப் பல்வேறு மூலங்களிலிருந்து தரவுகளைத் தொகுத்துத் தம் ஆய்வினை நிகழ்த்தியுள்ளார்.

பாட்டியல் நூல்கள் வரையறுத்துக்கூறும் பல்வேறு இலக்கிய வகைகளில் (Literary Genres) தலபுராணம் குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது. புராணம் என்ற சொல் பழமை என்ற பொருளை உடையது. தொல்காப்பியர் சுட்டும் எட்டுவகை வனப்புக்களில் ஒன்றாகிய தொன்மை என்ற இலக்கிய வகை யுடன் புராணம் என்ற இலக்கிய வகையை இணைத்துப் பார்த்து எண்ணுதற்கு இடம் உண்டு. தொல்காப்பியர்,

> "தொன்மை தானே,
> உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"

என்று தொன்மைக்கு இலக்கணம் செய்துள்ளார். உரையாசிரியர் கள் இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசக் கதைகளையும்,

சிலப்பதிகாரத்தையும் தொன்மை என்ற வனப்பிற்கு இலக்கிய மாக எடுத்துக் காட்டியுள்ளார். மிகப் பழைய செய்திகளைப் பாடுபொருளாகக் கொண்டு படைக்கப்பெறும் காப்பிய வகை யாகத் தொன்மை இலக்கியத்தைக் கருதுதல் சாலும்.

தமிழில் வழங்கிவரும் தலபுராணம் என்ற இலக்கிய வகை யும், வடமொழியில் காணப்பெறும் மகாபுராணம் என்ற இலக்கிய வகையும் புராணம் என்ற வகையால் புறத்தோற்றத் தில் ஒத்திருப்பினும், பொருண்மை அடிப்படையில் சிறிதும் பெரிதுமாய் வேறுபடுதலை அறிஞர்கள் உணர்த்துதற்குரியர். பெரும்பாலும் தலபுராணங்கள் குறிப்பிட்ட தலத்தின் சிறப்பை யும் மக்களின் நம்பிக்கைகளையும் பண்பாட்டையும் பாரித் துரைப்பன. தலபுராணங்களில் காவியத் தன்மை மிக்கிருத்தல் காணலாம். சங்க இலக்கியங்களில் புராணம் என்ற சொல் காணப்படவில்லை. எனினும் தலபுராணத்திற்குரிய பல செய்தி களைச் சங்கப் பாக்களில் காணலாம். சான்றாக வேலூர் எனப் பெயரமைந்தமைக்குரிய காரணத்தை நல்லூர் நத்தத்தனார் சிறுபாணாற்றுப்படையில் கற்பனை விரவிய கதைப்பாங்கில் சுட்டியிருத்தலை இங்குக் கூறலாம். சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களில் தமிழகத்தின் தலைநகரங் களாகிய பூம்புகார், மதுரை, வஞ்சி, காஞ்சி ஆகியவற்றோடு தொடர்புபடுத்தி வரும் பல தலபுராணச் செய்திகள் பின்னர் இவ்வகை இலக்கியம் பாட வந்தவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருத்தல் வேண்டும்.

திருமறைகளிலும் ஆழ்வார் பாடல்களிலும் பாடப் பெற்றுள்ள திருக்கோயில்கள் பற்றிய தொன்மைச் செய்திகள் பற்பலவும் தலபுராணங்கள் தோன்றுதற்கு மூலக்கருவாக உதவி யிருத்தல் வேண்டும். பாமர மக்களும் பயன்கொள்ளும் பாங்கில் தமிழர்தம் பண்பாடு, கலைத்திறம், இறைநெறி, அறவியல், ஊர்ப்பற்று ஆகிய விழுப்பங்களைத் தலபுராணங்கள் விரித் துரைப்பன என்பது ஆய்வாளர்க்குப் புலனாகும். தொண்டர் கள் வரலாற்றையும் புராணம் என்று கூறும் மரபினைச் சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணத்தினால் அறிய லாம். எனினும் தலபுராணம் என்ற வகைமைக்குரிய இலக்கணங்கள் பலவும் பொருந்திய முதல் படைப்பு பெரும் பற்றப்புலியூர் நம்பி பாடிய திருவாலவாயுடையார் திருவிளை யாடற் புராணம் ஆகும். இந்நூலிற்கும் முந்து நூலாகக் கல்லாடம் திகழ்கின்றது. பாண்டிய அரச மரபினைச் சேர்ந்த

வரகுணன், வரதுங்கன், அதிவீரராமன் ஆகியோர் பாடிய புராணங்கள் யாவும் வடமொழிச் சிவபுராணங்களைத் தழுவியவை ஆகும். கமலை ஞானப்பிரகாசர், எல்லப்ப நாவலர், பரஞ்சோதியார் ஆகியோர் படைத்த தலபுராணங்கள் இலக்கியச் சுவை ததும்பியவை.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த இணையற்ற பெருங்கவிஞர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய தலபுராணங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இக்கவிஞர் கோமானை இரண்டாவது கம்பர் என்று இக்காலத்து அறிஞர்கள் போற்றுவர். எனினும், பல்லாயிரக்கணக்கான பாடல்களையும் பல்வேறு இலக்கிய வகைகளையும் விருந்தாய யாப்பு வகைகளையும் கற்பனைச் சுவையும் இலக்கிய நயமும் தமிழ் இனிமையும் விரவிவரப் பாடியுள்ள இப்பெருங் கவியரசரை இரண்டாவது கம்பர் என்று கூறுவதைவிட இரண்டு கம்பர் என்று கூறுவது சாலப்பொருந்தும். இருபதாம் நூற்றாண்டிலும் பல தல புராணங்கள் தோன்றியுள்ளன.

எனவே, புராணம் என்ற சொல்லைக் குறைவாக எண்ணி ஒதுக்கும் போக்கினை நீக்கி இலக்கியம் என்ற வகையில் அணுகிப் பயிலும் ஆர்வத்தை ஊட்டும் வகையில் சிறந்த ஆய்வு நூலினை டாக்டர் மாதவன் அரிதின் முயன்று உருவாக்கியிருத்தல் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. தமிழகத்தின் நிலப்பகுதிகளைச் சோழ நாடு, பாண்டி நாடு, தொண்டை நாடு, நடுநாடு, கொங்கு நாடு, மலை நாடு என்று பகுத்துக் கூறுதல் ஒரு மரபு. இப்பகுதிகளுக்குரிய தலங்களைச் சிறப்பிக்கும் வகையில் பாடப்பெற்றுள்ள தலபுராணங்களின் கட்டமைப்பையும் கருத்துச் சிறப்பையும் இலக்கிய வளத்தையும் பண்பாட்டுக் கூறுகளையும் டாக்டர் மாதவன் தக்க சான்றுகளின் வாயிலாக அகழ்ந்தெடுத்து ஆராய்ந்துரைத்தல் அனைவராலும் பாராட்டற்குரியது. தொடர்ந்து தமிழகத்தை ஒட்டிய துளுவநாட்டுத் தலபுராணங்களையும் வடநாட்டுத் தலபுராணங்களையும்கூட இவர் ஆராய்ந்திருத்தல் குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஓலைச்சுவடித் துறையில் கடந்த பல ஆண்டுகளாக அரும்பணியாற்றி வரும் ஆற்றல்மிக்க ஆய்வறிஞர் டாக்டர் வே. இரா. மாதவன் ஆவர். அடக்கமும், அமைதியும், அனைவரிடமும் ஒத்துப்போகும் நற்பண்பும், இறையுணர்வும், மொழிப் பற்றும், உலவா முயற்சியும், கடும்

உழைப்பும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற டாக்டர் மாதவன் அவர்கள் முன்பே பல நூல்களை எழுதியும் ஓலைச்சுவடிகளி லிருந்து வெளியிட்டும் அன்னைத் தமிழுக்கு அரும்பணியாற்றி வருபவர். 'தமிழில் தலபுராணங்கள்' என்ற தலைப்பில் இவர் வெளியிடும் இச் சிறந்த ஆய்வு நூலினைத் தமிழ்ப் பெருமக்களும் திருமடங்களும் ஆய்வாளர்களும் பாராட்டி வரவேற்று இத் துறையில் தொடர்ந்து மேலும் பல அரிய நூல்களை யாப்பதற்கு ஊக்கமும் ஆக்கமும் வழங்குதல் சிறந்த தமிழ்ப் பணியாகும். வேறு பல தலைப்புக்களிலும் இவர் முயற்சி மேற்கொண்டு விழுமிய ஆய்வு நூல்களை எழுதிச் சிறக்க உளம் உவந்து வாழ்த்துகிறேன்.

**சோ. ந. கந்தசாமி**

# FOREWORD

## Sekkizhaar Adi-p-Podi
## T. N. RAMACHANDRAN

Tamils are born losers. Immense and indeed immeasurable, was their literary output even in the dim, distant past. No language was fostered in the hoary times by three successive Academies fostered with love and devotion by the ruling monarchs. Tamil alone was blessed with such royal patronage. It was hailed as a language dear to Siva as well as Vishnu. Yet, what we have today is but a modicum of its ancient, literary wealth. An interminable catena of extraordinary works was allowed to perish irretrievably by reckless neglect as well as culpable vandalism. Excellent opuses fed the flames. Water too, periodically, carried in its current, palm-leaves of unexcellable wisdom. Even religious works were forced to share this inexorable fate. Visitors to the library were termites, not scholars.

In the Forties and the Fifties, a wave of disestablishment swept the Tamil country. **Ithihasas, Puranas,** - in particular **Sthala Puranas,** - and even sacred writings stood condemned and contemned. The champions of this movement were glib orators who, by their high falut in haranguing dinned into the Tamil youths an implacable hatred for all works that were suspected to have some nexus with Sanskrit. Each town vied with the other in making bonfires of sacred writings. I am blessed with the friendship of a few contrite arsonites. The wave of acerbity began to ebb. Yet even now, not all Tamils are alive to the irreparable loss, the country has suffered.

Slowly but not yet to be deemed sufficient, the interest in such works is getting revived thanks to the writings of

scholars not belonging to Tamil Nadu. It is the occident, which today, is the teacher of the Orient. Let us welcome knowledge, irrespective of its source.

In 1975, Wilwood House (Great Britain) published Fritjof Capra's 'The Tao Of Physics'. This work is a recordation of an exploration of the parallels between Modern Physics and Eastern Mysticism. Several re-prints of this work appeared in quick succession and the work was reviewed by scholarly journals, the world over. It re-appeared with revisions and Afterword in 1983. The sixteenth impression of this work (Fontana Paperbacks) was published in 1989. This work has literally clobbered the denigrators of Indian myths. The nescience of the loud-mouthed met with a full exposure from which they find it well-nigh impossible to hide themselves.

Let me but quote one passage from Capra. "For the modern physicists, then, Siva's dance is the dance of subatomic matter. As in Hindu mythology, it is a continual dance of creation and destruction involving the whole cosmos; the basis of all existence and of all natural phenomena. Hundreds of years ago, Indian artists created visual images of dancing Shivas in a beautiful series of bronzes. In our time, physicists have used the most advanced technology to portray the patterns of the cosmic dance. The bubble-chamber photographs of interacting particles, which bear testimony to the continual rhythm of creation and destruction in the universe, are visual images of the dance of Shiva equalling those of the Indian artists in beauty and profound significance. The metaphor of the cosmic dance thus unifies ancient mythology religious art, and modern physics. It is indeed as (Anand) Coomaraswamy has said "Poetry, but none the less science". (Page 272, The Tao of Physics, Flamingo, published by Fontana Paperbacks-1989).

In this connection, I will but mention two more books, one on the Saiva Sthala Puranas and the other dealing with

the Tirumana-p-Patalam which forms part of the Tiruvilayaadal Puranam. The former is by the polyphiloprogenitive polymath- Dr. David Dean Shulman, and the latter by the meticulous scholar - Dr. William P. Harman. Shulman's work : "The Tamil Temple Myths" is an eye-opener, though some of the passages in this work cry for drastic revision. It is rather unfortunate that a moiety of his orientation-at any rate, in the initial stages -, came from a woman scholar - frightfully well informed, but obsessed with sex. Such is her perception that it finds sex in running brooks and standing rocks. Again Shulman was hardly twentyfive years old, when he undertook the assignment. Harman's work : "The Sacred Marriage of a Hindu Goddess" appeared in 1989 (Indiana University Press) and an Indian reprint of this significant work is now available. I met Dr. Harman in the house of the famous librarian cum scholar, the late-lamented Roja Mutthiah. The doctor spent a fortune in acquiring old and rare books which dealt with his thesis.

Besides Shulman and Harman, Glenn E. Yocum, Fred Clothey, Dennis Hudson, Bruce Long, A. K. Ramanujan, Saskia C. Kersonboom Story and a few others have done their best to revive our interest in this and allied fields. The Sthala Puranas are also supplying themes, hitherto undreamt of, by researchers.

The nineteenth century ushered in the salubrious climate for the flourishing of the Sthala Puranas. Mahavidwan Meenakshisundaram Pillai - the celebrated guru of U. Ve. Saminatha Iyer -, composed as many as twentytwo Sthala Puranas. On the **Arangketram** of Pillai's Kumbakonam Puranam, this is what we meet with in Shulman's work : "When the **aranketram** of the Kumbakonam Purana was completed, the dignitaries of that city gave him a shawl, a silk upper garment, (other) garments and gifts, and two thousand rupees collected from the public. They had the manuscript of the purana mounted upon an elephant and taken around the town in

state. Then several of the dignitaries purchased and donated a covered palanquin, made Pillai sit in it, and carried it themselves for some distance. Thus they demonstrated the love they felt for the Tamil language and the custom of olden times". (Pages 38-39, Tamil Temple Myths.)

The reader will do well to remember that the cash present made to Pillai, is worth to-day, at least six lakhs of rupees. The Tamils knew how to honour a scholar, a hundred years ago. They also knew the worth of their heritage. Their love of their mother-tongue was pure and unsullied.

Holy places are sources of perennial inspiration. They beckon scholars in mysterious ways to indite about them. Bharat is **punya-bhoomi**. It is here gods and goddesses chose to abide and enact their **lilas**. The Dravida realm is the land of bhakti.

Of yore, when saint Upamanyu around whom sat **Suddha Yogis** to get blessed by him, beheld the ascension of St. Sundarar, he rose up folding his hands in adoration and walked towards the direction whence glowed a splendorous light that lit the path of ascension. The yogis marvelled at it and implored him thus :

"You, our Lord, never adore aught but the lotus-feet
Of Sambhu! What may this be?

By way of answer, he narrated to them the glory of St. Sundarar and the greatness of the southern realm. Upamanyu spoke thus :

" Perumpatra-p Puliyur is here situate, adorod by
My father Vyaagrapaada-the great saint of peerless
**tapas**;
It flourishes as the treasure of those
Who adore the Lord with single-minded devotion.

"In that holy realm, the eternal Lord dances in joy
In the great **Ambalam**, for ever, in the presence

Of our Mother, the divine Liana of true **tapas** ;
Which other direction can rival the south in its glory?

"In every embodied soul, the heart burgeons
Even as a bud blossoms; from the lotus-heart
Of lovely Mother-Earth
Whence effloresces the seed of the Vedas
Aroor of Ardhanaariswara hath blossomed.

"My Deity-the Mother of the seven worlds-,
Attained here, the Lord by her unique **tapas**
And adored Him on the banks of the river Kampai
At Kaanchi hailed by all the celestials.

"It is here in the south, our Lord-Guru Nandi-,
Performed tapas, and came by ever-crescent grace eternal:
The Lord who sports the flood in His matted hair
Abides here in Aiyaaru.

"It is in the South, the Lord's hallowed Tonipuram
That illumines all realms and holy shrines galore-
Fit for the adoration of Siva-, are situate.
Truly no direction can match the South in its glory".

(Periya Puraanam, Tirumalaiccharukkam, verses 31-36, Tamil University Publication-1990.)

It is our duty to hail holy shrines and works hailing holy shrines which is why Sthala Puranas are being indited even in modern times. From Dr. Madhavan's work, we gather that Pinnatthoor Narayanaswamy Ayyar, Karaikkudi Chockalingam Chettiyaar, Hariharan Iyer, Tanikaivell Bharatiyar, Chockalingam Pillai, Kripaanaanda Vaariyaar, Raamanuja Naavalar, Subbiah Swamikal, Aranganaathar, Velaayuda Pandithar, Vaidheeswara Gurukkall, Kumaarasawmy Mudaliyaar, Siva Subramania Sivaachaariyaar, Narayanaswamy Mudaliyaar, Ellappa Mudaliyaar, Kandaswamy Mudaliyaar, Appaa Aiyer, Kuzhandaivelu Pillai, Akalaambikai, Narasimha Bharati, Kavi Rajanaayam Pillai and others, are the twentieth century authors of Sthala Puranas. May their tribe increase.

Dr. Madhavan's devotion to Tamil in general, and Vaishnavism in particular, has wrung recognition from even unwilling hands. He is a genuine scholar, a lucubrator, a silent worker and a publisher of rare and useful works. He is a **chitra-kavi**, sui generis. Simple and unassuming, he goes about his work, with little ado. Mercifully he is exempt from the lure of the trumpery world. He has authored and edited many precious works.

The present work : "Thamizhil Thala Puraanangkal!" is his love of labour, made visible. It contains rich source-material for research scholars. This is perhaps the first major work in Tamil on Sthala Puranas. Our Naayanmaar and Aazhwar, according to A. K. Ramanujan, sang places into existence. Our bards who were true practitioners of religion, enshrined such places in psalm and song and solemn strain. Their puranas are treasure-houses of knowledge. The truth of this, is demonstrated by Dr. Madhavan. His work is the fruit of patient and painstaking scholarship. The sun shines: it is upto us to make hay.

Sekkizhaar Adi-p-podi
T. N. RAMACHANDRAN

# முன்னுரை

திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசைப்
படர்பொருள் முழுவதும் ஆய்அவை அவைதொறும்
உடல்மிசை உயிர்எனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவைஉண்ட சுரனே.

(திருவாய்மொழி 1:1:7)

உலக நாடுகளில் பாரதத் திருநாடு புண்ணிய பூமி எனப் போற்றப்பெறும் பெருநாடு ஆகும். குறிப்பாக, தென்னிந்தியாவில் நம் தமிழ்நாடு புண்ணியத் தலங்கள் பல நிறைந்ததாக விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். பழமையும் பெருமையும் வாய்ந்த இத் தமிழகத் தலங்களைப் போன்று மிகுதியான எண்ணிக்கையை வேறு எங்குமே காண்பது அரிது. தமிழ் மக்களின் சமயத்துறையிலும், சமுதாயத் துறையிலும், கலையியல் மற்றும் பொருளியல் துறைகளிலும் இத்தலங்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. இறைவனின் திருவருள் விளங்கிப் பெருகும் ஆற்றல் ஊற்றுக்களாகவே இத்தலங்கள் விளங்குகின்றன. ஒவ்வொரு தலத்திற்கும் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட தனிச் சிறப்பும் தெய்வீகப் பெருமையும் அமைந்து திகழக் காண்கிறோம். பன்னூறு ஆண்டுகளாக இறைவன் எழுந்தருளி விளங்கும் இத்திருத்தலங்கள் யாவும் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து கொள்ளைகொண்டு, அவர்களின் மதிப்பிற்கும் வழிபாட்டிற்கும் உரியனவாகப் பெருமையுற்றுத் தொன்றுதொட்டு விளங்கி வருகின்றன.

திருத்தலங்களை நினைக்குந்தோறும் அத்தலங்களின் சிறப்புக்கள் நம் முன்னே பளிச்சிடுகின்றன. அத்துடன், கோயிற் கலை என்னும் தொன்மைச் சிறப்பும் வெளிப்படக் காண்கிறோம். இந்திய நாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டிற்கு வரும் பிற நாட்டார் பலரும் நமது கோயிற்கலையைக் கண்டே வியக்கின்றனர். இத்தகைய கோயில்களிலே மக்கள் மனங் குவிந்து, நினைவொடுங்கி, வழிபட்ட காலங்களிலெல்லாம் நம் நாடு நிகரற்ற நாடாக விளங்கியது; நமது செல்வம், கல்வி, பண்பாடு, நாகரிகம் எல்லாம் தழைத்துச் செழித்தன. திருக்கோயில் மணிகள் நமது சமயப் பண்பாட்டின் வெற்றியை ஒலித்துக்

காட்டின. கோயில் வழிபாடு குன்றக் குன்ற நம் வாழ்வும் வளமும் குன்றிப் போயின.

மேலும், கடந்த ஐம்பது ஆண்டுகளாக மக்களை நல்வழிப் படுத்தக்கூடிய நூல்கள் மிகுதியாக வெளிவருவதுமில்லை. அறிவியல் வளத்தால் பொழுதைக் கழிக்க உதவும் நூல்களும் சாதனங்களும் பொழுதுபோக்கு வசதிகளும் பெருகி விட்டன. மக்களில் பலர் நல்வழி காட்டுவாரின்றி, இன்பம் துய்ப்பதிலும் பொருள் சேர்ப்பதிலுமே ஆவல் கொள்கின்றனர். தங்கள் ஆவல்களை நிறைவேற்றிக் கொள்ள எத்தகைய வழிகளையும் மேற்கொள்ளவும் அவர்கள் துணிந்துள்ளனர்.

அண்மைக் காலத்தில் நம் மொழிக் கல்வியும் நம் மொழி வழிக் கல்வியும் குறைந்ததால் நம்முடைய பண்பாட்டுக் கூறுகளை இளைய சமுதாயம் அறிய இயலவில்லை. நம் மொழி யிலுள்ள சமய மற்றும் அற இலக்கியங்களைக் கற்பது குறைந்து விட்டதால் உண்மை, நேர்மை, கடமை போன்ற அறவழிகள் அனைத்தும் இளைஞர் மனத்தில் உரிய இடம்பெற வழியில்லை. அயல்நாட்டாரின் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டாலும் அந்நிய மோகத்திற்கும் கவர்ச்சிக்கும் ஆட்படுவதிலிருந்து நம்மில் பலர் விடுபட இயலவில்லை. நம் பண்பாட்டு மரபுகளை முற்றிலு மாக இழந்து விடுவோமோ என்ற அச்சமான சூழ்நிலைகளே தொடர்ந்து உருவாகி வருகின்றன.

மக்களிடையே ஒற்றுமையின்மையும், ஒழுக்கக்கேடும், தீரா நோய்களும் அச்சுறுத்தல்களைத் தரும்போது மட்டுமே கோயிலை நாடுவதும் இறைவனைப் பணிவதும் பலருக்கு வழக்கமாகி விட்டன. தீர்க்க வியலாத வாழ்க்கைச் சிக்கல்கள் தோன்று மிடத்து, 'இதற்கு இனி என்ன செய்வோம்? யார் துணை?' என்னும் கேள்விகள் நம்மில் பலருக்கும் ஏற்பட்டு வருவதை எவரும் மறுக்க இயலாது.

நாட்டுப்பற்று, மொழிப்பற்று இவற்றுடன் கடவுள் நெறியையும் ஒழுக்கங்களையும் பெற வேண்டுமானால் கோயில் வழிபாடு மிக முக்கியம் என்பதைப் பலரும் இன்று உணர்ந்து வரக் காண்கிறோம்.

கோயில் வழிபாட்டை மீண்டும் பொலிவுறுத்தினாலே நமது சமயச் சார்பான பண்பாடுகள் பெருகும். வாழ்க்கைச் சிக்கல்கள் பல தீர்க்கப் பெறும். கோயில் வழிபாட்டை வலியுறுத்தும் தல

புராணங்கள் பலவற்றை நம் முன்னோர்கள் படைத்தளித்துள்ளார். ஆயின், அவற்றின் சிறப்பை இக்கால அறிஞர்களும் ஆய்வாளர்களும் அறிந்துணர்ந்து போற்றாதது ஒரு பெருங் குறையேயாகும். இந்நூல்களில் பெரும்பான்மை இன்று கிடைக்காமையும், இவற்றை வகுத்தும் தொகுத்தும் எவரும் வழங்காமையும் இதற்குக் காரணங்களாகலாம். இத்துறையில் வழிகாட்டுவோரும் வழிகாட்டும் நூல்களும் மிக மிகக் குறைவே.

நூற்றாண்டுகள் வாரியாகத் தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்ந்தளித்த அறிஞர் மு. அருணாசலம் அவர்கள் தம்முடைய பதினாறாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் அக்காலப் புராணங்களைப் பற்றித் தனியே ஆராயுமிடத்துத் தலபுராணங்களையும் முதன்முதலாக ஆராய்ந்தளித்துள்ளார். இது, ஒரு நூற்றாண்டில் தோன்றிய நூல்களைப் பற்றி மட்டுமே கூறுவதாக அமைந்தது.

இவருக்குப் பின், தமிழில் தலபுராண இலக்கியம் என்ற தலைப்பில் திரு வ. கிருஷ்ணசாமி, எம்.ஏ,, அவர்கள் 1974 ஆம் ஆண்டில் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். தமிழ்த் தலபுராணங்களைப் பற்றிப் பொதுநிலையில் எடுத்துரைத்தும், திருக் குற்றாலத் தலபுராணம் எனனும் ஒரு தலபுராணத்தைச் சிறப்பு நிலையில் எடுத்துரைத்தும் அமைந்ததாக இந்நூல் வெளி வந்தது. இந்நூலின் அடிப்படையில் டாக்டர் கி. நாச்சிமுத்து அவர்கள் தமிழில் தலபுராணங்கள் என்னும் தலைப்பில் ஆங்கிலத்திலான ஆய்வுக்கட்டுரை ஒன்றினை எழுதி 1984-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார்கள்.

இத்தகைய முயற்சிகளுக்குப் பின் தமிழ்த் தலபுராணங்கள் பற்றிய முழுமையான பொது ஆய்வில் எவரும் சிந்தனை செலுத்தவில்லை. இதனைக் கருத்தில் கொண்டே இந்நூல் அமைக்கப் பெற்றுள்ளது. தமிழில கிடைக்கும் செய்யுள் நடையிலான தலபுராணங்கள் அனைத்தையும் ஒருங்கே தொகுத்துக் காணும் முயற்சியின் பயனாக விளைந்த முதல்நூல் இதுவேயாகும்.

இந்நூல் இரண்டு பகுதிகளாக வெளிவருகின்றது. தமிழில் தலபுராணங்கள்—முதற் பகுதியாகிய இந்நூலில், முதலில் தமிழில் தலபுராணங்கள் என்னும் தலைப்பில், இம்மொழியில் புராண இலக்கியம் பெறுமிடம், வடமொழிப் புராணங்களின் தாக்கம், தலபுராணங்களின் தோற்றம், வளர்ச்சி, திருமுறைத் திருத்தலங்

களின் அடிப்படையில் தோன்றிய தலபுராணங்கள் போன்ற செய்திகள் விரிவாக ஆராயப் பெறுகின்றன.

தமிழிலுள்ள சைவ, வைணவத் தலங்களுக்குரிய புராணங்கள் அனைத்தும் தொகுக்கப் பெற்று, சோழநாடு, பாண்டிநாடு, தொண்டை நாடு, நடுநாடு, கொங்கு நாடு, மலை நாடு, துளுவ நாடு என்னும் வகையில், ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தலங்களுக்குரிய நூல்கள் தனித்தனியே ஆராயப் பெறுகின்றன. பாடல் பெற்ற தலங்களுக்கான புராணங்கள் மற்றும் பாடல் பெறாத தலங்களுக்கான புராணங்கள் எனப் பல்வேறு வகையில் இவை தொகுத்தளிக்கப் பெற்றுள்ளன. குறிப்பிட்ட சில தலங்களுக்குரிய சிறப்பான தலபுராணங்கள் இப்பகுதியில் நுணுகி ஆராயப் பெற்றுள்ளன. சிறப்புடைய தலங்களுக்குரிய புராண நூல்கள் கிடைக்காமை பற்றியும் ஆங்காங்கே சுட்டப் பெற்றுள்ளன.

இரண்டாம் பகுதியாகிய அடுத்த நூலில், வடநாடு மற்றும் ஈழ நாட்டிலுள்ள தலங்களுக்குரிய நூல்கள் பலவும் முற்கூறிய வாறே ஆராயப் பெறுகின்றன.

தெலுங்கு போன்ற பிற மொழிகளிலான தலபுராண நூல்களும், இஸ்லாம் போன்ற பிற சமயத் தலபுராண நூல்களும் தனித்தனியே விளக்கப் பெற்றுள்ளன.

தமிழ்த் தலபுராணங்களின் பொதுவான அமைப்பையும் சில சிறப்புக் கூறுகளையும் எடுத்துக் கூறிய பின்னர், தமிழில் சைவ புராணங்கள் மிகுந்தும் வைணவ புராணங்கள் குறைந்தும் காணக் காரணங்கள் தனியே ஆராயப் பெறுகின்றன. தல புராணங்கள் தமிழுக்கே உரியன என்பது அடுத்து வரும் பகுதியில் கூறப்பெறும்.

தலபுராண நூலாசிரியர்கள் பற்றிய சுருக்கமான வரலாற்றுக் குறிப்புக்களும், உரையாசிரியர் பற்றிய குறிப்புக்களும் தனியே தொகுத்தளிக்கப் பெறுகின்றன.

தலபுராணச் சுவடிகள் பற்றியும் தலபுராணப் பதிப்புகள் பற்றியும் ஆராய்ந்த பின்னர், தமிழில் இதுவரை நிகழ்ந்த தலபுராண ஆய்வுகளும் நூல்களும் மற்றும் தலபுராணங்களின் புறத்துப் பிறந்த நூல்கள் சிலவும் குறிப்பிடப் பெறுகின்றன.

தலபுராணங்களின் நோக்கமும் பயனும் என்பது நிறைவாக அமையும் பகுதியாகும். இதில், இவ்வகை இலக்கியங்களின் அருமைப்பாடும் இன்றைய தேவையும் விரிவாக ஆராயப் பெற்றுள்ளன.

தமிழில் ஆயிரக்கணக்கான பாடல்கள் கொண்ட பெரும் பகுதியாகிய தலபுராண நூல்கள் பல்வேறு காரணங்களால் இன்னும் பலருடைய பார்வையில் கூடப் படவில்லை என்பதே உண்மை. இவை, முற்றிலும் சமயச் சார்புடையன வாயினும், இலக்கியச் சுவையும் வரலாற்றுச் சிறப்பும் பொருட் சிறப்பும் இவற்றில் ததும்பி வழிவதை எவரும் மறுத்தற்கியலாது. தமிழிலுள்ள தலபுராணங்களின் அருமையை அனைவரும் ஓரளவாவது உணர வேண்டும் என்னும் நோக்கில், அவற்றில் காணும் ஒருசில பாடல்கள் இந்நூலின் இடையிடையே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. தலபுராண நூல் முழுமையும் படித்துணர வேண்டும் என்னும் ஆவலை இவை தூண்டக் கூடும்.

பின்னிணைப்பில். தமிழில் இதுவரை அறியலாகும் தல புராணங்களில், செய்யுள் நூல்களின் வரிசையும், உரைநடையி லான நூல்களின் வரிசையும் தனித்தனியே தொகுத்து அளிக்கப் பெற்றுள்ளன. தமிழிலுள்ள சில தலபுராணங்களும் அவற்றின் வடமொழி மூலங்களும் பற்றிய அட்டவணை தனியே அமை கின்றது. நிறைவாக, இத் தலபுராண ஆய்வுக்குப் பயன்படுத்தப் பெற்ற தலபுராணங்கள், பிற நூல்களின் பட்டியல்கள் அமை கின்றன.

தமிழிலுள்ள தலபுராண நூல்கள் பற்றிய பொது ஆய்வாகவே இந்நூல் அமைகின்றது. இத்தலபுராணங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி ஆய்வுக்குரியன என்பதையும் பல்வேறு துறைகளுடன் இணைந்து ஆய்வுகள் மேற்கொள்ள இவை ஆழ்ந்த அடித்தளங்களைக் கொண்டுள்ளன என்பதையும் எடுத்துச் காட்டுவதற்காகவே இவை விரிவான முறையில் இங்கு விளக்கப் பெற்றுள்ளன.

காட்டாக, தலப்பெயர், தல இறைவன், இறைவி பெயர், தலவிருட்சங்கள், வழிபட்டோர், தலத்தின் தனிச் சிறப்புக்கள், கோயில்களில் கலைத்திறன்களின் பெருக்கம், நல்லறங்கள் நாட்டியமை, அடியார் திருப்பணிகள், சமூக ஒழுக்கங்களைக் கட்டிக் காக்கும் உறைவிடமாக ஆலயங்கள் திகழ்ந்தமை, ஆட்சி யாளர்களின் பங்களிப்பு, ஆன்றோர் பலரின் அற்புத அருளிச் செயல்கள் எனப் பல்வேறு தலைப்புகளில் ஆழ்ந்த ஆய்வுகளை மேற்கொள்ளத் தக்க வகையில் இத்தலபுராண நூல்கள் எழுந் துள்ளமையை அனைவரும் அறிந்துணர்ந்து போற்ற வேண்டும் என்னும் நோக்கில் இந்நூல் உருவாக்கப் பெற்றுள்ளது.

சமயக் கல்வியும் இலக்கியக் கல்வியும் ஒருங்கே பெற விழைவோருக்கு, இவ்வகை ஆய்வுகள் நூலாக வெளிவருவது பெரும் பயனுடையதாகும். இவ்வகையில் இலக்கிய ஆராய்ச்சியாளரும் ஆர்வலரும் இந்நூலைப் பெரிதும் போற்றி ஏற்பர் என நம்புகிறேன்.

இந்நூலை உருவாக்கி அச்சுக்கு அளித்த பின்னர் சில அரிய செய்திகள் கிடைத்தன. காட்டாக, பொன்னாயிரங்கவிராயர் என்பவர் இயற்றிய சேறைத் தலபுராணத்தின் பழைய அச்சுப் பிரதி ஒன்றை அண்மையில் நோக்க நேர்ந்தபொழுது அது சோழ நாட்டுச் சேற்றூர் அன்று என்பதும் பாண்டி நாட்டிலுள்ள சேற்றூருக்குரியது என்பதும் தெளிவானது. இவ்வாறே, 1897-ஆம் ஆண்டில் திருப்பாதிரிப்புலியூர் புராணத்தின் ஒரே ஒரு பிரதியைத் திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து பெற்ற தவத்திரு. ஞானியாரடிகள் தாமே அதனைப் பரிசோதித்து வெளியிட்டார்கள் என்ற செய்தியை அடிகளார் வரலாறு பற்றிய நூலை அண்மையில் கண்டபோது அறிய நேர்ந்தது. இதே போன்று, திரு மு. கோ. ராமன் அவர்கள் பழைய திருக்குற்றாலப் புராணம் ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளதையும் அறிய முடிந்தது. இவ்வாறு பல செய்திகள் பல்வேறு வகையில் சிதறிக் கிடக்கும் நிலையில், ஆய்வுக் கண்ணோட்டத்துடன் அவை ஒவ்வொன்றையும் நுணுகி ஆராய்ந்தால் மேலும் பல கருத்துக்கள் தெளிவடையக்கூடும். இத்தகைய புதிய செய்திகள் அனைத்தையும் பின்வரும் பதிப்புகளில் மேற்கொண்டு சேர்த்து அமைக்க இயலுமெனவும் நம்புகிறேன்.

**நன்றியுரை**

தமிழ் ஆய்வில் என்னையும் ஒருவனாக ஈடுபடுத்தி, நூல்கள் வடிவில் வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தியும் ஆற்றுப்படுத்தியும் வரும் பேராசிரியப் பெருந்தகை **டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்** அவர்களே இந்நூல் தோன்றுவதற்கு மூலகாரணமானவர்களாவர். இவர்தம் பேராசிரியரும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முதன்மைத் துணைவேந்தரும், இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த மொழியியல் வல்லுநருமாகிய முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்களின் மணிவிழா நினைவாக அறக்கட்டளையை நிறுவி, அதன் ஆறாவது சொற்பொழிவாக எனக்கு இத்தலைப்பினை அளித்து, 17-2-92 அன்று கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் சொற்பொழிவாற்ற

வாய்ப்பு நல்கியமைக்கும், இதனை நூலாக உருவாக்கி வெளியிட அனுமதி அளித்ததுடன் அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளமைக்கும் பேராசிரியர் அவர்கட்கு முதற்கண் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுர ஆதீன அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகத் திகழும் சைவ சித்தாந்த கலாநிதி, சேக்கிழார் அடிப்பொடி திரு **டி. என். இராமச்சந்திரன்** அவர்கள் இந்நூலுக்கு அழகியதொரு ஆங்கில முன்னுரையை வழங்கியிருப்பதுடன், தலபுராணங்களின் இன்றியமையாத் தேவையை எடுத்துக்காட்டியருளியமைக்காக மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத் துறைத் தலைவராக விளங்கும் பேராசிரியர் டாக்டர் **சோ. ந. கந்தசாமி** அவர்கள் இந்நூல் முழுமையும் நோக்கி அரிய கருத்துரையை வழங்கி வாழ்த்தியுள்ளமைக்காக நெஞ்சார்ந்த நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்ச் சுவடி ஆய்விலும் நூல்கள் பதிப்பிலும் என்னைத் தொடர்ந்து ஈடுபடச் செய்து, அவ்வப்போது ஊக்கமூட்டி உதவி வரும் தமிழ்ப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கட்கும், பேராசிரியர்கட்கும் பெரிதும் நன்றியுடையேன்.

தேவாரத் திருமுறைகளில் பெரும் ஈடுபாடு கொண்ட ஓலைச்சுவடித் துறைத் தலைவர் டாக்டர் **த. கோ. பரமசிவம்** அவர்கள் இத்தலபுராண ஆய்வுக்கும் துணைநின்றமை என்றும் நினைக்கத்தக்கது.

இந்நூலை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமைந்தன பழைய நூல்களே. இந்நூல்களை அவ்வப்போது அளித்து உதவியவர் பலர். அவருள் குறிப்பிடத்தக்கவர் சிலர். தமிழ்த் தலபுராணங்களின் நூற்பட்டியலை அமைப்பதில் பெரிதும் உதவிய சிரவை ஆதீனக் கவிஞர் **புலவர் ப. வெ. நாகராஜன்** அவர்கள் பல பழைய நூல்களையும் அளித்து, இத்தலபுராண ஆய்வில் துணைபுரிந்தமைக்காக உளமார நன்றி பாராட்டுகின்றேன்.

கொங்கு நாட்டுத் தலபுராணங்கள் பற்றிய பல குறிப்புகளை அளித்து, அவ்வப்போது உடனிருந்து ஊக்கமளித்த கல்வெட்டறிஞர் **புலவர் செ. இராசு** அவர்கட்கும் என் நன்றி உரியது.

தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்திலுள்ள பல பழைய நூல்கள் இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப் பெற்றன. நோக்கீட்டு நூல்களாக உள்ள இப்பழைய நூல்களை வேண்டியபொழுதெல்லாம் பார்வையிட அனுமதியளித்தும், குறிப்புகள் எடுக்க உதவியும் ஒத்துழைப்பு நல்கிய நூலக இயக்குநர் திரு த. பத்மநாபன் அவர் கட்கும் மற்றுமுள்ள நூலகப் பணியாளர்கள் அனைவருக்கும் மிகுந்த நன்றியுடையேன்.

இந்நூலினை அச்சிட்டு வெளியிட நினைத்தபொழுது எல்லாம் வல்ல திருவேங்கடவனின் திருவருளே துணைநின்றது. திருமலை திருப்பதி தேவஸ்தானத்தார் இந்நூலாக்கப் பணிக்கு நிதி நல்கை அளித்து உதவியமைக்காகச் செயலாட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றுமுள்ள பெரியோர்களுக்கும் பெரிதும் நன்றியுடையவனாவேன்.

நல்ல நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டுவரும் பாவை வெளியீட்டகத்தார் இந்நூலை இரண்டு பகுதிகளாக வெளியிட் டுள்ளமைக்காக மிகவும் நன்றியுடையேன்.

தமிழ் அச்சுப்பணியில் மிக நீண்டகால அனுபவம் வாய்ந்த கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்கள் தம் கவின்கலை அச்சகத் தில் இந்நூலை அச்சிட்டு வழங்கியமைக்காக நன்றி கூறும் கடப் பாடுடையேன். இப்பணியில் ஈடுபட்ட அச்சகப் பணியாளர் களுக்கும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் என் அன்பு கலந்த நன்றிகள் பலவாகும்.

மிகக் குறுகிய காலத்தில், நிறைவான செய்திகளைத் தொகுத்தளிக்க வேண்டுமென்ற ஆர்வத்தினால் எழுந்த இந் நூலில் ஏதேனும் பிழைகள் ஏற்பட்டிருந்தால் சுட்டிக் காட்டு மாறு நூல் ஆர்வலர் அனைவரையும் வேண்டுகிறேன். அவ்வாறே, அச்சுருவாக்கத்தில் நேர்ந்துள்ள பிழைகளையும் திருத்தி ஏற்குமாறு அன்போடு வேண்டுகிறேன்.


தமிழில் தலபுராணங்கள் பற்றிய ஒட்டுமொத்தமானதொரு கருத்தையும் நல்லெண்ணத்தையும் உருவாக்கும் முகமாகவே இந்நூல் முயற்சி அமைந்துள்ளது. இதில் கூறப்பெறாத வேறு பல நூல்களும் செய்திகளும் பலவிடங்களில் இருக்கலாம். அவற்றைத் தெரிவித்து உதவும் அன்பர்கள் அனைவருக்கும் பெரிதும் நன்றியுடையவனாவேன்.

மேவித் தொழுது உய்ம்மின் நீர்கள்
வேதப் புனித இருக்கை
நாவிற் கொண்டு அச்சுதன் தன்னை
ஞான விதிபிழை யாமே
பூவிற் புகையும் விளக்கும்
சாந்தமும் நீரும் மலிந்து
மேவித் தொழும் அடியாரும்
பகவரும் மிக்கது உலகே.

(திருவாய்மொழி 5:2:9)

தஞ்சாவூர்
28-2-95

அன்பன்
**வே. இரா. மாதவன்**



# தமிழில் தலபுராணங்கள்

உலகில் ஒரு நாட்டின் நாகரிகத்தின் மேன்மையை அறிவிப்பன அந்நாட்டின் தாய்மொழிச் செப்பமும் அதிலுள்ள திருந்திய இலக்கியப் பரப்புமேயாம். ஒரு மொழியானது செப்பத்திலும் சிறந்த இலக்கியப் பரப்பிலும் எவ்வளவுக் கெவ்வளவு பழமை யுற்றுத் திகழ்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு அந்நாடு நாகரிகத் தில் பழமையுற்றது என்றறியலாம். தமிழ்மொழி இவ்விரு வகை யிலும் பழமையுற்றுத் திகழ்வது ஆராய்ந்து அறிவோர்க்கு நன்கு புலனாகும்.

## தமிழ்

இந்தியப் பெருநாட்டிற்குரிய இருபெரும் பழமையான மொழி களில் தமிழ் ஒன்று. மற்றொன்று வடமொழி ஆகும். இலத்தீன் கிரேக்க மொழிகள் போன்று வடமொழி ஆட்சி குன்றிவிட்ட நிலையில், கடந்த இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளாக மக்க ளின் பேச்சு மொழியாக வழங்கியும், பெரும்பாலும் அடிப்படைகள் மாறாது தொடரும் ஒரே உலகச் செம்மொழியாகவும் அமைந்து விளங்குவது தமிழ் மொழியேயாம். இதற்குச் சான்றாக அமைவன இம்மொழியிலுள்ள இலக்கியங்கள்.

## இலக்கியம்

மக்கள் தம்முள் தொடர்பு கொள்ளவும், சமுதாயமாக வாழவும், எண்ணங்களை வெளிப்படுத்தவும் உறுதுணையாக இருந்து சிறந்த கருத்துப் பரிமாற்றக் கருவியாக அமைந்த மொழியே பின்பு இலக்கிய உருவாகப் பரிணமிக்கின்றது.

மனிதன் படைத்துக் கொண்டவற்றுள் மிகச் சிறந்ததும் உயர்ந்ததுமான மொழியில் அமைந்த இலக்கியமே அனைத்துக் கலைகளிலும் சிறந்ததாகக் கொள்ளப்படுகின்றது.

நிகழ்வுகளின் நினைவுக் குறிப்புகள், நிகழ வேண்டுமென எதிர் பார்ப்பனவற்றின் ஆக்கங்கள், இவ்விவ்வாறு அமையலாம் எனவும் முன்நோக்கிச் செல்லும் எண்ணங்களின் வெளியீடுகள் இவையே இலக்கியமாகப் பரிணமிக்கின்றன.

மாறாத உண்மைகளும் அவற்றை உணர்ந்தவரின் அனுபவங் களும் இணைவதால், இலக்கியக் கலை அறிவியலைவிட நிலைத்த இயல்புடையதாக ஆகின்றது. அறிவியல் மூளைக்கு மட்டும் நிறைவுதர இலக்கியம் மனத்திற்கும் அறிவுக்கும் இன்பம் தந்து, மீண்டும் மீண்டும் அவ் இன்பத்தை அனுபவிக்கும் நாட்டத்தையும் அளித்து, மனித உள்ளத்தில் நீங்கா இடம் பெறுகின்றது. அறிவிய லைப் போலன்றி, இலக்கியம் அனைவரையும் கவர்ந்திழுக்கும் வல்லமையுடையது என்பர் அறிஞர்.[1]

மனித வாழ்வோடு தொடர்புற்று அமைவதாலேயே இலக்கியம் மனத்தைக் கவருகின்றது. அத்தகைய இலக்கியத்தைப் படிக்கும் போது நாம் வாழ்வோடு நெருங்கிய, புதிய, பேருறவு கொள்ளு கின்றோம். மனிதன் வாழ்வில் கண்டதும், அனுபவித்ததும், நினைத்ததும், உணர்ந்ததும் ஆகியன இதில் வெளிப்படுவதால், இது வாழ்வு பற்றிய சொல்லுருவமாக அமைகின்றது.

இத்தகைய உயரிலக்கியங்கள் ஒரு மொழியின் அழியாச் செல்வங்களாகும். இவை, தாம் தோன்றிய காலத்தில் மட்டுமன்றி எல்லாக் காலத்திலும் பயனளித்தலால் நிலைபேறுடையனவா கின்றன. காலம், மொழி, இனம் எனும் எல்லைகளும் தடைகளும் இன்றிப் பரந்து பயிலப்படுகின்றன. பொழுதுபோக்கு இன்பம் அளிப்பதாக மட்டுமன்றி, மீண்டும் மீண்டும் கற்கத் தூண்டும் கலை நிரம்பியதாகவும், நினைக்குந்தோறும் மனத்தை நிறைக்கும் வற்றா இன்ப ஊற்றை அளிப்பதாகவும் அமைகின்றன. இவ் வியல்புகளால் 'நவில் தொறும் நூல் நயம்' எனப் பெருமை பெறுகின்றன.

---

1. டாக்டர் ச.வே. சுப்பிரமணியன், இலக்கிய வகையும் வடி வும், பக். 5. 6.

### செய்யுள் இலக்கியம்

தமிழிலக்கிய வளர்ச்சியில், பொருள், வெளியீடு, வடிவம் என்ற மூன்றின் அடிப்படையில் இலக்கிய வகைகள் பரந்து விரிந்திருக்கக் காணலாம். இவற்றுள், செய்யுள் வடிவ வகைகள் என்றும், உரைநடை வடிவவகைகள் என்றும் இருபெரும் வகைகளைப் பகுத்தறியலாம். இன்று கிடைக்கும் தமிழிலக்கியங்களில் சுமார் இருநூறு ஆண்டுகளாகவே உரைநடை இலக்கியங்கள் பயிலப் பெற்று வருகின்றன. ஆயின், அதற்கு முன்பாக இரண்டாயிரம் ஆண்டுகளாகச் செய்யுள் இலக்கிய வகையே பயிலப் பெற்று வந்தது கருதத்தக்கது. எனவே, தமிழில் செய்யுள் இலக்கிய வகை முதன்மை பெற்றது என்பது புலனாகும்.

### சங்க இலக்கியமும் சமய இலக்கியமும்

உலகியலில் மக்களின் தலைவர்களாக விளங்கியவர்களை மட்டுமே புகழ்ந்து நூல் செய்த காலம் சங்க காலம். பத்துப் பாட்டில் ஐந்து ஆற்றுப்படைகளில் பொருநாறு, சிறுபாண், பெரும் பாண், கூத்தர் ஆகிய நான்கும் மக்கள் தலைவர்களைப் புகழ்வனவேயாம். திருமுருகாற்றுப்படை ஒன்று மட்டுமே இறைவனைப் புகழ்கிறது. இவ்வாறு தமிழில் இறைவனையே முழுமையாகப் புகழ்ந்துபாடும் முறையான நூல்கள் சங்க காலத்திற்குப் பின்பு தான் மிகுதியாகக் காண முடிகின்றது. பிற்காலத்தில் கடவுளரைப் பாடுகின்ற பாடல்களே மிக அதிகமாயின, அவ்வகையில் பலவகைச் சிறுநூல்கள் தோன்றி வளர்ந்துள்ளன.

இதுபோன்றே, சங்க காலத்துப் பாடல்களில் நூலமைப்பு ஏதுமில்லை. அவை பெரும்பாலும் தனிப்பாடல்களின் தொகுப்பேயாகும். சங்க காலத்திற்குப் பிறகே தனி அமைப்புடைய தனிச் சிறுநூல்கள் பலவாக எழுந்துள்ளன. இலக்கிய அமைப்புடைய இந்நூல்கள் பெருங்காப்பியங்களெனவும் சிறுகாப்பியங்களெனவும் இலக்கண நூலோரால் இனங்காணப் பெற்றன.

### பக்தி இலக்கியங்கள்

இலக்கியங்கள் பலவாக வளரத் துணையாகவும், காரணமாகவும், அமைந்த ஆற்றல்களுள் சமயமும் ஒன்று. இறைச் சமயங்களே பக்தி நெறியைப் போற்றியதால், பக்தி இலக்கியம் சில சமய இலக்கியங்களிலேயே காணப்படுகின்றது ஒவ்வொரு மொழியின் பக்திப் பாடலும், மொழியமைப்புக்கும் சூழல் தேவைக்கும், படைப்போர் இயல்புக்கும் ஏற்ப உட்பொருள்,

புறநிலை வடிவம் கொண்டு, வேறுபாட்டுடன் அமைவதைக் காணலாம். இந்நிலையில், தமிழில் பக்தி இலக்கியங்களை இரு வகையாகக் கருதலாம். முதலும் அடிப்படையுமான வகை பக்திப் பாடல். இவை தோத்திரமாக, துதியாக, புகழ்பாடுதலாக, போற்றுதலாக, வாழ்த்தாக, வணக்கமாக உருவாகின்றன. பாடுவோன் பக்தன் என்ற நிலையில், தன்னிலைக்கு இரங்குதல் இன்றியமையா உறுப்பாகின்றது. இரண்டாம் வகை, இதனினும் பொதுமைப் பட்டு, தன்னையுட்படுத்தித் தன் கோணப் பார்வையை வழங்குவதாக அன்றி, பக்தி மேம்பாடுவளர்ச்சிக்கு வாயிலாகக் கதையிலக்கியம், புராணம், பக்தர் வரலாறு, தலச்சிறப்பு, இறைப் பெருமை போன்றவற்றைக் கூறும் படர்க்கை அணுகு முறையைக் கொள்கின்றன. இவை இரண்டுமன்றி மூன்றாம் வகையில் அமைவனவே சமய சாத்திரங்கள். சமயக் கொள்கைகள், தத்துவக் கோட்பாடுகள் பற்றிய சமயவாதிகளின் எண்ணத் தொகுதியாகவும் ஆய்வுக் கருவூலமாகவும் இவை அமைகின்றன என்பர் அறிஞர்.[1]

## மெய்ப்பொருள் உண்மைக் கொள்கை

இன்றைய உலகில் சமயக் கொள்கை இல்லாத இடமே இல்லை என்பது தெளிவு, சமயம் என்பது பெரும்பாலும் மெய்ப்பொருள் உண்மைக் கொள்கையையே (ஆத்திகத்தையே) குறிப்பது. மெய்ப்பொருளானது,என்றும் ஒருபெற்றித்தாய்,மாற்றம் இன்றியிருப்பது. அத்தகைய பொருள், 'கடவுள்' என்று சொல்லப்படும் முழுமுதற் பொருளே, எனினும், பிறவற்றை மெய்ப்பொருளாகக் கருதுவோரும் உளர். அது காரணமாக உலகிடைச் சமயங்கள் பலவாயின,

மெய்ப்பொருள் உண்மைக் கொள்கையாகிய கடவுட் கொள்கையும் பல்வேறு வகையாய்த் தோன்றி வளர்வது. அவ்வளர்ச்சி, ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வகையாகக் காணப்படும். நம் இந்திய நாட்டில் அறியப்படும் அவ்வளர்ச்சியில் மிக முற்பட்ட நிலையைக் காட்டுவனவே புராணங்கள்.

## பழைமை வரலாறுகள்

பழைமை என்ற பொருளில் அமையும் புராணங்களில் சொல்லப்படும் வரலாறுகளுட்சில இன்றைய நிலையில் பொருத்தம்

1. டாக்டர் ச.வே, சுப்பிரமணியன், திராவிடமொழி இலக்கியங்கள், பக். 56, 57.

இல்லாதனை போலத் தோன்றினும் அவையாவும் சில உண்மை களை அடிநிலையாகக் கொண்டவை என்பது நுணுகி ஆராயின் புலப்படும். உண்மை நிகழ்ச்சிகள், மக்கள் தமது கொள்கையை வலியுறுத்தல், நுண்பொருளைப் பருப்பொருளாக விளக்குதல் என்னும் இவற்றை அடிநிலையாகக் கொண்டு நம்நாட்டில் பழைமையாகத் தோன்றிய வரலாறுகளே புராணங்கள்.

வேதம், ஆகமம் என்பன நம்நாட்டுச் சமய முதல்நூல்களாய் விளங்குகின்றன. அவை கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்கு உணர இயலாதன. ஆயின், பல்வகையாகப் பரந்து விரிந்து கிடக்கும் வேதத்தின் முடிந்த பொருள் இது என்பதை எளிதில் உணர்த்து வன புராணங்கள். இப்புராணங்களை உணராது நம் நாட்டுச் சமய நிலையை உணர்தல் இயலாது.

நம்நாட்டுச் சமய முதல் நூல்களையும் அவற்றின் கிளையாகத் தோன்றிய பற்பல நூல்களையும் வரலாற்று நோக்கில் ஆராயு மிடத்து மொழி, இனம், சமயம் என்னும் கட்டுப்பாடுகளைக் கடந்து ஆராய்வதே பொருத்தமாகும்.

தமிழ்ப் புராணங்களை வரலாற்று நோக்கில் ஆராயப் புகும் முன் வடமொழிப் புராணங்களின் தோற்றம் வளர்ச்சியைக் காண்பது அறிவுடையதாகும்.

புராணம்

'புராணம்' என்பது புராதனம் (பழைமை) என்னும் வட சொல்லின் அடியாக அமைந்ததாகும். பழையதாயினும் புதிதாகத் தோன்றுவது. பழமையானது, தன்னிடத்தில் ஈடுபட்டவர்களை முன்னுக்குக் கொண்டு வருவது என்று பொருள் கொண்டது இப் புராணம் என்ற சொல்.

புராணம் என்கிற இவ்வடசொல், புரா—நவ என்ற இரு வேர் களிலிருந்து பிறந்தது; இதன் பொருள் பழமைக்கும் பழமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய் உள்ளது என்பர்.

புராணம் என்பதற்கு முன்னிகழ்ந்தது என்பதே பொதுப் பொருள். பழமையான எந்த வரலாறும் இன்னும்கூட மக்க

விடையே சொல்லப் பெற்று வழங்குகின்றனவோ அவையே புராணம் என்பதாகும்.[1]

எனவே. புராணம் என்பதைப் பழங்கதை (Ancient tale or legend) என்று கூறுவதைக் காட்டிலும், வழிவழி வந்த மரபு வரலாறு (Traditional History) என்றுகூறுவதே மிகவும் பொருத்த முடையதாகும்.

### வடமொழியில் புராணங்கள்

வடமொழி இலக்கியத்தை வேதகால இலக்கியம்,செம்மொழிக் கால இலக்கியமென இரு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். செம் மொழியென்பது சமஸ்கிருதம், வேதம் அநாதிநித்தியம் எனப்படும், அதாவது தோற்றமும் முடிவும் இல்லாதது, என்றும் உள்ளது என்பது பொருள். பல்லாயிரமாண்டுகளாக மக்கள் சிந்தையில் நிலவி, வாய்மொழியாக வந்து எழுதா மறையாயிருந்த பின்னர் எழுத்தில் வெளிவந்த மறை நான்கும் இன்று காலவரலாற்று நோக்கிலே மிகப்பழையனவாகக் கொள்ளப்படுகின்றன. எனவே அவை பாடப்பட்ட மொழியும் மிகப் பழையதாயிருக்கிறது. அதே வைதிக மொழியிலிருந்து தோன்றிக் காலப்போக்கில் மாற்ற மடைந்து வேறாகத் தோன்றும் சமஸ்கிருதம் காலத்தாற் பிற் பட்டது. எனவே வடமொழி என்று கூறும்போது வேதம், பிரா மணம், ஆரணியகம்; உபநிடம் என்பவை எழுதப்பட்ட வைதிக மொழியையும். இதிகாசம், காவியம், புராணம், தருமசாத்திரம், நாடகம், சமயசாத்திரம், தோத்திரம் முதலியன எழுதப்பட்ட சமஸ்கிருத மொழியையும் கருத்திற் கொள்ளல் வேண்டும்.[2]

### புராணங்கள்

வடமொழியில் வேதங்களுக்கு அடுத்தபடியாகப் புராணங்கள் ஐந்தாவது வேதமாகக் கொண்டாடப் பெறுகின்றன. மகாபாரதத்

---

1. The Purana as a class of literature, represents different phases and aspects of life lived by the people in diverse ages. It is not possible to adopt a standard definition for the class of literature that contains hiterogeneous phases and aspects of life. Literally the word purana means 'old'. A purana is therefore, the record of ancient tradition.
—Ancient Indian Tradition and Mythology Series Vol, 33 (Brahma Purana) Part I, p. xiii)
2. வடமொழி இலக்கிய வரலாறு, ப. 1.

தைப் போலவே புராணங்களும் சமய இலக்கியமாகக் கருதப்பட்டு வந்துள்ளன, வேதங்களைப் போலவே அவையும் பழமையுடையன வென்பது ஆன்றோர் கருத்து. உருவத்திலும் பொருளிலும் அவை இதிகாசங்களோடும் மிருதிகளோடும் ஒப்பிடத்தக்கன. இந்திய தரிசனங்களின் வரலாற்றையும், சமயக் கோட்பாடுகளையும், இயம நியம நிட்டைகளையும், விரதானுட்டானங்களையும் அறிவதற்குப் புராணங்கள் மிகப்பயனுடையனவாயின. இந்திய நாகரிகத்தின் கருவூலம் புராணங்களே என்பர். புராதனமாக இருந்து வருவதே புராணம் எனப்படுகிறது. புராணம் செவி வாயிலாக வந்த புராதனச் செய்திகளெனவும் கூறலாம். வேதகாலந் தொட்டு வந்த கதைகளும், வரலாறுகளும் மக்களிடையே பிரபலம் பெற்றுப் புராணமாக வடிவெடுத்தன. இவை சூதர் என்ற பாடகர்களால் ஆதியிற் பாடப்பட்டுவந்தன. அதனாலேதான் சூத பௌராணிகளாற் கூறப்பட்டன என வழங்கும் புராணங்கள் மக்களிடையே பிரபலமடைந்து வந்ததால், புரோகிதர்கள் புராணங்களைப் பயன்படுத்திச் சமய போதனை செய்யவும், விரதானுட்டானங்களைப் பற்றிப் பிரசாரஞ் செய்யவும் முயன்றனர்.

பிராமணங்களிற் புராணம் பற்றிய செய்தி

புராணம் என்ற சொல் பிராமணங்களிலும் உபநிடதங்களிலும் காணப்படுகிறது. பண்டைக் கதைகள், உலக வரலாறுகள் என்ற பொருளிலேயே அங்கு இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது. வேத சுருதிகளுக்கு முன்னரே இத்தகைய புராணக் கதைகள் இருந்திருத்தல் வேண்டும். ஆனால் இன்று உள்ளதுபோலத் தனிப்பட்டதோர் இலக்கியமாகப் புராணங்களிருக்கவில்லை. அதர்வணவேதத்திலே புராணத்தைப்பற்றி. "தூச : சாமானி சந்தாம்ஸி புராணம்" எனத் தனிப்படக் கூறப்பட்ட போதிலும், அவை புராண இலக்கியங்களே எனக் கூறிக் கொள்ள முடியாது. சாந்தோக்கிய உபநிடதம் "சதுர்த்த மிதிஹாச புராணம் பஞ்சமம் வேதானாம் வேதமிதி" எனக் குறிப்பிடுகிறது. இதிகாசம், புராணம் என்பன பழைய சரித்திரக் கதைகளையும், ஆக்கியானங்களையும் குறிப்பிட்டன. பின்னர் சூத்திர இலக்கியங்களிலே புராணம் திட்டமாக ஒரு தனி இலக்கியமாய்க் குறிப்பிடப்படுகிறது. அரசன் வேதத்தையும் தர்ம சூத்திரங்களையும் வேதாங்கங்களையும் பிரமாணமாகக் கொள்வது போலவே புராணங்களையும் நீதிபரிபாலனத்துக்குப் பிரமாணமாகக் கொள்ளவேண்டும், கி;பி. 3ஆம் 4ஆம் நூற்றாண்டைச்

சார்ந்த கௌடில்ய அர்த்தசாத்திரத்திலே. அரசர்க்குக் கல்வி புகட்டுவதற்குப் புராணக் கதைகளைப் பயன்படுத்தலாமெனக் கூறப்படுகிறது.

மகாபாரதம் ஒரு புராணமாகவே தன்னை வருணித்துக் கொள்கிறது. அத்துடன் புராணங்கள் கதையை ஆரம்பிப்பது போலவே, "புராணங்களில் புலமை பெற்றவரும் லோமஹர்ஷணர் மகனுமான சூதர் சொன்னார்" எனப் பாரதம் ஆரம்பிக்கின்றது. இவற்றிலிருந்து மகாபாரதம் அப்போதைய உருவத்தைப் பெறுவதற்கு முன்பே புராணங்கள் தனி இலக்கியமாக இருந்தன என்று கூறுவர்.

## பதினான்கு வித்தைகள்

வடமொழி மரபில் வித்தைகள் பதினான்கு என்பர். அவை யாவன: வேதம் நான்கு வேதாங்கம் ஆறு சாஸ்திரம் நான்கு. இவற்றுடன் ஆயுர் வேதம், அர்த்தவேதம், தனுர் வேதம். கந்தருவ வேதம் என்னும் நான்கு உபவேதங்களையும் சேர்த்து வித்தைகள் பதினெட்டு என்றும் கூறுவர்.

இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்பன நான்கு வேதங்கள்.

சிட்சை (எழுத்திலக்கணம்), வியாகரணம் (சொல்லிலக்கணம்), சந்தஸ் (யாப்பிலக்கணம்), நிருக்தம் (வேதத்தின் சொல்லுக்குப் பொருள்கூறும் நிகண்டு). சோதிடம் (காலம் பற்றிய கணிதம்) கல்பம் (வேதகர்ம இலக்கணம்) என்பன ஆறு வேதாங்கங்கள்,

மீமாம்சை, நியாயம், புராணம், தர்ம சாஸ்திரம் ஆகிய நான்கும் நான்கு சாஸ்திரங்கள்.

எனவே, இங்கு வித்தைகளில் ஒன்று புராணம் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வடமொழி இலக்கியத்திலும் அதைச் சார்ந்த பிற இந்திய மொழிகள் அனைத்திலும் புராண இலக்கியம் ஒரு சிறப்பான இடம் பெற்றே விளங்குகிறது. 'வேதாகம புராண இதிகாசம்' என்பது ஒரு வடமொழி வழக்கு. ஏனைய யாவும் இவற்றினுள் அடக்கம் என்பது கருத்து.

## இதிகாச புராணங்கள் - ஐந்தாவது வேதம்

இதிகாசமும் புராணமும் ஐந்தாவது வேதம் என்று சிறப்பித்துக் கூறப்பெறும். 'இதிஹாஸ புராணானி பஞ்சமோ வேத

உச்யதே' என்று சாந்தோக்யோபநிடதம் (அத்தியாயம் 7, முதற் கண்டம்) கூறுகிறது.

புராண நூல்கள் அதர்வண வேதம் தோன்றிய காலத்திலேயே சிறந்த இலக்கியமாகக் கொள்ளப் பெற்றன என்பர். மகா பாரதம் புராணப் பெயர்களைக் கூறுகிறது. வேத காலத்துக்கு முன் ஆதிபுராணங்கள் கதைகளாகவே வழங்கின என்றும், புத்தர் காலத்துக்கு முன் ஆதிபுராணங்கள் எழுதப் பெற்றிருந்தன என்றும், ஏனையவை அவர் காலத்திற்குப்பின் எழுதப்பெற்றன என்றும் அறிஞர் கருதுவர். திருமாலே வேதவியாசராக அவதரித்தார் என்பது வடநூல் மரபு.

வேத வாக்கியங்களுக்குப் புராணங்களையும் இதிகாசங்களையும் கொண்டே பொருள் செய்ய வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. நாட்டைக் காக்கும் மன்னர்கள் பல சாஸ்திரங்களையும் கற்றுத் தேறியிருப்பதுடன் புராணங்களையும் பயில வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிற்கால நூல்களிற் புராணம் பற்றிய குறிப்புக்கள்

மகாயான புத்த மத நூலான லலித விஸ்தரம் கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அந்நூல் 'புராணம்' என்றே தன்னைக் கூறிக் கொள்கிறது. "சத்தர்மபுண்டரீகம்", "கரண்டவியூகம்", "மகாவஸ்து" போன்ற பௌத்த நூல்களும் புராணங்களைப் போன்றவை. பக்தியைப் பெரிதும் போற்றுபவை.

பாணர் தமது ஹர்ஷ சரித்திரத்திலே தாம் தம்முடைய கிராமத்திற் புராண படனம் கேட்கப் போனதாயும், அங்கே வாயு புராணம் படிக்கப் பட்டதாயும் கூறுகிறார். இது கி. பி. 625 வரையில் நிகழ்ந்திருக்க வேண்டும். நீதிக்குப் பிரமாணமாகப் புராணக் கூற்றுக்களைக் கொள்ளலாமென்று குமாரிலர் என்ற தத்துவ அறிஞர் (கி பி. 750) கூறுகிறார். ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த சங்கரரும், 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இராமானுஜரும் தம் மதங்களை நிறுவப் புராணங்களையே மேற்கோளாகக் காட்டுகின்றனர்.

கி.பி. 1030இல் வாழ்ந்த அராபியப் பிரயாணியான அல்பெறூனி பதினெண் புராணங்களைக் குறிப்பிடுகிறார். விஷ்ணு தருமோத்தரமென்ற பிற்பட்ட புராணத்தைக் கூட அவர் நுணுக்கமாகப் படித்துள்ளார். எனவே, முற்பட்ட புராணங்கள் எல்லாம் கி.பி. 7 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே நூல் வடிவைப் பெற்றிருக்க வேண்டுமெனலாம்.

**புராண இலக்கணம்**

புராணங்களுக்கு இலக்கணம் வகுத்த பிற்காலத்தவர் ஐந்து இலக்கணத்தைக் குறிப்பிடுவர். அவை சர்க்கம் (சிருட்டி), பிரதி சர்க்கம் (அழிந்து மறுபடி உண்டாக்குவது), வம்சம் (தெய்வ பரம் பரை), மன்வந்தரம் (மனுக்களின் காலம்), வம்சியானு சரிதம் (அரச வமிசங்களின் வரலாறு) என்பனவாகும்.[1] ஆயின், இன்று நிலவும் புராணம் எதிலும் இந்த இலக்கணங்களை முற்றாய்க் காண முடியாது இன்றுள்ள புராணங்களிலே பல தானம், விரதம் தீர்த்தம், மூர்த்தி தலம், சிராத்தம் முதலியவற்றையே குறிப்பிடு கின்றன.

பிற்காலத்திற் புராணத்துக்கு இலக்கணம் வகுத்தவர்கள் பஞ்சலக்கணம் உபபுராணங்களுக்கே உரியனவென்றும், மகா புராணங்கள் தசலக்கணம் பெற்றிருக்க வேண்டுமென்றும் விதித்தனர். இவை, விருத்தி (தொழில்) ரக்ஷா, (தெய்வங்களின் அவதாரம்), முத்தி (வீடு), ஹேது (அவ்யக்தமான உயிர்), அபாச்ரய (பிரமம்) என்பனவாகும். இவற்றைவிட, பிரமா, விட்டுணு, சூரியன், உருத்திரன் என்ற தெய்வங்களின் பராக்கிரமத் தைக் கூறுவனவாயும். உலகின் சிருட்டி, திதி, சங்காரம் என்பன வற்றையும், அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றையும் கூறுகின்றனவாயுமிருக்கின்றன. இதுவும் முழுமையான இலக்கணம் எனச் சொல்ல முடியாது. ''புராணங்கள் வாழ்வில் எல்லா அம்சங் களையும் அடக்கியுள்ளன'' என்பர் அறிஞர் அரிப்பிரசாத சாஸ்திரி அவர்கள்.[2]

இராமாயணம், மகாபாரதம் இவற்றில் கதை தொடர்ச்சியாக இருப்பது போல புராணங்களில் காண முடியாது. ஒரு புராணத் தில் கூறப்படும் கதை மற்றொரு புராணத்தில் வேறு வகையாகவும் கூறியிருக்கலாம். மேலும், புராணங்களில் கடவுளர் மீது தோத்திரப் பாடல்களும் மிகுதியாக உள்ளன.

---

1, According to the lexicographer, Amara-Simha (c. 500 A D.) a purana shouid treat of five subjects. viz. 1) creation, 2) Dissolution and Re-creation, 3) Genealogies of gods, patriarchs and illustrious monarchs. 4) Epochs of Manus and 5) the history of ancient dynastics.
—Ancient Indian Tradition and Mythology Series-Vol. 33 Bramhma Purana, Part I. p. xiii.

2. வடமொழி இலக்கிய வரலாறு, ப. 32.

புராணங்கள் கதை கூறி நீதி புகட்ட வந்தன. ஆதலின் கதையில் கருத்துக் கிடையாது. வேதங்களில் உள்ள வேள்விகள், அத்தி முதல் எறும்பு ஈறான உயிர்களின் படைப்பு, உலக அமைப்பு, கிரகங்களின் மண்டலம், சுவர்க்கம், நரகம், தேவ ஆராதனை, உடலமைப்பு, வைத்திய முறை, நாடிகள், யோக முறைகள், நோன்புகள், மந்திரம், துதி, சகுனம் முதலிய இம்மைக்கும் மறுமைக்கும் உதவக்கூடிய பல வழிமுறைகள் ஆகிய எல்லாச் செய்திகளும் புராணங்களில் கூறப் பெற்றுள்ளன. இதனாலேயே புராணங்களில் இல்லாத பொருள் ஒன்றுமில்லை என்று கூறுவர்.

### புராணங்கள் - நண்பன் போல் உதவுவன

வடமொழியில் இலக்கியங்களை மூன்று வகையாகக் கூறுவர் அவை, பிரபு சம்மிதை, சுஹ்ருத் சம்மிதை, காந்த சம்மிதை என்பன. இன்னது செய்க. இன்னது தவிர்க என்று விதிக்கின்ற வேதம் ஆகமங்கள் பிரபு சம்மிதை எனப்பெறும். ஒரு நண்பன் புத்தி சொல்லி நல்லொழுக்க உணர்ச்சியை ஊட்டுவதுபோலப் பழைய கதைகளைச் சொல்லி நீதியை உணர்த்துகின்ற புராண இதிகாசங்கள் சுஹ்ருத் சம்மிதை எனப்பெறும். மனைவி போல் அன்போடு நீதியை உணர்த்துகின்ற காவியங்களும் நாடகங்களும காந்த சம்மிதை எனப்பெறும். இதனால் புராணங்கள் நண்பன் போல் உதவுவன என்பதை அறியலாம்.

புராணங்களில் கதைகளே சிறந்திருப்பினும் அவை காவியங்களாகிச் சுவைகளையும் ஏற்று, தெய்வபக்தி, நல்லொழுக்கம் போன்ற நற்பண்புகளையும் வளர்த்து வருவது குறிப்பிடத்தக்கது.

### புராண வகைகள்

வடமொழிப் புராணங்கள் அனைத்தையும் மூன்று வகையாகப் பிரிப்பர். அவை, மகாபுராணங்கள்-18, உபபுராணங்கள்-18, அதி புராணங்கள்-18 என்பன. இவற்றுள் மகா புராணங்கள் சமயத்தைப் பொதுநிலையிற் பேசுவன. உபபுராணங்கள் தனித்தனித் தெய்வங்களைப் புகழ்வதற்கென்று எழுந்தவை. அதிபுராணங்கள் பிற்காலத்தவை. இவை விரதம், தீர்த்தம், தலம் பற்றிப் பேசுபவையாகும்.

### 1. மகா புராணங்கள்

புராணம் என்ற பொதுப் பெயரில் நாம் அறிவன மகா புராணங்களே. இவை வியாசரால் செய்யப் பெற்றவை என்பர்,

இவை தொகையால் பதினெட்டு. இவற்றின் பெயர்களை வடமொழி நூல்களிலும், திவாகரம், பிங்கலம், சூடாமணி ஆகிய தமிழ் நிகண்டுகளிலும் கூறக் காணலாம். அவையாவன: 1. பிரம புராணம், 2. பதும புராணம், 3. விட்னு புராணம், 4. சிவ புராணம், 5. பாகவத புராணம், 6. நாரதீய புராணம், 7. மார்க்கண்டேய புராணம், 8. ஆக்னேய புராணம், 9. பவிஷ்ய புராணம், 10. பிரமவைவர்த்த புராணம், 11. இலிங்க புராணம், 12. வராக புராணம், 13. ஸ்கந்த புராணம், 14. வாமன புராணம், 15. கௌமார புராணம், 16, மச்ச புராணம், 17. கருட புராணம், 18. பிருமாண்ட புராணம் என்பன.

இப்பதினென் புராணங்களிலும் மேலிட்டுத் தோன்றும் குணம் பற்றி இவற்றை வேறு வகையிலும் பாகுபடுத்துவர். காந்தம், ஆக்கினேயம், சைவம், கூர்மம், மச்சம், இலிங்கம் என்ற ஆறும் தாமதப் புராணம் என்றும்; பிரமாண்டம், பிரம வைவர்த்தம், மார்க்கண்டேயம், வாமனம், பிரமம், பவுடியம் என்ற ஆறும் இராசத புராணம் என்றும்; பாகவதம், பதுமம், வராகம், வைணவம், காருடம், நாரதீயம் என்ற ஆறும் சாத்துவிகப் புராணம் என்றும் பகுப்பர். இவை முறையே சிவன், பிரமன், விஷ்ணு என்ற கடவுளர்களைப் பற்றியனவாகும்.

மகா புராணங்கள் சைவம், வைணவம் என்ற அடிப்படையிலும், பிரமன், சூரியன், அக்னி, சிவன், விட்னு என்ற தெய்வங்களின் அடிப்படையிலும் பகுத்துக் கூறப்பெறும். அவையாவன: ஆக்கினேயம் ஒன்று-அக்கினி புராணம்; பிரமவைவர்த்தம்-சூரிய புராணம்; பிரமம், பதுமம் இரண்டும் பிரம புராணம்; விட்னு, நாருதீயம், பாகவதம், காருடம் என்ற நான்கும் விட்னு புராணம்; ஏனைய பத்தும் சிவமகா புராணங்கள் என்றும் கூறப்பெறும்.

## 2. உப புராணங்கள்

மகாபுராணங்களுக்குத் துணையாய் அமைந்தமையால் இவை உபபுராணம் எனப் பெயர் பெற்றன. இவற்றுள் பல சனத்குமாரர் முதலிய முனிவர்களால் செய்யப் பெற்றவை. ஏனையவை வியாசர் செய்தார் என்பதே வழக்கு. இவையாவும் இன்று கிடைக்கவில்லை. சிலவே கிடைக்கின்றன. உபபுராணங்கள் பதினெட்டு வருமாறு: 1. சனற்குமார புராணம், 2. காந்த புராணம், 3. நந்தி புராணம், 4. நாரத புராணம், 5. மாணவ புராணம், 6. பிருமாண்ட புராணம், 7. காளி புராணம், 8. சாம்ப புராணம், 9. நரசிம்ம புராணம்,

10. சிவதரும புராணம், 11. தூர்வாச புராணம், 12. கபிலபுராணம், 13. ஔசநச புராணம், 14. வருணபுராணம், 15. மகேசுர புராணம், 16. கௌமார புராணம், 17. மாரீசபுராணம், 18. நாரதீயபுராணம் ஆகியன.

3. அதி புராணங்கள்

மிகவும் பிற்காலத்தில் தோன்றிய இப்புராணங்களும் பதினெட்டு என்றே கூறுவர். அவையாவன: 1. பார்க்கவ புராணம், 2. முத்தல புராணம், 3. விநாயக புராணம், 4. ஆதி புராணம், 5. மகா பாரதம், 6. தேவியின் சரித விரிவு, 7. கார்க்கப் புராணம், 8. கல்கிப் புராணம், 9. கிருஷ்ணாவதாரக் கதை, 10. வாசிஷ்டம், 11. பசுபதி புராணம், 12. விருத்தருமம், 13. பிருகந் நாரத தீபம், 14. பிஷ்யோத்தரம், 15. பிருத்வாமனம், 16. சிவதருமோத்திரம், 17. பரானந்தம், 18. பிருகத்மாத்யைம் என்பனவாம்.

மேற் கூறப்பெற்ற இம் மூவகைப் பிரிவுகளும் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு சமயப் பிரிவினரால் எழுதப் பட்டவை யாகும். இத்தகைய புராணங்களில் காணப்படும் சிறப்புச் செய்திகளின் வெளிப்பாட்டினைக் கொண்டும் இவற்றை வகைப்படுத்துவர். இத்துறையில், அரிபிரசாத சாஸ்திரி[1] போன்றோரின் கீழ்க் காணும் வகைப்பாடு மிகவும் பயனுடையன. வடமொழிப் புராணங்களின் வளர்ச்சி நிலைகளை அறியவும், எளிதில் விளங்கிக் கொள்ளவும் இவ்வகைப் பகுப்புக்கள் பெரிதும் துணையாகும். இவர் கண்ட ஆறு வகையான பகுப்புக்கள் வருமாறு:

1. பல்துறைச் செய்திகள் அமைப்பிலான புராணங்கள் :

புராணத்தின் பொருளான கதைக்கட்டுக்கோப்புடன் மருத்துவம், இலக்கணம், இசை, சோதிடம் என வடமொழியில் காணலாகும் கலை, அறிவியல் பற்றிய எல்லாப் படைப்புக்களின் காரணத்தையும் கொண்டுள்ள கருடபுராணமும் அக்னிபுராணமும் இதற்குச் சான்றுகளாகும்.

2. தீர்த்தம், விரதம் பற்றிச் சிறப்பாகப் பேசும் புராணங்கள் :

பதும புராணம், கந்த புராணம், பவிஷ்ய புராணம் ஆகியன மிகுதியும் தீர்த்தம், விரதம் ஆகிய இவற்றின் சிறப்புக்களையே பேசுவனவாகும்.

---

1. Hariprasad Sastri, The Maha Puranas, Journal of Bihar (and Orissa) Research Society, Patna, Vol. xiv. p 320

3. அடிப்படை அல்லது மூலக் கதையினை முதலும் முடிவுமாகக் கொண்ட புராணங்கள்.

பிரம புராணம், பாகவத புராணம், பிரம வைவர்த்த புராணம் என்பனவற்றில் இவ்வகையில் மூலக்கதை தொடக்கத்திலும் முடிவிலுமாக இரண்டு முறை இடம்பெறக் காணலாம்.

4. வரலாற்று நோக்குடைய புராணங்கள்:

மறைந்த வாயு புராணத்தின் சில பகுதிகளைப் பிருமாண்ட புராணம் கொண்டுள்ளதால் இதை வாயு புராணத்தின் பின்னர்த் தோன்றியதாகக் கொள்வர்.

5 சமயத் தனிநிலைக் குழுவினைச் சார்ந்த புராணங்கள்:

இலிங்க புராணம், வாமன புராணம், மார்க்கண்டேய புராணம் ஆகியன இதிலடங்கும்.

6. மிகத் தொன்மையான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட புராணங்கள் :

வராக புராணம், மட்சய புராணம், கௌமார புராணம் ஆகியன இதிலடங்கும்.

வடமொழிப் புராணங்களில் அமைந்துள்ள செய்திகளைத் தெளிவாக அறிவதற்கு மேற்காணும் பகுப்பு மிகவும் பயனுடையதாகும்.

மேற்கூறப் பெற்றவற்றுள் மகாபுராணமே வடமொழிப் பாஷ்யகாரரால் தம் பாஷ்யங்களில் மேற்கோளாய்க் காட்டப் பட்டவை; அவர்கள் உபபுராணங்களில் சொல்லப்பட்டுள்ள மரபுகள் பண்டைய அரச பரம்பரையைத் தெளிவுறுத்தி வரலாற்று அறிவுக்கு ஓரளவு துணைசெய்வன என்பர். காட்டாக, விஷ்ணு புராணம் மௌரிய பரம்பரையையும், வாயு புராணம்-குப்த பரம்பரையையும் சுட்டுகின்றன என்பர்.

வடமொழியில் புராணங்களின் நிலை தனிப்பட்டது வேதம் முதல் மூன்று வருணத்தாருக்கு மட்டுமே உரியது. புராணம் நான்கு வருணத்தாருக்கும் உரியது என்ற கருத்து உண்டு. இன்னும் சிறப்பாகச் சொன்னால், பெண்டிரும் கல்வியறிவு இல்லாத பாமர மக்களும் வேதம் படிப்பதில்லை, கேட்பதில்லை; இவர்கள் அறியும் பொருட்டே புராணங்கள் செய்யப் பெற்றன. ஆகவே கோயில் முதலான பொதுவிடங்களில் பாமர மக்களின் பொருட்டுப் புராணப் பிரவசனம் நடைபெற்று வந்தது. புராணம் படித்தலால்

மக்களிடையே நல்லொழுக்கம், நல்ஆசாரம், தெய்வபக்தி, கூட்டுறவு, நாகரிகம், வாழ்க்கையில் திருப்தி, இன்பம், பொது அமைதி, தன்னலமின்மை, தன்னம்பிக்கை முதலிய அரும்பண்புகள் வளர்ந்து வந்தன என்பர்.

இப் பதினெண் புராணங்களும் வியாசரே செய்தார் என்று பெருமை பற்றிக் கூறப்பட்ட போதிலும், இவை யாவும் பல்வேறு காலங்களில் பலராலும் செய்யப் பெற்றவை என்பதே பொருந்தும். பத்ம புராணம் புஷ்கல நாட்டிலும், வாயு புராணம் கயையிலும், பிரம வைவர்த்தம் இன்றைய ஒரியாவிலும், மார்க்கண்டேய புராணம் நர்மதை, தப்தி நதிக்கரையிலும், மச்ச புராணம் தமிழ் நாட்டிலும் செய்யப் பெற்றன என்று கூறுவர். தமிழ்நாட்டில் வேறு வடமொழிப் புராணம் எதுவும் செய்யப் பெற்றதாகத் தெரிய வில்லை என்பாரின் கூற்றும்[1] இவண் கருதத்தக்கது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டளவில் குப்தர்கள் காலத்தில்தான் வடமொழிப் புராணங்கள் செம்மையும் ஒழுங்கும் பெற்றன என்பது வரலாற்றாய்வாளர் கருத்து. இந்திய இலக்கிய வரலாற்றில் பெருமிடம் பெற்ற இவ் வடமொழிப் புராணங்கள் ஏனைய இந்திய மொழிகளிலும் தம் செல்வாக்கினைச் செலுத்தி வளர்ந்துள்ளன.

### தமிழில் புராணங்கள்

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் புராணம் என்னும் தனி இலக்கியம் பல்கிப் பெருகியுள்ள நிலையைக் காண்கிறோம். இடைக்கால இலக்கிய வளர்ச்சியில் புராணங்கள் சிறப்பிடம் பெறு கின்றன. புராணம் என்ற சொல் வடசொல் ஆயினும் அது தமிழில் நீண்ட நெடுங்காலமாக வழங்கப்பட்டு வந்துள்ளது என்பது காணத்தகும்.

### புராணம்

மணிமேகலையில் முதன்முதலாகப் புராணம் என்ற சொல் கூறப் பெற்றுள்ளது. சமயக்கணக்கர் தந்திறம் கேட்ட காதையில், 'காதல் கொண்டு கடல்வணன் புராணம் ஓதினான்' (மணி. 27 : 98-99) என்று குறிப்பிடுவர். இங்கு வைணவ வாதம் வெளிப் படுகிறது. அதில் கடல்வணன் புராணம் என்றது வடமொழி விஷ்ணுபுராணம் என்பது விளங்கும்.

---

1. மு அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 16ம் நூா, பக் 10-12.

தமிழகத்தில் புராணம் படித்தல் என்பது சிலப்பதிகார காலத்திற்கு முன்பே இருந்தது எனத் தெரிகிறது.

'அறவோர் பள்ளியு மறனோம் படையும்
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்
திறவோ ருரைக்குஞ் செயல்சிறந் தொருபால்'
(சிலப். 1.5. 179-181)

எனவரும் இந்திரவிழவூரெடுத்த காதையின் பகுதிக்கு உரைகூறுகையில், அறவோர் பள்ளி என்பது அருகர்பள்ளி, புத்தர்பள்ளி என்றும், அறனோம்படை என்பது தருமம் போதிக்குமிடம் என்றும், திறவோர் உரைக்குஞ் செயல் என்பது 'புராணம்' என்றும் கூறுவர் உரையாசிரியர். எனவே புராணம் படித்தல் நெடுங்காலத்தியது என்பது பெறப்படும்.

திருவாசகத்தில் முதல் அகவல் சிவபுராணம் என்றே பெயர் பெற்றுள்ளது.

சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

என்று பாடுகின்றார் மாணிக்கவாசகர். திருவாசகப் பதிகங்களின் கருத்து எழுதினோர் இத்தொடருக்கு, சிவனது அநாதி முறைமையான பழமை என்று பொருள் கூறுவர்.

### புராணன்

சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையில் கவுந்தி முன்னர்த் தோன்றிய சாரணர் அருகதேவனின் பெருமையைப் புலப்படக் கூறும்போது,

'பொருளன் புனிதன் புராணன் புலவன்' (சிலப். 10 : 179)

என்பர். இதில் புராணன் என்பது பழைமையானவன் என்ற பொருளிலேயே கையாளப் பெற்றுள்ளது. ஊர்காண் காதையிலும் கவுந்தி வாயிலாக இராமன் கதையைச் சுருங்கக் கூறும் இளங்கோவடிகள் (சிலப். 14 : 49) நெடுமொழியன்றோவெனக் கூறும்போது இராமாயணம்போன்ற கதைகள் தொன்றுபடவரூஉத் தொன்மையுடைய நெடுமொழியாகப் புராணத்தைக் குறிப்பதை அறியலாம்.

மணிமேகலையில் மணிமேகலா தெய்வம் உலகப் பெண்டிர் வடிவந்தாங்கி மணியறைப் பீடிகை வலங்கொண்டு புத்ததேவனை வணங்கும்போது,

'புலவன் தீர்த்தன் புண்ணியன் புராணன்' (மணி. 5.98) எனத் தொடங்குவான். இங்கும் புராணன் என்பது பழைமை யானவன் என்ற பொருளிலேயே சீத்தலைச் சாத்தனாரால் கையாளப் பெற்றுள்ளது.

மேலும், சமயக்கணக்கர்தந் திறங்கேட்ட காதையில் 'ஆசிவகநூலறிந்த புராணனை' (மணி. 27.108) என்னுமிடத்து, பன்னெடுநாள் ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் அறிவு நிரம்பினமை தோன்றப் 'புராணன்' என்றார்.

இறைவனின் பழம் பெருமையைச் சுட்டவந்த சம்பந்தர், 'புராணன்' (1569), 'புராணர்' (1406), என்றும்; நாவுக்கரசர், 'புராணன் (6321) என்றும்; திருமூலர் 'ஆதிபுராணன்' (திருமந்திரம் : 1557) என்றும் சுட்டுவர்.

**தசபுராணம்**

புராணம் என்பது 'பழமை சான்ற வரலாறு' என்னும் பொருள் கொண்டு வழங்கப் பெற்றதைத் திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணலாம். அப்பர் பெருமானருளிய நாலாந் திருமுறை, பதினான்காம் பதிகம் 'தசபுராணம்' என்று பெயர் பெற்றுள்ளது. இதை மேற்போக்காக நோக்கின் வடமொழியில் கூறப்பெறும் 'சிவபுராணம் பத்து' (சைவம், பவிடியம், மார்க்கண்டேயம், இலிங்கம், காந்தம், வாராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரம்மாண்டம்) எனத் தோன்றும். ஆயின், இப்பதிகத்தை நோக்குமிடத்து, சிவபெருமான் ஆலகால விடமுண்டது முதலான சிவபெருமானது பெருமையை விளக்கும் பத்துச் சிறந்த புராண வரலாறுகளே குறிக்கப் பெற்றிருத்தல் விளங்கும். இங்கு, புராணம் என்பது ஆகுபெயராய்ப் புராணங் களில் சொல்லப்பட்ட பத்துச் சிறந்த வரலாறுகளைக் குறிப்பதாக அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

**இலிங்க புராணக் குறுந்தொகை**

அப்பர் தேவாரத்தில் ஐந்தாம் திருமுறை, தொண்ணூற்று ஐந்தாம் பதிகம் 'இலிங்க புராணக் குறுந்தொகை' என்று பெயர் பெற்றுள்ளது. இங்கும் வடமொழியிலுள்ள சிவபுராணங்கள் பத்துள் ஒன்றாகிய இலிங்க புராணத்தை இவர் அப்படியே கூற வில்லை. திருமாலும் பிரமனும் சிவபெருமானின் அடிமுடி தேடிய நிலையை மட்டுமே இப்பதிகத்தில் கூறுகிறார். எனவே,

இப்பதிகங்கள் பழங்கதைகளை மட்டுமே விளக்குவதால் இவை 'புராணம்' என்னும் சிறப்புப் பெற்றதை அறியலாம்.

மேலும், திருமூலர் தம் திருமந்திரத்தில் இரண்டாந் தந்திரம் மூன்றாம் பகுதியை (பா. 347-352) 'இலிங்க புராணம்' என்றே கூறுவர். இப்பகுதியில் இவர் சிவன் முடியோடு பாதம் அறியாமை நின்றது முதலான பழைய வரலாறுகள் ஐந்தினையே விளக்குகின்றார்.

### சம்பந்தர் கூறும் பங்கமில் பதினெட்டு

எங்கு மாகி நின்றானும் இயல்பறி யப்படா
மங்கைபாகங் கொண்டானும் மதிசூடு மைந்தனும்
பங்க மில்பதி னெட்டொடு நான்குக் குணர்வுமாய்
அங்க மாறும் சொன்னானும் ஐயாறுடை ஐயனே. (1529)
(2ம் திருமுறை இந்தளப்பண். பதிகம். 6)

இதில் பங்கமில் பதினெட்டு என்று இவர் குறிப்பது பதினெண் புராணங்களாகும். நான்கு என்பது வேதம் நான்கு. அங்கமாறு என்பது வேதாங்கம் ஆறு. எனவே, சம்பந்தர் காலத்திலேயே தமிழில் பதினெண் புராணங்கள் சிறப்புற்றிருந்தது புலனாகும்.

### சைனர்கள் அளித்த புராணங்கள்

தமிழில், பழங்கதையை உயர்த்திச் சொல்லி அதைச் சமயத் துறையில் மதிக்கத்தக்க இலக்கியங்களாக உருவாக்கியவர்களில் சைனர்களே முதலிடம் பெறுவர் என்பர். இவர்கள் பிறநாட்டி லிருந்து இங்கு வந்தவர்களாதலால் இங்குள்ள மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்து முகமாகத் தங்களுக்கெனவொரு சிறப்பிடம் பெறும் வகையில் பழமைக் கதைகளை எடுத் துரைக்கத் தொடங்கினர். இதன் காரணமாகத் தோன்றிய சீவகசிந்தாமணி போன்ற காப்பியங்களும் புராண வகையைச் சார்ந்தவையே. சைன நூல்களில் புராணம் என்ற பெயரோடு நாம் அறிவன புராண சாகரம் மற்றும் சாந்திபுராணம் ஆகும். இவற்றுள், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டினதாகக் கருதப்பெறும் புராண சாகரம் பஃறொடை வெண்பாவினால் ஆனது என்பதை மட்டுமே யாப்பருங்கலவிருத்தியால் அறிகிறோம். இந்நூலின் பொருளும் தன்மையும் பற்றி விளங்கவில்லை. கி.பி. எட்டாம் நூற்றாண்டினதாகக் கருதப்பெறும் சாந்திபுராணம் என்ற நூலின் சில பாடல்கள் புறத்திரட்டுள் தொகுக்கப் பெற்றுள்ளன.

இது, பதினாறாவது சைன தீர்த்தங்கரர் வரலாற்றைக் கூறும் ஒரு விரிந்த புராணம் என்பர். இவ்விரு நூல்களுமே கிடைக்காமையினால் இவற்றைப் பற்றி நன்கு அறிய இயலவில்லை. ஆயினும், தமிழில் பழம்பெருங் கதைகளுக்குப் புராணம் எனப் பெயரிட்டது சைனர்களின் கொடையாகக் கருதலாம்.

மேருமந்தரர் என்ற இரு அரச குமாரர்களுடைய பல பிறவி வரலாறுகளைக் கூறுவது மேரு மந்திர புராணம். இது 1405 பாடல்களைக் கொண்டது.

சைனருடைய மகாபுராண சங்கிரகம் என்ற வடமொழி நூலின் மொழிபெயர்ப்பு ஸ்ரீபுராணம் என்பதாகும். இது மணிப்பிரவாள உரைநடையில் எழுதப் பெற்றுள்ளது.

சூடாமணி நிகண்டு செய்த மண்டல புருடர் திருப்புகழ்ப் புராணம் என்ற பெயரில் ஒரு புராணம் பாடினார் என அறிகிறோம். அந்த நூல் இன்று இல்லாததால் அதுபற்றி அறிய இயலவில்லை.

இவற்றைத் தவிர சைனருடைய புராணம் என்று எந்த நூலும் இல்லை.

பௌத்த சமயத்தில் புராணம் எதுவும் இல்லை.

### தொன்மைச் சிறப்புமிக்க புராணங்கள்

அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்னும் எட்டும் செய்யுள் வனப்பு ஆகும் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. இவ்வெட்டில் தொன்மை என்பது ஒன்று. இத்தொன்மை உரையொடு பொருந்திப் போந்த பழமைத்தாகிய பொருள்மேல் வரும். 'தொன்மை தானே உரையொடு புணர்ந்த பழமை மேற்றே' (தொல். பொரு. 549) என்பது நூற்பா. இத்தொன்மை இலக்கணத்தைப் பெற்று வருபவையே தமிழிலுள்ள புராணங்கள்.

### தமிழ் இலக்கண நூல்களில் புராணம்

யாப்பருங்கல விருத்தி ஒழிபியலில் சித்திரக் கவிமாலை கூறுகின்ற ஒரு நூற்பாவில், மாலைமாற்று முதலான சித்திரக் கவிகளைக் கூறி, வேறு பல பொருள்களும் கூறப் பெறுகின்றன. அவற்றுள், 'விளம்பனத்தியற்கை என்பது ஒன்று. விளம்பனம் என்பது ஆதி காலத்து மக்களின் பழக்க ஒழுக்கங்களை ஆடியும்

பாடியும் நடித்துக் காட்டுதல். இதை உரையானது பின்னே விரித்துரைக்கின்றது. இனி விளம்பனத் தியற்கையும் என்பது :

'விளம்பனத் தியற்கை விரிக்கும் காலை
ஆரியம் தமிழொடு நேரிதன் அடக்கிய
உலகின் தோற்றமும் ஊழி இறுதியும்
வகைசால் தொண்ணூற் றறுவர தியற்கையும்
வேத நாவின் வேதியர் ஒழுக்கமும்
ஆதி காலத் தரசர் செய்கையும்
அவ்வவ நாட்டார் அறியும் வகையால்
ஆடியும் பாடியும் அறிவரக் கிளத்தல்'

எனக் கொள்க. இது திவாகர நிகண்டிலிருந்து எடுக்கப்பட்டது. எனத் தெரிகிறது. நிகண்டில் விளம்பனத்தியற்கை என்ற தொடர் 'காவியத்தியற்கை' எனக் காணப்படுவதொன்றே முக்கிய வேறுபாடு. இதைப் பார்க்கும்போது விளம்பனம் என்பது, இன்று நாம் கருதும் புராணம் போன்ற ஒரு நூலின் பொருளைக் கொண்டு செய்யப்பட்டது எனத் தோன்றுகிறது. உலகின் தோற்றம், ஊழியிறுதி, தொண்ணூற்றறுவர் இயற்கை, வேதியர் ஒழுக்கம் அரசர் செய்கை என்பன புராணப் பொருள்; இவை விளம்பனத்தில் 'ஆடியும் பாடியும் அறிவரக் கிளத்தல்' எனச் சொல்லப்பட்டது மிகுதி எனத் தெரிகிறது.

தொடர்நிலைச் செய்யுள் எனப் பன்னிருபாட்டியல் கூறுவதனைப் பிற்காலப் பாட்டியல் காப்பியம் எனவும் பெருங் காப்பியம் எனவும் புராணம் எனவும் விரிக்கின்றன.

(பெருங்) காப்பிய உறுப்புக்கள் சில இன்றிச் சில குன்றி வருவதும் காப்பியம் என்பது தொடர்ந்து கூறப்படும் பொதுக் கருத்து.

காப்பியப் பொருண்மையே காரிகை (கட்டளைக் கலித்துறை) யாப்பில் அமைந்தால் அது புராணம் ஆகிவிடும் போலும் என்ற கருத்து வெண்பாப் பாட்டியலை நோக்க ஏற்படுகின்றது. தொன்னூல் விளக்கம் புராணம் பற்றி நினைப்பதும் கருத்திற் கொள்ளத் தக்கது என்பர் அறிஞர்.[1]

1. டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், இலக்கணத் தொகை யாப்புப் பாட்டியல், பக். 453-457.

கருது சில குன்றினும் அக் காப்பியம் ஆம் என்பர்
பெரிது அறமே ஆதி பிழைத்து - வருவதுதான்
காப்பியம் ஆகும், குலவரவு காரிகை
யாப்பிற் புராணமே யாம். (43)

என்பது வெண்பாப் பாட்டியல்.

கூறும் அதில் சில குறைபாடு எனினும்
பெருங் காப்பியத்தில் பிறிதெனா ஆகா
அறம் பொருள் இன்பம் வீடு அவற்றின் மேலாம் அவ்
அறம் முதல் நான்கினும் ஆக்கப் பெறுவது
காப்பியம், புராணமாய்க் கருதப் பெறுமே. (21)

என்பது பிரபந்த மரபியல்.

"பாடுநெறி வணக்கம் வாழ்த்து ஒன்று நாலாய்ப்
பகர்பொருள் முன்வரவு இறைவன் வெற்பு வேலை
நாடுநகர் பொருள் பருவம் இருசுடர் பெண்வேட்டல்
நண்ணல் முடி பொழில்புனல் ஆடல் கள்உண்டல்
கூடுமகிழ் ஊடல்துனி புதல்வர்ப் பேறு
கூறிடு மந்திரம் தூதுசெலல் போர் வென்றி
நீடு சந்தித் தொடர்ச்சி சுவை பாவம் தோன்ற
நிகழ்த்தி யம்பல் முதல் பெருங்காப்பியத்துக்கு அம்மா".

"அறையும் இதில் சில குறைபாடு எனினும் குன்றாது
அறம் பொருள் இன்பம் வீட்டில் குறைபாடாகப்
பெறுவது காப்பியம் ஆகும் புராணம் ஆகும்"
(மரபியல் 15, 16)

என்பது சிதம்பரப் பாட்டியல்.

"பொருட் டொடர் நிலையே புகலிற் காப்பியம்
பெருங்காப்பிய மெனப் பிரிவிரண் டவற்றுள்
காப்பிய மறமுதல் நான்கிற் குறைநவும்
புராணம் பற்கதை புனைநவு மென்ப". (255)

என்பது தொன்னூல் விளக்கம்.

**புராணம் - காப்பியம்**

வச்சணந்தி மாலையுடையார் பெருங்காப்பிய இலக்கணம் கூறி, அதன் பொருளில் சில குன்றினும் அது காப்பியமாகும் என்று கூறி, பிறகு 'குலவரவு காரிகை யாப்பில் புராணமே யாம்' என்று குறிப்பிடுகிறார். இக்கருத்தின்படி காரிகை - யாப்பில்

குலவரவு - அதாவது முனிமரபு, அரச மரபு ஆகியவற்றைப் பாடினால் அது புராணம் ஆகும் எனத் தெரிகிறது. காஞ்சிப் புராணக் கலித்துறை என்ற ஒரு புராணம் மட்டுமே 212 கலித்துறைப் பாடல்கலால் அமைந்துள்ளது. இவ்வொரு நூல் தவிர வேறு எந்தப் புராணமும் கட்டளைக் கலித்துறையில் பாடல் பெறவில்லை. எல்லாம் விருத்தப் பாவிலேயே பாடப் பெற்றுள்ளன. பின் வந்த சிதம்பரப் பாட்டியலுடையார் 'அறம் பொருள் இன்பம் வீட்டிற் குறைபாடாகப் பெறுவது காப்பியமாகும், புராணமாகும்' என்பர். இதற்குச் சமகாலம் என்று கருதத்தக்க பிரபந்த மரபியலானது 'காப்பியம் புராண மாய்க் கருதப் பெறுமே' என்று கூறுகிறது.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் புராணம் விரித்துக் கூற இயலாது. அறத்தையும் வீட்டையும் பெரும்பாலான புராணங்கள் விரித்துக் கூறும். ஆகவே புராணங்கள் பெருங்காப்பியமாகா. இவை காப்பியம் என்று மட்டுமே கருதப்பெறும்.

**தொண்ணூற்றாறு பிரபந்தங்களில் ஒன்று புராணம்**

பிரபந்தம் என்ற சொல் வடமொழி; செம்மையாக யாக்கப் பட்டது என்பது இதன் பொருள். இக்காலத்தில் இதைச் சிற்றிலக்கியம் என்று கூறுகிறோம். காப்பியங்களைப் பேரிலக்கியம் என்று கருதி சிறுகாப்பியங்களைச் (பிரபந்தங் களை) சிற்றிலக்கியம் என்று சொல்லும் மரபு புதிதாகத் தோன்றியது. வைணவ வியாக்கியானங்கள் நூல் என்ற பொருளிலேயே பிரபந்தம் என்பதைக் கூறுகின்றன. அடியார்க்கு நல்லார் காலத்தில் பிரபந்தம் என்ற சொல்லுக்குச் சிற்றிலக்கியம் என்ற பொருள் இல்லை. பாட்டியல் நூல்கள் பெருகாப்பியத் தைக் கூடப் பிரபந்த வகையுள் அடக்கிக் கூறுகின்றன. ஆதலால், சிற்றிலக்கியம் என்ற சொல்லாட்சி பொருந்துவதன்று என்பர் அறிஞர் மு. அருணாசலம் அவர்கள்.

கி.பி. 16ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப் பெறும் பிரபந்த மரபியல் என்னும் பாட்டியல் நூலே முதன் முதலாக 96 பிரபந்தங்களைக் கூறுகின்றது. 'பிள்ளைக் கனிமுதல் புராணம் ஈறாகத் தொண்ணூற்றாறெனும் தொகைய தான முற்பக ரியல்பு முன்னுறக் கிளக்கும் பிரபந்த மரபியல்' என்பது இதன் முதற் சூத்திரம்.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் தோன்றிய (வச்சணந்திமாலை) வெண்பாப் பாட்டியல், கி.பி. 16ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிரபந்த மரபியல், கி.பி. 16ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றிய சிதம்பரப் பாட்டியல் (விருத்தப் பாட்டியல்) ஆகிய மூன்று பாட்டியல் நூல்கள் மட்டுமே புராணத்தையும் ஒரு பிரபந்தமாகக் கூறுகின்றன. மூன்றும் புராணத்தை இறுதிப் பிரபந்தமாகக் கூறி முடிகின்றன.

கி.பி. 1508இல் சிதம்பர புராணத்தைப் பாடிய புராணத் திருமலைநாதரின் மகனான பரஞ்சோதியார் (கி.பி. 1525-50) அவர்கள் பிரபந்த மரபியலைத் தழுவி அமைத்ததே சிதம்பரப் பாட்டியல் ஆகும்.

பிரபந்த மரபியல் என்னும் பாட்டியல் நூலில் ஆசிரியரைப் பற்றி எதுவும் சுவடியால் அறிய இயலவில்லை. இந்நூலை முதன்முறையாகப் பதிப்பித்துள்ள அறிஞர் மு. அருணாசலம் அவர்கள், இந்நூலைப் புராண திருமலைநாதர் அவர்களே இயற்றியிருக்கக்கூடும் என்றும் கருதுகிறார். இதற்கு இவர் கூறும் காரணங்களும் ஈண்டு ஆராயத்தக்கன.

"வெண்பாப் பாட்டியல் (புற) 'குலவரவு காரிகை யாப்பிற் புராணமேயாம்' என்று கூறுகிறது; 'குலவரவு முதலானவற்றைக் காட்டுவது புராணக் கதையாம்' என்பது அதன் உரை. குலவரவு காரிகை யாப்பிற் சொன்ன தனியான பழைய நூல் இல்லை. (கலிங்கத்துப் பரணியிலும் சோழர் உலாக்களிலும் இராச பாரம்பரியம் என்ற குலவரவுப் பகுதி உண்டு. இது கலித்தாழிசையும் கலிவெண்பாப் பகுதியும் ஆகும்.) கம்ப ராமாயணத்தில்தான் குலமுறை கிளத்து படலம் என்ற ஒரு தனிப்பகுதி உண்டு; அது விருத்தப்பா; ஒரு பெரு நூலின் பகுதி; ஒன்பதாம் நூற்றாண்டு ஒருகால் இதைக் கருத்தில் இருத்தியே வெண்பாப் பாட்டியலார் (12 நூ.) குலவரவு காரிகை யாப்பிற் பாடினால் புராணமாகும் என்றார் போலும். முன்னுள்ள பன்னிரு பாட்டியலும் பின்வந்த நவநீதப் பாட்டியலும் புராணத்தைச் சொல்லவில்லை. பெருங்காப்பியத்தைத் தொடர் நிலைப்பாட்டு என்று பன்னிருபாட்டியல் கூறுகிறது; வெண்பாப் பாட்டியலும் நவநீதப் பாட்டியலும் விரிவாய்க் கூறுகின்றன. ஆனால், பெருங்காப்பியத் தன்மையில் சில குறைந்தால் அது காப்பியமாகும், புராணமாகும் என்று பிரபந்த மரபியலும்

சிதம்பரப் பாட்டியலும் கூறுகின்றன. காலம் 16ஆம் நூற்றாண்டு. இந்த நிலையைச் சிறிது ஆராய்தல் பொருந்தும். பன்னிரு பாட்டியலின் காலத்தில் புராணம் இல்லை. வெண்பாப் பாட்டியலின் காலத்தில், குலமுறை கிளத்து படலம் ஏற்பட்டிருந்தது; அது பற்றிப் போலும், அந்நூலுடையார் காரிகை யாப்பில் வந்தால் புராணமாகக் கொள்ளலாம் என்றார். நவநீதப் பாட்டியலுடையார் புராணத்தைச் சொல்லவில்லை. ஆனால் பின்வந்த பிரபந்த மரபியலுடையாரும் சிதம்பரப் பாட்டியலுடையாரும் புராணத்தைச் சொல்கிறார்கள். இடைப்பட்ட காலத்தில், சிறந்த சைவ புராணங்களான கந்த புராணமும் திருவாதவூரடிகள் புராணமும் (நம்பி திருவிளையாடற்புராணமும்) தோன்றியிருந்தன. சைவரான இவ்விரு பாட்டியலுடையாரும் இந்த வரலாற்று நிலைமையையும் கருத்தில் கொண்டு, புராணத்தையும் பிரபந்த வகையுள் பெருங்காப்பியம் போலக் கூட்டிக் கொள்வதற்கு ஓர் அமைதி கண்டார்கள் என்று சொல்லத் தோன்றுகிறது.

சிதம்பரப் பாட்டியலுடையார் புராணத்தைக் குறிப்பிடுகிறார். அவருடைய தந்தை புராணத் திருமலைநாதர் என்று பிரசித்தி பெற்றவர்; பெரியதாகிய சைவமகாபுராணம் பாடியவர். ஒருகால் அவரே புராணத்தையும் இலக்கண மரபுக்குள் அமைத்தால் நல்லது என்று கருதி, தாமே பிரபந்த மரபியல் செய்து அதனுள் புராணத்தைக் குறிப்பிட்டாரோ என்ற ஐயம் எழுகின்றது. இதற்கு ஒரே ஆதாரம், இதை முழுமையும் அடியொற்றிப் பரஞ்சோதியார் தம் சிதம்பரப் பாட்டியலைச் செய்திருப்பதாகும். பிறர் நூலை இவ்வாறு முழுமையும் அடியொற்றிச் செய்வதைவிட, ஒரு பெரும் புலவர் தம் தந்தையின் நூலைத் தழுவிச் செய்வதே இயல்பு.

அல்லது, பரஞ்சோதியார் பிரபந்த மரபியல் பாடியவருடைய தேர் மாணாக்கரா யிருந்தார் என்று கொள்வதிலும், பெருங் கவிஞராய்ப் பல நூல்கள் செய்த அவர் தந்தையான புராணத் திருமலை நாதரே இப்பாட்டியல் இலக்கணமும் செய்தார் என்று கருதுவது எளிது என்பார் கூற்றும் இவண் சுட்டத்தக்கது.[1]

எனவே, கி.பி. 16-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகே தமிழில் புராணம் பற்றிய சில தெளிவான எண்ணங்கள் இலக்கண நூலாசிரியரிடையே தோன்றி வளர்ந்தன என்பது தெளிவு.

---

1. மு. அருணாசலம், பிரபந்த மரபியல், முன்னுரை, பக். 35, 36.

### தமிழ்ப் புராணப் பாகுபாடு

தமிழில் புராணங்கள் என்ற நிலையில் பல பெருநூல்களும் சிறு நூல்களும் பல்கிப் பெருகி நிறைந்துள்ளன. இப்புராண நூல்கள் கூறும் பொருள் பாகுபாட்டினையும் இவற்றின் அமைப்பையும் கொண்டு இவை பாகுபாடு செய்யப்பெறும். பொதுவாக இவற்றைப் பின்வரும் ஆறு நிலைகளில் பகுத்துக் காணலாம். அவை :

1. மகாபுராணங்கள்
2. இதிகாச அமைப்பிலானவை
3. சிவபுண்ணியம் சிவதருமம் கூறுவன
4. ஆண்டவன் அடியார் வரலாறும் பிற வரலாறுகளும்
5. சாதிப் பெருமை விளக்குவன
6. ஊர்ச் சிறப்பை எடுத்துரைப்பவை (தலபுராணம்)

என்பன. தமிழிலுள்ள அனைத்துப் புராண நூல்களையும் இப் பாகுபாட்டில் அமைக்கலாம்.

### 1. மகாபுராணங்கள்

வடமொழியிலுள்ள மகாபுராணங்களான பதினெண் புராணங்களை அப்படியே முழுமையாக மொழிபெயர்த்தமைத்து அமைக்கப் பெற்றவை இவை. கூர்ம புராணம், இலிங்க புராணம், மச்ச புராணம், பாகவதம் போன்ற தமிழ் மகா புராணங்கள் என்னும் நிலையிலுள்ளவை. சைவ மகா புராணம் வைணவ மகா புராணம் என இரண்டும் சென்ற நூற்றாண்டில் உரைநடையாக மொழிபெயர்க்கப் பெற்றவை.

### 2. இதிகாச அமைப்பிலானவை

காப்பிய அமைப்போடு ஒரு குறிப்பிட்ட கடவுளின் வரலாற்றைக் கூறுவன இவை. மகாபுராணத்தின் ஒரு பகுதியாகவும் இவ்வகை நூல்கள் அமையும். கந்தபுராணம், விநாயக புராணம், பாகவதம் போன்றன இத்தகைய இதிகாச அமைப்பிலான நூல்களாகும்.

### 3. சிவபுண்ணியம் சிவதருமம் கூறுவன

மகா புராணங்களின் ஒரு பகுதியாகவே இவ்வகை நூல்கள் அமைந்துள்ளன. உபதேச காண்டம், பிரமோத்தர காண்டம், வாயு சங்கிதை, காசி காண்டம், சிவ தருமோத்தரம் என்பன இத்தகையன. இவை யாவும் வடமொழி மகாபுராணத்தின்

ஒரு பகுதி என்பதைக் காட்டவே சங்கிதை, காண்டம், கண்டம் என்ற சொற்கள் அமையும். (சங்கிதை - பொருள் தொகுதி. சம்ஹிதை என்பது வடசொல். கண்டம் - துண்டு, நூலின் பகுதி காண்டம், நூலின் பெரும் பகுதி.) இவை யாவும் மொழி பெயர்ப்பு நூல்களே.

### 4. ஆண்டவன் அடியார் வரலாறும் பிறர் வரலாறுகளும்

சைவ வைணவ அடியார்கள் வரலாற்றை விரித்துக் கூறும் புராணங்கள் இவ்வகையிலமைந்தவை. தமிழில் இறையடியார் களை இறைவனாகவே கருதி வழிபடுவது ஒரு வழக்கம். சைவத்திலும் வைணவத்திலும் இது ஒரு சமய தத்துவமாகவே சிறப்புற்றுள்ளது. இறையடியார்கள் வரலாற்றைப் புராண மாகப் பாடுவது சிறந்த இலக்கிய மரபாகவும் அமைகின்றது. பெரிய புராணம், சேக்கிழார் புராணம், திருவாதவூர் அடிகள் புராணம் போன்ற சைவ சமய நூல்கள் இவ்வகையிலானவை. இவ்வாறே வைணவத்திலும் அரிசமய தீபம், குருபரம்பராப் பிரபாவம், திவ்விய சூரி சரிதம் போன்ற நூல்கள் இறையடி யார்கள் பற்றிக் கூறும் வரலாறுகளாக எழுந்துள்ளன.

இவ்வகைப் புராணங்கள் யாவும் தமிழில் புதிதாகப் படைக்கப்பட்ட முதல் நூல்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவை மொழிபெயர்ப்பு நூல்களாக அமையாததும் சுட்டத் தக்கது.

பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் சேக்கிழார் அருளிய பெரிய புராணத்தைத் தொடர்ந்து எழுந்த இவ்வகையான அடியார் வரலாறு கூறும் நூல்கள் போலவே சென்ற நூற்றாண் டிலும் இந்நூற்றாண்டிலும் இத்தகைய வரலாற்று நூல்கள் பல தோன்றியுள்ளன.

பட்டினத்துப் பிள்ளை புராணம், சடகோப திவ்விய சரிதம் என்பனவும்; தண்டபாணி சுவாமிகள் பாடிய அருணகிரி நாதர் புராணம், வாளூர் சொக்கலிங்கம் பாடிய சேய்த் தொண்டர் புராணம், வாமதேவ முருகபட்டாரகர் பாடிய கச்சியப்ப சிவாசாரியர் புராணம், அசலாம்பிகையம்மை பாடிய இராமலிங்கசுவாமி புராணம் போன்றன அடியார் பற்றிய தமிழ்ப் புராண நூல்களாகும்.

அடியார்கள் அல்லாத பிறர் வரலாறு கூறும் நூல்களுக்கு எடுத்துக் காட்டாகத் தண்பாணி சுவாமிகள் பாடிய புலவர்

புராணம், அசலாம்பிகையம்மை பாடிய திலகர் புராணம், காந்தி புராணம், ஆறுமுகநாவலர் சரித்திரம் போன்றவற்றைக் கூறலாம்.

### 5. சாதிப் பெருமை விளக்குவன

தமிழகத்திலுள்ள பல்வேறு சாதிகளை உயர்த்திப் பாடும் நூல்கள் பதினேழாம் நூற்றாண்டு முதலாகவே தமிழில் தோன்றியுள்ளன. வைசியப்பள்ளு, செங்குந்தர் பிள்ளைத் தமிழ் எனப் பல சிற்றிலக்கியங்கள் இவ்வாவறு தோன்றியவை. இவ்வகையில் சாதிப் பெருமைகளை விளக்கும் பல புராண நூல்களும் தமிழில் எழுந்துள்ளன. செங்குந்தர் புராணம், விசுவகர்மர் புராணம், சீர்கருணர் புராணம், குலாலர் புராணம் என்பன சில எடுத்துக் காட்டுகளாம்.

### 6. ஊர்ச் சிறப்பை எடுத்துரைப்பவை (தலபுராணங்கள்)

ஒரு தலத்திலுள்ள இறைவன் புகழை விரித்துச் சொல்வது தலபுராணம் ஆகும். ஊர்ப்பெயரில் அமைந்த இல்வகைப் புராண நூல்கள் அவ்வத் தலத்தின் பெருமையையும், மூர்த்தியின் பெருமையையும், தீர்த்தத்தின் பெருமையையும் கூறி, இத்தல இறைவனைப் பூசித்து நற்பேறு பெற்றவர்களின் வரலாற்றை எடுத்துரைப்பன. மக்கள் ஒழுகத்தக்க சீரிய ஒழுக்கங்களை எடுத்துக்கூறி விலக்கத்தக்க தீய செயல்களை விளக்குவதும் இவற்றைக் காப்பிய நயம்பட உரைப்பதும் இந்நூல்களின் சிறப்பாகும். ஒவ்வொரு ஊர் மக்களும் தங்கள் ஊர் பற்றியும் நாடுபற்றியும் பெருமை கொண்டு, சிறந்த சமயப் பற்றுடன் நாட்டுப் பற்றும் கொண்டு தன்னம்பிக்கையோடு வாழ வழி செய்வனவே இத்தல புராணங்கள்.

### தமிழ்ப் புராணங்களின் பொதுவியல்பும் அமைப்பும்

புராணம் பஞ்ச லட்சணம் என்பது ஒரு பழமொழி. புராணம் ஐந்துவித இயல்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பர் இவை வடமொழியில் சருக்கம், பிரதி சருக்கம், மன்வந்தரம் வம்சம், வம்சானு சரிதம் எனப்படும்.

ஸர்கச்ச பிரதிஸர்கச்ச வம்சோ மன்வந்தராணி
வம்சானு சரிதம் சேதி புராணம் பஞ்சலக்ஷணம்

என்பர் வடநூலார். தமிழில் உலகத் தோற்றம், ஒடுக்கம், காலஅளவு, முனிவர் அரசர் மரபு, அவர்களின் வரலாறுகள் என்பன.

தோற்றம் உலகம் மீண்டொடுங்கல் துகள்தீர்மன்வந்
தரம் முனிவர்
ஆற்றல் அரசர் மரபவர்தம் சரிதம் என்னும் ஒரைந்தும்
சாற்றும் புராண இலக்கண மென்றறிஞர் உரைப்பர்

எனக் கூர்ம புராணமும் இவை விளக்கும்.

என்றும் உண்டாகி, இறையால் வெளிப்பட்டு நின்றதும், மெய்ப்பொருள் காட்டி, உயிர்கட்கு அரண் ஆகித் துக்கம் கெடுப்பதும் நூல் என நூலின் இலக்கணம் கூறும் அருங்கலச் செப்பு (செய். 9,10) என்னும் சைன சமய நூல். மேலும்,

சரிதம், புராணம், அருத்தக் கியானம்,
அரிதின் உரைப்பது நூல்.
உலகின் கிடக்கையும், ஊழி நிலையும்
மலைவு இன்று உரைப்பது நூல்,
இல்லறம், ஏனைத் துறவறம், என்று இவற்றைப்
புல்ல உரைப்பது நூல்.
கட்டொடு வீடும் உயிரும் பிற பொருளும்
முட்டு இன்றிச் சொல்வது நூல் (செய். 58-61)

என நன்ஞானம் என்ற தலைப்பில் வரும் இந்நூலின் நான்கு பாடல்களும் நூலைக் குறித்துச் சொல்கின்றன. இங்குச் சொல்லப்பட்ட பொருள்கள் யாவும் புராண லட்சணம் என்று கூறப்படும் இயல்புகளுக்குப் பொருந்தி வரக் காணலாம்.

மேற்கூறிய இயல்புகளுடன், தலப்பெருமை, தீர்த்த மகிமை, மூர்த்திகளின் அவதாரச் சிறப்புக்கள், லீலைகள், சமயநெறிகள், விரதங்கள், துதிகள், மந்திரங்கள், பூசை முறைகள், யோகம், ஞானம், கன்மம், பக்தி முதலானவையும் எல்லாப் புராணங்களில் பொதுவாக எடுத்துரைக்கக் காணலாம்.

இவற்றுள் சில பகுதிகள் ஒருசில புராணங்களில் விரித்தும் சிலவற்றுள் சுருக்கியும் கூறப் பெற்றிருக்கும்.

பெரும்பான்மையான புராணங்கள் பூர்வ காண்டம், உத்தர காண்டம் என இரண்டு பிரிவுகளாக உள்ளன. எல்லாப் புராணங்களிலும் பதிகம் என்னும் பகுதி உண்டு. பதிகமாவது நூல் நுதலிய பொருள். இன்றைய நூலின் பொருளடக்கம் போன்றது. தேவாரப் பதிகம் போன்ற பதிகமல்ல இவை. சிலப்பதிகாரம், சிந்தாமணி போன்றவற்றிலுள்ள பதிகம் இங்கு

நினைவுகூரத் தக்கது. பெருநூலின் உள்ளடக்கம் பற்றிக் கூறுவதே பதிகம் என்பதாகும்.

எல்லாப் புராணங்களிலும் முதலில் கடவுள் வாழ்த்துப் பகுதி காணப்படும். இது நூலாசிரியர் மனம்போல விரிந்தும், சுருக்கமாகவும் அமைக்கப்பெறும். அடுத்து, புராண வரலாறு அல்லது நைமிசாரணியச் சிறப்பு என்னும் பகுதியில் நைமிசாரணியத்தில் முனிவர்கள் கேட்கச் சூத முனிவர் இப்புராணத்தைக் கூறினார் என்ற செய்தி கூறப்பெறும். இடையில் நாட்டுச் சிறப்பும் நகரச் சிறப்பும் வரையப்பெறும். பின்பு, உலகத் தோற்றம், ஒடுக்கம் பற்றியும், காலம் இடம் பற்றிய விளக்கங்களும், யுகங்கள் இயல்புகளும் கூறப்பெறும். அடுத்து, அரசர் முனிவர் மரபு எனச் செய்திகள் விரிவாக விளக்கப் பெறும்.

புராணக் கதைகளைப் பாடுமிடத்து ஆசிரியர் தம் கவித் திறனுக்கேற்ப சந்தப் பாடல்களையும், யமகம், திரிபு, மடக்கு, சித்திரக் கவிகளையும் நால்வகைத் திறன்களுடன் அமைப்பதையும் புராண நூல்களின் பொதுவான அமைப்பில் காணலாம்.

**புராணம் எனின் செய்யுள் நடையே**

தமிழில் பிறவகை இலக்கியங்களைப் போலவே புராண இலக்கியமும் செய்யுள் நடையிலேயே செய்யப் பெற்றன. புராணம் என்றால் செய்யுள் நடையிலுள்ள நூலையே குறிக்கும். ஆயின், பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல புராணங்கள் வடமொழியிலிருந்து நேரே தமிழில் உரைநடையாக மொழி பெயர்க்கப் பெற்றன. இவற்றுக்கு அடிப்படையாக அமைவது பதின்மூன்றாம் நூற்றாண்டு வைணவர்களின் மணிப்பிரவாள நடையே.

வைணவ மரபில், பின்பழகிய பெருமாள் ஜீயர் (13 நூ.) செய்த ஆறாயிரம்படி குருபரம்பரா ப்ரபாவம் மணிப்பிரவாள உரைநடையில் தோன்றியது. பின்னர் சைனருடையஸ்ரீபுராணம் 15 நூ.) (மணிப்பிரவாள நடையில் தோன்றியது. இதன் பின்னர் தோன்றிய பிள்ளைலோகஞ் ஜீயர் (16 நூ.) செய்த இராமானுஜ திவ்வியாரிய சரிதையும், பின்னும் பல குருபரம்பரா ப்ரபாவங்களும் மணிப்பிரவாள உரைநடையிலேயே எழுந்தன. புராண இலக்கியங்களுக்கு ஒப்பான இத்தகைய நூல்கள் மக்களிடையே பெருமிடம் பெற்றதால் புராண இலக்கியங்களையும் உரை

நடையில் இயற்றும் வழக்கம் தமிழில் எழலாயிற்று. உரைநடையிலான புராண நூல்கள் சென்ற நூற்றாண்டிலேயே மிகுதியாகத் தோன்றியுள்ளன.

இனி தலம் பற்றியும் தலபுராணங்கள் பற்றியும் காண்போம்.

**தலம்**

தலம் என்பது 'ஸ்தலா' என்ற வடசொல்லின் தமிழ் வடிவமாகும். தலம் என்பதற்கு 'இடம்', 'பூமி' எனப்பொருள் கூறும் பிங்கலம். தராதலம் என்பது பூமியைக் குறிக்கும். 'தராதல முதலுலகனைத்தும்' (கம்ப. கடிமண. 47) என்பர் கம்பர்.

தலம் என்பதை 'உலகம்' என்ற பொருளில் கூறுவர் மணிவாசகர். 'ஏழ்தல முருவ விடைந்து' (திருவாசக. 4.7) என்பது திருவாசகம்.

தலைமை இடம் அல்லது தலைமை நகரத்திற்கும் தலம் என்று கூறுவர்.

இடம், பூமி, உலகம், தலைமை நகரம் எனப் பலவாறு கொள்ளப் பெறினும், இறைவன் கோயில்கள் கொண்ட சிறப்பான ஊர்களே புண்ணிய பூமி எனவும், தலம் எனவும், க்ஷேத்திரம் எனவும் கூறப்பெறும்.

தலம் என்னும் இச்சொல் முதன்முதலில் மணிமேகலையில் கூறப் பெறுகிறோம். 'இத்தலம் நீங்கேன் இளங்கொடி யானும்' (மணி. 21-169) என்பது கந்திற்பாவை வருவதுரைத்த காதையில் வரும் ஒரு தொடர்.

சிறப்புடைய ஊர்களுக்கு ஆங்குள்ள கோயில்களே பெருமை தருவனவாதலின் தலம் என்பது சிறப்பாகக் கோயிலையே குறிக்கும்.

**கோயில்**

இந்தியப் பண்பாடே கோயிற் பண்பாட்டில் அடங்கியது தான். இந்தியாவின் பெருமை கோயிற் பெருமையே. நாம் வணங்கும் அடியாரும் குருமாரும் கோயிலார்களே. நாம் பாடும் பக்திப் பாடல்களெல்லாம் கோயிலிசைகளே. நாம் காலையும் மாலையும் கேட்பது கோயில் மணிகளே. இந்திய மக்களின் வாழ்வு கோயிலுணர்வில் கூடிக் குழைந்து நிற்கிறது. கோயிலைச் சுற்றியே நமது வாழ்க்கை அமைகின்றது. ஒவ்வொரு சமயத் தவரும் உள்ள அமைதிக்காகத் தம்தம் கோயில்களில் வழிபடு

கின்றனர். எச்சமயத்திற்கும் இதய நிலையமாக இருப்பது கோயில்.

வேத ஆகம புராண இதிகாசங்களின் சமய சாத்திரங்களின் பாதுகாப்பு நிலையங்கள் கோயில்களே. திருமந்திரமும் தேவாரமும் பெரியபுராணமும் கோயில் காப்பறைகளினின்றும் நாம் பெற்ற செல்வங்கள். கோயிற் கருவறையிலிருந்தே நமக்கு அறிவும் அமைதியின்பமும் வருகின்றன என்பது முன்னோர் நம்பிக்கை.

**கோயில்களின் பெருக்கம்**

உலகில் மனிதன் பெறுதற்கரிய பிறவியைப் பெற்றிருந்தும் நிறை வாழ்க்கையைப் பெற்றான் என்பது இல்லை. உலக மாயைகளிலே மயங்கி அல்லலுற்று அலைந்து திரிந்து அவமே மாய்ந்து மடிகின்றான். இம்மயக்கக் கடலை — பிறவிப் பெருங் கடலைக் கடப்பதற்கு ஒரு வழியைக் கூறுகிறார் நம் வள்ளுவர்.

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடிசேரா தார். (குறள் : 10)

என்பது இவர்தம் விளக்கம்.

ஒருவன் கப்பலின் துணையின்றிக் கடலைக் கடக்க முடியாதது போலக் கடவுளின் துணையின்றி அவன் மனக் கவலையைக் கடக்க இயலாது. கவலையில் அமிழாத ஒருவனைக் காணல் உலகிலரிது. ஆண்டி முதல் அரசர் வரை, எவரையும் கவலை விடவில்லை. அதற்கு ஒரு மாற்று மருந்து உண்டா? உண்டு என்கின்றார் நம் திருவள்ளுவர். 'தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு மனக்கவலையெல்லாம் தீரும். மற்றவர்களுக்கு 'மனக்கவலை மாற்றலரிது' என்றே இவர் துணிந்து கூறுவர். (குறள் : 7)

இத்தகைய இறைவனின் திருத்தாள்களைச் சேர்வது எவ்விதம்? இதற்கு வழிக்கண்டவர்கள் நம் சான்றோர்கள். வழிபாடு மேற்கொண்டாலன்றி அவன் தாளைச் சேர்வது இயலாது. அதுவும், ஒன்றில் மனம் சென்று பதிந்தாலன்றி வழிபாடு சிறக்காது. உருவமற்ற ஒன்றில், வெட்ட வெளியில், வெறும் விண்ணில் எளியோர் மனம் ஊன்றுவது அரிதினும் அரிது. எனவேதான் உருவ வழிபாட்டை உகந்தனர் உயர்ந் தோர். இதன் மூலமாக எழுந்தனவே கோயில்கள். கோயில்கள்

நிறைந்த திருத்தலங்களிலே இறைவன் அருள்மேனி தாங்கி அல்லலுற்று வருகின்ற அன்பர்களுக்கு இரங்கி அருள்புரிந்து ஆறுதல் அளித்து இம்மையில் இன்பமும் மறுமையில் வீடுபேறும் கிடைக்க வழிகளமைக்கின்றான் என மக்கள் நம்பினர். இதன் காரணமாகக் கோயில்கள் பெருகின.

## தமிழகக் கோயில்கள்

நமிழ்நாட்டில் ஊர்தோறும் கோயில்கள் இருக்கக் காணலாம். 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழஞ் சொல்லுக்கேற்ப ஆதி காலத்தில் மக்கள் கோயில் என்று தலங்கள் கருதி இடத்தைச் சார்ந்தே வாழத் தொடங்கினர். அல்லது தாம் வாழப் புகுந்த இடத்தில் புதியதாய்க் கோயிலை அமைத்துக் கொண்டார்கள். இவ்வகையில் தமிழ்நாட்டில் மட்டும் 35,000க்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் எழுந்துள்ளன. இச் சிறப்பு உலகில் வேறு எந்த நாட்டிலும் காண இயலாத சிறப்பாகும்.

சுமார் ஐந்து கோடி மக்கள் தொகையைக் கொண்ட தமிழ் நாட்டில் எண்பத்தொன்பது விழுக்காடு இந்து சமயத்தைச் சார்ந்தவர்களாகவே உள்ளனர். தொன்றுதொட்டு இந்துக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்துவரும் தமிழ்நாட்டில் இந்து ஆலயங்கள் மிகுதியாக உள்ளதும் உண்மை. இந்து சமயத்திற்கு அழியாத நிலைக்களம் திருக்கோயில்களேயாம்.

இன்ப நல்வாழ்வுக்கு அரண் செய்யும் திருக்கோயில்கள் நிறைந்த திருத்தலங்களை முறையாகச் சென்று வழிபடுதலை நம் முன்னோர்கள் நல்லதோர் நெறியாகவே கொண்டு ஒழுகினர்.

திருநாவுக்கரசர் தம் திருஅங்கமாலையில் 'தலையே நீ வணங்காய்' எனத் தொடங்கும் பதிகத்தில் நம் உடலின் புற உறுப்புகளும் அக உறுப்புகளும் இறைவன் வழிபாட்டிற்கே உரியன என்பதை வலியுறுத்துவர்.

'கால்களாற்பயனென் - கறைக் கண்டனுறை கோயில், கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக், கால்களாற் பயனென்' என்றே வினவுவர் இவர்.

நாடும் நகரமும் நல்திருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமானென்று

பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே.
(திருமந்திரம் 1445)

என்பார் திருமூலர்.

இவ்வாறு முன்னோர் மொழிகளை ஏற்று நடந்த தமிழ் மக்கள் சிறப்புடைய தலங்களிலுள்ள இறைவனின் பெயர்களை மட்டுமேயன்றி, அந்தத் தலங்களின் பெயர்களையும் கூட மிகவும் புனிதமும் சிறப்புமுடையதாகப் போற்றி வருகின்றனர். மதுரை, பழநி, சிதம்பரம், அண்ணாமலை, திருவேங்கடம், திருமலை, விருத்தாசலம், தணிகாசலம் எனப் பலபல தலங்களின் பெயர்களைப் பெரியோர்கள், தம் மக்களுக்கு வைத்து வழங்கி வருவதைக் காணலாம்.

தலங்களின் பெயர்களை இடைவிடாமல் கூறிக் கொண்டும் சிந்தித்துக் கொண்டும் இருத்தலே ஒரு சிறந்த வழிபாடு என்றும் நம் பண்டைப் பெரியோர் கருதி வந்துள்ளனர். திருத்தாண்டக வேந்தர் எனப் போற்றப்பெறும் திருநாவுக்கரசர் அருளிய ஆறாம் திருமுறையில், சேத்திரக் கோவைத் திருத்தாண்டகம், அடைவு திருத்தாண்டகம், பலவகைத் திருத்தாண்டகம் ஆகியவற்றில் திருத்தலங்களின் சிறப்பும் பயனும் ஒருசேர உரைக்கக் காணலாம். இத்தகைய திருத்தாண்டகம் ஓதுவதற்கு மூன்றாங் குலோத்துங்கன் காலத்தில் நிபந்தம் அளிக்கப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

'பூந்துருத்தி பூந்துருத்தி என்பீ ராகில்
பொல்லாப் புலால்துருத்தி போக்க லாமே'. 1

'நெய்த்தானம் நெய்த்தானம் என்பீ ரா[illegible]ல்
நிலவாப் புலால்தானம் நீக்க லாமே'. 2

'ஐயாறே ஐயாறே என்பீ ராகில்
அல்லல்தீர்ந் தமருலகம் ஆள லாமே'. 3

'பழனம் பழனமே என்பீ ராகில்
பயின்றெழுந்த பழவினைநோய் பாற்ற லாமே'. 4

'சோற்றுத்துறை சோற்றுத்துறை என்[illegible]கில்
துயர்நீங்கித் தூநெறிக்கட் சே[illegible] 5

'வலஞ்சுழியே வலஞ்சுழியே எனப ரா[illegible]
வல்வினைகள் தீர்ந்து வானாள லாமே' 6

'கண்டியூர் கண்டியூர் என்பீ ராகில்
கடுகநும் வல்வினையைக் கழற்ற லாமே'. 7

'குடமூக்கே குடமூக்கே என்பீ ராகில்
கொடுவினைகள் தீர்ந்து அரனைக் குறுக லாமே'. 8

'வெண்காடே வெண்காடே என்பீ ராகில்
விடாத வல்வினைநோய் விட்ட லாமே'. 9

(பலவகைத் திருத்தாண்டகம்)

என இவ்வாறு திருநாவுக்கரசர் போன்ற செந்தமிழ்ச் சான்றோர் பலரும் தலங்களின் பெயர்களைச் சொன்னாலே பெரும்பயன் பெறலாமெனப் போற்றியுரைத்திருப்பது கொண்டு அத்தலங் களின் சிறப்பினை நாம் நன்கு அறியலாம்.

## தலபுராணங்களின் தோற்றம்

ஆதியில் வேத சுருதிகளிலே பரம்பொருள் சகுணப் பிரம மாகவே காணப்பட்டது. உலகிற் காணப்படும் ஞாயிறும் திங்களும் நாண் மீன்களும், செந்தீயும், மழையும், மின்னலும், இடியும் ஆகிய இயற்கைத் தோற்றங்களையே பரம்பொருளென முன்னோர் கருதினர். வேத சிரசுகளான உபநிடதங்களிலே பரம்பொருள் நிர்க்குணப் பிரமமாகக் காணப்பட்டது.

ஊரிலான் குணங்குறியிலான் செயலிலா னுரைக்கும்
பேரிலானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரப்போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரிலா னுயிர்க்கடவுளா யென்னுளே நின்றான்

என்ற கந்தபுராணச் செய்யுள் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

பரம்பொருளை நிர்க்குணப் பிரமமாய் அனுபவிக்கும் நிலை சாதனையில் உயர்படியிலுள்ளவர்களுக்கே அமையும். இது சுட்டிக் கூறமுடியாத நிலை. மக்களுட் பெரும்பாலோர் இந்நிலையில் கடவுளை உணருந் தன்மை யில்லாதவரான படியாற் சகுண உபாசனை பெருவழக்காயிற்று. எனவே, ஒரு நாமம் ஒருருவம் ஒன்று மிலார்க்கு ஆயிரந் திருநாமம் பாடி வழிபட வேண்டிய தேவையுண்டானது. இந்தத் தேவை யுண்டாகவே புராணங்கள் தோன்றின. பதினெண் புராணங் கள், ஒன்றான பரம்பொருளை வேறு வேறான இட்டதெய்வங் களாக உருவாக்கி அத் தெய்வங்களின் திருவிளையாடல்களைக் குணங்குறிகளாக்கிப் பத்தி மார்க்கத்தை வளர்த்தன. நிர்க்குண

உபாசனையான ஞானமார்க்கத்திலும் பார்க்கச் சகுண உபாசனையாகிய பத்தி மார்க்கத்தை வளர்த்தன. நிர்க்குண உபாசனையான ஞானமார்க்கத்திலும் பார்க்கச் சகுண உபாசனையாகிய பத்திமார்க்கம் எளிதானதும் மக்கள் இயல்பிற் காணப்படும் உணர்ச்சிக்கு உறுதுணையானதுமாய் இருந்தமையால் மக்கள் அதனைப் பின்பற்றினர். இதன் பயனாகச் சமுதாயத்திலே காவியம், சங்கீதம், சிற்பம், சித்திரம், நடனம், மந்திரம் முதலிய எண்ணிறந்த கலைகள் மலர்ந்தன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் மெய்யடியார்களும் எண்ணற்ற பத்திப் பனுவல்களைத் திருவாய் மலர்ந்தருளினர். கம்பர், கச்சியப்பர், வில்லிபுத்தூரர், சேக்கிழார் முதலிய கவிஞர்கள் காவியங்கள் புனைந்தனர்.

முதலில் புராணங்கள் இட்டதெய்வங்களின் திருவிளையாடல்களை அழகிய கதைகளாக்கிக் கூறின. தருமத்துக்கும் அதருமத்துக்குமுள்ள போராட்டம், தவத்தினாலடையும் பெரும் பயன், பத்தியாற் கடவுளைப் பெறலாமென்ற கோட்பாடு, அடியார்களின் வரலாறு, ஒவ்வொர் இட்டதெய்வங்களின் பரத்துவம், பல்வேறு சித்தாந்தங்களின் குறிப்புப் பொருள், அறம் பொருள் இன்பம் வீடு என்ற உறுதிப் பொருள்களின் விளக்கம் என்ற இன்னோரன்ன பொருள்கள் பலவித சுவைகள் மலியக் கேட்போர்க்குக் கவர்ச்சியையும் உணர்ச்சியையும் உண்டாக்கக் கூடியவாறு கதைகளிற் கூறப்பட்டன. இக்கதைகள் பின்னர்க் கற்பாறைகளில் அழகிய சிற்பங்களாகவும், சுவர்ச் சித்திரங்களாகவும், நாடகங்களாகவும், சங்கீர்த்தனங்களாகவும் நாடெங்கும் பரவின. தேசத்திலே சிறந்த காவியங்களும், பண்ணிறைந்த தேவாரங்களும், பிரபந்தங்களும், புராணக் கதைகளையே தமக்குப் பொருளாகக் கொண்டு மலர்ந்தன. பொதுவாக இட்டதெய்வங்களுக்கான புராணங்கள் தோன்றிய பின்னரே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவற்றின் சிறப்பைக் காட்டுவதற்காகத் தலபுராணங்கள் தோன்றின என்பாரின் கூற்று[1] மிகவும் பொருத்தமுடையதாகும்.

### முத்தி பெறுதற்கு மூன்று வழிகள்

இப்பூவுலகில் மீண்டும் மீண்டும் பிறந்துமிறந்தும் துன்பப் படாமல் பிறவி நோயை நீக்கி முத்தி பெற வேண்டுமானால்

---

1. க. வைத்தீசுவரக் குருக்கள், ஈழத்துச் சிதம்பர புராணம், பதிப்புரை, பக். xxiv-xxv.

அதற்கு மூன்று வழிகளே உள்ளன என்று கூறுவர். அவை: 1. அனைத்தினுக்கும் மேலாகிய இறைவனுக்கு வழிபாடு செய்தல், 2. புண்ணியத் தலங்களில் இருத்தல், 3. புராணங்கள் கேட்டல் என்பதாம்.

> "அனைத்தி னுக்கு மேலாகிய பரத்தினை யறிந்து
> மனத்தி லுன்னியே யன்பினால் வழிபடுந் திறமை;
> எனைத்தெ னற்கரும் புண்ணியத் தலங்களி லிருத்தல்;
> முனிக்கணத்தர் பாற் புராணநூற் கேள்வியும் மூன்றும்
> அத்தி றத்தினீர் புகன்றிடும் பிறவிநோ யகற்றல்
> இத்தி றத்தினா லன்றியே வேறுவே றிசைக்கு
> மெய்த்தவத் தினாற்றரு மத்தின் வகையினான் மேலா
> முத்த மப்பெரும் குணத்தினீர் போக்குதற் கொண்ணா".
> (பாயிரம். 33, 34)

எனப் பழைய காஞ்சிப் புராண (கம்பர் புராணம்) ஆசிரியர் இதை விளக்குவர்.

இம்மூன்று நெறிகளும் அக்கால மக்களால் பெரிதும் போற்றப்பட்டு வந்துள்ளன. இறைவழிபாடும், புண்ணியத் தலங்களுக்குச் செல்லுதலும், அத்தல வரலாறுகளைக் கேட்டறிதலும் இல்வாழ்க்கைக் கடமைகளாகவே கொண்டு மக்கள் ஒழுகி வந்துள்ளனர்.

### பழங்காலத்தாரின் பழக்கம்

பழங்காலத்தில் ஆலய வழிபாட்டையும் தலவரலாறுகளை அறிவதையும் எவ்வளவு அருமையாகக் கருதினர் என்பதை டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் தம்முடைய வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிடுவர்.

தலங்களைப் பற்றிய வரலாறுகளைத் தெரிந்து கொள்வதில் அக்காலத்தினருக்கு அதிக விருப்பம் இருந்தது. தலத்தின் விருட்சம், மூர்த்திகளின் திருநாமம், வழிபட்டவர்கள் வரலாறு, தீர்த்த விசேடம் முதலியவற்றை அங்கங்கே உள்ளவர்கள் நன்றாகத் தெரிந்து கொண்டு மற்றவர்களுக்குச் சொல்வார்கள். தங்கள் ஊர் சிறந்த தலமென்றும் பலவகையான மகாத்மியங்களை உடையதென்றும் சொல்லிக் கொள்ளுவதில் அவர்களுக்கு ஒரு திருப்தி இருந்தது.

மிகச் சிறந்த தலங்களுக்குச் சென்று அங்குள்ள மூர்த்திகள் பால் ஈடுபட்டவர்கள் தங்கள் ஊரிலும் அந்தத் தலங்களைப்

போன்றே அமைப்புக்களை உண்டாக்கி வழிபடுதல் பழங் காலத்து வழக்கம். பெரியபுராணத்தை இயற்றிய சேக்கிழார் சோழ நாட்டிலுள்ள திருநாகேசுவரம் என்னும் சிவ தலத்தில் ஈடுபாடுடையவர். அவர் சென்னைக்கருகே உள்ள தம் ஊராகிய குன்றத்தூரிலும் ஒரு நாகேசுவரத்தை உண்டாக்கினார். நடு நாட்டில் பெண்ணையாற்றங்கரையில், ஸ்ரீரங்கம், ஜம்புகேசு வரம், தாயுமானவர் கோயில் என்னும் மூன்று தலங்களுக்கும் பிரதியாக மூன்று தலங்கள் உள்ளன. அரியலூரில் உள்ள ஆலந்துறேசர் கோயில் தேவார தலமாகிய கீழைப் பழுவூரிலுள்ள கோயிலைக் கண்டு அமைத்ததேயாகும். இவ்வாறே கும்பகோணத்தில் கும்பேசுவரரைத் தரிசித்த ஒருவர் குன்னத்தில் (அரியலூருக்கு வடக்கேயுள்ள குன்றம்) ஒரு கோயில் நிருமித்து அங்கே பிரதிட்டை செய்த மூர்த்திக்கு ஆதிகும்பேச ரென்னும் திருநாமத்தையும் அம்பிகைக்கு மங்களாம்பிகை என்னும் பெயரையும் இட்டுள்ளனர். அன்றியும் கும்பகோணத்துக்குக் கிழக்கே திருவிடைமருதூர் இருப்பது போலக் குன்றத்திற்குக் கிழக்கே வெண்மணி என்னும் ஊர் இருக்கிறது. திருவிடை மருதூருக்கு மத்தியார்ச்சுனம் என்று பெயர். அதற்கு வெண்மையாகிய இருதயாகாசத்தின் மத்தியென்று பொருள் செய்து, திருவிடைமருதூர் தகராகாயத்திற்குச் சமமானதென்று தத்துவார்த்தம் கூறுவர் சிலர். (அர்ஜுனம் - வெள்ளை). வெண்மணி என்னும் பெயர் மத்தியார்ஜுனமென்னும் பெயரோடு ஒருவாறு ஒப்புமையுடையதாகவே, அவ்வூரில் தோன்றிய கோயில் மூர்த்திக்கு ஆதி மகாலிங்கமென்ற திருநாமம் உண்டாயிற்று. மகாலிங்கமென்பது திருவிடை மருதூர் சுவாமியின் திருநாமம். பிருகத்குச நாயகியென்பதே இரண்டிடங்களிலும் உள்ள அம்பிகையின் திருநாமம்.

இத்தகைய அமைப்புக்களால் ஆலய வழிபாட்டைப் பழங் காலத்தில் எவ்வளவு அவசியமானதாகக் கருதினரென்பதை உணரலாம் என்பர்.[1]

இவ்வாறு பழைய கோயில்களே அன்றி வேறு பல புதிய கோயில்களும் எழுந்துள்ளன. மக்கள் செவிவழி அறிந்த கோயில் வரலாறுகள் எல்லாம் காப்பாற்றப் பெற்றும் வழிவழி வந்துள்ளன.

1. டாக்டர் உ.வே. சாமிநாதையர், என் சரித்திரம், பக். 88, 89.

### இருமொழி நூல்கள்

தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மையான ஊர்களில் கோயில்கள் உள்ளன. அவை தொடர்பான வரலாறுகளை விளக்கும் வடமொழி, தென்மொழி நூல்களும் உள்ளன. அவ்வவ் வூரினர் அவற்றைப் பாடுதற்கு புலவர்களைக் கொண்டு பாடுவித்தும் இன்புற்றனர். அதனால் தமிழ்நாட்டில் நூற்றுக் கணக்கான தலபுராணங்கள் செய்யுளுருவத்தில் எழுந்தன. அவற்றுள் பல தமிழ்ச் சுவை மிக்கன. தலவரலாறுகளைக் கூறுவ திலும் ஒவ்வொரு தலமும் பிறவற்றினும் சிறந்ததென்று பாராட்டுவதிலும் ஒன்றற்கொன்று குறைவு படாது இவை அமைந்துள்ளன.

முதல் முதலில் தமிழ்ப் புராணங்கள் தல வரலாறுகளை மாத்திரம் செய்யுள் நடையில் அமைத்து இயற்றப்பட்டன. நாளடைவில் சில புலவர்கள் காப்பிய இலக்கணங்கள் நன்கு அமையும்படி புராணங்களை இயற்றியளித்துள்ளனர்.

இவ்வாறு பன்னிரண்டாம் நூற்றாண்டில் தொடங்கி பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் எண்ணற்ற தலபுராணங் கள் இயற்றப் பெற்றுள்ளன. இவை அக்கால வரலாறுகளையும் காட்டுவனவாக அமைந்துள்ளன.

### வரலாறு சார்ந்த நூல்கள்

குறிப்பிட்ட ஒரு சமூகத்தினர் தமது சமூக நிலைபாடு பற்றியும் அதன் புலியற்களம் பற்றியும் சிந்திக்கத் தொடங்கும் பொழுது 'வரலாற்றுணர்வு' ஏற்படுகின்றது. அதாவது தம்மை நிலையான குழுவினராகக் கொள்ளும் உணர்வு ஏற்படும்பொழுது தான் வரலாறு தோன்றும். இது ஆட்சியாளரின் வர்க்க நிலைப் பட்ட உணர்வாக முகிழ்க்கும் என்பர். இத்தகைய சூழ்நிலையில் தோன்றும் நூல்கள் மத நம்பிக்கைப் போர்வைக்குள் வரலாற்றைத் திணித்துக் கூறுவது ஒரு மரபாகும். இந்தியப் புராண இலக்கியங்களின் வரலாற்று உட்கிடக்கையை ஆராய்ந் தெடுத்துக் கூறியுள்ள ராய்செளத்திரி போன்ற வரலாற்று ஆசிரியர்கள் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளனர். இத்தகைய மதவழி நின்ற வரலாற்றுணர்வின் வெளிப்பாட்டில் தலபுராணங் கள் முக்கிய இடம் பெறும் என்பதை விசய நகர நாயக்கர்

மன்னர் காலத் தமிழிலக்கிய வரலாறு நன்கு தெளியப்படுத்தும் என்பர்.[1]

## தமிழுக்கே உரித்தானது

சமய உண்மைகளை நிறுவுவதற்குச் சைவ நூல்கள், புராணங்களைச் சான்றாக வழங்குகின்றன. தேவார திருவாசகங்களிலும் ஏனைய திருமுறை நூல்களிலும் சைவ சித்தாந்த சாத்திரங்களிலும் புராணக் கருத்துக்கள் பெருகிக் கிடக்கின்றன. தென்னாட்டுத் திருத்தலங்களில் மிளிரும் சிற்பங்களிற் சிற்பிகள் புராண நிகழ்ச்சிகளை உருவ வடிவங்களிற் கோலஞ் செய்து மக்களின் பத்தியை வளர்த்து வந்துள்ளார்கள். இலக்கியம், சிற்பம் என்னும் இரண்டிலுமிருந்து புராணத் தொடர்பு பெறும் பகுதிகளை நீக்கிவிட்டால் அவை இரண்டும் பள்ளங்கள் மிகுந்து பெருஞ் சிதைவுற்றுத் தோன்றக் காண்போம். புராணங்கள் இவ்வாறு மக்கள் போற்றும் கலைகளுக்கும் அவர்களின் சமய வாழ்க்கைக்கும் நிறைவு பயப்பனவாய், வாழ வழி காட்டுவனவாய், வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தவையாய் விளங்குகின்றன. கலைகள் வளருமிடம் கோயில்களானமையால் திருக்கோயில்களுடன் தொடர்பு கொண்டு புராணங்கள் தலபுராணங்களாக உருவாயின. இது தமிழுக்கே உரித்தான தனிச்சிறப்பாகும். தமிழிற் போன்று பாரத நாட்டிற் பயிலும் வேறெந்த மொழியிலாவது புராணங்கள் பெருகியதில்லை. இது தமிழ் நாட்டிற் சமயம் அடைந்த வளர்ச்சியின் வேகத்தை அளந்து காட்டுகின்றது என்பர் இலங்கைப் பல்கலைக்கழக வடமொழி விரிவுரையாளரான கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்.[2]

## தலபுராண நோக்கம்

உருவ வழிபாட்டின் அளப்பரிய பயன்களை அனுபவபூர்வமாக உணர்ந்த இடங்களே திருத்தலங்களாகும். இவற்றின் பழைமையான வரலாற்றுச் சிறப்புக்களை விவரிப்பனவே நம் தலபுராணங்கள்.

இறைவனும் இறைவியும் இம்மண்ணுலகில் பல திருத்தலங்களிலும் தோன்றியிருந்து அன்பர்கட்கு அருள்பாலிக்கின்றனர்.

---

1. டாக்டர் கார்த்திகேசு சிவத்தம்பி, ஈழத்தில் தமிழ் இலக்கியம், பக்.10-11.
2. ஈழத்துச் சிதம்பர புராணம், அணிந்துரை, பக்.

விண்ணுலகில் வாழும் தேவர்களும் இம்மண்ணுலகடைந்து இறைவன் இறைவியரை வழிபட்டே நன்மைகளை அடைந்துள்ளனர் என்பதையே தலபுராணங்கள் தம் மையமாகக் கொண்டுள்ளன. சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

"இயக்கர் கின்னரர் எமனொடு வருணர்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்க மில்புலி வானரம் நாகம்
வசுக்கள் தானவர் ஆனவர் எல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை
அர்ச்சித்து ஆரருள் பெறுமா றதுகண்டு
திகைப்பொன் றின்றிநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே",

என அருளிச் செய்கின்றார்.

எனவே, தலபுராணங்கள் தெய்வ நம்பிக்கையையும் சமய நம்பிக்கையையும் அடிப்படையாகக் கொண்டு சரியை கிரியை என்னும் இரு நெறிகளை வலியுறுத்தித் திருக்கோயில் வழிபாடு, பூசை, விழா, நோன்பு இவற்றின் பயனைக் கூறுகின்றன. இத்தலத்தில் வழிபட்டோர் தாம் செய்த பாவங்கள் எல்லாவற்றையும் தொலைத்தனர் என்றும், அவ்வாறு வழிபட்டோரில் அரசர்கள், தேவர்கள், முனிவர்கள் யாவரும் உளர் என்றும் கூறுகின்றன.

மொத்தத்தில் இம்மை வாழ்வு இனிதே அமைய எளிய வழிகாட்டியாக அமைந்து மறுமைப் பயனையும் நல்குவதே தலபுராணங்களின் நோக்கமாகும்.

## தலபுராணங்களில் சிறப்பாகக் கூறப்பெறும் பொருள்கள்

தலபுராணங்களில் சிறப்பாக வலியுறுத்தப் பெறும் பொருள்கள் நான்கு. அவை, மூர்த்தி (இறைவன்), தலம் (ஊர்), தீர்த்தம் (புனித நீர்), விருட்சம் (கோயில் மரம்) என்பன.

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்குஓர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே".

(43. பராபரக் கண்ணி, 156)

என்பது தாயுமானவர் வாக்கு.

ஒவ்வொரு தலத்திலும் சிறப்புடைய தீர்த்தங்களும், பயனுள்ள விருட்சங்களும் இருக்கும். அங்குள்ள மூர்த்திகளும்

ஒவ்வொரு வகையில் சிறப்புடையனவாகத் தோற்றமளிக்கும். மூர்த்திகளின் சிறப்பினை அவ்வத்தலங்களில் வந்து வழிபட்டோர் எய்திய பேறுகள், தீர்த்தச் சிறப்பினை அவ்வத்தீர்த்தங்களில் மூழ்கி வழிபட்டோரை விட்டு நீங்கிய பாவங்களாலும், விருட்சத்தின் சிறப்பினை அம்மர நிழல்களில் இருந்து அதன் பயனை நுகர்ந்ததனால் நீங்கிய பிணிகள் முதலியவற்றாலும் விளக்கக் காணலாம்.

இத்தலத்தில் வந்து இன்னின்ன காலங்களில் இவ்விம் முறையால் வழிபடுவோர்க்கு உடம்பு பற்றியும் உணர்வு பற்றியும் தீராமல் நிற்கும் பிணிகளும் மாசுகளும் நீங்கி இன்பமும் நலமும் பெற்று இம்மையில் வளமான வாழ்வும் மறுமையில் சிறப்பான வீடுபேறும் கிடைக்கும் என்ற வகையிலேலேயே தலபுராணங்கள் பலபல வரலாறுகள் கூறி நம்மை ஆற்றுப் படுத்துகின்றன.

மக்கள் என்னும்போது அவர்தம் பருவுடலே நம்முன் நிற்கும். ஆயின், மக்கள் ஒவ்வொருவரும் காரணம், நுண்மை, பருமை என்னும் மூன்று உடல்களோடு கூடியே வாழ்கின்றனர்' இம்மூன்றுடம்புகளும் செம்மை பெறும் பொருட்டு மெய்யறி வாளர்களால் தோற்றுவிக்கப் பெற்றவையே திருத்தல வழிபாடு களாகும்.

தலங்களாக வுள்ளவை மண்வகை தட்பவெப்பச் சார்பினால் அங்கு சென்றவர்களின் உடலிலுள்ள பஞ்சபூதக் கூறுகளையும் வாத பித்த சிலேட்டுமக் கூறுகளையும் சமப்படுத்தும். தல விருட்சங்களின் காற்றும் நிழலும், இலை, தழை, காய் கனிகளும் தீர்த்தங்களின் நீரும் பருவுடம்பின் உணர்வுகளை மாறுபடுத்தும். இவ்வாறு தூல சூக்கும காரண உடம்பு மூன்றும் செம்மை யுறுவதை உணர்ந்தே ஆன்றோர்கள் தலப்பெருமைகளையும் தலவழிபாட்டினையும் சமயச் சார்புடன் பொருத்திப் புராண மாகப் பாடியுள்ளனர்.

### தலபுராண உருவாக்கம்

தமிழில் பரிபாடல், திருமுருகாற்றுப்படை போன்ற இலக்கியங்கள் இறைவன் புகழ் பாடும்போது தலச்சார்பு காட்டி அதன் புகழ் கூறலையும் தருகின்றன. ஆழ்வார்களும் நாயன்மார் களும் தலச் சிறப்புக் கூறிப் பதிகம் பாடினர். இவற்றின் வளர்ச்சி தலபுராண இலக்கியமாக உருவாயிற்று எனலாம்.

**சிறப்புற்ற தலங்கள்**

நாம் வழிபடும் கடவுளரின் சிறப்புமிகு கோயில்களைக் கருத்தில் கொண்டு, அத்தலங்களைச் சிவத் தலங்கள், சக்தித் தலங்கள், திருமால் தலங்கள், முருகன் தலங்கள் எனப் பல வகையாகப் பாகுபடுத்திக் கூறி வருகின்றோம்.

இவற்றுள் சிவத்தலங்களே மிகுதி. தமிழ்நாட்டில் தொன்று தொட்டு நிலவி வரும் சமயம் சைவ சமயம். தேவார ஆசிரியர் காலத்திற்கு முன்பே இச் சைவ சமயம் மிகச் சிறப்பிடம் பெற்றிருந்தது. அவர்கள் அதற்கு மேலும் மெருகூட்டி அழகு சேர்த்தனர். எனவே, இச் சிவத்தலங்கள் தொல்பழமையுடன் இன்றும் நிலைத்து நிற்கக் காணலாம். சைவ சமய அடிப்படை நெறிகளே இவ்வளர்ச்சிக்குப் பெருங் காரணங்களாம்.

**உண்மைப் பொருள்கள் மூன்று**

சைவ சித்தாந்தச் செந்நெறி நூல்களில் பேசப்படும் உண்மைப் பொருள்கள் பதி பசு பாசம் என மூன்றாகும். அவற்றுள் பதிப் பொருள் எல்லாவற்றையும் நினைத்த மாத்திரத்தில் முற்றும் உணர்ந்து ஆன்மாக்கள் உய்ய ஐந்தொழி லியற்றும் பேரருள் தன்மை வாய்ந்தது. பசுப் பொருள் இறைவன் அறிவிக்க உணர்ந்து முக்குல வயப்பட்டு இயலும் தன்மை உடையது. தானே எதையும் அறியும் தகுதியில்லாதது. பாசப்பொருள் அறிவித்தாலும் அறியாது தானும் அறியாது. முப்பொருள்களில் இடைநின்ற பசுப்பொருள் இறைவன் சார்பால் இன்பமும் பாசப்பொருளின் சார்பால் துன்பமும் நுகரும். உயிர்கள் அனைத்தும் இன்பப் பேற்றைத்தான் விரும்பும். பதிப் பொருளின் தொடர்பு இன்பப் பேற்றைக் கருதி உயிர்களுக்கு இன்றியமையாது வேண்டப் படுவதாகும். கரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் உயிர்கள் உய்யும் பொருட்டு ஆன்மாக்கள் மீது கொண்ட பெருங் கருணையினால், குலலிங்கசங்கம வடிவங்களில் எழுந்தருளி வந்து அருள் புரிவான். அம்மூன்று வடிவங்களில் சிவலிங்கம் முதலிய திருவுருவங்கள் எழுந்தருளியிருக்குமிடங்கள் திருக்கோயில்கள் என்பது சைவ சமய அடிப்படைக் கருத்தாகும். இவ்வகையில் சைவ சமய ஆசாரியார்களால் தேவாரப் பாசுரம் பெற்ற தலங்கள் மிக உயர்வுடையன என்றும், நால்வர்களின் திருவருளோடு கூடிய செயல்கள் பல நிகழ்ந்து சைவ சமய மாண்பையும், சிவபரத் துவத்தையும் நிலைநாட்ட விளங்கும் தலங்கள் அதனினும்

உயர்வுடையன என்றும் சைவப் பெருமக்கள் பெரிதும் நம்புகின்றனர். இதன் காரணமாகவே இச்சிவத்தலங்களுக்குரிய வரலாறுகளை விளக்கும் வகையில் தலபுராணங்கள் பல இயற்றப் பெற்றுள்ளன.

எனவே, திருத்தலங்களை வியந்து பாடிய தேவார ஆசிரியர்களின் திருமுறைகளே தமிழ்த் தலபுராணங்களுக்குப் பெரும் அடிப்படை என்பது தெளிவு.

## திருமுறைகள்

பாடுவோரையும் பாடக் கேட்போரையும் இறையுணர்வில் ஈடுபடச் செய்யும் ஆற்றல் தோத்திரப் பாடல்களுக்கே உண்டு. இத்தகைய பாடல்களை மிகுதியாகக் கொண்டதாலேயே தமிழ் மொழி பக்திக்குரிய மொழியாகத் தோற்றமளிக்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வனவே திருமுறைகள்.

திரு என்பது பொதுநிலையில் உலகியல் செல்வங்களைக் குறித்தாலும் சிறப்பு நிலையில் சிவபரம் பொருளையும் சிவத்தோடு இணைபிரியாதிருக்கின்ற அருளாகிய சத்தியையும், அச்சிவசக்தியின் துணையால் உயிர்கள் அடையும் பேரின்பத்தையுமே குறிக்கும். "திருவே என் செல்வமே" என்றவிடத்துத் திரு என்ற சொல் சிவபெருமானைக் குறிப்பதும், "சென்றடையாத திருவுடையானை" என்றவிடத்துத் திரு என்னும் சொல் அருளாகிய சிவசக்தியைக் குறிப்பதும், "சிவமே பெருந் திரு எய்திற்றிலேன்" என்றவிடத்துத் திரு என்னும் சொல் பேரின்பத்தைக் குறிப்பதும் இதை நன்கு தெளிவுறுத்தும்.

முறை என்ற சொல் பலபொருள் குறிக்கும் ஒரு சொல்லாயினும் இங்கு மனக்கோணலை நீக்கி வாழ்க்கை முறையை ஒழுங்குபடுத்தும் நூலையே குறிக்கும். "இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன் முறை வரைவேன் என முயல்வதொக்கும்" என்ற கந்தபுராண அவையடக்கச் செய்யுளால் இக்கருத்து நன்கு புலனாகும்.

எனவே, சிவசக்தியின் துணையால் உயிர்கள் அடையும் பேரின்பத்தை எடுத்துக் கூறி மக்களின் மனக்கோணலை நீக்கும் சிறப்புடைய நூல்களாக விளங்குவனவே திருமுறைகள் என்பது தெளிவாகும்.

## பன்னிரு திருமுறைகள்

இத்திருமுறைகள் பன்னிரண்டாகப் பகுக்கப் பெற்றுள்ளன. இவற்றை அருளிச் செய்தவர்கள் திருஞானசம்பந்தர் முதல்

சேக்கிழார் பெருமான் முடிய உள்ள இருபத்தேழு அருளாசிரியர் களாவார்கள். இவர்களுள் திருஞானசம்பந்தரும் திருநாவுக் கரசரும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். சுந்தரர் எட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர். சேக்கிழார் பெருமான் பன்னிரண்டாம் நூற்றாண்டினராவர்.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்திருந்த முதலாம் இராசராச மன்னன் கொண்ட தேவார ஈடுபாட்டினால், நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு மூவர் அருளிய தேவாரப் பாடல்களை ஏழு திருமுறைகளாகவும், மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எட்டாந் திருமுறையாகவும், ஒன்பதின்மர் அருளிய திருவிசைப்பாவையும், திருப்பல்லாண்டையும் ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் அருளிய திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும், பன்னிரு ஆசிரியர்கள் அருளிய நாற்பது பிரபந்தங்களையும் பதினோராந் திருமுறையாகவும் அமைத்தான்.

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த அநபாயன் என்னும் இரண்டாம் குலோத்துங்கன், சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தின் பெருமையை யறிந்து அதனைப் பன்னிரண்டாம் திருமுறையாக அமைக்கச் செய்தான்.

இப்பன்னிரு திருமுறைகளே இறைவன் கோயில் கொண்டிருந்த தல வரலாறுகளையும் இறையடியார்களின் வரலாறுகளையும் எடுத்துரைக்கும் கருவூலங்களாக விளங்குகின்றன.

தமிழ்த் தலபுராணங்களின் வரலாற்றினை நோக்குமிடத்து, இத்தல புராணங்கள் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்பே தோன்றி வளர்ந்துள்ளதை நன்கு அறியலாம். எனவே, பன்னிரு திருமுறைகள் தோன்றி, வெளிப்பட்டு மக்களால் ஏற்றுக் கொள்ளப் பெற்ற இக்கால கட்டத்தைக் கருத்தில் கொண்டால் தமிழ்த்தல புராணங்களின் வித்தாக இப்பன்னிரு திருமுறைகள் விளங்கக் காணலாம். இவற்றுள், குறப்பாகத் தேவாரப் பதிகங்கள் சிறப்பிடம் பெறுவதும் தெளிவு.

**தேவாரம் அடங்கன் முறை**

மூவர் முதலிகளாகிய திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் சுந்தரரும் அருளிய திருமுறைகள் ஏழும் தேவாரம் எனவும் அடங்கன் முறை எனவும் வழங்கப்பெறுகின்றன. தே என்பது தெய்வத்தையும் வாரம் என்பது அன்பையும் குறிக்கும். எனவே தெய்வத்தினிடத்து உயிர்கட்கு அன்பை விளைவிக்கும் இவ்வருட் பாடல்கள் தேவாரம் எனப் பெற்றது. வாரம் என்ற சொல்லிற்கு உரிமை என்ற பொருளும் உண்டாகலின் சிவ முதலாகிய தெய்வத்திற்கே உரிய பொருள்சேர் புகழைப்பாடும் பாடல்கள் என்றும் பொருள்படும். உவகியற் கல்வி நம்மை வெள்ளம் அடங்கும் விரிசடையார்க்கு ஆளாக்கி உள்ளத்தை அடக்குமாறு செய்யும் உயர்வுடையது. இச்சிறப்பினால்தான் கற்றறிந்து அடங்குவதே முறை என்பதைத் தெளிய உணர்த்தும் இத்திருமுறைகள் அடங்கன் முறை என வழங்கலாயின.

மேற்கூறிய கருத்துக்களுடன் கூடிய தேவாரப் பதிகங்களில் கூறப்பெறும் தலவரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கியதாக இயற்றப் பெற்ற தமிழ்த் தலபுராணங்களை இத்தேவார ஆசிரியர் பாடிய தலவரிசையிலேயே பகுத்தறிவது மிகவும் பயனுடையதாகும்.

நூற்றுக்கணக்கான தலபுராணங்கள் உள்ள நிலையில் அவற்றை ஊர்வாரியாகவோ, கடவுளர் வாரியாகவோ, அகர வரிசையிலோ, கால அடிப்படையிலோ, ஆசிரியர் அடிப்படையிலோ, பிற வகையிலோ தொகுத்துக் காணலாம். ஆயின் அவை யாவும் பல சிக்கல்களையும் குழப்பங்களையும் கொண்டதாக அமையும் என்பது இந்நூல்களை நுணுகி ஆராய்வார்க்கு நன்கு புலனாகும். எனவே, தேவார அடிப்படையிலான சிவத்தலங்களே மிகுதியாக இருப்பதாலும் 'மூவர் தேவாரம் பாடிய சிவத்தலங்கள்' வரிசையிலேயே தமிழ்த் தலபுராணங்களைப் பகுத்தறிவது மிகவும் ஏற்புடையதாகும்.

**மூவர் தேவாரம் பாடிய சிவத்தலங்களும் புராணங்களும்**

"சோழ மொருநூற்றுத் தொண்ணூறு தென்பாண்டி
சொல்லு மீரேழ்
ஈழ மிரண்டு நடுநா டிருபா னிரண்டு கொங்கு
ஏழு வடநாடைந் தார்தொண்டை நாலெட்டொன்
றேர்துளுவம்
சூழ மலைநாடொன் றேமூவர் பாடிய தொல்பதியே"
(சிவத்தலக்கோவை, பா. 51)

என்பது மூவர் தேவாரம் பாடிய சிவத்தலங்களின் எண்ணிக்கையைக் கூறும் பாடலாகும்.

திருஞானசம்பந்தர் (384 பதிகங்கள்), திருநாவுக்கரசர் (313 பதிகங்கள்), சுந்தரர் (100 பதிகங்கள்) என மூவரும் 797 பதிகங்களைப் பாடியுள்ளதாக இப்பொழுது கிடைக்கின்றன. இப்பதிகங்கள் அனைத்தும் 274 திருத்தலங்களில் பாடப் பெற்றதாகும். இவற்றைச் சோழநாட்டுத் தலங்கள், பாண்டிநாட்டுத் தலங்கள், தொண்டை நாட்டுத் தலங்கள், கொங்கு நாட்டுத் தலங்கள், நடுநாட்டுத் தலங்கள், வடநாட்டுத் தலங்கள் ஈழ நாட்டுத் தலங்கள், மலைநாடு, துளுநாட்டுத் தலங்கள் என்றே பகுத்தறியப் பெறுகின்றன.

இவ்வகையில் அமையும் தேவாரப் பாடல் பெற்ற தலங்களேயல்லாது, பதிக வைப்புத் தலங்கள் பலவும், புராண, அபிமானத் தலங்கள் பலவும் புராணம் பெற்றுள்ளன.

இவ்வாறு சிவத்தலங்களே யல்லாமல் வைணவத் தலங்கள் பலவும் தலபுராணம் பெற்றுள்ளன. ஆழ்வார்கள் மங்களா சாசனம் செய்தருளிய திவ்விய தேசங்கள் நூற்றெட்டு என்று கூறப்பெறுகின்றன. அவையும் மேற்கூறிய சோழநாடு, பாண்டி நாடு, தொண்டை நாடு, நடுநாடு, மலை நாடு, வடநாடு, கொங்கு நாடு, துளுநாடு என்னும் பாகுபாட்டிலேயே அமைத்து விளக்கப் பெறும்.

"ஈரிருப தாஞ்சோழம் ஈரொன்பதாம் பாண்டி
ஓர்பதின்மூன் றாம்மலைநாடு ஓரிரண்டாம் - சீர்நடுநாடு
ஆறோடு ஈரெட்டுதொண்டை அவ்வடநாடு ஆறிரண்டு
கூறு திருநாடு ஒன்றாகக் கொள்"

என்பது பாடல்.

ஆழ்வார்கள் பாசுரங்கள் கிடைக்கப் பெறாத வைணவத் தலங்கள் பல பின்வந்த வைணவ ஆசாரியர்களாலும், திருக்கோயில்களின் சிறப்பாலும் புராணம் பாடும் சிறப்பினைப் பெற்றுள்ளன.

எனவே, எவ்வகையில் நோக்கினும் இவ்வகை நாட்டுப் பகுப்பே பொருத்தமானதும் பொருளுடையதுமாகையால் தமிழ்த் தலபுராணங்களையும் இவ்வாறே பகுத்து ஆராய்வது பயனுடையதாகும். அவற்றை ஈண்டு நோக்குவோம்.

# சோழநாட்டுத் தலபுராணங்கள்

தமிழ்நாட்டை ஆண்ட மூவேந்தருள் முதல்வரான சோழர்கள் தொன்றுதொட்டு ஆண்டுவந்த பகுதிகள் சோழ நாடெனப் பெருமையுடன் பேசப்பெறும். கிழக்கே கடலும், தெற்கே வெள்ளாறும், மேற்கே கோட்டைக் கரையும், வடக்கே ஓணாடும் ஆக மிகப் பரந்த நிலத்தைக் கொண்ட இச் சோழநாடு காவிரியால் வளம் பெற்று விளங்குவது. ஆயிரக்கணக்கான கோயில்களும் இங்கே சிறப்புற்று விளங்குகின்றன.

தமிழ் ஞானசம்பந்தர் தோன்றிய சீகாழிப் பதியும் இச்சோழ நாட்டைச் சேர்ந்ததே. சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் வரலாற்றைச் சிறப்புடன் இயற்றியளித்ததும் இச்சோழ நாட்டிலேயாம்.

சோழநாட்டில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் மொத்தம் 190. அவற்றுள், காவிரியின் வடகரையிலுள்ளவை 63: தென்கரையிலுள்ளவை 127. இவற்றுள் பாதிக்கும் மேற்பட்ட தலங்களுக்குரிய புராணங்கள் கிடைக்கின்றன.

சோழநாட்டில் ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த தலங்கள் மொத்தம் 40. அவற்றுள், காவிரியின் வடகரையிலுள்ளவை 21; தென்கரையிலுள்ளவை 19. இவற்றுள் பல தலங்களுக்குரிய புராணங்கள் கிடைக்கவில்லை.

மேற்கூறிய வகையில் பாடல் பெறாத சைவ, வைணவத் தலங்கள் பல இச்சோழ நாட்டிலுள்ளன. அவற்றுள் பல தலபுராணங்களைப் பெற்றுள்ளன. இவ்வகையில் நாற்பதுக்கும் மேற்பட்ட தலபுராணங்கள் கிடைக்கின்றன. அவற்றை ஈண்டு நோக்குவோம்.

**காவிரியின் வடகரையிலுள்ள தலங்கள்**

காவிரியின் வடகரையிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் 63 ஆகும். இவற்றுள் 27 தலங்களுக்குரிய புராணங்கள் கிடைக்கின்றன. அவை வருமாறு :

**கோயிற் புராணம்**

சோழநாட்டுத் தலங்களுள் ஒன்று சிதம்பரம். இது காவிரி நதியின் வடபால் உள்ளது. சைவத்தில், 'கோயில்' என்று பொதுவாக வழங்கினாலே அது சிதம்பரம் நடராசப் பெருமான் கோயிலைத்தான் குறிக்கும். ஊர்ப் பெயர் தில்லை. கோயிலின் பெயர் சிதம்பரம். இன்று ஊர்ப்பெயர் வழக்கில் மறைந்து, கோயிலின் பெயரே ஊர்ப்பெயராக வழங்கி வருகிறது.

தில்லை மரங்கள் அடர்ந்த காடாக இருந்தமையால் தில்லை வனம் என்றும்; வியாக்ரபாதர் என்னும் புலிக்கால் முனிவர் பூசித்த தலமாதலின் பெரும்பற்றப் புலியூர் என்றும்; சித் அம்பரம் (அறிவு - வெட்டவெளி) - சிதம்பரம் ஞானாகாசம் என்றும்; பூலோக கயிலாயம்; புண்டரீகபுரம்; சிதாகாசத்தலம் என்றும் பல பெயர்கள் இத்தலத்திற்குரியதாகும்.

சேந்தனார் அருள் பெற்றதும்; மாணிக்கவாசகர் திருவாசகமும் திருக்கோவையாரும் பாடி முத்தி பெற்றதும்; வியாக்ரபாதர், பதஞ்சலி, உபமன்யு, வியாசர், சுகர், திருநீலகண்டர், திருநாளைப்போவார், கூற்றுவ நாயனார், கணம்புல்லநாயனார், சந்தனாசாரியர் முத்தி பெற்ற சிறப்புடையதுமாகிய பழம்பதி இது.

இறைவன் - விராட்புருடனின் வடிவத்தில் திருவாரூர் மூலாதாரமாகவும், திருவானைக்கா உந்தியாகவும், திருவண்ணா மலை மணிபூரகமாகவும், திருக்காளத்தி கழுத்தாகவும், காசி புருவமத்தியாகவும் கூறப்பெறும். இதில், சிதம்பரம் இருதய மாகவும் சொல்லப்படும்.

பஞ்சபூதத் தலங்களுள் இது ஆகாயத்தலம், பஞ்ச சபைகளுள் இது கனகசபை, பொற்சபை, சிற்சபை, பதஞ்சலி வியாக்ர பாதர்களுக்குப் பெருமான் கனகசபையில் நடனக்காட்சியருளிய தலம். தரிசிக்க முத்தி தரும் பதி என்பர்.

இக்கோயிலுள் சிற்றம்பலம், பொன்னம்பலம், பேரம்பலம், நிருத்தசபை, இராசசபை என ஐந்து பெருமன்றங்கள் உள்ளன.

பேரம்பலத்திற்கு மேரு என்னும் பெயருண்டு. வடக்கிலுமொரு மேரு இருப்பதால் இதைத் தட்சிணமேரு என்று கூறுவர்.

தில்லைவாழ் அந்தணர்களாகிய தீட்சிதர்களின் கட்டுப் பாட்டில் உள்ளது இக்கோயில்.

இராசராசன் வேண்டுதலின் பேரில் நம்பியாண்டார் நம்பிகளால் பொல்லாப் பிள்ளையாரின் துணைகொண்டு திருமுறைப் பதிகங்கள் கண்டெடுக்கப்பட்ட திருத்தலம் இது.

பெரியபுராணமென்னும் திருத்தொண்டர் புராணம் சேக்கிழார் பெருமானால் அரங்கேற்றம் செய்யப்பட்ட தெய்வத் தலமாகிய இங்குப் பல அற்புதங்கள் நிகழ்ந்ததையும் வரலாறு சுட்டும். மாணிக்கவாசகர் புத்தரை வாதில் வென்று ஊமைப் பெண்ணைப் பேச வைத்தது; திருஞானசம்பந்தர் தில்லைவாழ் அந்தணர்களைச் சிவ கணங்களாகக் கண்டது; உமாபதிசிவம் கொடிக்கவி பாடிக் கொடியேற வைத்தது; சேந்தனார் திருபல்லாண்டு பாடித் தடைப்பட்ட தேரை ஓடச் செய்தது; திருமுறைகளை வெளிப்படுத்தியது; சேக்கிழார் பெரியபுராணம் பாட அடியெடுத்துக் கொடுத்தது முதலிய பல அற்புதங்கள் இத்தலத்திலேயே நிகழ்ந்ததாக வரலாறு கூறுவர்.

தேவாரம் பாடிய மூவரும், திருவாசகம் பாடிய மணிவாசகரும், இத்தலத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். இவற்றுடன் எண்ணற்ற நூல்கள் இத்தலம் பற்றி எழுந்துள்ளன.

தமிழிலுள்ள கோயிற்புராணம், சிதம்பர புராணம், புலியூர்ப் புராணம், சிதம்பர சபாநாத புராணம் என நான்கு தலபுராணங் கள் இச் சிதம்பரம் கோயிலைப் பற்றிய நூல்களாகும்.

வடமொழியில் சிதம்பர ரகசியம், தில்லைவன மான்மியம், வியாக்கிரபுர மான்மியம், புலியூர் மான்மியம், புண்டரிகபுர மான்மியம், சிதம்பர மான்மியம், ஏமசபாநாத மான்மியம், சித்சபா பிரதிட்டா மான்மியம் போன்ற பல நூல்கள் இத்தல வரலாறுகளைக் கூறுவனவாக அமைந்துள்ளன.

## 1. உமாபதி சிவாசாரியர் இயற்றிய கோயிற் புராணம்

கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் அவர்கள் மறைஞான சம்பந்தரிடம் ஞானோபதேசம் பெற்றவர். இவர் இயற்றியதே கோயிற் புராணம். இதில், வியாக்கிரபாதச்

சருக்கம், பதஞ்சலிச் சருக்கம், நடபாசச் சருக்கம், இரணிய வன்மச் சருக்கம், திருவிழாச் சருக்கம் என்னும் 5 சருக்கங்கள் உள்ளன. பாயிரம் சேர்த்து 415 பாடல்கள் உள்ளன.

விநாயகர் காப்புச் செய்யுள் முதற்கண்கூறி, பாயிரத்தில் திருச்சிற்றம்பலத்தை மூன்று திருவிருத்தங்களால் துதிக்கிறார். திருச்சிற்றம்பலமுடையார், சிவகாமி, கற்பக விநாயகர், இளைய பிள்ளை ஆகியோருடன், தேவார முதலிகள் மூவர், மாணிக்க வாசகர், தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவர், சண்டேசுர நாயனார், திருநீற்றுச் சோழர், அகம்படித் தொண்டு செய்வோர் ஆகியோருக்கும் துதிகள் கூறுகிறார்.

மன்றில் நடங் காணுதற்கு வாய்ப்பாகவுள்ள இந்த உடம்பே உடம்பாம் எனவும், சிதம்பரத்திலே பிறந்த ஆன்மாக்களுக்கும் தரிசனம் செய்த ஆன்மாக்களுக்கும் இறந்த ஆன்மாக்களுக்கும் முத்தி சித்திக்கும் எனவும், உயிர்ப் பிணிக்கும் உடற்பிணிக்கும் மருந்தாவது தில்லை அல்லது இல்லை எனவும் கூறுகிறார்.

''காமருங் கொடுங்குழையான் கரத்தமருங்
கொடுங்குறையான்
பாதமுற வளைந்திரவும் பகலுமுற வளைந்திரவும்
பேதமற வுடன்தீரும் பிணிபிறவி யுடன்தீரும்
ஓதலுறு மருந்தில்லை ஒழியவொரு மருந்தில்லை''. (16)

வியாக்கிரபாதச் சருக்கத்தில், வியாக்கிரபாதர் மத்தியந்தண முனிவருடை. மகனாகப் பிறந்ததும், வண்டுகள் உண்ணாமுன் மலர் பறித்துச் சிவபெருமானுக்குச் சாத்தவேண்டும் என்று தவம் கிடந்து புலிக்காலையுங் நகத்திற் கண்களையும் பெற்ற வரலாற்றையும் கூறுவர். தாருக முனிவர்கள் வரலாறு இதில் கூறப்பெறும். தாருக வனத்தில் நடமாடியமை குறிக்கத்தக்கது. இத்தலத்திற்குரிய வேறு பெயர்களும் காரணங்களும் விளக்கப் பெறுகின்றன. இத்தலத்துக்கு, மன்று, அமலம், சத்து, உம்பர். இரண்மயகோசம், மகத், தனி, புண்டரிகம், குகை, வண்ககனம், சுத்தம், பரம், அற்புதம், மெய்ப்பதம், சுழுனாவழி, ஞானகோதயம், சிதம்பரம், முத்தி, பரப்பிரமம், சபை, சத்தி, சிவாலயம் என்பன காரணப் பெயர்களாகக் கூறப்பெறுகின்றன. (பா. 29).

பதஞ்சலிச் சருக்கத்தில் ஆதிசேடன் பதஞ்சலியானது, நிலவுலகுக்கு வந்து வியாக்கிரபாதரோடு சென்று மூலட்டான

மூர்த்தியை வழிபட்டிருந்து திருநடனம் தரிசித்தது ஆகியன கூறப்பெறுகின்றன.

நடராசச் சருக்கத்தில் வியாக்கிரபாதர் பதஞ்சலி முனிவர் கட்குத் திரோதானத்தை நீக்கி ஆனந்த சுபாவ நிருத்தத்தைத் தரிசிப்பித்ததும், அரிபிரம இந்திராதிகளுக்கும் தேவர்களுக்கும் வேதங்களுக்கும் ஆணவ அளவை விந்து அவத்தை நீக்கித் திரோதானத்தில் அருளானந்த நிருத்தம் தரிசிப்பித்ததும், மூவாயிரம் முனிவர்கட்கும் கலாபந்தம் நீக்கி வைந்தவானந்தம் தரிசிப்பித்ததும் விளக்கப் பெற்றுள்ளன.

இரணியவன்மச் சருக்கத்தில், கௌடநாட்டு மன்னனாகிய சிங்கவர்மன் ஒரு வேடனைத் துணைக்கொண்டு தில்லைக்கு வந்து வியாக்கிரபாதரைத் தரிசித்ததும் பஞ்சாக்கர உபதேசம் பெற்றதும் கூறுவர். ஆனந்த நடனத்தை இரணியவன்மனுக்குப் புலப்படச் செய்தல் ஆகியனவும் கூறப்பட்டுள்ளன. தில்லையின் பெயர்கள், பூசித்தோர் பெற்ற பயன்கள், மார்கழித் திருவாதிரைத் திருநாட் சிறப்பு, உபமன்னிய முனிவர், சைமினி முனிவர் சிதம்பர நிருத்தம் தொழுதல், மாசி மகத்திலே கடலில் பாசமறுத்தான் துறையில் தீர்த்தம் கொடுத்தல், சிதம்பரதல நவதீர்த்தங்கள் மகிமை, வியாக்கிரபாதர் இரண்யவன்மனைப் புத்திரனாகவே கொள்ளுதல், வசிட்ட முனிவரைக் காணல், கௌடதேசம் செல்லல், மூவாயிரவரை அழைத்துவரல், கொற்றவன் குடி முதலியவைகள் விளக்கப் பெறுகின்றன.

"பிறந்திலம் ஆரூர் தன்னிற் பேசிய காசி மேவி
இறந்திலம் இரண்டு முத்தி இன்பமும் பின்ப தாநாம்
உறைந்திடு தில்லை ஞான யோகமார் தான மாமால்
செறிந்தடி காணச் சீவன் முத்தராய்த் திரிய லாமே". (68)

திருவாரூரிலே பிறக்கப் பெற்றோம் இல்லை; காசியிலே போய் இறக்கப்பெற்றோம் இல்லை; ஆனால் தில்லைக் கூத்தனைக் கண்டு தரிசித்தாலே போதும் சீவன் முத்தராய் வாழலாம் என்கிறார். மேலும், இச் சருக்கம் முழுவதும் சைவ சித்தாந்த கருத்துக்கள் நிறைந்திருக்கக் காணலாம்.

திருவிழாச் சருக்கத்தில், இரணியவன்மன், தம்பிமார்களின் அரசுரிமை, திருமணம், சிங்காதனம் ஏறல், அம்பலம் பொன் வேய்ந்தது, கனகாலயம் கண்டது போன்ற வரலாறுகள் கூறப் பெறுகின்றன.

"பன்மணி மாலைகள் கொண்டன தொங்கல் பயிற்றிச் சூழ்
பொன்மலி முன்மதில் கோபுர வாயில் பொருந்தச் செய்து
என்மல மங்கவ ருங்கரு மூல விறைக்கும்பொன்
தன்மய மாமொளி ராலய மொன்று சமைப்பித்தான்". (17)

என்னும் பாடல் கனகாலயம் தோன்றியதைக் குறிக்கும்.

பதஞ்சலி அருளிய சித்தாந்த ரத்னாவளி, வசந்தவிழா, சித்திரை - கொழுந்து சாத்தல், ஆடி - புதுப்புனலாடல், பவித்திரம் சாத்தம், ஐப்பசிப்புரம், தீபோற்சவம், மார்கழித் திருவாதிரை, தைப்பூசப் பாவாடை, ஆனித்திருநாள், இரதோற்சவம், மாசிமகம் ஆகிய திருவிழாக்கள் விளக்கப் பெறுகின்றன. பிறகு இப்புராணப் பயனும் வாழ்த்தும் கூறி முடிக்கின்றார் ஆசிரியர்.

"ஈரா றுயிருடன் மூவா றமரும் எழுத்துப் புகன்முதல் விரிவென்றும்
தாரா தரமென வுலகோர் பலகலை தருமா விரணிய வருமாமுன்
சீரார் தரவரு திருநாள் படிமுதல் சிலநாள் வழிசெல மிகநவ்விக்
கூரார் படையின னருளா லரசர்கள் கொண்டா டிடுநெறி கண்டார்கள்". (50)

அகரம் முதல் ஔகாரம் ஈறான பன்னிரண்டு உயிரும், ககரம் முதல் னகரம் ஈறான பதினெட்டு மெய்யும் எனச் சொல்லுகின்ற முதலெழுத்துக்கள் முப்பதுமே காரணமாக எந்தக் காலமும் கைம்மாறும் வேண்டாது பயன்தரும் மேகத்தை ஒப்பாக உலகத்திலுள்ளவர்களுக்கு ஆதாரமாகிப் பலவகைப் பட்ட கலைகளும் உண்டானமைபோல, ஆதியில் இரணிய வன்மச் சக்கரவர்த்தியால் நித்திய நைமித்திய முதலியவை சிறப்புப்பெறச் சிலநாள் நடந்து வரப் பிற்காலத்தில் சோழ மன்னர்கள் அவற்றை யாவரும் கொண்டாடும்படி நடத்தி வந்தார்கள் என்ற வரலாற்றை இதில் கூறுகிறார். இத்தகைய கோயிற் சிறப்பைக் கூறும் இந்நூலைக் கற்போர் பெறும் பயன் களையும் விளக்குகிறார்.

"சொற்ற னுமைபொரு ளரனா மிருபொருள்
துணிவா லவரருள் தொகுமாவிப்
பொற்றா மரைமலர் விரைசூழ் புனலணி
புலியூர் வளநகர் புகழ்தாழுங்

கற்றா ருரைசெயல் பெற்றார் செவிகொடு
கவர்வார் பொருள்விரி பகர்வார்கீர்
உற்றா ரிருவினை யற்றார் மிகுபரி
உடையார் திருவடி யடைவாரே".

சொல் உமையாகவும், பொருள் சிவபெருமானாகவும், வேதாகமங்கள் நிச்சயித்த மிகுந்த பொருட் துணிவாதலால், அவர்களிருவரின் திருவருளும் பொருந்திய இந்நூலைக் கற்றாரும் கேட்பாரும் விரிவைச் சொல்லுவாரும் செல்வம் பெறுவர்; பாவபுண்ணியங்களிலிருந்து விடுதலை பெற்று வீடுபேறு அடைவர் என்று இவர் கூறி முடித்துள்ளமை சிறப்புடையதாகும்.

## 2. சிதம்பர புராணம்

இது, புராணத் திருமலை நாதரால் இயற்றப்பெற்றது. இதில், 10 சருக்கங்களும் 813 பாடல்களும் உள்ளன.

பாயிரப் பகுதியில் பரஞ்சுடர், திருச்சிற்றம்பலத் திலகும் பேரொளி, சிதம்பரம், சிவகாமசுந்தரி, கற்பக விநாயகர், குமரன் நந்திதேவர், நால்வர், தில்லை மூவாயிரவர், சண்டேசர் முதலான உருத்திர பல்கணத்தவர் ஆகியோருக்கு முறையே வணக்கம் சொல்லிய பின்னர், குலோத்துங்க சோழன், திருவநம் பாடிமைப் பரிசனர் ஆகியோருக்கும் வணக்கம் கூறுகிறார்.

"பருதிகுலந் தனிலுதித்துப் பரசமய இருளகற்றிப் பரமன் ஆடும்
பொருவருபே ரம்பலமும் கோபுரமும் ஆலயமும் பொன்மேய்ந் துண்மைச்
கருதியுடன் சைவநெறி தழைத்தோங்கத் திருநீற்றுச் சோழ னென்று
குருமணிமா முடிபுனைந்த குலோத்துங்க வளவனருள் குறித்து வாழ்வாம்"

என்னும் சோழர் வணக்கப் பாடல், இரண்டாம் குலோத்துங் கனைக் குறித்தது. இவற்றால் சேக்கிழார் காலமும் தெளிவுறும்.

இப்புராணத்திற்கு முன்பே கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் இயற்றிய கோயிற்புராணம் இருப்பது பற்றியும், அவர் வழிவந்த சிற்றம்பல நாடி மாணாக்க வழியினரான காஞ்சி ஞானப்பிரகாசரின் மாணாக்கரான தாம் இந்நூலை இயற்றியது

பற்றியும் புராணத் திருமலைநாதர் பின்வரும் பாடலில் குறிக்கக் காணலாம்.

"முற்றுமுணர் மெய்கண்ட சந்திக்கோர் தீபமென
முதன்மை கொண்ட
கொற்றவன்தன் குடிமருவு குலவுமுமா பதிசிவன்பொற்
கோயில் உண்மை
சொற்றபுரா ணமுமிருக்கப் பின்னுமொரு வகையாலும்
சொல்வான் புக்கேன்
மற்றவன்தன் திருவடியின் வழிவந்தோர்க் கடியனெனும்
வழக்கான் மன்னோ." (13)

சைவ புராணத்தின் ஒரு பகுதியாகிய சிதம்பர புராணத்தைத் தமிழ்ச் செய்யுள் நடையாக மொழிபெயர்க்கும்படித் தில்லை மூவாயிரவரும் பிறரும் கூறியமையால் இவர் இதை இயற்றியுள்ளதாகவும் கூறுகிறார். தாம் நூல் செய்த காலத்தையும் ஒரு பாடலால் (18) கூறுவர். இதில் குறிப்பிட்ட காலம் சகம் 1430; கி.பி. 1508. எனவே இந்நூலாசிரியர் காலமும் இதுவே எனத் தெரிகிறது.

சிதம்பர மான்மியச் சருக்கம் காப்பியத்தின் நாட்டு, நகரப் படலத்தைப்போல அமைந்துள்ளது. சிற்சபையில் நடனமிடும் பெருமான் சிறப்பும்; ஞானாகாயம், தில்லை, சிற்றம்பலம், பிரமபுரம், புண்டரீகபுரம், சிதம்பரம் ஆகிய பெயர்கள் இதில் விளக்கப் பெறுகின்றன.

துன்மதச் சருக்கத்தில் துன்மதன் என்னும் அந்தணச் சிறுவன் தீத்தொழில் பல புரிந்து வந்தான். ஒருநாள் அவன் தில்லைப் பெருமானுடைய ஆனந்த நடனத்தைக் கண்டான். ஆயினும் அவன் திருந்தாமலேயே இறந்தான். யமன் வந்து அவன் உயிரைத் தனையிட்டுக்கொண்டு சென்றான். இடையே நந்தி தேவர் வந்து, திருநடம் கண்ட புண்ணியத்தால் துன்முகன் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுதி பெற்று நற்கதியடைதற் குரியவன் என அவனை விடுவித்தான் என்ற வரலாறு கூறப் பெறுகிறது.

துச்சகச் சருக்கத்தில் துச்சகன் என்பவன் கொடிய பாவங்கள் செய்து வந்தாலும், தில்லையில் நடனம் கண்ட காரணத்தால் வீடுபேறு பெற்ற வரலாறு கூறப்படுகிறது.

நியமச் சருக்கத்தில், சிதம்பரத் தலத்தை யடைந்தவர் மேற்கொள்ளும் நியமங்களும் அவற்றால் எய்தும் மேலான பயன்களும் விளக்குவர்.

சோமநாதச் சருக்கத்தில், சிவத்துரோகப் பயன்கள் சொல்லப்படுகின்றன. சிதம்பரத்திலுள்ள பத்துத் தீர்த்தங்களின் வரலாறும் சிறப்பும் கூறுவது தீர்த்தச் சருக்கம்.

ஆனந்தத் தாண்டவ வருணனையும் காண்பதன் பயனும், பெருமான் திருமாலுக்குப் பல தலங்களின் பெருமையும் திருச்சிற்றம்பலத்தின் பெருமையும் கூறுதல் ஆகியன திருச்சிற்றம்பலச் சருக்கத்தில் விளக்கப் பெறுகின்றன. திருமால் சைமினி முனிவனுக்குச் சிதம்பரப் பெருமையைக் கூறிச் சமாதியிலிருந்த வரலாற்றைச் சமாதிச் சருக்கத்தில் காணலாம்.

துற்றெரிசனச் சருக்கத்தில், துற்றெரிசனன் என்ற வேடுவன் வரலாறும், சிவதருமப் பலன்களும் சொல்லப்பட்டுள்ளன.

தில்லை மூவாயிரவர் போன்றோர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவர் வடமொழியிலிருந்து மொழிபெயர்த்து இந்நூலை யாத்துள்ளார். மலைநாட்டிலிருந்து வடமொழிப் பிரதியொன்றை வருவித்து, அதனைக் கொண்டு மொழிபெயர்த்தனர் என்றும், அப்பிரதியில் புராணத்தின் பிற்பகுதி இல்லை என்றும், பின்பும் அகப்படாமையால் அப்பகுதி இவரால் செய்யப்படவில்லை என்றும் தெரிகிறது. இந்நூலின் இறுதிப் பாடலிலும் ஆசிரியர் இதைக் குறிப்பர்.

> ''இந்த எல்லை மலைநாட் டிடத்திலும்
> வந்த தெய்வ வடமொழி யெப்படி
> செந்தமிழ்த் தொடை யப்பால் தெரித்தனம்
> முந்து மற்றதும் வந்தால் மொழிதுமால்''

என்னும் இப்பாடல், இப்புராணத்தின் பிற்பகுதியான வடமொழி மூலம் கிடைக்காததைக் குறிக்கும்.

வடமொழிச் சிவமகாபுராணமாகிய சைவபுராணத்துள் ஒரு பகுதியே சிதம்பர புராணம். இப்புராணம் முழுமையும் திருமலைநாதர் மொழிபெயர்த்துப் பாடியதன் காரணமாகவே அவர் புராணத் திருமலைநாதர் என்று வழங்கப்பெற்றார் என அறிகிறோம்.

இந்நூல் அளவில் சிறிதாயினும், காப்பியத்தன்மை மிகுந்தது. பொருட்சுவையுடன் சந்தம், அணி நலன்கள் மிகக் கொண்டது. நூலெங்கும் சிவ புண்ணியப் பலன்கள் மிகவும் விரித்துச் சொல்லப் பெறுகின்றன. சிவத் துரோகங்கள், ஆலயத்தில் செய்யத்தகாத குற்றங்கள் முதலியனவும் மிகுதியாகக் கூறப்படுகின்றன. இந்நூல் எழுந்த காலத்திற்குச் சிறிது காலம் முன்பு (கி.பி. 14ஆம் நூ.) முகம்மதியர் படையெடுப்பால் சைவ சமயக் கோயில்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை மனத் திறுத்தியே, அதற்குப் பின்னர் வந்த புராண ஆசிரியர்கள் இத்தகைய பாவ புண்ணியச் செய்திகளைத் தம் நூலில் மிகுதியாகப் பாடினர் என்பது தெளிவு.

### 3. புலியூர்ப் புராணம்

இது, யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பிழை சிவானந்தையர் இயற்றியது. இதில் 17 படலங்களும் 1205 பாடல்களும் உள்ளன. வடமொழியிலுள்ள புலியூர் மான்மியம் மொழிபெயர்ப்பாக இந்நூல் அமைந்துள்ளது.

### 4. சிதம்பர சபாநாத புராணம்

திருவாவடுதுறை ஆதீனத்து வித்துவசிகாமணி சபாபதி நாவலர் அவர்கள் இயற்றிய இப்புராணத்தில் 14 படலங்களும் 898 பாடல்களும் உள்ளன. இது சிதம்பரம் பற்றிய புராணங் களுள் மிகுதியான பாடல் எண்ணிக்கையைக் கொண்டதாகும். வடமொழியிலுள்ள ஏமசபாநாத மான்மியத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும் இது.

காப்பு, கடவுள் வாழ்த்து, நாட்டுப் படலம், நகரப் படலம், நைமிசப் படலம், புராண வரலாறு, பிச்சாடனப் படலம், தேவதாருவனப் படலம், அனந்தப் படலம், புண்டரிகபுரப் படலம், வியாக்கிரபாதப் படலம், திருநடனப் படலம், ஏமவன்மப் படலம், தீர்த்த விசேடப் படலம், யாத்திரோற்சவப் படலம் ஆகிய பதின்மூன்று படலங்களிலும் சிதம்பரத்தின் சிறப்புக்களைப் பல வரலாறுகள் கொண்டு விளக்குவர்.

மேற்கூறிய இரண்டு புராணங்களும் சென்ற நூற்றாண்டில் இயற்றப் பெற்றவை. கி.பி. 14ஆம் நூற்றாண்டில் உமாபதி சிவாசாரியர் முதன்முதலில் கோயிற் புராணம் இயற்றினார். இதுவே 'கோயில்' - தலம் என்ற பெயர் கொண்டு தமிழில் எழுந்த முதல் தலபுராணமாகும், (கி.பி. 13 ஆம் நூற்றாண்டிய்

பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடற் புராணம் இயற்றினார்). பின்பு இவர் மரபில் வந்த புராணத் திருமலை நாதர் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் சிதம்பர புராணம் பாடினார். எனவே, தொடர்ந்து 500 ஆண்டுகளாக இத்தலச் சிறப்புப் பற்றிய புராண நூல்கள் சைவப் பெருமக்களிடையே பெரு வழக்குப் பெற்று வந்துள்ளன என்பதை அறிகிறோம்.

### கொட்டையூர்ப் புராணம்

கும்பகோணத்திலிருந்து திருவையாறு செல்லும் வழியில் உள்ளது கொட்டையூர். ஆமணக்குக் கொட்டைச் செடியின் கீழ் லிங்கம் வெளிப்பட்டதால் ஊர் கொட்டையூர் என்றே வழங்கப் பெற்றது. சோழ மன்னனுக்கும் ஏரண்ட முனிவருக்கும் கோடிலிங்கமாகக் காட்சி தந்தமையால் கோடீசுவரர் என்று இறைவனுக்கும், கோடீச்சுவரம் என்று கோயிலுக்கும் பெயர் வந்தது. வில்வாரண்யம், ஏரண்டபுரம் என்றும் பெயர் கூறுவர்.

மார்க்கண்டேயர், பத்திரயோகிமுனிவர் ஆகியோர் வழிபட்ட தலம், அப்பர் பாடல் பெற்றது.

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இத்தலபுராணம் பாடியுள்ளார்.

### சிவபுரிப்புராணம்

சிதம்பரத்திற்குத் தென்கிழக்கேயுள்ளது நெல்வாயில் என்னும் தலம். இறைவன் இங்குச் சம்பாநெல் விளையும் வயலில் தோன்றியதால் இத்தலம் இப்பெயர் பெற்றது. இத்தலபுராணத்தை இயற்றியவர் திரு சி. சுப்பையசாமி ஆவார்

### சாயாவனத் தலபுராணம்

சீகாழியிலிருந்து பூம்புகார் செல்லும் வழியில் உள்ளது திருச்சாய்க்காடு என்னும் தலம். சாய் - கோரை. பைஞ்சாய் என்னும் கோரை மிகுந்திருந்த தலமாதலின் சாய்க்காடு என்று பெயர் பெற்றதென்பர். காசிக்குச் சமமாகச் சொல்லப்பெறும் ஆறு தலங்களுள் இதுவும் ஒன்று. (மற்றவை திருவெண்காடு, மயிலாடுதுறை, திருவிடைமருதூர், திருவையாறு, ஸ்ரீவாஞ்சியம்). கோட்செங்கட் சோழன் கட்டிய மாடக்கோயில் பழமையானது. இயற்பகை நாயனார் தம் மனைவியை இத்தலத்தெல்லை வரை அழைத்துவந்து இறைவனுடன் வழியனுப்பி வைத்தார் என்பது வரலாறு.

உபமன்யு முனிவர், இந்திரன், ஐராவதம், இயற்பகை நாயனார் போன்றோர் வழிபட்டுப் பேறு பெற்றனர் என்பர். சம்பந்தரும் அப்பரும் பதிகம் பாடியுள்ளனர்.

இத்தலபுராணத்தைக் கவிராசநாயகம் பிள்ளையவர்கள் இயற்றியுள்ளார்கள். இதில் 10 படலங்களும் 432 பாடல்களும் உள்ளன.

**சீகாழித்தல புராணம்**

திருஞானசம்பந்தரின் திருஅவதாரத்தலம் சீகாழி, பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பைநகர், காழி, கொச்சைவயம், கழுமலம் என்னும் பன்னிரு பெயர்களையுடையது இத்தலம்.

முருகன், காளி, பிரமன், திருமால், குரு, இந்திரன், சூரியன், சந்திரன், அக்கினி, ஆதிசேடன், ராகு, கேது, வியாசர் போன்ற பலர் வழிபட்டுப் பேறுபெற்றனர் என்பர். மூவரும் பதிகம் பாடியுள்ளனர்.

சீகாழி அருணாசலக் கவிராயர் இத்தலபுராணத்தைப் பாடியுள்ளார்.

**சம்புவனப் புராணம்**

பஞ்சபூதத் தலங்களுள் அப்புத்தலமாக (நீர்த்தலமாக) விளங்குவது 'ஜம்புகேஸ்வரம்' என்னும் திருஆனைக்கா என்னும் திருத்தலம் திருச்சிக்கு அருகேயுள்ளதாகும். வெண்ணாவல் மரத்தடியில் (ஜம்பு) இறைவன் எழுந்தருளியிருப்பதால் இத்தலம் ஜம்புகேஸ்வரம் எனப்பெறும். சம்பு முனிவரே வெண்ணாவல் மரமாக வந்து பிறந்தார் என்பது வரலாறு. வெள்ளை யானையும் சிலந்தியும் வழிபட்டதாகவும் கூறுவர். யானை (ஆனை) வழிபட்டதால் ஆனைக்கா என்று பெயருண்டானதாகவும் கூறுவர்.

முற்பிறவியில் சிலந்தியாக இருந்து வழிபட்டதே பின்பு கோச்செங்கட் சோழனாகப் பிறந்து இறைவனுக்கு (யானை புகாத வண்ணம்) மாடக் கோயில்கள் எழுபதைக் கட்டியதாகக் கூறுவர்.

"இருங்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய்து உலகமாண்ட
திருக்குலத்துவளச்சோழன்" (பெரிய திருமொழி : 6-6-8)

எனத் திருமங்கையாழ்வாரும் இவ்வரலாற்றைக் குறிப்பர்.

பிரமன், சிலந்தி, யானை, அட்டவசுக்கள், அம்பிகை, பராசரர், கோச்செங்கட்சோழன் போன்றோர் வழிபட்ட இத்தலம் அப்புத்தலம் என்பதற்கேற்ப இறைவன் அடியில் எப்பொழுதும் நீர்க் கசிவினைக் காணலாம்.

"தாரமாய மாதராள் தானொர் பாக மாயினான்
ஈரமாய புன்சடை யேற்ற திங்கள் சூடினான்
ஆரமாய மார்புடை யானைக்காவி லண்ணலை
வாரமாய் வணங்குவார் வல்வினைகள் மாயுமே"

எனச் சம்பந்தரும்,

"துன்ப மின்றித் துயரின்றி என்றுநீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
என்பொன் ஈசன்இறைவன் என்றுள் குவார்க்கு
அன்பனா யிடும் ஆனைக்கா அண்ணலே"

என அப்பர் பெருமானும்,

"வலங்கொள்வார் அவர்தங்கள் வல்வினை தீர்க்கு மருந்து
கலங்கக் காலனைக் காலாற் காமனைக் கண்சிவப் பானை
அலங்கல் நீர்பொரும் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
இலங்கு சேவடி சேர்வார் எம்மையு மாளுடை யாரே"

எனச் சுந்தரரும் இத்தலத்து இறைவன் சிறப்பை எடுத்துரைப்பர்.

இத்தகைய சிறப்புடைய தலத்தைப் புகழ்ந்து திருவானைக்கா உலா எனக் காளமேகப் புலவரும், அகிலாண்ட நாயகி மாலை, பிள்ளைத்தமிழ் என மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும் இலக்கியங்களாகப் படைத்துள்ளனர். இவ்வாறு பல நூல்கள் இத்தலம் பற்றி எழுந்துள்ளன.

பதினாறாம் நூற்றாண்டில் சிறப்பு வாய்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவரான கமலை ஞானப்பிரகாசர் தந்திவனப் புராணம் என்றும், பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த கச்சியப்ப முனிவர் திருவானைக்காப் புராணம் என்றும் இரண்டு தலபுராணங்களை இயற்றியளித்துள்ளனர்.

கமலை ஞானப்பிரகாசர் இயற்றிய தந்திவனப் புராணம் 14 சருக்கங்களையும் 571 பாடல்களையும் கொண்டதாகும். பாயிரப் பகுதியில் விநாயகர், சிவபெருமான், அகிலாண்டநாயகி, ஆறுமுகக் கடவுள், நால்வர் ஆகியோருக்கு வணக்கம் கூறியபின் அவையடக்கம் அமைகின்றது.

"எந்நூலும் தெரிந்துபுகழ் சூதன்அரு மாமுனிவர்க்கு
இனிது கூறும்
முன்னூலாம் புராணத்தின் முறைமைதனைச் செந்தமிழால்
மொழித லாலே
சின்னூலும் தெளியாத என்னூலும் இவ்வனத்தில்
சிலந்தி வாயில்
புன்னூலுக்கு இனிதிரங்கிப் பொன்மகுடம் சூட்டுகின்ற
புனிதற்கு ஆமே" (6)

என்னும் அவையடக்கப் பாடலில் இத்தலத்து நிகழ்ந்த சிலந்தி வரலாற்றை உணர்த்தும் ஆசிரியர், சிலந்தி நூலை விரும்பிய சிவபெருமான் என் நூலையும் ஏற்பான் என்று கூறி நூல் என்பதற்கு இருபொருள்பட அமைத்திருப்பது நயம்மிக்கதாகும்.

**உலகநாதன்**

இந்நூலாசிரியர் திருமழுவாடிப் புராணத்தை இயற்று வதற்குக் காரணமாக இருந்த உலகநாதன் என்பவரே இந்தத் தந்திவனப் புராணத்தையும் இயற்றக் காரணமாக இருந்தார் என்பதை அடுத்துவரும் பாடலில் குறிப்பிடுவர்.

"அவனியோர் போற்றும் அந்த அருஞ்சபை தன்னில் மிக்க
தவமுனி உலக நாதன் தக்கயிப் புராணந் தன்னை
எவரும்என் தமிழ்நூ லாக இசைத்திட வேண்டும் என்ன
உவமைஇல் தமிழால் யானும் உரைத்தனன் விருத்தப்
பாவால்" (8)

'பாசம் துறந்திடும் உலகநாதன் தொலைவில்
மெய்ப்புகழே வாழி!'

என நூலின் இறுதியிலும் இவரை நினைந்து பாடுகிறார் ஞானப் பிரகாசர்.

**நூலமைப்பு**

வடமொழி பாத்ம புராணத்தை அடிப்படையாகக்கொண்டு இப்புராணத்தைத் தமிழில் இயற்றியுள்ளதாகவும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். முதலில் நைமிசாரணிய சருக்கமும் நாட்டு, நகர் வளமும் கூறியபின் தலமகிமையைக் கூறுகின்றார். செம்பு மாமுனி தவம் செய்தது. சிவபெருமானிடத்து அகிலாண்ட அம்மை ஞான உபதேசம் பெற்றது. பிரமன் திருவிழாவை நடத் தியது, இராமன் பிரமகத்தி நீங்க வழிபட்டது, இந்திரன் வீரகத்தி நீங்க வழிபட்டது, அகத்தியன் தென்திசை சென்று உலகம் நடுநிலை அடையச் செய்தது. சோழனின் மங்கை

காவிரியிலாடும்போது வீழ்ந்த ஆரத்தை இத்தல இறைவன் பூண்டது. நிருதி வேண்டப் பின்னிரக்கம் செய்தது, சிலந்தியைக் கோச்செங்கட் சோழ மன்னனாக ஆக்கி முடிசூட்டியது ஆகிய தலவரலாறுகளைத் தனித்தனிப் படலங்களில் விளக்கக் காணலாம். இத்தலத்தில் வந்து நீராடுவார் வினைதீர்க்கும் ஒன்பது தீர்த்தமகிமை பற்றி நவதீர்த்தச் சருக்கத்தில் விளக்குவர்.

## இறைவன் பெயர்கள்

இத்தல இறைவனின் பெயர்களான அமுதீசர் (195), செம்பு நாதன் (236), முன்பினும் பின்பழகன் (303), கரியமாலயன் (319), ஆரம் பூண்டவன் (435), பின்னிரக்கம் செயும் பெருமான் (512), திருச்சாலகத்தொளிரும் பெருமான் (556) ஆகியவற்றின் காரணங்கள் பற்றியும் அங்கங்கே விளக்குவர். இவ்வாறே ஞானபூமி (83), ஆனைக்கா (546) போன்ற பெயர்களுக்கான விளக்கங்களையும் இந்நூலாசிரியர் தருவர்.

## தலப்பயன்

இத்தலம் அடைந்தவர்க்குத் தானம், தருமம், வேள்விபுரிதல் ஞானம், செபம், கல்வி, நன்மை, யோகம். மோனம், தீர்த்த மாடல், முத்திசாதனை முதலியன வேண்டா. இப் பதியை அடைவதே எல்லாப் பயனும் நல்கும் என்பர்.

> "தானம்ஏன் தவம்ஏன் மிக்க தருமம்ஏன் வேள்வி தான்ஏன்
> ஞானம்ஏன் செபம்ஏன் கல்வி நன்மைஏன் யோகந் தான்ஏன்
> மோனம்ஏன் தீர்த்தந் தான்ஏன் முத்திசா தனைஏன் சுத்த
> ஞானமேன் மையினால் ஓங்கும் அப்பதி அடைந்து ளார்க்கே"
>
> (தலமகிமைச் சருக்கம் பா. 96)

இத்தல புராணத்தினிடையே பல புராண வரலாறுகளையும் இணைத்துக் கூறுகிறார். சம்பந்தர் சமணர் வரலாறு (200), சிவன் இந்திரன் வடிவில் வந்தது (287), திரிபுரம் எரித்தது (291), அமுதம் கடைந்தது (392) போன்ற பல வரலாறுகள் இவ்வாறு அமைந்துள்ளன.

## சிறந்த உவமைகள்

இந்நூல் முழுமையும் உவமையணி சிறக்கப் பரடியுள்ளதைக் காணலாம். இத்தலத்து மரமாக உள்ள வெண்ணாவல் மரத்துக்குச் சிவபெருமானே உவமை ஆகிறார்.

*முடிபகி ரண்டம் ஓங்க மூலம்பர தாளம் செல்லக்
கடிகமழ் பணைகள் சென்று கலந்தட்ட திசையும் துன்ன
அடிமுடி அயன்மால் தேட அண்ணலார் நின்றது என்ன
நெடிவெண் ணாவல்ஈன்று நிலைபெற நின்றது அன்றே.''

(ஞான உபதேசச் சருக்கம் 197)

திருமாலும் பிரமனும் தேட நின்ற சிவபெருமான் போல நாவல் மரம் நின்றது என்ற தலநாவல் பெருமை இறைவன் பெருமையுடன் ஒப்பிடப் பெறுகிறது.

இப்புராணத்தில் வரும் சிலந்தி பந்தர் இழைப்பதைச் சிவபெருமான் உலாவரும் முத்துப்பந்தருடன் ஒப்பிட்டு, தலபுராண நிகழ்ச்சியையே உவமையாக்கியுள்ளார் ஆசிரியர்.

''வனிதையோர் பாகம் தாங்கி மதியுடன் நதியும் தாங்கும்
புனிதவே ணியனைத் தாங்கிப் போந்திடு முத்தின் பந்தர்
பனிதரு துளிகள் எங்கும் பயின்றிடல் முயன்று ஊதை
இனிதுதன் வாயின் நூலால் இழைத்திடும் பந்தர் போலும்.''

(ஆதி பிரம்ம உற்சவச் சருக்கம், 290)

சிலந்தி மூடின சருக்கத்தில் சிலந்தி பந்தரிழைத்தலைக் கூறும் பாடல்களும் இங்கு ஒப்புநோக்கத்தக்கன.

''நன்னியம் பொருந்தும் அந்த நலந்தரும் சிலந்தி அன்பால்
மன்னிய சதுமு கத்தோன் வருந்திஇன்று அளவும் காணாச்
சென்னியின் மீது நாவல் செற்றைகள் உதிரா வண்ணம்
பன்னிய வாயின் நூலால் பந்தர்ஒன்று அமைத்தது அன்றே''

''நெற்றியின் வழிப யின்ற நெடுங்கனல் தோன்றி வானில்
சுற்றிய தூபம் என்னத் துலங்குமா முடிமேல் வைத்த
சிற்றிளம் திங்கள் முற்றும் திகழ்தரு கலைநி ரம்பிப்
பற்றிமீது எழுந்தது என்னப் பயின்றதுஅப் பந்தர் தானே.''

(530,531)

பிரமன் காணாச் சிவனின் முடிமீது சிலந்தி தன் வாய் நூலால் நாவற் சருகு உதிராவண்ணம் பந்தரிட்டது என்றும்; நெற்றிக்கண் நெருப்பில் தோன்றிய புகைபோல விளங்கு முடிமேல் பிறைமதி முற்றிக் கலைநிரம்பி மேலே எழுந்தது போலப் பந்தர் எழுந்தது என்றும் இவர் கூறியிருப்பது அறிந்து இன்புறத்தக்கதாகும். இத்தகைய நயங்கள் பலவற்றை இந்நூல் முழுமையும் காணலாம்.

## திருவானைக்காப் புராணம்

கச்சியப்பர் இயற்றிய திருவானைக்காப் புராணம் 23 படலங்களையும் 1555 பாடல்களையும் கொண்டது. கடவுள் வாழ்த்துப் பகுதியில் இருபது பாடல்களும் அவையடக்கமாக மூன்று பாடல்களும் அமைந்துள்ளன.

நாட்டுச் சிறப்பும் நகரச் சிறப்பும் தனித்தனியே 123 பாடல்கள் பெற்று இரண்டு படலங்களாகவும் இயற்றப்பட்டுள்ளன. நைமிசப் படலத்தையடுத்துப் புராண வரலாற்றுப் படலம் அமைந்துள்ளது. திருவானைக்காவின் தலச் சிறப்பும் தீர்த்தச் சிறப்பும் மூர்த்தியின் சிறப்பும் தனித்தனியே கூறப்பெற்றுள்ளன.

சம்புமுனி தவம் புரிந்தது, அகிலாண்ட நாயகி வழிபட்டது, பராசரன் வழிபட்டது, திருமால் வழிபட்டது, கோச்செங்கணார் வழிபட்டது, குபேரன் வழிபட்டது போன்றவையும் வெவ்வேறு படலங்களில் விளக்கப்படுகின்றன.

இக்கோயிலின் நான்காவது சுற்றில் உள்ள மதிற்சுவருக்குத் 'திருநீற்றான் மதில்' என்று பெயர். 32 அடி உயரமும் 8000 அடி நீளமும் உடைய இம்மதிற்சுவரை இறைவனே சித்தராக வந்திருந்து கட்டுவித்தார் என்றும், திருநீற்றுத் திருமதிற் படலம் என்ற பகுதியில் இப்புராண ஆசிரியர் எடுத்துரைக்கக் காணலாம்.

இத்தலத்தில் நிகழும் பூசைகளும் விழாக்களும் மற்றுமுள்ள சிறப்புக்களும் பற்றிப் பல பாடல்கள் இலக்கிய நயத்தோடு படைக்கப் பெற்றிருக்கின்றன.

## இருபுராண ஒப்பீடு

திருவானைக்காவைப் பற்றி எழுந்த முதல் தலபுராணம் தந்திவனப் புராணம். இது கமலை ஞானப்பிரகாசரால் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. இதற்குப் பின்னால் இருநூறு ஆண்டுகள் கழித்து 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கச்சியப்ப முனிவர் இத்தலத்திற்கு எழுதியதே திருவானைக்காப் புராணம். இது பலரும் அறிந்ததொரு தலபுராணமாகும். காலத்தால் முற்பட்ட தந்திவனப் புராணம் எங்கும் கிடைக்காததால் அது அழிந்தது என்றே எண்ணினர். பதினாறாம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாறு (1977) இயற்றிய திரு மு. அருணாசலம் அவர்களும் கமலை ஞானப்பிரகாசர் செய்த இப்புராணம் மறைந்தது என்றே தம் நூலில் (பக். 142)

குறிப்பிட்டனர். பின்பு அவரே, திருவான்மியூர் டாக்டர் உ. வே. சா. நூல் நிலையத்தில் இந்நூல் சுவடி வடிவில் இருப்பதையறிந்து தம்முடைய இதே நூலில் (பக். 201-204) முதன்முதலில் எடுத்துக் காட்டியுள்ளனர். இதன் பின், 1981 இல் சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இச்சுவடியைப் பெற்று அச்சில் பதிப்பித்து வெளியிட்டுள்ளது. டாக்டர் தா. வே. வீராசாமி அவர்கள் சீரிய முறையில் அந்தத் தந்திவனப் புராணச் சுவடியைப் பதிப்பித்து அளித்துள்ளார். இப்பதிப்பில் திருவானைக்காவைப் பற்றிய பல வரலாற்றுத் தகவல்களையும் இரண்டு தலபுராணங்களின் சிறப்புக்களையும் ஒப்பீடு செய்துள்ளமையும் இவண் குறிப்பிடத் தக்கதாகும். (பக். 98-111).

கமலை ஞானப்பிரகாசர் செய்த தலபுராணங்கள் இரண்டு. அவை, தந்திவனப் புராணம், திருமழபாடிப் புராணம். இவற்றுள் இவர் முதலாவதாக இயற்றியது திருவானைக்காவைப் பற்றிய தந்திவனப் புராணமே.

கச்சியப்ப முனிவர் இயற்றிய தலபுராணங்கள் ஐந்து. அவை, திருவானைக்காப் புராணம், தணிகைப் புராணம், பூவாளூர்ப் புராணம், பேரூர்ப் புராணம், காஞ்சிப்புராணம் (இரண்டாம் காண்டம்) ஆகியன. இவற்றுள் இவர் முதலாவதாக இயற்றியது திருவானைக்காவைப் பற்றியது.

திருவானைக்காப் புராண நூலின் கடவுள் வாழ்த்துப் பகுதியில் இருபது பாடல்கள் உள்ளன. தந்திவனப் புராணத்தில் காண்பதைவிட இதில் மிகுதி. நால்வர் வணக்கத்தை நான்கு தனித்தனிப் பாடல்களில் பாடுகிறார் கச்சியப்பர். நால்வர் வணக்கத்தை ஒரே பாடலில் அமைக்கிறார் ஞானப்பிரகாசர் மேலும், அறுபத்துமூவர், சேக்கிழார், நமச்சிவாய தேசிகர் ஆகியோருக்கும் திருவானைக்காப் புராணத்தில் தனித்தனியே பாடல்கள் அமைந்துள்ளன.

அவையடக்கத்தில் இரு புலவர்களும் தம் புராணத்தின் தன்மையைக் குறிக்கும்போது,

சிலந்திவாயில் புன்னூலுக்கு இனிதிரங்கிப்
பொன்மகுடம் சூட்டுகின்ற புனிதற்கு ஆமே. (தந்தி. 6)

சிலம்பி வாயின், ஆயசிறு நூற்கோயி லிடத்தும்
இனிது அமர்தலினால் ஆன்றோர் செய்யும்

பாயபெரும் புகழ்கேட்கும் அவர் செவியில்
எனதுரையும் படரும் அன்றே
(திருவானைக்காப். அவை. 2)

என்றே குறிப்பிடுவர். இவ்வாறு இவ்விரண்டு புராணங்களிலும் பல ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் காணலாம்,

**திருக்கருப்பறியலூர்த் தலபுராணம்**

வைத்தீசுவரன் கோயிலிலிருந்து திருப்பனந்தாள் செல்லும் வழியிலுள்ளது கருப்பறியலூர். கருமூலத்தை அழித்து ஞானம் நல்கும் தலமாதலின் இப்பெயர் பெற்றது. கன்மநாசபுரி என்றும் பெயருண்டு. சீகாழிக்கு மேற்கில் இருப்பதால் மேலைக் காழி என்றும், சூரியன் வழிபட்டதால் தலைஞாயிறு, ஆதித்யபுரி என்றும் பெயராயிற்று. கொகுடி முல்லை இங்குத் தலமரமா தலின் முல்லைவனம்-யூதிகாவனம் என்று பெயர் பெற்றது. ஊர்-கருப்பறியலூர். கோயில்-கொகுடிக்கோயில்.

வசிட்டர், ஆஞ்சநேயர், இந்திரன் ஆகியோர் வழிபட்ட தலம். சம்பந்தர், சுந்தரர் பதிகம் பாடியுள்ளனர்.

மருதூர் அம்பலவாணப் புலவர் இத்தலபுராணம் பாடியுள்ளார்.

**திருக்கழிப்பாலைப் புராணம் (இந்திரகீலபுரம்)**

திருக்கழிப்பாலை (காரைமேடு) என்பது திருநெல்வாயில் (சிவபுரி) என்னும் தலத்துக்கு அருகிலுள்ளது. இக்கோயில் கொள்ளிட ஆற்றங்கரையில் இருந்ததாகவும், வெள்ளம் வந்து அழிந்துவிடவே மக்கள் சிவபுரிக்கு அருகில் சிறிய அளவில் இக் கோயிலைக் கட்டியதாகவும் கூறுவர். வால்மீகி முனிவர் வழிபட்ட தலம். மூவர் பாடல் பெற்றது.

சிவப்பிரகாச பண்டிதர் இயற்றிய இத்தலபுராணத்தில் 9 படலங்களும் 276 பாடல்களும் உள்ளன.

**திருக்குறுக்கைப் புராணம்**

மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தலம் குறுக்கை. அட்ட விரட்டானங்களுள் மன்மதனை எரித்த தலம். தீர்த்தவாகு என்னும் ஒரு முனிவர் சிவபெருமானுள்ள தலங்கள்தோறும் சென்று அவ்வத் தலத்திலுள்ள இறைவனுக்கு ஆகாய கங்கை நீரைக் கொண்டே திருமஞ்சனம் செய்யும் இயல்புடையவர்.

அவர் இத்தலத்தையடைந்து அவ்வாறே பூசிக்க விரும்பித் தம் நீண்ட கைகளை உயரத் தூக்க அவை குறுகின. அக்காரணத்தால் இத்தலத்தின் பெயர் குறுக்கை என்றே வழங்கலாயிற்று. யோகீசபுரம், காமதகனபுரம், கம்பகரபுரம் என்பன இதன் வேறு பெயர்கள்.

இலக்குமி, திருமால், பிரமன், முருகன், ரதி ஆகியோர் வழிபட்ட தலம். அப்பர் பாடல் பெற்றது. தலமரம் கடுக்கா ஆனதால் அரிதகிவனம் என்று பெயர் பெற்றது.

இத்தலபுராணம் இயற்றியவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள். இதில் 21 படலங்களும் 736 பாடல்களும் உள்ளன.

அவையடக்கங் கூறுகையில். மொழி முதலாகாத ஙகரம் அகரவுயிரொடு கூடிச் சுட்டு முதலிய எழுத்துக்களின் பின்னே வருதல்போலத் தம் பாட்டும் இத்தல யோகீசருடைய கதையைச் சார்தலால் சிறப்புப் பெறுமென்பதை அமைத்து,

"மொழிமுதலா காதஙக ரமுமகரஞ்
சார்ந்துமுத லாய்ச்சுட் டாதி
வழிவரல் போல் மொழிமுதலா காதவென்பா
டலுங்குறுக்கை வளர்மா தேவன்
பழிதபுகா தையைச் சார்ந்து முதலாய்ச்சுட்
டாதிவழி படரு மாலீ
தழிவிலிய லுணர்ச்சியரோர் குவரதனால்
யானவர்க்கொன் றறைவ தில்லை"

என்று பாடியுள்ளார் ஆசிரியர்.

**காவிரி**

மேகம் மாதமும் மாரி பெய்ய அந்த நீர் காவிரியைச் சார்ந்து ஓடிக் கடலில் விழுந்து அதை நிரப்புதலால் கடல் முந்நீரென்று பெயர் பெற்றது போலும் என்னும் கருத்து அமைய,

"மழைவரை முகட்டி வேறி மாதமும் மாரி பெய்யத்
தழைதரு புனல்கா வேரி சார்ந்தொருங் கோடி விரை
விழைதர நிறைத லாலவ் விரைக்கு முந்நீ ரென்று
பழையநூ லுணர்ந்தோர் கூறும் பரிசிஃ துணர்ந்து போலும்".
(நாட்டுப். 17)

உழவர்கள் காவிரியில் புதுவெள்ளத்தைக் கண்டு மகிழ்ந்த தற்கு, அப்பூதி நாயனார் திருநாவுக்கரசு நாயனாரைக் கண்டு மகிழ்ந்ததையும், மாணிக்கவாசகர் குருந்த மரத்திலெழுந்தருளிய சிவபெருமானைக் கண்டு மகிழ்வுற்றதையும் பின்வரும் பாடலில் உவமையாகக் கூறுவர்.

"ஆன்றவப் பூதி நாயனார் நாவுக்
கரையரைக் கண்டது போலும்
கான்றசோ றென்றே யிருமையுங் கண்டு
கழிக்குநா லாவது சத்தி
ஊன்றநேர் வாத வூரர்கோன் குருந்தி
லொருவனைக் கண்டது போலும்
ஈன்றதா யனைய காவிரி நறுநீ
ரெதிருறக் கண்டனர் களமர்". (நாட்டுப், 46)

சிவாலயங்களின் திருமதில் முதலியவற்றில் ஆல், அரசு முதலியன தோன்றி அவற்றை அழிவடையும்படி செய்வது இவருடைய மனத்தைத் துன்புறுத்தியதை இந்நாட்டுப் படலத்தின் 55, 56ஆம் பாடல்களில் விளக்குவர்.

**அரிதசி**

"எம் வினையை அரி; தசி" என்று எண்ணி அரிதசி வனமாகிய இத்தலத்தை அடைபவர் பெரியர்; போகத்தை விரும்பி அடைபவர் சிறியர். தன் உடலைச் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணுக்கு விருந்தாக்க எண்ணி இத்தலத்தை அடைந்த மன்மதனைப் பெரியன் என்பேனோ? சிறியன் என்பேனோ? என்னும் கருத்தை இவர் அமைத்துப் பாடியது பின்வரும் பாடல்.

"அரிதசி வனத்தி லையவெம் வினையை
அரிதசி யென்றுவந் தடைவார்
பெரியவர் சிறியர் போகமே வேட்டுப்
பெரிதுவந் தடைவர்தன் மேனி
எரியபல் விருந்து செய்திட வுள்ளத்
தெண்ணிவந் தடைந்தனை னென்றால்
தெரிவரு மதனைப் பெரியவ னென்கோ
சிறியனென் கோவெது புகல்வேன்".
(காமதகனப் படலம் 9)

குறிஞ்சி முதலிய திணைகளை வருணிக்கும்பொழுது அவ்வத் திணையிலுள்ள தலங்களை யெடுத்துப் பாராட்டுவர். அவ்வகையில் ஈங்கோய்மலை, வாட்போக்கி, திரிசிராமலை, கற்குடிமாமலை, எறும்பியூர் என்னும் குறிஞ்சி நிலத் தலங்களும், நெடுங்களம், நியமம், மேலைத் திருக்காட்டுப்பள்ளி, கங்கை கொண்ட சோழேச்சுரம் முதலிய முல்லை நிலத்திலுள்ள தலங்களும் எடுத்துப் பாராட்டப்படுகின்றன. தீர்த்தவாகு வென்னும் முனிவர் தலயாத்திரை செய்ததை வருணிக்கும் பகுதியில் சிவத் தலங்கள் பலவற்றைக் குறிப்பால் தெரிவிக்கக் காணலாம்.

## திருநல்லூர்ப் பெருமணம் என்னும் ஆச்சாள்புரத் தலபுராணம்

சோழ நாட்டின் வடகரையிலுள்ள இத்தலம், சிதம்பரம்—சீர்காழிப் பாதையில் கொள்ளிடம் அருகே உள்ளது. ஞானசம்பந்தர் திருமணக் கோலத்துடன் சோதியுள் கலந்த தலம் இதுவேயாகும். இக்காரணம் பற்றி இதற்கு முத்தித் தலம் என்றும் பெயர். ஊரின் பெயர் நல்லூர். கோயிலின் பெயர் பெருமணம்.

பிரமன், முருகன், பிருகு, வசிட்டர். அத்திரி, வியாசர், மிருகண்டு, அகத்தியர், ஜமதக்னி போன்றோர் இங்கு வழிபட்டதாக வரலாறு கூறுவர். காகபுகண்டரிசி ஐக்கியமான திருத்தலம் என்பர்.

இத்தலபுராணத்தை இயற்றியவர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் ஆவார். இந்நூலில் 10 படலங்களும் 533 பாடல்களும் உள்ளன.

## திருநீர்த்தல புராணம்

மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள நீடூர். ஊழிக் காலத்தும் இத்தலம் அழியாது நீடித்திருக்குமாதலின் இது நீடூர் என்று பெயர் பெற்றதென்பர். தலமரம் மகிழம் ஆதலின் மகிழவனம் வகுளாரண்யம் எனவும் பெயர்.

இந்திரன், சூரியன், சந்திரன், காளி, நண்டு ஆகியோர் வழிபட்ட தலம். முனையடுவார் நாயனார் தொண்டு செய்து முத்தி பெற்ற தலம். இந்திரன் காவிரி மணலைப் பிடித்து வைத்துப் பூசித்த லிங்கம். இதுவே இறுகி வெள்ளையாக மாறியது. பின்னால் நண்டு பூசித்ததும் அதன் கால்சுவடு இலிங்கத்தில் பதிந்தது. வழிபட்ட இந்திரனுக்கு இறைவி அருள்புரிந்ததாக வரலாறு.

வடமலை நாரணக் குடை மன்னர் இத்தலபுராணத்தை இயற்றியுள்ளார். இதில் 14 படலங்களும் 400 பாடல்களும் உள்ளன.

**திருப்பழுவூர்த்தல புராணம் (யோகவன மான்மியம்)**

திருச்சியிலிருந்து அரியலூர் செல்லும் வழியில் உள்ளது பழுவூர். இவ்வூர் மேலப்பழுவூர், கீழைப் பழுவூர் என்று இரு பிரிவாகவுள்ளது. இத்தலம் கீழைப் பழுவூர் ஆகும். பழு—ஆல். ஆல் தலமரமாதலின் பழுவூர் என்று பெயர் பெற்றது. அம்பிகை தவம் செய்ததால் யோகவனம் எனப்படுகிறது.

பரசுராமர் தன் தாயைக் கொன்ற பழிதீரும் பொருட்டு வழிபட்ட தலம். பிரமன், திருமால், இந்திரன், அகத்தியர், சந்திரன், வசிட்டர், காசிபர், வியாசர் ஆகியோரும் வழிபட்ட பெருமையுடையது.

கவித்தலம் வேலையர் இத்தலபுராணம் பாடியுள்ளார்.

**திருப்பனந்தாள் தலபுராணம்**

மயிலாடுதுறைக்கு அருகிலுள்ளது திருப்பனந்தாள் என்னும் தலம். பனைமரம் தலமரமாதலின் இப்பெயர் பெற்றது. பனையின் தாளில் இறைவன் எழுந்தருளியிருத்தலால் பனந்தாள் எனப்பட்டது. தாலவனம் (தாலம்—பனை) என்றும் பெயர். தாடகை பூசித்தமையால் தாடகையீசுவரம்—தாடகேச்சுவரம் என்றும் பெயர்.

தாடகை என்னும் பெண் மகப்பேறு வேண்டி இத்தலத்துப் பெருமானை வேண்ட, ஒருநாள் இறைவனுக்கு மாலை சாத்தும் போது, ஆடை நெகிழ, அதனை இரு முழங்கைகளாலும் பற்றிக் கொண்டு, மாலை சாத்த முடியாமல் வருந்த, அவளுக்கு இரங்கிப் பெருமான் திருமுடியைச் சாய்த்து மாலையை ஏற்று அருளினார். அன்றுமுதல் சாய்வாக இருந்ததைப் பின்னால் குங்கிலியக்கலய நாயனார் மாற்றினார் என்பது வரலாறு,

பிரமன், திருமால், இந்திரன், இராவதம், அகத்தியர், சூரியன், சந்திரன், ஆதிசேடன், நாககன்னிகை, தாடகை, குங்கிலியக்கலய நாயனார் ஆகியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.

இத்தலத்திற்கு இரண்டு புராணங்கள் இயற்றப் பெற்றுள்ளன. செஞ்சடை வேதிய தேசிகர் இயற்றிய தலபுராணத்

தில் 19 படலங்களும் 599 பாடல்களும் உள்ளன. பூவைபிர தட்சிணாதன் இயற்றிய தலபுராணத்தில் 15 படலங்களும் 609 பாடல்களும் உள்ளன.

**திருப்பாச்சிலாச்சிராமப் புராணம்**

திருச்சியிலிருந்து சேலம் செல்லும் வழியில் உள்ளது. பாச்சில் கூற்றத்து ஆச்சிராமம் ஆதலின் பாச்சிலாச்சிராமம் என்று பெயர் பெற்றது. திருவாசிராமம் என்பது மருவி இன்று திருவாசி என வழங்குகிறது.

பிரமன், இலக்குமி, உமாதேவி வழிபட்ட தலம். சுந்தரர் பொன் பெற்ற தலம். கொல்லி மழவனின் புதல்விக்கு நேர்ந்த 'முயலகன்' நோயைச் சம்பந்தர் தீர்த்த தலமும் இதுவே. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

மெய்ஞான மாமுனிவர் இயற்றிய இத்தலபுராணத்தில் 8 படலங்களும் 505 பாடல்களும் உள்ளன.

**திருப்புறம்பயம் தலபுராணம்**

கும்பகோணத்துக்கு வடமேற்கிலுள்ளது திருப்புறம்பயம். பிரளய வெள்ளம் வந்தபோது புறம்பாய் இருந்ததால் 'புறம்பயம்' என்ற பெயர் பெற்றது (புறம்பு அயம். அயம்—நீர்.) கல்யாண மாநகர், புன்னாகவனம் என்பன வேறு பெயர்கள்.

ஒரு வணிக குலத்துக் கன்னிப்பெண் தனக்கென்று உறுதி செய்யப் பெற்றிருந்த கணவனுடன் திருமணமாகுமுன் இத்தலத்திற்கு வந்தாள். அப்பொழுது கணவன் பாம்பு கடித்து இறந்தமையால் அவள் வருந்தியழுதாள். அங்கு வந்திருந்த சம்பந்தர் பதிகம் பாடி அவனை எழுப்பினார். பின்பு திருமணஞ் செய்வித்தார். இறைவன் சான்றாக நின்றதால் சாட்சிநாதர் என்று பெயர் பெற்றார். இங்குள்ள விநாயகருக்குப் 'பிரளயங் காத்த விநாயகர்' என்றே பெயர்.

அகத்தியர், புலத்தியர், சனகர், விசுவாமித்திரர் முதலியோர் வழிபட்ட தலம். மூவர் பாடல் பெற்றது.

இத்தலபுராணமும் உலாநூலும் உள்ளனவாகத் தெரிந்தாலும் கிடைக்கவில்லை.

**திருப்புன்கூர்ப் புராணம்**

வைத்தீசுவரன் கோயிலிலிருந்து திருப்பனந்தாள் செல்லும் வழியில் உள்ளது திருப்புன்கூர். புங்கமரம் காரணமாக இப்பெயர்

பெற்றது. புங்கு ஊர் புங்கூர், புன்கூர் ஆயிற்று. வடமொழியில் கஞ்சாரண்யம் என்றே இதற்குப் பெயர்.

பிரமன், இந்திரன், அகத்தியர், சந்திரன், சூரியன், இராசேந்திர சோழன், அக்கினி, பதஞ்சலி, வியாக்கிரபாதர், சப்த கன்னியர் போன்றோர் வழிபட்ட தலம். நந்தனார் வணங்குவதற்காக இறைவன் நந்தியைச் சற்று விலகியிருக்குமாறு அருள் செய்த தலம். ஏயர்கோன் கலிக்காமர், சுந்தரருடன் வந்து தரிசித்த தலம். சுந்தரர்பால் கோபங்கொண்ட விறன்மிண்ட நாயனார் இத்தலத்திற்கு வந்து தங்கியிருந்து வழி பட்ட சிறப்புடைய தலம். இங்குள்ள குளம் விநாயகருடைய துணையால் நந்தனார் வெட்டியதாகும். மூவர் பாடல் பெற்ற தலம்.

இத்தல வரலாறுகளைக் கூறும் இத்தலபுராணத்தை இயற்றியவர் கனகசபைக் கவிராயர் ஆவார். இதில் 23 படலங் களில் இவ்வரலாறுகள் விளக்கப் பெற்றுள்ளன.

**திருப்பைஞ்ஞீலி புராணம்**

சோழநாட்டில் காவிரியின் வடகரையிலுள்ள தலம் திருப்பைஞ்ஞீலி. திருச்சியிலிருந்து மண்ணச்சநல்லூர் வழியாக இத்தலத்தையடையலாம். ஞீலி என்பது ஒருவகை வாழை. தனி இனம். இது வேறிடத்தில் பயிராவதில்லை. இக் கோயிலில் உள்ள இவ்வாழையை இறைவருக்கே பயன்படுத்துகின்றனர்.

ஞீலிவனம், கதலிவனம்; அரம்பைவனம், விமலாரண்யம், தரளகிரி, சுவேதகிரி, வியாக்ரபுரி, மேலைச் சிதம்பரம் முதலியன இத்தலத்திற்குரிய வேறு பெயர்கள். உமாதேவி வழிபட்ட தலம் இது.

அந்தணர் வடிவில் இறைவன் வந்து அப்பர் பெருமானுக்குப் பொதி சோறளித்துப் பசியைப் போக்கிய தலமும் இதுவே. மூவர் பாடலும் பெற்றது.

மதுரை மெய்ப்பாத புராணிகர் இத்தலபுராணத்தைப் பாடி யுள்ளார். இதில் 25 அத்தியாயங்களும் 850 பாடல்களும் உள்ளன.

பாயிரப் பகுதியில், தல விநாயகர், சிவபெருமான், சபாபதி, பரமசிவம், சக்ரத்தியாகேசுவரர் விசாலாட்சியம்மையார், விநாயகர், சுப்பிரமணியர், வீரபத்திரர், கால பைரவர், நால்வர்,

நந்திதேவர், சிவனடியார் ஆகியோருக்கு 23 பாடல்களில் துதிகள் கூறுகிறார்.

புராண வரலாறு கூறுமிடத்து, இந்நூல் வடமொழி மூலத்தைக் குறிப்பிடுவர். வடமொழிச் சிவபுராணம் பத்தில், ஸ்காந்த புராணத்தில் அறுபத்துநாலாம் சங்கிதையான சங்கர சங்கிதையில் முப்பத்தாறாகத் தேர்ந்த காண்டங்களுண்டு. அவற்றுள் மந்திர ரகசிய காண்டத்தில் இருபத்தாறாயிரம் வாசகமாக இத்திருப்பைஞ்ஞீலி மகிமை சொல்லப்படுகிறது என்பர். (பா. 8)

முதலாவது அகத்தியர் கும்பகோணம் அடைந்த வரலாறு கூறுகிறார். இதில் கும்பகோணத்தின் சிறப்பு, காவிரியின் சிறப்பு, சந்திரபீட சோழனின் சிவத்தல வழிபாடு, அகத்தியரிடம் இத்தல வரலாறு கேட்டல் ஆகியன விளக்கப் பெறுகின்றன.

### கும்பகோணத் தலச் சிறப்பு

கிழக்கே ஈழமென்று சொல்லப்பட்ட நாடு எழுபது. மேற்கே மலையாளமென்று சொல்லப்பட்ட நாடு பதினெட்டு. ஆக இவைகளிலுள்ள நால்வகை சாதியாரும் வந்து தனது பாதங்களை வணங்க வீற்றிருக்கும் சோழ மண்டலத்திலே எழுபத்தேழு தலங்களின் எல்லைக்குள்ளாக ஆழ்ந்திருக்கின்ற அகன்ற பரப்புடையது கும்பகோணத் தலம்.

> "ஈழ மென்ப தெழுபது மேன்மலை
> யாள மீரொன்ப தும்வந்த டிதொழ
> வாழுஞ் சோழ மகிதல மேழுபத்
> தேழுஞ் சூழ்ந்ததவ் வெல்லைவி சாலமே". (2)

இத்தகைய அகன்று விரிந்த தலத்தை அழகிய உவமையாலும் விளக்குவர்.

> "அடுத்த மாதல முத்தகன் பொன்னிநூன்
> மடுத்த பார்மகள் மார்பின்முத் தாரமுந்
> துடர்க்கொத் தாரமுந் தொல்குடந் தாபுரி
> நடுப்ப தித்தநன் னாயகம் போலுமால்". (2)

காவேரியை அடுத்தாற்போல் இரண்டு பக்கத்திலுமிருக்கின்ற தலங்களெல்லாம் முத்துக்களாகவும் அந்த முத்திலே கோத்திருக்கின்ற நூலே காவேரியாகவும் அவ்வாறு கோத்துள்ள மாலையைப் பூமிதேவி தன் மார்பிலே தரித்தது போலும்

விளங்கியது சோழ மண்டலம். இதற்கு நடுவிலே கும்பகோண மானது பக்கத்திலே சூழ்ந்த எழுபத்தேழு தலங்களையும் தீபஒளி போன்ற சிவந்த மாலையாகக் கொண்டிருக்கிறது. இது, பூமிதேவி தனது மார்பிலேயணிந்த முத்துமாலைக்குச் சுற்றிலும் முத்துக்களைப் பதித்து நடுவிலே ஜீவரத்தினம் பதித்தாற்போலும் இருக்கிறது என்று ஆசிரியர் கூறும் உவமை மிக்க நயம் பொருந் தியதாகும்.

**காவிரியின் சிறப்பு**

காவிரியின் வளத்தைக் கூறவந்த ஆசிரியர் காவிரி பாயுமிடங் களிலெல்லாம் காணும் பயிர்ச்செழிப்பையும் சோலைகளின் சிறப்பையும் எடுத்துரைக்கின்றார்.

கருத்த மேகம் போன்ற யானைகளின் தந்தங்களும் மலை மூங்கில், சந்தனம், வாழை, கரும்பு இவற்றுடன் முத்துக்கள் பல வற்றோடுங்கூடி, பூமிக்கு மாலைபோல் மேற்கே சேரமன்னன் சீமையிலிருந்து ஓடிவருகின்ற காவிரியானது, சேரமன்னன் சோழ மன்னனுக்குப் பயந்து திறை கொடுத்தனுப்பியது போல இருக்கிறது என்பர்.

"காரு லாவு கரிமருப் புந்திரள்
ஆர முங்குளி ராரமுந் தூயகார்ப்
பூர முங்கொடு போந்தவிக் காவிரி
சேர னாடு திறைகொண்ட தொக்குமே". (3)

எனக் காவிரி வரும் வேகத்தையும் வளத்தையும் கூறுவர்.

**குன்றுகளும் கும்பகோணமும்**

கும்பகோணத்தைச் சுற்றிலும் குன்றுகள் கிடையாது. இதைக் கூறவந்த ஆசிரியர் மிக நயம்பட உரைப்பர்.

"கொன்றை யார்கும்ப கோணத்தை வெற்புகள்
துன்றி டாததி தூரத்தில் நிற்பன
வென்று மத்தலத் தெய்தினர் பாவம்பின்
நின்று குன்றில் நிலைத்திடல் மானுமே". (7)

கொன்றை மாலை தரித்த சிவபெருமான் எழுந்தருளியுள்ள கும்பகோணத்தை அணுகிடாமல் தூரத்தில் தானே நிலையா யிருந்தன. இது, என்றைக்கும் அந்தத் தலத்துக்குச் சென்றவரது பாவங்கள் அத்தலத்துள் நுழையாமல் பின்னாலே குன்றுகளாக

நின்று ஒருகாலமும் அவர்களையும் பின்பற்றாதபடி அப்பாலே விலகி நிலைத்த மதில்கள் போல விளங்கின என்பர்.

**மன்னனின் சிவத்தல விழைவு**

சந்திரபீட சோழனுடைய சிவபக்தியையும் ஈடுபாட்டையும் கூறவந்த ஆசிரியர், அம்மன்னன் சிவத்தலங்களின் வரலாறுகளை அறிவதில் கொண்ட விருப்பத்தையும் எடுத்துரைப்பர்.

"கருணைத்தீ வனமெனமா விலத்திலுயிர்
தழைத்தோங்கக் காக்கு நாளிற்
பருவக்கா முகர்தமது மயல்போல்நல்
குரவுற்றோர் பசியே போலத்
திருவுற்ற சிவதலத்தின் பெருமைகளுந்
தலங்கள்கண்டு தெரிசித் தேத்தி
அருள்பெற்றோர் பெருமையுங்கேட் டறிவதுவே
கடைப்பிடித்தா னரசர் கோமான்". (17)

ஆண்மகன் பருவ காலத்திலே மகளிர் மீது மையல் பூண்பது போலவும், வறியவர் பசிமிகுதியினாலே அன்னம் தேடுவது போலவும், சிறப்புப் பொருந்திய சிவத்தலங்களுடைய வரலாறுகளை எந்நேரமும் மனத்தில் எண்ணியேஇருந்து, எல்லோரிடமும் தலவரலாறுகளைக் கேட்டறிவதிலேயே நாட்டமாயிருந்தான் அம் மன்னன் என அவன் விழைவுக்குத் தக்க உவமைகூறி விளக்கியிருப்பது சிறப்பானதாகும்.

இவ்வாறு விழையும் அவன் இத்தல வரலாற்றினையும் அறிவதாகக் கூறுவர். இத்தலத்தில், துர்க்கை, தேவேந்திரன், காமதேனு, ஆதிசேடன், இராமர், நரசிங்கர், கலியுகராம பாண்டியன், முசுகுந்த சோழன், வாயு வியாக்கிரசூரன், அருச்சுனன் ஆகியோர் பூசை செய்து பேறுபெற்ற வரலாறுகள் தனித்தனியே விளக்கப் பெறுகின்றன.

இந்நூலில் 12வது அத்தியாயம் இல்லை. வடமொழியில் இது அக்கினி பூசை மகிமையுரைத்ததாக உள்ளது. இதைத் தமிழில் மொழிபெயர்த்ததாகத் தெரியவில்லை என்று இந்நூல் பதிப்பாசிரியர் அடிக்குறிப்பில் சுட்டியுள்ளார்.

இத்தலத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்பெறும் அப்பருக்கு இறைவன் கட்டமுதளித்த மகிமை இறுதியிலுள்ள படலமாக அமைக்கப் பெற்றுள்ளது, இதில் இருபத்தைந்து பாடல்களில் இவ்வரலாற்றை விளக்குகிறார் ஆசிரியர்.

**திருமழுவாடிப்புராணம்**

திருமழுவாடி என்பது காவிரி நதியின் பிரிவாகிய கொள்ளிட நதியின் மேல் கரையிலுள்ள தேவாரம் பெற்றதோர் புண்ணிய திருத்தலம். இத்தலம் தமது திருநடனங் காண விரும்பி அருந் தவம் புரிந்த மார்க்கண்டேயர் பொருட்டுச் சிவபெருமான் தமது திருக்கரத்தில் மழுவைத் தாங்கித் திருநடனஞ் செய்யப் பெற்றமையின் இப்பெயர் பெற்றது. தாலவனம் எனவும் பெயர் பெறும். மழபாடி யென்பதே பெருவழக்கு.

முற்காலத்தில் மழவர் என்னும் பிரிவினர் ஆண்டுவந்த பகுதி யாதலால் மழவர்பாடி என்று பெயராகி அது பின்பு மழபாடி ஆயிற்று என்பர். பாடி—படைகள் தங்குமிடம். கொல்லிமழவன் என்பவன் இப்பகுதியை ஆண்டு வந்தபோது அவனுடைய படைகள்—மழவர் சேனை தங்கியிருந்த இடமாதலின் மழவர் பாடி என்றாகிப் பின்பு மழபாடி ஆயிற்று என்பர்.

புருடாமிருகர், மார்க்கண்டேயர், திருமால், இந்திரன், முருகர், இலக்குமி, துர்க்கை, காளி, சூரியன், சந்திரன், அக்கினி, அசுவினிதேவர், தேவர்கள், அகத்தியர், பராசரர், வசிட்டர், பீமன், காவேரி முதலானோர் இத்தலத்தில் வழிபட்டுப் பேறு பெற்றனர். நந்திதேவர் திருமணம் செய்து கொண்ட சிறப்புடைய தலம்.

இத்தகைய பழமை வாய்ந்த இந்தத் தலத்தின் புராணத்தை வட மொழியினின்றும் மொழிபெயர்த்து இனிய தமிழ்ச் செய்யுள் நடையில் கமலை ஞானப் பிரகாச தேசிகர் இயற்றி யுள்ளார்.

**இறைவன் பெயர்**

திருமழபாடி ஆலயத்திலுள்ள இறைவன் திருநாமங்கள்: வைத்தியநாதர், மழுவாடீசுவரர், வைரத்தூண், நாதர், வச்சிரதம்பேசுவரர் என்பதாகும். சந்திரனின் களங்கத்தைப் போக்கியதால் வைத்தியநாதர் என்றும்; பிரமனின் சத்திய லோகத்திலிருந்து புருடாமிருகம் சிவலிங்கத்தை எடுத்து வந்து இங்குப் பிரதிட்டை செய்து வழிபட்டது. அதை அறிந்த பிரமன் வந்து அச்சிவலிங்கத்தை மீண்டும் எடுக்க முயன்றபோது முடியாமற் போகவே "இது வைரத்தூணோ" என்று சொல்லிப் புகழ்ந்ததால் வைரத்தூண் நாதர், வச்சிரதம்பேசுவரர் என்றும் இறைவனுக்குப் பெயர்கள் வந்தன என்பர்.

வயிரத்திரள் என்று அப்பரும் சம்பந்தரும் இவ்வூர் இறைவனை அழைப்பர். 'தயாமூல தன்மவழி எனக்கு நல்கி மனத்திருத்தும் மழபாடி வயிரத் தூணே' (6649) என்பது அப்பர் திருத்தாண்டகம்.

சுந்தரர் கனவில் இறைவன் "மழ பாடி வர மறந்தனையோ" என்று உணர்த்திட, அவர் சென்று வழிபட்டபோது 'மழபாடியுள் மாணிக்கம்' என்ற பாட்டைப் பாடினார்.

"பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே".

என மனமுருகிப் பாடுவார் சுந்தரர்.

மூவர் தேவாரத்தில் குறிப்பிட்டவாறே இத்தல இறைவனை 'வயிரத்தூணர்' எனப் போற்றி இப்புராணத்தைத் தொடங்குகிறார் இந்நூலாசிரியர் கமலை ஞானப்பிரகாசர்.

"மாசிலா வயிரத் தூணர் மழுவையம் புராணந் தன்னை
ஆசில்செந் தமிழி னாலே அணிபெற வகுத்த மைத்தான்
பேசரும் புகழ்சேர்ஞானப் பிரகாசன், கமலை வாழும்
தேசிகன் அறிஞர் போற்றும் செங்க மலப்பொற் பாதன்". (36)

என்னும் இப்பாடலில் ஆசிரியர் பெயரும் குறிப்பிடக் காணலாம்.

## நூலமைப்பு

இத்தலபுராணத்தில் 8 சருக்கங்களும் 571 பாடல்களும் உள்ளன, பாயிரப் பகுதியில் நூற்பாடல்கள் 610 என்று கூறப் பட்டுள்ளது. 'விருத்தத் தொகை அறுநூற் றொருபதாக மருளாத செந்தமிழின் செய்யுளாக மாமழுவைப் புராணத்தை வகுத்துரைத்தான்' என்பது பாயிரம் (34); எனினும் அச்சிலுள்ளவை 571 பாடல்களேயாம்.

இந்நூலாசிரியர் மாசி விழாவைக் கண்டு துதித்தபோது அங்கிருந்த உலகநாதர் என்பவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க இப் புராணம் பாடினார் என்றும் கூறுவர்.

"அத்தலக் குழுவி னுள்ளும் அறிவினால் மிக்க
வித்தகன் உலக நாதன் விரிந்தநல் தமிழினாலே

இத்தல புராணந்தன்னை இயம்புதல் வேண்டும் என்னா
உத்தமம் எனமுன் நூல்கண் டுரைத்தனன் விருத்தப்
பாவால்". (33)

பாயிரப் பகுதியில் கடவுள் வாழ்த்தும், நூல் வரலாறும், நாட்டு வளமும் சொல்லப்படுகின்றன. நால்வரையும் சூதபுராணி கரையும் துதிக்கும் பாடல்களில் சிலேடை நயங்கள் ததும்பக் காணலாம்.

"மனத்திடைச் சிவனேயன்றி மற்றொன்றை நினையார்;
ஆவின்
தனத்தினை யன்றி மாதர் தனந்தொட லறியார்; பாசஞ்
சினத்தலே யன்றி யார்க்குஞ் சினஞ்செயக் கருதார்; தக்கோர்
இனத்தினை யன்றிச் சுற்றம் இனமெனை வியந்திடாதார்"

என இவ்வாறு தொடை நயமோடு அமைந்த பாடல்கள் இப் பகுதியில் மிளிரக் காணலாம்.

தலச்சருக்கம் என்பது நகரப்படலம் ஒத்தது. ஒருபாடலில், திருவம்பலம், காளத்தி, குடந்தை, காசி இந்நான்கும் அறம், பொருள், இன்பம், வீடு அடைவினில் உதவும். ஆனால் இம் மழுவையானது இந்நான்கையுமே தரும் என்று கூறப்பெறும்.

## திருப்பணி

இப்புராணம் பாடிய காலத்தில் இந்த ஆலயத்தில் திருப்பணி நடந்து கொண்டிருந்தது என்று தெரிகின்றது. திருப்பணிக்கு ஒரு செங்கல் கொடுப்பவர், சூளையில் கல் வேக மரம் கொடுப்ப வர், மரம் இழுத்த வண்டிமாடு, கூலிக்குப் பணிபுரிந்தவர் ஆகிய அனைவருமே நற்கதி பெறுவர் என ஆசிரியர் கூறுவது குறிப்பிடத் தக்கது.

"உறுதியாச் சிவால யத்திற்கொரு செங்க லடுக்கு தற்குச்
சிறிதுதந் திடுவோர் தாமும் சிவலோகத் தடைவ ரென்றால்
பெறுதிருப் பணித னக்குப் பெரும்பொரு ளுதவும் பேற்றை
அறுதியிட் டிவள வென்றே அறைவதற் கெளிமை யன்றே".

"தட்டிலா திப்பதி தனில்தி ருப்பணிக்
கிட்டிகை வேகுதற் கிடுவ தாகவே
வெட்டிய தருக்களும் மிக்க வண்டியிற்
கட்டிய கிடாக்களும் கதிபொ ருந்துமே."

"இரும்புகழ் மழுவை வாழும் எம்பிரான் திருப்ப ணிச்குப்
பெரும்பொருள் மிளகு நல்கப் பெற்றில மென்பார் முற்றுந்
தரும்பல சரீர வாக்குச் சகாயங்கள் புரிவோர் கூலிக்
கரும்பணி முயல்வோர் தாமும் கயிலையில் அமர்ந்து
வாழ்வார்".

என வரும் பாடல்கள் இதைத் தெரிவிக்கின்றன.

வைத்திய நாதச் சருக்கத்தில் நாட்டுச் சிறப்பு மிகுதியாகக் கூறப்பெறும், இத்தல இறைவனுக்கு வைத்தியநாதர் என்பது பெயர். 'மழபாடி மருந்து' என்றே சம்பந்தரும் அழைப்பர். இங்கு, வயிரத்தூணராகிய இத்தலஇறைவர் வைத்தியநாதராகித் தக்கன் சாபத்தால் சந்திரனுக்கு வந்த நோயைத் தீர்த்தார் என்ற வரலாற்றைக் கூறுவர்.

தேவாதி சருக்கம் என்பது திருமாலின் மார்பில் என்றும் எழுந்தருளியிருக்கும் வரமும் திருமாலுக்குப் பாகமும் கொடுத்தமையைக் கூறுவது. வசிட்டச் சருக்கத்தில் வசிட்டர் பூசித்ததும் பிறவும் கூறுவர். அகத்தியச் சருக்கத்தில் கடலைக் குறித்த செய்திகள் பல உள்ளன. வயிரத்தூணரை வழிபட்ட அகத்தியர் விந்தவரை யடக்கிய செய்தியும் இங்குக் கூறப்படுகிறது.

"சகலமும் படைப்பாய் போற்றி தருமுறை காப்பாய் போற்றி
இகலுற அழிப்பாய் போற்றி யாவையும் மறைப்பாய்
போற்றி
திகழனே பரமா னந்தத் திருவருள் தருவாய் போற்றி
அகிலநா யகனே போற்றி அண்ணலே போற்றி போற்றி".

என மழுவாடிச் சருக்கத்தில் முனிவர் துதிப்பதும்,

"அருமையா யிருந்து மன்ப ரானவர்க் கெளியாய் போற்றி
பெருமையா லடியேன் செய்த பிழைபல பொறுப்பாய்
போற்றி
உரிமையாய் உலகுக் கெல்லாம் உயிரென நின்றாய் போற்றி
தருமமா மழுவை வாழுந் தாணுவே போற்றி போற்றி".

எனப் பிரமன் துதிப்பதுமாகிய பாடல்களைப் போன்று போற்றிப் பாடல்கள் பலவும், இனிய சந்தப் பாடல்கள் பலவும் இந்நூலெங்கும் காணலாம். சிறந்த சிவஞானியாகிய கமலை ஞானப்பிரகாசரின் தமிழ்ப் புலமையும் ஈடுபாடும் இப்புராணம் முழுமையும் புலனாகும்.

**திருவாம்பபாடிப் புராணம்**

கும்பகோணத்திலிருந்து திருப்பனந்தாள் செல்லும் வழியில் உள்ளது ஆப்பாடி என்னும் தலம். ஆய்ப்பாடி என வழங்கு கிறது. சண்டேசுவரர் வழிபட்ட மிகப் பழைய கோயில். அப்பர் பாடல் பெற்றது. இத்தல புராணத்தை இராம கவிராயர் இயற்றியுள்ளார்.

**திருவாளொளிப்புத்தூர்ப் புராணம்**

வைத்தீசுவரன் கோயிலிருந்து திருப்பனந்தாள் செல்லும் வழியில் உள்ளது. வாழ்கொளிப்புத்தூர், திருவாளப்புத்தூர் என வழங்கப் பெறுகிறது. அர்ச்சுனன் தீர்த்தயாத்திரையில் இங்கு வந்தபோது நீர் வேட்கை மிகுந்தது. இறைவன் முதியவர் உருவில் வந்து ஒரு தண்டைக் கொடுத்து, வாகை மரம் ஒன்றினடியில் அதை ஊன்றி, வெளிப்படும் நீரைப் பருகுமாறு கூறினார். அருச்சுனன் தன் கையிலிருந்த வாளை அவரிடம் தந்து, தான் நீர் பருகிவிட்டு வரும் வரை பாதுகாத்துத் தருமாறு கூறிச் சென்றான், இறைவன் அவன் தந்த வாளை அம்மரப் புற்றில் ஒளித்து வைத்து மறைந்தார். நீர் பருகித் திரும்பிய அருச்சுனன், இறைவனிடம் முறையிட அவரும் அதை வெளிப் படுத்தித் தந்து அருள் புரிந்தார் என்பது வரலாறு. இதனால் இத்தலம் வாள்ஒளி புற்றூர் ஆயிற்று என்பர். திருமால் மாணிக்க லிங்கத்தைத் தாபித்து வழிபட்ட தலமாதலின் இதற்கு அரதனபுரம் என்றும் பெயர்.

அர்ச்சுனன், திருமால், வண்டு வழிபட்ட தலம். சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது,

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இத்தல புராணத்தை இயற்றியுள்ளார். இதில் 20 படலங்களும் 527 பாடல்களும் உள்ளன.

**திருவியலூர்ப் புராணம்**

திருவியலூர் என்னும் தலம் சோழ நாட்டிலே காவேரியின் வடகரையில், கும்பகோணத்துக்குக் கிழக்கேயுள்ளது. இத்தலம் இப்பொழுது திருவிசலூர் என்றும் பண்டாரவாடைத் திருவிச நல்லூர் என்றும் வழங்கி வருகின்றது. இத்தலத்தில் சிவபெருமான் விட்டுணுமூர்த்தியுடன் கோயில் கொண்டு அநவரத சாந்நித்தியராய் வீற்றிருக்கின்றனர். இது ஆதியில் வில்வக் காடாயிருந்தமையால் வில்வ வனமென்றும், புராதனஞ்

என்னும் இராக்கதன் இங்கு பேறு பெற்றமையால் புராதனபுரம் என்றும் பெயருடையது. இறைவன் பெயர் வில்வனேசர், புராதனேசர், சிவயோகிநாதர் என்பதாகும். சிவயோகி ஒன்னும் முனிபுங்கவருக்கு அருளினமையால் சிவயோகிநாதர் என்னும் பெயர் வந்ததென இத்தலபுராணத்தால் விளங்குகின்றது. ஆயின், அடங்கன் முறை இராமசுவாமி பிள்ளையவர்கள் பதிப்பிலும் சுவாமிநாத பண்டிதரவர்கள் பதிப்பிலும் மற்றும் சிலவற்றிலும் இத்தலத்திலுள்ள சிவனுடைய பெயர் சிவயோகாநந்தர் என அச்சிடப்பெற்றுள்ளமை தவறு என்றும், இத்தலபுராணம் முன்னரே அச்சிடப் பெறாமையால் இத்தவறு ஏற்பட்டது என்றும் இப்புராணத்தின் முகவுரையில் கூறப்பட்டுள்ளது.

வடமொழி மூலத்துடன் தமிழ் மொழிபெயர்ப்பினை உரைநடையில் அமைத்தும் இப்புராணம் அச்சாகியுள்ளது.

நைமிசாரணியச் சருக்கத்தில், சௌனகாதி முனிவர்கள் கேட்கச் சூதமுனிவர் திருவியலூரின் மகிமைகளைக் கூறுகிறார்.

காவேரி தீர்த்த மகிமைச் சருக்கத்தில், இத்தல மகிமையைப் பிருகுமுனிவர் நாரத முனிவருக்குக் கூறியருள, நாரதமுனிவர் தம்மை வேண்டிக் கொண்ட தருமவருமன் என்னும் அரசனுக்கு அதைக் கூறுகின்றார்.

காவேரிக்கரைத் தல விவரணச் சருக்கத்தில் பல தல வரலாறுகள் கூறப்பெறுகின்றன. நாராயண பருவதம், பாஸ்கரம், ஆதிரங்கம் (ஸ்ரீரங்கம்) வைகுண்டம், இரத்தினகிரி, உறையூர், வேதகிரி, திருவையாறு, கும்பகோணம், திருவிடைமருதூர் என இவ்வாறு சிவன் மற்றும் விட்டுணுவின் தலங்கள் விளக்கப் பெறுகின்றன.

**திருவெண்காட்டுப் புராணம்**

சீகாழிக்குத் தென்கிழக்கிலுள்ள சிவத்தலம் திருவெண்காடு இது சுவேதவனம், சுவேதாரண்யம் என்றும் கூறப்பெறும். (சுவேதம்-வெண்மை. ஆரண்யம்-காடு). இந்திரன், வெள்ளை யானை வழிபட்ட தலம். தேவேந்திரன் பூசித்துப் பேறு பெற்றான். மெய்கண்ட தேவருடைய தந்தையார் திருப்பெண்ணாகடத்து அச்சுதகளப்பாளர் இங்குள்ள முக்குள நீரில் தோய்ந்து இறைவனருளால் பிள்ளைப் பேறெய்தினர் என்பர். இக்குளத்தில் மூழ்கினால் நினைத்த செயல் கைகூடும் எனச் சம்பந்தரும் கூறுவர். மூவர் பாடல் பெற்ற தலம்.

சைவசித்தாந்த முதல் சந்தானாசாரியராகிய மெய்கண்டார் அவதாரச் சிறப்புக்குக் காரணமான திருவெண்காட்டிற்கு அருகிலுள்ள இராதாநல்லூர் என்னும் ஊரில் பிறந்த சைவ எல்லப்ப நாவலர் இத்தலபுராணத்தை இயற்றியுள்ளார். இதில் பாயிரமும் 18 சருக்கங்களும் 614 பாடல்களும் உள்ளன.

கடவுள் வாழ்த்துப் பகுதியில் இத்தலத்துக்குச் சிறப்பாயுள்ள அகோரமூர்த்திக்கும், தட்சிணாமூர்த்திக்கும் துதிகள் கூறுகிறார். தனியாக மூவர் பாடிய திருமுறைகள் ஏழையும் தனிப்பாடல் களால் துதிப்பது மிகவும் சிறப்பாகும். பின்னர் நால்வர், நந்திதேவர், பட்டினத்தடிகள் ஆகியோருக்கு வணக்கம் கூறுகிறார். மெய்கண்டாரை இரண்டு பாடல்களிலும் தொண் டர்களை இரண்டு பாடல்களிலும் ஏத்தி வணங்குகிறார்.

**மெய்கண்டார்.**

உமாபதி சிவம் திருத்தொண்டர் அனைவருடைய வரலாற்றையும் சுருக்கி ஒவ்வொரு பாடல் வீதம் திருத்தொண்டர் புராண சாரம் என்றொரு நூல் பாடியிருக்கிறார். அதை எண்ணி இவர் இங்கு மெய்கண்டார் துதி சொல்லுமிடத்துப் புராணசாரமாக இரு பாடல்கள் பாடியுள்ளார்.

மெய்க்கடந்தை யச்சுதனாம் களப்பா ளன்றான்
விருப்பமிகுஞ் சிறுவருக்கா வெண்கா டெய்தி
முக்குளத்திற் படிந்துதவம் புரியும் போது
மோனியெனும் ஒருபுதல்வன் முதல்வன் ஈந்தான்
தக்கபுகழ்ச் சுவேதவனப் பெருமா னென்றே
தனயனுக்குத் திருநாமம் தரிப்பித் தைந்து
கைக்களிறு வரங்கொடுக்கும் வெண்ணெய் நல்லூர்க்
கருங்கொடிபூ பதிமனையிற் கலப்பித் தானே.

பன்னுசிவ சமயநெறி வளர வேண்டிப்
பரஞ்சோதி யடிகளந்தப் பதியின் மேவி
மன்னுபுகழ்ச் சுவேதவனப் பெருமா னிங்கே
வருகவென விளம்புதலும் மவுனம் நீங்கித்
தன்னிகரில் அவனருள் பெற்றுச் சைவ
சந்தான நெறிதழைக்கத் தமிழ்நூல் செய்தோன்
அன்னையிலன் புடையவன்மெய் கண்ட தேவன்
அடியவருக் கடியவர்தான் அகத்திற் சேர்ப்பாம்!'

என்னும் இப்பாடல்களில், மெய்கண்டார் மூன்று வயதாகி, அதுவரையில் மௌனமாக இருந்து பின் பரஞ்சோதி முனிவர் உபதேசம் பெற்றுத் தம் தாய்மாமன் திருவெண்ணெய் நல்லூர்க் காங்கேய பூபதியால் வளர்க்கப் பெற்றார் என்ற வரலாற்றை விளக்குகிறார். மெய்கண்டாரின் இந்த வரலாற்றுக்கு இந்நூலிலுள்ள இவ்விரு பாடல்களே சான்றாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### பட்டினத்தார்

இவ்வாறே, திருவெண்காட்டில் பிறந்த பட்டினத்தாரைப் பாடும் பொழுது அவர் திருவாரூர் மும்மணிக்கோவையும், திருவெண்காட்டுத் திருவிசைப் பாவும் பாடினார் என்ற புதிய செய்திகளைத் தருகிறார் ஆசிரியர்.

"தம்மகத்திற் செல்வமெல்லாம் பொய்யென் றெண்ணிச்
சத்தியமெய்ப் பொருளுணர்ந்து தவத்தோர் போற்றச்
செம்மலுக்குத் திருவிசைப்பா இசைத்துத் தெய்வ
சிகாமணியாந் திருவாரூர்ச் செல்வ னார்க்கு
மும்மணிக்கோ வையும்பகர்ந்து திருவெண் காட்டின்
முதல்வருக்கு மகபூசை முடித்தோர் நாகப்
பைம்மணித்தசர் காவிரிப்பூம் பட்டி னத்துப்
பட்டினத்துப் பிள்ளைபதம் பரவு வாமே"

என்னும் இப்பாடலில் பட்டினத்தடிகளின் வரலாறு கூறுகிறார்.

இன்றுள்ள பதினோராந் திருமுறையிலுள்ள திருவாரூர் மும்மணிக்கோவை சேரமான் பெருமாள் பாடியது. திருவிசைப் பாக்கள் பற்றிக் கூறும் பழம் பாடல்கள் பட்டினத்தாரைக் குறிப்பிடவில்லை. இருப்பினும், சைவ எல்லப்ப நாவலர் இந்தப் பாடலில் குறிப்பிடுவதைக் கொண்டு மூன்று பாடல்கள் பட்டினத்தார் திருவிசைப்பா என்று சொல்லப்பட்டுள்ளன என்பது இவண் குறிப்பிடத் தக்கதாகும்.

### திருவெண்காட்டுப் புராண சாரம்

சைவ எல்லப்ப நாவலர் பாடிய திருவெண்காட்டுப் புராணம் சைவ மக்களிடையே பெருமதிப்பும் பெருவழக்கும் பெற்றிருந்த தன் காரணமாக இத்தல புராணத்தைச் சுருக்கி இருபது பாடல் களில் திருவெண்காட்டுப் புராண சாரம் என ஒரு நூலை ஒருவர் இயற்றியுள்ளார். அதில் பதினாறு பாடல்களே இப்பொழுது

கிடைக்கின்றன. டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையத்தில் இந்நூல் சுவடி வடிவில் உள்ளது.

'சோதிவெண் காடொன் றாறுநூற் றாறு
தொடையினால் விரித்தனர் புராணம்
தொடையினால் விரித்த புராணமத் தனையும்
தொடையலாய்ப் புனைந்தனர் சிவனார்,
ஏதினி யொருவர் பாடுவ தெல்லாம்
திருச்செவிக் கேறுவ தன்றே
இப்புரா ணத்தின் சாரமே றுவதென்
றிருப்பகு தாய்க்கவி தொகுத்தேன்'

என வரும் பாடல், திருவெண்காட்டுப் புராணம் கேட்ட சிவனார் செவிக்கு வேறு புராணம் ஏறாது; அதன் கதையைத் தொகுத்துச் சண்டேசனார் செவிக் கேறுமாறு கூறுகிறேன் என்பதாக அமைகின்றது. இதன்வழி, இப்புராணத்தின் சிறப்பை நன்கு அறியலாம்.

**திருவைகாவூர்ப் புராணம்**

கொள்ளிடக்கரையில் உள்ள தலம் வைகாவூர். சிவராத்திரிக்குச் சிறப்புடைய தலம். சிவராத்திரி நாளில் புலிக்குப் பயந்து வில்வ மரத்தின் மேல் ஏறியிருந்த வேடன் இரவெல்லாம் வில்வத்தைப் பறித்துப் போட்ட வண்ணம் தூங்காமல் இருக்க, காலையில் இறைவன் வெளிப்பட்டு அருள்புரிந்த தலம் இது. வில்வவனம் என்றும் பெயர். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

இத்தலபுராணத்தை வேலைய தேசிகர் இயற்றியுள்ளார். இதில். 13 படலங்களும் 386 பாடல்களும் உள்ளன.

**திருவையாற்றுப் புராணம்**

தஞ்சை மாவட்டத்திலுள்ள சிறப்புடைய ஒரு சிவத்தலம் திருவையாறு. மூவர் பாடல் பெற்ற தலம் இது. மொத்தம் பதினெட்டுப் பதிகங்கள் இத்தலத்தில் பாடப் பெற்றுள்ளன.

ஐயாறப்பர் ஆகிய இறைவர் ஆடி அமாவாசை நாளில் அப்பர் பெருமானுக்கு, இயங்குவன நிலைத்தனவாகிய எல்லாப் பொருளும் இறைவனாகவும் இறைவியாகவும் தோன்றச் செய்து கைலாசக் காட்சியும் அளித்த திருவூர் இது.

சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமான் நாயனாரும் இங்கு வந்தபோது இறைவர் காவிரியில்

வெள்ளத்தைத் தடுக்க வழி விட்டுச் செய்து அடியார் திருக்கூட்டத்துடன் அழைத்துக் காட்சி கொடுத்தருளினார் என்பர்.

தேவர்கள், சூரியன், இந்திரன், வாலி முதலியவர்கள் பூசித்த இத்திருத்தலத்தைப் பற்றி,

"புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவு அழிந்திட்டு ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்று
அருள் செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவுஅதிர மழைஎன்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில் பார்க்கும் திருவையாறே"

எனச் சம்பந்தரும்,

"உற்றார் இலாதார்க்கு உறுதுணை யாவன ஓதி நன்னூல்
கற்றார் பரவப் பெருமை யுடையன காதல் செய்யக்
கிற்பார் தமக்குக் கிளரொளி வானகம் கொடுக்கும்
அற்றார்க்கு அரும்பொருள் காண்க ஐயாறன் அடித்தலமே"

என அப்பரும் புகழ்ந்துரைப்பர்.

இத்தலம் பற்றிப் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த நிரம்ப அழகிய தேசிகரும், ஞானக்கூத்தரும் இரண்டு தலபுராணங்களை இயற்றியுள்ளனர்.

1 **திருவையாற்றுப் புராணம் (பஞ்சநாத மான்மியம்)**

நிரம்ப அழகிய தேசிகர் இயற்றிய இப்புராணம் தஞ்சையில் கி.பி. 1577-1614 வரை அரசு புரிந்த அச்சுதப்ப நாயக்கர் காலத்திலும் அவர் குமாரர் இரகுநாத நாயக்கர் காலத்திலும் மந்திரியாக இருந்த கோவிந்த தீட்சிதரின் வேண்டுகோட்கிணங்கி சகம் 1527ஆம் வருடம் அதாவது கி.பி. 1604இல் செய்யப்பட்டதாக இந்நூலின் சிறப்புப் பாயிரத்தால் அறியலாம்.

"மணிபுனற் சூழ்சோணாடு தஞ்சையிற்
காத்திடு மரசன் மதிமந்திரித்தலைவன்
ஒளிமறைதேர் கோவிந்த தீட்சிதனும்
திருவாக் குதவுமயலே

"[illegible]
திருவதின் [illegible] மேழிப்
பெருமைக்குடித் [illegible] புராணவட
மொழிதமிழாற் புகல லுற்றேன்''.

இந்நூல் வடமொழிப் பிரமகைவர்த்த புராணத்தினின்றும் மொழி பெயர்த்து எழுதப் பெற்றதாகவும் கூறப் பெறுகிறது. இரண்டு காண்டமாய், முதல் காண்டத்தில் 35 அத்தியாயங்களும் 1534 பாடல்களும், இரண்டாம் காண்டத்தில் 13 அத்தியாயங்களும் 673 பாடல்களும் ஆக 48 அத்தியாயங்களும் 2207 பாடல்களையும் கொண்ட பெருநூல் இது.

பலவகையான சந்தப் பாடல்கள் மிகுந்த இந்நூலில், இறைவன் பெயரான செப்பேசர், பிரசணதார்த்திகரர் முதலான பெயர்ச் சிறப்புகளும், அன்னதான மகிமை முதலிய பல சிறப்புகளும் விளக்கப் பெறுகின்றன.

பாயிரப் பகுதியில் செம்பொற்சோதி, ஒப்பிலா நாயகர், அஞ்சலென்ற பெருமான், பஞ்சநதம், அறம்வளர்த்த நாயகி, அழகிய பொன்னனையாள், தொண்டர்க்கினியான், சைவராயர் மூவர் ஆகிய துதிப்பாடல்கள் குறிப்பிடத்தக்கன.

சிவகணத்தொருவனான திருவம்பலவன் மொழிய அன்னோர் அடிதொழுது பஞ்சநதிப் புராணத்தை அறைய லுற்றேன் என்று புராண வரலாற்றில் கூறினார் ஆசிரியர். பத்துப் பாடல்களில் காவிய மரபினையும் நான்கு பாடல்களில் நாற்பத்து நான்கு தலப்பெயர்களையும் செறித்துச் சொல்லுவது எனக் காப்பிய அழகுடன் சிறந்து விளங்குவது இந்நூல்.

**2. செப்பேசப் புராணம்**

திரம்ப அழகிய தேசிகரின் மாணாக்கராகிய ஞானக்கூத்தர் இயற்றிய இப்புராணம் பஞ்சநதிப் புராணம் என்றும் கூறப் பெறும். சிலாத முனிவருக்கு இறைவன் அருளால் மண்ணிலிருந்து பெற்ற ஒரு பெட்டகத்திலிருந்து கிடைத்த செப்பேசன் என்று பெயரிட்ட குழந்தையாகிய நந்திதேவரின் பெருமையைக் கூறுவதால் இந்நூல் செப்பேசப் புராணமாயிற்று. இத்தலம் ஜப்பியேசுவரம் என்றும் கூறப்பெறும்.

பாயிரமும் 12 சருக்கங்களும் 437 பாடல்களும் கொண்டது இந்நூல். விநாயகர், சபாநாயகர், செம்பொற்சோதியர்,

பஞ்சநதேசுரர், அறம் வளர்த்த நாயகி, ஆதிவிநாயகர், முருகன், நால்வர், பதஞ்சலி, வியாக்கிர பாதர், தொகையடியார், சனகாதியர், மற்றையடியார் ஆகியோருக்கு வணக்கம் கூறப் பெறுகிறது.

"கனிகிழியக் காவேரி கரைபுரளும் காவேரி
புனிதசலந் தனிநாடிப் பொருவிலாத் தனிநாடிப்
பனிமதிய ளையாறு பாலிக்கும் ஐயாறு
நனிவணங்கும் இருந்தவரே நன்மைபெற இருந்தவரே".

என்று தலத்திற்கே வணக்கம் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. பாயிர இறுதிப் பாடல், பதிகம் போலச் சருக்கப் பெயர்களைக் கூறுகிறது.

முதல் சருக்கம் பதிகச் சருக்கம். இதில், கேனோபநிடதக் கதை—அக்கினி, வாயு, இந்திரன் மூவரும் சோதி வடிவை ஆராய முற்பட்டார்கள் என்ற கதை விரிவாகச் சொல்லப்படுகிறது. அடுத்து, அகத்தியர் சருக்கத்தில் அவர் வரலாறும், காவிரிச் சருக்கத்தில் காவிரியின் சிறப்பும், பஞ்சநதிகள் பெருமையும் கூறப்பெறும். பின்பு சந்திரன் பூசித்தது, நந்தி பூசித்தது, கரிகாற் சோழன் திருப்பணி செய்தது ஆகியன விளக்கப் பெறுகின்றன.

வாகீசர், சம்பந்தர், வன்தொண்டர் ஆகிய மூவர் வரலாற்றுச் செய்திகள் தனித்தனியே கூறியபின் சைவச் சருக்கத்தில், காசி சென்ற ஒரு சிவாசாரியருடைய இடத்தில் தாமே வந்து தம்மைச் சிவபிரான் பூசித்தது பற்றிய வரலாறு கூறப் பெறுகிறது.

**திருவையாறு—பெயர்க் காரணம்**

சூரிய புட்கரிணி தீர்த்தம், கங்கா தீர்த்தம், சந்திர கிரணத் தாலுண்டான அமிர்த தீர்த்தம், உமையம்மையின் தனத்தி லுண்டான பாலாறு, நந்திவாய் நுரைத் தீர்த்தம்; இவ்வைந்து தீர்த்தங்களும் திருநந்தி தேவருக்கு அபிடேகஞ் செய்யும் பொருட்டுத் தோன்றின; இக்காலத்துக் காவிரி நதியில் மறைந்து விட்டன. இந்த ஐந்து ஆறுடையதனாலே இத்தலத்துக்குத் திருவையாறெனப் பெயராயிற்று என்று கூறுவர்.

**செப்பேசுரமென்னும் பெயர்க் காரணம்**

திரிபுரங்களை எரித்தருளிய சிவபிரானை வணங்கி பஞ்சாட்சர மந்திரத்தை செபித்தவர் சித்திமுத்தியைப் பெறுதலி னாலே செப்பேசுரமென்று பெயர் வந்ததாகவும் கூறுவர்.

"முப்பு ரங்களைச் செற்றருள் முதல்வனைப் பணிந்து
தப்பி லாச்சிவ மந்திரஞ் செபித்தவர் தாமே
ஒப்பி லாச்சித்தி முத்தியு முடன்பெற லாலே
செப்பி யேச்சுர மென்பர்கள் திருவையா றதனை". (1)

அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்ற இவ்வுண்மையை விளக்க எழுந்ததே இப்புராணம்.

பிரமன், திருமால், சிவனை மறந்தவிடத்து அவரிருவருக்கும் தெளிவிக்கும் பொருட்டு இயக்கர் இயக்கியாக அம்மையப்பர் தோன்றி, ஒரு துரும்பினைப் போட்டு அதனை எரிக்குமாறு சொல்ல, வாயுவும் தீயும் முடியாமல் வருந்த, அதுகண்டு இறைவி சொல்லியதே மேற்கண்ட வாக்கு. இதன்படியே இப்புராணம் பாடப்பெறுவதாகவும் கூறுவர்.

"சிவனரு ளன்றி வேறோர் திரணமு மசையா தென்றே
உபநிட நூலிற் கேட்டோம் அன்றியு முளத்துங் கண்டோம்
அவனரு ளன்றி யின்றோர் அணுவசை யாதென் றெண்ணிப்
புவனியிற் சிவனைக் காட்டப் புராணத்தைப் பாடுகிறோம்".
(1-28)

அகத்திய முனிவர் வரலாற்றை முழுவதுமாக விளக்குவது குறுமுனிச் சருக்கம்.

அகத்தியர் திருவையாற்றில் வந்து தங்கியிருந்து சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தார். அவருடைய பெருந்தவத்தை மெச்சிய சிவபெருமான் அவர்முன் தோன்றி உமக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்றார். அதற்கு அகத்தியர்,

'அடிய னேனுனைத் திருவடி அடங்கிநின் றேத்தக்
கொடிய வென்னுருக் குறள்வடி வாவரு ளென்றான்'

அவ்வாறே குறள் வடிவத்தைக் கொடுத்த மாதேவர்,

'சடில மாதவ தந்தனங் குறள்வடி வாக
முடிவி லுன்பெயர் குறுமுனி யாகென மொழிந்தான்' (29)

இவ்வாறே அகத்தியர் **குறுமுனி** என்று பின்னர் அழைக்கப் பட்டார் என்பதை இப்புராண வாயிலாக அறியலாம்.

அகத்தியர் கைலாயம் சென்றபோது. தென்னகம் தாழ்ந்தது. அதனைச் சமன் செய்தற்பொருட்டு அவரை உடனே தெற்கு

நோக்கிச் செல்லுமாறு பணித்தார் சிவபெருமான். அதன்படி அகத்தியர், புலியூர்ச் சிற்றம்பலம், மதுரைத் திருவாலவாய் ஆகிய வழியாகக் குறும்பலாவில் திருமாலைப் பிரமேசனாக எண்ணிப் பாட, நாராயணரும் உருகினார்; அவ்வாறு உருகிய வைகுந்த நாதனைத் திரட்டிக் குறுக்கிச் சிவலிங்கம் ஆக்கினார். ஆதலால் அத்தலத்திற்குத் திருக்குற்றாலம் என்னும் பெயர் ஆயிற்று.

> "ஆங்கு நின்று குறும்பலாவி னரியையச் சென்றகத்திடைப்
> பாங்கு நின்ற பரமனாகப் பாட அரியு முருகினான்
> வாங்கி அரியைத் திரட்டிக்குறுக்கி வாழ்த்தி லிங்க மாக்கினான்
> நீங்கி திருக்குற் றாலமாகி நிகழ்ந்த பெயருந் திகழ்ந்ததே.
> (பா. 21)

என இவ்வாறு கைலாயச் சருக்கத்தில் திருக்குற்றாலம் பெயர் வரக் காரணம் கூறப்பெறுகின்றது.

**காவிரியின் வளமும் சிறப்பும் கூறுதல்**

அகத்தியர் பொதிய மலையிலிருந்து வந்ததும் திருவெண்காட்டையடைந்து அங்குச் சிவபூசை செய்யத் தொடங்கினார். அப்பொழுது அங்கு வந்த சமுத்திரராசன் அகத்தியரை வணங்கி, அவர் விவாகம் செய்து கொண்டிருக்கும் உலோபா முத்திரை என்னும் காவிரி என்னும் பாவைக்குப் பெண் வடிவமும் நதி வடிவமும் உண்டு. அவற்றில் நதி உருவினை இவ்வுலகிற் கொடுப்பீராகில் இங்கு நின்றந்த உயிர்கள் யாவும் மலிந்து வாழும் என்று வேண்டினான்.

அவன் வேண்டுகோளை ஏற்று, பொன்னியின், புண்ணிய நதி வடிவத்தைத் தமது கமண்டலத்தில் ஏந்திய அகத்தியர் சைய மலையில் அதை வைத்திருந்தபோது, விநாயகப் பெருமான் காக வடிவமாக வந்து அக்கமண்டலத்தைக் கவிழ்த்தார். அப்புனித நீர் சூரிய புஷ்கரிணியில் அமிழ்ந்து சத கலையுடன் சாகரத்தை அடைந்தது.

பின்பு மகிழ்ச்சியுற்ற அகத்தியர் திருவையாறு அடைந்து அங்குள்ள ஈசனை வழிபடுகின்றார். மூன்று நாள் பிறகு திருச்சாய்க்காடு அடைந்தபோது அங்கு சமுத்திரன் தோன்றி வழிபட்டு, அவர் மூன்று நாள் எங்கிருந்தார் என வினவ. அவரும் தாமிருந்த திருவையாறு தலத்தின் பெருமையை விளக்கி உரைத்தார்.

"காமரு பத்தினீற் கன்னி யோருரு
தேமரு தீர்த்தமாய்த் திகழ்ந்த தேருரு
நாமரு தீர்த்தமாம் வடிவை நல்கியின்
மாமணி யுயிரெலாம் வாழு மென்றனன்". (17)

**திருத்தலப் பெருமையைக் கூறுவது**

திருவையாறு என்னும் இத்தலத்தில் யாவனாயினும் ஒருவன் விருப்பம் பற்றி வசித்தேனும் அவன் பாவம் அனைத்தும் நீங்கும். மாபாதகன் ஒருதரம் திருவையாறு என்று உரைத்திடில் அக்கணத்தே அவன் புண்ணியன் ஆவான். இப்பதி தவமில்லாதவர்க்கும் தவமுத்தியைக் கொடுப்பது, உயர்ந்த சிவதலங்களிலும் உயர்ந்த சிவதலம், திருக்கேதாரத்தினும் உயரியது. இதன் கண்ணுள்ள காவிரி கங்கையிலும் புனிதமாவது. (கங்கையில் அதிகமாம் பொன்னி)

இத்தலத்துப் பிறந்தாரை அம்மையும் அப்பரும் தமது அருமைப் புதல்வரைப் போல் பேணுவர், அதனால் எப்பயமுமில்லை.

"திருவை யாற்றிடைச் சேர்ந்தவர் யாவர்க ளிடத்தும்
ஒருகு டிக்கொரு புதல்வனைப் பெற்றவர் போல
அருளு மன்னையு மப்பரு மவரையே பார்ப்பர்
மருவு துன்னல ரவர்க்குள ரேல்வர் மாய்வர்." (பா.8)

என இவ்வாறு பஞ்சநதிச் சருக்கத்தில் இத்தலப் பெருமைகள் பல கூறப்பெறுகின்றன.

எண்ணெய் திருடவந்த எலி சுடரைப் பிரகாசித்த கதை, மங்கையை அணைவான் விளக்கைத் தூண்ட பேறுபெற்ற கதை போன்ற கதைகள், திருவையாற்றில் விளக்கெரிக்கும் பக்தர்கள் அடையலாகும் புண்ணியங்களை விளக்கும்போது கூறக் காணலாம்.

"இருட்டில் வந்தொரு காலெலி திரியினைத் தூண்ட
அருமை மூவுல காண்டதுன் கண்டிரே பொருவன்
பொருளின் மங்கையைக் கோயிலிற் கொண்டுபோய்ப்
புணர்வான்
ஒருவி ளக்கிட மூவுல கீண்டதும் முனதே"

என்பது பஞ்சநதிச் சருக்கப் பாட்டல்.

சிலாத முனிவர் சிவபிரானைத் துதிக்க, சிவபெருமான் திருநந்தி தேவரைத் திருக்குமாரராகப் பெற்ற வரலாறு சிலாத முனிச் சருக்கத்தில் கூறப்பெறும்.

வாகீசச் சருக்கத்தில், அவர் திருவாமூரில் பிறந்தது முதல் முறையாக எல்லாச் செய்திகளையும் கூறி, அவர் கயிலாயம் செல்ல எண்ணியபோது ஐயாற்றில் பெருமான் திருஅருளால் அம்மையும் அப்பனும் ஆகிய கயிலைக் காட்சியைக் கண்ட செய்தியைச் சொல்லி, தென்கயிலைக் காட்சியைக் கண்டதைப் பணிந்து பூந்துருத்தி வணங்கியிருந்தார் என்று கூறுவர்.

"கோடாத புகழாளர் மாதேவர் குடிகொண்ட பதிஎங்கணும்
வாடாத தமிழ் பாடும் வாகீசர் என்னுமோர் மதிமாதவர்
வீடாத வடபூமி பணியும் விருப்பிற் பருப்பதத்தின்
நாடாமல் நாடும் பிரானைத் தமிழ்ப்பா நயந்தோதினார்".

"நடப்பன பறப்பனவும் நார முறை வனவும்
கிடப்பனவும் நிற்பனவும் ஊர்வனவும் கேடில்
தடுப்பரு சராசரங்கள் தாங்களு மடங்கக்
கடப்பரிய சத்திசிவ மானநிலை கண்டார்".

என்று வாகீசர் கண்ட காட்சியை எடுத்துக் கூறுவர் ஆசிரியர்.

## திருஞான சம்பந்தர் திருமாலைச் சிவனாக ஆக்குதல்

சம்பந்தர் சருக்கத்தில் சில புதிய செய்திகள் கூறப்பெறு கின்றன. சம்பந்தர் சீகாழியில் தோன்றிப் பல தலங்கள் வழிபட்டுப் பல அற்புதங்கள் நிகழ்த்திய பின் திருப்பூந்துருத்தி வந்தார். அவரை அப்பர் கண்டு, 'மேல்பால் அந்நகரில் திருமால் பூசை கொள்வதே போதும் என்று சொல்லிச் சிவபூசையை அங்கிருந்த வைணவர்கள் தடை செய்து விட்டார்கள். இச் செய்தியும் கேட்கலாகாதே' என்று சொல்ல, சம்பந்தர் பூந்துருத்தி நாதர் சந்நிதியில் பாட, பெருமான் அருளால் வருணன் குடக்குத்திக்கில் பெருமழை பெய்யச் செய்தான். வைணவர் இல்லங்கள் வெள்ளத்தில் அழிந்தன.

"அறப்பயன் தீர்ந்த காலை அமுதமும் நஞ்ச மாமே
மறப்பயன் தீர்ந்த காலை வன்னஞ்சம் அமுத மாமே
துறக்கமீ திருப்பா னெண்ணித் தொண்டர்கள்
மாய னார்க்குச்
சிறப்பினாற் செய்த நன்மை தீமையாய் விளைந்த தன்றே"

என இதை விளக்குவர் ஆசிரியர்.

"[illegible]
திருவின் சேறாளும் சேழரிப்
பெயர்விருடத் தியம்பற்றுப் புராணவட
மொழிதமிழாற் புகல லுற்றேன்''.

இந்நூல் வடமொழிப் பிரமகைவர்த்த புராணத்தினின்றும் மொழி பெயர்த்து எழுதப் பெற்றதாகவும் கூறப் பெறுகிறது. இரண்டு காண்டமாய், முதல் காண்டத்தில் 35 அத்தியாயங்களும் 1534 பாடல்களும், இரண்டாம் காண்டத்தில் 13 அத்தியாயங்களும் 673 பாடல்களும் ஆக 48 அத்தியாயங்களும் 2207 பாடல்களையும் கொண்ட பெரு நூல் இது.

பலவகையான சந்தப் பாடல்கள் மிகுந்த இந்நூலில், இறைவன் பெயரான செப்பேசர், பிரணதார்த்திகரர் முதலான பெயர்ச் சிறப்புகளும், அன்னதான மகிமை முதலிய பல சிறப்புகளும் விளக்கப் பெறுகின்றன.

பாயிரப் பகுதியில் செம்பொற்சோதி, ஒப்பிலா நாயகர், அஞ்சலென்ற பெருமான், பஞ்சநதம், அறம்வளர்த்த நாயகி, அழகிய பொன்னம்பலனார், தொண்டர்க்கினியான், சைவராயர் மூவர் ஆகிய துதிப்பாடல்கள் குறிப்பிடத்தக்கன.

சிவகங்கைத் தொடுவனான திருவம்பலவன் மொழிய அன்னோர் அடிதொழுது பஞ்சநதிப் புராணத்தை அறைய லுற்றேன் என்று புராண வரலாற்றில் கூறுகிறார் ஆசிரியர். பத்துப் பாடல்களில் கரிய மேன்மையும், நான்கு பாடல்களில் நாற்பத்து நான்கு தலப்பெயர்களையும் செறித்துச் சொல்லுவது எனக் காப்பிய அழகுடன் சிறந்து விளங்குவது இந்நூல்.

2. செப்பேசப் புராணம்

திரம்ப அழகிய தேசிகரின் மாணாக்கராகிய ஞானக்கூத்தர் இயற்றிய இப்புராணம் பஞ்சநதிப் புராணம் என்றும் கூறப் பெறும். சிலாத முனிவருக்கு இறைவன் அருளால் மண்ணிலிருந்து பெற்ற ஒரு பெட்டகத்திலிருந்து கிடைத்த செப்பேசன் என்று பெயரிட்ட குழந்தையாகிய நந்திதேவரின் பெருமையைக் கூறுவதால் இந்நூல் செப்பேசப் புராணமாயிற்று. இத்தலம் ஜப்பியேசவரம் என்றும் கூறப்பெறும்.

பாயிரமும் 12 சருக்கங்களும் 437 பாடல்களும் கொண்டது இந்நூல். விநாயகர், நடராசர், செம்பொற்சோதியார்,

கூர்ன்க்கூத்தர் பாடியது என்பதைப் பலரும் அறியார். இதை யறியாமலேயே பலரும் இதைப் பாடி வருவதே இந்நூலின் சிறப்பினைக் காட்டும்,

"மறைகள் நித்தமெனச் சைவமே தனைப்பொரு ளெனமுந்
துறுகண் ஐம்புல னேதனக் கேவல்செய் சதிரும்
பிறவி தீதெனாப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோ டுறவும்,

மனமும் வாக்குநின் னன்பர்பால் ஒருப்படு மகிழ்வுங்
கனவி லுஞ்சிவ னன்பருக் கடிமையாங் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நெறியும்
புனித நற்சிவ கீர்த்தியே யுரைத்திடும் பொலிவும்.

யாது கேட்பினும் அன்பருக் கீவதே யியல்பும்
மாத வத்தினோ ரொருறுக்கினும் வணங்கிடு மகிழ்வும்
ஓது நல்லுப தேசநல் லுறுதியு மன்பர்
தீது செய்யினுஞ் சிவலீலை யெனக்கொளுந் தெளிவும்.

தீமை யாம்பர சமயங்க ளொழிந்திடுந் திறமும்
ஏழு றும்புர மாதரைப் பரிசியா வியல்பும்
வாய்மை யாகவேபிறர்தனம் விரும்பிடா வளமும்
தூய்மை நெஞ்சினிற் பிறர்மனை நோக்குறாத் துறவும்.

துற்கதி துறையினு நரகில் தோய்கினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும இவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல் வேண்டுமால்". (66—70)

என்னும் இந்த ஐந்து பாடல்களையும் நீண்ட காலமாகச் சிவபூசை முடிவில்தோத்திரஞ் செய்வது சிவபூசை செய்யும் மெய் யடியார்களின் வழக்கம்.

மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவானாகிய திரு மு. ரா. அருணாசலக் கவிராயர் அவர்கள் தம் இளம் பருவத்திலேயே இப் பாடல்களிலுள்ள பத்திரசத்தை ருசித்து மனப்பாடமாக்கித் தோத்திரஞ் செய்யும் நியமம் பூண்டு வந்தனர். ஆயினும், இப் பாடல் எந்த நூலில் உள்ளன என்பது பற்றி அவர்பல ஆண்டுகள் தேடியும் கிடைக்கவில்லை என்றும் கூறுவர்.

சுமார் 1900ஆம் ஆண்டு அளவில், இவர் தலயாத்திரையாகத் திருவையாற்றுக்கு வந்தபோது, அங்கிருந்த கோயிலில் இசைக்கப்பட்ட

ருஞ் சிறந்த சைவப் பிரமுவும் ஆகிய திரு ச. கற்பக விநாயகம் பிள்ளையவர்கள் தாம் தேடி வைத்திருந்த பஞ்சநதிப் புராண மென்னும் இப்புராணத்தை, ஓலைச்சுவடியாகக் கொடுத்துப் பதிப்பித்துத் தருமாறு கேட்டனர். அப்பொழுது இவர் அச்சுவடியைப் பிரித்துப் படித்தவிடத்து அதில் மேற்கண்ட ஐந்து பாடல்களும் இத் தலபுராணத்தின் 6வது சருக்கம் 66வது பாடல் முதல் 70வது பாடல் வரையிலும் உள்ள பாடல்களே என்பதைக் கண்டறிந்தார். மிகவுறியன் பெரும் புதையல் கண்டெடுத்தாற் போல மன மகிழ்ச்சியுற்றுப் பின் இதை அச்சில் பதிப்பித்ததாக இவர்தம் பதிப்பு முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

சிலாத முனிவர் பிள்ளைக்காகத் தவமிருந்து சிவபெருமானை வேண்டியபோது, அவர் அருளால் அவருக்குக் கிடைத்த திருநந்தி தேவராகிய குழந்தையை அவர்கள் பெற்றனர். அக் குழந்தையாகிய நந்தி தம் பதினாறாம் வயதில் திருவையாற்று ஈசனைப் பாடி வேண்டி பதினாறு வரம் கேட்டபோது மேற்படி பாடல்கள் பாடப் பெற்றன. இறைவனும் அவ்வாறே வரம் நல்கினான். எனவே, இதை அனைவரும் மனனம் செய்தல் நலம் என்பர்.

இவ்வாறு இந்நூல் பல நயமான பாடல்களைக் கொண்டுள்ளது. பல பாடல்கள் சுவைபொருந்தப் பாடப் பெற்றுள்ளன. சிறந்த அணிநயங்களும் சந்த இனிமையும் கலந்த பல பாடல்கள் இதிலுள்ளன.

"மெய்யாறு புடைபுரளத் திங்க ளோட
மேலோடப் பெரும்பாம்பு கிடந்து சீறக்
கையாறு தாவேறிக் கீதம் பாடுங்
கடிகமழுந் திருமுடிமேற் கன்னலாறு
நெய்யாறும் பாலாறும் பசுந்தே னாறும்
நிறைபசுவின் தயிராறும் நிறைய ஆட்டி
ஐயாறர் ஐயாறர் என்பார்க் கன்றோ
அவனியெலாம் ஒருகுடைக்கீ ழாள லாமே"

என்று ஐயாறப்பர் துதியில் ஆறு என்னும் சொல்லைப் பலமுறை வருமாறு பாடியிருக்கும் ஆசிரியர் இத்தல இறைவன் மீது பெரும் பற்றும் ஈடுபாடும் கொண்டவர் என்பது தெளிவாகும்.

**தென் திருமுல்லை வாயிற்புராணம்.**

காவிரியின் வடபால் அமைந்துள்ள தலம் தென் திருமுல்லை வாயில். சீர்காழிக்குக் கிழக்கில் கடற்கரையோரத்தில் உள்ளது.

இந்திரனும், கார்க்கோடகனும், சுதர்மனும் பூசித்த தலம். கோதையம்மையாகிய இறைவி பூசித்து ஐந்தெழுத்து மறையருளைப் பெற்றார். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

இத்தலபுராணத்தை இயற்றியவர் வடுகநாத தேசிகர் ஆவார். இதில் 9 சருக்கங்களும் 415 பாடல்களும் உள்ளன.

கடவுள் வாழ்த்துப் பகுதியில் மாசிலாமணி நாதர், அணி கொண்ட கோதையம்மை, தட்சிணாமூர்த்தி, வயிரவர்,வரசித்தி விநாயகர், முருகர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நந்தி தேவர், சண்டேசப் பிள்ளையார் ஆகியோருக்குத் துதிகள் கூறுகிறார். இரண்டு பாடல்களில் அவையடக்கம் கூறிய பின் நகர்வளம் கூறுகிறார்.

"ஆகு திப்புகை யெழுச்சியா லகிற்புகைத் திரளால்
மேக லோகமு மொத்தது பேரின்ப விளைவால்
மாக லோகமு மொத்தது நவமணி வளத்தால்
நாக லோகமு மொத்தது முல்லைமா நகரம்". (20)

"தினமரு மாலை வேலை மலர்தரச் செய்த லாலும்
வனமுலைப் பெயரி னாலு மானிரு நோக்கத் தாலுஞ்
சனகனுக் கருள்வோன் மேனி தழும்புற வளைக்கை யாலும்
வினவிடைக் கொடியி னாலுங் கவுரிபோல் விளங்கு
முல்லை". (27)

என இவ்வாறு பல்வேறு உவமைகளால் இந்நகரின் சிறப்புரைப்பர்.

இத்தலத்தைச் சுற்றிலுமுள்ள சோழநாட்டுத் தலங்கள் பலவற்றையும் நைமிசச் சருக்கத்தில் (20-27) எடுத்துரைப்பர்.

நைமிசச் சருக்கத்தினையடுத்து, அங்கம் இரத்தினமானது, பார்ப்பதியார் பஞ்சாக்கர சித்தி பெற்றது, பரத்தை கதி பெற்றது, தீர்த்த விசேடம், கருடன் கதி பெற்றது, கிள்ளிச்சோழன் முத்தி பெற்றது ஆகியவை கூறப்பெறுகின்றன.

பரத்தை கதி பெற்ற சருக்கத்தில், பரத்தை ஒருத்தி இம் முல்லை வாயிலில் வசித்து, திருக்கோயிலைத் தூய்மை செய்து விளக்கேற்றிய காரணத்தினாலேயே பெரும்பதமடைந்ததைக் கூறுவர். பரத்தையானவள் பலருக்கும் காம இன்பம் ஊட்டி வாழ்ந்தவள். ஒருநாள் பாம்பு தீண்டி இறந்தாள். அப்போது எமதூதர்கள் வந்து அவளைக் கட்டியிழுத்துச் சென்று

துன்புறுத்தினர், வழியில் வந்த நந்தியெம்பிரான் அவர்களைக் கண்டு அப்பரத்தையாரை விடுவிக்குமாறு கூறுகிறார். அவள் பரத்தையர் தொழில் செய்தாலும் திருக்கோயிலுக்கு அலகிட்டு திருவிளக்கேற்றித் தூய்மை செய்த காரணத்தால் அவள் சிவகதிக்குச் செல்லத் தக்கவள் என்று விடுவித்தார். இக்கதையைக் கூறுமிடத்து இப் பூவுலகிலுள்ள மக்களைப் பார்த்துப் பாடுவதாக வரும் பகுதிகள் குறிப்பிடத்தக்கன.

இறைவனை வணங்காமலும், தலங்களைச் சென்று தரிசிக்காமலும் வீணே காலத்தைக் கழிப்போரை இவர் பலவாறு சாடுகிறார்.

"செந்தழல் மறந்தீர் சிவன்தனை மறந்தீர்
சந்தியும் இகழ்ந்தீர் தவங்களும் இகழ்ந்தீர்
அந்திபகல் ஐயமிடும் அன்பையும் மறந்தீர்
தந்தையை நன்றியது தன்னையும் மறந்தீர்".

"மண்புகழ முன்பொருவர் வைத்ததரு மத்தைக்
கண்குளிர வன்பினொடு கண்டுமறி யீரே
நண்பொடிது நன்றென நவின்றுமறி யீரே
விண்புகழ் தலங்களை மிதித்துமறி யீரே". (31-32)

என்னும் இப்பாடல்களில் சிவனை மறந்தவர்கள், தவத்தினை இகழ்பவர்கள், தானத்தைச் செய்யாதவர்கள், தாய்தந்தையரை மறந்தவர்கள் இவர்களோடு விண்ணோர் புகழும் சிவத்தலங்களைச் சென்று காணாதவர்களையும் சேர்த்துக் கூறுகின்றார்.

"சூழ்புவி யிற்றே வாலய முந்தத் தொழுகில்லீர்
ஆழ்நதி யிற்போய் மூழ்க அயர்ந்தீர் அறிவில்லீர்
தாழு மவர்க்கே தாழ்வுற நிற்பீர் தயவில்லீர்
வாழ்வு குறைத்தீ ரேதை நினைத்தீர் மதியில்லீர்".

"வேத மொழிக்கே யேத முரைத்தீர் வினையுந்தி
ராதுல ருக்கே லோப முரைத்தீர் அறிவில்லீர்
வேதி யருக்கொன் றீவ தொழித்தீர் விறன்மிக்கீர்
ஈதல் மறுத்தீர் காதல் மிகுத்தீர் என்செய்தீர்".

"கோளரி யொத்தீர் கோளும் உரைத்தீர் குணமற்றீர்
வாள்கொடு மிக்கோர் ஆருயிர் செந்தீர் வரைவிற்றீர்
மூளெரி யிட்டே வாழ்மனை செந்தீர் முனிவுற்றீர்
பாளை மடற்சா றூறல் குடித்தீர் பழிவைத்தீர்". (33-35)

என்னும் இப்பாடல்களில், ஆலயத்தொழாமை, தீர்த்த மாடாமை, முன்னோர் மொழிகளைக் கேளாமை, எவருக்கும் ஈயாமை, நற்குணமின்மை, கள்ளுண்ணல் ஆகிய குற்றமுடையோரைப் பார்த்து அறிவுறுத்துகிறார். தொடர்ந்து,

"வைகறையி லெழுந்துசிவ னைந்தெழுசெப் பீருமினீர்
பொய்கைதரு நெய்விளக்குப் புனலிலடத் தோயந் திருமினீர்
செய்கைபெறுந் தந்தைதாய் திப்பசிதீர்த் திருமினீர்
மெய்கையினாற் சிவன்முன்னர் வீழ்ந்துபணிந் திருமினீர்".

"சங்கிருந்த தடக்கரத்தான் தனக்குமன்பு செய்கிலீர்
கொங்கிருந்த மலரிலைநீர் கொணர்ந்தரனைப் பணிந்தறியீர்
அங்கிருந்து செய்தகொலை அளவிலவுந் தலைவழறந்திர்
இங்கிருந்தே யரிதுயிர்த்தால் யானதற்கென் செய்கேனே".

(37-38)

என்று பாடுகிறார். பரத்தையானவளும் தன் சிவத்தலத் தொண்டால் பரகதி பெற்றாள். அவ்வாறு யாதாகிலும் ஒரு கோயில் தொண்டினைச் செய்தாலும் போதும், நீங்கள் நரக வாதை அடையாமல் தடுக்கவரும். பாதிமாமதியணிந்த பழம் பொருளை எப்பொழுதும் நினைப்பீர். அதனால் பரகதியடைவீர் என இவர் பாடும் பகுதிகள் சிறந்த அறவொழுக்கங்களைப் புகட்டுவனவாக உள்ளன.

இவ்வாறே இந்நூல் முழுமையும் சைவ சமயக் கருத்துக்களும் தத்துவங்களும் விரவி, இனிய சந்தங்களோடு சொல்லணி முதலான அணிநயங்களும் பயின்று, சுவைபட அமைத்துள்ளார் ஆசிரியர்.

### புள்ளிருக்கு வேளூர்ப்புராணம் என்னும் வைத்தீசுவரன் கோயிற் புராணம்

சீர்காழிக்கும் மயிலாடுதுறைக்கும் இடையில் உள்ள ஊர் புள்ளிருக்கு வேளூர். புள் (சடாயு), இருக்கு (வேதம்), வேள் (முருகன்), ஊர் (சூரியன்) என்ற நால்வரும் வழிபட்டதால் இப் பெயர் பெற்றது. மேலும், சடாயுபுரி, வேதபுரி, கந்தபுரி, பரிதிபுரி என்னும் பெயர்களும் இவர்கள் பூசித்ததால் ஏற்பட்டதே. அங்காரகன் வழிபட்டதால் அங்காரகபுரம் என்றும் அம்பிகை வழிபட்டதால் அம்பிகாபுரம் என்றும் பெயர்.

இறைவன் இத்தலத்து மந்திரமும் மருந்துமாகி உயிர்களின் வினைகளைப் போக்குவதால் வினைதீர்த்தான் கோயில் என்றும் வைத்தீசுவரன் கோயில் என்றும் பெயர் பெற்றது.

சூரபத்மனின் மார்பைப் பிளக்க முருகன் வேல் வாங்கிய இடம் இதுவே. அங்காரகனுக்குரிய தலம். உமாதேவி, தையல் நாயகியாய் வடிவங்கொண்டு தைலபாத்திரமும் சஞ்சீவியும் வில்வ மரத்தடி மண்ணும் கொண்டு தம்முடன் வர இறைவன் மருத்துவராக இருந்து அருள் செய்த சிறப்புடைய தலம். சம்பந்தரும் அப்பரும் பாடியுள்ளனர்.

இத்தல புராணத்தை வடுகநாத தேசிகர் இயற்றியுள்ளார். இதில் 63 படலங்களும் 1133 பாடல்களும் உள்ளன.

**மண்ணிப்படிக்கரைப் புராணம்**

திருவாளப்புத்தூருக்கு அருகேயுள்ளது பழமண்ணிக்கரை என்னும் தலம். இத்தலத்தருகே பண்டைக் காலத்தில் மண்ணியாறு ஓடியதால் இப்பெயர் பெற்றது. தலமரம்—இலுப்பை ஆதலின் இலுப்பைப்பட்டு என்றும் பெயர்பெறும். மதூகவனம் (மதூகம்-இலுப்பை; பட்டு-ஊர்) என்றழைப்பர்.

இறைவன் நஞ்சைப் பருகியபோது உமாதேவி தன் கையால் அவருடைய கழுத்தை அழுத்திய தலம் இதுவே.

பாண்டவர்கள் சித்திரா பௌர்ணமி நாளில் இங்கு வந்து பஞ்ச லிங்கங்களையும் வழிபட்டதாகக் கூறுவர். பிரமன் மாந்தாதா, நளன், ஆகியோரும் வழிபட்டனர் என்பர்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இத்தல புராணம் பாடியுள்ளார். இதில் 20 படலங்களும் 501 பாடல்களும் உள்ளன.

இதுவரையிலும் கூறப்பெற்றவை காவிரியின் வடகரையிலுள்ள சிவத்தலங்களுக்குரிய புராணங்களாகும். இவ்வாறு 27 தலங்களுக்குரியதாக மொத்தம் 32 புராணங்கள் கிடைக்கின்றன. சிதம்பரத்திற்கு நான்கும், திருவையாறு மற்றும் திருவானைக்காவிற்கு இரண்டிரண்டு புராணங்களும் கிடைக்கின்றன.

மொத்தமுள்ள 63 பாடல் பெற்ற தலங்களுள் பின்வரும் 36 தலங்களுக்குரிய புராணங்கள் கிடைக்கவில்லை.

## சோழநாட்டில் காவிரிக்கு வடகரையிலுள்ள புராணம் கிடைக்காத தலங்கள்

திருவேட்களம்
மயேந்திரப்பள்ளி
திருக்கலிக்காமூர்
பல்லவனீச்சரம்
கீழைத்திருக்காட்டுப்பள்ளி
திருக்குருகாவூர்
திருக்கோலக்கா
கண்ணார்கோயில்
திருக்கடைமுடி
திருநின்றியூர்
திருஅன்னியூர்
வேள்விக்குடி
எதிர்கொள்பாடி
திருமணஞ்சேரி
குரக்குக்கா
ஓமாம்புலியூர்
கானாட்டுமுள்ளூர்
திருநாரையூர்
கடம்பூர்
பந்தணைநல்லூர்
கஞ்சனூர்
கோடிகா
திருமங்கலக்குடி
திருச்சேய்ஞலூர்
திருந்துதேவன்குடி
இன்னம்பர்
திருவிசயமங்கை
வடகுரங்காடுதுறை
திருப்பழனம்
நெய்த்தானம்
பெரும்புலியூர்
திருக்கானூர்
அன்பிலாந்துறை
திருமாந்துறை
திருப்பாற்றுறை
ஈங்கோய்மலை

## காவிரியின் தென்கரையிலுள்ள தலங்கள்

காவிரியின் தென்கரையிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் 127 ஆகும். இவற்றுள் 55 தலங்களுக்குரிய புராணங்கள் கிடைக்கின்றன. அவை வருமாறு :

### திருவாரூர்ப் புராணம்

சோழ வளநாட்டிற் காவிரிநதியின் தென்பாலுள்ள மிகச் சிறந்ததொரு தலம் திருவாரூர். இத்தலம், விராட் புருடனுடைய மூலாதார மெனவும், பூமிதேவியின் இருதய கமலமெனவும், பஞ்சபூத தலங்களுள் பிருதிவி தலமெனவும், இந்திரன் முதலிய தேவர்கள் கறையான் வடிவுகொண்டியற்றிய புற்றை யிடமாகக் கொண்டு பரமசிவன் சிவலிங்கப் பெருமானாகத் தோற்றினமையின் வன்மீகபுரமெனவும், தன்பாற் பிறந்தவர்களுக்கு முத்தி கொடுத்தலால் பிறக்க முத்தி தரும் தலமெனவும், தன்னிடமுள்ள உயிர்களெல்லாம் சிவகணங்களாதலின் பரிசதோடம் முதலியன இல்லாத பெருமை வாய்ந்ததெனவும், எல்லாப் பாவங்களினும் மிகக் கொடியதாகிய

நன்றி கொன்ற பாவத்தையும் தீர்க்கும் மகிமை வாய்ந்த தெனவும், காசிக்கும் தில்லைக்கும் மேலானதெனவும், சப்த விடங்கத் தலங்களுள் முதலாவதெனவும், ஆதிபராசத்தி தவஞ் செய்தமையின் பராசத்தித் தலம் எனவும், திருமகள் வழிபட்டுப் பேறு பெற்றமையாற் கமலாலயமெனவும், வீதிவிடங்கராகிய தியாகராசர் எழுந்தருளியிருத்தலின் வீதிவிடங்கமெனவும் மிகச் சிறப்பாகப் பாராட்டப் பெறும்.

மூவராலும் பாடப்பெற்ற தலங்களுள் இதுவும் ஒன்றாகும். திருஞானசம்பந்தப் பெருமான் ஐந்து பதிகங்களையும், திருநாவுக்கரசர் இருபத்தொரு பதிகங்களையும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் எட்டுப் பதிகங்களையும் பாடி இத்தலத்தை மேலும் சிறப்பித்துள்ளனர். இத்தகைய பாடல்கள் பல பெற்ற இத் திருத்தலத்திற்குப் பல புராணங்களும் எழுந்துள்ளன.

**வடமொழிப் புராணங்கள்**

அஜபாஹஸ்யம். சூடகேச்வரமாஹாத்மியம், கமலாலய மாஹாத்மியம், நாகர கண்டம், தியாகராச லீலை, சமத்காரபுர மாஹாத்மியம், தியாகராஜ மாஹாத்மியம், தேவயாகபுர மாஹாத்மியம், தேவாச்ரய மாஹாத்மியம், முசுகுந்தபுர மாஹாத்மியம், ராமகயா மாஹாத்மியம், ஸ்ரீபுர மாஹாத்மியம், ஸ்கந்தபுர மாஹாத்மியம், க்ஷேத்திரவர மாஹாத்மியம் என்னும் வடமொழி நூல்கள் இத்தலத்தின் சிறப்பை எடுத்துரைக்கக் காணலாம்.

மேற்கூறிய வடமொழி மாஹாத்மியங்களுள் கமலாலய மாஹாத்மியம், நாகர கண்டம், தியாகராசலீலை எனும் இம் மூன்றுமே தமிழிற் செய்யுள் நடையாகச் செய்யப் பெற்றுள்ளன.

**கமலாலயச் சிறப்பு என்னும் திருவாரூர்ப் புராணம்**

கமலாலய மாஹாத்மியம் தமிழில் சிதம்பரம் மறை ஞானசம்பந்த ரென்பவரால் இயற்றப்பெற்றுக் கமலாலயச் சிறப்பென்னும் பெயரால் விளங்குகின்றது. ஆயிரத்து அறுபத்தாறு திருவிருத்தங்கள் கொண்ட இந்நூலை அவர் தொடங்கியகாலம், கலி சகாப்தம் 4647ஆம் வருடத்தின் பின்னதாகிய பராபவ வருடம் (சாலி-1469; கி.பி. 1546) என்று இத் நூலின் பாயிரச் சருக்கத்துள்ள இருபத்தைந்தாம் செய்யுள் தெரிவிக்கின்றது. அவரியற்றிய பதிபசுபாசப் பனுவலென்னும் நூலின் சிறப்புப் பாயிரத்திலுள்ளதாகிய, ஆதி கமலாலயமுதற்

## சோழநாட்டில் காவிரிக்கு வடகரையிலுள்ள புராணம் கிடைக்காத தலங்கள்

திருவேட்களம்
மயேந்திரப்பள்ளி
திருக்கலிக்காமூர்
பல்லவனீச்சரம்
கீழைத்திருக்காட்டுப்பள்ளி
திருக்குருகாவூர்
திருக்கோலக்கா
சண்ணார்கோயில
திருக்கடைமுடி
திருநின்றியூர்
திருஅன்னியூர்
வேள்விக்குடி
எதிர்கொள்பாடி
திருமணஞ்சேரி
குரக்குக்கா
ஓமாம்புலியூர்
கானாட்டுமுள்ளூர்
திருநாரையூர்
கடம்பூர்
பந்தணைநல்லூர்
கஞ்சனூர்
கோடிகா
திருமங்கலக்குடி
திருச்சேய்ஞலூர்
திருந்துதேவன்குடி
இன்னம்பர்
திருவிசயமங்கை
வடகுரங்காடுதுறை
திருப்பழனம்
நெய்த்தானம்
பெரும்புலியூர்
திருக்கானூர்
அன்பிலாந்துறை
திருமாந்துறை
திருப்பாற்றுறை
ஈங்கோய்மலை

### காவிரியின் தென்கரையிலுள்ள தலங்கள்

காவிரியின் தென்கரையிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் 127 ஆகும். இவற்றுள் 55 தலங்களுக்குரிய புராணங்கள் கிடைக்கின்றன. அவை வருமாறு :

### திருவாரூர்ப் புராணம்

சோழ வளநாட்டிற் காவிரிநதியின் தென்பாலுள்ள மிகச் சிறந்ததொரு தலம் திருவாரூர். இத்தலம், விராட் புருடனுடைய மூலாதார மெனவும், பூமிதேவியின் இருதய கமலமெனவும், பஞ்சபூத தலங்களுள் பிருதிவி தலமெனவும், இந்திரன் முதலிய தேவர்கள் கறையான் வடிவுகொண்டியற்றிய புற்றை யிடமாகக் கொண்டு பரமசிவன் சிவலிங்கப் பெருமானாகத் தோற்றினமையின் வன்மீகபுரமெனவும், தனபாற் பிறந்தவர்களுக்கு முத்தி கொடுத்தலால் பிறக்க முத்தி தரும் தலமெனவும், தன்னிடமுள்ள உயிர்களெல்லாம் சிவகணங்களாதலின் பரிசதோடம் முதலியன இல்லாத பெருமை வாய்ந்ததெனவும், எல்லாப் பாவங்களினும் மிகக் கொடியதாகிய

நன்றி கொன்ற பாவத்தையும் தீர்க்கும் மகிமை வாய்ந்த தெனவும், காசிக்கும் தில்லைக்கும் மேலானதெனவும், சப்த விடங்கத் தலங்களுள் முதலாவதெனவும், ஆதிபராசத்தி தவஞ் செய்தமையின் பராசத்தித் தலம் எனவும், திருமகள் வழிபட்டுப் பேறு பெற்றமையாற் கமலாலயமெனவும், வீதிவிடங்கராகிய தியாகராசர் எழுந்தருளியிருத்தலின் வீதிவிடங்கமெனவும் மிகச் சிறப்பாகப் பாராட்டப் பெறும்.

மூவராலும் பாடப்பெற்ற தலங்களுள் இதுவும் ஒன்றாகும். திருஞானசம்பந்தப் பெருமான் ஐந்து பதிகங்களையும், திருநாவுக்கரசர் இருபத்தொரு பதிகங்களையும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் எட்டுப் பதிகங்களையும் பாடி இத்தலத்தை மேலும் சிறப்பித்துள்ளனர். இத்தகைய பாடல்கள் பல பெற்ற இத் திருத்தலத்திற்குப் பல புராணங்களும் எழுந்துள்ளன.

### வடமொழிப் புராணங்கள்

அஜபாஹஸ்யம். சூடகேச்வரமாஹாத்மியம், கமலாலய மாஹாத்மியம், நாகர கண்டம், தியாகராச லீலை, சமத்காரபுர மாஹாத்மியம், தியாகராஜ மாஹாத்மியம், தேவயாகபுர மாஹாத்மியம், தேவாச்ரய மாஹாத்மியம், முசுகுந்தபுர மாஹாத்மியம், ராமகயா மாஹாத்மியம், ஸ்ரீபுர மாஹாத்மியம், ஸ்கந்தபுர மாஹாத்மியம், க்ஷேத்திரவர மாஹாத்மியம் என்னும் வடமொழி நூல்கள் இத்தலத்தின் சிறப்பை எடுத்துரைக்கக் காணலாம்.

மேற்கூறிய வடமொழி மாஹாத்மியங்களுள் கமலாலய மாஹாத்மியம், நாகர கண்டம், தியாகராசலீலை எனும் இம் மூன்றுமே தமிழிற் செய்யுள் நடையாகச் செய்யப் பெற்றுள்ளன.

### கமலாலயச் சிறப்பு என்னும் திருவாரூர்ப் புராணம்

கமலாலய மாஹாத்மியம் தமிழில் சிதம்பரம் மறை ஞானசம்பந்த ரென்பவரால் இயற்றப்பெற்றுக் கமலாலயச் சிறப்பென்னும் பெயரால் வழங்குகின்றது. ஆயிரத்து அறுபத்தாறு திருவிருத்தங்கள் கொண்ட இந்நூலை அவர் தொடங்கியகாலம், கலி சகாப்தம் 4647-ஆம் வருடத்தின் பின்ன தாகிய பராபவ வருடம் (சாலி-1469; கி.பி. 1546) என்று இந் நூலின் பாயிரச் சருக்கத்துள்ள இருபத்தைந்தாம் செய்யுள் தெரிவிக்கின்றது. அவரியற்றிய பதிபசுபாசப் பனுவலென்னும் நூலின் சிறப்புப் பாயிரத்திலுள்ளதாகிய, ஆதி கமலாலயமுதற்

புராண, மோது மதியாற் சூதனை 'பொப்போன்' என்னும் பகுதியும் இந்நூல் அவரால் இயற்றப்பட்டதென்பதை வலியுறுத்தும்.

## திருவாரூர்ப் புராணம்

நாகரகண்டம் என்பதைத் தமிழில் அளகைச் சம்பந்தரென்னும் வணிகர் பெருமானாரால் இயற்றப் பெற்று, நாகர கண்டமெனவும், திருவாரூர்ப் புராணமெனவும் வழங்குகின்றது. 2929 செய்யுட்களைக் கொண்ட இப்புராண நூலை இவர் இயற்றி அரங்கேற்றிய காலம் சாலிவாகன சகாப்தம் 1514 (கி.பி. 1592) பங்குனி மாதம் என்று அந்நூலின் பாயிரத்துள்ள முப்பத்தைந்தாம் செய்யுளால் அறியலாம்.

## திருவாரூர்த் தியாகராசலீலை

தியாகராசலீலை யென்பது சங்கரசேவகனென்னும் சோழ மன்னனின் வேண்டுகோளைத் திருவுளம் பற்றிய தியாகராச மூர்த்தி அரச வடிவங் கொண்டருளிப் பல ஆண்டுகள் அரசாட்சி செய்த திவ்விய சரித்திரங்களாகிய முந்நூற்றறுபது லீலைகளை புணர்த்துவது. அவற்றுள், முதலிலுள்ள பதின்மூன்று லீலை களும் பதினான்காம் லீலையின் முதற்பாகமும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப் பெற்று, தியாகராசலீலையெனவும் திருவாரூர்த் திருவிளையாடலெனவும் வழங்கப் பெறுகிறது. 699 திருவிருத்தங்களடங்கிய இப்புராணம் கி.பி. 1845இல் இயற்றப் பெற்றது, இதுவே இவருடைய முதற் புராண நூலாகும்.

## 1. கமலாலயச் சிறப்பு என்னும் திருவாரூர்ப் புராணம்

ஆதிகமலாலய மகாத்மியம் என்றும் ஆதிகமலாலய புராணம் என்றும் அழைக்கப்பெறும் இத் திருவாரூர்ப் புராணம் பதினாறாம் நூற்றாண்டின் முற்பாதியில் வாழ்ந்திருந்த மறைஞான சம்பந்தரால் இயற்றப் பெற்றது. இவர் அருணகிரிப் புராணம் என்னும் மற்றொரு தலபுராணமும் இயற்றியுள்ளார்.

இந்நூல் பாயிரப் பகுதியுள்பட 24 சருக்கங்களும் 1066 பாடல்களும் கொண்டதாகும். தொடக்கத்தில் உள்ள விநாயகர் காப்புச் செய்யுளே மிக இனிமையானதாகும்.

> "திருவாரூர்ப் பிரியாதே திகழ்வானை மதியானை
> உருவானை உமைபாகந் தழுவானை உணர்வாரை
> இரவாமல் அருள்வானை இருள்தேர வருமாறு
> தருவானை அடிபேணி இயலோசை தவிராதே" (1)

முப்பத்து மூன்று பாடல்கள் கொண்ட பாயிரப் பகுதியில் நந்திகேசுவரன், நந்திமாகாளர், சனற்குமாரன், வியாசன் சூதன், காரைக்கால் அம்மையார், மெய்கண்ட தேவர், இயற்பகை, சிறுத்தொண்டர், சிவனடியார் முசுகுந்தன், முப்போதும் பூசை புரிபவர் ஆகியோருக்குத் துதி கூறுவது குறிப்பிடத்தக்கது. திருவாதவூரர் ஐந்து தாண்டவம் கண்டவர், மெய்கண்டார் ஆரியத்தின் அத்தம் வண்தமிழால் தந்தார் என்று குறிப்பிடுவர்.

"ஆரியங் கற்றுமுற்றும் அறிவுடை யாளர் வாழ்க
ஆரியந் தெரிந்துஞ் சாரும் அருந்தமி ழாய்வார் வாழ்க
ஆரியந் தமிழாராயும் அதிமதி நிபுணர் வாழ்க
ஆரியந் தமிழா ராய்வார்க்கு அணுக்கரும் வாழ்க
அன்பால்". (24)

என்னும் வாழ்த்துப் பாடலும் கருதத்தக்கது. பதிகம் எட்டுப் பாடலாலானது.

விரிந்த புராணக் காப்பியங்களில் நாட்டுப் படலம், நகரப் படலம் அமைக்கும் பகுதியை இவர் மண்டலவளச் சருக்கம், திருவாரூர்ச் சிறப்புச் சருக்கம் என்ற பெயர்களால் குறிப்பிடு கின்றார். நாட்டுச் சிறப்பைச் சோழதேச வளம் என்கிறார்.

பெரியபுராண வரலாறுகள் பல இந்நூலில் விரிவாகச் சொல்லப்படுகின்றன. கலிக்காமர் பிணக்குத் தீர்த்தது, நமிநந்தி அடிகள் நீர் விளக்கு ஏற்றியது, திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கு அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கித் திருவாரூர் திருமூலட்டானர் வடதிசையில் புதுவாயில் செய்வித்து யாழ் கேட்டார். விறன்மிண்டர்புறம்பு என்று சொன்னமையினாலே சுந்தரர் பாட்டினால் சிவமயம் ஆயினார் என்ற செய்திகள் குறிப்பிடத்தக்கன.

**புதிய செய்திகள்**

இங்கு சுந்தரர் வரலாற்றில் புதுமையான செய்திகள் கூறப் படுகின்றன. கூனன் ஒருவன் தம்பிரான் தோழராகிய சுந்தரரே தனக்குத் தெய்வம் என்று கொண்டு, மணமலர் தொகுத்துக் கொடுக்க, சுந்தரர் அருட்பார்வையால் கூன்தீர்ந்து சிவபுரி அடைந்தான் என்பதும்; ஒரு குருடன் சிவபெருமான் தடுத்தாட் கொண்டவரே எனக்குத் தெய்வம் எனக் கொண்டு அவருக்கு அடைக்காய் கொடுத்து அவருடைய புன்முறுவலைக் காணக் கண்ணும் பெற்று அவரருளால் சிவபுரம் பெற்றான் என்பதும் புதிய செய்திகளாகும்.

திருமகள் இங்கு வழிபட்டு வரம் பெற்றமையால் தலமே கமலாலயம் ஆயிற்று. தேவர் செய்த புற்றில் பெருமான் தோன்றி அவர்கள் அல்லல் தீர்த்தமையால் தேவாசிரியம் ஆயிற்று. இவ்வூரில் திருமால் கையில் பிடித்த வில்லின் நாண் அறுந்தவுடன் வில் நிமிர்ந்து அவர் தலையைக் கொய்தது என்ற வரலாறுகளும் கூறப்படுகின்றன.

சிவலிங்க ஸ்தாபனச் சருக்கத்தில், சிவலிங்கம் தாபித்து வழி பட்டோர் பட்டியலில் பலபல தேவர்கள் உள்ளனர்.

### திருமால் துதித்தல்

பொதுவாக, தேவர் முதலியோர் இறைவனைத் துதிக்கும் போது சிவபிரானைத் துதிக்கும் பாசுரங்கள் மட்டுமே காணப் படும். ஆயின், இங்குத் திருமால் தனது இதயத்தில் சோமாஸ்கந்தரை வைத்துப் பூசித்துத் தனித்தனியே சிவபெருமானையும் உமையையும் முருகனையும் பூசிக்கிறார். சோமாஸ்கந்தர் வழிபாடு இத்தலத்திற்கும் இப்புராணத்திற்கும் சிறப்புடையதாகும். இவரே தியாகராசர் என்பர்.

இந்நூல் முழுமையும் இனிய சந்தப் பாடல்கள் பலவற்றைக் காணலாம். ஒவ்வொரு சருக்கத்தையும் முடிக்கும்போது அந்தச் சருக்கத்தைக் கேட்டோருக்கு நல்ல பயன்கள் விளையுமென்றும், இதுவரை இன்னது சொன்னோம், அடுத்து இன்னது சொல்லப் போகிறோம் என்றும் கூறி முடித்து, இவ்வாறு கேட்ட அன்பர் இன்புறுமாறு சூத முனிவன் கூறினான் எனப் பின்வரும் பாடலை நான்காம் சருக்கம் முதல் இறுதி வரை எல்லாச் சருக்கங்களிலும் அமைத்துள்ளார் ஆசிரியர்.

"என்று கூறினான் சூத னெனுமுனி
வென்ற வீரருக் கைம்புல வேழமும்
கொன்றை சூடுங் குழகன் மலர்ப்பதத்
தொன்று மன்பருக் கின்புற வுள்ளமே".

சிவலிங்கத் தாபனச் சருக்கத்தில் 120 சிவலிங்கங்கள் தாபித்து பூசை செய்யப்பட்ட செய்தி முறையாகச் சொல்லப்பட்டுள்ளது. அத்துடன், சருக்கந்தோறும் பல லிங்கங்களுடைய பிரதிட்டை கள்சொல்லப்பட்டுள்ளன. தனியாக எட்டுத் தீர்த்தச் சருக்கங் கள் இருப்பதோடு, இடையிடையே பிறவிடங்களிலும் பல தீர்த்தங்கள் பற்றிக் கூறப்படுகின்றன.

## சிறப்புக் கூறுகள்

தலபுராணங்கள் அவ்வத் தலங்களின் பழம வரலாறுகளை விரித்துரைப்பது மட்டுமல்லாமல், இடையிடையே மக்களின் அறவாழ்க்கைக்கும் சமய வாழ்க்கைக்கும் இன்றியமையாது வேண்டப்படும் நீதிநெறிகளையும் சமயப் பெருமைகளையும் கதைகள் மூலமாக எடுத்துரைப்பதையும் காணலாம். மக்களை நன்னெறிப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

திருவாரூரின் வரலாறுகளையெல்லாம் மிக விளக்கமாகக் கூறும் இப்புராணம், பல நீதிகள், அரசாங்கப் பொறுப்புக்கள், நல்லோர் ஒழுகலாறுகள், நல்வினை தீவினைகளின் நுட்பமான பாகுபாடுகள், மானிடர் கையாள வேண்டிய சிறந்த ஒழுக்கங்கள், விரதங்கள், அறச்செயல்கள், பண்புடைமை, சமய வாழ்க்கைப் பண்புகள், சமயக்காழ்ப்பின்மை, சமய ஒற்றுமை முதலிய சிறப்புக்களையும் விரிவாக எடுத்துரைக்கக் காணலாம்.

மக்கள் உயரிய குறிக்கோளைக் கொண்டு நல்வாழ்க்கை நடத்தி மேம்படுதற்கு இவ்விளக்கங்கள் பெரிதும் துணைசெய்ய வல்லன.

இத்தலபுராணம் ஒரு சமய இலக்கியமாக மட்டுமல்லாமல் மானிடர்க்குரிய இன்றியமையாத பேறுகளையும், அவற்றை அடையும் வழிகளையும், அவர்கட்கு இம்மை மறுமைகளில் நற்பயனளிக்கத்தக்க அற வாழ்க்கை முறைகளையும் எடுத்துக் கூறியுள்ளமை நாம் அனைவரும் அறியத்தக்கதாகும்.

### யமன் கூறும் நல்லறங்கள்

கமலாலயச் சிறப்பு என்னும் இப்புராணத்தில், கோகன்ன சருக்கத்தில், கோகன்னன் என்பான் யமனிடம் நல்வினையின் பலனை நவிலுமாறு கேட்கிறான். அப்பொழுது யமன் நல்லறங்கள் பலவற்றை எடுத்துக் கூறுகின்றான். (பா. 31-35). 1. கைம்மாறு கருதாது பிறருக்கு உதவி செய்தல், 2. மேலான நூல்களைப் படித்தல், 3. இறைவனுக்கு ஆலயங்கள் கட்டுவித்தல். 4. ஆலயத்திற்கும் மக்களுக்கும் தேவையான குளம், கிணறு ஆகிய நீர் நிலைகளை வெட்டுவித்தல், 5. விரதங்கள் செய்தல், 6. பிறர் செய்த பிழைகளை மறத்தல், 7. மிகு உணவும் மிகு அலங்காரமும் கொண்டு உடலைப் பேணா திருத்தல், 8. தண்ணீர்ப் பந்தல் வைத்தல், 9. அடைந்தவரை ஆதரித்தல், 10. புலனுணர்ச்சிகளுக்கு அடிமையாகாதிருத்தல், 11. பிரமசரியம் வழுவாதிருத்தல், 12. இறைவனின் இணையடி

களையே எப்பொழுதும் தியானித்திருத்தல், 13. தவம் செய்வோருக்கு உணவளித்தல், அவர்கட்கு இருக்கையும் மழைக் காலத்து இருப்பிடமும் அளித்தல், 14. நிலக்கொடை அளித்தல், 15. எல்லா உயிர்களினிடத்தும் அன்பாயிருத்தல், 16. திலதானம் அளித்தல் என இவ்வாறு நல்லறங்களைப் புரிந்தவர் நரகம் அடையார் என்றும், இவற்றிற்குப் புறம்பான குற்றங்களைப் புரிபவர் கொடு நரகம் புகுவார் என்றும் இப்பகுதியில் விளக்கக் காணலாம்.

இந்நல்லறங்கள் அனைத்தும் அனைவருக்கும் பொது வானவையே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கோசன்னனுக்கு இயமன் நரகத்தைக் காட்டுகின்றான் என்றவிடத்து 21 பாடல்களில் ரௌரவம் முதல் மைதரணி நரகம் வரையில் 21 நரகங்களும், இன்ன பாவத்திற்கு இன்ன நரகத்தில் தண்டனை என்பது முதலான செய்திகள் குறிப்பிடத் தக்கன.

**பசு பகரும் பாவங்கள்**

குலிசேசுவர சருக்கத்தில் குலிசன் பூசித்த செய்தி 50 பாடல் களில் கூறப்படுகிறது. சந்திர குலத்தில் தோன்றிய யயாதி என்னும் அரசனது புதல்வர்களில் ஒருவனான குலிசன் என்பான் துருவாச முனிவருக்கும் புலால் படைத்ததன் காரணமாகத் துருவாசர் அளித்த சாபத்தால் புலியாகப் பிறக்கிறான். இந்தப் புலி, வனத்தில் இரை தேடியலையும்போது அங்கே நந்தினி என்னும் பசு சிவலிங்கத்துக்குத் தன்பாலை அபிடேகம் செய்து கொண்டிருக்கிறது. அப்பசுவைப் பிடிக்கப் பாய்கிறது புலி. பசு வானது புலியை மிகவும் வேண்டித் தான் மீண்டு சென்று சிவலிங்கத்திற்கும் பாலை ஊட்டித் தன்கன்றுக்கும் பால் ஊட்டித் திரும்பும் போது அக்கன்று பசுவுக்குப் பதிலாகத் தானே பலியா வேன் என்று சொல்வதையும் மற்றப் பசுக்கள் தடுப்பதையும் கேளாமல், மீண்டு வந்து புலியின் முன் நிற்கிறது. அதைக்கண்ட மாத்திரத்தில் புலி முன்உணர்வு பெற்றுச் சிவலிங்க பூசை செய்து குலிச மன்னனாகிச் செல்லுகிறது. இங்கு, பசுதான் மீண்டு வருவதாகப் புலியிடம் சொல்லும்போது, வராவிட்டால் இன்ன இன்ன பாவங்களை அடைவேன் என 70 பாவங்களை வரிசைப் படுத்திக் கூறுவது குறிப்பிடத்தக்கதொரு பகுதியாகும்

அந்தணர்களைக் கொல்லுதல்; செய்ந்நன்றி மறத்தல்; தாய் தந்தையரை வஞ்சித்தல்; தம்மை வந்து சேர்ந்தாரை வெறுத்தல்;

புறங் கூறுதல்; கற்புடை மனைவியிருக்க வேசையரை விரும்பல்; பிறர்மனையை விரும்பல்; வில்வம், வேம்பு, புளி, நெல்லி, விளா என்னும் மரங்களை வெட்டுதல்; கோயில்களில் சென்று தொழுவாரைத் துன்புறுத்தல்; மாமிசம் உண்ணுதல், பொய், களவு, கொலை செய்தல்; கஞ்சா போன்ற போதைப் பொருட்களை உண்ணுதல்; கள்ளுண்ணல்; பகுத்துண்ணாமல் தான் மட்டுமே வாழ உண்ணுதல்; இறைவன் பெயரால் அற்புதங்கள் நிகழ்த்தி அதனால் பொன் முதலிய பொருட்களை வாங்கிக் குவித்தல்; நாளும் இறைவனைப் பூசித்து வணங்கியிருப்போரை அவமதித்தல்; ஆலயம் கட்டுகிறேன், திருக்குளம் அமைக்கிறேன், திருவிளக்கு ஏற்றுகிறேன் என்று கூறி இறைவன் பெயரால் செல்வம் சேர்த்து அதனால் வாழுதல்; முதுமறைகளைப் பழித்தல்; ஆசாரியரைப் பழித்துப் புறங்கூறுதல்; எருது போன்ற உயிரினங்களின் மேல் மிகுசுமையை வைத்திழுத்தல்; பசுக்களை வதைத்தல்; இல்லத்தில் பிச்சை கேட்டு வந்தவர்க்கு ஏதேனும் உதவாதிருத்தல்; நீர்நிலைகளிலுள்ள மீன்களைக் கொல்லுதல்; சிவலிங்கங்களைப் பொருளுக்காக விற்றல்; ஒரு கன்னிகையை ஒருவர்க்கு மணம் பேசி ஏற்றொருவர்க்கு மணமுடித்தல்; ஓர் ஊறும் இல்லாதவர்க்கு வஞ்சத்தால் ஊனம் உண்டாக்குதல்; பொய்த் தவஞ் செய்தல்; பொருள் வாங்கிக் கொண்டு வேதத்தைப் போதித்தல்; வேதத்தை ஓதும் அந்தணர் வேசியரை அணைதல்; குற்றம் செய்த பெண்டிரையும். வயலில் மேய்ந்த பசுவையும் கொல்லுதல்; களவு செய்யாதவனைக் களவு செய்தவன் எனப் பொய்யாகப் பழி சுமத்துதல்; குற்றமற்றவரைக் குற்றமுள்ளவரெனப் பொய்யாகவுரைத்தல் (பா. 11-27) ஆகிய இவையாவும் கொடிய பாவங்களென இதன்மூலம் விளக்கப் பெறுகின்றன.

மேற்காணும் இக்கதை தமிழகத்தில் கபிலை கதை என வழங்கும் ஒருபழங்கதையாகும். இதனுடன் பின்வரும் வைணவக் கதையும் ஒப்புநோக்கத்தக்கது. திருக்குறுங்குடியில் அழகிய நம்பியின் திருமுன் கைசிகப்பண் பாடிவந்த நம்பாடுவான் என்ற பாணர் குலத்தைச் சேர்ந்த ஒரு பாகவதன் ஒரு பிரமராக்கதன் கையில் அகப்பட்டுத் திரும்பி வருவதாக வாக்குறுதி கொடுத்து, சந்நிதியில் சென்று அப்பண்ணைப்பாடி மீண்டு வந்து தன் பண்ணினால் பெற்ற புண்ணியத்தில் ஒரு சிறு பகுதியை அப் பிரமராக்கதனுக்கு அளிக்க அவன் தன் சாபம் நீங்கப் பெற்றுத் தேவ வடிவோடு விண்ணுலகம் சென்றான் என்பது வைணவத்தி

ளுள்ள ஒரு சிறப்பான கதை. நம்பாடுவான் என்ற அப்பாணர் கைசிகம் பாடிய நாள் கைசிக ஏகாதசி என்று கார்த்திகை வளர்பிறையில் சிறப்பாகத் திருமால் ஆலயங்களில் கொண்டாடப் பெறுகிறது.

**தற்கால நிலைமைகள் பலவற்றை முன்பே எடுத்துக் கூறல்**

மறைஞான சம்பந்தர் மெய்ஞ்ஞானம் பெற்றவர் ஆகையி னாலே அவர்தம் நூலில் யுகங்களின் இயல்புகளை யெல்லாம் எடுத்துக் கூறி, கலிகாலத்தின் தன்மையெல்லாம் விளக்கி, தற்கால இன்னல்மிகு சூழலிற் சிக்கிச் செய்வகை யறியாது திகைத்து உய்வகை நாடுவோர்க்கு விளங்குமாறு எடுத்துரைக் கின்றார். இப்புராணத்தின் இருபதாம் பகுதியாகிய சர்வ தீர்த்தாசிரயச் சருக்கத்தில் காணும் இத்தகைய செய்திகள் பல மிகவும் குறிப்பிடத்தக்கன.

**யுகங்களின் மாறுபாடு**

நால்வகை யுகங்களில் கிருதம்-உத்தமம்; திரேதம்-மத்திமம்; துவாபரம்-அதமம் என்றும் யுகங்களின் வேறுபாடுகள் சுட்டப் பெறும். (பா.3).

கிருதயுகத்தில் தியானமும், திரேதத்தில் ஞானமும், துவாபரத்தில் வேள்வியும், கலியில் தானமும் சிறந்த சாதனங் களாகக் கூறப் பெறுகின்றன. (பா.4)

ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு தெய்வம் அதிதெய்வமாக இருக்கும். கிருதயுகத்தில் பிரமன், திரேதாயுகத்தில் சூரியன், துவாபரயுகத்தில் திருமால், கலியுகத்தில் உருத்திரன் அதிதெய்வங் களாக இருப்பர். (பா. 5)

"முண்ட கத்தவி சுகந்தவன் முதலுகக் கடவுள்
விண்டொ டார்ந்தெழு கதிரிரண் டாவதின் வேந்தன்
தண்டு ழாய்நறுந் தாமன்மூன் றாவதின் தலைவன்
மண்ட லம்புக ழுருத்திரன் கலிக்கு மன்னவனே'

என இதையே திருக்காளத்திப் புராணமும் (30:2) உரைக்கக் காணலாம்.

இதே போன்று முதல் யுகத்தில் சத்துவகுணமும், இரண்டாம் யுகத்தில் சத்துவம் இராஜச குணமும், மூன்றாம் யுகத்தில் இராஜச குணமும், நான்காம் யுகத்தில் தாமச குணமும் மேலோங்கி இருக்கும் என்பர். (பா. 6, 7)

"சத்து வங்குண மாவது முதலுகந் தனக்குச்
சத்து வத்துட னிராசத குணமடுத் ததற்கு
வைத்த ராசத குணத்தினைத் துவாபர மருவும்
எத்தி றத்தி னுங் கலியுகந் தாமத மெய்தும்".

என இதையே திருக்காளத்திப் புராணமும் (30:3) குறிப்பிடக் காணலாம்.

**தருமம்**

யுகங்கள் தோறும் இவ்வாறு தன்மைகள் மாறி வருவதற்குத் தரும தேவதையின் மாறுபாடும் ஒரு காரணமாகச் சுட்டப் பெறும். கிருத யுகத்தில் தருமம் நான்கு கால்களுடன் சஞ்சரிக்கும்; திரேதத்தில் ஒரு கால் ஊனமாக ஏனைய மூன்று கால்களுடன் நடமாடும்: துவாபர யுகத்தில் இரண்டு கால்கள் ஊனமாய் எஞ்சிய இரண்டடிகளினாலே சஞ்சரிக்கும்; கலியுகத்திலோ மூன்று கால்கள் ஊனமாகி ஒரு காலாலே நடமாடும் என்பர். (பா.8) கலியுகத்தில் தருமத்திற்கேற்பட்ட இழிநிலையை இங்கே சுட்டக் காணலாம்.

**யுகம்—ஆண்டுகள்**

இத்தகைய யுகங்களுக்குரிய ஆண்டுகள் இவை யென்றும் இங்கே குறிப்பிடப் பெறுகின்றன. கலிக்கு 4, 32, 000 ஆண்டுகள், துவாபரத்துக்கு இதுபோல் இரண்டு மடங்கும், திரேதத்துக்கு மூன்று மடங்கும், கிருதயுகத்துக்கு நான்கு மடங்கும் கூறப் பெறும். தேவர்களுக்கு எல்லா யுகங்களுக்கும் பன்னிரண்டாயிரம் ஆண்டுகள் என்று கூறப்படுகிறது. (பா.9)

**ஆயுட்காலம்**

கலியில் மாந்தர்க்கு ஆயுள் நூறு என்றும், துவாபரத்தில் இருநூறு என்றும், திரேதாயுகத்தில் முந்நூறு என்றும், கிருதயுகத்தில் நானூறு என்றும் கூறும் இந்நூலில் ஆடு, குதிரை, நாய், காக்கை, கழுகு, பாம்பு, நரி போன்ற விலங்குகளுக்கும் ஆயுள் அளவைக் குறிப்பிடக் காணலாம். (பா. 10—12)

**அறிவின் மேம்பாடு**

முதல் யுகத்தில் அந்தணரும், இரண்டாம் யுகத்தில் அரசரும் மூன்றாம் யுகத்தில் வணிகரும், நான்காம் யுகத்தில் சூத்திரரும் அறிவில் மேம்படுவர் (பா. 13) என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**நான்காம் வருணத்தினர்**

அடுத்து. கலிகாலத்தில் நான்காம் வருணத்தினர் ஆகிய சூத்திரர் அறிவுமேன்மையடையும் விதங்கள் கூறப்பெறுகின்றன. கலிகாலத்தில் சூத்திரர்கள் புராணக் கதைகளைக் கற்க முற்படுவர். அத்துடன்,

> "ஓதுவர் வேத மாதி யுற்றிடற் கலியிற் பாதி
> போதக ராவர் தாமே பூதலத் தோர்கட் கெல்லாம்
> சாதக ராகித் தாமே தவத்தினைப் புரிவ ரீவர்
> மாதவ மேற்பா ராகி மற்றைய வினையை மாய்ப்பார்."(15)

என்றும் கூறுவர். கலியிற் பாதி முற்றிடின், நான்காம் வருணத்தினர் வேதமாதி ஓதுவர். பூமியிலுள்ளவர்கட்கெல்லாம் ஆசிரியராகவும், தவத்தினைச் சாதகம் செய்பவராகவும் விளங்கி மேம்படுவர் என்பர். மேலும்,

> "ஆடுவார் தீர்த்தந் தேவ ராலயம் பணிவர் தேடிப்
> பாடுவார் பத்தர் பாதம் பணிவர்கள் பரிவி னோடே
> கூடுவ ரவர்தம் மோடு குழைந்துநன் மதுரங் கூறித்
> தேடுவர் பாசந் தீர்க்குந் தேசிகன் தனையுந் தேர்ந்தே". (16)

என்றும் கூறுவர்.

இக்கலியுகத்தில் சூத்திரர்கள், இறைவன் எழுந்தருளியிருக்கும் தலங்கள் தோறும் சென்று நீராடியும், மூர்த்திகளைப் பணிந்து போற்றியும், பாடிப் பரவியும், அடியார்களின் பாதத் தூளிகளைத் தலைமேற் கொண்டு துதித்தும், இனிய சொற்களால் அவர்கட்குப் பணிவிடைகள் புரிந்தும், மறுமை யுலகையடைய மாசில்லானாகிய தேசிகனையே வாழ்த்தி வணங்கியிருப்பர் என்பது குறிப்பிடத்தக்கது. சைவ வைணவ அடியார்கள் வரலாறும், மூவர் பாடல்களும், தற்கால கோயில் வழிபாடுகளும் இவண் ஒப்புநோக்கத் தக்கன.

**வைசியர்கள் வட்டி வாங்கல்**

மூன்றாம் யுகத்தில் அறிவில் மேம்பட்டிருந்த வைசியர் வேதங்களையும் மற்ற நூல்களையும் துறந்து, மிகக் கொடுமையாக வட்டி வாங்கும் தொழிலை இந்தக் கலியுகத்தில் செய்வர் என்பர்.

> "மறப்பரே வசியர் மெல்ல வேதமு மற்றை நூலும்
> துறப்பரே நியம மற்பம் புரிவர்கள் துரிசுக் கஞ்சார்

அறக்கொடி தாக வட்டி வாங்குவ ரருளு மின்றிச்
சிறப்பொடு பூசை செய்பார் காதலால் தேவர்க்
கெல்லாம்".(17)

முன் செய்த புண்ணியத்தால் பொருள் உண்டாக இப்பொழுது இன்பம் நுகர்கிறோம்: ஆகவே அறத்தைச் செய்தே இன்பம் நுகர்வோம் என்று எண்ணிச் செய்யாமல் இருக்கும் வைசியர்கள் மிகுந்திருக்கும் இக்கலிகாலத்தில் அவருள்ளும் சிலர் பொருளினால் புண்ணியங்களையும் அறங்களையும் அற்பமாகச் செய்கிறவரும் உண்டு என்பதாக அடுத்தப் பாடல் அமைகின்றதும் ஒப்புநோக்கத்தக்கது.

**அந்தணரும் வேந்தரும் மாறுபாடு கொண்டொழுகல்**

கலியுகத்தில் அந்தணரும் அரசரும் தம் குலப் பெருமைகளை மறந்து தம் இட்டப்படியே நடப்பர். இவ் யுகத்தில் இவர்கள் மூடராயும் மூர்க்கராயும் விளங்குவர். (19)

"அருமறை தனையு மோதார் அங்கமு முணரார் நாளும்
கருமமு மியற்றா ரற்பஞ் செயவருங் காத லின்றி
இருநிதி யாசை யாலே இறைமுறை யறவே கொள்வார்
உருகியே யுலக மோம்பார் உணர்விழிந் தொறுப்பர்
தாமும்".(20)

என இவ்விருவரின் இழிநிலைகளை எடுத்துக் கூறுவர்.

வேதங்களையும் வேதத்தின் அங்கங்களையும் முறையாகக் கற்காமலும், சந்தியாவந்தனம் முதலிய நித்திய கருமங்களைச் செய்யாமலும் அந்தணர்கள் நடப்பர். இதேபோன்று பெருஞ் செல்வம் அடைய வேண்டுமென்ற ஆசையாலே வரிகளை முறையற்ற வழிகளிலே மக்களிடமிருந்து பெற்றும், மக்களை அளவுக்கு மீறித் தண்டித்தும் அரசர்கள் வாழ்வர்—என வரும் இவ்வுண்மைகளும் குறிப்பிடத் தக்கனவாம்.

இவ்விருவரின் இத்தகைய மாறுபாட்டாலும், இழிதன்மையாலும் சமுதாயத்தில் தோன்றிய மாறுபாட்டினை இப்புராண நூலாசிரியர் எடுத்துரைத்திருப்பது சிந்திக்கத்தக்கது.

**நாத்திகம் தோன்றல்**

அரசாளும் வேந்தனுடைய அநீதியால் மழைபெய்யாமலும், அதனால் உணவுப் பொருட்கள் கிடைக்காமலும் மக்கள் பசியாலும் நோயாலும் அல்லலுற்று மாய்வர். இதைக் கண்ணுற்ற

மக்கள், 'வேதங்கள் ஓதி என்ன பயன்? பூசை பண்ணி என்ன பயன்? என்று எல்லாவற்றையும் வெறுத்து அவற்றில் நாட்டமின்றி இருப்பார்கள்.

"மன்னவர் கொடுங்கோ லாக மழைபொழி யாம லேதான்
அன்னமு மரிதே யாகி யாக்கையு மழிதல் கண்டே
பன்னியென் பயன்வே தங்கள் பரமனைப் பூசை பண்ணி
என்னகண் டனமிப் போதென் றிகழ்வரே யெவரு
நொந்தே".

"பொழிந்திடு மழைதா னிங்கேபுரிந்திடின் மகமென் றெண்ணி
விரைந்துயே தியர்தம் மாலே வேள்வியுஞ் செய்வி யார்தாம்
ஒழிந்தவர் தம்மை வேத விதியினை யுணர்ந்து நீக்கார்
ஒழித்திலார் தம்மை வேத விதியினை யுணர்ந்தோம் பாரே".
(21-22)

என இவ்வாறு வைதிகர்களை அசட்டை செய்வதும் அவைதிகர்களைப் போற்றுவதும் இக்காலத்தில் நிகழும் எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும், வேதியர் மெல்ல மெல்ல வேதங்களை மறந்து விடுவார்கள். நான் என்னும் அகங்காரமே மிகுதியாகும். பணத்திற்காக வேதத்தையும் விற்பார்கள், பிற சமயங்களையும் சார்வார்கள் (பா. 25—30) எனப் பலகேடுகள் கூறப்பெறுகின்றன.

கலியில் விளையும் மாபாதகங்கள் பலவற்றைப் பட்டியலிட்டுக் காட்டும் இப்பகுதியில் பெண்களின் குற்றங்கள், சிறியோர் பெரியோர்க்கு அடங்காமை, மனைவிக்குப் பயந்து பிறருக்கு உதவாத கணவன் தன்மை, பிற சமயங்களை அவமதித்தல், சமய சமரசமின்மை, தீமைகளின் வெற்றி, நோய்ப் பெருக்கம், ஈனர் பெருகுதல், நல்லோர்களை இகழ்தல், விக்கிரகங்களைத் திருடல் (பா. 41-70) போன்றன விளக்கப் பெறுகின்றன.

**தலங்களை வழிபடுங்கள்**

இத்தகைய கலியின் துன்பம் நீங்க வேண்டுமானால் புண்ணிய தலங்கள் தோறும் சென்று வழிபட வேண்டும் என்பதையும் வலியுறுத்துவர்.

"சிவனடிக் கன்பர் தம்மைச் செறிந்தடி பணிந்தன் பாலே
அவர்தமக் கன்ன பான மருத்தினு மார்வங் கூர்ந்தே
சிவனது பதிக டோறுஞ் சென்றுகந் தாடித் தீர்த்தம்
அவனடி தொழினு மஞ்சிகலிதனி யாதப் பாலாம்".

"திருப்பதி தோறும் சென்று சிறப்புறுந் தீர்த்த மாடி
விருப்புற விமலன் பாதந் தொழுதுவெவ் வினையை
வெல்வார்". (71-72)

மேலும், பிரபஞ்ச உற்பத்தி, அண்டபேதம், நவகண்டங்களின் பிறப்பு, யுக தருமங்கள், கலிகாலக் கொடுமைகள், தேவப் பிறப்பு வகைகள், பலவித காலக் குறிப்புக்கள், வேள்விச் சிறப்புக்கள் முதலிய பல அரிய செய்திகளும், சமயக் கருத்துக்களும், மெய்ந் நூல்களில் பல சிறப்புப் பகுதிகளின் விளக்கங்களும், பிறவும் இப்புராணத்தால் தெளிவுறுகின்றன. இவ்வாறு இதிலடங்கியுள்ள அருமைகள் மிகப் பலவாகும்.

**2. திருவாரூர்ப் புராணம்**

பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்திருந்த அளகைச் சம்பந்த முனிவர் இயற்றியது திருவாரூர்ப் புராணமாகும். இவர், நிரம்ப அழகிய தேசிகரிடத்தும் அவருடைய குருவாகிய கமலை ஞானப்பிரகாசரிடத்தும் மாணாக்கராக இருந்தவர். அவர்களைப் போலவே இவரும் தலபுராணம் பாடியவர். சம்பந்த முனிவர் பாடியதாக இவ்வொரு தலபுராணமே கிடைக்கின்றது. திருவாரூரில் ஞானப்பிரகாசரிடம் பயின்ற காலத்தில் இவர் இப்புராணத்தை இயற்றியுள்ளார்.

பாயிரம் உள்பட 111 சருக்கங்களும் 2929 பாடல்களும் கொண்ட ஒரு பெருநூல் இது. பாயிரப் பகுதி 35 பாடல் கொண்ட மிக விரிவானது. அக்கால நூல்களில் இவ்வளவு பாடல்கள் அமைப்பதில்லை. பிற்காலப் புராணங்களிலேயே இவ்வளவு விரிவு காணப்படும்.

வாதாவி விநாயகர், மாற்றுரைத்த விநாயகர், வன்மீக நாதர், அம்பிகை அல்லியங்கோதை, தியாகராசர், கமலாம்பிகை, இலக்குமி, சரசுவதி, நந்திதேவர், சண்டேசர், காரைக்காலம்மை, சேரமான், மெய்கண்டகுரவர், நிரம்பஅழகிய தேசிகர், கமலை ஞானப்பிரகாசர் என இவ்வாறு பலருக்கும் துதிப்பாடல்கள் அமைகின்றன. அவையடக்கம், நூல் செய்த காரணம், நூற் பெயர், வழி, பயன், வாழ்த்து, ஆக்கியோன் பெயர், காலம் என விரிவாக நீண்டு அமைகிறது இப்பகுதி.

இப்புராணத்தில் அமைந்த 111 சருக்கங்களும், பல பொருள் பற்றி அமைந்துள்ளன. அவை, பாயிரப் பகுதி 5 சருக்கங்கள்; மூர்த்தங்கள் 9 சருக்கங்கள்; தீர்த்தம் 26 சருக்கங்கள்; தலம் 2

சருக்கங்கள்; பீடம் 2 சருக்கங்கள்; கோட்டம் 5 சருக்கங்கள்; லிங்கம் அமைத்தது 28 சருக்கங்கள்; பேறு பெற்றோர் 28 சருக்கங்கள்; பிற வகையில், விழா, பிரமயாகம், திருமணம், கலியுகத் தியற்கை, பிரதக்கிணமகிமை, புராணம் கேட்டல் என்ற 6 சருக்கங்கள் என இவ்வாறு அமைந்துள்ளன.

தீர்த்த மகிமை, சிவலிங்கப் பிரதிட்டை ஆகியவை பற்றி இந்நூலில் கூறியுள்ள அளவுக்கு அதிகமாக வேறு எந்தப் புராணத்திலும் இல்லை.

**துதிப்பாடல்கள்**

ஒவ்வொரு சருக்கத்திலுமுள்ள துதிப்பாடல்கள் குறிப்பிடத் தக்கன. இவ்வாறு பல பாடல்கள் இந்நூலில் உள்ளன.

"தெய்வப் பொருளே திருவால நீழல்
மெய்வைத்த அறம்பகர் வேதியனே
மைவைத் தொளிரும் மணிகந்தரனே
சைவச் சுடரே சரணம் சரணம்".

இது, மகாலட்சுமி செய்த துதிகளில் ஒன்று.

"நந்தா விளக்கொளியே ஞாலத் துயிர னைத்தும்
தந்தா ரருள்புரியும் தாயென் றினிதெடுத்து
முந்தா ரணமுழுதும் ஏத்தும் முழுமுதலே
சிந்தா மணியே தெவிட்டாத தீங்கரும்பே".

"கோவாத தெய்வக் குலமா மணிமுத்தே
நாவா லெடுத்தேத்தி நைந்துருகிப் போற்றுகின்ற
பாவாணர் யாரும் படைத்த செழுநிதியே
தூவாத வீட்டின்ப மாகுந் தனிப்பொருளே".

இவை அம்பிகைத் தோத்திரமாகும். தன்மநிட்டை என்ற பெண் உமாதேவி தன்முன் தோன்றியபோது பாடிய பத்துப் பாடல்களிலுள்ளவை.

**நகரச்சிறப்பு**

நகரச் சிறப்பு என்ற சருக்கம் 155 பாடல்களைக் கொண்டது. கம்பராமாயணத்திலுள்ளதை விட மிகுதியானது. நாட்டுச் சிறப்பில் காவேரியைச் சிறப்பித்துப் பத்துப் பாடல்கள் உள்ளன.

"ஐயமில் நூல்வரம்பின் அமையலங் காரமேய்ந்து
துய்யமா மணிபொன் னாதிமங்கப் பொருள் துதைந்து

மையில்சீர் வனப்புமல்கி வண்டொடை மலிந்து மேலோர்
செய்யுள்போற் கிடந்தவீதிச் சிறப்பினைச் சிறிது
சொல்வாம்''

என்னும் பாடல், கம்பரின் கோதாவரி வருணனையைப் போன்ற தாகும். வேளாளர் வீதியானது, வற்றாத வைகை போன்றது என்றும், சொற்றமிழ் நலந்தெரிக்கும் என்றும்,

''வேதஓதை, நூல் ஆகம ஓதை, மெய்ப்புராண
ஓதை, மூவர் பாவோதை, நம்சேரமா னுரைத்த
ஆதியாந் திருவுலா முதலருந் தமிழோதை,
தீது தீர்திரு வாசகந் திருந்திசை யோதை''

இவை கொண்டது என்றும் கூறும் பகுதிகள் சுவையானவை.

தவமகிமைச் சருக்கத்தில் பாடல்தோறும் தலத்தின் பெயர் கள் பல கூறுகிறார் ஆசிரியர். மேலும், பூசையின் சிறப்பைக் குறித்துப் பல பாடல்கள் கூறுவர்.

''ஈசனைப் பூசை செய்யில் இறந்திடாப் பவமொன் றில்லை
ஈசனைப் பூசை செய்யில் எய்திடாப் பதமொன் றில்லை
ஈசனைப் பூசை செய்யில் எய்திடாச் சித்தி யில்லை
ஈசனைப் பூசை செய்யார் எய்திடா நிரய மில்லை''

என்பது கோகருணச் சருக்கத்திலுள்ள ஒரு பாடல்.

இத்தலத்தில் பூசித்துப் பேறு பெற்றோர், இலிங்கம், தீர்த்தம் அமைத்து வழிபட்டோர் பற்றிய விரிவான வரலாறுகள் இந்நூல் முழுமையும் காணலாம்.

**கலியுகச் சருக்கம்**

நூற்றுஒன்பதாம் சருக்கமாகிய கலியுகச் சருக்கம் குறிப்பிடத் தக்க பகுதியாகும். இதில் 75 பாடல்கள் உள்ளன. சனற்குமாரன் முதலான முனிவர் கலியின் வலிமைக்கு அஞ்சிப் பிரமன் சொல்லியபடி திருவாரூரில் வந்து பூசித்துத் தவம் புரிந்தார்கள் என்பது இதில் கூறப்பெறும் செய்திகளாகும்.

**மனிதரின் ஆயுட்காலம்**

முதல் மூன்று யுகங்களில் வாழ்ந்த மக்களின் சிறப்பையும் தருமத்தின் சிறப்பையும் சொல்லியபிறகு, கலியுகத்தில் மக்களும் இறக்கிறார்கள், தருமங்கள் அழிகின்றன என்பன விரித்துச் சொல்லப்படுகின்றன. மக்களுக்கு வயது பல ஆயிரம் என்று

இருந்த நிலை மாறி, நூறு வருடமாகக் குறையும். அவர்களும் பலவிதங்களில் இறப்பார்கள்.

"உருவுறுமுன் னிறப்பர், உருத்திரண் டிறப்பர், கண்வாய்
கரமுத லுறுப்பு முற்றிக் கருவினுளிறப்பர், தோற்றம்
வருபொழு திறப்பர், தோன்றி வந்துட னிறப்பர், வந்தாங்
கருநிலத் தொருநா ளாகிச் சிலநாளோய்ந் திறப்பர் யாரும்".

"பாலராய் மாய்வர், பைய நடைபயி லாது மாய்வர்,
வாலராய் மாய்வர், காளைப் பருவத்தின் மாய்வர், கூறுங்
கோலராய்க் கையிற் பற்றுங் கோலராய்க் குந்திச் செல்லுங்
காலராய்ப் பிணிய ராகிக் கருத்தறி வழிந்து மாய்வர்".

என இவ்வாறு கரு உண்டாவது முதலாக, எவ்வெவ்வா றெல்லாம் இக்கலியுகத்தில் இறப்புகள் நேரிடும் என்பதைக் கூறுகிறார் ஆசிரியர்.

**கலியின் கொடுமைகள் சில**

"இந்தவெங் கலியுகத் தியற்கையை யிசைப்ப தென்னே?
தந்தைதாய் மாற்றங் கேளார். அன்னவர் தாளிற் றாழார்
மைந்தர்தாம் மூத்தோர் தம்மை வணங்கிடார் இளையர், வாட்கண்
பைந்தொடி மகளிர் கேள்வர் பணிந்தவ ருரையின் நில்லார்".

"தேசிகர்ப் போற்றல் செய்யார், சிவபிரான் செம்பொற் றாள்கள்
பூசனை புரிதல் செய்யார், கண்டிகை புனைதல் செய்யார்,
ஆசில்நீ றணிதல் செய்யார், அஞ்செழுத் தியம்பல் செய்யார்,
ஈசனா லயம்வலம் கொண்டு இறைஞ்சுதல் செய்யார் என்றும்",

"யாணர் மங்கலஞ் செயாமு னிளஞ்சிறு மகளிர் காம
வேணவா வுற்று மாழ்கி மெலிவர், பன் னிரண்டி யாண்டிற்
பூணிழை மங்கை மாதர் புதல்வரைப் பெறுவர், பொய்தீர்
நாணமே யாதி நான்கினன் கொரீஇ நவையி னிற்பார்".

இக்கலி காலத்தில் சிறியவர்கள் தம் தாய்தந்தையரின் சொல்லைக் கேட்க மாட்டார்கள். அவர்களுக்குக் கீழ்ப்படிய மாட்டார்கள், பெரியவர்களை மதிக்க மாட்டார்கள், பெண்கள் கணவன் சொல்படி நடக்க மாட்டார்கள், யாரும் குருவை மதிக்கமாட்டார்கள், சிவபூசைகளை யாரும் செய்ய மாட்டார் கள், நீறணிவதும், அஞ்செழுத்தினைக் கூறுதலும், ஆலய

வழிபாடு செய்வது செய்ய மாட்டார்கள், இளம் பெண்கள் திருமணம் செய்வதற்கு முன்பே காம வேட்கையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு மெலிவார்கள்; பன்னிரண்டு வயதிலேயே அவர்கள் குழந்தையைப் பெற்றெடுப்பார்கள்; நாணம் முதலிய பண்புகள் அவர்களிடம் பார்த்தலரிது என இவ்வாறு கூறும் பகுதிகள் அறியத்தக்கன.

இக்கலியுகத்தில் நீதிகுன்றாது வாழ்பவரே துன்பமடைவார்கள். நல்லவருக்கே தீமை வரும், தீயவர் நன்கு வாழ்வார்கள் எனவரும் பாடல்களும் குறிக்கத்தக்கன.

> "தருமமே பொருளென் றெண்ணிச் சத்தியந் தவறா தோம்பி
> விரதமே பயின்று நித்தம் நியமங்கள் விதியிற் பேணி
> அருள்புரிந் துதவி யாற்றி யனைவர்க்கு மிதமே செய்யும்
> பெரியவர் தமக்கே துன்பம் பெரிதுவந் தடையு மன்றே"

என நல்லோர் அடையும் துன்பத்தை விளக்குவர் ஆசிரியர், மேலும்,

> "பூதல மெங்கும் நோயுங் காப்புமே பொருந்திக் கள்ளுண்
> வீதிதோ றடகு காய்தீங் கனியென விற்கு மன்றே".

என வரும் பாடற் பகுதியில், இக்கலி காலத்தில் எங்கும் நோயும் அதற்கு மருந்து தேடுதலுமே மிகுதியாக இருக்கும் என்றும், நாட்டில் வீதிகள்தோறும் கள்ளும் மதுவும், இறைச்சியுணவுகளும் வெற்றிலைப்பாக்கு போல கடையெங்கும் மலிந்து விற்கப்படும் என்றும் குறிப்பிடும் பகுதிகள் அறியத்தக்கன.

இந்நூல் பாடிய காலம் கி.பி. 1592. அதாவது 400 ஆண்டுகளுக்கு முன். அக்காலத்தில் இத்தகைய சமூக மாற்றங்கள் இருந்திருக்குமா என்று தெரியவில்லை. இன்றைய நாட்டின் நிலையை நேரே கண்டு கூறியது போன்றே இவை இருக்கின்றன. கருவிலேயே குழந்தைகள் இறப்பது பற்றியும், இளைய தலைமுறையினரின் இழிநிலை பற்றியும், சமயப் பற்றின்மை பற்றியும், நீதியின்மை பற்றியும், ஒழுக்கமின்மை பற்றியும், நோய்களின் பெருக்கம் பற்றியும், கள்ளும் மலிவுவிலை மதுவைப் பற்றியும். மிதமிஞ்சிய ஊண் உண்ணல் பற்றியும் இந்நூலாசிரியர் அன்றே உணர்ந்து பாடியிருப்பது வியப்பானதாகும்.

இதே போன்று, முன்பு கூறிய கமலாயச் சிறப்பு என்னும் தலபுராணத்திலும் அந்நூலாசிரியர் மறைஞான சம்பந்தர்

(கி.பி. 1546) இக்காலக் கொடுமைகளை விளக்கும் பகுதிகள் ஒப்பு நோக்கத்தக்கன.

வரகுணராம பாண்டியர் தம் இலிங்கபுராண நூலில் (கி.பி. 1560) முதற்காண்டம் அத். 39 இல் 13 பாடல்களில் இவ்வாறே கலியுகத்தியற்கையை எடுத்துக் கூறியிருப்பதும் இவண் ஒப்புநோக்கத்தகும்.

இவ்விரு நூல்களைத் தொடர்ந்தே அளகைச் சம்பந்த முனிவரும் இவற்றைத் தம்முடைய திருவாரூர்ப் புராணத்தில் (கி.பி. 1592) குறிப்பிட்டுள்ளார் எனலாம்.

### 3. திருவாரூர்த் தியாகராச லீலை

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தம்முடைய முப்பதாம் வயதில் திருவாரூரில் சென்று தங்கிய போது அங்கிருந்த அன்பர்களின் வேண்டுகோளின்படி இப்புராண நூலை இயற்றினார். வடமொழியிலிருந்த நூலைத் தமிழ் நடையாகப் பெயர்த்து எழுதுவித்து, அவற்றை அடிப்படையாகக் கொண்டு இக்காப்பியத்தை எழுதி அமைத்துள்ளார் இவர்.

இந்நூலில் இக்கவியரசர் தாம் அங்கங்கே கண்டும் கேட்டும் கற்றும் தொகுத்த பலவகைச் செய்திகளைப் பலவகை யமைப்புக்களில் இணைத்து அழகுபட இயற்றியுள்ளார். மொத்தம் 699 பாடல்கள் இதிலுள்ளன. மொத்தம் 360 லீலைகள் எனினும் இவருக்குக் கிடைத்த வடமொழி நூலிலிருந்த பகுதிகளுக்கு மட்டுமே இவர் தமிழாக்கம் செய்துள்ளார். மற்ற பகுதிகள் கிடைக்கவில்லை.

"வலம்புரி கழனி நீரூர் வளவர்கோ னாட்டிற் காரூர்
நலம்புரி மாடந் தேரூர் நகுமறு குடைய சீரூர்
கலம்புரி முலையார் போரூர் கணையடு சிலையார் சேரூர்
நிலம்புரி முலையார் போரூர் கணையடு சிலையார் சேரூர்
நிலம்புரி தெய்வப் பேரூர் நிறைசெல்வத் திருவா ரூரே".

"பொழியருள் ளந்த ணாரூர்ப் பொலிவையென் புகல்கோ நாளும்
அழிவிலத் தலத்துக் கொப்பா வமர்தல மெங்கு மின்று
கழிதரு மபிமா னத்தாற் கமலைக்கு மொப்புண் டென்று
மொழிபவர் நெடும றைக்கு முழுவிரோ தியர்க ளாவார்.".
(நைமிசப்படலம் பா. 37, 38)

எனத் திருவாரூரின் சிறப்பினை எடுத்துரைக்கின்றார் ஆசிரியர்.

பெருங்காப்பிய இலக்கண அமைதிகளோடு இந்நூலைச் செய்யத் தொடங்கின பிள்ளையவர்கள், நாட்டுவளம், நகர் வளம் கூறுமிடங்களில் தமது நாவிறு முழுவதையும் காட்டியுள்ளார்.

திருநாட்டுப் படலத்தில் ஐந்திணைகளை வருணிக்கும் பகுதியும், திணைமயக்கம் கூறும் பகுதியும், திருநகரப் படலத்திற் பொது வர்ணனையும், புறநகர் இடைநகர் அகநகர் எனப் பிரித்துப் புனைந்து கூறுவதும், ஒவ்வொரு சாதியார்க்குமுரிய வீதிகளைக் கூறுகையில் அவரவர் இயல்புக்கேற்றபடி புனைவதும் பிறவும் சுவை நிரம்பி விளங்கும்.

"பழுதின் மாணவர்க் கிலக்கண முணர்த்துநர் பலரால்"
"படாத காப்பியப் பாடஞ்சொல் வார்களும் பலரால்"
"பாய சாத்திர பாடமோ துநர்களும் பலரால்"
"ஆகமஞ் சாற்றுநர் பலரால்" (திருநகரப். 141-144)

"சடையர் நீற்றொளி மேனியர் கண்மணி தழைந்த
தொடைய ரைந்தெழுத் தழுக்கிடு மனத்தினர் தூய
நடையர் வாய்மையர் நற்றவர் நறுநறுங் காவி
உடையர் வாழ்திரு மடங்களும் பற்பல வுளவால்".
(திருநகரப். 146)

என்பன போன்ற பாடல்கள் ஆசிரியர் தாம் நேரில் கண்ட காட்சிகளையே புனைந்துரைப்பதாக உள்ளன.

திருக்கோயிலினை வருணிக்கும் பகுதி பலவகைக் கற்பனைகளோடு விளங்குகின்றது. பலவகை மரங்களைப் பற்றிய உவமை முதலியனவும், முனிவர்களது இயல்பும், சூத முனிவர் பெருமையும், அவர்பால் முனிவர் பணிந்து கேட்கும் பண்பும் நைமிசப் படலத்தில் காணப்படும்.

பின்பு லீலைகள் தொடங்குகின்றன. அவற்றில், நரசிங்கச் சோழ னென்பவன் வேட்டைமேற் சேறலும், சங்கர சேவகச் சோழன் சிவபெருமானைப் பணிந்து வரம் பெறுதலும், தியாகராசப் பெருமான் அரசத் திருக்கோலம் கொள்ளுதலும், அவரோடு வந்த சேனைகளின் சிறப்பும், அவர் மந்திரிகளுக்கு இடும் கட்டளை வகைகளும், பல நதிக் கரைகளிலுள்ள மறையோர்களின் பெருமையும், பலநாட்டு மன்னர்கள் சீரும், அவர்கள் நாட்டு வளங்களும் பிறவும் இனிய சொற்பொருளமைதியுடன் கூறப்படுகின்றன.

அளகைச் சம்பந்த முனிவர் இயற்றிய திருவாரூர்ப் புராண நூல் கி.பி. 1895 ஆம் ஆண்டு சென்னையில் அச்சிடப் பெற்றுள்ளது. அதில், பின்வரும் நூல்கள் அச்சிட்டு வெளிப் படுத்தப்படும் என்று ஒரு விளம்பரம் காணப்படுகிறது. அவை, முந்நூற்றறுபத்து நான்கு லீலை, கமலாலய மான்மியம்' தேவாசிரய மான்மியம், கந்தபுரமான்மியம், சமற்காரபுர மான்மியம், ஆடகேச்சுர மான்மியம், க்ஷேத்திர வரலாறு, தேவயாகபுர மான்மியம், கலிசெல்வா நகர மான்மியம், முசுகுந்தபுர மான்மியம், தியாகராச மான்மியம், இராமகயா மான்மியம், புலிவல மான்மியம், ஸ்ரீபுரமான்மியம், அஜபா ரகசியம் என்பன.

புலிவலம் என்பது திருவாரூருக்குத் தெற்கேயுள்ள ஒரு சிற்றூர். சிவாலயமுடையது· மேற்கண்ட நூல்கள் அனைத்தும் வடமொழி நூல்கள் என்றே தெரிகிறது.

இவற்றுள், லீலை என்பதில் சில லீலைகள் மட்டும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் செய்யுளாக மொழிபெயர்க்கப்பட்டு ஐயரவர்களால் தியாகராச லீலை என்ற பெயரில் வெளியிடப் பெற்றுள்ளது. பின்னர் உரைநடையாக மூன்று பாகங்கள் வெளிவந்துள்ளன,

**இடும்பாவனப் புராணம்**

வேதாரணியம்-முத்துப்பேட்டைச் சாலையில் உள்ள தலம் இடும்பாவனம் இடும்பன் வழிபட்ட தலம். பிரமன், அகத்தியர் எமன், இராமர் ஆகியோர் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது.

பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் இத்தல புராணத்தை இயற்றியளித்துள்ளார்.

**உறையூர் புராணம்**

திரிச்சிராப்பள்ளி நகரின் ஒரு பகுதி உறையூர். இதுவே முக்கீச்சுரம் எனப்பெறும். சோழ மன்னர்களின் தலைநகரமாக இவ்வூர் விளங்கி வந்தது. புகழ்ச்சோழ மன்னர் ஆண்ட இவ்வூரிலுள்ள இறைவனை மூவேந்தரும் வழிபட்டனர் என்பர். உதங்க முனிவருக்கு இறைவன் ஐந்து காலங்களில் ஐந்து வண்ணங் களோடு காட்சி நல்கிய தலம்.

வீரவாதித்தன் என்னும் சோழ மன்னன் உலா வரும்போது அவனது யானையை கோழியொன்று வென்றமையால் இத்தலம் கோழியூர் என்னும் பெயர் பெற்றது.

கருடன், காசிபர் மனைவி கத்துரு, கார்க்கோடகன் ஆகியோர் பூசித்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இத்தல புராணத்தை இயற்றியுள்ளார். இதில் 15 படலங்களும் 1417 பாடல்களும் உள்ளன. காப்பிய உறுப்புக்கெல்லாம் இப் புராணத்தில் அமையப் பாடியுள்ளார். மலை, நாடு, நகர், ஆறு முதலியன நன்கு புனைந்து கூறப்பட்டுள்ளதன்றி இப்புராணத்தில் சூரியோதயம், சூரியாஸ்தமனம், சந்திரோதயம், மணம் முதலிய பலவகையான காப்பிய உறுப்புக்கள் அமைந்துள்ளன. சிவபெருமான் தோத்திரங்கள் பலவகையில் இடையிடையே அமைந்துள்ளன.

பழைய உறையூர்ப் புராணம் ஒன்று இருந்ததாகவும் கூறுவர்.

**கடம்பநாத புராணம்**

திருச்சியிலிருந்து ஈரோடு செல்லும்வழியில் உள்ள குழித்தல்-குழித்தலை என வழங்கும் கடம்பர்கோயில். கடம்பந்துறை என்பது தேவாரப் பாடலில் கூறும் பெயர். கடம்ப மரம் தல மரமாதலால் இப்பெயர் பெற்றது.

கண்ணுவ முனிவருக்கும் தேவர்களுக்கும் சிவபெருமான் கடம்ப மரத்து அடியிலிருந்து காட்சி கொடுத்த இத்தலத்திற்கு இரண்டு தலபுராணங்கள் இயற்றப் பெற்றுள்ளன.

துறைசை ஈசான தேசிகர் இயற்றிய இப்புராணத்தில் 17 படலங்களும் 639 பாடல்களும் உள்ளன.

**கீழ்வேளூர்த் தலபுராணம்**

திருவாரூரிலிருந்து நாகப்பட்டினம் செல்லும் வழியில் உள்ளது கீழ் வேளூர். கீவளூர் என்று வழங்குகிறது. பதரி காரண்யம் (இலந்தை மரக்காடு) என்றும் பெயர். முருகன் வழிபட்ட தலம். அகத்தியருக்கு வலது பாத தரிசனம் தந்த தலமும் இதுவே. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

இத்தலபுராணத்தில் 45 அத்தியாயங்கள் உள்ளன.

**குடவாயில் தலபுராணம்**

தஞ்சை மாவட்டம் கொரடாச்சேரி அருகே உள்ளது குடவாயில். குடவாசல் என வழங்குகிறது. கருடன், சூரியன், தாலப்பிய முனிவர், பிருகு முனிவர் போன்றோர் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது.

உலகப் பிரளய காலத்தில் இறைவன், உயிர்கள் அனைத்தையும் அமிர்தகுடம் ஒன்றிலிட்டு அக்குடத்தின் வாயிலில் (முகத்தில்) சிவலிங்கமாக இருந்து காத்தார். குடத்திலிட்டுக் காத்த உயிர்களை, மீண்டும் படைப்புக் காலத்து வெளிப்படுத்தத் தொடங்கியபோது குடம் மூன்றாக உடைந்து முதற் பாகமாகிய அடிப்பாகம் விழுந்த இடம் குடமூக்கு (கும்பகோணம்) ஆகும். நடுப்பாகம் விழுந்த இடம் கலையநல்லூர் ஆகும். குடத்தின் முகப்பு (வாயில்) பாகம் விழுந்த இடமே குடவாயிலாகும் என்பது தலவரலாறு.

இத்தலபுராணம் இயற்றியவர் போன்ற பிற விவரங்கள் தெரியவில்லை.

**கும்பகோணப் புராணம்**

சோழநாட்டுத் தென்கரையில் உள்ளன மிகப் பெரிய தலம் கும்பகோணம், தமிழில் குடமூக்கு என்று அழைக்கப் பெறும். "கோயில் பெருத்தது கும்பகோணம்" என்பது முதுமொழி. சைவம், வைணவம் ஆகிய இரு சமயப் புகழும் தொண்ட பெரும் பதி.

பேரூழிக் காலத்தில் பிரமனின் வேண்டுகோளுக்கிணங்கி இறைவன் தந்த அமுத கலசம் தங்கிய இடமாதலின் இத்தலம் கும்பகோணம் என்று பெயர் பெற்றது. இத்தலத்தில் 16 கோயில்களும் 16 தீர்த்தங்களும் உள்ளன.

மூர்க்க நாயனார் தொண்டு செய்து வாழ்ந்ததும் ஏமரிஷி பூசித்ததுமான தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

இத்தல வரலாறுகளை விளக்கி 4 தலபுராணங்கள் எழுந்துள்ளன. அவை :

1. கும்பகோணத் தலபுராணம் : இந்நூல் 1406 பாடல்களைக் கொண்டது. பழையது. இன்னும் அச்சாகவில்லை. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

2. கும்பகோணப் புராணம்: இந்நூல் அகோர தேவர் (17 நூ.) என்பவரால் இயற்றப்பட்டது. இதில் 13 படலங்களும் 1118 பாடல்களும் உள்ளன.

3. கும்பகோணப் புராணம்: இந்நூல் ஒப்பிலாமணிப் புலவர் (18 நூ.) அவர்களால் இயற்றப்பட்டது.

4. திருக்குடந்தைப் புராணம்: இத்நூல் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டது. இதில் 70 படலங்களும் 2384 பாடல்களும் உள்ளன. அச்சானது. ஆயினும் கிடைப்பதில்லை.

**கோட்டாற்றுப் புராணம்**

திருநள்ளாறு தலத்திலிருந்து தொலைவிலுள்ளது கோட்டாறு என்னும் தலம். கொட்டாரம் என வழங்குகிறது. பழைமையான கோயில். வெள்ளை யானை (ஐராவதம்) வழிபட்ட தலம். வெள்ளை யானை தன் கோட்டினால் மேகத்தை இடித்து மழையை ஆறுபோலச் சொரிவித்து வழிபட்டதால் இத்தலம் கோட்டாறு எனப் பெயர் பெற்றதென்பர்.

இத்தலபுராணம் அப்துல் காதிறு நாவலரால் இயற்றப் பெற்றதாகும்.

**சக்கரப்பள்ளித் தலபுராணம்**

கும்பகோணத்திலிருந்து தஞ்சை செல்லும் வழியில் உள்ளது ஐயம்பேட்டை என்னும் ஊர். இங்குள்ள கோயிலே சக்கரப் பள்ளி. திருமால் பூசித்து இறைவனிடம் சக்கரம் பெற்ற தலமாதலால் இப்பெயர் பெற்றது. சக்கரவாளப் பறவை வழிபட்டதாலும் இப்பெயர் பெற்றதென்பர். சம்பந்தர் பாடல் பெற்றது. சயந்தனும் தேவர்களும் வழிபட்ட தலம்.

இத்தலபுராணம் இயற்றியோர் மற்றும் பிற விவரங்கள் அறியக் கூடவில்லை.

**சிக்கல் தலபுராணம்**

திருவாரூரிலிருந்து நாகப்பட்டினம் செல்லும் வழியில் உள்ள தலம் சிக்கல். வசிட்டர், காமதேனுவின் வெண்ணெயினால் சிவலிங்கம் அமைத்து வழிபட்டு, பூசை முடிவில் அதையெடுக்க முயன்றபோது முடியாமற் சிக்கிக் கொண்டமையின் சிக்கல் என்று பெயர் பெற்றது. மல்லிகை வனம் இதன் வேறு பெயர். தலமரம் குடமல்லிகை. சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

இத்தலபுராணம் இயற்றியவர் போன்ற பிற விவரங்கள் கிடைக்கவில்லை.

**சித்தாய்மூர்ப் புராணம்**

திருவாரூரிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் வழியில் உள்ளது திருச்சிற்றேமம் என்னும் தலம். சிற்றாய்மூர், சித்தாய் மூர் என வழங்குகிறது. பிரமரிசி, சித்தர்கள் வழிபட்ட தலம், சம்பந்தர் பாடல் பெற்றது.

இத்தலபுராணம் இயற்றியவர் மற்றும் விவரங்கள் தெரிய வில்லை.

**செவ்வந்திப் புராணம்**

திரிசிராப்பள்ளி என்னும் தலம் காவிரிக்கரையிலுள்ள பெரிய தொரு நகரமாகும். திரிசிரன் (மூன்று தலைகளைக் கொண்ட அசுரன்) வழிபட்ட இடமாதலின் இப்பெயர் பெற்றது. தென் கயிலாயம், தக்ஷிண கைலாசம் என்றும் பெயர்.

பிரமன், இந்திரன், சடாயு, சப்தரிசிகள், திரிசிரன், சாரமா முனிவர், மௌனகுரு, தாயுமானவர் போன்றோர் வழிபட்ட தலம் சம்பந்தரும் அப்பரும் பதிகம் பாடியுள்ளனர்.

இத்தலத்திற்குச் சைவ எல்லப்ப நாவலர் இயற்றியதே செவ்வந்திப் புராணம். இதில் 14 சருக்கங்களும் 550 பாடல்களும் உள்ளன.

**சேற்றூர்ப் புராணம் என்னும் சேறைத் தலபுராணம்**

கும்பகோணம் அருகேயுள்ள தலம் சேற்றூர். இதுவே சேறை ஆயிற்று. கோயில் உடையார் கோயில் என வழங்குகிறது· மார்க்கண்டேயர், தௌமிய முனிவர் ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர் என்பர். சம்பந்தர், அப்பர் பாடல்பெற்ற தலம்.

பொன்னாயிரங் கவிராய மூர்த்திகள் இயற்றியுள்ள இத்தல புராணத்தில் 30 படலங்களும் 1103 பாடல்களும் உள்ளன.

**தருமபுரத் தலபுராணம்**

காரைக்கால் அருகேயுள்ள தலம் தருமபுரம். சம்பந்தர் 'மாதர் மடப்பிடி' என்னும் யாழ்முரிப் பதிகம் பாடியருளிய தலம் இதுவே. மார்க்கண்டேயரின் உயிரைப் பறித்த பிழை

நீங்க எமன் (தருமன்) வழிபட்ட தலமாதலின் தருமபுரம் என்று பெயர்பெற்றது. திருநீலகண்ட யாழ்ப்பாணரின் அவதாரத் தலம்.

நான்முகன், தருமபுத்திரர் ஆகியோர் வழிபட்ட இத்தலத்திற்குரிய புராணத்தை சங்கரகுமார முனிவர் இயற்றியுள்ளார்.

**தலைச்சங்காட்டுப் புராணம்**

ஆக்கூர் திருவலம்பரம் ஆகியவற்றுக்கு அருகிலுள்ளது தலைச்சங்காடு. கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக்கோயில். சங்குவனம், சங்காரண்யம், தலைச் செங்கானம் என்பன வேறு பெயர்கள். மூலவர் சங்கு போன்ற உருண்டையான வடிவில் உள்ளார். சங்கு தீர்த்தம் புகழ் பெற்றதாகும். திருமால் சிவபெருமானைப் பூசித்து 'பாஞ்ச சந்யம்' என்னும் சங்கினைப் பெற்றார் என்பது வரலாறு. சம்பந்தர் பாடல் பெற்றது.

சைவ எல்லப்ப நாவலர் இத்தல புராணத்தை இயற்றியுள்ளதாக அறிகிறோம். ஆயினும் கிடைக்கவில்லை.

**திருஆலூர்ப் பசுபதீச்சுரப் புராணம்**

கும்பகோணத்துக்கு அருகேயுள்ள தலம் பசுபதீச்சுரம். பசுக்கள் பூசித்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது.

பிரமன், சப்தரிசிகள், தேவர்கள், இந்திரன், சூரியன், நவக்கிரகங்கள், வசிட்டர், காமதேனு ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர் என்பர்.

இப்புராணம் இயற்றியோர் மற்றும் விவரங்களை அறிய இயலவில்லை.

**திருகடவூர்ப் புராணம்**

மயிலாடுதுறையிலிருந்து தரங்கம்பாடி செல்லும் வழியில் உள்ளது திருக்கடவூர். இது திருக்கடையூர் என வழங்குகிறது. அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்று. மார்க்கண்டேயருக்காக இறைவன் எமனை உதைத்தருளிய தலம்.

கடபுரி, வில்வாரண்யம், பிரமரந்திரத் தலம், பாபவிமோசன புண்ணிய வர்த்தம் என்பன வேறு பெயர்கள்.

அகத்தியர், புலத்தியர், வாசுகி, துர்க்கை வழிபட்ட தலம் பிரமனுக்கு உபதேசம் செய்த இடம். குங்கிலியக்கலய நாயனார்,

காசிநாயனார் ஆகியோர் முத்தியடைந்த தலம். அபிராமி அந்தாதி பாடப் பெற்ற திருத்தலம். மூவரும் பதிகம் பாடியுள்ளனர்.

இத்தலவரலாறு குறித்து இரண்டு தலபுராணங்கள் எழுந்துள்ளன. முதலாவது சுப்பிரமணிய கவிராச மூர்த்திகள் இயற்றியது. இரண்டாவது பாலகிருட்டிண தீட்சிதர் இயற்றியது. இதில் 29 படலங்கள் உள்ளன.

**திருக்கடுவாய்க்கரைப் புத்தூர்ப் புராணம்**

குடவாசலிலிருந்து வலங்கைமான் செல்லும் வழியில் உள்ளது கடுவாய்க்கரைப் புத்தூர். ஆண்டார் கோயில் என வழங்குகிறது. குடமுருட்டியாற்றின் கரையில் உள்ள தலம். குடமுருட்டிக்குப் பழைய பெயர் கடுவாய். புத்தூர் என்பது ஊர்ப்பெயர். காசிப முனிவர் வழிபட்ட தலம். அப்பர் பாடல் பெற்றது.

இத்தலபுராணம் இன்னும் அச்சாகவில்லை.

**திருக்கருகாவூர்த் தலபுராணம்**

தஞ்சையிலிருந்து கும்பகோணம் செல்லும் வழியில் உள்ளது திருக்கருகாவூர். திருக்களாவூர் என்றும் வழங்குகிறது. வெட்டாற்றின் கரையிலுள்ளது.

ஊர்த்துவ மகரிசியின் சாபத்தால் நித்துவரின் மனைவி வேதிகைக்கு ஏற்பட்ட கருச்சிதைவை இறைவன் மருத்துவம் பார்த்து அவள் கருவைக் காத்ததால் கருகாவூர் என்று பெயர் பெற்றது. இன்னும் கருச்சிதைவுற்று மகப்பேறின்றி இருப்போர் இத்தலம் வந்து வழிபட்டு மகப்பேறு பெறுகின்றனர். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

காவிரியின் தென்கரையிலுள்ள பஞ்ச ஆரண்யங்களுள் இதுவுமொன்று. முல்லைவனம், மாதவிவனம், கர்ப்பபுரி என்றும் பெயர். (பிற நான்கு ஆரண்யங்கள் : அவளிவணல்லூர்—பாதிரி வனம்; அரதைப் பெரும்பாழி—வன்னிவனம்; இரும்பூளை—பூளைவனம்; கொள்ளம்புதூர்—வில்வவனம் என்பன.)

பிரமன், கௌதமர், சந்திரன் வழிபட்ட தலம். வடமொழி காந்தமா புராணத்தில் சேத்திர வைபவக் காண்டத்தில் சனற்குமார சங்கிதையில் கூறப்பெறும் இத்தலச் சிறப்பு தமிழில் மொழிபெயர்க்கப் பெற்று இத்தலபுராணம் இயற்றப் பெற்றுள்ளது.

**திருக்களர்ப் புராணம்**

திருத்தருப்பூண்டியிலிருந்து மன்னார்குடி செல்லும் வழியில் உள்ளது திருக்களர் என்னும் தலம். பாரிஜாத வனம், தருவனம், கற்பக வனம் என்னும் பெயர்களும் உண்டு. பராசர முனிவர், காலபைரவர், துர்வாசர் ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்ற தலம்.

களரி என்பதற்குக் கூட்டம், சபை, அரங்கம் எனப் பல பொருள்கள். துர்வாசருக்குச் சிவபெருமான் பிரமதாண்டவ தரிசனம் தந்தருளினமையால் களரி என்னும் இத்தலப் பெயர் பின்பு களர் என்று ஆனது என்பர். சம்பந்தர் பாடல் பெற்றது.

களப்பால் ஆதியப்பனார் இயற்றிய இத்தல புராணத்தில் 6 படலங்கள் உள்ளன.

**திருக்காறாயிற் புராணம்**

திருவாரூரிலிருந்து திருநெல்லிக்கா செல்லும் வழியிலுள்ளது திருக்காறாயில் என்னும் தலம். திருக்காறைவாசல் என்றும் வழங்குகிறது. கார்அகில் வனம் என்பதே காராகில்—காறாயில் என்றாயிற்று. பனசாரண்யம், காளாகருவனம் தேவதாருவனம், கபாலபுரம், பிரமபுரம், கலித்தவனபுரம் எனவும் பெயர்கள் கூறப்பெறும்.

கபால முனிவர்க்கு இறைவன் காட்சி கொடுத்த தலம். சம்பந்தர் பாடல் பெற்றது.

இத்தலபுராணம் இயற்றியவர் மற்றும் விவரங்கள் தெரிய வில்லை.

**திருக்கொள்ளம்பூதூர்ப் புராணம்**

கும்பகோணத்திலிருந்து குடவாசல் செல்லும் வழியில் உள்ளது கொள்ளம்பூதூர். வில்வவனம் கூவிளவனம் என்றும் பெயர் (கூவிளம்—வில்வம்). கூவிளம்புதூர்—கொள்ளம்புதூர் ஆயிற்று. பிரமவனம், பஞ்சாட்சரபுரம், காண்டீபவனம் என்றும் அழைப்பர்.

விநாயகர், கங்கை, காவிரி, ஆதிசேடன், அருச்சுனன், இடைக்காடர், வரகுணபாண்டியன், கோச்செங்கட் சோழன், பிருகு முனிவர், காசிபர், கண்வர், அகத்தியர், வசிட்டர், வாமதேவர் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது.

இத்தலபுராணத்தை ஆதியப்பனார் இயற்றியுள்ளார்.

**திருக்கொள்ளிக் காட்டுத் தலபுராணம்**

திருவாரூரிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் வழியில் உள்ளது கொள்ளிக்காடு. இது கள்ளிக்காடு என வழங்குகிறது. சோழ மன்னன் ஒருவனுக்குச் சனிதோடம் விலகிய தலம். சம்பந்தர் பாடல் பெற்றது.

இத்தலபுராணம் இன்னும் அச்சாகவில்லை.

**திருக்கோட்டூர்ப் புராணம்**

மன்னார்குடியருகேயுள்ளது கோட்டூர். அரம்பையும் ஐராவதமும் வழிபட்ட தலம். ஐராவதேச்சுரம் என்றும் அழைக்கப்பெறும். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

இத்தலபுராணத்தை நாராயணசாமி ஐயர் அவர்கள் இயற்றியுள்ளார்கள்.

**திருச்சத்திமுற்றம் தலபுராணம்**

கும்பகோணத்திற்குப் பக்கத்திலுள்ள தலம் சத்திமுற்றம். இறைவனை உமை வழிபட்டுத் தழுவி முத்தமிட்டதால் 'சத்தி முத்தம்' என்று வழங்குகிறது. அப்பர் பாடல் பெற்ற தலம். இத்தலபுராணம் பாடியவர் போன்ற விவரங்கள் அறியக்கூட வில்லை.

**திருச்செங்காட்டாங்குடிப் புராணம்**

திருவாரூர் அருகேயுள்ள தலம் திருச்செங்காட்டாங்குடி. விநாயகர் இறைவனை வழிபட்டதால் கணபதீச்சுரம் என்று கோயிலுக்குப் பெயர். விநாயகர், கயமுகாசுரனைக் கொன்ற பழி தீர இங்கு வழிபட்டார். அசுரனைக் கொன்ற போது அவனுடைய உடற்குருதி படிந்த இப்பகுதி செங்காடாக ஆனதால் 'செங்காட்டாங்குடி' என்று பெயர் அமைந்தது. மந்திரபுரீசம், சக்திபுரீசம், இந்திர புரீசம், ஆத்திவனம், பாஸ்கர புரீசம் எனப் பல பெயர்களும் கூறுவர். சம்பந்தர் அப்பர் பாடல் பெற்ற தலம்.

சைவ எல்லப்ப நாவலர் இயற்றியுள்ள இத்தலபுராணத்தில் 11 படலங்களும் 393 பாடல்களும் உள்ளன.

**திருச்சோற்றுத்துறைப் புராணம்**

குடமுருட்டி ஆற்றின் கரையிலுள்ள தலம், திருச்சோற்றுத் துறை. திருவையாற்றை மையமாகக் கொண்ட சப்த ஸ்தானத்

தலங்களுள் ஒன்று. வழிபடும் அடியவர்களின் பசிப்பிணி தீர இறைவன் உணவு வழங்குபவர். எனவே இப்பெயர் பெற்றது.

இந்திரன், சூரியன், கௌதமர் வழிபட்ட தலம். மூவர் பாடல் பெற்றது.

அம்பலவாண தேசிகர் இயற்றிய இத்தலபுராணத்தில் 15 படலங்களும் 448 பாடல்களும் உள்ளன.

### திருத்திலதைப்பதிப் புராணம்

அரிசிலாற்றின் கரையில் உள்ள தலம் திலதைப் பதி. சிதலைப் பதி என வழங்குகிறது. திலதர்ப்பணபுரி என்ற பெயரே திலதைப்பதி என்று ஆயிற்று. தசரத மன்னனுக்கும், சடாயுவுக்கும் இராம இலக்குமணர்கள் எள் தருப்பணம் செய்த தலம். (திலம்—எள்). காசி மன்னர் சித்தோசி என்பவர் தருப்பணம் செய் ததலம். சம்பந்தர் பாடல் பெற்றது.

சி. நாகலிங்கம் பிள்ளையவர்கள் இயற்றியுள்ள இத்தல புராணத்தில் 10 படலங்களும் 486 பாடல்களும் உள்ளன.

### திருத்துருத்திப் புராணம்

திருத்துருத்தி என்பது இப்பொழுது குற்றாலம் என வழங்கும் ஓர் ஊர். இது, சோழ நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் மாயவரத்திலிருந்து கும்பகோணம் போகும் வழியிலுள்ளது. தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான திருத்தலம் இதுவாகும். துருத்தி யாவது ஆற்றிடைக் குறை என்பர். உமையம்மையார் பரதமா முனிவர் மகளாகத் திருவவதாரஞ் செய்து காவிரி ஆற்றிற்கு இடையே ஒரு தலம் அமைத்து இறைவனை வழி பட்டமையால் அவ்விடம் துருத்தியெனப் பெயர் பெற்றது. இக் காலத்தில் திருத்துருத்தி என்னும் பெயருடைய ஆலயம் அக் காவிரிக்குத் தென்கரையிலுள்ளது. இத்தலத்தின் மரம் உத்தாலம் (ஒருவகை ஆத்தி) ஆதலால் அதனை உத்தாலவன மென்பர். அது இக்காலத்தில் குற்றாலமென வழங்கலாயிற்று. இதனைப் இப்புராணத்தின் திருமணப் படலத்தால் அறியலாம். மூவர் பாடல் பெற்ற தலம்.

இத்தல புராணத்தை இயற்றியவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் ஆவார். இதில் 40 படலங்களும் 1627 பாடல்களும் உள்ளன. இவர் தலவரலாறுகளைக்

கூறுமிடத்து அவ்வவ்வூர்களின் விளக்கத்தைத் தெளிவாக விளக்கக் காணலாம்.

இத்துருத்தி ஆலயத்தைச் சூழ்ந்துள்ள திருக்கோயில்கள் பல உள. அவை, அக்கினீசம், ஓங்காளிசம். காமேசம், வருணீசம், முனீசம், சோம சேகரம் என்பனவாம். அவற்றுள் முறையே அக்கினி, காளி, காமன், வருணன், எழுமுனிவர், சோமசேகரன் என்பவர்களால் சிவக்குறி—நிறுவி வழிபடப் பெற்றன. அவற்றுள் அக்னீசம், சோழனால் வழிபடப்பட்டமையால் சோரீசம் எனவும் பெயர்பெறும். காளீசம் காளியின் வரத்திற்கு எம்பெருமான் ஓமென்று அருளினமையால் ஓங்காளீசமெனப் பெயர் பெறும், வருணீசம் பரிச்சேபன் மகன் சிவபக்தனுக்குக் காச நோயை மாற்றியருளியது. இது இப்போது காமாட்சி யம்மை கோயிலெனக் கூறப்பெறுகிறது. திருமாலானவர் ஆதிகேசவரெனப் பெயர் பெற்று எம்பெருமான் திருமணக் கோலத்தைக் கண்டு களித்து இந்நகரத்தைக் காவல் புரிந்தருளு கின்றனர். இவற்றை, ஆதிகேசவப் படலம், ஓங்காளீசப்படலம், காமேசப் படலம், சிவபத்தன் நோய் தீர்த்த படலம், சோழீசப் படலம் போன்ற பகுதிகளில் விளக்கக் காணலாம்.

இத் திருத்துருத்தித் தலத்தைச் சூழ்ந்துள்ள தலங்களும் பலவாம். அவை தேரழுந்தூர், திருக்கோழம்பம், திருவாவடு துறை, திருவாலங்காடு, வில்லியநல்லூர், எதிர்கொள்பாடி, திருமணஞ்சேரி, திருவேள்விக்குடி, கடல்தங்குகுடி, குறுமுளைப் பாடி, கதிராமங்கலம், மார்க்கண்டபுரம் என்பனவாம்.

இவற்றுள் தேரழுந்தூர் என்பது உமையம்மை பரதன் மாமுனிவர் மகளாகத் திருவவதாரஞ் செய்ய முன் கைலையி னின்றும் தேரில் எழுந்தருளி வர அத்தேர் அழுந்தினபோது அம்மையார் பசுவாகி நின்று அவ்விடத்தில் சிவக்குறி கண்டு வழிபட்டமையால் அப்பெயரெய்தியது. இந்நகர்க்கு அண்மை யில். தொழுவமிட்டு அப்பசுவைக் காத்தமையால் அவ்விடம் தொழுவாலங்குடி எனப் பெயராயிற்று. அதை இப்பொழுது தொழுதாலங்குடி என்பர். அப்பசுவைத் திருமாலானவர் இடையராய் நின்று காத்தமையால் அவர் அந்நகரில் 'ஆமறியப்பர்' என்று பெயர் பெற்று அழுந்தீசர் ஆலயத்திற்குத் திருமுன் எழுந்தருளியிருக்கின்றனர். அம்மையப்பர் பசு வுருவோடு சென்று உலாவ ஆண்டுச் சிவக்குறியில் தனது கால் குளம்பின் தழும்பு உண்டாகவே பின்னர் அறிவு பெற்றுப்

பாலைப் பொழிந்து அச்சிவக்குறியை வழிபட்டமையால் திருக்கோழம்பம் என்று பெயராயிற்று. அப்பசுவானது அரசவனத்தில் சிவக்குறி கண்டு பால் பொழிந்து ஒப்பிலாமுலையாளெனப் பெயர் பெற்று ஆங்கேயுள்ள புனிதநீரில் மூழ்கித் தனது பசு உரு நீங்கப் பெற்றமையால் திருவாவடுதுறை என்னும் பெயர் வந்தது. இதனால் இத்தலத்தை வடநூலார் கோமுத்தி எனவும் அழைப்பர். திருவாலங்காடு என்பது அப்பசு தானே ஆலங்காட்டில் சிவக்குறி கண்டு பாலைப்பொழிந்து வழிபட்டமையால் அப்பெயராயிற்று. இதுவே பரதமுனிவர் தவஞ்செய்து சிவபெருமான் அருளால் திருக்குளங் கண்டு மூழ்கி அம்பிகையாகிய புதல்வியை அடையப் பெற்ற தலமாம். வில்லியநல்லூர் என்பது பரதமுனிவர் வேள்வி செய்து எம்பெருமாட்டி தோன்றிய அவ்வில்வடிவான வேள்விக் குண்டத்தே சிவக்குறி கண்டு வழிபட்டமையால் அப்பெயர் உண்டாயிற்று. இத்தீர்த்தத்தை ஓமக்குளம் என்பர். எதிர்கொள்பாடி என்பது சொன்னவாறறிவார் திருமணக்கோலங் கொண்டு திருமணத்திற்குச் செல்லப் பரத முனிவர் எதிர்கொண்டழைத்துச் சிவக்குறி கண்டு வழிபட்டமையால் இப்பெயர் அடைந்தது. திருமஞ்சேரி என்பது திருமணஞ் செய்த இடத்தில் மாமி சுமித்திரை வேண்டுகோளுக்கு எம்பெருமான் சிவக்குறியாயிடக் கண்டு வழிப்பட்டமையால் இப்பெயர் எய்தியது. கடல்தங்குகுடி என்பது பிரம்மாவின் தினகற்பத்தில் கடல் பொங்கி வரப் பிரம்மாவின் வேண்டுகோளின்படி திருமஞ்சேரியில் மணவாளநாதர் திருக்கை அமைக்க அவர் திருமுன் சிறிது தூரத்தே கடல் தங்கிடவும் ஆங்கே சிவக்குறி கண்டு பிரமன் வழிபட்டமையால் அப்பெயர் எய்தியது. அது இப்போது கடலங்குடி என மரீஇ, வழங்கும். குறுமுளைப்பாலி என்பது முனிவர் எம்பெருமானார் திருமணத்திற்காகக் குறுமுளை செய்யவே ஆங்கே சிவக்குறி கண்டு வழிபட்டமையால் இப்பெயர் பெற்றது. கதிராமங்கலம் என்பது சூரியன் சொன்னவாறறிவார் திருவருள் பெறத் தன் பெயரால் மூத்த பிள்ளையாரையும் சிவக்குறியையும் நிறுவி வழிபட்டமையால் அப்பெயர் பெற்றது. மார்க்கண்டபுரம் என்பது, மார்க்கண்டேயரால் சிவக்குறி நிறுவி வழிபட்டமையால் இப்பெயர் பெற்றது. இது கதிராமங்கலத்திற்குச் சிறிது வடகிழக்கிலுள்ள தென்பர்.

இவ்வாறு இத்தலங்களின் பெயர் விளக்கங்களை அவ்வப் படலத்தில் ஆசிரியர் விளக்கக் காணலாம்.

## திருத்தேங்கூர்ப் புராணம்

திருநெல்லிக்காவிற்கு அருகேயுள்ள தலம் திருத்தெங்கூர். தென்னை வளமும், தலமரமும் ஆதலின் தெங்கூர் என்பர். ஊழிக்காலத்தில் கடல் பொங்கியெழுந்து அதனால் உலகம் கொள்ளப்பட்டும், இத்தலம் மட்டுமே தெளிந்த நீர் தேங்கி நின்றதால் 'தேங்கூர்' என்று பெயர் பெற்றதாக வரலாறு.

இலக்குமியும் நவக்கிரகங்களும் வழிபட்ட தலம்; சம்பந்தர் பாடல் பெற்றது.

இத்தல புராணத்தில் 6 படலங்களும் 201 பாடல்களும் உள்ளன.

## திருநல்லூர்ப் புராணம்

தஞ்சாவூரிலிருந்து கும்பகோணம் செல்லும் வழியில் உள்ளது திருநல்லூர். கோச்செங்கட்சோழனால் கட்டப்பட்ட மாடக்கோயில். திருநாவுக்கரசு நாயனாருக்குத் திருவடி சூட்டியதும், அமர்நீதி நாயனாரை ஆட்கொண்டதுமாகிய சிறந்த தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

கமலை வைத்தியநாத தேசிகர் இத்தல புராணத்தை இயற்றியுள்ளார். இதில் 27 சருக்கங்களும் 1014 பாடல்களும் கொண்டதாகும்.

வடமொழிச் சிவபுராணம் பத்தினுள் பவுடிகம், காருடம், பிரமாண்டம் என்னும் மூன்றனுள்ளும் கூறப்படும் சுந்தர நகர மான்மியத்தை மூலமாகக் கொண்டு தமிழில் இந்நூல் விரிவாகச் செய்யப்பட்டுள்ளது.

## திருநள்ளாற்றுப் புராணம்

காரைக்காலுக்கருகே யுள்ள திருநள்ளாறு என்னும் தலம் சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. உளிபடாத மூர்த்தி ஏழு என்பதே சப்தவிடங்கம் எனப்படும். (சப்தம்-ஏழு) (டங்கம்-உளி, வி,- அன்மை). முசுகுந்த மாமன்னன் இத்திரனிடத்தில் இலிங்கங்களைப் பெற்றுக் கொண்டு வந்து நிறுவிய ஏழுவிடங்கப் பதிகளாவன; திருவாரூர், திருநள்ளாறு, திருநாகைக்காரோணம், திருக்காறாயில், திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு என்பன.

திருமால், பிரமன், இந்திரன், திசைப்பாலகர்கள், அகத்தியர் புலத்தியர், அர்ச்சுனன், நளன் ஆகியோர் வழிபட்டுப் பேறு

பெற்ற தலம். மூவர் பாடல் பெற்றது. சனிபகவான் சிறப்போடு விளங்கும் தலம்.

சுப்பிரமணியக் கவிராச மூர்த்திகள் இயற்றியுள்ள இத்தல புராணத்தில் 9 படலங்களும் 307 பாடல்களும் உள்ளன.

**திருநாகேச்சரப் புராணம்**

கும்பகோணத்திற்கு அருகேயுள்ளது திருநாகேச்சுரம் என்னும் தலம். ராகு பூசித்ததால் இப்பெயர் பெற்றது. சண்பகக் காடுகள் சூழ்ந்திருப்பதால் சண்பகவனம், கிரிகன்னிகை வனம் என்றும் கூறப்பெறும். சேக்கிழார் திருப்பணி செய்த பெருமையுடையது இத் திருத்தலம். மூவர் பாடல் பெற்றது.

இத்தலபுராணத்தை மூவர் ப. சிங்காரவேற்பிள்ளை இயற்றியுள்ளார். வடமொழியில் 63 படலங்களாக உள்ள இப்புராணத்தில் 43 படலங்கள் மட்டுமே தமிழில் மொழிபெயர்த்துப் பாடியுள்ளார். 43 பாடல்களும் உரையுமாக நூல் அமைந்துள்ளது.

கடவுள் வாழ்த்து 24 பாடல்களில் கூறப் பெறுகிறது. மலைமகள், அகலிகை, நளன், பாண்டவர், பிரமன் ஆகியோர் பூசித்தது பற்றியும், நோயுற்ற பலர் இங்குப் பூசித்தது பற்றியும்; பராசரர் காமமயக்கம், மார்க்கண்டேயர் வரவு, தக்கன், வசிட்டர், சூரியன் போன்றோர் கதைகள்; புறா பேறு பெற்றது போன்ற பல வரலாறுகள் இந்நூலில் விளக்கப் பெறுகின்றன.

**திருநாகைக் காரோணப் புராணம்**

சோழ நாட்டில் தென்கரையில் கடற்கரையை அடுத்துள்ள ஊர் நாகப்பட்டினம். நாகர்கள் பலர் குடியேறி வாழ்ந்ததால் இப்பெயர் பெற்றது. நாகை என மருவி வழங்குவது. புண்டரீக முனிவரை இறைவன் தன் மேனியில் ஆரோகணம் செய்து கொண்டதால் நாகைக் காரோணம் என்று பெயர் வந்தது. சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. அகத்தியருக்குத் திருமணக் காட்சி யருளிய தலம்.

ஆதிசேடன் பூசித்த இத்தலத்திற்கு மூவரும் பதிகம் பாடியுள்ளனர்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய இத்தல புராணம் 61 படலங்களும் 2406 பாடல்களும் கொண்டதொரு சிறந்த நூலாகும்.

### நாகப்பட்டினத் தலபுராணம்

இந்நூல் நிரஞ்சனநாதர் என்பவரால் இயற்றப்பட்டது. இதில் 30 படலங்களும் 1064 பாடல்களும் உள்ளன.

### திருநெல்லிக்காத் தலபுராணம்

திருவாரூரிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் வழியில் உள்ளது நெல்லிக்கா என்னும் தலம். நெல்லி மரங்கள் அடர்ந்த சோலைகள் ஆனதால் இப்பெயர் பெற்றது. நெல்லிக்காவல், ஆம்லகவனம் என்றும் பெயர்.

சூரியன், பிரமன், திருமால், சந்திரன், சனி, கந்தர்வர், துர்வாசர் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது.

இத்தலபுராணம் இயற்றியவர் பெயர் மற்ற விவரங்கள் தெரியவில்லை.

### திருப்பறியலூர்ப் புராணம்

மாயூரத்திற்கு அருகிலுள்ள ஊர் திருப்பறியலூர் என்பதாகும். அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்று. கீழப் பரசலூர் என வழங்குகிறது. தக்கனுடைய வேள்வியை அழித்த ஊர். தக்கன் யாகம் செய்த தலமாதலின் தட்சபுரம் என்றும்; தக்கனுடைய யாகத்திற்கு வந்திருந்த திருமால் முதலிய தேவர்களுக்கு ஏற்பட்ட பாவத்தைத் தண்டனை மூலம் பறித்ததால் பறியலூர் என்றும் வழங்கப் பெற்றது. சம்பந்தர் பாடல் பெற்றது.

பின் வேலப்ப தேசிகர் இயற்றிய இத்தல புராணத்தில் 16 படலங்களும் 654 பாடல்களும் உள்ளன.

### திருப்புள்ளமங்கைத் தலபுராணம்

தஞ்சை அருகே குடமுருட்டி ஆற்றின் கரையில் உள்ளது புள்ளமங்கை என்னும் தலம். பசுபதிகோயில் என்று வழங்குகிறது. ஆலந்துறை மகாதேவர் கோயில் என்றும் பெயர். ஆலமரம் தலமரமாதலால் இப்பெயர் பெற்றது. பாற்கடலில் அமுதம் கடைந்தபோது தோன்றிய நஞ்சைச் சிவபெருமான் எடுத்து உண்டு திருமிடற்றில் அடக்கியருளிய தலம் இதுவே. இக்கோயிலின் கோபுரத்தில் கழுகுகள் (புள்-பறவை) எப்பொழுதும் உறைகின்றன.

இத்தல புராணம் இயற்றியோர் பெயர் முதலியன அறிய இயலவில்லை.

**திருமருகற் புராணம்**

திருவாரூரிலிருந்து மயிலாடுதுறை செல்லும் வழியில் உள்ளது திருமருகர் என்னும் தலம். மருகல் என்னும் கல்வாழையைத் தலமரமாகக் கொண்டதால் இப்பெயர் பெற்றது. பாம்பு கடித்து இறந்த பாலகனை ஞானசம்பந்தர் பதிகம் பாடி எழுப்பியருளிய தலம். சம்பந்தர், அப்பர் பதிகம் பாடியுள்ளனர்.

இத்தலபுராணத்தைச் சுப்பிரமணிய ஐயர் அவர்கள் பாடியுள்ளார்கள்.

**திருவம்பர்ப் புராணம்**

பேரளம் அருகேயுள்ள திருவம்பர் மாகாளம் என்னும் கோயில் திருமாகாளம் சிறந்த தலமாகும். மாகாள முனிவர் பூசித்ததும் அம்பன், அம்பாசூரன் என்னும் அரக்கர்களைக் கொன்ற தீவினைதீரக் காளி பூசித்ததும் இத்தலத்திலேயே என்பர். சோமாசிமாற நாயனார் சோமயாகஞ் செய்த இடம் இதுவே. சம்பந்தர் பாடல் பெற்றது.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய இத்தல புராணத்தில் 15 படலங்களும் 1007 பாடல்களும் உள்ளன.

**திருவலஞ்சுழிப் புராணம்**

சுவாமிமலைக்கு அருகிலுள்ள தலம் திருவலஞ்சுழி. காவிரி வலமாகச் சுழித்துச் செல்லும் இடத்தில் உள்ளதால் வலஞ்சுழி என்று பெயராயிற்று. திருவிடை மருதூருக்குரிய பரிவாரத் தலங்களுள் இது விநாயகருக்கு உரிய தலமாகும். சக்திவனம், தட்சிணாவர்த்தம் என்பன வேறு பெயர்கள்.

ஏரண்ட முனிவர், ஆதிசேடன், உமை, இந்திரன், திருமால், பிரமன் வழிபட்ட தலம். சம்பந்தரும் அப்பரும் பதிகம் பாடியுள்ளனர்.

இரேவணச் சித்தர் பாடிய இத்தலபுராணமும் கிடைக்க வில்லை.

**திருவாஞ்சியப் புராணம்**

திருவாரூருக்கு வடமேற்கே புத்தாற்றின் வடகரையில் உள்ளது திருவாஞ்சியம் என்னும் தலம். திருமால் சிவபெரு மானைப் பூசித்துத் தம்மைவிட்டுப் பிரிந்துபோன இலக்குமியை

அடையப்பெற்ற தலம். திருமால் திருவை வாஞ்சித்த இடம் திருவாஞ்சியம் ஆயிற்று.

காஞ்சிக்கு ஒப்பாகக் கூறப்பெறும் தென்னாட்டுத் தலங்கள் ஆறினுள் ஒன்று. (மற்றவை திருவெண்காடு, திருவையாறு, மாயூரம், திருவிடைமருதூர், திருச்சாய்க்காடு என்பன.)

பிரமதேவர், பராசரர், அத்திரி முனிவர் ஆகியோர் பூசித்த தலம். மூவர் பாடல் பெற்றது.

களந்தைக்குமரன் (17 நூ.) இயற்றிய இந்நூலில் 14 படலங்களும் 830 பாடல்களும் உள்ளன.

## திருவாட்போக்கிப் புராணம்

சோழநாட்டுத் தென்கரைத் தலங்களுள் முதலாவது வாட்போக்கி. குளித்தலையிலிருந்து மணப்பாறை செல்லும் வழியில் இத்தலம் உள்ளது. ஐயர் மலை, இரத்தினகிரி, மாணிக்கமலை, சிவாயமலை, அரதனாசலம் என்னும் வேறு பெயர்களும் கூறப்பெறும்.

ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் நேர்ந்த போரில் வாயுதேவன் மேருமலையினின்றும் பெயர்த்தெடுத்த ஒரு முடியே இம்மலை என்பர்.

இந்திரன், மகன் சயந்தன், காற்றுக் கடவுள், கதிரவன், ஆதிசேடன், அகத்தியர், ஏழு கன்னியர் போன்றோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.

மாணிக்கம் பெறவேண்டி வந்த ஆரிய மன்னன் ஒருவனுக்கு இறைவன் தொட்டி ஒன்றைக் காட்டி காவிரி நீரால் நிரப்பச் சொன்னார். அது எப்படியும் நிரம்ப முடியாமல் இருக்கக் கண்டு, கோபங்கொண்ட மன்னன், உடைவாளை உருவி ஓங்க, இறைவன் மாணிக்கத்தைத் தந்து அருளினார். மனம் திருந்திய மன்னன் அதை விரும்பாது, சிவப்பணி செய்து முத்தி பெற்றான் என்பது வரலாறு. இன்றும் சிவலிங்கத்தின் மேற்புறத்தில் வெட்டுப்பட்ட வடுவைக் காணலாம். இறைவனுக்கு முடித்தழும்பர் என்றும் பெயர்.

அப்பர் பாடல் பெற்ற இத்தலபுராணத்தை இயற்றியவர் வைத்திய தேசிகர். இதில் 845 பாடல்கள் உள்ளன.

**திருவாவடுதுறைப் புராணம்** (துறைசைப் புராணம்)

துறைசை என்பது திருவாவடுதுறை. சோழநாட்டில் காவிரியின் தென்கரையில் உள்ள தலங்களில் குறிப்பிடத்தக்கது. திரு ஆ. அடுதுறை திருவாவடுதுறை. அம்பிகை கயிலையில் பசுச் சாபம் ஏற்று, இங்கு வந்து அச்சாபம் நீங்கப்பெற்றமையால் இந்தத் தலம் 'திருவாவடுதுறை' எனப் பெயர் பெற்றது. வடமொழியில் இதனை, கோமுக்தி சேத்திரம் என்று கூறுவர். மூவர் பாடல் பெற்ற தலம்.

பதினெட்டுக் காண்டங்களை உடைய வடமொழி ஸ்காந்தத்தில் உள்ள உருத்திரசங்கிதையில் இந்தக் கோமுக்தி சேத்திர மகாத்மியம் கூறப்பட்டுள்ளது. அதை, திருக்கயிலாயப் பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன அடியார்குழாத்துள் ஒருவராகிய **சத்திரம் சாமிநாத முனிவர்** என்பர் **வடமொழியி லிருந்து** மொழிபெயர்த்துச் செய்யுள் வடிவில் அமைத்துள்ளார். இத்தலபுராணம் **மூன்று** காண்டங்களாகவும், அதில் **அறுபத் தெட்டு அத்தியாயங்**களாகவும் அமைத்து மொத்தம் **2560 பாடல்களைக்** கொண்டுள்ளது.

சிறந்த சொல்நயமும், பொருளாழமும், பத்திச் சுவையும் கொண்ட இச் செய்யுள் வடிவிலான தலபுராணம் சுவடி வடிவிலேயே உள்ளது. **இன்னும் அச்சாகவில்லை.**

உலக அன்னையாகிய அம்பிகைக்கு ஏற்பட்ட பசுச் சாபமானது எத்தலத்தும் நீங்கப்பெறாது இத்தலத்தில் நீங்கப் பெற்றது என்பதால் இத்தலத்தின் சிறப்பையுணரலாம்.

இப்புராணத்தில் புராண வரலாறு என்ற தலைப்பில் அத்தியாயமுறை கூறப்பெற்றுள்ளது. ஒவ்வொரு காண்டத்தின் தொடக்கத்திலும் தோத்திரக் கவி ஒன்றை இயற்றியுள்ளார் ஆசிரியர்.

கோமுத்திநகர், அரசவனம், முத்திநகர், கோகழி, சிவபுரம், பிரமபுரம், அகத்தியபுரம், தருமநகர், கஜாரண்யம், நந்திநகர் நவகோடி சித்திபுரம் எனப் பலவாறு அழைக்கப் பெறும் இத்தல வரலாறுகளை மூன்று காண்டங்களில் இத்தலபுராணம் விளக்கு கிறது.

1. **கோமுத்தி சேத்திர காண்டம்**

இதில் 26 அத்தியாயங்கள் உள்ளன. சோழநாட்டின் சிறப்பு, காவிரியின் சிறப்பு, தலங்களின் சிறப்பு, பாடல்பெற்ற

தலங்கள்; துறைசை எல்லைகள்; நகரின் பல்வேறு பெயர்கள் ஆகியன கூறப்பெறுகின்றன. திருமூலர் யோகம் நிகழ்த்தியது. திருப்பணி செய்கின்றவர் பெறும் பயன்கள் விளக்கப் பெறுகின்றன.

கயிலையில் சிவசத்தி திருவிளையாடல்களைக் கூறும் பகுதியில், தக்கன் யாகம், மன்மத தகனம், உமை மணம் புரிதல், விநாயகன் முருகன் பிறத்தல் போன்றன விரிவாக விளக்கப் பெறுகின்றன.

சூது விளையாடல் என்னும் பகுதியில் பந்தயமாகத் தலங்களை வைத்து விளையாடுவது குறிப்பிடத்தக்கது. இறைவன் தோல்வியும் சக்தி வென்றதும் இங்குக் கூறப்பெறும். சிவன் - பார்வதி ஊடல் இங்கு மிகவும் சுவையானதாகும்.

அம்பிகை பசுச் சாபம் ஏற்றது; காசியில் பசுவுரு அடைந்தது; பசுக்களின் பெருமை கூறல்; கோவுரு நாயகி ஏழு தலங்கள் தரிசித்தல் போன்றன விரிவாகக் கூறப்பெறுகின்றன.

## 2 ஆவடுதுறைசைக் காண்டம்

இதில் 10 அத்தியாயங்கள் உள்ளன. தேவி பசுத்துவம் நீங்கிப் பாகம் பெற்றது; திருமால் பத்து அவதாரங்கள்; திருவிழாக்கள்; திருக்கல்யாணச் சிறப்பு; மகா தாண்டவம் விளக்கம், ஆடிப்பூர விழா போன்றன இங்கு விளக்கப் பெறுகின்றன.

## 3. தியாகேசபுரக் காண்டம்

இதில் 32 அத்தியாயங்கள் உள்ளன. முசுகுந்தச் சக்கரவர்த்தி பிள்ளைவரம் வேண்டல்; தைத் திருவிழா; நந்தீசுவரர் அகத்தியருக்கு இத்தலச் சிறப்புரைத்தல்; அகத்தியருக்கு வெண்ணோய் அகற்றியது போன்ற இங்கு விளக்கமுறும். 51 முதல் 55 வரையான அத்தியாயங்களில் சாத்திரக் கருத்துக்கள் மிகுதியாக உள்ளன.

நவகோடி சித்தர்களுக்கு அருளியது; திருமூலர், திருமாளிகைத் தேவர், கொங்கணர், நால்வர், சேரமான் பெருமான் நாயனார் ஆகியோர் வரலாறுகளும்; செங்கட் சோழர், வரகுண பாண்டியன் ஆகியோர் திருப்பணிகள் விளக்கப் பெறுகின்றன.

தலபுராணம் படிக்கும் விதம், கேட்கும் விதம் ஆகியன இறுதியில் கூறப்பெறும். மிதிலேசன் முனிவருடன் வந்து கேட்டு முத்தி பெற்றது கூறி நூல் முடிக்கப்பட்டுள்ளது.

**திருவிடைமருதூர்ப் புராணம்**

கும்பகோணத்துக்கு வடகிழக்கே உள்ள தலம் திருவிடைமருதூர். மத்தியார்ச்சுனம் என்னும் இத்தலம் இடைமருது என்பர். வடக்கேயுள்ள ஸ்ரீசைலம் (மல்லிகார்ச்சுனம்) தலை மருது என்றும் தெற்கே அம்பாசமுத்திரம் அருகேயுள்ளது (புடார்ச்சுனம்) கடைமருது என்றும் கூறப்பெறும். மருதவனம், சண்பகாரண்யம், சத்திபுரம் என்பன வேறு பெயர்கள். வரகுண பாண்டியனுக்குப் பிரமகத்தி நீங்கிய தலம். மூவர் பாடல் பெற்றது.

மகாலிங்கத் தலம் என்னும் இத்தலத்தைச் சுற்றிப் பரிவாரத் தலங்கள் ஒன்பது உள்ளன. அவை; 1) விநாயகர்-திருவலஞ்சுழி, 2) முருகன்-சுவாமிமலை, 3) நடராசர்-தில்லை, 4) நவக்கிரகம் சூரியனார்கோயில், 5) தட்சிணாமூர்த்தி-ஆலங்குடி, 6) பைரவர், சீகாழி, 7) நந்தி - திருவாவடுதுறை, 8) சோமாஸ்கந்தர் - திருவாரூர், 9) சண்டேசுவரர்-திருவாய்ப்பாடி என்பன.

1. இத்தல புராணம் பழையது, மூவாயிரம் பாடல்களுக்கு மேற்பட்டது. அச்சாகவில்லை.

2. மருதவனப் புராணம் என்ற பெயரில் இத்தலபுராணத்தைக் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றியுள்ளார். இதில் 55 சருக்கங்களும் 1384 பாடல்களும் உள்ளன.

3. மத்தியார்ச்சுன மான்மியம் என்னும் பெயரில் உரை நடையில் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் ஒரு நூல் இயற்றியளித்துள்ளார்.

4. சிற்றம்பலவையா இயற்றிய மருதூர்ப் புராணத்தில் 34 படலங்களும் 1141 பாடல்களும் உள்ளன.

**திருவிளநகர்த் தலபுராணம்**

மாயூரத்திற்கு அருகேயுள்ள தலம் திருவிளநகர். உசிரம்-விழல். விழல்நகர் என்பது விளநகர் என்றாயிற்று. கபித்தன் என்னும் மன்னன் வழிபட்டுப் பிரமகத்திதோடம் நீங்கப் பெற்ற தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

இத்தலபுராணம் இயற்றியவர் மற்றும் விவரங்கள் அறியக் கூடவில்லை.

**திருவீழிமிழலைப் புராணம்**

மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் செல்லும் வழியில் உள்ளது வீழிமிழலை. வீழிச்செடிகள் நிறைந்திருந்தமையால் இப்பெயர் பெற்றது. பூகைலாசம், கல்யாணபுரம், பஞ்சாக்கர புரம், தட்சிணகாசி, சுவேதகானம், பனகாரண்யம், சண்மங்கள தலம், ஆகாசநகரம், நேத்திரார்ப்பணபுரம், தேஜிநீவனம் என்னும் வேறு பத்துப் பெயர்களுமுண்டு, மூவர் பாடல் பெற்ற தலம்.

திருமால் சிவபெருமானிடம் சக்கரம் பெறவேண்டி வழி பட்டுச் சக்கரம் பெற்றார் என்பது வரலாறு.

இத்தலபுராணத்தை மெய்ஞான முனிவர் இயற்றியுள்ளார்.

**திருவுசாத்தானப் புராணம்** (சூதவனப் புராணம்)

மன்னார்குடியருகே முத்துப்பேட்டைகோயிலூர் என்பதே திருவுசாத்தானம் என்னும் தலமாகும், இராமர் சேது அணை கட்டுவதற்கு இத்தலத்து இறைவனிடம் மந்திரோபதேசம் பெற்றதாக வரலாறு. கடலில் அணை கட்டுவதற்குரிய வழி முறைகளை இராமபிரான் உசாவிய (கேட்டறிந்து) காரணத்தால் இப்பெயர் பெற்றது. இறைவன் மாமரத்தினடியில் திகழ்வதால் சூதவனம் என்றும் அழைக்கப்பெறும்.

இந்திரன், விசுவாமித்திரர், இராமர், இலக்குவன், ஜாம்பவான், சுக்கிரன், அநுமன் ஆகியோர் வழிபட்டது. சம்பந்தர் பாடல் பெற்றது.

இத்தலம் பற்றி எழுந்த மூன்று தலபுராணங்கள் அறியப் பெறுகின்றன. பழநியப்பன் சேர்வைக்காரர் இயற்றியதும், அம்பலவாணமுனிவர் இயற்றியதும் கிடைக்கவில்லை.

காரைக்குடி ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியார் இயற்றியதே சூதவனப் புராணம். இதில் 17 சருக்கங்களும் 1520 பாடல்களும் உள்ளன.

**திருவெறும்பியூர்ப் புராணம்**

தஞ்சையிலிருந்து திருச்சி செல்லும் வழியிலுள்ள தலம், திருஎறும்பியூர். இந்திரனும் தேவர்களும் எறும்பு வடிவங் கொண்டு வழிபட்டதலமாதலின் இப்பெயர் பெற்றது. மலைக் கோயில். இதற்கு, பிப்பிலீச்சரம் மணிக்கூடம், இரத்தினக்கூடம், திருவெறும்பிபுரம், எறும்பீசம், பிரமபுரம், இலக்குமிபுரம், மதுவனபுரம், குமாரபுரம் எனப் பல பெயர்களுண்டு.

திருமால், பிரமன், நைமிசாரண்ய முனிவர் வழிபட்ட தலம். கரன் என்பவன் இங்கு எறும்பு வடிவம் கொண்டு வழிபட்டதாகவும் கூறுவர். அப்பர் பாடல்பெற்ற தலம்.

நாகலிங்க முனிவர் இத்தலபுராணத்தை 18 படலங்களில் இயற்றியளித்துள்ளார்.

**திருவேட்டக்குடிப் புராணம்**

காரைக்காலுக்குப் பக்கத்திலுள்ள தலம் வேட்டக்குடி. அருச்சுனன் தவம் செய்து கொண்டிருந்தபொழுது சிவபெருமான் வேட வடிவத்துடன் வந்து அருளியதாக வரலாறு கூறுவர். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

இத்தலபுராணத்தை வேலுச்சாமிப் பிள்ளையவர்கள் இயற்றியுள்ளார்கள்.

**பட்டீச்சுரப் புராணம்**

கும்பகோணத்திற்கு அருகிலுள்ள ஊர் பழையாறை. இங்குள்ள கோயில் காமதேனுவின் புதல்வியருள் 'பட்டி' பூசித்தது. ஆதலால் இப்பெயர் பெற்றது. தேவி தவஞ் செய்ததால் தேவிவனம் எனப்பட்டது. விசுவாமித்திரர் பிரம்மரிசி பட்டம் பெற்றது இத்தலத்திலேயே என்பர். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த இரேவண சித்தர் பாடிய இத்தலபுராணம் இன்று கிடைக்கவில்லை.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய இத்தலபுராணமும் நிறைவடையவில்லை என்று அறிகிறோம்.

வடமொழிப் புராணம் தமிழில் உரைநடையில் பட்டீசுவரர் மான்மியம் என வெளிவந்துள்ளது.

**பரிதியப்பர் தலபுராணம்**

தஞ்சாவூரிலிருந்து பட்டுக்கோட்டைக்குச் செல்லும் வழியில் உள்ளது பரிதிநியமம் என்னும் தலம். பருத்தியப்பர் கோயில் என வழங்குகிறது. பரிதி-சூரியன், நியமம்-கோயில். ஒரு காலத்தில் சூரியன் கோயிலாக இருந்து பின்பு சிவாலயமாக மாறியிருக்கலாம் என்பர். சூரியன் வழிபட்ட தலம். சம்பந்தர் பாடல் பெற்றது.

நாராயணசாமி நாயக்கர் இயற்றிய இத்தல புராணத்தில் 9 படலங்களும் 563 பாடல்களும் உள்ளன.

**பழையாறை வடதளிப் புராணம்**

தாராசுரம் அருகேயுள்ளது பழையாறை, வடதளி என்ற இரண்டு தலங்கள். அமர்நீதி நாயனார் வாழ்ந்த தலம். சோழ மன்னர்களின் தலைநகர்களுள் ஒன்றாக விளங்கிய தலம். பழையாறை நகர், நந்திபுரம், முடிகொண்ட சோழபுரம் இராசராசபுரம் என்றும் கூறப்பெறுகிறது. பழையாறை நான்கு சிறு பிரிவுகளுள்ளன. அவை, வடதளி, மேற்றளி, கீழ்த்தளி (பழையாறை) தென்தளி என்பன.

சமணர்களால் மறைக்கப்பட்டு அப்பரால் உண்ணா நோன் பிருந்து வெளிப்படுத்தப்பட்ட பெருமான் வீற்றிருக்கும் இத் தலத்தைச் சிறப்பித்து அப்பர் பாடியுள்ளார்.

கருடன், ஆதிசேடன் வழிபட்ட இத்தலபுராணம் 15 அத்தியாயங்களில் அமைந்துள்ளது.

வடதளி என்ற சொல்லுக்கு ஆலமரத்தின் கீழுள்ள கோயில் என்ற பொருளும் கூறுவர்.

இங்குள்ள மேற்றளி என்னும் தலத்திற்கு இரேவணச் சித்தர் பாடிய திருமேற்றளிப்புராணம் இன்று கிடைக்கப் பெறாமல் மறைந்துவிட்டது.

**பூவனூர்ப் புராணம்**

வெண்ணாற்றின் தென்கரையிலுள்ள ஊர் பூவனூர். சுகப்பிரம்மரிசி மலர்வனம் வைத்து வழிபட்ட தலம். அப்பர் பாடல் பெற்றது. இத்தலபுராணத்தில் ஏழு படலங்கள் உள்ளன.

**பெருவேளூர்த் தலபுராணம்**

கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்லும் வழியில் உள்ளது பெருவேளூர். முருகன் வழிபட்டதால் வேளூர் என்றும், பெருவேள் என்பவன் வாழ்ந்த இடமாதலின் பெருவேளூர் என்றும் பெயர் பெற்றது. மணக்கால் ஐயம்பேட்டை என வழங்குகிறது. மோகினி வடிவம் பெற்ற திருமால் மீண்டும் ஆண் வடிவு பெற இத்தலத்திறைவரைப் பூசித்துப் பெற்றார் என்பர்.

பிருங்கி, கௌதமர் ஆகியோர் வழிபட்ட தலம். இத்தல புராணத்தில் 25 படலங்களும் 636 பாடல்களும் உள்ளன.

**மாயூரப் புராணம்**

காவிரியின் தென்கரையிலுள்ள சிறப்பானதொரு தலம் மயிலாடுதுறை. இதுவே மாயூரம் என வழங்குகிறது. பார்வதி தேவி மயில் வடிவம் பெற்று இங்கு வழிபட்டதால் இப் பெயர் பெற்றதென்பர். மயில் வடிவில் கௌரி தாண்டவம் ஆடியதால் கௌரி மாயூரம் என்றும் பெயர் பெறும். ரூதவனம், பிரமபுரம், சிகண்டிபுரம், தென்மயிலை என்பன வேறு பெயர்கள்.

இந்திரன், பிரமன், வியாழ பகவான், அகத்தியர், சப்த கன்னியர், உமாதேவி ஆகியோர் வழிபட்ட தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

இத்தலத்திற்கு இரண்டு புராணங்கள் உள்ளன. 1. ஆதியப்ப நாவலர் இயற்றிய மாயூரப் புராணத்தில் 109 படலங்களும் 1519 பாடல்களும் உள்ளன. 2. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய மாயூரப் புராணத்தில் 61 படலங்களும் 1894 பாடல்களும் உள்ளன.

**வேதாரணிய புராணம்**

திருத்துறைப் பூண்டியருகேயுள்ள தலம் திருமறைக்காடு. வேதங்கள் வழிபட்ட தலம். வேதவனம், மறைவனம் சத்யகிரி, ஆதிசேது, தென்கயிலாயம் என்று வேறு பெயர்களும் உண்டு.

இராமர் இங்கு வழிபட்டதாகக் கூறுவர். விடங்கத் தலங்களுள் ஒன்று. ஏழு திருமுறைகளிலும் இடம்பெற்ற சிறப்புடைய தலம். மூவர் பாடல் பெற்றது.

இத்தலத்தில் மாவலி, பரஞ்சோதி முனிவர், தாயுமானவர் ஆகியோர் அவதரித்துச் சிறப்புற்றனர். அகத்தியருக்குத் திருமணக்காட்சி வழங்கிய தலமும் இதுவே.

அகத்தியர், முசுகுந்தன், கௌதமர், விசுவாமித்திரர், வசிட்டர், நாரதர், பிரமன், மாந்தாதா போன்ற பலர் பூசித்துப் பேறு பெற்றனர் என்பர்.

இத்தலத்திற்கு அகோர தேவர் இயற்றிய தலபுராணத்தில் 77 படலங்களும் 3243 பாடல்களும் உள்ளன. பரஞ்சோதி முனிவர் இயற்றிய மற்றொரு புராணத்தில் 18 படலங்களும் 1113 பாடல்களும் உள்ளன. ஆக, இத்தலத்திற்கு இரண்டு புராணங்கள் இயற்றப் பெற்றுள்ளன.

இதுவரையில் கூறப்பெற்றவை காவிரியின் தென் கரையிலுள்ள சிவத் தலங்களுக்குரிய புராணங்களாகும். இவ்வாறு 55 தலங்களுக்குரியதாக மொத்தம் 68 புராணங்கள் கிடைக்கின்றன. கும்பகோணத்திற்கு ஐந்தும்; திருவிடைமருதூருக்கு மூன்றும்; பட்டீச்சரம், பழையாறை, மாயூரம், நாகப்பட்டினம், திருமறைக்காடு இவை ஒவ்வொன்றிற்கும் இரண்டு புராணங்களும் கிடைக்கின்றன.

மொத்தமுள்ள 127 பாடல்பெற்ற தலங்களுள்ள பின்வரும் 68 தலங்களுக்குரிய புராணங்கள் கிடைக்கவில்லை.

**சோழ நாட்டில் காவிரிக்குத் தென்கரையிலுள்ள புராணம் கிடைக்காத தலங்கள்**

திருப்பராய்த்துறை
கற்குடி
நெடுங்களம்
மேலைத் திருக்காட்டுப்பள்ளி
ஆலம்பொழில்
பூந்துருத்தி
வேதிகுடி
தென்குடித்திட்டை
திருப்பாலைத்துறை
குடந்தைக் காரோணம்
தென்குரங்காடுதுறை
திருநீலக்குடி
வைகல் மாடக்கோயில்
திருநல்லம்
கோழம்பம்
திருவழுந்தூர்
திருச்செம்பொன்பள்ளி
திருநனிப்பள்ளி
திருவலம்புரம்
ஆக்கூர்
தெளிச்சேரி
மீயச்சூர்
மீயச்சூர் இளங்கோயில்
திருப்பாம்புரம்
சிறுகுடி
திருவன்னியூர்
திருக்கருவிலி
பேணுபெருந்துறை
நறையூர்ச் சித்தீச்சரம்
திருஅரிசிற் கரைப்புத்தூர்
சிவபுரம்
கலயநல்லூர் (சாக்கோட்டை)
கருக்குடி
நன்னிலம்
கொண்டீச்சரம்
பனையூர்
திருவிற்குடி
திருப்புகலூர்
திருப்புகலூர் வர்த்தமானேச்சரம்
திருப்பயிற்றூர்
சாத்தமங்கை
தேவூர்
பள்ளியின் முக்கூடல்
திருவிளமர்
கரவீரம்
தலையாலங்காடு
நாலூர் மயானம்
இரும்பூளை
அரத்தைப்பெரும்பாழி (அரித்துவாரமங்கலம்)
திருஅவளிவணல்லூர்

வெண்ணியூர்
பாதாளேச்சரம்
இடும்பாவனம்
கடிக்குளம்
தண்டலைநீணெறி
வெண்டுறை
பேரெயில்
நாட்டியத்தான்குடி
கன்றாப்பூர்
வலிவலம்
கைச்சினம்
திருக்கோளிலி (திருக்குவளை)
அகத்தியான்பள்ளி
திருக்கோடி
திருத்தென் திருவாய்மூர்

## வைணவத் தலபுராணங்கள்

சோழ நாட்டில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திருமால் திருப்பதிகள் மொத்தம் 40 ஆகும். அவற்றுள் காவிரியின் வடகரையிலுள்ள தலங்கள் 21 ஆகும். இவற்றுள், திருச்சித்திரக்கூடம் (சிதம்பரம்), திருவாலியும் திருநகரியும், திருக்காழிச் சீராம விண்ணகரம் ஆகிய மூன்று தலங்களுக்குரிய புராணங்களே கிடைக்கின்றன.

திருத்தெற்றியம்பலம், திருமணிக்கூடம், திருப்பார்த்தன் பள்ளி, திருச்செம்பொன்செய் கோயில், அரியமேய விண்ணகரம், அமணிமாடக்கோயில், வைகுந்த விண்ணகரம், (இவை திருநாங்கூர்), திருத்தேவனார் தொகை (கீழ்ச்சாலை). திருவெள்ளக்குளம், (அன்னங்கோயில்), திருவண்பருடோத்தமம் திருக்காவளம்பாடி, திருப்பேர்நகர் (கோவிலடிப்பெருமாள்), திருஅன்பில், திருக்கரம்பனூர் (உத்தமர் கோயில்), திரு வெள்ளறை (வேதகிரி சேத்திரம்), திருவரங்கம், திருஇந்தலூர், திருவள்ளியங்குடி ஆகிய 18 தலங்களுக்குரிய செய்யுள் நடையிலான புராணங்கள் கிடைக்கவில்லை. சில தலங்களுக்கு உரைநடையிலான புராண நூல்களே கிடைக்கின்றன.

## திருச்சித்திரகூடப் புராணம்

சிதம்பரம் கோவிலில் கனகசபைக்குத் தென்மேல்பால் உள்ளது திருச்சித்திரக்கூடம். இங்கு கோவிந்தராசப் பெருமாள் பள்ளி கொண்டிருக்கிறார். நடராசப் பெருமான் உள்ளிட்ட தில்லை மூவாயிரவர் இவரை வணங்க இங்கு வந்ததாகவும், பாணி, பதஞ்சலி, வியாக்ரபாதர் ஆகியோரும் வழிபட்டதாகவும் வரலாறு. திருமங்கையாழ்வாரும் குலசேகராழ்வாரும் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

இத்தலபுராணத்தை ஏ. வே. இராமனுச நாவலர் அவர்கள் இயற்றியுள்ளார். இதில் 61 படலங்களும் 2030 பாடல்களும் உள்ளன.

**தாடாளன் கோயிற் புராணம்**

சீகாழியில் உள்ளது சீராம விண்ணகரம் என்னும் திருமால் தலம். இங்குள்ள பெருமாளின் திருநாமம் தாடாளன், உலகளந்த பெருமாள் ஆகும். இவ்வூரில் திருமங்கையாழ்வார் திருஞானசம்பந்தரை வாதில் வென்றதாக வரலாறு கூறுவர். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார்.

இத்தல புராணம் இயற்றியவர் மற்றும் விவரங்கள் அறியக் கூடவில்லை.

**திருவாலி திருநகரிப் புராணம்**

நூற்றெட்டுத் திவ்விய தலங்களில் ஒன்று, சோழநாட்டின் கண் காவிரிக்கு வடபால், காழிச்சீராம விண்ணகரம், திருநாங்கூர், திருக்காவளம்பாடி, திருவெள்ளக்குளம் முதலிய திருத்தலங்களுக்கு அருகே யமைந்துள்ளது திருவாலி திருநகர். இங்கு மணவாளப் பெருமாள் அமிர்தவல்லித் தாயாருடன் எழுந்தருளியுள்ளார்.

இத்திருவாலி திருநகரை யடுத்து மேற்கிலுள்ள புதுத்துறை என்னும் கிராமத்தில் நாராயண நாய்க்கர் என்பார்க்குப் புதல்வராகத் தோன்றிய கோவிந்த ராமானுச தாசர் என்னும் கூறைநாடு வித்துவான் கோவிந்தசாமி நாய்க்கர் அவர்கள் இத் தலபுராணத்தை இயற்றியுள்ளார். இதில் 10 அத்தியாயங்களும் உள்ளன.

வடமொழி காருட புராணம் உத்தர காண்டத்தில் கூறிய இத்தல மான்மியத்தை இவர் தமிழில் மொழிபெயர்த்து இப் புராணத்தைப் பாடியுள்ளார்.

இந்நூலின் பாயிரப் பகுதியில் காப்புப் பாடல்களாக பதினாறு பாடல்கள் அமைந்துள்ளன. முதலில் பரமபதநாதன் வணக்கம், அதன்பின் வேதராஜப் பெருமாள், யோகநரசிம்மப் பெருமாள், வயலாலி மணவாளப் பெருமாள், பெரிய பிராட்டியார், அமிர்தவல்லித் தாயார், சேனை முதலியார், நம்மாழ்வார், ஆழ்வார் பதின்மர், திருமங்கையாழ்வார், குமுதவல்லித் தாயார், பூர்வாசாரியர்கள், அஸ்மதாசாரியர் ஆகியோர் பேரில் வணக்கப் பாடல்கள்பாடப் பெற்றுள்ளன.

நம்மாழ்வாருக்குத் தனியே வணக்கம் பாடும் இந் நூலாசிரியர் ஆழ்வார் பதின்மரையும் ஒருசேரத் துதிக்கின்றார். பின் திருமங்கை யாழ்வாருக்கும் குமுதவல்லித் தாயாருக்கும் தனித்தனியே வணக்கம் செலுத்துகின்றார். வைணவத்தில் பூர்வாசாரியர்களான மணவாள மாமுனிகள், நாதமுனி, உய்யக் கொண்டான், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரியநம்பி, இராமானுசர், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்கு திருவீதிப் பிள்ளை, பிள்ளையோகாசாரியர், திருவாய்மொழிப் பிள்ளை ஆகியோரையும் முதற்கண் போற்றுவதைக் காணலாம்.

இந்நூலில் அமைந்துள்ள அவையடக்கப் பாடல் ஐந்தனுள் திருமாலின் திருவவதாரச் சிறப்பையே உவமையாக வைத்து அவையடக்கம் கூறியிருப்பதும் குறிக்கத்தக்கதாகும். காட்டாக.

“இடங்கொள்பாற் கடலைக் கடைந்தவன் திரண்ட
இமையவர்க் கமுதெடுத் தளித்தோன்
விடங்கொள்பா லதனைப் பூதனை முலைவாய்
விரும்பியே யுண்டனன் அதனாற்
திடங்கொள்செந் தமிழ்வா ரிதியைக் கடைந்தே
சேர்ந்தவர்க் கரும்பொரு ளளித்தோர்
தடங்கொண்மா மொழிபோற் புன்மையேன் மொழிந்த
தமிழையுங் கொள்வது தகைத்தே”.

(பாயிரம். 20)

என்னும் பாடல் குறிப்பிடத்தக்கது.

பாயிரப் பகுதியினையடுத்துத் திருநாட்டுச்சிறப்பும் திருநகரச் சிறப்பும் கூறும் நூலாசிரியர், பிறகு, நூல்வரலாறு, வில்வா ரணியம் யோக நரசிம்மப் பெருமாள் வரலாறு, கங்கைப்பழி யொழித்தது, கருத்துமனுக்கு வரமளித்தது, உபரிசரவசுவின் நோய் தவிர்த்தது, மேகனுக்குச் சுவர்க்க மளித்தது, பரகாலன் திருவவதாரம் குமுதவல்லியைத் திருமணம் புரிந்தது, பரகாலனுக்குத் திருமந்திரம் உபதேசித்தது என்னும் பத்து அத்தியாயங்களை விளக்கிக்கூறுகிறார். மொத்தம் 501 பாடல் களால் நிறைவுறும் இத்தலபுராணம் எளிய இனிய நடையி லமைந்துள்ளதும் குறிக்கத் தக்கதாம்.

திருமங்கையாழ்வாரின் பிரபாவங்களை எடுத்துக்கூறும் ஆசிரியர் அவர்தம் ‘வாடினேன்’ எனத் தொடங்கும் பதிகத்தின் பயனாய்ப் பரமன் ஆட்கொண்டதையும், அவர் அரங்கம்

முதலான பல தலங்களிலும் சென்று பாடியதையும் விளக்கு கின்றார்.

"வாடினேனெனத் தொடங்கிவண் டமிழினோர் பதிகம்
பாடு மெல்லையப் பனுவல்கேட் டகமகிழ் பரமன்
ஏட விழ்ந்தார் மன்னநீ யிருநில முய்வான்
பாடல் செய்குதி மறையைநா மீந்தனம் பதவி".

"என்ன வாய்மலர்ந் திம்மெனக் கரந்தன னிப்பான்
மன்ன னுந்தன தொருபெருந் தேவியோ டேகிப்
பொன்ன ரங்கமே முதலிய பதிபல புகுந்தே
உன்ன ரும்பணி யாற்றியு மறைதொடுத் திசைத்தான்".
(42, 43)

எனவரும் பரகாலனுக்குத் திருமந்திரம் உபதேசித்த அத்தியாயப் பாடல்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாம். மேலும், ஆழ்வாருக் குற்ற பெயர்க் காரணங்களையும் இவர் நிரல்பட எடுத்துக் கூறக் காணலாம்.

"மற்றும் பௌத்தர் பாசுபதர் முதலா மதத்தர் வீறடக்கி
வெற்றி மேவுந் திறமுதனாற் பரகால னெனவியன்பெயரொன்று
உற்றும் பரமன் திருவருள் மிக்குடைய வாற்றா லுலகுரைப்பப் ீ
பெற்றும் பெரிய வருண்மாரி யெனும்பேர் பிறிதும்
பெயருற்றான்". (44)

எனவரும் பாடல்கள் இதற்குச் சான்றுகளாம்.

சோழநாட்டில் காவிரியின் தென்கரையிலுள்ள தலங்கள் 19 ஆகும். இவற்றுள், திருக்கண்ணபுரம், திருநாகை ஆகிய இரண்டிற்கு மட்டுமே தல புராணங்கள் கிடைக்கின்றன.

திருக்கோளி, திருக்கண்டியூர், திருத்தஞ்சை மாமணிக் கோயில், திருக்கவித்தலம், திருக்கூடலூர், நந்திபுர விண்ணகரம், திருஆதனூர், திருப்புள்ளம் பூதங்குடி, திருக்குடந்தை, திருவிண்ணகரம் (உப்பிலியப்பன் கோயில்). திருவழுந்தூர், திருச் சிறுபுலியூர், திருத்தலைச்சங்க நாண்மதியம், திருநறையூர், திருக்கண்ணன்குடி, திருக்கண்ணமங்கை, திருச்சேறை ஆகிய 17 தலங்களுக்குரிய செய்யுள் நடையிலான புராணங்கள் கிடைக்க வில்லை. சிலவற்றிற்கு உரைநடையிலான புராணங்கள் கிடைக்கின்றன.

**திருக்கண்ணபுரப் புராணம்**

நாகப்பட்டினத்திலிருந்து நன்னிலம் செல்லும் வழியில் உள்ளது திருக்கண்ணபுரம். இங்கு, நீலமேகப்பெருமாள் சௌரிராஜன் என்ற பெயருடன் எம்பெருமான் நின்ற திருக்கோலம் கொண்டுள்ளார்.

திருமங்கையாழ்வாருக்குத் திருமந்திர உபதேசம், செய்யப் பெற்ற தலம் இது. விபீடணர், முனையதரையர் ஆகியோர் பூசித்துப் பேறுபெற்றதாக வரலாறு. பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகியோர் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

இத்தலபுராணத்தை நாராயணசாமி நாயக்கர் அவர்கள் இயற்றியுள்ளார்கள். இதில், 20 அத்தியாயங்களும் 1030 பாடல்களும் உள்ளன.

**நாகைப்புராணம்**

நாகப்பட்டினத்திலுள்ள நீலமேகப் பெருமாள் கோயில் சிறந்ததொரு வைணவத் தலமாகும். இது துருவனுக்குச் சேவை தந்தவுடன் தோன்றியதாகக் கூறப்படுகிறது. நாகராஜன், கலியன், திருமங்கையாழ்வார் ஆகியோர் பூசித்துப் பேறு பெற்றதாக வரலாறு. திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார்.

இத்தலபுராணத்தைத் திரு கோவிந்த பிள்ளையவர்கள் இயற்றியுள்ளார்கள்.

மேற்கூறிய 40 வைணவத்தலங்கள் அல்லாமல். கோடிக்கரை, ராஜமன்னார்குடி, வடுவூர், காட்டுமன்னார்குடி, தில்லை வளாகம், திருமண்டங்குடி, குணசேகரன் போன்ற வைணவத்தலங்களும் புராணம் பெற்றிருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது. இவற்றுள் இராசமன்னார் கோயிற் புராணம் மட்டும் கிடைக்கின்றது.

இவற்றுடன், களப்பாள் என்னும் தேவதாருவனத் தல புராணம் ஒன்றும் கிடைக்கின்றது.

**தேவதாருவனத் தலபுராணம்**

சோழ நாட்டில் மன்னார்குடிக்குத் தென்திசையில் உள்ள களப்பாள் என்று வழங்குகின்ற தேவதாருவனத் தலத்தில் எழுந்தருளியிருக்கும் கசேந்திரவரதப் பெருமாளின் புராணத்தை வட

மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து அளித்துள்ளார் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரவர்கள். பத்துப் படலங்களும் 450 பாடல்களும் உள்ள இத்தலபுராணம் சிறிய நடையிலமைந்ததொரு வைணவத் தல புராணமாகும்.

இத்தலம் கிருதயுகத்தில் தேவதாருவனமென்றும், திரேதாயுகத்தில் வசிட்டபுரமென்றும், துவாபரயுகத்தில் கருடபுரம் என்றும், கலியுகத்தில் கஜேந்திர வரதபுரம் என்றும் பெயர் வழங்கப் பெற்றுள்ளது. பிற்காலத்தில் வேளாளர் குலத்திற் பிறந்த களப்பாள் என்னுமொருவன் அரசனருளால் தன்பெயரை இந்தப் பதிக்கு இட்டதனால் இது களப்பாள் என்று பெயராயிற்று.

இத்தலத்திற்கு முடிவழங்கு சோழ விண்ணகரமென்றும் சந்நிதி அக்கிரகாரத்திற்கு முடிவழங்கு சோழ சதுர்வேதி மங்கலமென்றும் பெயருள்ளன. சைவ சமயத்தில் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் கூற்றுவ நாயனாரென்பவர் இங்கு அவதரித்து இதனை ஏழுகூறு படுத்தி ஆண்டனர் என்பது வரலாறு. பராந்தக சோழன் மகனான இராஜாதித்த சோழனென்பவன் இவ்வூரிற் சிவபெருமான் கோயிலெடுப்பித்துத் தன் பெயரால் ஆதித்தேச்சுரமெனப் பெயரிட்டனன் என்றும் கூறுவர்.

எவ்விடத்து எச்சமயத்து எந்தத் தெய்வத்தைத் துதிப்பினும் அத்துதி அச்சுதப் பெருமானைச் சேர்தலால் அங்ஙனந் துதிக்கின்றவர்களுக்கு அருளும் பொருட்டு அவ்வச் சமயத்தில் அவ்வக் கடவுள் போலத் தோன்றுகின்ற எம்பெருமான் இங்கு விளங்குவதால் இத்தலத்தை அடைபவரே நன்மையடைபவராவார். பிறப்பயகற்ற வேண்டித் துதிப்போரும் தவஞ் செய்வோரும் அரும்பொருள் காண விழைவோரும் எக்காலத்திலும் இங்கு வாழ்கின்றனர். அன்றியும் மூவாயிரம் மகரிசிகள் எம்பெருமானைத் தியானித்துக் கொண்டு இத்தலத்தில் வாழ்கின்றனர். வைகுந்தத்தில் ஒரு மாதமும், கங்கைக் கரையில் ஐந்து மாதமும், மற்றைய தலங்களில் பற்பல காலமும் வசிப்பதனாலுண்டாகும் பயன்களெல்லாம் இப்பதியில் ஒருபொழுது உறைபவர் அடையும் பலனுக்கு நிகராகா. இப்பதி யாவராலும் வணங்கப் பெறுகின்ற துர்க்காதேவி கோயிலையுடையது மன்றிப் பலபல யாகசாலைகளும் கல்வி பயிலுமிடங்களும் வேத சாலைகளும் அன்ன சத்திரங்களும் கொண்டதாகும்.

கள்ளுண்டோரும், உறுதிதவறினோரும், வஞ்சித்துண் போரும், வஞ்சனையுரைப்போரும், உயிரை வதைப்போரும், பொய்யரும், வசைகூறுவோரும், நஞ்சு கொடுப்போரும், கற்பழித்தோரும், வேதசாலையை இழிவுபடுத்தினோரும், ஊன் உண்போரும், பெருமைமிழப்பவரும், போரில் பின்னிடுவோரும், பெரியோர் சொல்லை அவமதித்தோரும் இந்தத் தலத்தை யடைந்தால் தம் பாவங்களைப் போக்கியவராவார்.

எத்தலத்திலும் தீராத தீமைகளும் இங்குத்தீரும். எத்தகைய கீழ்மையான உயிரானாலும் இத்தலத்தை யடைந்தால் நன்மை பெறுவது உறுதி. இப்பதியை அடைந்தாலும், அடைய நினைத்திருந்தாலும், அப்படி நினைத்தவரோடு நட்புடையாரானாலும் அவர்கள் பெரும் பேறடைவார்கள்.

இத்திருக்கோயிலின் கண்ணே முளைக்கும் புற்களை வேரோடு கீண்டெடுப்போரும் கோயிலுக்கு வேண்டும் திருப்பணி களைச் செய்வோரும் எம்பெருமானுக்குத் திருமாலை கட்டிச் சார்த்துவோரும் இருமைப்பயனையும் அடைவார்கள் என இத்தகைய அரிய செய்திகளை தலவிசேட சருக்கத்தில் கூறக் காணலாம்.

இவ்வாறு வைணவ சமய விளக்கங்களுடன் மக்களுக்கான நல்லொழுக்கங்களையும் விளக்குவதாக இந்நூல் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**சோழ நாட்டில் பிற தலபுராணங்கள்**

மேற்கூறிய தலபுராணங்களைப் போன்றே சோழ நாட்டி லுள்ள பல சைவ, வைணவத் தலங்களுக்குப் புராணங்கள் பாடப் பெற்றுள்ளன. அவற்றுள் சில வருமாறு:

- ஆற்றூர்ப் புராணம் (மந்தார வனம்)
- இலக்குமிபுரத் தலபுராணம்
- உடையார்பாளையத் தல புராணம்
- உப்பூர்ப் புராணம்
- கங்கைகொண்ட சோழேசுரப் புராணம்
- குணசீலப்புராணம்
- காவேரி புராணம்
- சிருங்கபுரம் என்னும் கோட்டூர்ப் புராணம்
- சுவாமிமலைப் புராணம்
- தஞ்சைப் புராணம்
- தனியூர்ப் புராணம்
- திருபுவனப் புராணம்
- திருக்கடகப் புராணம்
- திருத்தலையூர்ப்புராணம்
- திருத்தவத்துறைப் புராணம் (லால்குடி)
- திருவதிட்டகுடி சிவத்தல புராணம்
- திருவரன் குளத்தலபுராணம்
- திருவிடங்கன் புராணம்(தில்லை)

திருவிடைக்கழிப் புராணம்
திரைலோக்கிப் புராணம்
தில்லையாடிப் புராணம்
துலாக்காவேரிப் புராணம்
நெல்லை மாநகர்ப் புராணம் (திருச்சியருகே)
பூவாளூர்ப் புராணம்
பெருந்தோட்டத்து அகத்தீச்சுர புராணம்
மாற்றூர்ப் புராணம்
வடகுடிப் புராணம்
வாருணமான்மியம் என்னும் பறங்கிப் பேட்டைப் புராணம்
விளத்தொட்டிப் புராணம்
வழுவூர் வீரட்டானப்புராணம்
ஸ்ரீமுஷ்ணப்புராணம்

இவ்வாறு முப்பதுக்கும் மேற்பட்ட தலபுராணங்கள் கிடைக்கின்றன. இவற்றுடன் உரைநடையிலமைந்த புராண நூல்கள் பல இச்சோழநாட்டுத் தலங்களுக்குரியதாகக் கிடைக்கின்றன.

இத்தல புராணங்கள் ஆசிரியர், காலம், சருக்கம், பாடல் தொகை போன்ற விவரங்களைப் பின்னிணைப்பிலுள்ள பட்டியலில் காணலாம்.

சோழநாட்டில் திருக்கோயில்கள் மிகுந்திருப்பது போன்றே தமிழ்த் தலபுராணங்களும் மிகுதியாகவே தோன்றியுள்ளன. பாடல் பெற்ற தலங்கள் பலவற்றிற்கும் புராணங்கள் இயற்றப் பெற்றுள்ளன. கிடைக்கக்கூடிய 142 தலபுராணங்களுள் பெரும்பான்மை சிவத்தலங்களுக்குரியவையே.

சிதம்பரம், கும்பகோணம், திருவிடைமருதூர். மயிலாடுதுறை, நாகப்பட்டினம். திருவாரூர், திருமறைக்காடு, திருவானைக்கா, திருவையாறு போன்ற புகழ்பெற்ற சிவத்தலங்கள் ஒன்றிற்கு மேற்பட்ட புராணங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழில் இன்று கிடைக்கக்கூடிய தலபுராணங்களுள் மிகுதியான எண்ணிக்கையில் கிடைப்பன சோழநாட்டுத் தலபுராணங்களேயாம். இவையல்லாமல் மேலும் பல தலபுராணங்கள் இருந்திருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது.

# பாண்டிநாட்டுத் தலபுராணங்கள்

தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாடு நம் நாட்டின் தென் கோடியை அலங்கரிப்பது. அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த இறைவர் எப்பொருட்குந் தானேயாய் யாவைக்கும் வீடாகியிருப்பதை புணர்த்த வந்து திருவிளை யாடல்கள் பல புரிந்தார் என்பர் ஆன்றோர். அடியார் வணங்கும் அம்மையும் அப்பனும் சேயுமான சிவ குடும்பமே, பாண்டியர் குலத் தொடர்பு கொண்டு முறையே அங்கயற் கண்ணியாகவும், சுந்தர பாண்டியராகவும், உக்கிரப் பெருவழுதி யாகவும் தோன்றி அரசுபுரிந்த பெருமை வாய்ந்த இப்பாண்டிய நாட்டின் பாடல் பெற்ற தலங்கள் பதினான்கு ஆகும். மூவர் பாடல் பெற்ற இத்தலங்கள் அனைத்திற்கும் தமிழ்த் தல புராணங்கள் கிடைப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பாண்டியனிடம் அமைச்சராயிருந்த மணிவாசகப் பெருமான் பாடிய திருவாசகத் தலங்கள் இரண்டும் தலபுராணங் களைப் பெற்றுள்ளன.

இவ்வாறு பாடல் பெற்ற பாண்டிநாட்டுத் தலங்களுக்கான தல புராணங்கள் இருபத்தைந்திற்கும் மேலாக இன்று கிடைக் கின்றன.

பாண்டி நாட்டிலுள்ள பதினெட்டு வைணவத் தலங்களில் கூடலழகர் கோயிலுக்கும் திருக்குருகூருக்கும் தலபுராணங்கள் கிடைக்கின்றன.

இந்நாட்டில், சைவமும் வைணவமும் வேறல்ல என்பதைக் காட்ட எழுந்த சங்கரநாராயணர் கோயில் முதலான பிற

தலங்கள் மிகப் பல உள. அவற்றுள் சிவத்தலங்களும் முருகன் தலங்களும் திருமால் திருத்தலங்களுமான பலவற்றிற்கும் தல புராணங்கள் எழுந்துள்ளன. இவ்வாறு ஆழ்வார்கள் நாயன்மார் களின் பாடல்கள் கிடைக்கப்பெறாத தலங்களுக்குரிய புராணங் கள் நாற்பதுக்கும் மேலாக இன்று கிடைக்கின்றன. இவற்றுள் மூவர் பாடல்பெற்ற தலங்களுக்குரிய புராணங்களை முதற்கண் நோக்குவோம்.

**மதுரைத் தலப்புராணம்**

தமிழகத்தின் பெரிய நகரங்களுள் ஒன்று மதுரை. இது புகழ் மிக்க பாண்டிய நாட்டின் தலைநகரம். தமிழ் வளர்த்த தலம். கபிலர், பரணர், நக்கீரர் முதலிய புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்த சங்கம் இருந்த ஊர்.

பகைவர் வேள்வியில் எழுப்பிய நாகம் நஞ்சினை உமிழ்ந்து இந்நகரத்தைத் துன்புறுத்தியபோது இறைவன் அந்த நஞ்சினை நீக்கி அமிழ்தத்தைக் கொண்டு இந்நகரத்தை மதுரமாக்கினார். அதனால் இது மதுரை என வழங்கப்படுகிறது என்பர்.

மதுரைக்கு நான்மாடக்கூடல் என்பதும் பெயர். கன்னி, கரியமால், காளி, ஆலவாய் என்னும் நான்கு மாடங்கள் கூடிய இடம் ஆதலால் இந்நகர் நான்மாடக்கூடல் என்னும் பெயர் பெற்றது. கடம்பவனம், கூடல், சிவராசதானி, பூலோக கயிலாயம் என்பன இத்தலத்திற்குரிய வேறு பெயர்கள். கோயிலின் பெயர் ஆலவாய் ஆகும்.

முருகன், பிள்ளையார், இந்திரன், வருணன் போன்றோர் வழிபட்ட தலம் இம்மதுரை. இங்கு சிவபெருமான் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் புரிந்தார் என்பது வரலாறு.

மாணிக்கவாசகர் பாண்டியரிடம் அமைச்சராக இருந்தது; திருஞான சம்பந்தர் கூன்பாண்டியனுடைய சுரநோயையும் கூனையும் நீக்கியது; சமணர்களை வென்றது; அனல்வாதம் புனல்வாதம் செய்தது; மூர்த்தி நாயனார் அரசாட்சி செய்தது; வரகுண பாண்டியனுக்காக இறைவன் கால் மாறி ஆடியது; இறைவியே தடாதகையாக அரசாண்டது எனப் பல வரலாறு கள் நிகழ்ந்தது இத்தலத்தின் பெருஞ் சிறப்பாகும். முப்பெரும் சக்தி பீடங்களுள் ஒன்றாகவும் இது திகழ்கின்றது.

இத்தலத்தைச் சிறப்பித்து ஞானசம்பந்தர் ஒன்பது பதிகங்களும், நாவுக்கரசர் இரண்டு பதிகங்களும் பாடியருளியுள்ளனர். இத்தல இறைவரையும் இறைவியையும் போற்றிப் பாடியுள்ள தமிழ்நூல்கள் மிகப்பல.

மதுரைத் தலத்திலுள்ள சோமசுந்தரக் கடவுளுடைய திருவிளையாடல்களை விரித்துக் கூறுகின்ற புராண நூல்கள் ஒருவகையில் மதுரைத் தலபுராணங்களாகவே கொள்ளத்தக்கன. இவ்வாறு எழுந்த தலபுராணங்கள் நான்காகும். அவை, திருவாலவாயுடையார் திருவிளையாடல், திருவிளையாடற் புராணம், சுந்தர பாண்டியம், கடம்பவனப்புராணம் என்பன. முதல் மூன்றிலும் தலத்தின் பெயரைவிட இறைவனின் பெயரே முதன்மை பெறுவதனால் இவற்றைத் தலபுராணமாகக் கொள்ள முடியுமா என்றும் ஐயுறுவர் சிலர். இறைவனின் இந்தத் திருவிளையாடல்கள் அனைத்தும் இத்தலத்திலேயே நிகழ்ந்ததாகக் கூறப்பெறுவதால் இவை இத்தலத்தின் பெருமை கூறும் நூல்கள் என்பதில் ஐயமில்லை.

முதலாவது திருவாலவாயுடையார் திருவிளையாடல், 13 ஆம் நூற்றாண்டில் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவரால் இயற்றப் பெற்றது. 1753 செய்யுட்கள் கொண்டது.

இரண்டாவது சுந்தரபாண்டியம், 16 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் அனதாரியப்பர் என்பவரால் இயற்றப் பெற்றது. 2015 பாடல்களுக்கு மேல் உள்ளது.

மூன்றாவது திருவிளையாடற் புராணம், 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பரஞ்சோதி முனிவர் என்பவரால் இயற்றப் பெற்றது. 3363 பாடல்கள் கொண்டது.

நான்காவதாக அமைவது கடம்பவனப்புராணம். இலம்பூர் வீமநாத பண்டிதர் இயற்றிய இந்நூலில் 1090 பாடல்கள் உள்ளன.

இவை நான்கும் சைவத் தலபுராணங்களாம். இவற்றை ஈண்டு நோக்குவோம்.

### பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடற் புராணம்

பெரும்பற்றப் புலியூர்நம்பி என்பவர் இயற்றிய மதுரைப் புராணம் நம்பி திருவிளையாடற் புராணம் என்றே வழங்கப் பெறுகிறது.

பெரும்பற்றப் புலியூர் என்பது சிதம்பரம். இவரது ஊர் செல்லிநகர் (பனையூர்). இவர் வேம்பத்தூர்க் கவுணிய கோத்திரம் சோழியப் பிராமண வகுப்பினர் ஆதலால் இவர் இயற்றிய இப்புராணம் 'வேம்பத்தூரார் திருவிளையாடல்' என்றும் வழங்கப் பெறுகிறது.

'கார்வளங்கொள் கப்பிஞ்சி நாட்டில் இப்புராணம் செய்தார் என இறுதியிலுள்ள பாடலால் அறிகிறோம். இப்பகுதி மதுரைக்குக் கிழக்கேயுள்ள நாடென்று கூறுவர். கப்பிஞ்சி நாடு என்பது திருச்சிராப்பள்ளி மருங்காபுரிச் சமீனின் பகுதி என்றும், இது குலசேகர பாண்டியன் சாசனம் அமைந்துள்ள திருப்பத்தூருக்கு அருகிலுள்ளதென்றும் கூறுவர். குலசேகரன் என்ற பாண்டியன் இவரைக் கொண்டு இந்நூல் செய்வித்தான் என்றும், அரங்கேற்றியபோது பல விருதுகளை அளித்தான் என்றும், பின்னர் இவர் மரபினர் செல்வராக விளங்கினர் என்றும் கூறுவர்.

வடமொழியிலிருந்த உத்தரமா புராணத்தின் ஒரு பகுதியாகிய சாரசமுச்சயம் என்பதிலிருந்தே இவர் இப்புராணத்தைத் தமிழில் இயற்றியதாகக் கூறுவர். இப்புராண நூலே நெடுங்காலமாக மதுரைத் தலவரலாற்றை உணர்த்தி வந்துள்ளது. பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணம், கடம்பவன புராணம், திருவிளையாடற் பயகரமாலை, திருவுசாத்தான நான்மணிமாலை போன்ற பல நூல்களுக்கு இதுவே துணை நூலாக அமைந்ததென்பர்.

1753 திருவிருத்தங்களுடன் கூடிய இப்புராணத்துள், பாயிரம் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், பதிகம், நூல் வரலாறு, திருநகரச் சிறப்பு, நூற்பயன் என்ற பகுதிகளின் பின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் சொல்லப்படுகின்றன.

வாதவூரடிகள் சரித்திரம் தனியே நான்கு படலங்களில் 241 பாடல்களால் கூறப்பெற்றுள்ளன. இதுவே தனியாக ஒரு புராணமாகக் கூறத்தக்க அளவு உள்ளது. திருவாசகப் பதிகங்கள் சில இன்ன சந்தர்ப்பத்தில் பாடப் பெற்றன என்பன தெளிவாக இதில் சுட்டப் பெற்றுள்ளன. இசை இலக்கணம், அணிகளின் இலக்கணம், குதிரை இலக்கணம் எனப்பல செய்திகளை இந்நூலில் மிகத் தெளிவாகக் கூறக் காணலாம்.

பிற்கால நூல்களில் பதிகம் என்னும் பகுதி மிகுதியாகப் பாடப் பெறுவதில்லை. ஆயின், இதில் முற்கால நூல்களை

யொட்டிப் பதிகம் அமைக்கப் பெற்றுள்ளது. மேலும், பதிகப் பாடல்களின் முதல் நினைப்பைக் கடைசியில் ஒரு பாடலாகவும் அமைத்துள்ளது குறிக்கத்தக்கது. இது, அக்காலத்தில் சைவ மக்கள் இந்நூலைப் பாராயணம் செய்யும் நியமம் உடையவரா யிருந்தார்கள் என்பதை யுணர்த்தும்.

**புதிய செய்திகள்**

பின்வந்த பரஞ்சோதியார் புராணத்துள் இல்லாத சில புதிய செய்திகள் இப்புராணத்திலுள்ளன. குதிரை வாங்கச் சென்ற மாணிக்கவாசகர் கானப்பேர் வழியாகச் சென்றார் என்பது; நாயன்மாருள் ஒருவரான மூர்த்தியார் வரலாறு தனிப் படல மாகக் கூறப் பெறுவது; காரியார் நாரியார் பாப்பகுந்தது; பதஞ்சலிக்கு நடஞ் செய்தது போன்றன புதிய பகுதிகளாம்.

மதுரை பற்றிய அரிய செய்திகளும் சொற்களும் தொடர் களும் இந்நூலால் தெரிய வருகின்றன. தும்மினால் 'நூறு ஆயுள்' என்று கூறுவது மரபு. ஆனால், தும்மினால் 'சிவாய' என்று சொல்லுவது மிகவும் சிறப்பான செய்தி. "இறைவன் உதவினன் இரங்கி, தும்மினாற் சிவாய போல் தொடர்ந்து" என்று (48:10) இந்நூலில் கூறியிருப்பது இந்நூலாசிரியரின் சைவப் பண்பை உயர்த்திக் காட்டுகிறது என்பர்.[1]

"சொக்கனென் றொருகா லோதில்
துயர்கெடும் பகையும் மாளும்;
சொக்கனென் றொருகா லோதில்
தொலைவிலாச் செல்வம் உண்டாம்;
சொக்கனென் றொருகா லோதில்
சுருதிசொல் யாண்டுஞ் செல்லும்;
சொக்கனென் றொருகா லோதில்
சொர்க்கமும் எளிதாம் அன்றே".

"திருந்திய இறைவன் எண்ணெண் திருவிளை யாட்டி லொன்றைப்
பொருந்திமுன் கற்போர் கேட்போர் புவிபுகழ் அரச ராகிப்
பெரும்பயன் துய்த்து நீங்காப் பிறப்பிறப் பொழிந்திங் கெய்தா
அரும்பெருஞ் சிவலோ கத்தில் அணைவதற் கைய மின்றே"

1. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 13ம் நூ. பக். 248.

என்னும் இந்நூல்பயன் கூறும் பாடல்களும் இந்நூலாசிரியரின் சிவபக்தியையும் சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடல்களில் திளைத்த மகிழ்ச்சியையும் காட்டுவனவாம்.

## முதல் தலபுராண நூல்

பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் வீரைத்தலைவன் பரசமய கோளரி என்பவன் இருந்து செய்த நூல்களுள் திருப்பாதிரிப் புலியூர்த் தலபுராணங்கள் இரண்டு. அவை அட்டாதசபுராணம், கன்னிவன புராணம் என்பன. இவை சாசன வாயிலாக அறிகிறோமேயன்றி, நூல்கள் கிடைக்கவில்லை.

அதே நூற்றாண்டின் இடைப்பகுதியில் சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடினார். இவைகளே இப்போது புராணம் என்ற பெயரில் நாம் அறியும் முதல் தமிழ் நூல்களாகும்.

தலபுராணமாக இன்று நமக்குக் கிடைக்கும் முதல் நூல் பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடல் ஆகும். பதின் மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய இந்நூல், பழைய திருவிளையாடல்' என்றும் 'திருவாலவாயுடையார் திருவிளையாடல்' என்றும் வழங்கும். 'மதுரைப் புராணம்' என்றும் ஆசிரியர் இதைக் குறிப்பிடுகின்றார் (பா. 1752). இந்நூல் தோன்றியபின் நானூறு ஆண்டுகள் கழித்துத் தோன்றியதே பரஞ்சோதி முனிவர் (17 ஆம் நூ.) செய்த திருவிளையாடற் புராணம் ஆகும்.

திருப்புத்தூர்ச் சிவாலயத்தின் தெற்குமதிலில் கண்ட கல்வெட்டொன்றில் கி.பி. 1267 இல் பட்டமெய்திய மாறவர்மன் குலசேகர பாண்டியனது 36 ஆம் ஆட்சியாண்டில் (1303) அக்கோயில் அருச்சகர்கள் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பாருக்கு நிலம் அளித்தார்கள் என்ற செய்தி கூறப்பெற்றுள்ளது. இவர் திருவிளையாடற் புராணம் செய்த சிறப்பினாலேயே இந்நிலம் அளிக்கப் பெற்றது என்றும், 1303 க்குச் சில ஆண்டுகள் முன்னதாக இந்நூல் செய்யப் பெற்றிருக்கலாமென்றும் கூறுவர்.[1]

---

1. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு. 13 ஆம் நூ. பக். 249

முதல் தலபுராணமாகக் கிடைக்கும் மதுரைப் புராணம் என்னும் நம்பி திருவிளையாடலை டாக்டர் ஐயரவர்கள் 1906 மற்றும் 1927 ஆகிய ஆண்டுகளில் இருமுறை பதிப்பித்துள்ளார்கள்.

**சுந்தர பாண்டியம்**

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த அனதாரியப்பர் மதுரையிலுள்ள இறைவன் திருவிளையாடல்களைப் போற்றிப் பாடிய நூல் சுந்தரபாண்டியம். சுமார் 4000 பாடல்கள் கொண்ட இப்புராணம் முழுமையும் கிடைக்கவில்லை. திரு ரா. ராகவையங்கார் மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கு அளித்த ஒரு ஏட்டுப்பிரதியிலிருந்து அரசினரால் 1955 ஆம் ஆண்டு அச்சிடப் பெற்றுள்ள இந்நூலில் 2017 பாடல்களே உள்ளன.

அனதாரியப்பர், திருவிருந்தான் (மன்றை) என்ற வள்ளலுடைய அவைப்புலவராக இருந்தபோது, வடமொழியிலுள்ள சுந்தர பாண்டியத்தைத் தமிழிற் பாடுமாறு அவன் கேட்கத் தாம் பாடியதாகக் கூறுவர்.

“ஆய சொக்கர் அருட்கடல் வெள்ளமார்
நேயன் வெண்குடை நீழலிற் சேடன்போல்
சேய பார்ச்சுமை செந்துகள் தாங்கினான்
தூய நெஞ்சினன் நீதி தொடர்ந்துளான்”.

“அன்னவன் அரசர் சூழும் க்ச்சிவீ ரப்ப னென்று
மன்னவ னருள்சேர் மன்றைச் செவ்வந்தி துணைவன் வாய்மைத்
தென்னவன் திருவி ருந்தான் சவுந்தரன் தேவ பாடைத்
துன்னிருங் கதைதொன் னூலாற் சொல்லெனச் சொல்ல லுற்றேன்”

(நகரச் சருக்கம் 46,47, பாயிரம். 2)

இப்போது கிடைக்கும் நூலில் உற்பத்தி காண்டம், திக்கு விசய காண்டம், உக்கிர காண்டம், லீலாகாண்டம் என்ற நான்கு பகுதிகள் உள்ளன. இவற்றில் முறையே 20,15,15,4 சருக்கங்கள் உள்ளன. மொத்தப் பாடல்கள் 2017. 64 திருவிளையாடல்களைக் கூறவந்த இந்நூலில் 25 திருவிளையாடல்கள் வரையே கிடைத்துள்ளன. மற்றுமுள்ள 39 திருவிளையாடல்கள் அடங்கிய பாடல்கள் மேலும் 2000 இருக்கலாம். அவை எங்கும் கிடைக்கவில்லை.

முதலில் பாயிரப் பகுதியில் சொக்கப் பெருமான், அங்கயற்கண்ணி, சித்திவேழம், முருகன், நால்வர் ஆகியோர் வணக்கங்கள் உள்ளன. அவையடக்கத்தைத் தொடர்ந்து நான்கு பாடல்களில் நூல் வரலாறு கூறப்படுகின்றது. ஆதியில் நாரதர் சொல்லவும் சூத முனிவர் அதைக் கேட்டு வட மொழியில் சொல்லியதைத் தாம் தமிழில் சொல்வதாகவும் கூறுகிறார் ஆசிரியர். வடமொழியிலுள்ள சுந்தரபாண்டியம் என்ற நூலிலிருந்தே இவர் மொழிபெயர்த்ததாகத் தெரிகிறது.

"மதுரை நாயகன் சுந்தர பாண்டிய வடநூற்
கதிருலாமணி யாறுகாற் பீடத்திற் கல்லூர்
அதிப னாந்திரு விருந்தவன் அவையினில் வாயற்
பதியில் வாழ்வன தாரிசெந் தமிழினிற் பகர்ந்தான்"

என்னும் பாடல் ஆசிரியர் வரலாறு கூறுவது. இதில், திருச்சி யருகே கல்லூர், மன்றை என்ற ஊர்களில் தலைவனாகயிருந்த திருவிருந்தான் அவையினில் புலவராயிருந்த இந்நூலாசிரியர் அனதாரியப்பன் வாயற்பதியினர் என்பது புலப்படும்.

பெருநூல் இயல்புக்கேற்ப ஒவ்வொரு காண்டத்தின் தொடக்கத்திலும் ஒரு துதிப்பாடல் அமைந்துள்ளது.

இந்நூல் சோமசுந்தரக் கடவுளின் புகழைக் கூறுமுகமாக அமைந்ததால், தடாதகையின் அவதாரம், தடாதகையின் திக்கு விசயம், தடாதகையின் புதல்வனான உக்கிரகுமாரன் வரலாறு கள், அவன் காலத்திலும் பின்னரும் சோமசுந்தரர் செய்த லீலைகள் என்ற முறையில் பாடல்கள் அமைகின்றன. ஆசிரியர் தாம் திருவிளையாடல் எட்டெட்டும் கூறுவதாகவே குறிப்பிடுவர் (நகரச் சருக்கம். 6). இதில் வையையைக் கூறும்போதும் பிறவிடங்களிலும் தமிழை மிகவும் போற்றுகின்றார். கம்பராமாயணம், திருக்குறள் போன்ற நூல்களின் சொற்களும் தொடர்களும் பலவிடங்களிலும் அமைந்துள்ளன. தோத்திரப் பாடல்களும் மிகுதியாக இந்நூலில் உள்ளன.

தாண்டவச் சருக்கத்தில், மூலாதாரத்தில் (திருவாரூர்) தியாகேசனாகவும், சுவாதிட்டானத்தில் (ஆனைக்கா) சம்பு நாதனாகவும், மணிபூரகத்தில் (சோணாசலம்) அண்ணாமலை நாதராகவும், அனாகதத்தில் (அம்பலம்) ஆனந்தத் தாண்டவ ராகவும், விசுத்தியில் (திருக்காளத்தி) காளத்தியீசராகவும், ஆக்ஞையில் (காசி) விசுவநாதராகவும் பிரமரந்திரத்தில் (கயிலை)

சிகண்டபரமனாகவும், துவாதசாந்தத்தில் (ஆலவாய்) சுந்தரனாகவும் இறைவன் விளங்குவதாகக் கூறி அவர் திருவிளையாடல் எட்டெட்டும் விளக்குவதாகச் சொல்லுகிறார் (நகரச் சருக்கம். 6).

உற்பத்திக் காண்டம் மிகவும் விரிவானது. இப்பகுதி 20 சருக்கங்களாக உள்ளது. நாடு, நகர், ஆறு, தீர்த்தம், மூர்த்தி என்பன மட்டுமன்றி, முதல் நான்கு திருவிளையாடல்களும் இங்குப் பிற கதைகளோடு விளக்கப் பெறுகின்றன. தடாதகையின் தந்தை மலயத்துவசனுக்குத் தந்தையான குலசேகர பாண்டியன் வரலாறு, அவன் நகரங்கண்டது, சோழனிடம் பொன் வேண்டித் தூது அனுப்பியது, மணத்துக்குச் செல்வது, வழியில் திரிசிராமலையில் தங்கியது, திருமணம், விமானத்தில் திரும்பல், வித்தியாவதி தவம் செய்து மீனாட்சியம்மையை மகளாகப் பெறுதல், தடாதகை பிறத்தல் முதலான செய்திகள் இதில் விளக்கப் பெறுகின்றன.

திக்கு விசய காண்டத்தில் மலயத்துவச பாண்டியன் தன் மகள் தடாதகைக்கு முடி சூட்டுதல், தடாதகை பிறந்த வரலாற்றைக் கண்ணுவமுனி கூறுதல், தடாதகை வன வேட்டைக்குச் செல்லுதல், சிவபிரானைக் காணல், நகர் திரும்புதல், திருமணம் நடைபெறுதல் ஆகிய நிகழ்ச்சிகள் 15 சருக்கங்களில் கூறப்பெறுகின்றன.

உக்கிர காண்டத்திலும் 15 சருக்கங்கள் உள்ளன. இதில், திருமணம் நடந்தபின் நடந்த நிகழ்ச்சிகளாக உக்கிரகுமார பாண்டியர் பிறப்பு, சோமசுந்தரர் எல்லாம் வல்ல சித்தராக வந்து கல்லானைக்குக் கரும்பு அருந்தியது போன்றன கூறப்படுகின்றன.

லீலா காண்டத்தில் 4 சருக்கங்கள் கிடைக்கின்றன. அட்டாலைச் சருக்கம் முதல் சிவராத்திரிச் சருக்கம் வரையுள்ளன. அடிமுடியைத் தேட வேண்டி வராகமும் எகினமும் தேடிக் காணாதபோது இறைவன் சிவராத்திரி விரதம் கடைப்பிடிக்குமாறு கூறினார் என்று இப்பகுதியில் கூறப்படுகிறது. இதில், சிவராத்திரி விரதம் இருந்த ஒருவேடன் ஒரு பெண் ஆகிய இருவர் வரலாற்றையும், ஒரு காமுகன் தான் பெற்ற பெண்ணோடு கலந்த பாவத்தையும் சிவராத்திரி விரதம் போக்கிற்று என்றும் கூறப்படுகிறது. இப்பகுதி மற்ற திருவிளை

பாடல் நூல்களில் இல்லை. இதற்கு மேலே பாணபத்திரர், நக்கீரர், வாதவூரர் தொடர்பான திருவிளையாடல்கள் இருந்திருக்கலாம் எனத் தெரிகின்றது. ஆயினும் அவை கிடைக்கவில்லை.

இவ்வகையில் மதுரையைப் பற்றிய பெரியதொரு புராணமாக இச் சுந்தரபாண்டியம் அமைந்திருப்பது குறிக்கத்தக்கதாகும். இதன்பின் தோன்றியதே பரஞ்சோதியின் திருவிளையாடற் புராணமாகும்.

## பரஞ்சோதி திருவிளையாடற் புராணம்

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்திருந்த பரஞ்சோதியார் வடமொழியிலுள்ள ஆலாசிய மகாத்மியம் என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டு மதுரையிலுள்ள இறைவனின் திருவிளையாடல்களைப் புராணமாகப் பாடியுள்ளார். இவர் வடமொழி நூல்களை அடிப்படையாகக் கொண்டாலும், இவருக்கு முன்னே நம்பி அகதாரியப்பர் முதலானோரைப் போன்று முற்றிலும் வடமொழி மரபையே தழுவாது தமிழ் மரபை மிகுதியாக அமைத்துப் பாடியுள்ளது சிறப்பாகும், நம்பியின் திருவிளையாடலுக்கு முன்பே தமிழில் சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம், கல்லாடம் போன்ற நூல்களில் சிவபெருமானின் 64 திருவிளையாடல்கள் கூறப்பெறுகின்றன. எனவே பரஞ்சோதியார் பழந்தமிழ் நூல்களின் கருத்துக்களையும், தொடர்களையும், சொற்களையும் அமைத்து இப்புராணத்தைப் பாடியிருப்பது இந்நூலின் சிறப்புக்கு ஒரு காரணமாகும்.

இப்புராணம் மதுரைக் காண்டம், கூடல் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என மூன்று பெரும்பிரிவுகளாக உள்ளது. மூன்று காண்டங்களிலுமுள்ள அறுபத்து நான்கு படலங்களும் மூலநூலாகிய ஆலாசிய மகாத்மியத்திலுள்ள அறுபத்து நான்கைப் போன்றே அமைந்துள்ளன.

மதுரைக் காண்டத்தின் தொடக்கத்தில் திருநாட்டுப் படலமும் திருநகரப் படலமும் அமைந்துள்ளன. மதுரையின் அமைப்பு, பல்வகை வீதிகள், கோயில்கள் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. அதைப் படலத்தைத் தொடுத்துத் திருக்கயிலாயச் சிறப்பும், புராண வரலாறும், தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றின் சிறப்பும் அமைகின்றன. பின்னர் இந்திரன் பழிதீர்த்த படலம் முதலாக

வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம் ஈறாக 18 படலங்கள் தொடர்ந்து அமைகின்றன.

இக்காண்டத்தில் பதினேழாவது மாணிக்கம் விற்ற படலம் தவிர ஏனைய படலங்களில் கூறப்பெறும் நிகழ்ச்சிகள் சிவபெருமானையும் அவருடைய மகன் உக்கிரபாண்டியனையும் மையப் பொருளாகக் கொண்டவை. அவரே பாண்டியராகத் தோன்றி நிகழ்ச்சிகளில் நேரடியாகத் தொடர்பு கொண்ட நிலையை இப்படலங்களில் காணலாம். இங்கு, மற்ற காண்டங் களைப் போல இறைவன் எவருக்கும் அருள் செய்த வரலாறு இடம் பெறவில்லை என்பது சிறப்பு. சிவபெருமான் ஏவலால் மதுரை மாநகர் நிருமாணிக்கப்பட்டு, நிகழ்ச்சிகள் அனைத்தும் அங்கு நடைபெறுவதால் இப்பகுதிக்கு மதுரைக் காண்டம் எனப் பெயர் வைத்ததும் பொருத்தமானதாகும்.

இரண்டாவது காண்டமாகிய கூடற் காண்டத்தில் இறைவன் பல உயிர்களுக்கும் அருள் செய்யும் நிகழ்ச்சிகள் கூறப்பெறு கின்றன. பத்தொன்பதாவது நான்மாடக் கூடலான படலம் முதல் நாற்பத்தெட்டாவது நாரைக்கு முத்தி கொடுத்த படலம் வரை 30 படலங்கள் தொடர்ந்து அமைகின்றன.

மதுரைக் காண்டத்தின் இறுதியில் வருணன் ஏவிய கடலைச் சிவபெருமான் வற்றச் செய்துவிட்டதால் சினமுற்ற வருணன் மதுரையை அழிக்குமாறு மேகங்களை ஏவுகிறான். பெருமழை யால் மதுரைநகருக்குப் பெருந்துன்பம் உண்டாகின்றது. பாண்டியன் முறையீட்டை ஏற்ற சிவபெருமான் நான்கு மேகங் களை ஏவி மதுரையில் நான்கு மாடங்களாக அமைத்து மதுரையை மழையினின்றும் காத்தார். இவ்வாறு நான்கு மாடங்களைத் தோற்றுவித்த வரலாற்றுடன் இக்காண்டம் தொடங்குவதால் கூடற்காண்டம் என்று பெயரிடப்பட்டுள்ளது பொருத்தமாக அமைந்துள்ளது.

இக்காண்டத்தில் சிவபெருமானுடைய நேரிடையான நிகழ்ச்சிகள் எதுவுமில்லாமல் அவர் பலருக்கும் அருள் செய்த நிகழ்ச்சிகளே கூறப்பெறுகின்றன. இறைவன் சித்தராகவும், வீரனாகவும், புலவராகவும், ஆசிரியராகவும், வீரவேட்டுவனா கவும், வணிகனாகவும், தவசியாகவும், மாமனாகவும் தொழி லாளியாகவும், பன்றியாகவுந் தோன்றிப் பல்லுயிர்க்கும் அருள் செய்த வரலாறுகள் இதில் விளக்கப் பெறுகின்றன.

சிவபெருமான் ஏழைப் பங்காளன் என்பதை உணர்த்தும் படலங்கள் இக்காண்டத்தில் மிகுதி. அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள் செய்யவே ஆண்டவன் உள்ளான் என்ற உறுதியும், முறைகேட்டு உய்விப்பவன் என்பதும், விருத்த குமார பாலரானது, பழியஞ்சியது, அங்கம் வெட்டியது, மாமனாக வந்து வழக்குரைத்தது ஆகிய படலங்களில் விளக்கப் பெறுகின்றன.

சிவனைச் சரணடையும் மன்னர்களுக்குச் சிவபெருமான் பல வேடங்களில் வந்து அருள்புரிந்ததை யானை எய்தது, நாகமெய்தது, மாயப்பசுவை வதைத்தது, உலவாக்கிழியருளியது, விடையிலச்சினையிட்டது, தண்ணீர்ப் பந்தல் வைத்தது, சோழனை மடுவில் வீட்டியது ஆகிய படலங்களில் விளக்கக் காணலாம். இறைவனைக் காண விரும்புபவரின் பழியைத் தீர்த்து அவருக்குச் சிவலோகம் காட்டிய படலத்தால் அறியலாகும். இறைவன் கலைஞனாகவும் விளங்குவதை நான்கு படலங்கள் விளக்குகின்றன. விறகு விற்றது முதலாக இசைவாது வென்றது வரையிலான நிகழ்ச்சிகள் அவர் திறத்தை விளக்குவன.

பன்றிக்கு முலை கொடுத்ததும், பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கியதும், கரிக்குருவிக்குபதேசம் செய்ததும், நாரைக்கு முத்தி கொடுத்ததுமான இக்காண்டத்தின் இறுதி நிகழ்ச்சிகள், இறைவன் தன்னை வேண்டிய உயிர்களுக்கு மறவாமல் அருள் புரிவதை வலியுறுத்துவன,

மூன்றாவதாக அமைந்துள்ள திருவாலவாய்க் காண்டம் 16 படலங்களாக அமைகின்றது. இதில் திருவாலவாயான படலம் முதல் அருச்சனைப் படலம் வரையில் பல நிகழ்ச்சிகள் கூறப் பெறுகின்றன. முதற்படலத்தில் மதுரை நகரின் எல்லையை அறிவிக்கும் நிகழ்ச்சியாக அமைகின்றது. தொடர்ந்து, சங்கப் பலகை கொடுத்தது, தருமிக்குப் பொற் கிழியளித்தது, கீரனைக் கரையேற்றியது, கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தது, சங்கத்தார் கலகந் தீர்த்தது, இடைக்காடன் பிணக்குத் தீர்த்தது, வலை வீசினது, வாதவூரடிகளுக்கு உபதேசித்தது, நரி பரியாக்கியது, பரி நரியாக்கி வைகையழைத்தது, மண் சுமந்தது, பாண்டியன் சுரந் தீர்த்தது, சமணரைக் கழுவேற்றியது, வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்தது ஆகிய நிகழ்ச்சிகள் இப்பகுதியில் விளக்கப் பெறுகின்றன. இறுதியில் அருச்சனைப் படலம் அமைகின்றது.

இக்காண்டம் முழுவதிலும் தமிழ், தமிழ்ப் புலவர்களின் சிறப்பு, வாதவூரார் பெருமை, சைவத்தின் சிறப்பு, தமிழரின் காதல் ஒழுக்கம் ஆகியவற்றைச் சிறப்பித்து நிறைவு செய்துள்ளது இந்நூலின் தனிச் சிறப்பாகும்.

பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணம் பல பதிப்பு களாக வெளியிடப் பெற்றுள்ள ஒரு பெருநூலாகும். இந்நூல் தொடர்பாக எழுந்த நூல்களும் மிகுதி. இந்நூலைப் பற்றிய ஆய்வுகளும் நிகழ்ந்துள்ளன.

**திருவிளையாடற் புராண சங்கிரகம்**

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்தை ஓதியுணர்ந்த வேணுவனலிங்கம் பிள்ளை என்பவர் இறைவனின் அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் தினமும் பாராயணம் செய்யும் நோக்கில் திருவிளையாடற் புராண சங்கிரகம் என்ற நூலை இயற்றியுள்ளார்.

புராண அமைப்பிலேயே யாக்கப் பெற்றுள்ள இந்நூலில் கடவுள் வாழ்த்து, நூற்பயன், நூல்செய் காரணம், அவை யடக்கம், திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு, புராண வரலாறு, தலவிசேடம், தீர்த்த விசேடம், மூர்த்தி விசேடம் ஆகியவற்றைப் பாடிய பின்னர் நூல் தொடங்கப் பெறுகிறது. இந்திரன் பழிதீர்த்த படலம் முதலாக அர்ச்சனைப் படலம் ஈறாக அறுபத்துநான்கு படலங்கள் உள்ள இந்நூலில் மொத்தம் 240 பாடல்கள் உள்ளன.

திருப்பாண்டி நாட்டிலிருந்த 74 பாண்டிய மன்னர்களுள் 22 மன்னர்கள் காலத்தில் நிகழ்ந்த 64 திருவிளையாடல்களையும் இந்நூலில் பட்டியலிட்டுக் காட்டியிருக்கக் காணலாம்.

**கடம்பவனப் புராணம்**

மதுரையைப் பற்றிய நான்காவது தலபுராணம் கடம்பவனப் புராணம் ஆகும். தொண்டை நாட்டிலுள்ள இலம்பூரிலிருந்த வீமநாத பண்டிதர் என்பவர் இதனை இயற்றியுள்ளார். இது வடமொழியிலுள்ள நீபாரண்ய மகாத்மியம் என்ற நூலிலிருந்து மொழிபெயர்த்துச் செய்யுள் நடையில் இயற்றப் பெற்றதாகும். மதுரைத் தலச்சிறப்பை இந்நூலாசிரியர் வெகுவாகப் புகழ்ந்து பாடுகிறார்.

"ஆழி யாழி கடைந்திருநாள் அமிர்த மதுரை நகர்பரவ
வாழி யமிர்த புரியாய தென்னும் வேத மாலயங்கஞ்
சூழுங் குலசே கரன்செய்நகர் சுத்தி பெறச்சொக் கன்தரித்த
ஊழி னிந்து வமுதைவிட உரைக்கும் மப்பே ருயர்சுருதி"

என்பது மதுரையின் பெயர்ச் சிறப்பையுரைக்கும் ஒரு பாடல். (இலீலா சங்கிரக வத்தியாயம், பா. 68).

இந்நூலில் 11 அத்தியாயங்களும் 1090 பாடல்களும் உள்ளன. பாயிரத்தில் கடவுள் வாழ்த்துடன் முதனூல் வழிநூல் செய்தற்குக் காரணம், மொழிபெயர்த்த விதம், அவையடக்கம், சிறப்புப் பாயிரம் (இதில் ஆசிரியர் பெயர்), நூல் வரலாறு, பதிகம் (4 பாடல்) என 24 பாடல்கள் பாடப் பெற்றுள்ளன.

வசிட்டாதிய ரகத்தியனை யடைந்தது, வேதாகமங்கள் தீப வனமானது, வேதாகமங்களுக்கு வரங்கொடுத்தது, தீர்த்த மகிமை, நடம் புரிந்தது, மகா கைலை மான்மியம் உரைத்தது, தேவி அறம் வளர்த்தது, விட்டுணு வரம் பெற்றது, பிரமன் பூசித்தது, இலீலா சங்கிரகம், துன்மதன் முதலான வேடர் முத்தி பெற்றது ஆகிய 11 அத்தியாயங்களில் இத்தல வரலாறு கூறப் படுகிறது.

இலீலா சங்கிரக அத்தியாயம் மிக நீண்டது. இதில் முதற்கண் 64 திருவிளையாடல்கள் 64 பாடல்களில் தனித்தனி சங்கிரகமாகச் சொல்லப் பெறுகின்றன. பிறகு மதுரையின் தலச்சிறப்பு உரைக்கப்பெறுகிறது. இத்தலத்தில் பொற்றாமரைக் குளத்தில் நீராடினால் இன்னின்ன நோய்கள் தீரும் என்பதை ஐம்பதிற்கும் மேற்பட்ட பாடல்களில் கூறுவர். அடுத்து விபூதி முதலான விளக்கங்கள், சிவபூசை விளக்கங்கள், குருமகத்துவம், சீர் இலக்கணம், சிவனடியாரிலக்கணம், துறவியரிலக்கணம், மகேசுர வடிவம் போன்றவை இந்த அத்தியாயத்தில் விளக்கப் பெறுகின்றன. இதில் மட்டும் 558 பாடல்கள் உள்ளன.

மதுரையைப் பற்றிக் கூறும் பிற புராணநூல் அமைப்பினின்றும் இக்கடம்பவனப் புராணம் மிகவும் வேறுபட்டுக் காணப் படுகிறது. மதுரையில் நடைபெற்ற பல புராண வரலாறுகளை இந்நூல் விளக்கமாக்க் கூறவில்லை. சிவபூசை, சைவத்தின் பெருமை இவற்றைச் சிறப்பாகக் கூறுவதே இந்நூலாசிரியரின் கொள்கையாக அமைகின்றது.

மதுரை ஆலவாயைப் பற்றிய தமிழ்ப் புராணங்கள் நான்கும் குறிப்பிடத்தக்க தலபுராணங்களாகும். நம்பி திருவிளையாடற் புராணம், சுந்தர பாண்டியம், பரஞ்சோதி திருவிளையாடற் புராணம், கடம்பவனப்புராணம் ஆகிய இவை வடமொழியி லுள்ள நூல்கள் முறையே உத்தரமாபுராணம், சுந்தர பாண்டியம், ஆலாசிய மகாத்மியம், நீபாரண்ய மகாத்மியம் ஆகியவற்றிலிருந்து மொழிபெயர்க்கப் பெற்றதாகக் கூறப் பெறுகின்றன. தமிழிலுள்ள இவை இந்நான்கினிடையே படல அமைப்பு, பாடல் தொகை, கதை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் பல வேறுபாடுகளும் உள்ளன. அவை தனி ஆய்வுக்குரியன.

மீனாட்சிநாதர் என்பவர் இயற்றியதாகக் கூறப்பெறும் மதுரைப் புராணம் என்னும் பழைய தலபுராணம் இப்பொழுது கிடைக்கவில்லை.

**திருவாப்பனூர்ப் புராணம்**

மதுரையில் மீனாட்சியம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் வையை ஆற்றுக்கு அருகில் உள்ளது ஆப்பனூர் என்னும் தலம். இப்பொழுது ஆப்புடையார் கோயில் என்று வழங்குகிறது. சோழாந்தகன் என்னும் பாண்டிய மன்னன் பொருட்டுச் சிவபெருமான் ஓர் ஆப்பினிடத்துத் தோன்றியருளிய திருத்தலம் இது. அர்ச்சகர் ஒருவர் உலையில் இட்ட வையை ஆற்று மணலை இறைவன் அன்னமாக ஆக்குவித்த பதி. இதனாலேயே இறைவனுக்கு 'அன்ன விநோதன்' என்ற பெயருண்டாயிற்று என்பர். சம்பந்தர் பாடல்பெற்ற சிறப்புடையது இத்தலம்.

"முற்றும் சடைமேல் முதிரா இளம்பிறையன்
ஒற்றைப் படஅரவம் அதுகண்டு அரைக்கணிந்தான்
செற்றமில் சீரானை திருஆப்ப னூரானைப்
பற்றும் மனமுடையார்.வினைபற் றறுப்பாரே"

என இத்தலச் சிறப்புரைப்பர் சம்பந்தர்.

திருப்பூவணம் கந்தசாமிப் புலவர் இயற்றிய திருவாப்ப னூர்ப் புராணத்தில் 8 சருக்கங்களும் 515 பாடல்களும் உள்ளன. கடவுள் வாழ்த்தில் விநாயகருக்குக் காப்பு கூறிய பின் நூற்பயன் சொல்லியே இறைவன் துதி சொல்கிறார். திருவாப்புடையார், குரவங்கமழ்குழலம்மை. சபாபதி, துர்க்காதேவி, விநாயகர், சுப்பிரமணியர், திருநந்திதேவர், கலைமகள், நால்வர் ஆகியோரு டன் சோழாந்தக பாண்டியன், சைவவேதியன், சூதமுனிவர், சண்டேசர் ஆகியோருக்கும் வாழ்த்துப் பாடுகிறார்.

"மூப்பழுத் தருஞ்சொல் வேத முனிக்குழாந் தொழுது கேட்பத்
தீப்பழுத் தனைய வேணித் திகம்பரன் சிவபுராணங்
காப்பழுத் துமிழுந் தெய்வக் கனித்திரள் சிவணவாய்மை
நாப்பழுத் துமிழுஞ் சூத நற்றவ முனிதாள் போற்றி" (18)

என்னும் 'சூத முனிவர்' துதி இப்புராணத்தில் வருவது குறிப்பிடத்தக்கது.

பாயிரமும் அவையடக்கமும் கூறிய பின்னர் நைமிசாரணிய வருணனை, சூதரை வினாயகாதை, மூர்த்தி மகிமை, ஆகிய வற்றைத் தனித்தனியே அமைக்கின்றார். பின்பு ஆப்பனூர்ச் சருக்கம் 102 பாடல்களில் கூறப்படுகிறது. இடவபுரச் சருக்கம், அன்ன வினோத சருக்கம், சந்திரசேனச் சருக்கம், பாட்களச் சருக்கம், குபேரச் சருக்கம், சுதரிசனச் சருக்கம், அரிச்சந்திரன் தீர்த்த யாத்திரைச் சருக்கம் என மொத்தம் எட்டுச் சருக்கங் களில் இத்தலவரலாறுகள் சொல்லப் பெற்றுள்ளன. இதைப் பாயிரத்திலேயே ஒரு பாடல் விளக்கக் காணலாம்.

"நற்கடவுள் வணக்கம்பா யிரஞ்சொல வையடக்க
நயிமிசா ரணியவரு ணனைசூதர் காதை,
பொற்கமலச் சடைமூர்த்தி யாப்பனூ ரிடப
புரமனவி னோதன்சந் திரசேன னூலிற்,
தர்க்கமுணர் பாட்களின் மெய்க்குபேர னொடு சுதரி
சனனரிச்சந் திரனீ றாச் சருக்கமோ ரெட்டாய்க்
கற்கநிறை விருத்தயாப்பைஞ் ஞூற்றீரேழிற்
கவிரஞூரவை முறுவலிப்ப முறுதலுற்றே னால்", (2)

இனி, ஆசிரியர் தம் பெயரையும் கூறுகிறார்.

"கனியினைப் பிழிந்து செந்தேன் கண்டெனவாப்ப னூர்நம்
பனிமதி மிலைந்த நாதன் பன்னரும் புராணந் தன்னைப்
புனிதன் மெய்க்கந்த சாமிக் கவிஞன் பூவணத் தான்பார்மேல்
இனிதெனப்புலவர்கூற இயன்தமிழ்ப் புணர்த்தி னானே".
(3)

ஆப்பனூரின் தனிச்சிறப்புகளையே இந்நூலாசிரியர் மிகுதியாகப் பாடியுள்ளார்.

**திருப்பரங்கிரிப் புராணம்**

திருப்பரங்கிரி என்பது திருப்பரங்குன்றம், மதுரை மாநகருக்கு அருகிலுள்ள தலம். முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளுள் முதலாவதாக விளங்குவது. முருகப் பெருமான்

தெய்வயானையை மணம் புரிந்த புனிதப்பதி இது. இத்தலம் சிவத்தலமாயினும், இன்றைய நடைமுறையில் முருகனுக்குரிய சிறப்புத் தலமாகவே வழிபடப்படுகின்றது. நக்கீரர், சிபி மன்னன், பிரமன், பராசர முனிவரின் புதல்வர், முருகன் போன்றோர் வழிபட்ட இத்தல இறைவருக்குப் பரங்கி நாதர் என்பதே திருப்பெயராகும். சம்பந்தரும் சுந்தரரும் பதிகம் பாடியுள்ளனர்.

சேதுபுராணமும் திருஐயாற்றுப் புராணமும் இயற்றிய நிரம்ப அழகிய தேசிகர் இத்தலத்திற்கு இயற்றியதே திருப்பரங்கிரிப் புராணம் ஆகும். இதில், 11 சருக்கங்களும் 526 பாடல்களும் உள்ளன. பொதுவான கடவுள் வணக்கப் பாடல்களுடன் தலத்துக்குப் பொருத்தமான தெய்வயானை, வள்ளியம்மை, நவவீரர், திருமால், திருமகள் துதிகளும் அமைந்துள்ளன. முருகன் திருமணம் காண வந்த பவளவாய்ப் பெருமாளுக்கும் திருமகளுக்கும் தனித்தனியே வணக்கங்கள் உள்ளன.

பாயிரச் சருக்கத்திலேயே நான்கு பாடல்களில் பதிகம் சொல்லி, நைமிசாரணியப் பகுதி பாயிரத்திலேயே அமைக்கப் பட்டுள்ளது. அடுத்து, குமரன் உபதேசம், தவம், சிபி வேந்தன் பூதானம், பிரமகூவம், தலவிசேடம், அரிச்சந்திரச் சருக்கம், திருவிழாச் சருக்கம், சூரசங்காரம், திருக்கல்யாணம் என்னும் பகுதிகள் உள்ளன.

நக்கீரச் சருக்கத்தில் வரும் கதை வரலாற்றில் வழங்கி வரும் கதையிலிருந்து சற்று வேறுபட்டுள்ளது. மதுரை சோமசுந்தரக் கடவுளுடைய அருளுக்குப் பாத்திரமானபின் நக்கீரர் முருகனைப் பாடவில்லை என்ற ஏமாற்றத்தினால் ஏதேனும் ஒரு காரணம் பற்றி அவரை ஒரு குகையில் அடைக்க என்று முருகன் உத்தர விட்டான். அதன்படி இரண்டு பூதங்கள் சமயம் பார்த்திருந்தன. ஒருநாள் அவர் பஞ்சாக்கரப் பாறையின் மேலிருந்து பூசை செய்ய, மரத்திலிருந்து ஒரு சருகு நீரிலும் நிலத்திலுமாக விழுந்து பாதி மீனாகவும் பாதி பறவையாகவும் மாறித் தவித்தன. அதுகண்ட நக்கீரர் நகத்தால் இரண்டையும் கிள்ளி விட இரண்டும் தனித்தனியே பிரிந்து துடித்து உயிர் விட்டன. இதையே காரணமாகக் கொண்டு அந்தப் பூதங்கள் இவரைக் குகையில் சிறைப்படுத்தின. இவர், தாம் முருகனைப் பாடாமையே இதற்குக் காரணம் என உணர்ந்து, திருமுருகாற்றுப் படை பாடி மலைகிழவோனே என்று முடித்தார். முருகன்

தோன்றி, "நான் கிழவன் என்று நீ பாடியுள்ளமையால் வர நாளாகும்" என்று சொன்னான். பின்பு இவர் 'என்றும் இளையாய்' என்ற வெண்பாப் பாடினார். அதன்பின் முருகன் நக்கீரரை விடுவித்தான் என வரும் கதை புதிதாக உள்ளது.

"சுவையூறுந் தமிழ்மாலை உலகமென
எடுத்தோதித் தொன்னூ லீற்றின்
நுவலியது கிழவோனே யெனக்கூற
நெடுங்கால நோன்பு கோடி
புவியிலிளைத் தறிவரிய குமரவேள்
அவன்கனவு பொருந்தத் தோன்றி
அவனிதனிற் கிழவனென வரச்சிறிது
நாளாமென் றறைந்து போனான்"

எனவரும் பாடல் இதை விளக்கும்.

இப்புராணத்தில் ஒன்று முதல் எட்டுவரையுள்ள எண்கள் வரும்படியாக அமைக்கப்பெற்ற பின்வரும் கற்பக விநாயகர் வணக்கப் பாடல் மிகவும் புகழ் பெற்றதாகும்.

"வஞ்சகத்தி லொன்றானை, துதிக்கைமிகத்
திரண்டானை, வணங்கா ருள்ளே
அஞ்சரண மூன்றானை, மறைசொலுநால்
வாயானை, அத்த னாகித்
துஞ்சவுணர்க் கஞ்சானை, சென்னியணி
யாறானை, துகளே ழானை,
செஞ்சொன்மறைக் கெட்டானை, பரங்கிவாழ்
கற்பகத்தைச் சிந்தை செய்வாம்".

திருக்கலியாண நிகழ்ச்சிகளில் தெய்வயானையை வருணிக்கு மிடங்களிலும் பிறவிடங்களிலும் இனிய சந்தங்களமைந்த பாடல்கள் பல அமைந்திருக்கக் காணலாம். முருகனின் வீரச் செயல்களையும் பரங்குன்றின் பெருமைகளையும் இந்நூல் சிறப்பாகக் கூறும்.

**திருவேடகப் புராணம்**

பாண்டியநாட்டில் வைகைக் கரையில் உள்ள தலம் திருவேடகம் ஆகும். திருஞானசம்பந்தர் ஆற்றிலிட்ட ஏடு எதிரேறிக் கரையடைந்த இடம் இதுவே. (ஏடு-அகம்-ஏடகம்) திருஞானசம்பந்தர் சமணரோடு வாதிட்டபோது 'வாழ்க அந்தணர்' என்னும் பதிக ஏட்டை வைகையில் இட, அது நீரை

எதிர்த்துச் செல்ல, பின்பு 'வன்னியுமத்தமும்' என்னும் திருப்பதிகம் பாடியவுடன் அந்த ஏடு ஒதுங்கி நின்ற இடமாதலால் இத்தலத்திற்கு இப்பெயர் உண்டாயிற்று.

பிரமன், திருமால், ஆதிசேடன், கருடன், வியாசர், பராசரர் ஆகியோர் வழிபட்டு இத்தலத்தில் பேறு பெற்றனர் என்பர்.

இத்தல புராணத்தை இயற்றியவர் திரு. சுப்பிரமணிய ஐயர் ஆவார்.

### கொடுங்குன்றப் புராணம்

மதுரையிலிருந்து பொன்னமராவதி செல்லும் வழியில் உள்ளது கொடுங்குன்றம் என்னும் தலம். இதற்குப் பிரான்மலை என்றும் பெயர். சம்பந்தர் பாடல் பெற்ற தலம். சிவபெருமான் இங்குத் திருமணக் கோலத்துடன் இருக்கிறார். மகோதர முனிவர், நாகராசன் முதலியோர் வழிபட்ட திருவூர் இது. பாரி வள்ளல் வாழ்ந்த பறம்புமலை என்று இதனைக் கூறுகின்றனர். பாடல் பெற்ற சிவன் கோயில் மலையடிவாரத்தில் உள்ளது. மலைமேல் வீரபத்திரர் கோயிலும் அதற்கு மேலே ஒரு சிவன் கோயிலும் உள்ளன.

கொடுங்குன்றப் புராணம் என்னும் இத்தலபுராணத்தைப் பாடியவர் மங்கைபாகக் கவிராயர் ஆவார். இதில் 18 சருக்கங்கள் உள்ளன. இது பிரான்மலைப் புராணம் என்றும் அழைக்கப் பெறும்.

### திருப்புத்தூர்ப் புராணம்

மதுரைக்கும் காரைக்குடிக்குமிடையிலுள்ளது திருப்புத்தூர். திருமகள் வழிபட்ட திருத்தலம். பெருமான் ஆடிய கௌரி தாண்டவத்தைக் கண்டு இலக்குமி வழிபட்டு இத்தலத்தில் பேறு பெற்றாள் என்பதால் இக்கோயில் ஸ்ரீதளிதிருத்தளி என்றும், இறைவர் ஸ்ரீதளீசுவரர்-திருத்தளிநாதர் என்றும், தீர்த்தம் ஸ்ரீதளிதீர்த்தம்-திருத்தளி தீர்த்தம் என்றும் கூறுவர். சம்பந்தரும் அப்பரும் பதிகம் பாடியருளியுள்ளனர்.

> "பாங்கு நல்லவரி வண்டிசை பாடத்
> தேங்கொள் கொன்றை திளைக்குந் திருப்புத்தூர்
> ஓங்கு கோயில் உறைவார் அவர்போலும்
> தாங்கு திங்கள் தவழ்புன் சடையாரே"

எனச் சம்பந்தரும்,

**ஓங்கு கோயிற் புராணம்**

திருப்புத்தூரில் கோயில் கொண்ட சிவபிரானுக்குத் திருத்தளியாண்டார் என்பது பழைய திருநாமமாகும். இக் கோயிலுள் சுந்தரபாண்டிய தேவர் என்ற அரசனது 15ஆம் ஆட்சியாண்டில், கப்பலூர்ப் பொன்னன் உய்ய வந்தானான மானாபரணன் மூவேந்த வேளான் என்பவரால் பிரதிட்டை பெற்ற ஓங்கு கோயிலுறைவார் என்ற மூர்த்தியின்மேல், 'திருவம்பலமுடையார் மறைஞான சம்பந்தர்' என்ற புலமைப் பெரியாரால் சக வருடம் 1406 (கி.பி. 1484)இல் புராணம் பாடப் பட்டது என்றும், இதற்காக மணிமங்கலம் என்ற ஊரில், கோயிலைச் சேர்ந்த ஐந்துமா நிலம் பரிசளிக்கப் பெற்றதென்றும் சாசனம் கூறுகின்றது.

இவ்வாசிரியர் திருப்புத்தூரிலுள்ள சிறுமடம் என்ற இடத்தில் வாழ்ந்தவர்; மெய்கண்ட சந்தானத்தைச் சார்ந்தவர். இதனால், ஓங்கு கோயில் என்பது திருப்புத்தூர்ப் பழைய சிவாலயத்துள் சுந்தர பாண்டியன் காலத்தமைந்த ஆலயம் என்பதும், இதற்குத் தனியே அத்தலத்துப் பெரியாரொருவரால் புராணம் பாடப் பட்டிருந்த தென்பதும் தெரிகிறது. திருவாரூர்க் கமலாலய புராணம், திருவண்ணாமலைப் புராணங்கள் பாடின மறைஞான சம்பந்தர் என்பவரின் வேறாய் முற்பட்டிருந்தவர் இவர் என்பது இவரது அடைமொழிகளாலும் கால வேறுபாடுகளாலும் தெளிவாகும்.[1]

15ஆம் நூற்றாண்டிறுதியிற் பாடப் பெற்ற இவ் ஓங்கு கோயிற் புராணம் இப்போது கிடைக்கவில்லை.

**திருப்புனவாயிற் புராணம்**

அறந்தாங்கி அருகே பாம்பாறு பக்கத்தில் உள்ளது திருப்புனவாயில் என்னும் தலம். திருப்புனவாசல் என வழங்கு கிறது. விருத்தபதி, விருத்தகாசி, இந்திரபுரம், பிரமபுரம், வச்சிரவனம், கைவல்யஞானபுரம், தட்சிண சிதம்பரம் என்பன வேறு பெயர்கள். பாண்டிநாட்டுத் தலங்கள் பதினான்கும் இங்கிருப்பதாகக் கூறுவது மரபு, இதனால் கோயிலினுள்ளே பதினான்கு சிவலிங்கங்கள் உள்ளன. நான்கு வேதங்களும் வழி பட்ட தலம். மிகப் பெரிய கோயில்.

திருமால், பிரமன், இந்திரன், சூரியன், சந்திரன், இயமன், ஐராவதம், வசிட்டர், அகத்தியர், சௌந்தர பாண்டியன்

---

1. சாசனத் தமிழ்க்கவி சரிதம், பக். 152, 153,

போன்றோர் இங்கு வழிபட்டுப் பேறு பெற்றனர் என்பது வரலாறு. சம்பந்தரும் சுந்தரரும் பதிகம் பாடிச் சிறப்பித்துள்ளனர்.

"மின்னியல் செஞ்சடை வெண்பிறையன் விரிநூலினன்
பன்னிய நான்மறை பாடியாடிப் பலவூர்கள்போய்
அன்னம் அன்ன நடையா ளோடும் அமரும்இடம் :
புன்னை நன்மாமலர் பொன்னுதிர்க்கும் புனவாயிலே!"

என்பர் சம்பந்தர்.

"சித்த நீநினை என்னொடு சூளனும் வைகலும்
மத்த யானையின் ஈர்உரி போர்த்த மணாளன்ஊர்
பத்தர் தாம்பலர் பாடி நின்றாடும் பழம்பதி
பொத்தி லாந்தைகள் பாட்டறாப் புனவாயிலே"

என்பர் சுந்தரர்.

திருவாரூர் தியாகராஜ கவிராயரால் இயற்றப் பெற்றுள்ள திருப்புனவாயிற் புராணத்தில் 928 பாடல்கள் உள்ளன. இதில் இத்தலம் வச்சிரவனம் என்றே கூறப்பெறுகின்றது.

**சேது புராணம்**

பாண்டி நாட்டிலுள்ள புகழ்பெற்ற சிவத்தலம் இராமேச்சுரம். 'ஆசேது இமாசலம்' என்பது பழமொழி, சேது முதல் குமரி வரை என்பது பொருள். இதன்படி இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் வந்து தரிசித்துச் செல்லும் புண்ணியத்தலம் இராமேச்சுரம். இது பன்னிரண்டு ஜோதி லிங்கத் தலங்களுள் ஒன்றாகும்.

இராவணனைக் கொன்ற பாவம் நீங்க இராமன் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்ட இத்தலத்திறைவர் பெயர் இராமநாதசுவாமி, இராமலிங்கேசுவரர் என்பதாகும்.

"தேவியை வவ்விய தென்னிலங்கைத் தசமாமுகன்
பூவியலும் முடிபொன்று வித்தபழி போய்அற
ஏவியலும் சிலையண்ணல் செய்த இரா மேச்சுரம்
மேவியசிந் தையினார்கள்தம் மேல்வினை வீடுமே"

எனச் சம்பந்தரும்,

"கோடிமா தவங்கள் செய்து குன்றினார் தம்மை எல்லாம்
விடவே சக்கரத்தால் எறிந்து பின்அன்பு கொண்டு

தேடிமால் செய்தகோயில் திருஇரா மேச்சு ரத்தை
நாடிவாழ் நெஞ்சமே நீநன்னெறி ஆகும் அன்றே"

என அப்பரும் இத்தலத்தின் சிறப்புரைப்பர்.

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த நிரம்ப அழகிய தேசிகர் இயற்றிய மூன்று தலபுராணங்களுள் அளவால் மிகப் பெரியதும் சிறப்பானதுமான தலபுராணம் சேதுபுராணம் ஆகும். 45 சருக்கங்களும் 3438 பாடல்களும் கொண்ட இப் புராணம் சிறந்ததொரு காப்பியமாகும்.

இராமநாத முனிவர் என்பவர் இப்புராணத்தைப் பாடுமாறு கூற இதை வடமொழியிலிருந்து பெயர்த்துப் பாடியதாக ஆசிரியர் கூறுகின்றார்.

"விரிதருபைங் கடலுலகம் புரந்ததனி
வேந்தரெல்லாம் வியந்து போற்ற
அரியமறை முனிவர்தமிழ்ப் பாவாணர்
செவிநுகர்பே ரமுத மாகத்
தெரிதரமுத் தமிழ்வடிக்கும் முனிநிரம்ப
அழகியதே சிகனாம் செம்மல்
வரிசைபெறு வடமொழியின் சேதுமாக்
கதைதமிழால் வகுத்திட் டானே"

எனப் பாயிரப் பாடலிலும், 'இராமநாத மாமுனிவன் நீடூழி வாழ்க' என நூலின் இறுதிப் பாடலிலும் கூறியிருப்பது கொண்டு நிரம்ப அழகிய தேசிகர் இம் முனிவரிடத்து மிகுந்த ஈடுபாடு கொண்டவர் எனத் தெரிகின்றது.

விநாயகர் சார்பாக இரண்டு செய்யுட்கள் உள்ளன. சபாபதி வணக்கத்தோடு கடவுள் வாழ்த்துப் பகுதி தொடங்குகிறது. சரசுவதிக்கும் மெய்கண்ட தேவருக்கும் இவர் வணக்கம் கூறியுள்ளமை சிறப்பாகும்.

திருநாட்டுச் சிறப்புச் சருக்கத்தில் பாண்டித் தலங்கள் பதினான்கையும் தனித்தனியே ஒவ்வொரு பாடலால் விளக்குவர். இத்தலங்களைக் குறிப்பிடும்போது, ஒவ்வொன்றின் பெயரையும் நயமுற எதுகையில் வைத்துப் பாடுவது குறிப்பிடத் தக்கதாகும். திருவாடானையைப் பாடுமிடத்து,

"வீடானைப் பிறவானை நினையானை
மறவானை வேறென் றோடும்
கூடானைப் பிரியானைக் குணங்குறியொன்
றில்லானைக் குகப்பி ரானை
நீடானை முகத்தானைப் பயந்தானைத்
தொழுதமரர் நிரப்பு நீங்கும்
ஆடானை நகருமுடைத் தன்னதமிழ்
நாடதன்சீர் அளவிற் றாமோ".

எனப் பாடுவர். சமயத் தத்துவங்களையும் இதில் இணைத்தே கூறுவர்.

நிரம்ப அழகிய தேசிகர் சோழ நாட்டில் பிறந்தவர். எனவே, சோழநாடும் பைந்தமிழ் நாடு, பொருநையும் பொன்னி போல் வளங்கள் கொடுக்கும் என்றே பாடுகின்றார்.

"பன்னுசீர்க் கிள்ளிநாடும் பைந்தமிழ் நாட தேனும்
இன்னிசைத் தமிழின் ஆசான் இருப்பது மலய வெற்பில்
பொன்னிபோற் பொருநை தானும் பூம்பணை வளங்கள் ஈனும்
கன்னிநாட் டிதுபோல் முத்தம் காவிரி கான்றி டாதே".

இவ்வாறு சோழ நாட்டின் பெருமையைக் கூறினாலும், அகத்தியரும் முத்தும் அங்கு இல்லை, பாண்டி நாட்டில்தான் உண்டு என்றும் கூறுவார் ஆசிரியர்.

போதிமங்கைச் சாக்கியர் வாதில் அழிந்து தமிழ் விரகர் தாள் பணிந்தமைபோல் செந்நெற்கதிர் விளைந்தது என்னும் நயம்மிக்க பாடல் இவண் குறிப்பிடத்தக்கது.

"உவந்தெதிர்ந்த மொழிப்போரில் உற்ற பொருள் உரைசெய்யும்
தவந்திரிந்த போதிமங்கைச் சாக்கியர்போல் தலைநிறுவி
அவந்தரு சொல்லவர்வாதில் அழிந்த தற்பின் தமிழ்விரகர்
சிவந்த கழல்பணிந்தமைபோல் செந்நெல் விளைகதிர் வளைந்த".

திருநாட்டுச் சிறப்புரைக்கும் இப்பகுதியில் முரண்தொடை, கடை மடக்கு முதலான பாடல்கள் மிகுதியாக உள்ளன.

கந்தமாதனச் சிறப்பு என்ற சருக்கத்தின் முதல் பன்னிரண்டு பாடல்கள் கந்தமாதனம் என்றே முடிவன. இந்நூலுள் தீர்த்தம் உரைக்கும் சருக்கங்கள் இருபது உள்ளன. அவற்றுள் இராமன்,

அனுமன், இலக்குமி, இலக்குவன், காயத்திரி, சரசுவதி ஆகியவை குறிப்பிடத்தக்கன. இராம குண்டம், சீதை குண்டம், பிரம குண்டம் என மூன்று குண்டச் சருக்கங்கள் உள்ளன. இத்தலத்திற்கு வடக்கில் சிறிது தொலைவில் உள்ளது கந்தமாதன மலை. இங்குள்ள இருபாதச் சுவடுகள் 'இராமர் பாதம்' எனப்படுகின்றன. சேதுவோடு மருவியது கந்தமாதனமலை என்று அதன் சிறப்பு இப்பகுதியில் எடுத்துரைக்கப்படுகிறது.

சேதுவில் ஆடுவதன் புண்ணியம் பற்றிச் சேதுச் சருக்கத்திலும், இராமன் சேதுக்கரை யடைந்ததும் அங்கு நளனைக் கொண்டு அணை கட்டுமாறு சமுத்திரராசன் கூறியது பற்றிச் சேது வந்த சருக்கத்திலும் கூறப்படுகிறது.

இந்நூலில் தோத்திரப் பாடல்கள் பல உள்ளன. இவற்றைப் பதிகம் போலவே அமைத்திருக்கக் காணலாம். இவை, பத்து முதல் பதினான்கு வரையான எண்ணிக்கையில் அமைந்த பாடல்களாகவே உள்ளன. அகத்தியன் பின்னவனாகிய மேலோன் துதி (சரு. 11), காயத்திரியும் சரசுவதியும் துதித்தல் (சரு. 35), இராமனும் சீதையும் துதித்தல் (சரு. 41), முனிவர் இராமனைத் துதித்தல், அனுமன் இராமனைத் துதித்தல், அனுமன் சீதையைத் துதித்தல் (சரு. 39) போன்றன குறிப்பிடத்தக்கன.

இந்நூல் முழுமையும் தேவார திருவாசகச் சந்தமும் தொடர்களும் யாப்புப் பொருளும் நிரம்பியிருக்கக் காணலாம்.

நூலிறுதியில் சேது பலச் சருக்கம் கூறுமிடத்து, சேதுவில் நீராடி வழிபட்டோர் நற்கதியடைவர் என்பதையும் இப்புராணம் படித்தவர் சிறப்படைவர் என்பதையும் 180 பாடல்களால் அமைத்துள்ளார் ஆசிரியர். சேதுபுராணம் படிப்போருக்குப் பலன் சொல்லுமிடத்து, ஒரு சருக்கம் கூறினார் கேட்டவர், இரண்டு சருக்கம், பத்துச் சருக்கம், இருபது சருக்கம், முப்பது சருக்கம், நாற்பது சருக்கம், ஐம்பது சருக்கம் படித்தவருக்கும் என்று பலன் விரிவாகக் கூறப்பெறுகிறது. பின்னர் அனைத்தையும் ஒருமுறை கேட்டவர், இயம்பினோர், இருமுறை, மும்முறை, நான்முறை என்று பின்னும் விரித்துக் கூறுகிறார் ஆசிரியர், இவையல்லாமல்,

"ஒருகவியே தானாதல் இதிற்பாதி
பாதல்இந்த உயர்பு ராணத்து
ஒருபதமே தானாதல் ஒருமொழியே
தானாதல் உண்மை சான்ற

ஒருபுனித எழுத்தாதல் ஒற்றாதல்
ஒருமுறைகேட்டு உரைத்தால் அந்த
ஒருவிசையில் அன்றன்றங் குளுற்றுபா
வம்அனைத்தும் ஒழிக்கும் மாதோ''

என வரும் பாடல்களும் குறிக்கத்தக்கன.

**சமய வேறுபாடின்மை**

நிரம்ப அழகிய தேசிகர் ஒரு சைவத் துறவி. இவர் பாடுவது சிவபெருமான் புகழ், அதுவும் இராமர் பிரதிட்டை செய்து வழிபட்ட தலத்தின் பெருமை. இருப்பினும், இவர் இந்நூலில் வைணவம் சைவம் என்று வேறுபாடு இல்லாமல், யாரை வழி பட்டாலும் எப்பெயரைக் கூறினாலும் முக்தியடைவர் என்று கூறுவது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

மதுரை, மயிலாடுதுறை, வெண்காடு, பழமலை, வேங்கடம், சேஷாத்திரி, நைமிசம், அருணை, அருச்சுனவனம் (இடை மருது), மறைவனம், தில்லை, காழி, தென்கயிலை (காளத்தி), அரங்கம். ஆனைக்கா, (இபக்கா), வைத்தியபுரம் (புள்ளிருக்கு வேளூர்), குடந்தை, காசி, பருப்பதம், கமலாலயம் (திருவாரூர்), காஞ்சி ஆகிய,

''இப்பெரும்பதி முதலிய ஈசன்மால் பொருந்தும்
ஒப்பரும்பதி யாவினும் ஓரியாண் டுறைந்த
அப்பெரும் பலனடையும் என்றால் அகன்துறைநீர்
மெய்ப்பெருந்தனுக் கோடியின் பெருமையார் விரிப்பார்''

எனவரும் பகுதியில், ஈசன்பதி மால்பதி ஆகிய எதில் உறைந் தாலும் பெரும் பலனடைவர் என்பதைக் குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

இதே போன்று 'நமசிவாய' என்று ஓதாதார் பிறவியும் 'நமோ நாராயணா' என்று எட்டெழுத்தை உருவேற்றாதார் பிறவியும் சேது நீராடலால் தாவியோடும் என்பர்.

''ஆவி கட்கித மாமஞ் செழுத்லைதயும்
ஓவிலா நமசி வாயஎன் றோதிடார்
பாவி யாருளங் கேளார் பவங்களும்
தாவியோடுமிச் சேதுவி னானத்தால்''.

"முந்தை யாமெழுத் தோடு நமோவென
நந்தி லங்குகை நாராய ணாயவென்று
இந்த எட்டெழுத் தாலுரு வேற்றலார்
சிந்தி யார்பவஞ் சேதுவிற் சிந்திடும்".

மேலும், சிவலிங்கத்தையும், சாளக் கிராமத்தையும் துவாரகா சக்கரத்தையும் பூசியாதவர்கள் பாவமும், உருத்தி ராக்கம் அணியாதவர் பாவமும், கோபி சந்தனம் அணியாதவர் பாவமும் சேதுவில் மூழ்க நீங்கும் என்பர்.

செய்ய வேண்டிய நற்கருமங்களைச் செய்யாது விட்டவர் களுடைய எத்தகைய பாவங்களும் சேதுவில் கெடும் என முப்பது பாடல்களில் கூறுவர். இங்கு சிவகருமம், திருமால் கருமம் இரண்டையும் சேர்த்தே கூறுவர். அவற்றுள் மார்கழித் திங்கள் வைகறையில் செய்யும் பூசையும் ஒன்று.

"ஆரணப் பரியினா னாதி யோர்தமை
மார்கழித் திங்கள் வைகறையின் மாபெரும்
சீரியற் பூசைசெய் யாத தீமையும்
நீரலைச் சேதுவில் நீங்கு மாலரோ".

ஒரு பாடலில் உருத்திராக்கமும் அடுத்ததில் துழாய் மணியும் கூறுகிறார்.

இரவு முடிகின்ற பிரமிய முகூர்த்தத்தில் எழுந்து, சுத்தனாய் அரியரன் நாமம் துதித்தல், காயத்திரி சந்தி செய்தல், சித்திரை மதியில் சித்திரகுத்தருக்கு வழிபாடு செய்தல் போன்றனவும் இந்நூலாசிரியரால் குறிப்பிடப்படும் செய்திகளாகும்.

இப்புராணத்தை 'உலகமெல்லாம்' என்ற சொல்லோடு ஆசிரியர் முடித்திருப்பதும் சிறப்பாகும்.

**திருவாடானைப் புராணம்**

திருவாடானை என்னுந் தலம் பாண்டிய நாட்டில் காரைக்குடிக்கு அருகில் உள்ளது. சம்பந்தர் பாடல் பெற்றது. "செப்பிய புகழ்த் திருவாடானை சேர்ந்து செந்தமிழ் மாலைகள் சாத்தி" எனத் திருஞானசம்பந்தர் திருவாடானை வந்து பாடியதைச் சேக்கிழார் தம் பெரியபுராணத்தில் குறிப்பர்.

இத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஆடானை (நாதர்) பெயர் தாங்கி திருவாடானை என இத்தலம் விளங்குகிறது. திருவிளை

யாடல் புராணம், சேது புராணம் ஆகியவற்றிலும் திருவாடானை என்றே பேசப்படுகிறது.

இத்தலம் சீகாழியைப் போலப் பன்னிரு திருநாமங்களைக் கொண்டுள்ளது. அவை: பாரிஜாதவனம், வன்னிவனம், குருக்கத்தி வனம், வில்வ வனம், முத்திபுரம், ஆதிரத்நேச்சுரம், ஆடானை, மார்க்கண்டேயபுரம், அகத்தீச்சுரம், பதுமபுரம், கோமுத்தீச்சுரம், விஜயேச்சுரம் என்பன.

ஆதியில், நீலரத்தினத்தாற் சிவலிங்கஞ் செய்து சூரியன் பூசித்ததால் இறைவனுக்கு 'ஆதிரத்நேசுரர்' என்றும், தலத்திற்கு 'ஆதிரத்நேச்சுரம்' என்றும் பெயர் கூறுவர். 'ஆதியானுறை ஆடானை' என்றே திருஞானசம்பந்தரும் கூறுவர். துருவாச முனிவருடைய சாபத்தால் ஆட்டுத்தலையும், ஆனையின் உடலும் பெற்ற வருண புத்திரன் வாருணி சாப நிவாரணம் பெறுமாறு பூசித்தமையால், இத்தலத்துக்கு 'ஆடானை' என்னும் பெயரும், இறைவனுக்கு 'அஜகஜேசுரர்' என்னும் பெயரும் உண்டாயின என்று கூறுவர்.

இத்தல புராணம் இயற்றியவர் திருவாரூர் சாமிநாத தேசிகர் ஆவார். இந்நூலில் 11 சருக்கங்களும் 557 பாடல்களும் உள்ளன. பாயிரத்தினைத் தொடர்ந்து நகரச்சிறப்பும் புராண வரலாறும் அமைகின்றது.

இத்தலத்து இறைவனின் திருப்பெயர்கள், ஆடானைநாதர், அஜகஜேஸ்வரர், ஆதிரத்நேஸ்வரர், ரத்தினநாதர், அம்பிகை-அன்பாயி அம்மை, சிநேகவல்லி என்பன.

தீர்த்தங்கள் . மணிமுத்தாநதி, சூரியபுட்கரணி. வருண தீர்த்தம், மார்க்கண்டேய தீர்த்தம், அகத்திய தீர்த்தம், க்ஷீர குண்டம் என்பன.

இத்தலத்தில் வழிபட்டுப் பேறு பெற்றோர் : சூரியன், வருண புத்திரன், வருணன், மார்க்கண்டர், உரோமசர், வசிட்டர், அகத்தியர், கௌதமர், காலவர், பரத்துவாசர், சநகாதி நால்வர், அன்னத்துவசன், அரிச்சந்திரன், மநு, முசுகுந்தன், அதி வீரன், மாந்தாதா, அருச்சுனன் ஆகியோர் எனப் புராண வரலாறு கூறுகின்றது.

"ஆதபன்வா ருணிவருண னன்மார்க்கண்டன்
அளியுரோ மசன்வசிட்டன் அகத்தியன்சேர்
கோதமன்கா லவன்பரத்து வாச னன்பு
கொண்டசரு காதியொரு நால்வர் மிக்க
மாதவஞ்செ யனத்துவச னரிச்சந்த் ரன்சீர்
மநுமுசுகுந் தன்னதிவீ ரன்மாந் தாதா
ஏதமில்பற் குனன்கோவும் பணியா டானை
எந்தையிரு பாதமலர் சிந்தை செய்வாம்" (28)

என்பது இத்தலத்தில் வழிபட்டோரைக் குறிக்கும் பாடல்.

"வளர்பாரி ஜாதவனம் வன்னிவனம் குருக்கத்தி
வனமேற் கொண்ட
தளிரோங்கு வில்வவன முத்திபுர மாதி ரத்நேச்
சரமா டானை
இளர்மார்க்கண் டேயபுரம் நல்லகத்தீச் சுரம்பதும
புரங்கே டில்சீ
ருளகாய கோமுத்தீச் சுரம்விஜயேச் சுரம்பனிரண்
டுளவாம் நாமம்" (29)

என்னும் பாடல் இத்தலத்திலுள்ள மரங்களையும், தலப் பெயரையும் சுட்டும்.

"சித்திதரு முத்தாறு சூரியபுட்
கரணிபுனல் திறலோன் வாவி
முத்திதரு மார்க்கண்ட முனிதீர்த்தந்
தென்மலைய முனிவன் தீர்த்தம்
பத்திதரு கீரகுண்ட மெனத்தீர்த்த
மாறிவையுட் படிந்த மேலோர்
சத்தியஞ்சத் தியமாகு நித்தியா
நந்தநிலை தன்னிற் சார்வார்" (30)

என்பது இத்தலத் தீர்த்தங்கள் பெயரும் பயனும் கூறும் பாடல்.

"ஈராறு திருநாமம் ஓராறு
நற்றீர்த்தம் இறையைப் போற்றிப்
பேராறு மொன்றொழிந்த
நாலாறாம் பேறு பெற்ற
சீராரு மகிமைபெறு மாடானைப்
பதியிலுள சிறப்பை யெல்லாம்
யாராலும் உரைப்பவரி தானாலு
மியாமறிந்த வியல்பிற் சொல்வாம். (31)

என்பது இத்தலச் சிறப்பை எடுத்துரைக்கும் பாடலாகும்.

முதலாவதாக அமைவது மணிமுத்தாநதிச் சருக்கம். இதில், மணிமுத்தா நதியில் மூழ்குவோர் பெறும் பயன்கள் கூறப்பெறு பெறுகின்றன. பாரிசாதவனச் சருக்கம் அடுத்துச் சூரியன் பூசித்தது, வாருணி சாபமடைந்தது, சாபவிமோசனம் பெற்றது, மார்க்கண்டன் பூசித்தது, அன்னத்துவசன் பேறு பெற்றது, அகத்தியர் பூசித்தது, காமதேனு சாபமடைந்தது, சாபவிமோசனம் பெற்றது, தனஞ்செயன் பூசித்தது ஆகிய வரலாறுகள் கூறப்பெறுகின்றன. பலரும் பூசித்துப் பேறு பெற்ற இத்தலத்தில் அவர்கள் கூறுவதாக அமையும் துதிப்பாடல்கள் பல இந்நூலில் கூறப் பெறுகின்றன.

இத்தலபுராணப் பதிப்பினை இராமநாதபுரம் சமஸ்தான தேவஸ்தானம் 1969ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது. நூலின் இறுதியில், வடமொழி பிரமகைவர்த்த மகாபுராணத்தின் உத்தர பாகம் சேத்திர காண்டத்திலுள்ள பாரிஜாத்வன க்ஷேஸ்வர மகாத்மியம் முழுவதும் தமிழில் மொழிபெயர்க்கப் பெற்று உரைநடையாகச் சேர்த்துப் பதிப்பித்துள்ளனர் அம் மகாத்மியத்தில் 50 முதல் 58 அத்தியாயங்கள் கூறப் பெறுகின்றன. அந்த அத்தியாயங்களின் தலைப்பிலேயே இந்தத் தமிழ்ப்புராணமும் பாடப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். வடமொழியிலுள்ள செய்திகளை அடியொற்றியே இப்புராணம் பாடப் பெற்றது என்பதற்குச் சான்று காட்டவே இதைச் சேர்த்துப் பதிப்பித்துள்ளனர் எனலாம்.

**திருக்கானப்பேர் என்னும் காளையார் கோயிற் புராணம்**

சிவகங்கைக்கும் நாட்டரசன் கோட்டைக்கும் இடையே உள்ள தலம் கானப்பேரூர் ஆகும். இது காளையார் கோயில் என வழங்கப் பெறுகிறது. சங்க காலத்தில் கானப்பேரெயில் என்ற பெயருடன் விளங்கிய இத்தலம் உக்கிரப் பெருவழுதியின் கோட்டையாகத் திகழ்ந்தது என்பர். தட்சிணகாளிபுரம், சோதிவனம், மந்தார வனம், மோட்சப்பிரதம், அகத்திய சேத்திரம், காந்தாரம், தவசித்திகரம், தேவதாருவனம், பூலோக கைலாசம், மகாகாளபுரம் என்பன இத்தலத்தின் பிற பெயர்களாம்.

இக்கோயிலின் பெரிய கோபுரம் மருதுபாண்டியரால் கட்டப்பட்டது. சிறியகோபுரம் வரகுண பாண்டியரால் கட்டப் பட்டது ஆகும்.

ஐராவதம் என்னும் யானை வழிபட்ட தலத்திற்குச் சம்பந்தரும் சுந்தரரும் பதிகங்கள் பாடியுள்ளனர்.

சிவபெருமான் காளை வடிவங்கொண்டு கையிற் பொற் செண்டும் திருமுடியில் சுழியுங்கொண்டு சுந்தரருக்குக் காட்சி தந்து யாம் இருப்பது கானப்பேரூர் என்று கூறி ஆற்றுப்படுத்திய தாக வரலாறு கூறும்.

தஞ்சாவூர், சதாவதானம் சுப்பிரமணிய ஐயரவர்கள் இயற்றிய இத்தலபுராணத்தில் பாயிரமும் 32 படலங்களும் 1207 பாடல்களும் உள்ளன.

பாயிரத்தை அடுத்து 86 பாடல்களில் பாண்டி நாட்டுச் சிறப்பைக் கூறுகிறார். ஒருபாடலில் புகழ்பெற்ற பாண்டி நாட்டுத் தலங்கள் குறிக்கப்பெறுகின்றன.

"ஆலவாய் கானப் பேரூர் ஆசானை புனவா யில்குற்
றால மேடகம் பரங்குன் றாப்பனூர் சுழியல்புத்தூர்
மாலி ராமேச் சுரம்பூ வணங்கொடுங் குன்று வேய்நெல்
வேலியாந்தல முனுப்பா மேயது பாண்டி நாடு." (8)

அடுத்து நகரப்படலமும் நைமிசப் படலமும் அமைகின்றன. அகத்தியர் ஞானோபதேசப் படலம் முதலாக இத்தலத்தில் நிகழ்ந்த வரலாறுகள் கூறப்பெறுகின்றன. காளி திருவவதாரம், காளிபட்டாபிடேகம், கண்டேசுரன் வதை, காளி பூசனை, சுவர்னவல்லி திருமணம், தேவர்கள் பூசித்தது, தேவதாசன் பூசித்தது, இலக்குமி சாபந் தீர்ந்தது, உருத்திரர் சாபந்தீர்த்தது, வீரசேன பாண்டியன், வரகுணபாண்டியன் வழிபட்டது, சுகந்த கேசி, விக்கிரமசோழன் வழிபட்டது, பேய்கள் சாபம் நீங்கியது, கங்கை பாபம் தீர்ந்தது, வெள்ளையானை, இந்திரன் சாபம் தீர்ந்தது, கவுதமன், கண்ணுவர், தேவசேனன், மகா காளேசன், சோமதாதன் போன்றோர் வழிபட்டது ஆகியவை தனித்தனியே விளக்கப் பெறுகின்றன.

சுந்தரமூர்த்திப் படலத்தில் 18 பாடல்களில் அவர் வரலாறு கூறுகிறார் ஆசிரியர். இதில் சுந்தரர் திருச்சுழியல் நகர் வந்ததும் அங்கு இறைவன் காட்சி கொடுத்து இங்குக் கானப்பேர் வரச் சொன்னதுமான செய்திகள் கூறப்பெறுகின்றன.

"தலந்தொறுஞ் சென்று சென்று தம்மடி யார்கூட் டத்தோடு
அலம்பெறு தமிழ்ப்பா மாலை அங்கணன் தனக்க ணிந்து

நிலம்பல சுற்றி வையை நீருலாம் பாண்டி நாட்டில்
அலங்கெழு திருச்சுழிப்பேர் நகரினை யடைந்தார் மன்னோ,

"அத்தல முறைமெபம் மானை அருச்சித்தங் கணிந்து போற்றித்
தத்துநீர் தவழ்குண் டாற்றின் தடங்கரை மடத்தில் தங்கி
நித்திரை செய்வார் தம்முள் நிகழ்தரு களவிற் பூஞ்செண்டு
அத்தன்கா ளீசன்காளை யாகிமுன் தோன்றி நின்றான்"

"ஐயநீர் யாவரென்றார் அவர்சோதி வனத்துளேம்யா
மையணி கண்டத் தோனை வளம்படப் பாடுவோய்நீ
துய்யவுள் ளன்பினோடு துதிக்குக நமையு மென்றான்
பையநித் திரையி னீங்கி விழித்தனர் பரிவு பூண்டார்"

(பா. 4-6)

கனவு நீங்கி விழித்த சுந்தரர், காளீசனே வந்ததை உணர்ந்தார். பின்பு அவன் பின்னே சென்று இக்கோயிலை யடைந்தார். அங்குக் காளையாரைப் பாடி மகிழ்ந்தார். பின்பு தம் அடியார் கூட்டத்தோடு பல தலங்கள்தோறும் சென்று பாடியருளினார் என இவ்வரலாறு கூறப்பெறுகிறது.

"மன்னுசுந் தரர்தமன்பு வயங்குற யார்க்குங் காட்டி
அன்னிலை யெதிர்போந் தெம்மான் அளவறு பொருளும் நல்கத்
துன்னிய வடியர்கூட்டஞ் சூழ்ந்திட வவணின் றேகிப்
பன்னிய தலங்கள் தோறும் பாடிய சென்றா ரன்றே".

(பா.17)

இவற்றையடுத்து, காந்தபுராண சங்கர சங்கிதையிலுள்ள சதாசங்கிரப் படலம் அமைகின்றது. முதலில் கூறியவை பிரம கைவர்த்தத்தில் இத்தலம் பற்றிப் பேசப்பெற்றவை. இப்பொழுது இங்கு காந்தம்-சங்கர சங்கிதையிலிருந்து இத்தலம் பற்றிய செய்திகள் சூதமாமுனி கூறுவதாக இப்படலம் அமைகிறது.

இறுதியில் தலவிசேடப் படலம் அமைகின்றது.

"பேருல கத்தில் வந்து பிறந்தவர் யாவ ரேனும்
நேருற இறக்குமுன்னம் நிமிடமா யினுமன் போடு
சீருற அத்த லத்தில் வதிந்திடிற் சிவன் முத்தர்
தாரணி யாவும் வந்து தன்னடி தாழ வாழ்வார்"

(தலவிசேடப் படலம். 11)

என இவ்வாறு 16 பாடல்களில் தலச்சிறப்பு உரைக்கப்பெறுகிறது.

**திருப்பூவணப் புராணம்**

மதுரையிலிருந்து மானாமதுரை செல்லும் வழியில் உள்ளது திருப்பூவணம் என்னும் தலம். இது பழையூர், புதூர், கோட்டை, நெல்முடிக்கரை என நான்கு பகுதிகளாகவுள்ளது. இவற்றுள் கோட்டை என்னும் பகுதியிலேயே இத்திருக்கோயில் உள்ளது. குலசேகர பாண்டியன் இந்நகரில் முடிசூட்டிக் கொண்ட விழாவில் நெற்கதிரை முடியாகச் சூடிக் கொண்டான். எனவே, இத்தலத்திற்கு நெல்முடிக்கரை என்ற பெயர் உண்டாயிற்று. மேலும் புட்பவன காசி, பிதுர்மோட்சபுரம், பாஸ்கரபுரம், லட்சுமிபுரம், பிரமபுரம். ரசவாதபுரம் என்னும் வேறு காரணப் பெயர்களும் இத்தலத்திற்கு உள்ளன.

பிரமன் போன்றோர் வழிபட்ட இப்பதியில் பொன்னனையாள் என்பவள் வாழ்ந்து சிவனடியார்களை உபசரித்து வந்தாள். இவளுக்காக இறைவன் மகிழ்ந்து சித்தராக வந்து இரசவாதம் செய்த திருவிளையாடல் இத்தலத்தில் நிகழ்ந்தது என்பது வரலாறு. அவ்வாறு அவள் செய்த பொன்னாலாகிய இறைவன் உருவம் மிகவும் அழகாக அமைந்தது என்றும், அவள் அப்படிமத்தின் கன்னத்தை அள்ளி முத்தமிட்டாள் என்றும் கூறுவர். இந்த அடையாளத்தை இன்றும் அப்படிமத்தில் காணலாம். இத்தலத்தை மூவரும் வழிபட்டுப் பாடியுள்ளனர்.

"நன்று தீது என்றுஒன்றிலாத நான்மறை யோன்கழலே
சென்று பேணி ஏத்த நின்றதேவர் பிரான் இடமாம்
குன்றில் ஒன்றி யோங்கமல்கு குளிர்பொழில்சூழ் மலர்மேல்
தென்றல் ஒன்றி முன்றிலாருந் தென்திருப் பூவணமே"

என்று சம்பந்தரும்,

"எண்ணி யிருந்து கடந்து நடந்தும்
அண்ணல் எனாநினை வார்வினை தீர்ப்பார்
பண்ணி சையார் மொழியார் பலர்பாடப்
புண்ணி யனார்உறை பூவணம் ஈதோ"

எனச் சுந்தரரும் இத்தலச்சிறப்பை உரைப்பர்.

மூவர் பெருமக்களும் வைகை மணல் சிவலிங்கமாகத் தோன்றியமையால் மூவரும் மறுகரையிலிருந்தே இத்தலத்தை வணங்க, இறைவன் நந்தியை விலகச் செய்து காட்சி தந்தருளினார் என்பர். அவ்விடம் மூவர் மண்டபம் என்று வழங்கப் பெறுகின்றது.

திருவாசகத்திலும் கருவூர்த் தேவரின் திருவிசைப்பாவிலும் இத்தலம் புகழப்படுகின்றது. திரு. கந்தசாமிப் புலவர் அவர்கள் திருப்பூவனப் புராணம் பாடியுள்ளார். இந்நூலில் 1437 பாடல்கள் உள்ளன.

### திருச்சுழியற்புராணம்

விருதுநகர்-மானாமதுரை செல்லும் வழியில் உள்ளது. திருச்சுழியல் என்னும் தலம். சிவபெருமான் ஒரு சமயம் பிரள யத்தைச் சுழித்துப் பூமிக்குள் புகச் செய்தார் ஆதலின் 'சுழியல்' என்று பெயர் பெற்றுள்ளது. வயலூர், முத்திபுரம், ஆவர்த்த புரம், சூலபுரம், அரசவனம், சுழிகை, சுழிகாபுரி என்பன இத் தலத்தின் வேறு பெயர்களாகும்.

மிகப் பழமையான இத்தலத்தில் பார்வதியார் வழிபட்டுச் சிவபெருமானை மணந்தார் என்பது வரலாறு. சதானந்த முனிவர் போன்றோரும் இங்கு வழிபட்டுப் பேறு பெற்றனர் என்பர். கோயிலுக்கு எதிரில் உள்ள தீர்த்தம்-கவ்வைக்கடல் என்று கூறப்பெறுகிறது. சுந்தரர் தேவாரத்திலும் இத்தீர்த்தம் சிறப்பிக்கப் பெறுகிறது. சிவபெருமான் பிரளயத்தைச் சுழித்து இத்தீர்ந்தத்தில் புகச் செய்தார் என்பது இத்தல வரலாறு.

சுந்தரரின் பாடல்பெற்ற இத்தலம் குறித்துப் பல நூல்கள் பாடப்பெற்றுள்ளன. திரிசூலபுர மகாத்மியம், திருச்சுழியற் புராணம் என்பன தலவரலாறு கூறுவன.

திருச்சுழியர் ஆராவமுதாசாரியர் இயற்றியுள்ள திருச் சுழியற் புராணத்தில் பாயிரமும் 15 சருக்கங்களும் 744 பாடல்களு முள்ளன. பாயிரப் பகுதிக்கு முன்னே கடவுள் வாழ்த்துப் பகுதியை அமைக்கின்றார் இவர். அதில் 19 பாடல்களும் மிகச் சிறப்பானவை. முதலில் விநாயகர் காப்பும் வாழ்த்தும் கூறித் தொடங்கி, இரண்டாம் பாடலில் நூற்பயன் கூறுகிறார். அடுத்து, திருச்சுழிநாதர், சிவபெருமான், மணக்கோல நாதர், சபாபதி, பிரளய விடங்கர் திருமேனிநாதர், துணைமாலை யம்மை, வேலடி விநாயகர், சுப்பிரமணியர், சுழியற் சொக்கம்மை, சரசுவதி, நால்வர், சண்டேசுராதி நாயன்மார் ஆகியோருக்கு வணக்கம் கூறுகிறார். இப்பாடல்கள் அனைத் தும் இனிய சந்தமும் எளிய நடையும் அழகும் பொருந்தியவை. காட்டாக,

"ஊனாகி உயிராகி ஒளியாகி வெளியாகி உருவ மாகி
வானாகி நிலனாகிப் புனலாகிக் கனலாகி வளியு மாகித்
தேனாகிச் சுவையாகி மலராகி மணமாகிச் செகமீ ரேழுந்
தானாகி நானாகி நின்றபரஞ் சுடர்சரணத் தலைமேற்
கொள்வாம்" (4)

எனவரும் சிவபெருமான் துதிப்பாடலில் இவர் மனமுருகிப் பாடக் காணலாம். இவ்வாறே சுழியற் சொக்கம்மை யாகிய இறைவியைப் பாடுவதும் இனிமையானது.

"நந்தரி தேடிய பொருளை நான்சொல
வந்தரி தாம்பொருள் வாக்கு நல்குவாள்
அந்தரி புரகரி கௌரி யாமளை
சுந்தரி பைரவி சுழியற் சொக்கம்மை" (12)

என்னும் இப்பாடலையடுத்துச் சரசுவதிக்கும் துதி கூறுகிறார்.

இக்கடவுள் வாழ்த்துப் பகுதியிலுள்ள நால்வர்க்குரிய பாடல்கள் மிக அருமையானவை. தேவார ஆசிரியர்களிடத்துக் கொண்ட இவர்தம் ஈடுபாடு இவற்றால் நன்கு புலனாகும். முதலில் திருஞான சம்பந்தரைப் பாடுகிறார்.

"பிரமபுரச் செழுஞ்சுடரை வேணுபுரக் கோவைப்
பேசுகொச்சை வயவமுதைப் பூந்தராய்ப் பேற்றைச்
சிரபுரக்கல் விக்கடலைப் புறவநான் மறையைத்
திருத்தோணி புரக்கனியைச் சண்பைநறுந் தேனை
விரகுறுகா ழிப்பொருளைக் கழுமலப்பே ரொளியை
மிகுபுகலிக் குணவரை வெங்குருநா யகத்தைத்
தரமணியம ணழித்தபர சமயகோ ளரியைத்
தப்பாமல் தினந்தோறும் மெய்ப்பாகப் பணிவாம்". (15)

இதில் திருஞான சம்பந்தரை பிரமபுரச் செழுஞ்சுடர், வேணுபுரக்கோ, கொச்சை வயவமுது, பூந்தராய்ப் பேறு, சிரப்புரக் கல்விக் கடல், புறவ நான்மறை, தோணிபுரக்கனி, சண்பைநறுந்தேன், காழிப்பொருள், கழுமலப் பேரொளி, புகலிக்குணவரை, வெங்குரு நாயகம் எனச் சீகாழித்தலச் சிறப்போடு புகழ்வதும். சமணரை அழித்த வகையில் அமணழித்த பரசமய கோளரி என்று போற்றுவதும் சுட்டத்தக்கன. அடுத்து நாவுக்கரசரை வணங்கிப் பாடுகிறார்.

"புல்லோடுந் தழையோடும் பூசிப்பர் தமக்கெதிரே
வல்லோடுந் தனத்துமலை மகளோடும் வருவானைச்
சொல்லோடும் பொருளோடும் துணிவோடும் பாடிநெடுங்
கல்லோடு மிதந்தானைக் கருத்தோடும் பணிகுவமால்". (16)

இதில் நாவுக்கரசர் சமணரின் கொடுமைகளை அஞ்சாது எதிர்த்து நின்று சிவனருளால் வெற்றி பெற்றதைக் குறிக்கச் 'சொல்லோடும் பொருளோடும் துணிவோடும் பாடினார்' என்று இவர் பெருமையுடன் பேசுவது குறிக்கத் தக்கதாகும். அடுத்து திருநாவலூரரைப் பாடுகிறார்.

"வேலால் வரைதடிந்த வித்தகனைப் பெற்றவனைக்
கீலால முடியானைக் கிளர்சனகா தியர்க்கருளும்
பாலால நிழலானைப் பரவைபால் தூதுவிட்ட
ஆலால சுந்தரன்தன் அடிக்கமலம் பழிச்சுதுமால்" (17)

இறைவனுக்கே தூதுவிட்ட நாவலூரரைத் துதித்தபின், அவ்விறைவனை நேரில் கண்ட திருவாதவூரரையும் அவர் வரலாறு கூறித் துதிக்கின்றார்.

"குதிரைகொளத் தரும்பொருளாற் குருந்தடியிற் பணிபுரிந்து
மதுரையிற்பாண் டியனார்முன் மாயுவயங் கண்டானை
எதிரெய்திப் பெருந்துறையில் தனைப்புரந்த எழிற்கோலம்
கதிர்மணியார் கழுக்குன்றிற் கண்டானைத் தினம்
பணிவாம்". (18)

இவ்வாறு இந்நூலாசிரியர் திருமுறைகளை மறவாது தினம் ஓதுவதும் உள்ளன்போடு அவ்வாசிரியர்களை நினைவதுமே கடமையாகக் கொண்டிருந்தார் எனத் தெரிகின்றது. அதன் காரணமாகவே இப்பாடல் பெற்ற தலத்திற்குரிய புராண நூலைப் பாடியுள்ளார் என்றும் அறியலாம்.

பாயிரப் பகுதியில், இந்நூல் வடமொழியிலுள்ள காந்த புராணத்தில் சேத்திர காண்டத்திலிருந்து மொழிபெயர்த்துத் தமிழினால் செய்யப் பெற்றதாகக் கூறுகிறார். அவையடக்கம் கூறிய பின்னர் நைமிசாரணியச் சிறப்புடன் இப்பகுதி நிறைவடைகிறது.

தலவிசேடச் சருக்கம் 33 பாடல்களில் அமைகின்றது. பூமி தேவி பூசித்தது, பாண்டியன்பிரமகத்தி தீர்த்தது ஆகியவற்றைக் கூறியபின்னர் முத்தி மாநகர், திரிசூலபுரம் என்னும் இத்தலச்

சிறப்பைத் தனித்தனியே சருக்கங்களிலே விளக்குகிறார். பிரளயஞ் சுழித்த சருக்கத்தில், சந்திரசேனன் என்னும் மன்னனின் சிவபக்தியைப் பலவாறு பாராட்டுவார் ஆசிரியர்.

"துயில்போதிலும் மடவாரொடு துவள்போதிலும் எதுவும்
பயில்போதிலும் பலவாய்மொழி பகர்போதிலும் தருமம்
முயல்போதிலும் புனலாட்டயர் முப்போதிலு மெய்ப்பாகக்
கயிலாயனைப் புவனேசனை மறவான்கன விலுமே". (9)

இது, அம்மன்னனின் சிவபக்தியை விளக்கும் ஒரு பாடலாகும். இம்மன்னன் பாடுவதாக அமையும் துதிப்பாடல்களும் இப்பகுதியில் குறிக்கத் தக்கன.

பாவகரிநதிச் சிறப்பு, கௌதமர் பூசித்தது, மாலினிக்கு வேதாள சங்கை தீர்ந்தது, பன்கைக்குன்று வந்தது, சித்திரத் துவசன் சாபந் தீர்ந்தது, சித்திரரூபன் சாபந் தீர்ந்தது ஆகியவை தனித்தனியே விளக்கப் பெறுகின்றன. இத்தலத்திலுள்ள அட்டலிங்கச் சிறப்பும், அட்டதீர்த்தச் சிறப்பும் இறுதியில் கூறப் பெறுகின்றன.

"பதிகளிற் சுழியன் மூதூர்க் கொப்புறு பதிவே றில்லை
நதிகளிற் கடவுட் பாவ கரிக்கிணை ஞாலத் தில்லை
கதிர்மணி யிலிங்கம் பூமி யிலிங்கம்போற் கண்ட தில்லை
மதிமுகத் துணைமா லைக்கு நிகரில்லை வடிவின்
மாதோ". (18)

என இத்தலச் சிறப்பும் தீர்த்தச் சிறப்பும் மூர்த்திச் சிறப்பும் கூறிய சூத முனிவர் இந்த அட்டதீர்த்தச் சருக்கத்துடன் நூல் நிறைவடைந்ததாக ஆசிரியர் முடித்துள்ளார். இதுவரையுள்ள பாடல்கள் தொகை 591 ஆகும்.

இனி இதனையடுத்து, 'காளைபார் காட்சிச் சருக்கம்' என ஒரு சருக்கம். 151 பாடல்களில் வேறொருவரால் பாடப்பெற்று இந்நூலுடன் சேர்த்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அதன் குறிப்பை இப்பதிப்பின் முற்பகுதியிலும் பதிப்பாசிரியர் குறித்துள்ளனர். அவை வருமாறு :

திருச்சுழியலிலே சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள் நாயனாரோடு வந்து சுவாமி தரிசனஞ் செய்து திருப் பதிகம் பாடித் திருமடத்திலெழுந்தருளியிருக்குங் காலத்தில், ஒரு நாள் இரவு, திருமேனிப் பெருமான் திருக்கையிற் பொற்

சென்டுந் திருமுடியிற் சுழியமுமுடனே எங்குமில்லாத் திருவேடமாகக் காளையார் வடிவு கொண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் கனவிலே காட்சி தந்தருளிக் 'கானப்பேர் தாமிருப்பது' என்று சொல்லி மறைந்தருள, உடனே சுவாமிகள் கனவு நனவாக விழித்தெழுந்து, 'எம்பெருமான் திருவருளிருந்தபடியென்னை' என்று பாராட்டித் தாம் கனவிற்கண்ட பேற்றைச் சேரமான் பெருமாள் நாயனாருக்கு உரைத்தருளித் திருமேனிப் பெருமானை வணங்கி அருள்பெற்று, அங்கிருந்தே "தொண்டரடித் தொழலுஞ் சோதியிளம் பிறையும்' என்னுந் திருப்பதிகம் பாடிக் கொண்டு திருக்கானப்பேருருக்கு எழுந்தருளினார்.

திருச்சுழியலிலே சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருமேனிப் பெருமான் காளையராகிக் காட்சி தந்தருளிய தலம் காளையார் கோயில் என்றும், சோதிவனம் என்றும் வழங்குவதாயிற்று. அப்படியே அங்கே காளையார் கோயிலென்னும் ஆலயமும் இருக்கின்றது.

ஆயின் மேற்கூறிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றைத் திருச்சுழியற் புராண நூலாசிரியர் பாடாது விட்டமையால் அதனைப் பாடித் தருகவென்று திருச்சுழியற் பணியாளர்களாகிய ராம. தி. அ. வகையார் அவர்கள் வேண்டிக் கொண்டபடி, யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டைச் சைவப் பிரகாச வித்தியா சாலைப் பிரதிட்டாலகர்களாகிய திருநெல்வேலி வாசிகள் ஸ்ரீமத் அம்பலவாண நாவலரவர்களால் 'காளையார் காட்சிச் சருக்கம்' எனப் பாடி இந்நூல் முடிபிற் சேர்க்கப் பெற்றது.

இவை இப்பதிப்பிலுள்ள முற்குறிப்பாகும். இந்நூலின் பதிப்பாசிரியர் இத்தல புராணத்தில் விடுபட்டுள்ள வரலாறுகளைச் சுட்டிக்காட்டி அவற்றைப் பாடலாக எழுதி ஒரு சருக்கமாகவே சேர்த்திருப்பது தலபுராண வரலாற்றில் குறிக்கத்தக்கதொன்றாகும். தேவாரத் திருமுறைகள் வழியே தலபுராணங்கள் எழுந்தன என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். பெரிய புராணம் கூறும் வரலாறுகளையும், அந்தந்தத் தலங்களில் கூறப் பெறும் வரலாறுகளையும் துணையாகக்கொண்டே தலபுராணங்கள் பல எழுந்துள்ளன என்பதை இந்நூலும் எடுத்துக்காட்டும்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருநாட்டுத்தொகை ஆறாவது திருப்பாட்டு இந்தளப் பண்ணில் அமைந்தது.

"தென்னூர் கைமைத் திருச்சுழியல் திருக்கானப்பேர்
பன்னூர் புக்குறையும் பரமர்க்கிடம் பாய்ஞாலம்
என்னூர் எங்கள்பிரா னுறையுந்திருத் தேவனூர்
பொன்னூர் நாட்டுப் பொன்னூர் புரிசைநாட்டுப்
புரிசையே".

என்னும் இப்பாடலில் அவர் திருச்சுழியலையடுத்துத் திருக்கானப் பேர் சென்றது புலனாகும்.

இந்நிகழ்ச்சியைத் திருக்கானப்பேர் என்னும் காளையார் கோயிற்புராணத்திலும் (சுந்தரமூர்த்திப் படலம். 1—18) காணலாம்.

திருச்சுழியற் புராணத்தின் இறுதியில் சேர்க்கப் பெற்றுள்ள காளையார் காட்சிச் சருக்கத்தில் சுந்தரர் பிறப்பு முதலாக இத் தலம் வந்தது ஈறான வரலாறுகள் கூறப்பெறுகின்றன. சுந்தரர் பாண்டி நாட்டிடைப் பரமர் பதிபலவுஞ் சென்றிறைஞ்சிய செய்திகள் இங்கு விளக்கம் பெறுகின்றன. குற்றாலம், திருநெல்வேலி வந்து ஆரூருக்குத் திரும்பிய பின்னர் மீண்டும் இராமேச்சுரம் வந்து அங்கிருந்து ஈழ மண்டலத்திலுள்ள திருக்கேதீச்சுரம் துதித்தது. பின்பு திருச்சுழியல் வந்தது என இவர்தம் பயண விவரங்களும் இங்கே கூறப்பெறுகின்றன. பிற தலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறித் தலத்தொடர்புகளை விளக்குவதாகவே இப்பகுதி இந்நூலில் சேர்க்கப் பெற்றுள்ளது.

## திருக்குற்றாலத் தலபுராணம்

நெல்லை மாவட்டத்தில் தென்காசிக்கும் செங்கோட்டைக் கும் இடையில் உள்ளது குற்றாலம். இத்தலத்திற்குரிய வேறு பெயர்கள் திரிகூட மலை, திருகூடாசலம் என்பன. இறைவனுக் குரிய ஐந்து சபைகளில் ஒன்றாகிய சித்திரசபை இங்குள்ளது. இங்குத் திருமால் வடிவில் இருந்த மூர்த்தியை அகத்தியர் சிவலிங்கத் திருமேனியாக மாற்றினார் என்பது வரலாறு. இத் தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் பாடியுள்ளார்.

திருக்குற்றாலத் தலபுராணம் மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் அவர்களால் இயற்றப் பெற்றது. இந்நூலில் 32 சருக்கங்களும் 2072 பாடல்களுமுள்ளன. தானவைபவ காண்டம் சிவரகசிய காண்டம் என இரு பெரும் பிரிவுகளாக இந்நூல் அமைந்துள்ளது.

கடவுள் வாழ்த்தினை அடுத்து நூல்வழி கூறுகிறார். சிவபெருமான் உரைத்த பதினெண் புராணங்களுள் சிவபுராணங்கள் பத்தில் காந்தத்தில் உள்ள ஆறு உட்பிரிவுகளுள் சங்கர சங்கிதையாகிய பாற்கடலையும், சனற்குமார சங்கிதையாகிய தேன்கடலையும் தம் உள்ளத்தில் ஒன்றாகக் கலந்து சூதமுனிவர் கூறிய இத்தல புராணத்தைத் தாம் தமிழில் மொழிபெயர்த்து இயற்றியளித் துள்ளதாகக் கூறுகிறார் ஆசிரியர்.

**நூற்பொருள் வகை**

சித்திரா நதி, திருநாடு, திருநகர், புராண வரலாறு, திரிகூட மலை, திருத்தலம், வடவருவி, சிவமதுகங்கை, மூர்த்தி, பராசத்தி குறும்பலா, மந்தமாருதம், தக்கன்வேள்வி, அதன் அழிவு, தேவர்கள் சிவத்துரோகமடைதல், அவர் பாவந் தீர்தல், நரியும் வேடனும் வலம் வருதல், யானைசெய்த பூசை என்னும் பதினெட்டும் பற்றிய சருக்கங்கள் சங்கிர சங்கிதை பற்றித் தானவைபவ காண்டம் என முதற்காண்டமாக வைக்கப் பெற்றுள்ளன.

**சிவரகசிய காண்டம்**

உமை திருவவதாரம், திருமணம், திருமால் சிவனாதல், சிவ பூசை முறை, பாவியாகிய வேடன் கதி பெற்றது, வானவர் வழி பட்டது, குடமுனி வழிபட்டது, வாசுகி தவம்புரிதல், இறைவன் திருநடம், கண்டகசேதனன், கவுற்சன், புட்பகந்தன், தருமசாமி என்போர் கதி பெற்றது. நூற்பயன் என்னும் பதினான்கும் பற்றிய சருக்கங்கள் சனற்குமார சங்கிதையில் உள்ள சிவரகசிய காண்டம் பற்றி இரண்டாம் காண்டமாக இப்புராணத்துள் வைக்கப்பெற்றுள்ளன.

"ஒருமைபெரு சிவநெறியே வடிவ மாக
உபயகாண் டமுங்கருணைப் பார்வை யாக
அருமைதெரி தருசருக்க முறைமை யெல்லாம்
அவயவங்க ளாகமதி யணிந்த பெம்மான்
கருதுசீர்த் தனங்களணி கலன்க ளாகக்
கற்பவர்கேட் பவர்க்கிருமைக் கதியும் வீடுந்
திருவருள்செய் குற்றாலச் சிவபு ராணச்
செல்விகல்வி யுருமகிமை தெரிக்கின் றேனால்". (11)

எனத் திருக்குற்றாலத் தலபுராணத்தை ஒரு செல்வப் பெண்ணாக உருவகித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

இத்தலபுராணமாகிய செல்விக்குத் திருவுரு சிவநெறியே ஆகும்; அவள் இரண்டு காண்டங்களும் அவள் தன் அருள் நிறைந்த கண்களாகும்; சருக்கங்கள் முப்பத்திரண்டும் அவள்தன் அழகும் வனப்புமுள்ள உறுப்புக்கள்; ஆங்காங்கு உள்ள துதிகள் அவள்தன் அணிகலன்கள்; இவ்வாறு கல்வி உருவில் வரும் இப் புராணச் செல்வி தன்னைக் கற்பார்க்கும் கேட்பார்க்கும் இம்மை, மறுமை, வீடு என்னும் உயர்நலன்கள் மூன்றையும் முறையே அருள் செய்வாள் எனவரும் நயம் பாராட்டத்தக்கது.

தேனினுமினிய தீந்தமிழால் குற்றாலத்தின் இயற்கையையும் இறைவனையும் ஒருசேரக் காட்டித் தம் அருமையான வாக்கு களால் பாடிப் பாவலர்க்கும் படிப்போருக்கும் தெவிட்டாத விருந்தாகப் படைக்கின்றார் இந்நூலாசிரியர்.

**தலப் பெருமை**

திருவாரூர், காளத்தி, அருணை, தில்லை, மதுரை, காஞ்சி எனவரும் தலங்களிலெல்லாம் சிறப்பானது இந்தத் திருக் குற்றாலம். இறைவன் நிலையாக வீற்றிருக்கும் தலம் இதுவே என்பர். தலம், தீர்த்தம், மூர்த்தி என்னும் முப்பெரும் பெருமைகளை ஒருங்கே பெற்றது இத்தலமே என்பர்.

"புந்தியுற நினைந்தார்க்கே அருணகிரி
தரிசனைக்கே புலியூர் பேறு
நந்துதவழ் திருவாரூர் பிறந்தார்க்கே
இறந்தார்க்கு நல்குங் காசி
எந்தையார் திருவருளாற் பிறந்தார்க்கும்
இறந்தார்க்கும் எரிகண் டார்க்கும்
சிந்தையுற நினைத்தார்க்கும் அழியாத
கதிகொடுக்குந் திருக்குற்றாலம்".

(தலமகிமைச் சருக்கம், 18)

**வடவருவிப் பெருமை**

"முற்காட்டும் பலதளத்து மூன்றரைக்கோ
டியதீர்த்தம் மூழ்கும் பேறும்
கற்காட்டி யெறிதிரையின் கவின்காட்டிப்
பாவமெலாங் காகம் போலப்
பிற்காட்டி யிரிந்தோடப் பிறவியெனும்
பகையோடப் பெரிதாந் தெய்வ
விற்காட்டுந் திரிகூட வடவருவி
நல்குமென விளம்பும் வேதம்"

(வடவருவிச் சருக்கம், 25)

என இவ்வாறு அருவியின் பெருமை கூறுவர்.

மூர்த்தியின் பெருமை

"அன்னவகை யாலகில தலங்களுக்குங் குற்றால மாதி யாகும்
முன்னமுறை திரிகூட மூர்த்தியே மூர்த்திகளின் மூலமூர்த்தி
இன்னவனைப் பூசிக்கும் பூசையே யனைவருக்கு மேற்கும்
பூசை
மன்னுபுனல் மூட்டில்விடக் கொப்பெலாந் தழைத்தோங்கு
மகிமை போல".
(மூர்த்தி விசேடச் சருக்கம், 17)

எனத் திரிகூடமூர்த்தியின் சிறப்புரைப்பர்.

எனவே,

"சாலைதொறும் எரிவளர்க்கப் புகவேண்டா
தவம்புரிந்து தவிக்க வேண்டா
சோலைநறுஞ் செண்பகஞ்சூழ் சுருதிநிறை
குறும்பலவிற் சோதி நாதன்
ஆலயத்தை நோக்கிவரின் அடிக்கடியோர்
பரிமகப்பே றமையும் ஆங்கண்
மாலயனுக் கரியானை வந்துபரா
வினர்பேறு மதிக்கொ ணாதால்". (18)

திரிகூடமூர்த்தியின் ஆலயத்தை நோக்கி வருவோர், அடிவைக்குந் தோறும் ஒவ்வோர் அடிக்கும் ஒவ்வோர் அசுவமேதப் பயன் தானே அமையும் என்பர்.

இவ்வாறு இந்நூலிலுள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் இனிமையும், நயமும், பொருட்சிறப்பும் கொண்டு விளங்குகின்றன. திரிபு, யமகம், மடக்கு, சிலேடை, முரண் முதலிய அணிகளும், வருணனைகளும் சிவாகம விதிகளும், தத்துவங்களும், சமய அறக்கூறுபாடுகளும், உலகியல் இன்பப் பொருள்நலன்களும் என ஒரு இலக்கியச் சுரங்கம் போலவே இத்தலபுராணம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

18ஆம் நூற்றாண்டில் திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றிய இத்திருக்குற்றாலத் தலபுராணம் பல பதிப்புகளாக அச்சில் வெளிவந்துள்ளது.

பழையநூல்

கி.பி. 1595 இல் காசிநாடன் என்பார் இயற்றிய திருக்குற்றாலப் புராணம் என்னும் நூல் அண்மையில் கிடைத்துள்ளது. திரு மு. கோ. ராமன் அவர்கள் இப்புராணத்தைப்

பதிப்பித்து வருகின்றனர். நூல் விரைவில் வெளிவரவிருக்கிறது. வெளிவந்தவுடன் பழைய நூலினை இந்நூலுடன் ஒப்பிட்டறியலாம்.

**வேணுவனப் புராணம்**

வேணுவனம் என்பது திருநெல்வேலி. வேதசர்மா என்னும் அந்தணர் சிவபெருமானின் திருவமுதுக்காக நெல் உலர வைத்திருந்தபோது, மழை வெள்ளம் வந்து அந்த நெல்லை அடித்துக்கொண்டு போகாதபடி சிவபெருமான் வேலியிட்டுக் காத்தார். அதனால் நெல்வேலி என்னும் பெயர் ஏற்பட்டது. இன்றும் இத்திருவூரைச் சுற்றி நெற்கழனி வேலியாக அமைந்துள்ளது.

பாற்குடம் சுமந்து சென்ற அன்பராகிய முழுதுங்கண்டராமக்கோன் என்பவரை இறைவன் மூங்கில் வடிவமாக இருந்து இடறச் செய்து பாலைத் தன் மீது கவிழச்செய்து, அதனால் வெட்டுண்டு, காட்சி தந்தருளியதால் இத்தல இறைவருக்கு வேணுவனநாதர் என்று பெயர் கூறுவர்.

வேணுவனம், நெல்வேலி, நெல்லூர், சாலிவேலி, சாலிவாடி, சாலிநகர், பிரமவிருந்தபுரம், தாருகாவனம் எனப் பெயர்கள் கொண்டது இத்தலம். சம்பந்தர் பாடல் பெற்ற திருத்தலம்.

இத்தலத்திற்குரியதாக விளங்கும் வேணுவனப் புராணம் நிரம்ப அழகிய தேசிகர் அவர்களால் பதினாறாம் நூற்றாண்டில் இயற்றப் பெற்றது. இப்புராணம் 9 சருக்கங்களும் 454 பாடல்களும் கொண்டது. ஆசிரியர் சேது புராணம் பாடுமுன் இதைப் பாடியிருக்கலாம் என்பர்.

இந்நூலாசிரியர், திருப்பரங்கிரிப் புராணத்தில் கற்பக விநாயகர் துதியாகப் பாடியுள்ள 'வஞ்சகத்தி லொன்றானை' என்ற பாடலில் ஆனை ஆனை என்ற முடிபுடன் உள்ளது போன்றே இவ்வேணுவனப் புராணத்திலும் மாணிக்கவாசகர் துதியில் பாடுகிறார்.

''அரித்தானை அடியர்பவம் அழித்தானை
உரித்தானை அடர்ந்த வேளை
எரித்தானைப் புரமெரியச் சிரித்தானை
தரித்தானை எவையும் ஆன

பரித்தானைத் தனியுலகம் பரித்தாளும்
பாண்டியற்குப் பாரித் தானைத்
தரித்தானை மனத்தினராம் மாணிக்க
வாசகர்தாள் தலைமேற் கொள்வாம்".

திருப்பரங்கிரிப் புராணத்தில் இந்நூலாசிரியர் சிவமறை யோர் வணக்கம் சொல்வது போன்றே இப்புராணத்திலும் ஆதிசைவருக்கு வணக்கம் கூறித் தனியே பாடுகிறார்.

"மூண்டபெருந் திருவருளால் அளப்பரிய சிவாகமங்கள்
முழுது மோர்ந்து
பூண்டபெருந் தொண்டினுடன் தமிழ்த்தெய்வப்
புகழ்ந்து நின்று [பாண்டியனார்
வேண்டவளர்ந் தருள்நெல்லை நாதர்திரு மேனிதனை
வியந்து நாளும்
தீண்டியருச் சனைபுரியும் சிவமறையோர் சரணமலர்
சிந்தை செய்வாம்

என்னும் இப்பாடலில் ஆதிசைவருக்கு வணக்கம் கூறுமிடத்து, வரகுணராமன், வரதுங்கராமன், அதிவீரராமன் ஆகிய மூவருக்கும் குருவாயிருந்த அகோரசிவம், ஈசானசிவம், சுவாமி தேவர் ஆகிய மூன்று சிவாசாரியர்களையே குறிப்பிடக் காணலாம். அக்காலத்தில் நெல்லையில் ஆட்சி செய்த தென் காசிப் பாண்டியரிடமும் இவர் மதிப்புமிக்கவர் எனத் தெரிகின்றது.

இதே போன்று, இவருடைய சேதுபுராணத்தில் அமைந்தது போன்றே இந்த வேணுவனப் புராணத்திலும் சருக்கந்தோறும் இறுதிப் பாடலில் பல சுருதி கூறுகிறார். பல சந்தப் பாடல்களை அமைக்கின்றார்.

இத்தலபுராணத்தில், அகத்தியர் தலப்பயணம் மேற்கொள் வதாகக் கூறும் பகுதி சுவைமிக்கது. அகத்தியர் வரும்போது பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு வருகிறார். விந்தமலை, கவுடேசுரம், கௌதமக்கரை, பருப்பதம், காளத்தி, கச்சி, சோணகிரி, முதுகுன்று, புலியூராகிய தில்லை, காவிரிக்கரை, இடமருது, குடந்தை, பஞ்சநதி, ஆரூர். வேதவனம், தென்மதுரை, சண்பக வனமாகிய குற்றாலம், மலயகிரி என இப்படிச் சொல்லிவரும்போது ஆரூர் என்று கூறுமிடத்து 'எங்கள் கமலாலயம்' என்றே கூறுகிறார் ஆசிரியர். கமலை

ஞானப்பிரகாசர் அவர்களின் மாணாக்கராக விளங்கியவர் இவர் ஆதலால் இவ்வாறு கூறினார் என்பர். இந்நூலை இவரே இயற்றினார் என்பதற்கு இதுவும் ஒரு காரணமாகக் கூறுவர்.

இனிய எளிய நடையில் இயற்றப் பெற்றுள்ள இப்புராணத்தில் போற்றி, சரணம் என்ற முடிபுகளையுடைய துதிப்பாடல்கள் பல உள்ளன.

"ஏலக்குழல் நீள்வரை மாதுடனே
என்கண்கள் களித்திட இன்பமணக்
கோலத்துட னேயுடன் மேவுமணக்
கோலத்தவனே சரணம் சரணம்
ஞாலத்தின் மயக்க மொழிந்தனையே
நாடிப் பரவித் தேடித்திரியும்
சீலத்தவர் கட்குவெளிப் படுமெய்ச்
சீலத்தவனே சரணம் சரணம்".

என இவர் நெல்லையப்பரைப் போற்றிப் பாடும் பாடல்கள் பல சிறப்புடையன.

1914ஆம் ஆண்டில் திரு மு. ரா. அருணாசலக் கவிராயர் அவர்கள் குறிப்புரையுடன் இவ்வேணுவனப் புராணம் அச்சிடப் பெற்றுள்ளது. அதில் நூலாசிரியர் பெயர் குறிப்பிடப் பெற வில்லை.

### திருநெல்வேலித் தலபுராணம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிராச நெல்லையப்பன் கவிராயர் என்பவர் திருநெல்வேலித் தலம் பற்றி இயற்றியதே இத்தலபுராணம். 120 படலங்களையும் 6892 செய்யுட்களையுமுடைய இப்புராணமே தமிழிலுள்ள தலபுராண நூல்களுள் மிக நீண்ட, பெரிய புராணமுமாகும். இதற்குமுன் இத்தலம் பற்றி எழுந்ததே வேணுவனப்புராணம்.

மேற்கூறிய நூல்கள் யாவும் பாண்டிநாட்டில் மூவர் பாடல் பெற்ற தலங்களுக்குரிய தலபுராணங்கள் ஆகும்.

### திருவாசகத் தலங்கள்

மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் இடம்பெற்றுள்ள தலங்கள் ஏழினுள் இரண்டு பாண்டிய நாட்டில் உள்ளவை. அவை, திருப்பெருந்துறை, உத்தர கோசமங்கை என்பன. இந்த

இரண்டு தலங்களுக்கும் தலபுராணங்கள் தோன்றியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருவாசகத்திலுள்ள 51 பகுதிகளுள் 20 பகுதிகள் (சிவ புராணம், திருச்சதகம் திருப்பள்ளியெழுச்சி, செந்திலாப்பத்து, அடைக்கலப்பத்து, ஆசைப்பத்து, அதிசயப்பத்து, புணர்ச்சிப் பத்து, வாழாப் பத்து, அருட்பத்து, பிரார்த்தனைப் பத்து, குழைத்த பத்து, உயிருண்ணிப் பத்து, பாண்டிப்பதிகம், திருவேசறவு, அற்புதப்பத்து, சென்னிப்பத்து, திருவார்த்தை, திருவெண்பா, பண்டாய நான்மறை) திருப்பெருந்துறையில் பாடப் பெற்றவை.

திருவாசகத்திலுள்ள நீத்தல் விண்ணப்பம் உத்தரகோச மங்கை என்னும் தலத்தில் பாடப் பெற்றதாகும்.

**திருப்பெருந்துறைப் புராணம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கிக்குப் பக்கத்தி லுள்ளது திருப்பெருந்துறை. இத்தலம் ஆவுடையார்கோவில் என்று இன்று வழங்குகிறது. ஊர்-பெருந்துறை, கோயில்-ஆவுடையார்கோயில். கோயிற் பெயரே ஊருக்குப் பெயராக வழங்குகிறது.

இதற்கு, அநாதிமூர்த்தஸ்தலம், ஆதிகைலாசம், ஆளுடை யார் கோயில், ஆவுடையார் கோயில், உபதேசஸ்தலம் குந்தவனம் அல்லது குருந்தவனம், சதுர்வேதிபுரம், சிவபுரம், ஞானபுரம், திரிமூர்த்திபுரம், தென்கைலை, தேசுவனம், பராசக்திபுரம், பவித்திரமாணிக்கம், பூலோக கைலாசம் அல்லது பூகைலாசம், யோகபீடபுரம், யோகவனம் எனப் பல திருநாமங்கள் உள்ளன.

காந்த முதலிய மகாபுராணங்கள், சிவரகசியம், மணி வாக்கிய சரித்திரம் அல்லது மணி வசன மாகாத்மியம், ஸ்ரீ ஹாலாஸ்ய மாகாத்மியம் ஆகிய இவற்றுள்ளும், வேறு தலபுராணங்களுள்ளும் இத்தலத்தின் பெருமைகள் பெரிதும் பாராட்டப்படுகின்றன.

உருவம், அருவம், அருவுருவமென்னும் மூவகைத் திருமேனி களுள்ளே சிவபெருமான், அம்மையுடன் அருவத் திருமேனி கொண்டு எழுந்தருளி விளங்குவது இந்தத் திருப்பதியிலேயே யாம்.

பிரம்மா முதலியவர்களுக்கும், திருவாதவூரடிகளுக்கும் பரமசிவன் குருமூர்த்தியாய்க் காட்சி கொடுத்து உபதேசித்தருளினமையாலும் திருவாதவூரடிகளைப் பாதுகாத்தற் பொருட்டுப் பாண்டியன் முன்னிலையில் கருணைக் கடலாகிய எம்பெருமான் வேதமாகிய குதிரை மீது எழுந்தருளினமையாலும் அறுபத்துநான்கு மூர்த்தங்களுள், குருமூர்த்தத்திற்கும் அசுவாரூட மூர்த்தத்திற்கும் மூலமாகிய தலம் இதுவென்று கூறுவர்.

இதன் பழைய வரலாற்றைத் தெரிவிக்கும் புராணங்கள் வடமொழியில் ஸ்ரீஆதிகைலாச மாகாத்மியம் பிருஹத்தீர்த்த மாகாத்மியம், அஷ்டாத்தியாயி என மூன்று உள்ளன என்பர்.

தமிழில் இத்தலம் பற்றி மூன்று பழைய புராணங்கள் உள்ளன. அவை 1. திருப்பெருந்துறைப்புராணம் - இது சாத்திரம் சாமிநாத முனிவரால் இயற்றப் பெற்றது. 33 சருக்கங்கள், 1270 செய்யுட்கள் கொண்டது. (இவரே 2600 பாடலுள்ள திருவாவடுதுறைப் புராணம் ஒன்றும் இயற்றியதாகத் தெரிகிறது.) 2. ஆதிகைலாய மீான்மியம் - இது சுந்தரலிங்க முனிவரால் இயற்றப்பெற்றது. 59 சருக்கங்கள், 2080 செய்யுட்கள் கொண்டது. 3. திருப்பெருந்துறைப் புராணம் - இது செய்யப் பெற்ற கால சகாப்தம் 1550 என்பது மட்டும் தெரிகிறது. 8 அத்தியாயங்கள், 850 செய்யுட்கள் கொண்டது. ஆசிரியர் போன்ற பிறவிவரங்கள் தெரியவில்லை.

இவை மூன்றுமல்லாமல் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இத்தலம் பற்றி ஒரு புராணம் பாடியுள்ளனர். திருப்பெருந்துறைப் புராணம் என்னும் இப்புராணம் 32 படலங்களும் 1656 செய்யுட்களும் கொண்டதாகும். இதனை ஆக்குவித்த ஸ்ரீசுப்பிரமணிய முனிவர் கட்டளையின்படி நாட்டுச் சிறப்பு முதலியவற்றை வளம்பெற அமைத்து, சாத்திரம் சாமிநாத முனிவர் இயற்றிய புராணத்தின் சொன்னடை, பொருணடை முதலியவற்றைத் தழுவியே இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. பல புராணங்களை இயற்றிய பின்பே பிள்ளையவர்கள் இந்நூலை இயற்றினாராதலின், இது மிகச் சிறப்பாக அமைந்துள்ளதைக் காணலாம்.

இதிலுள்ள திருவாதவூரடிகளின் சரித்திரப்பகுதிகளுள் ஒன்றை டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் படித்துக்

கொண்டிருக்கையில் உடனிருந்த தமிழ்க் கவிஞர் ஒருவர் இதன் செய்யுட்களைப் பெரியபுராணச் செய்யுட்களென்றே எண்ணிப் பாராட்டிப் பின்பு தெரிந்து வியந்தனர் என்பதாக ஐயரவர்கள் இந்நூலின் முகவுரையில் குறிப்பிட்டுப் பதிப்பித்திருக்கக் காணலாம்.

ஆக இத்தலத்திற்கு 4 தலபுராணங்கள் பாடப்பெற்றுள்ளதை அறியலாம்.

**திருப்பெருந்துறைப் புராணம் (ஆதிகைலாய மான்மியம்)**

சுந்தரலிங்க முனிவர் இயற்றிய இப்புராணம் 1976 ஆம் ஆண்டில் தஞ்சை சரசுவதி மகால் வெளியீடாக அச்சாகியுள்ளது.

இப்புராணம் கடவுள் வாழ்த்து முதலாக 58 சருக்கங்களையுடையதாக 1948 செய்யுட்களைக் கொண்டுள்ளது. செம்மையாகக் கிடைத்த பாடல்களே பதிப்பிக்கப் பெற்றுள்ளன. மூலச் சுவடி முகப்பு அட்டவணையில் பத்தாவதாகத் தேவிக்கு நாரதர் சிவபுர மகிமை யுரைத்த சருக்கம் என 94 பாடல் கொண்ட ஒரு சருக்கம் குறிக்கப் பெற்றுள்ளது. அது முற்றிலும் காணப்பெறவில்லை. அண்டகோசச் சருக்கத்தில் 28 பாடல்களுக்கு மேல் இல்லை. கிடைத்தவரையே அச்சிட்டுள்ளனர்.

இந்நூலில் இத்தலத்திற்குரிய பெயர்க் காரணங்கள் பல விளக்கப் பெறுகின்றன. இத்தலம் கிரேதாயுகத்தில் தோன்றிப் பிரமனால் பூசிக்கப் பெற்றுப் பின் பிரமன் யாககுண்டத்தில் தோன்றிய ருட்சாயணர் முதலிய முனிவர்களால் பூசனை பெற்று யுகந்தொறும் திகழ்வதாக யுகம் நான்கிலும் பூசிப்போர் நாமத்திரயமுரைத்த சருக்கத்திலும் பிற இடங்களிலும் விளக்கப் பெறுகின்றன.

இங்கு அக்கினி தீர்த்தம் முதலாய அறுபத்தாறு கோடி தீர்த்தம் உள்ளதாகக் கூறுவர். இவற்றுள் இருபது தீர்த்தங்களின் வரலாறுகள் இந்நூலில் விரித்துக் கூறப்பெற்றுள்ளன. சைவ சமய நூற்கருத்துக்களும் தத்துவ நூற் கருத்துக்களும் இந்நூலுள் மிகுதியாகவுள்ளன.

பாண்டி நாட்டிலுள்ள தேவாரம் பெற்ற பதினான்கு திருத்தலங்களையும் அவற்றின் சிறப்புக்கள் தோன்ற ஏழு பாடல்களில் அமைத்து இந்நூலாசிரியர் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவை வருமாறு :

"அறுபத்து நான்கு திருவிளையாடல் அரன்புரியும்
மறுவற்ற மதுரையும் பொன்னை யாள்முத் தியவரதர்
உறுமிக்க பூவணமும் உக்கிரபாண்டியும் வேளைப்
பெறுமுக்கண் ணாயகர்வாழ் பெரிய திருப் பரங்கிரியும்

திருஞான சம்பந்தர் எழுதியிட்ட திருப்பதிகம்
மருவுவைகைப் புனலிலெதிர் ஏறியிட வரவழைத்துப்
பொருளிதுவே எனக்காட்டும் புனிதருறு மேடகமும்
பெருகுபிர ளயத்தையுள்வாங் கியகூழியற் பெருநகரும்

குறுமுனிகை யாலரியைக் குறுகு குறு கெனவழுத்தி
மறுவறுநற் சிவனாக்கி வைத்தகுற்றா லப்பதியும்
பெருமழுதிற் கலருநெல்லைப் பெய்யுமழை நனைக்காமல்
உறுதியன்பர்க் காய்க்காத்த தொரு நெல்வே லிப்பதியும்

வன்றொண்டர்க் கெதிர்போய்நின் றெமைப்பாட
வாவென்று
மின்றிகழ்பூச் செண்டறுகை விடலையுரு வாயழைத்த
கன்றுருமான் மழுவேந்தும் காளைதிருக் காலையும்நற்
பொன்றிகழ்செஞ் சடையர்வயி ரவர்க்கருள்செய் புத்தூரும்.

அறம்பருத்திக் கிறைக்குழ ரதிலிருப்ப தாகாதென்
றுறும்பரன்வை கைக்குவடக் குறுமாப்ப ஊரு மிகு
மறுவறுநற் பூதபவு டிகவந்த மாணலிங்கக்
குறிகொ டரனருள்செய் திருந்ததிருக் கொடுங்குன்றும்

பழம்பதிநா யகர்வாழும் புனவாயிற் பதியும்நலம்
வழங்குதிரு ரெகுராமர் வானரசே னைகளொடுபோய்
முழங்குகுரல் தசமுகரா வணன்முடிபத் தறுத்தபழி
அழிந்திடநற் சிவலிங்கார்ச் சனைபுரிரா மீச்சரமும்.

கோட்டுமலர்த் தருக்குலத்தைக் குமைப்பதுகண் டொரு
முனிவன்
ஆட்டுமுகத் தோடுதந்தி யாகமுமா குகவென்று
வாட்டமுற விடுஞ்சாபம் வாருணிக்கு மாற்றியருள்
நாட்டுமன மேவுதிரு வாடானை நகருமென.

"தேவாரத் திருப்பதிகம் சேர்ந்ததலம் பதினான்காம்
ஓவாவிப் பதிகளல துற்றிடுநற் றலம்வெகுவாம்
பூவார்தின் புயவேந்தாம் புகழ்வழுதி நாட்டுவளம்
நாவான தாயிரம்கொண் டிடினுநவின் றிடலரிதே".

(திருநாட்டுச் சிறப்பு, பா. 35-42)

**திருப்பெருந்துறைப் புராணம் (வேறு)**

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய இப்புராணத்தில் 27 செய்யுட்களடங்கிய கடவுள் வாழ்த்தும், அவையடக்கமும் சிறப்புப் பாயிரமும், பின்னர் திருநாட்டுப்படலம் முதலிய 32 படல உறுப்புக்களும் உள்ளன. மொத்தம் 1656 பாடல்கள் உள்ளன.

"இருவினை சிமிழ்க்க யாத்தல் எய்திமேற் குங்கி முக்கும்
மருவவே றியுமி ழிந்தும் வருந்துபல் பவத்தி னுள்ளும்
ஒருபவ மேனு மெய்தா தானந்த முற்று வாழ்வான்
திருவளர் வாத வூரர் சேவடி சேர்ந்து ளோமே"

என்னும் மாணிக்கவாசகர் வணக்கத்துடன் திருநாட்டுப் படலத்தைத் தொடங்குகின்றார். பாண்டிநாட்டு வளம் 121 பாடல்களில் உரைக்கப்படுகிறது.

"கூட்ட வல்லது பல்வகைக் குடியையுங் கூட்டி
ஊட்ட வல்லது பலவகைப் போகமு மூட்டிக்
காட்ட வல்லது புண்ணியப் பொருளினைக் காட்டி
நாட்ட வல்லது கயிலையிற் பெருந்துறை நகரம்" (2)

எனத் திருப்பெருந்துறை நகரின் சிறப்பை 122 பாடல்களில் விரித்துரைப்பர்.

புராணச் சிறப்புரைத்த பின்னர், புரூரவா தவுமியரை யடைந்தது முதலான படலங்கள் அமைகின்றன. இடையே பெருந்துறை விசேடப் படலம், பெருந்துறைப்படலம் போன்றவை இத்தலச் சிறப்பைக் கூறுவன.

திருவாதவூரர் திருவவதாரம் தொடங்கி, அவர் அமைச்சுரிமை பூண்டது, திருப்பெருந்துறை அடைந்தது, உபதேசம் பெற்றது, மதுரையை யடைந்தது, விடைபெற்றது. தில்லையை யடைந்தது போன்றவை தனித்தனியே விளக்கப் பெறுகின்றன.

"புண்ணியமார் பெருந்துறைப்பு ராணத்தோர் கவிகற்றோர்
திண்ணியவால் பெருஞ்சைவ சித்தாந்தச் செல்வராய்
அண்ணியசித் தாந்தசைவம் அடைந்தின்ப நிலைபெறுவார்
நண்ணியமுற் றுந்தெரிவார் நலமுரைக்க வல்லவரியார்".

தூயவள மோங்குபெருந் துறைப்புரா ணம்பொறித்த
நேயமலி புத்தகமோர் சிறுமனைவாய் நிலைபெறினும்
ஆயமனை பெருமனையாய் அளப்பரிய திருவடையும்
ஏயபுன்றே வம்மனையூர் எல்லையினு முறாதன்றே';

எனவரும் நைமிச முனிவர் பூசித்த படலத்துப் பாடல்களுடன் (54, 55) நூல் நிறைவடைகிறது.

இத்தலம் பற்றிக் கிடைக்கும் மேற்கூறிய இரண்டு புராணங்களுள் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் நூல் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. அவருக்கேயுரிய கவிநயமும், இத்தல இறைவன் மீது இவர் கொண்டிருந்த ஈடுபாடும் இந்நூலால் நன்கு விளங்கும்.

**திருஉத்தரகோசமங்கைத் தலபுராணம்**

இராமநாதபுரம் சமத்தானத் தேவத்தானத்திற்குரிய திருக்கோயில் திருஉத்தரகோச மங்கை. மதுரையிலிருந்து இராமநாதபுரம் செல்லும் வழியிலுள்ள தலம். திருவாசகத்தில் சுமார் 38 இடங்களில் இத்தலம் புகழ்ந்து பாடப் பெற்றுள்ளது.

உத்தரம்—உபதேசம்; கோசம்—ரகசியம்; மங்கை—பார்வதி. பார்வதி தேவிக்கு இறைவன் வேதாகமங்களின் ரகசியங்களை உபதேசித்தமையால் இத்தலம் உத்தரகோச மங்கை என்னும் பெயர் பெற்றது என்பர்.

மாணிக்கவாசகருக்கு உருவக்காட்சி தந்த சிறப்புடைய இத்தலத்தில் வேத வியாசர், காகபுசுண்டரிசி, மிருகண்டு முனிவர், வாணாசுரன், மயன் போன்றோர் வழிபட்டுப் பேறு பெற்றதாகக் கூறுவர்.

தட்சிண கயிலாயம், பத்ரிகாரண்யம் (இலந்தைவனம்), வியாக்ரபுரம், ஆதி சிதம்பரம், பிரமபுரம், சதுர்வேதபுரி, மங்களபுரி முதலியன இத்தலத்திற்குரிய வேறு பெயர்கள்.

அம்பிகை இத்தலத்தில் இறைவனிடம் ஞானோபதேசம் பெற்ற பின்னர், இருவரும் மதுரை சேர்ந்ததாகத் திருவிளையாடற்புராணம் வலைவீசின படலத்துள்ளும் (62, 63, 64 ஆம் பாடல்கள்) குறிப்பிடக் காணலாம். இராமாயண இதிகாச காலத்திலிருந்தே இத்தலம் மிகப் பழமைச் சிறப்புடையது என்றும் கூறுவர்.

இந்நூலாசிரியரின் பெயர், காலம் போன்ற விவரங்கள் அறியக் கூடவில்லை.

பாயிரத்தையடுத்து தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றின் சிறப்பினைக் கூறுகின்றார் இந்நூலாசிரியர். வேதமித்திரன் சுவர்க்கம் அடைந்த அத்தியாயம் முதலாக, கந்தருவ கன்னியர் பிரமசாபந்தீர்ந்தது, ஐந்தெழுத்துரைப்போர் விபூதிருத்திராட்சந் தரிப்போர் பேறு உரைத்தல், தீர்த்தச் சிறப்பு, அரித்துவசன்சாபந் தீர்ந்தது, நளச்சக்கரவர்த்தி கலி விமோசனமானது; மங்கலபுரி சதுர்வேதபுரியானது முதலான பல சரிதைகள், பார்பதி தவம் புரிந்தது, மணம் புரிந்தது, பிருகு சாபந்தீர்த்தது, வலை விசியது ஆகிய வரலாறுகள் இப்புராணத்தில் தனித்தனியே விளக்கப் பெறுகின்றன.

இந்தத் திருவுத்தரகோச மங்கைக்குத் திரு பொன்னம்பல வாணத் தம்பிரான் (16 ஆம் நூ.) என்பவர் ஒரு தலபுராணம் பாடியுள்ளதாக அறிகிறோம். அவரும் இந்நூலாசிரியரும் ஒருவரா என்பது தெரியவில்லை.

வியாக்ரபுர புராணம் என்னும் தில்லைப்புராணம் என்ற பெயரில் வைத்திய நாத முனிவர் இயற்றியதாக டாக்டர் உ.வே.சா. நூலகத்தில் ஒரு புராணம் உள்ளது. இந்நூலும் இன்னும் அச்சாகவில்லை.

**வைணவ தல புராணங்கள்**

பாண்டிய நாட்டில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திருமால் திருப்பதிகள் 18. அவை, திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி), திருக்குளந்தை (பெருங்குளம்), திருக்குறுங் குடி, திருக்கூடல் (மதுரை), திருக்கோட்டியூர்) திருக்கோவலூர், சிரீவரமங்கலநகர் (வானமாமலை), திருத்தண்கால், திருத் தொல்லைவில்லி மங்கலம், திருப்புல்லாணி, திருப்புளிங்குடி, திருப்பேரை, திருமாலிருஞ்சோலை, திருமெய்யம், திருமோகூர், திருவரகுணமங்கை, திருவில்லிபுத்தூர்). திருவைகுண்டம் (ஸ்ரீவைகுண்டம்) என்பன,

இவற்றுள் திருக்குருகூர், திருக்கூடல், திருவில்லிப்புத்தூர் ஆகிய தலங்களுக்குரிய தலபுராணங்களே செய்யுள் நடையில் கிடைக்கின்றன. மற்ற தலங்களுக்கு உரைநடைப் புராண நூல்கள் கிடைக்கின்றன. அவற்றிற்கும் தலபுராணங்கள் இருந் திருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது.

**கூடற்புராணம்**

திருமால் தலங்கள் ஒரு நூற்றெட்டுள், செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் தலைநகராய கூடலென்னும் தென்மதுரையும் ஒன்றென்று கூறுவர். இக்கூடற்பதியின் பெருமைகளையும் திருமாலின் பெருமைகளையும் ஒருங்கே சிறப்பித்துக் கூறுவது கூடற்புராணம் ஆகும். இதை இயற்றினார் வரலாறு, பெயர் பற்றி யாதும் அறிய இயலவில்லை. பதினாறாம் நூற்றாண்டில் இந்நூல் பாடப்பெற்றது எனத் தெரிகிறது.

கிருதகாண்டம், திரேதகாண்டம், துவாபரகாண்டம், கலிகாண்டம் என்னும் நான்கு பெரும் பிரிவுகளும், அவை ஒவ்வொன்றிலு மவ்வவ் வூழிக்குரியனவாய் இத்தலத்தில் நிகழ்ந்த அரிய செய்திகளை விரியக் கூறும் பல படலங்களும் இதில் உள்ளன. இதில் மொத்தம் 758 செய்யுட்கள் உள்ளன.

வடமொழியிற் பிருமாண்ட புராணத்து மதுரைத் தலமான்மியம் உரைக்கும் பகுதியின் வழியே இது எழுதப் பெற்றுள்ளது. இதில், திருமால், ஈசனுக்குத் திருமண முடித்ததும், காசிபன் முதலாயினார்க்கு வரமளித்ததும், பிருது மன்னனாற் பூசிக்கப் பெற்றதும், காலநேமியை வதைத்ததும், புலத்தியனுக்குப் புதல்வரையளித்ததும். அம்பரீடனுக்கு அருள் புரிந்ததும், ஊர்வசியின் சாபம் நீக்கியதும், மலையத்துவசன் முதலியோரால் வழிபாடு பெற்றதும், பட்டர்பிரான் மெய்ப் பொருள் கூறிப் பொற்கிழி பெறுமாறருளியதும் ஆகிய வரலாறுகள் விரிவாயுரைக்கப் பெற்றுள்ளன. அன்றியும், மதுரையைச் சூழ்ந்துள்ள சில தலம், மலை, தீர்த்தங்களின் தெய்வத் தன்மையும் இந்நூலுள் கூறப் பெற்றுள்ளன.

கடவுள் வணக்கப் பகுதியும் திருமாலுடன் சேனைத் தலைவர், பெரிய திருவடி, அனுமன், ஐம்படைகள், பரம பாகவதர், பெரியாழ்வார், கோதை, மதுரவல்லித்தாயார், பத்து அவதாரங்கள், பன்னிரு ஆழ்வார், எம்பெருமானார் ஆகியோரையும் வணங்குகிறார் ஆசிரியர். இங்கு அண்டகோளத் தார் என்னும் பாடலைத் தரித்தவருடைய தாளைப் போற்று கிறார்.

"அண்ட கோளத் தாரென்னும் ஆரியத் தமிழா லன்று
தண்டமிழ்ச் சங்கம் வென்ற சடகோபர் தாமே சிற்பங்

கண்டதோர் வடிவாற் பேசத் திரைப்புறத் திருந்திக் காலத்
துண்டெனப் பதின்மர் பாட லுத்தரித் தவர்தாள் போற்றி'.
(13)

'அண்டகோளத்தார் என்னும் ஆரியத்தமிழ்' என்றது, பதினேழு அடி கொண்ட ஓர் ஆசிரியப்பாவினை மதுரைச் சங்கத்தாருக்கு நம்மாழ்வார் அனுப்பிப் பொருள் காணச் சொன்னதும், அவர்கள் பொருள் காணமாட்டாது விழித்தார்கள் என்றதுமான ஒரு கதையைக் குறித்ததாகும்.

அவையடக்கத்தை யடுத்துப் புராண வரலாறு கூறுகிறார். இது நூலுக்குப் பதிகமாக அமைந்துள்ளது. வடமொழியில் பிரமாண்ட புராணத்துள் சேத்திர மான்மிய காண்டத்தில் 92-93 கதைகளாக உள்ள 12 அத்தியாயங்களில் உள்ளதைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளதாகவும் கூறுவர். (பா. 1-4)

இந்நூல் சிறந்த காப்பியமாகப் படைக்கப் பெற்றதென்பதை ஆற்றுப்படலத்திலேயே காட்டுகிறார் ஆசிரியர். திரிபு, யமகமாக இருபது பாடல்களுக்கு மேல் இப்படலத்தில் உள்ளன. காட்டாக,

"ஆக மாக வளாகங் கலக்குமே
யாக மாக வளாகங் கலக்குமே
நாக நாக மைநாகம் புரையுமே
னாக நாக மைநாகம் புரையுமே." (17)

"காலை யேநிகர் போவதுங் காலையே
மாலை யேயென நாறலு மாலையே
சேலை யேறலை விந்ைதன் சேலையே
பாலை யேய்வன பாலை வன்பாலையே". (23)

போன்ற பாடல்கள் குறிப்பிடத்தக்கன. ஆறு என்பது இங்கு வையை, இது வேகவதி, வையை, கிருதமாலை என்று முப்பெயர் பெற்றதென்று ஆசிரியர் காட்டுகிறார்.

"வேக மாதலில் வேக வதியென்றும்
மாகம் வாய்த்ததனால் வையை யென்றும்தார்
ஆகலாற் கிருத மாலை யாமென்றும்
நாகர் முப்பெயர் நாட்டும் நதியரோ". (38)

நாட்டுப் படலமும் நகரப்படலமும் எங்கும் பெருங்காப்பியம் போலவே சொல் தொடையும் பொருள் தொடையும் அமையப்

பாடுகிறார் ஆசிரியர். முதலாவது கிருத காண்டம் முழுவதும் இயற்கை வருணனைகள் கூறக்காணலாம். பாண்டி நாட்டில் இந்நகரின் ஈசனுக்கும் இமய மகளுக்கும் தாம் மணம் முடிப்பதற் காக வந்த செய்தியைத் திருமால் இங்கே கூறுகிறார். திருமணம் நிகழ்கிறது. காசிபன் சக்கர தீர்த்தக் கரையில் தவம் புரிகிறான்.

"பேரா யிரமோ பிரமமோ எவ்வெ வைக்கும்
வேராய காரணமோ மேனித் தனிப்பொருளோ
பாரா யணமறைகள் பார்த்துணருந் தொல்லுருவோ
நாரா யணவோ நமோநமோ உன்னடிக்கே" (22)

எனக் காசிபன் வணங்கித் துதிப்பதாக வரும் பாடல்கள் வைணவ சமயப் பொருளை விரித்துரைக்கின்றன.

இரண்டாவது திரேத காண்டத்தில், பிருதுச் சக்கரவர்த்தி பூசித்து வரம் பெற்றது, காலநேமியை வதைத்தது, போர் வருணனை போன்றவற்றைக் காணலாம்.

மூன்றாவது துவாபர காண்டத்தில், முதலில் அத்திகிரிப் படலத்தில் யானை மலைக்கதை அமைகின்றது. இம்மலையில் ரோமச முனிவன் முன்தோன்றிய நரசிங்கத்தின் உக்கிரம் தணி யாமையால், தேவர் சரபமூர்த்தியை ஏவிஉக்கிரம் தணிக்குமாறு செய்ய, நரசிங்கம் சரபத்தை வென்று பின் தானே சாந்த மடைந்த வரலாறு கூறப்பெறுகின்றது. அடுத்து அம்பரீடன் மதுரையில் வந்து திருமாலைப் பணிந்து முத்திபெற்ற வரலாறு கூறுவர்.

நான்காவதாக அமைவது கலிகாண்டம். இதில் தேவசபை யில் உருவசி சாபம் பெற்றுப் பூவுலகு அடைந்து புரூரவனை மணந்து வாழ்ந்து பின் சாபம் நீங்கித் தேவருலகடைதல்; மலயத்துவசன் தவம் செய்து தடாதகையைப் பெண்ணாகப் பெறுதல், தடாதகை அரசாள, மலயத்துவசன் முத்தி பெறுதல்; சீவல்லவ பாண்டியன் ஆட்சியில், செல்வநம்பியைப் பீடத் திருத்தி, பொற்கிழி தூக்கி, பெரும் பொருள் தத்துவத்தை உணர்த்துபவருக்குக் கிழி என்று திட்டமிடுதல்; சீவில்லிபுத்தூர் பட்டாசாரியன் விண்டு சித்தன் மெய்ப்பொருளை உணர்த்தல் வேண்டி மதுரைக்கு வருதல்; பட்டாசாரியன் மதுரையடைந்து பல்லாண்டு பாடி மெய்ப்பொருள் நிறுவிப் பொற்கிழி பெறுதல் போன்ற வரலாறுகள் கூறப்பெறுகின்றன.

பொற்கிழி பெற்ற படலத்தில் பல்லாண்டு கூறுமிடத்து, நூலாசிரியர் பட்டர்பிரான் கூற்றாக மூன்று பல்லாண்டுப் பாடல்கள் பாடியுள்ளமை சுட்டத்தக்கது.

"மல்லாண் டிலங்கு மணித்திண்தோள் மாயா,
தூய பரமேட்டி,
தொல்லாண் டிருந்த குடியடியோம் உன்னோடு யாமும்.
தொழுதொழும்பும்
எல்லாந் தருமுன் திருவடிகள் இரண்டும்,
பண்டைஎமதுணர்வும்
பல்லாண் டூழி பல்லாண்டு பலகால் நூறா யிரத்தாண்டே".

"உருளுஞ் சகட முடைந்தோட உதைத்த மலர்த்தாள்
பல்லாண்டுன்
மருமமாடத் துறைகின்ற மங்கை தானும் பல்லாண்டு
பருதி கோடி யெனப் பிறங்கும் படைச்சக் கரமும்
பல்லாண்டு
தருண மதிய மயுதநிகர் சங்கத்திறையும் பல்லாண்டே".

"பூணும் பணியான் நிலைமுறித்த
புண்தக் கேண்மை பல்லாண்டு
தாணின் றுதைப்பத் தலைகுனிக்குஞ்
சார்ங்க வில்லும் பல்லாண்டு
காணுங் கனகன் மார்பிடந்த
கடும்போர்த் திறமும் பல்லாண்டு
வாணன் புயமா யிரமறுத்த மறச்சே
வகமும் பல்லாண்டே". (38-39)

என்னும் பாடல்கள் இத்தலத்தில் மங்களாசாசனம் செய்யப் பெற்ற பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டை நினைவுறுத்துவன.

"பதின்மர் பாடலுக்கு முற்பதிக மாகவே
புதுவை யாசிரியனார் புகல்பல் லாண்டுதான்
மதுரை மாநகர் தனிற்பிறந்த வாய்மையால்
இதனை நேர்தல நிலத்தியம்ப வல்லமோ". (58)

என ஆசிரியர் நூலிறுதியிலும் மதுரையின் மாண்பைக் கூறியே நூலை நிறைவு செய்கின்றார்.

**திருக்குருகை மான்மியம்**

நம்மாழ்வாரின் அவதாரத் தலம் பாண்டி நாட்டிலுள்ள திருக்குருகூர். நம்மாழ்வார் மதுரகவியாழ்வார் ஆகியோர்

மங்களாசாசனம் செய்த திருப்பதி. இது ஆழ்வார் திருநகரி என்றும் அழைக்கப்பெறும். ஆழ்வார் நவதிருப்பதியில் ஒன்று இது,

திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பவர் இத்தல புராணம் இயற்றியுள்ளார், இவர் இலக்கண இலக்கியங்களில் வல்லவர். மாறன் பாப்பாவினம், மாறன் அகப்பொருள், மாறன் அலங்காரம் போன்ற இவருடைய நூல்களுக்கெல்லாம் இவர் நம்மாழ்வாரின் பெயரை அமைத்திருக்கக் காணலாம். நம்மாழ்வார் மீது அளவற்ற பற்றுக்கொண்ட இவர் அவருடைய அவதாரத்தலமாகிய திருக்குருகூருக்கு இப்புராணத்தை எழுதிச் சிறப்பித்துள்ளார். பதினாறாம் நூற்றாண்டில் இந்நூல் இயற்றப் பெற்றதாக அறிகிறோம். நூல் அரங்கேற்றிய காலம் கி.பி. 1548 ஆகும்.

இத்தலபுராணம் ஒரு பெருங்காவியமாகும். இந்நூல் முழுமையும் கிடைக்கவில்லை. இதில் 28 சருக்கங்களும் 3030 பாடல்களும் இருப்பதாக ஐயரவர்கள் ஏட்டுப் பிரதியின் முகப் பேட்டில் உள்ளது. ஆனால் 26 வரம் பெறு சருக்கம் வரை 2624 பாடல்கள் மட்டுமே அச்சாகியுள்ளன.

இம்மான்மியத்தைப் பராசரமுனிவர் தம் புதல்வர் வியாச முனிவருக்குக் கூற, அவர் சுகருக்குக் கூறினார். இவ்வாறு வந்த வடமொழி நூலை ஆதிநாதபட்டர் மொழிபெயர்த்துக் கூற, அவற்றைத் தாம் தமிழில் பாடியதாக ஆசிரியர் கூறுகிறார்.

இந்நூலைத் தமிழிற் கூறிய புலமையால், சடையன் என்ற பெயருடைய தாம் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்று பெயர் பெற்றதாகவும் இவர் கூறுகிறார். கடவுள் வாழ்த்துப் பகுதியில் இவர் கூறும் அடியார் வணக்கம் சிறப்பானது.

"கடியார் பசுந்துளவக் கார்மேனிச் செங்கண்
நெடியானை எட்டெழுத்தாய் நின்றானைப் புள்ளின்
கொடியானை என்னுள்ளத்துட் கொண்டானை ஏத்தும்
அடியார் அடியார் அடியார் அடியனே"

என அமையும் பாடல்கள் இவர்தம் வைணவ பக்தியைக் காட்டும்.

புறநகர் வாழ்த்து என்ற சருக்கத்தில் உலகாயதன், வாமன், அருகன், புத்தன், நாமே பிரமம் என்பார் ஆகிய சமயததாரை

மிகவும் கண்டிக்கிறார். பல பாடல்களில் தசாவதாரங்களைப் போற்றிப் புகழ்கின்றார். கோயில் வருணனை என்ற சருக்கத்தில் ஒலியின் பிறப்பு என்று தொடங்கி, வாக்கு, எழுத்து, சொல், பொருள், அகம், புறம், வெண்பாமாலை. படலம் ஈராறு, யாப்பு, அலங்காரம், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பது முடியக் கூறித் திருப்புளி வருணனையோடு முடிக்கிறார்.

அடுத்த சருக்கத்தில் சந்தப் பாடல்களும் மடக்கும் மிகுதியாக அமைகின்றன. பரமபத வருணனையில் பரமபதநாதன் தோற்றத்தைக் கூறும் பத்துப் பாடல்களில் நான்கில் பலவகை மரப்பெயர்கள் கூறப்பெறுகின்றன.

அண்டவுற்பத்திச் சருக்கத்தில் உலகத் தோற்றம், நரகத் தியல்பு, நரகில் உழல்வோர் பற்றியும் கூறுகிறார். மிக முயன்று எழுதிவைத்த ஏடுகளைத் திருடுவோர், கற்றிடாததையும் கற்றதாய் மேற்கொண்டு உரைப்போர், குருத்துரோகிகள், வயிற்றுக்காகக் கவி பாடிப் புன்கவிகள் என்று பெயர் வாங்கினோர் போன்றோரும் நரகில் உள்ளனர் என இப்பகுதியில் விளக்குவர்.

"கடவுளா மெனவே குரவரை மதித்துக்
        களைகணா கற்றநூல் பனைமா
மடல்களிற் கரமு மெருத்தமும் பரடும்
        வருந்தவே கங்குலும் பகலும்
சுடர்நுதி வயிர ஆசியாற் பொறித்துத்
        தொகுத்த பொத்தகங்களைக் கரவிற்
படரிருளிடைக் கண்ணுவிற்கவர் பவராய்ப்
        படுபழி படைத்த பாதகத்தோர்",

"கற்றிடாததையுங் கற்றதாய் மேற்கொள்
        கரவொடுங் கவிசிறி துரைப்பத்
துற்றுளார் முழுதுடையம்யாம் அவற்றிற்
        கொள்கையேம் எனஅவை யடக்கப்
பெற்றுளார் கழகத் துரைத்திடர்ப் படுபின்
        பேணியே அவர்கள் பாலவற்றைத்
தெற்றென வுணர்ந்து கற்றிடாதிடரே
        செயத்துணிந் துழல் படிறுடையோர்".

"கன்ன பரம்பரை முறையே இலக்கணமும்
இலக்கியமுங் கற்பிப் போர்கள்
சொன்னவரும் பதங்களினைச் சிறைப்புறத்துத்
துன்னினராய்த் துணிந்தா ராய்ந்த
பின்னரவைக் களத்தெரிந்து பிணங்கினராய்
வாதுசெயப் பெற்ற காலை
இன்னதிது வெனவிஃதென் றிறுமாந்த
குருத்து ரோகிகளா மினர்".

"பொற்புடைச் செந்தமிழ் தெரிந்து
சொன்னலமும் பொருணலமும் புணர்வதாகச்
சிற்பரன் மேலுயிர்க் காக்கங் குறித்தறிஞர்
அணிபெறவே செறித்த யாப்பை
அற்பரெனத் திரிநரர்தம் பேரினொடும்
ஊரினை வைத் தவிழுக் காகத்
தற்கரப்புன் கவிகளெனப் பிறர் சிரிப்பக்
கொடுத்துயிர்க்குத் தவறு பூண்டோர்". (987-991)

எனவரும் பாடல்கள் குறிக்கத்தக்கன.

பிரமன் தோத்திரச் சருக்கம் என்ற அத்தியாயத்தில் துதிப் பாடல்கள் அனேகம். உறுப்புக்கள் பெற்ற பயன் இறைவனுக்கு ஆட்செய்வதே என்று பல உறுப்புகளையும் சுட்டிச் சொல்கிறார்.

"நாவாரவே புகழ்ந்து நாராயணா நமவென்று
ஓவா வுரையினொடுங் கண்ணீருரம் நனைப்பக்
காவார் மலர்பறித்துக் கண்ணாநின் காற்கமலந்
தூவாதார் கையினையுங் கையென்று சொல்வாரே" (1220)

என்பது ஒரு பாடல்.

அடுத்து இங்குச் சித்திரக் கவிகள் பலவற்றையும் அமைத் திருக்கிறார். கொம்பும் காலும் ஒற்றும் இன்றி வந்த நிரோட் டகம், அதில் பிறவகைகள், மடக்குக்கள், வல்லினம் இடையினம், மெல்லினத்தால் வந்த பாட்டுக்கள் முதலியன இங்குக் காணப் படும். திருவாராதனச் சருக்கம் திருமாலின் பூசைக் கிரியை களை விரிவாகக் கூறுகிறது. துணைப்படை வதைப்படு சருக்கம் என்பது போரின் வருணனை, மக்கட் செல்வம் பற்றிப் பெருங் கவிஞர் அனைவரும் பாடுவது போன்றே இவரும் பாடுகிறார்.

"மைந்தர் மூரல் வாய் முத்தமுண்ணாதவாய் வாயோ,
மைந்தர் சொற் கொளாச் செவிகளுஞ் செவிகளோ, மழலை
மைந்தர் சிறடிச் சுவடுறா மார்போர் மார்போ,
மைந்தர் காட்சி கண்டிலன் புறாக்கண்கள் கண்மலரோ".
(2550)

நூலெங்கும் சந்தப்பாடல்கள் நிரம்ப அமைத்திருக்கிறார்' இவர் அருணகிரிநாதரின் திருப்புகழை நன்கு பயின்றவர் போலும். அதே அமைப்பில் பல இடத்தும் பாடல்களை அமைத்திருக்கிறார்.

இப்பகுதிகளை அடுத்து மாறன் திருஅவதாரச் சருக்கம், மவுனம் நீங்கு சருக்கம் ஆகியவை முழுவதும் கிடைக்கவில்லை.

### பாண்டி நாட்டிலுள்ள (பாடல் பெறாத) பிற தலபுராணங்கள்

மேற்கூறிவ வகையில் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் மற்றும் ஆழ்வார்கள் ஆகியோரின் பாடல்கள் கிடைக்கப் பெறாத பல பாண்டிநாட்டுத் தலங்களுக்கும் தல புராணங்கள் கிடைக்கின்றன. அவற்றை ஈண்டு நோக்குவோம்.

### சங்கர நாராயண சுவாமி கோவிற்புராணம்

பாண்டி நாடென்னும் பழம்பதியின் தென்பகுதியில் இருக்கும் மிகச் சிறந்த பகுதிகளாகிய திருநெல்வேலி, திருக் குற்றாலம், திருச்செந்தூர் முதலிய தலங்களில் ஒன்று சங்கர நயினார் கோவில். உமாதேவியார், சிவபெருமானிடத்தில் வேண்டிக் கொண்டபடி, சிவனார் நாராயணரைத் தமது இடப் பாகத்திலே கொண்டு சங்கரநாராயணர் ஆகக் காட்சி கொடுக்கும் தலம் இதுவாகும். இந்தச் சங்கரநாராயணர் திருவுருவம் இத் திருக்கோவிலில் சங்கரலிங்கப் பெருமானுக்கும், கோமதியம்மைக்கும் நடுவே இன்னும் காட்சி தருவதைக் காணலாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தலத்தின் வரலாற்றைத் தல புராணமாகப் பாடியுள்ளார் சிவமாறபாண்டியர். பதினான்கு சருக்கங்களும் 509 செய்யுள்களையும் கொண்ட இப்புராணத்தி லுள்ள முதல் ஆறு சருக்கங்களையும், கடவுள் வாழ்த்துள் மூன்று பாடல்களையும், புராண வரலாற்றுள் இரண்டு பாடல்களையும் ஊற்றுமலை மன்னரிடம் புலவராயிருந்த புளியங்குடி முத்துக் கவிராயர் என்பவர் பாடிச் சேர்த்துள்ளார். இலக்கியச்சுவை மலிந்த இந்தத் தலபுராணத்திற்கு மதுரைத் தமிழ்ச் சங்கப்

புலவர் மு. ரா. அருணாசலக் கவிராயர் அவர்கள் அரும்பத வுரையும் சுருக்க வசனமும் எழுதியளித்துள்ளார்.

இங்குச் சங்கரேசுரரே புற்றுமண்ணை மருந்தாகக் கொடுக் கின்ற காரணத்தினாலே பூமியிலுள்ள தலங்கட்கெல்லாம் இந்தத் தலமே உயர்ந்தது என்பர்.

"பூதலந் தன்னி லுள்ள புண்ணிய தலங்கட் கெல்லா
மேதகு தலமீ தாகு மியாதினா லென்னில் வேத
நாதனே புற்று மண்ணை நன்மருந்தாக நல்கிப்
பாதக நோய்கள் நீக்கிப் பரிந்துகாத் தருள்வ தாலே".
(4. தலவிசேடச் சருக்கம், 14)

என இத்தலத்தின் சிறப்புக்களையெல்லாம் பலவாறு எடுத் துரைக்கிறது இந்நூல்.

சிவகணங்களுக்குள் திருநந்திதேவரும், பெண்களுக்குள் கற்புடைப் பெண்களும், பாம்புகளுக்குள் ஆதிசேடனும், நவரத்னங்களுக்குள் வயிரமும், சாத்திரங்களுக்குள் அத்துவித மும், இராசிகளுக்குள் சிங்க ராசியும், தேவர்களுக்குள் இந்திரனும், மேகங்களுக்குள் பொன்மழை பெய்யும் மேகமும், மிருகங்களுக்குள் கத்தூரி பூனையும், இலைகளுக்குள் வில்வமும், பாணங்களுக்குள் பாசுபதாத்திரமும், சக்திகளுக்குள் கோமதி யாகிய உமாதேவியும், பூவினுள் தாமரையும், குருக்களுக்குள் வியாழ பகவானும், பொன்களுக்குள் சாம்பூநதப் பொன்னும், முனிவருக்குள் அகத்திய முனிவரும், பிள்ளைகளுக்குள் பகிரதனும், கதைகளுக்குள் சிவகதையும் உயர்ந்தன போலத் தலங்களுக்குள் இத்தலமே மிக உயர்ந்தது என அடுக்கிக் கூறும் பகுதிகள் (4. தலவிசேடச் சருக்கம், பா. 15-20) நயம்மிக்கன.

"எவ்வகைய தவப்பேறும், எவ்வகைய
தானத்தா லெய்தும் பேறும்
எவ்வகைய மகப்பேறும் எவ்வகைமெய்ந்
நூல்வழித்தா லெய்தும் பேறும்
எவ்வகைய தலந்தீர்த்த மூர்த்தியினால்
யாவருக்கு மெய்து கின்ற
எவ்வகைய பெரும்பேறும் இத்தலமே
கொடுக்குமென விசைக்கு மெய்ந்நூல்".
(4. தலவிசேடச் சருக்கம். 27)

எந்தத் தவத்தின் பயனும், எந்தத் தானத்தினாலாகிய பலனும், எந்த விதமான புத்திரப்பேறும், எந்த சாத்திரத்தினாலடையும் பயனும், எந்தத் தலம், தீர்த்தம், மூர்த்திகளால் எய்தும் பெரும் பயனும் இந்தத் தலமே கொடுக்குமென வேதங்கள் சொல்லும் என இத்தலப் பெருமையை எடுத்துரைப்பர் இந் நூலாசிரியர்.

சங்கரநாராயணராகத் திகழும் இத்தல இறைவனை உக்கிரன், தக்கனை, வீரசேனன், சயந்தன், கானவன் போன்ற பலரும் வணங்கி வழிபட்டுப் பேறுபெற்ற வரலாறுகளை மிகவும் சுவைபட இந்நூலில் விளக்கக் காணலாம்.

**திருமலைத் தலபுராணம்**

திரிகூட மலைச்சாரிபில் திருக்குற்றாலத்திற்கடுத்த வடமேல் பாலில் விளங்குவது திருமலை என்னும் தலம். இங்குக் குமாரப் பெருமான் கோயில் கொண்டுள்ளார்.

இத்தல புராணத்தை முருகதாசக் கவிராசர் என்னும் சிவராமலிங்கம் பிள்ளை என்பவர் பாடியுள்ளார். இவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் மாணவர்.

வடமொழி கந்தபுராணம் சூதசங்கிதையிலிருந்து தமிழ் மொழி பெயர்க்கப் பெற்றதாகக் கூறப்பெறும் இத்தலபுராணத்தில் 15 சருக்கங்களும் 598 பாடல்களும் உள்ளன.

"அகரமே உருவ மாகி அடிநடு முடிவு மாகி
உகரமே பொருளு மாகி உண்மையை விளக்கும் ஞானச்
சிகரமீ துறையுஞ் சோதி திருப்பிர ணவம தாகப்
பகருமோர் விநாய கன்பொற் பாதமென் சிரத்தில்
வைப்பாம்".

என்னும் உச்சி விநாயகர் துதியுடன் தொடங்கும் பாயிரப் பகுதியில் சத்தி, நகரீசர், அறம் வளர்த்த நாயகி, கன்னி விநாயகர், முருகன், வள்ளி தெய்வானை, பாலசுப்பிரமணியர், வயிரவக்கடவுள், நால்வர் ஆகியோருக்குத் துதிகள் பாடுகிறார்

நூல் வரலாற்றில் வடமொழி மூலமும் நூல் அமைந்துள்ள விவரமும் கூறுகிறார். அவையடக்கம் மட்டும் 10 பாடல்களில் அமைக்கின்றார்.

"இல்லாமை யாவ ருக்கும் இதயத்தில் வீற்றிருக்கும்
பொல்லாமை யான தீமை புகழறத் துச்சி மேவும்
நல்லார்செய் யறத்தின் மேலே நாடிடுந் துன்ப மென்றால்
கல்லாமை யான குற்ற மலநிலை கற்றோ ருக்கே". (15)

"கல்வியாங் கடலைக் காய்ச்சிக் கடைந்துமிழ் வெண்ணெய் யாகத்
தொல்விதிப் படிய றிந்து சுயஞ்சொலுங் கவிஞர் முன்னே
பல்விதி தருங்கந் தப்பன் மீதுயான் புராணம் பாடல்
நல்மதி யொடுவான் கோழி மஞ்ஞைபோல் நடித்த தொக்கும்". (17)

எனவரும் பாடல்கள் குறிப்பிடத்தக்கன.

திருநாட்டுச் சருக்கத்தில் தென்னாட்டின் சிறப்பை வெகு வாகப் புகழ்ந்து பாடுகிறார்.

"கருவிளையாட் டுடையார்கள் காண்பதற்கா யிவ்வுலகில்
ஒருவிளையாட் டுடையபிரான் உன்னிமன தன்புடனே
திருவிளையாட் டறுபத்தி நான்கதெனச் செய்தருளில்
பெருவிளையாட் டின்புதவும் பேறுடைய தென்னாடு". (40)

"பன்னாட்டு வளங்க ளெலாம் பாண்டிநாட் டினுக்கிணையோ
பொன்னாட்டுப் பூவையரும் புகழுகின்ற புண்ணியராஞ்
சொன்னாட்டு மாமறையோர் துதிப்பதுவுஞ் செந்தமிழே
தென்னாட்டு வளம்போல வேறெதையுஞ் செப்பரிதே".

இவ்வாறு தென்னாடாகிய பாண்டிய நாடு தலைசிறந்ததாக விளங்குவதற்குக் காரணம் இப்பாண்டி நாட்டு மக்களின் தமிழுணர்வும், சைவ சமய வுணர்வுமே என்பதை இப்பகுதியில் பல பாடல்களில் இவர் விளக்குவர். இந்நாட்டுமக்கள்,

"பாடுவதும் பாமாலை பகருவதுஞ் சிவநாமம்
கூடுவதுஞ் சிவனடியார் கூட்டமல்லால் வேறுளதோ
நாடுவது மறைநான்கே நண்ணுவது மெய்ஞ்ஞானம்
தேடுவது சிவமலது சிறுதெய்வத் தினைவேண்டார்". (8)

"எழுத்தியல்யாப் பிலக்கணமு மிலக்கியமுங் கற்றுரூனை
கழுத்துதிரு முக்கனிபோற் பகருவதும் இன்சொலே
வழுத்துவதுஞ் சிவவாக்கிய மல்லதுமற் றொன்றுமெண்ணா
வழிப்புகுவார் மனம்போல மனையறஞ்செய் திங்குறைவார்" (16)

இத்தகைய நாட்டில் சிறப்புற்று விளங்கும் நகரின் சிறப்பும் அம்மக்கள் சிறப்பும் விரிவாக உரைப்பர் ஆசிரியர். இவற்றை யடுத்து, திருக்குவளைச்சுனை என்னும் தீர்த்தச் சிறப்பு கூறுவர். திருமூர்த்தி விசேடம் கூறுமிடத்து முருகனின் பிறப்பும் இத்தலத்தில் எழுந்தருளிக் காத்தருளும் மாண்பினையும் எடுத்துத்துரைக்கின்றார்.

"அல்வினை யொழிப்பதுவு மாந்திரு விளக்கே
சொல்லினை விளக்குவது தூயதமிழ் நூலே
எல்லினை விளக்குவது ஈசனருள் சீரே
நல்வினை விளக்குவது நற்கருணை வேளே", (15)

கந்தனாகிய முருகவேளைக் கூறுமிடங்களிலெல்லாம் தமிழோடு கலந்து சிறப்பிப்பதே இவ்வாசிரியரின் கொள்கையாகவிருக்கின்றது.

திருமலையின் சிறப்புரைக்குமிடத்து இம்மலை தோன்றிய வரலாற்றை முதலில் கூறுகிறார். திருமால் ஒருசமயம் தவம் செய்த போது இட்ட தருப்பையானது மலையாக வளர்ந்தது. அதைக் கண்ட திருமகள் அதனைக் கண்டு 'திருமலை' என்று கூறினாள். உடனே திருமால் அம்மலையை அன்பான மருமகனுக்குப் பரிசாக வழங்கினார் என்பர்.

"திருமக ளதனைக் கண்டு திருமலை யென்னும் நாமம்
அருமையாய்ப் புகல வப்போ தையனு முனிவ ரோடும்
பெருமையாய்க் கிருபை கூர்ந்து பேரின்ப மருளன் பான
மருமகன் தனக்கே யென்று வழங்கினன் வழங்க லோடும்".
(5)

அடுத்து, சப்தகன்னியர் தவஞ்செய்தது, சிவகாமிப் பரதேசி திருப்பணி செய்தது, முருகவல்லி வரலாறு, நக்கீரனைச் சிறை விடுத்தது, பகீரதன் விரத மகிமை, தேவர் சிறை மீண்டது. வாசுதேவானந்தருய்ந்தது ஆகிய சருக்கங்கள் அமைந்து இறுதியில் தண்டபாணிச் சருக்கம் அமைத்துள்ளார். இதில் வண்ணச் சரபம் தண்டபாணிசுவாமிகள் இத்திருமலைக்கு வந்ததும் முருகனைக் கண்டு துதித்ததுமான வரலாறுகளைக் கூறுகிறார். இது சென்ற நூற்றாண்டில் நடைபெற்ற நிகழ்ச்சி. தண்டபாணி சுவாமிகளே இவற்றைத் தம்முடைய வரலாற்றில் குறிப்பிடுகிறார். அவற்றை இப்புராண ஆசிரியர் ஒரு சருக்கமாகவே கூறிச் சேர்த்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

"நெல்லையம் பதியின் வாச னிகழ்தண்ட பாணி யென்னுஞ்
சொல்லுவர் சுருதி யெல்லாந் துகளற வுணர்ந்த சீலன்
பல்விதச் சந்தம் பாடும் பரிவுளோன் புலவர் புராணங்
கல்விமான் களுக்கா னந்தங் கையுறக் காட்டி
வைத்தோன்". (1)

எனத் தொடங்கி இச்சருக்கம் 47 பாடல்களுடன் முடிவடைகின்றது.

நூலாசிரியர் தம்முடைய ஆசிரியராகிய வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் வரலாற்றை இத்தலபுராணத்தில் சேர்த்திருப்பதும், சுவாமிகள் தம் நூலில் அடிக்கடி குறிப்பிடும் முருகம்மையின் வரலாறு இதில் உரைக்கப் பெறுவதும் சிந்திக்கத்தக்கன. தலபுராண ஆசிரியர்கள் தாம் நேரில் கண்டவற்றையும், தாம் அறிந்தவற்றையும் சேர்த்தே நூலைப் படைத்தனர் என்பதற்கு இதுபோன்ற இலக்கியச் சான்றுகள் மிகவும் பயனுடையதாகின்றன.

**திருமூல நகரப்புராணம்**

தமிழிலுள்ள தலபுராணங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பாடல்களைக் கொண்ட நூல் இதுவேயாகும். அம்பாசமுத்திரம் இரா. அரிகரமையரவர்கள் இதனை இயற்றியுள்ளார்.

பாண்டி நாட்டில் தாம்பிரபரணி நதியின் வடகரையிலுள்ள ஆமலகவனத்தில் இருப்பதே இத் திருமூலநகரம். சிவபெருமானைத் துதித்த பிரமன் தன்னுடைய சனன மரணம் நீங்கும்படியாக வேண்டியபொழுது, சிவபெருமான் பிரமனை இத்தலத்தில் ஓர் யாகம் செய்யும்படியாகப் பணித்தார். அவ்வாறே பிரமன் தன் மனைவியுடன் இத்தலத்தில் வந்து யாகம் செய்தான். அந்த யாகத்தீயினின்று தோன்றிய மகாலிங்கமே ஸ்ரீமூலநாதரென்றும், விபூதிலிங்கமூர்த்தி யென்றும் புகழ்ந்து பேசப் பெறுகின்றது. இத்தலத்தில் பிரமனாலும் சரசுவதியினாலும் செய்யப்பட்ட தீர்த்தங்களில் நீராடிப் பூசித்த அகத்திய முனிவர் வேண்டிய வரங்களெல்லாம் பெற்று மகிழ்ந்தனர். அவ்வாறே இத்தலத்தை யடைந்தோர் அனைவரும் பெறுவர் என்பதே இப்புராணத்தின் சாரமாகும்.

பாயிரம். புராண வரலாற்றுச் சருக்கம், நாட்டுச் சருக்கம், நகரச் சருக்கம், தீர்த்தவிசேடச் சருக்கம், மூர்த்தி விசேடச் சருக்கம், தலவிசேடச் சருக்கம், திருமூல நாதர் பிரமனுக்குள்

செய்த சருக்கம், அகத்தியமாமுனிவர் பூசித்த சருக்கம் என 9 சருக்கங்களும் 120 பாடல்களும் இதில் உள்ளன.

**மயூரகிரி புராணம்** (குன்றக்குடிப் புராணம்)

பாண்டிநாட்டிலே திருப்புத்தூருக்கு அருகிலுள்ள தலம் மயூரகிரி என்பது. இன்று இத்தலம் குன்றக்குடி என அழைக்கப் பெறுகிறது. இத்தலபுராணத்தை 1785 ஆம் ஆண்டில் மதுரை வித்துவான் வேதாந்த சுப்பிரமணிய பிள்ளை என்பவர் இயற்றி யுள்ளார். இதில் 13 சருக்கங்களும், 589 பாடல்களும் உள்ளன. இந்நூல், வடமொழியிலுள்ள மயூரகிரி மான்மியத்தினின்று மொழிபெயர்த்து இயற்றப் பெற்றதாகக் கூறுவர்.

**வானரவீர மதுரைப் புராணம்**

வையை நதியின் மேற்கரையிலே உள்ள ஒரு தலம் வானரவீர மதுரை. இது மானாமதுரை என வழங்குகிறது. வானாதிராயர்களின் ஆட்சியில் இருந்தமையால் வானாதிராய மதுரை எனப் பெயர் பெற்றிருந்தது. இதுவே 'வாணாராய மதுரை' என்றும், 'வாணர மதுரை' என்றுமாகிப் பின்னர் மானாமதுரை என மருவி வழங்குகிறது என்பர்.

இத்தலத்திலுள்ள இலிங்கமூர்த்தி சோமேசலிங்கம் எனப் படும். அந்த மூர்த்திக்குப் பண்டைய நாளில் திரிபாகநாதர் என்றும், திரிபதேசுவரர் என்றும் பெயர்கள் வழங்கின. ஆதி காலத்தில் பாதாள உலகிலிருந்து தோன்றிய ஓர் இலிங்கம் மூன்றாகப் பிரிந்து, ஒரு பகுதி இங்குச் சோமேசலிங்கம் ஆனது. மற்றைய இரு பகுதிகளும் தேவதாருவனம் என்னும் காளையார் கோயிலில் தோன்றிச் சோமேசர், காளீசர் என்று பெயர் பெற்றன. மூன்றில் ஒரு பகுதியானமையால் சோமேசர் திரிபாகநாதர் எனப் பெயர் பெற்றார். திரிபதேசுவரர் என்பதும் அதே பொருளுள்ள பெயரே.

மானாமதுரைக்கு வில்வவனம் என்றும் கூவிளவனம் என்றும் பெயருண்டு. வில்வமரக்காடுகள் அடர்ந்திருந்தமையால் இப்பெயர் தோன்றியுள்ளது.

வானரவீர மதுரையின் சிறப்பை விளக்கிக் கூறுவது இப் புராணம். 9 சருக்கங்களும் 500 பாடல்களும் இந்நூலில் உள்ளன. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த மதுரை தெய்வ சிகாமணி மகனார் சுப்பிரமணியம் என்பவர் இயற்றியுள்ளார். இவரைப் பற்றிய பிற விவரங்கள் அறிய இயலவில்லை.

காளையார் கோவிலுக்குத் தேர் செய்தளித்த மருதுபூபன் என்பவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க இப்புராணம் பாடப் பெற்றதென்பதையும் வடமொழி வாயுசங்கிதையிலிருந்து மொழிபெயர்த்து இதை இயற்றியுள்ளதாகவும் குறிப்பர். (பா.52). பாயிரம், நாடு, நகர்ச்சிறப்பு, புராண வரலாறு கூறிய பின்பு வில்வவனச் சிறப்புரைக்கின்றார்.

சந்திரன் கயநோய் நீங்க இங்கு வந்து பூசித்தது, தூல கன்னன் மன்னன் திருப்பணி செய்து சாயுச்சியம் பெற்றது. உக்கிர பாண்டியன் பூசை செய்தது, பலராமன் பூசை செய்தது, இராமன்—வானரத்தின் கதை, சிவபுண்ணியம் உரைத்தது, வாதவூரடிகள் பூசித்தது, காஞ்சி ஆனந்தம் என்னும் மறையோன் குட்டநோய் நீங்கி முத்தி பெற்றது, சந்திரன் அருச்சித்தது ஆகிய வரலாறுகள் இப்புராணத்தில் விளக்கப் பெறுகின்றன.

இராம—இராவணப் போர் நடந்தபோது, வானரச்சேனைகள் ஒருகால் பசியால் வாடின. பசி தாங்காமல் சோமபுரியாகிய இத்தலத்திற்கு வந்து இறைவனை வேண்டின. இறைவன் தோன்றி, தென்கிழக்கிலே ஒரு மதுக்குடம் உண்டாக்கி அருளினான். அதில் வானர சேனைகள் இனிய மதுவைப் பருகிப் பசி தீர்ந்தன. 'தாங்கள் மது அளித்து நாங்கள் புசித்து மகிழ்ந்தமையால் இந்நகருக்கு வானர வீர மதுரை' என்று பெயர் உண்டாக வேண்டுமென்று வானரங்கள் வேண்டின. இறைவனும் அவ்வாறே அருளினார் என ஐந்தாவது சருக்கத்தில் இத்தலப் பெயர்க் காரணத்தை விளக்குவர்.

"காதலொடும் உனைப்பூசை புரிந்தனம்யாம்
அதனாலும் கவினும் இங்கன்
நீதறுநன் மதுஅளித்தாய் அதனாலும்
இருவகையும் திகழ இந்த
மாதலத்துக்கு ஒருபெயர்வா னரவீர
மதுரைஎன வழங்கல் வேண்டும்
வேதமுதல் வாஎன்ன அதற்குஇசைய
விடைகொண்டு மீண்டு பின்னர்" (287)

என்பது பாடல்.

இந்நூலைக் காப்பிய மரபுக்கேற்ப ஆசிரியர் படைத்துள்ளார். ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் நூற்பயன் கூறுதல், பதிகத்தை நூலிறுதியில் அமைத்தல், சைவ வைணவ

வேறுபாடின்றி சமயப் பொதுமையைக் கூறுதல். பதி, பசு, பாசம் இவற்றை விரிவாக விளக்குதல் போன்றவை இந்நூலாசிரியரின் தனிச் சிறப்புக்களாகும்.

### வீரவனப் புராணம்

திருப்பெருந்துறைக்கு மேற்றிசையில் உள்ளதொரு சிவத் தலம் வீரவனம். இத்தலம் வில்வாரணியம், வீராரணியம், வீரை, வீரையூர், அளகை, சாக்கைக் கோட்டை, சாக்களூர், சாக்கை என்றும் வழங்கும்.

இத்தலம், தலவிருட்சத்தால் பெயர் பெற்றதாகும். வீர விருக்ஷம் என்னும் இந்த மரத்தின் பெயர் தென்மொழியில் வீரை என வழங்கும். இது முன்னொரு காலத்தில் சுகுண பாண்டியன் என்னும் மன்னனுக்குண்டாகிய ஐயத்தை நீக்கும் பொருட்டு இத்தல இறைவரான வீரசேகரநாதருடைய திருவருளால் பலா மரமாகிப் பின்பு தன்னுருவம் பெற்ற சிறப்புடையது என்பர்.

இத்தலத்தில் வழிபட்டுப் பேறுபெற்றோர் பலராவர். அவருள், வீரன் என்னும் வேடர் பெருமான், அவன் மனைவி சுமதி, கண்டன் என்னும் சோழன், அவன் தேவி சுசீலை, அவன் புதல்வனாகிய வீரசேகரச்சோழன். சுகுணபாண்டியன், குபேரன் அந்தணனொருவன், ஆயனொருவன், திருமால், இராமன், திருப்பெருந்துறை அந்தணர்களாகிய முந்நூற்றுவர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இத்தகைய வரலாறுகளை விளக்குதே வீரவனப்புராணம். இதனை வடமொழியினின்று மொழிபெயர்த்து இனிய தமிழில் இயற்றியளித்துள்ளார் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள். இதில் 13 சருக்கங்களும் 704 பாடல்களும் உள்ளன.

### வேறு தலங்களுக்குரிய புராணங்கள்

மேற்கூறிய தலபுராணங்களைப் போன்றே பாண்டி நாட்டிலுள்ள பல சைவ, வைணவத் தலங்களுக்குத் தலபுராணங்கள் பாடப் பெற்றுள்ளன. அத்தலங்கள் வருமாறு: அம்பை (அம்பா சமுத்திரம்). அரிமழம் இளசை (இளையாற்றுக்குடி) கண்டதேவி (சிறுமருதூர்), கரிவலம்வந்த நல்லூர், கன்னியாகுமரி, கானப் பேரூர் (காளையார்கோயில்), கூவலப்புரம், கோயிலூர், கோயிற் பட்டி, சிவகாசி. சிவசயிலம், சுசீந்திரம், குரைமாநகர் (குரைக் குடி), தாருகாபுரம், திருக்களந்தை (களக்காடு), திருக்கோளக்

குடி, திருச்செந்தூர், திருப்புடை மருதூர் (புடார்ச்சுனம்), தூத்துக்குடி, தென்காசி. தென்மலை, தேவகோட்டை, தேவதானம், பாபநாசம், பெருந்துறை, மன்னார்கோயில், வயிரவன் கோயில், வாசுதேவநல்லூர், வில்வவனம் (நயினார் கோயில்) (மரூர்), மலைசை (சூதவனம்), வீரை (வீரவனல்லூர்), ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய முப்பதிற்கும் மேற்பட்ட தலங்களுக்குரிய புராணங்கள் கிடைக்கின்றன.

இவற்றுடன் உரைநடையிலமைந்த புராண நூல்கள் பல இப்பாண்டி நாட்டுத் தலங்களுக்குரியதாகக் கிடைக்கின்றன.

இத்தல புராணங்களின் ஆசிரியர், காலம், சருக்கம், பாடல் தொகை, பதிப்பு ஆகிய பிற விவரங்களைப் பின்னிணைப்பி லுள்ள பட்டியலில் காணலாம்.

சிவபெருமானின் திருவிளையாடல்கள் பல நிகழ்ந்து, சிறப்புமிக்க திருத்தலங்கள் பல தோன்றியுள்ள இப்பாண்டி நாட்டில் அருந்தமிழ்ப் புலவர்கள் பலரும் தோன்றி நூல்கள் பல யாத்து இவ்வுலகிற்கு வழங்கியுள்ளனர். அவற்றுள் தலபுராண இலக்கியங்களும் சிறப்பிடம் பெறுகின்றன.

தமிழில் இன்று கிடைக்கக்கூடிய தலபுராண நூல்களுள் மிகப் பழமையானதாகக் கருதப்பெறும் திருவிளையாடற்புராணம் (நம்பி) இப்பாண்டி நாட்டிற்குரியது என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

இறைவன் அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் புரிந்த ஒரே நாடு இப்பாண்டி நாடே. இதன் காரணமாகவே இந்நாட்டின் தலைநகராக விளங்கும் மதுரை மாநகரில் உள்ள ஆலவாயைச் சிறப்பித்து ஐந்து புராணங்கள் எழுந்துள்ளன. அவற்றுள் மதுரைப்புராணம் இன்று கிடைக்கவில்லை. கடம்ப வனப்புராணம் தலமரத்தால் பெயர் பெற்றது. அது அவ்வள வாக மக்களிடையே வழங்கப்பெறவில்லை. ஆயின் திருவிளை யாடற்புராணம் என்னும் நூல்கள் இரண்டும் ஆலவாய் இறைவனின் புகழையே கூறுவதாயினும் மதுரைத் தலபுராணங் களாக போற்றப் பெறுவது குறிப்பிடத்தக்கது. இவ்விரு நூல் களிலும் தலப்பெயர் சேர்த்துக் கூறப் பெறாததுடன், ஆசிரியர் பெயரால் (நம்பி திருவிளையாடற் புராணம், பரஞ்சோதி திருவிளையாடற் புராணம் என) வழங்கப் பெறுவதும் இப் பாண்டிநாட்டுத் தலபுராண வரலாற்றில் காணும் சிறப்பாகும்.

தமிழ்க் கல்வெட்டுக்களால் அறியப்பெறும் தலபுராணங்களுள் பாண்டி நாட்டிலுள்ள திரிப்புத்தூர் என்னும் தலத்திற்குரிய ஓங்குகோயிற்புராணம் இன்று கிடைக்காதது குறிக்கத்தக்கது.

பாண்டிநாட்டின் மலை வளத்திற்குச் சான்றாக விளங்கும் திருக்குற்றாலத்திற்குரிய புராணம் தமிழ் இலக்கிய உலகில் மிகச் சிறப்பாகப் போற்றப்பெற்று வரும் நிலையில் இத்தலத்திற்குரிய பழைய புராணம் ஒன்று அண்மையில் கிடைக்கப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இறையனுபூதி பெற்ற சம்பந்தர். அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகியோர் நால்வரும் சென்று கண்டு களித்துப் பாடி மகிழ்ந்த திருமுறைத் திருத்தலங்கள் அனைத்திற்கும் (16 தலங்கள்) தலபுராணங்கள் இயற்றப் பெற்றிருக்கும் பெருமையும் இப்பாண்டி நாட்டிற்கு உண்டு.

பூலோக கயிலாயம் என வழங்கப்பெறும் பழம்பெரும் பதியாகிய திருப்பெருந்துறைக்கு நான்கு பெரும் புராணங்கள் தோன்றியிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

பாண்டி நாட்டில் ஆழ்வார்கள் பாடல்பெற்ற 18 திருமால் திருத்தலங்களுள் இரண்டிற்கு மட்டுமே தலபுராணங்கள் கிடைக்கின்றன. இருப்பினும் தாமிரபரணி நதிக்கரையில் நம்மாழ்வாரின் திருஅவதாரத் தலமாகிய திருக்குருகூருக்கும். அழகர் உறையும் கூடலென்னும் தலத்திற்கும் புராணங்கள் கிடைப்பது சிறப்புடையதாகும்.

மேற்கூறிய முப்பத்தாறு தலபுராணங்களுடன் நாற்பதுக்கும் மேற்பட்ட பிற தலபுராணங்கள் கிடைப்பதும் இப்பாண்டி நாட்டிற்குரிய சிறப்பாகும்.

தமிழ்த் தலபுராணங்களுள் மிகுதியான பாடல் எண்ணிக்கையையுடைய மிகப் பெரிய புராணம் திருநெல்வேலித் தலபுராணம் (120 படலங்களும் 6892 பாடல்களும் கொண்டது). தமிழ்த் தலபுராணங்களுள் குறைந்த எண்ணிக்கையையுடைய மிகச் சிறிய புராணம் திருமூலநகரப் புராணம் (9 சருக்கங்களும் 120 பாடல்களும் கொண்டது) இவ்விரண்டு தலபுராணங்களும் இப்பாண்டி நாட்டுத் தலங்களுக்குரியவையே என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# தொண்டை நாட்டுத் தலபுராணங்கள்

மேற்கில் பவளமலையினையும். கிழக்கில் கடலையும், தெற்கில் பினாகினி நதியையும், வடக்கில் திருவேங்கடத்தையும் எல்லையாகக் கொண்ட நாடு தொண்டை நாடாகும். பல்லவர் முதலான பல மன்னர்கள் இங்கு ஆட்சிபுரிந்துள்ளனர். சான்றோர்கள் பலர் தோன்றிய சிறப்புமிக்க நாடு இத் தொண்டை வளநாடு, திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலகமாக விளங்கி அடியார்களின் வரலாறுகள் பரவிப் பாடிய சேக்கிழார் பெருமானின் சான்றான்மையே இந் நாட்டின் புகழுக்கோர் எடுத்துக்காட்டாகும். பாலாற்றின் வளம்மிக்க இந்நாட்டில் தொன்மைச் சிறப்புள்ள ஊர்கள் பல உள. அவற்றுள் பாடல் பெற்ற பல தலங்களும் இன்றும் சிறப் புடன் விளங்கி வரக் காணலாம். எடுத்துக்காட்டாக இத் தொண்டை வளநாட்டின் தலைநகராக விளங்கிய காஞ்சி மாநகர் பல பெருமைகளை யுடையது. கற்றவர் மலி காஞ்சி என்று ஆன்றோர் கூறியது போன்றே கோயில்கள் மலிந்த பதியா கவும் திகழ்வது சுட்டத்தகும்.

இவ்வாறு காஞ்சி முதலான முப்பத்திரண்டு சிவத்தலங்களும், இருபத்திரண்டு வைணவத் தலங்களும் பாடல் பெற்ற பதிகளாக இந்நாட்டில் விளங்குகின்றன. இவற்றுடன் ஆயிரக்கணக்கான திருக்கோயில்களும் இங்கே திகழ்கின்றன. பல தலங்களுக்குரிய வரலாற்றுச் சான்றுகளாகத் தலபுராணங்களும் கிடைக்கின்றன. அவற்றை ஈண்டு நோக்குவோம்.

**காஞ்சிப் புராணம்**

இந்திய நாட்டில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தலைசிறந்த புண்ணியத் திருத்தலங்களுள் ஒன்றாகத்

திகழ்வது காஞ்சிபுரம் ஆகும். பாரத நாட்டிற்குக் கலைகளை உதவிய நகரமும் இதுவே. உமையம்மை சிவபெருமானை ஆகம முறைப்படி பூசனை செய்யத் தாமே விழைந்து வந்து வணங்கித் தழுவக்குழைந்த தலம் இது. பல்வேறு சமயத்தினரும் நிறைந்து நிறை வாழ்வு பெற்ற தலமாகிய இக் காஞ்சிமாநகரைப் பல மன்னர்களும் ஆட்சி செலுத்தி மகிழ்ந்தனர்.

தொண்டை நாட்டின் தலைநகரமாகத் திகழும் காஞ்சிபுரம் சைவ சமய குரவர் நால்வராலும் பாடிப் பரவும் பெரும்பேறு பெற்ற பதியாகும். மூவர் முதலிகளும் இப்பழம்பெருந் பதிக்குப் பதினேழு பதிகங்கள் பாடியுள்ளனர். வாகீசப் பெருந்தகை வழங்கிய தண்டகப் பதிகங்கள் இரண்டும் சிறப்பு வாய்ந்தவை. ஞானசம்பந்தரின் திருவியமகப் பாடல்கள் வியப்புடன் கூடிய பக்தியுணர்வைத் தோற்றுவிப்பவை. மாணிக்கவாசகர் கச்சி ஏகம்பனைச் சில பாடல்கள் கொண்டு துதித்துப் பரவுகின்றார். காஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ள முருகப் பிரானை அருணகிரி நாதர் நாற்பத்தாறு திருப்புகழ்ப் பாடல்களால் ஏத்துகின்றார். இப்பதிக்கு அமைந்த சிற்றிலக்கியங்கள் கணக்கில் அடங்கா. இத் தலத்தின் புகழை விரித்துரைக்கும் புராணங்கள் வடமொழியில் முதலில் தோன்றியுள்ளன. அவற்றைப் பற்றி வண்ணக்களஞ்சியம் நாகலிங்க முதலியார் தாம் பதிப்பித்த காஞ்சிப்புராண முன்னுரையில் மிகத் தெளிவாகக் குறிப்பிடக் காணலாம்.

"இக்காஞ்சி மஹாக்ஷேத்திர பிரபாவம் வடமொழியில் ஸ்காந்த புராணம் சனற்குமாரசம்ஹிதை காளிகா காண்டத்தில் தீர்த்த மான்மியத்தில் கூறப்பட்டுள்ளன, ஐம்பத்தைந்து அத்தியாயம் ஆகிய பஞ்சாசத் என்ற நூலிலும், சிவபுராணம் பிரமாண்ட புராணம் முதலிய பல புராணங்களிலிருந்தும் திரட்டப்பட்டுள்ள நூறு அத்தியாயம் ஆகிய சதாத்தியாயம் என்கிற நூலும், மார்க்கண்டேய புராணம் வித்தியா காண்டத்தில் பேசப்பட்டுள்ள பதினான்கு அத்தியாயம் ஆகிய காமாக்ஷி விலாசம் என்ற நூலிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இதனுள் பஞ்சாசத் என்ற நூல் சிவமூர்த்தங்களுடைய கௌரவப் பிரபாவங்களையும், சதாத்தியாயம் என்கிற நூல் தலம், தீர்த்தம் என்கிற இரண்டின் கௌரவப் பிரபாவங்களையும், காமசட்சி விலாசம் என்கிற நூல் மஹாதேவியினுடைய கௌரவப் பிரபாவங்களையும் எடுத்துக் கூறும்.

இம்மூன்றனுள் பஞ்சாசத் என்ற நூலைத் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துத் திராவிட மஹாபாஷ்ய கர்த்தராகிய சிவஞான யோகிகள் தென்மொழியிலே காஞ்சிப் புராணம் முதற்காண்டம் என்னும் பெயரினால் செய்தருளினார். சதாத்தியாயம் என்கிற நூலை மேற்படி சிவஞான யோகிகள் மாணாக்கருள்ளே சிறந்த கச்சியப்ப முனிவரர் காஞ்சிப்புராணம் இரண்டாம் காண்டம் என்னும் பெயரினாலே தமிழிலே செய்தருளினார்.

காமாக்ஷி விலாசம் என்கிற நூல்...திருவேகம்ப நாதர் பூஜகரும், எனது ஞானாசாரியரும் ஆகிய ஸ்ரீமத் முத்துகச்சபேச்வர சிவாசார்ய சுவாமிகள் கட்டளையின்படி காமக்கோட்ட புராணம் என்னும் பெயரினால் பாடிக்கொண்டு வருகின்றேன். சீக்கிரமே முடிந்து அச்சு வாகனம் ஏறி வெளிவரக்கூடும்.

இஃதன்றித் தென்மொழியில் கலித்துறை காஞ்சிப்புராணம் என ஒன்றும், பண்டைய காஞ்சிப்புராணம் என ஒன்றும் காணப் படுகின்றன. இவ்விரண்டும் சொற்சுவை பொருட்சுவைகளில் தனக்குத் தானே ஒப்பானவை. முறையே இதன் ஆசிரியர் பிள்ளையார் பாளையம் ஆளவந்த தேசிகர் ஆதீனத்துச் சிதம்பர தேசிகர் என்றும், வாலியூர் பிரதாப முதலியார் என்றும் கூறு கின்றனர். இப்புராணம் இரண்டனுள்ளும் கூறப்பட்டுள்ள சரித்திரம் வேறு என்று மயங்கவேண்டாம். முதல் இரண்டு காண்டம் அடங்கிய காஞ்சிபுராணத்துள் கூறப்பட்ட சரித்திரங் களேயாம்.

இவ்விரண்டு புராணத்தையும் தக்கோலம் ஐயா செல்வப்ப நாகமணி முதலியார் அவர்கள் குமாரர் ஆகிய இராமசாமி முதலியார் இராமகிருஷ்ண முதலியார் என்னும் வித்வஜன பரிபாலகர் வேண்டுகோளின்படி அவர்கள் செலவில் பல கையெழுத்துப் பிரதிகள் கொண்டு செவ்வையாகப் பரிசோதித்து அரும்பத உரையுடன் அச்சிடலாம் என்று முயன்று வரு கின்றேன்.''

வண்ணக்களஞ்சியம் நாகலிங்க முனிவரின் கூற்றின்படி, காஞ்சியம் பதியைப் பற்றி வடமொழியில் காமாக்ஷி விலாசம், பஞ்சாசத், சதாத்தியாயம் ஆகிய நூல்களில் கூறியவற்றை அடிப் படையாகக் கொண்டே தமிழில் இத்தலத்திற்குப் புராணங்கள் எழுந்தன என்பது தெளிவாகும்.

இவற்றுள் சிவஞான யோகிகளும் கச்சியப்ப முனிவரும் காஞ்சிப்புராணத்தை இரண்டு காண்டங்களாக முறையே பஞ்சாசத், சதாத்தியாயம் என்னும் வடமொழி நூல்களின் பெயர்ப்பாகத் தமிழில் செய்தருளியுள்ளனர். காமாக்ஷி விலாசம் என்ற வடமொழி நூலின் தமிழ்ப் பெயர்ப்பாகிய காமக்கோட்ட புராணம் வண்ணைக் களஞ்சியம் நாகலிங்க முனிவரால் இயற்றப் பெற்றுள்ளது. ஆயினும் இது இன்று கிடைப்பதாகத் தெரிய வில்லை.

இதேபோன்று தமிழிலுள்ள கலித்துறை காஞ்சிப்புராணம் மற்றும் பழைய காஞ்சிப்புராணம் ஒன்றையும் இவர் பதிப்பித்த தாகத் தெரிகின்றது. இவற்றுள் சிதம்பர தேசிகர் இயற்றிய கலித்துறை காஞ்சிப்புராணம் மட்டுமே வெளிவந்ததாகத் தெரி கின்றது. வாவியூர் பிரதாபமுதலியார் இயற்றிய பழைய காஞ்சிப் புராணம் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் தேடி வைத் திருந்த 'பழைய காஞ்சிப்புராணம்' ஒன்று அவர் காலத்தில் அச்சிடப் பெறாமல் இருந்தது அண்மையில் (1983) வெளிவந் துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். ஆளவந்தார் ஆதீனக் கச்சாலையர் இயற்றிய இக்காஞ்சிப்புராணம், காமாட்சி ஏகம்பவாணர் புராணம், ஏகம்பர் புராணம், கம்பர் புராணம், காஞ்சியம் புராணம் என்றும் அழைக்கப் பெறும்.

## முதலில் தோன்றிய பழைய காஞ்சிப்புராணம் (கம்பர் புராணம்)

கச்சி ஆளவந்தார் ஆதீனத்துக் கச்சாலையார் என்பவர் முதன்முதலில் இப்பதிக்கு இயற்றிய புராணம் இதுவேயாகும். இவருக்குக் கச்சாலை அகளங்கர் என்றும், பூரண லட்சண கச்சாலை போதர் என்றும் பெயர் இருந்ததாக அறிகிறோம். காழிவள்ளல் சந்தானத்துச் சோமானனன் என்ற பெரியாரின் சீடர் இவர் என்று தெரிகிறது. இவர் பாரதத்தையும் கச்சிக் கோவையையும் பாடியுள்ளதாகவும் தெரிகிறது. ஆயின், அந் நூல்கள் கிடைத்ததாக அறியக் கூடவில்லை. இந்நூலாசிரியர் வாழ்ந்த காலமும் பிற வரலாறுகளும் முழுவதும் தெரியவில்லை.

இப்புராணத்தில், பாயிரச்சருக்கம், சிவாலயச் சருக்கம், அரிதிருமுற்றச் சருக்கம், தீர்த்தச் சருக்கம், அபிதானச் சருக்கம், கயிலாயச் சருக்கம், உமைவரு சருக்கம், நகரச் சருக்கம்,

நகர்காண் சருக்கம், பூசைச் சருக்கம், தர்மச் சருக்கம் எனப் பன்னிரு சருக்கங்களும் 1272 விருத்தங்களுமுள்ளன.

இந்தப் புராணம் அலங்கார அமைப்புகள் பெரிதுமின்றி அழகிய தென்றல்போல் மென்மையாக இயங்குகின்றது. தெளிவாகவும், இனிமையாகவும், நடை செம்பாகமானதாகவும் உள்ளது. புலமையைக் காட்டவேண்டும் என்னும் எண்ணம் இந்நூலாசிரியருக்கு இல்லை. புராணங்கள் காவிய வடிவம் பெறுவதற்கு முன் தோன்றிய புராணமாக உள்ளதால் இப் புராணத்தில் நாட்டுப்படலமும் நகரப் படலமும் இல்லை.

இப்புராணத்தின் இதயம்போல் பொலிவது பிராட்டி பூசையும், இறைவி தழுவ இறைவன் குழைந்து தழும்பு பெற்றதும் ஆகும். இக்காட்சியை ஆசிரியர் விவரிக்கும் திறம் வியத்தற்குரியதாகும்.

> "கடிதுதிரு வுருவில்விழுந் திருதனத்தில்
> நெருக்கி வளைக்கரத்தால் சேர்த்தித்
> தடநெடிய மார்பகத்துள் அடக்கிமுடி
> மீதுமுகம் தாழ்த்திக் கண்ணீர்
> படஇதுவும் ஒன்றெனவே திரும்பியுளம்
> பதைபதைக்கப் பனிக்கும் அன்பில்
> வெடவெடென உடல்மடுத்துத் தழீஇனள்அப்
> பரிவினையார் விளம்பற் பாலார்".

(பூசைச் சருக்கம், பா. 1104)

அடுத்து, பிராட்டி பெருமானைத் தழுவிய காட்சியை விவரிக்கிறார். சக்தியும் சிவனும் கலந்ததால் உலகில் உள்ள ஆண் வர்க்கமும் பெண் வர்க்கமும் இன்பம் உற்றன என்கிறார். (பா. 1105)

மறைக்கும் அளவுபடாத சிவன் திருமேனி அம்மையின் கரங்களுக்குள் அடங்கிவிட்டது. சிவலிங்கத்தில் இருக்கும் முலைத் தழும்பு ஆண்மையைப் பெண்மை வெற்றி கொள்ளும் என்பதை எழுதி வைத்த 'விருது' போன்றது என்கிறார்.

> "மெய்யளவு படுமறையி னளவுபடாச்
> சிவனுருவு விமலை செய்ய
> கையளவு பட்டதவன் அல்லாம லளவுபடக்
> காண்பார் யாரே?

செய்யமலை முலைத்தழும்பங் காண்வடிவைப்
பெண்வடிவு செயமே செய்ய
ஐயன்முதல் திருமேனி தனிலெழுது
பெருவிருது மனைய தாமே".

(பா. 1106)

அம்மை தழுவியபோது பெருமான் பெற்ற ஆனந்தத்தை அடுத்த பாடலில் விவரிக்கின்றார் ஆசிரியர்.

"அம்மைதழு வக்குழைந்து விழைந்திழைந்து
தழைந்துவியந் தவிர்ந்து சோதி
செம்மைபெறக் கவின்றுபுள கித்திறுமாந்
தினிமைதலை சிறந்து வாழ்ந்து
மெய்ம்மைபடக் குளிர்ந்துயர்ந்து வளர்ந்துதற்ப
ரானந்தம் விளங்கி யோங்க
வெம்மடிமை யுடையபிரான் முலைச்சுவடும்
வளைச்சுவடும் இசைந்தா ரன்றே. (பா. 1107)

இறைவர் அம்மை தழுவியதும் முதலில் விழைந்தார். பிறகு அம்மையுடன் இழைந்தார், அதன்பிறகு தழைந்தார் வியந்தார்; அவிர்ந்தார்; கவின்றார்; புளகித்தார்; இறுமாந்தார், இனிமை சிறக்க வாழ்ந்தார்; குளிர்ந்தார்; உயர்ந்தார்; வளர்ந்தார். முடிவில் ஆனந்தம் விளங்கி முலைச்சுவடும் வளைச் சுவடும் தன் திருமேனியிற்பட இறைவியுடன் ஒன்றுபட்டார் என இவ்வாறு அழகுபட எடுத்துரைக்கும் இந்நூலாசிரியரின் இலக்கியத்திறம் வியந்து போற்றற்குரியதாகும்.

இத்தகைய நயம்மிக்க பாடல்களின் சிறப்பாலேயே பின் வந்த புராண ஆசிரியர்களும் தம்முடைய நூல்களை அமைத்தனர் எனலாம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றன்பாலும் இத்தல புராண ஆசிரியர் கொண்ட பக்தி ஈடுபாட்டிற்கு அளவே இல்லை எனலாம்.

**தலம்**

மற்றைய உலகங்கள் பிரம்ம தேவனின் படைப்பு. ஆனால் காஞ்சிபுரம் சிவபரம் பொருளால படைக்கப்பட்டது என்று குறிப்பிடுகின்றார் ஆசிரியர் கச்சாலையார்.

"நன்மையாம் பொருள் யாவும் நண்ணிடும் ஐம்பூ தத்தின்
தன்மைய தன்று; பூதம் தாவரும் குணங்கள் யாதும்

இன்மையால் படைப்போன் தன்னால் இயற்றிய தன்று;
சோதிச்
சின்மயம் ஆகி நிற்கும் சிவனது சிருட்டி யாமால்".
(பாயிரம். 46)

காஞ்சிபுரம் பராசக்தியின் திருவருளின் வடிவம் என்று இந் நூலாசிரியர் குறிக்கின்றார். 'பிராட்டி கருணையின் உருவா குமக் காஞ்சிமாநகரம்' (138) 'இத்தலம் பரை அருளுருவாம்' (576) என இவ்வாறு பலவிடங்களிலும் குறிக்கக் காணலாம்.

**தலவிருட்சம்**

காஞ்சியின் கண்ணுள்ள மாமரம் (தலவிருட்சம்) வேதத்தின் வடிவம் என இக்காஞ்சிப்புராண ஆசிரியர் தம்முடைய நூலெங்கும் பாடிப் பரவக் காணலாம்.

"மறைஉருவாய்ச் சொற்பிரம மயமாகிப்
பெருஞான வரம்ப தாகி
இறை உருவாய் மாவடியாய் அகிலகலைச்
சினைப்பொதுளி யாவ ராலும்
அறிவரிதாய்ப் பராமரமூத் திலையடிய
வர்க்குதவி யருள்வான் காஞ்சி
நிறைதனிமா நிழலடைந்து பிறவிவிடாய்
ஒழிதரவே நினைத்தும் அன்றே"—

எனப் பாயிரத்திலேயே மாநிழலை வணங்குவர். (2)

வண்ணமா மறை வடிவமாம் தனிப்பெருமா (141) என்றும்; அகிலவித்தையும் அங்கமும் சாகைகள் ஆகப்புகலும் மாமறை ஆம்பர தருவதாய்ப் பொலிந்தே (365) என்றும்; மாவும் மாமறைப் படிவம் (567) என்றும்; வேதம் ஒரு மாவாக உறை தலினால் (580) என்றும்; மறைத்தனி மா (575) என்றும்; ஆதி வேத அருங்கலையாவுமாய்ப் பூதபேத புவனம் பிறந்திடும்—சூத நீழல் (797) என்றும்; ஆன்ற மாமறை ஆம்பரம் (801) என்றும்; நல்லமாமறைமா (990) என்றும்; கலைதிகழ் சுருதிவண்ணக் கன்னியந்தனிமா நீழல் (1061) என்றும்; திருமறையாம் ஒரு தனிமா (1117) என்றும் ஆசிரியர் மாமரத்தை வேதத்தின் வடிவம் என்றே சுட்டக் காணலாம்.

**சைவ சித்தாந்தக் கருத்துக்கள்**

பழைய காஞ்சிப் புராணம் பாடிய இக் கச்சாலையார் சைவ சித்தாந்தத்தை முறையாகப் பயின்றவர். முப்பொருள் (பதி,பசு,

பாசம்) உண்மையை நம்பும் பாங்குடையார் ஆவார். "பெருமல பரிபாகத்தின் பேற்றினைக் குரவன் உன்னி விரவும் முப்பொருளும் ஆய்ந்து வீடுபேறு அடைதல் சால அரிது அரிது' (பா. 73) என்று கூறும் பகுதியால் இதை உய்த்துணரலாம்.

உலகப் படைப்பு ஆன்மாக்களின் ஆணவமலத்தை அகற்றுதலுக்காகவே ஆகும். இதனை, 'பசுவலிசேர் வினை அழுந்தி மலம் அகற்ற அயன் அகிலம் படைத்து மேவும்' (752) என்று இந்நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். உலகைச் சங்காரம் செய்வது ஆன்மாக்களுக்கு ஓய்வு தருவதற்கே என்றுங் கருத்தை.

"கால சங்கையின் கணக்கிறந் திறுதியாங் காலை
மூல ஆருயிர் இளைப்பினை மாற்றுவான் முன்னி
பால நாட்டத்தெம் இறையவன் பார்முதல் அகில
காலமும் தொலைத்து இருந்தனன் கவுரியும் தானும்".

(பா. 275)

என்னும் பாடல் விளக்கக் காணலாம்.

ஆன்மாக்கள் பலவிதமான பிறவிகள் எடுத்துத் தளர்ச்சி அடையும்போது, அவையாவும் அமைதியாக இருக்க இறைவன் பிரளயத்தை உண்டாக்குகின்றான். அப்போது ஆன்மாக்கள் எவ்விதமான விகாரமும் இன்றி அமைதியாக இருக்கும் என்பர்.

சிவஞானபோதம் முதற் சூத்திரம் இதனைச் சுருக்கிக் கூறும். 'உள்ளதாகிய உலகம், கருமமலம் பரிபாகம் ஆதற்பொருட்டு ஒடுங்கி; ஆணவமலம் பரிபாகம் ஆதற்பொருட்டு மீளவும் உண்டாம். இந்தக் கருத்தை 'மலத்தால் ஆம்' என்றார் மெய்கண்டார்.

இங்குப் பாலநாட்டத்தெம் இறை என்றது நெற்றியிற் கண்ணை உடைய சிவபிரானை, சிவபிரானின் வலக்கண் தொழில் புரியச் செய்யும். இடக்கண் உறங்கச் செய்யும், நெற்றிக்கண் சாந்தியை வழங்கும். ஆதலின் இங்கு ஆசிரியர் நெற்றிக்கண்ணைப் பற்றிப் பேசுவது சாத்திர வழக்குடன் இசைந்துள்ளது என்பார் இந்நூல் உரையாசிரியர் திரு கம்பராமன் அவர்கள்.

சிவஞான போதத்தின் முதற்சூத்திரம் சைவசித்தாந்தத்தின் மூல வித்தாக வுள்ளது.

அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
தோற்றி திதியே ஒடுங்கி மலத்து உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

என்னும் முதற்சூத்திரம் சகம், பிறப்பு, இருப்பு, இறப்பு ஆகிய முத்தொழில்கட் குட்பட்டது. அது அதனாலேயே உடையது. மற்றிருவர்களும் முத்தொழிற்படுவார்கள் என்னும் மூன்று கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதனை,

"அகில காரண னேசிவன்; அவன் பரம்; என்றே
சகல பூரணம் ஆகிய குடிலை முன் சாற்ற
உவகை ஆகியே யாவையும் தோன்றியே ஒடுங்கப்
புகலதாம் அரன் பதிஎனப் புகன்றதா இருக்கும்"

(பா. 364)

எனவரும் இப்பழைய காஞ்சிப்புராணப் பாடல் தெளிவாகப் புலப்படுத்தக் காணலாம்.

சிவஞானபோதம் நான்காம் சூத்திரம் ஆன்மாக்கள் சிவத்தை உணர முடியாதபடி ஆணவமலம் மறைக்கிறது என்பதை 'ஆன்மா சகசமலத்து உணராது' என்னும் தொடரால் குறிப்பித்தது. வழிநூலான சித்தியாரும் 'ஞானச்செய்தி அநாதியே மறைத்து நிற்கும் பசுத்துவம் உடையன் ஆகிப் பசு என நிற்கும் ஆன்மா' என்று கூறிற்று.

'சிவஞான போதத்தால் சென்மவிடாய் தீர்ந்து சிவஞான சித்தியால் தேறுதல்' என்பது வள்ளல் மரபினர் மேற்கொண்ட முறையாகும். அம்மரபின் இயல்பை உணர்ந்த இப்பழைய காஞ்சிப் புராண ஆசிரியர் கச்சாலையாரும் ஆணவமலம் ஆன்மாவின் அறிவை மறைக்கிறது என்பதை,

"வாவிதாம் உணர்வினை மலம் மறைக்கும்; அம் மறைப்பை
ஏலவே எமதுஅருள் இன்றி நீக்குதல் எளிதோ" (பா. 374)

என்று மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

மலத்தில் தோய்ந்த ஆன்மாக்கள் திருவருள் வீழ்ச்சியால் (சத்திநிபாதத்தால்) தெளிவு பெறுகின்றன. 'சத்திநிபாதத்தால் கழிப்பன் மலம்' என்று சிவஞானசித்தியார் விளக்குகின்றது. இதனையே இப்புராண ஆசிரியர்,

"பார விடுறும் அன்புதான் சத்தினிபாத
நீரதாய் உடனே முத்தி பெறலரு நிலைத்தாம்" (பா. 440)

என விளக்கக் காணலாம்,

**தாய் மருந்துண்டால் அது குழந்தைக்கு நன்மை செய்யும்**

குழந்தைக்கு நோய் வந்தால் அந்நோயை நீக்கத் தாயே மருந்துண்பாள். அம்மருந்தை உட்கொண்ட தாயின் பாலே மருந்தாகிச் சேயின் நோயைப் போக்கும். மருந்தின் வெப்பத்தைத் தாங்கும் ஆற்றல் சேயின் மெல்லிய குடலுக்கு இன்மையின், தாயை மருந்துண்ணும்படி மருத்துவ நூல்கள் வற்புறுத்துகின்றன.

காஞ்சிப் புராணத்தில் கயிலாயச் சருக்கத்தில், பரிகாரம் செய்வதற்கேற்ற இடத்தைப் புகல்க என்று அம்மை வேண்டுகிறாள். "ஆருயிர்க் கூட்டம் பிராயச் சித்தம் செய்யும் ஆற்றல் அற்றது. அதற்குப் பதிலாக நீயே செய்க. தாய் மருந்துண்டால் அது குழந்தைக்கு நன்மை செய்யும். உயிர்க் கூட்டம் செய்ய வேண்டிய கடமைகள் செய்யாமையால் உண்டான பாபத்திற்கு உயிர்களின் தாயான நீயே பிராயச் சித்தம் செய்க" என்று இறைவன் கூறியருளுகிறான்.

"மாது கூறலும் தூயதென்று இறைவன் இவ்வகை மேவும்
தீது தீர்ப்பது ஆருயிர்த் தொகைக்கு இயன்றிடும் திறம்அன்றால்
நீதி யாகவே அகற்றிடப் படுவது நீ அன்னை
வாதி யாது நோய் புதல்வரை அன்னையே மருந்துண்ணில்"
(பா. 905)

என்பது மிக அருமையான கூற்றாகும்.

இதையே கச்சியப்ப முனிவர், "இளங்குழவிப் பிணிக்கின்ற தாய் மருந்து நுகர்வதுபோல் இருளின் மாண்ட களங்குலவும் மலம் உயிர்கட்கு ஒழிய அருள் நடம் காணும் கடன் மீக்கொண்டு" என்று திருவானைக்காப் புராணத்தில் பாடுகின்றார். (கடவுள் வாழ்த்து. பா. 7.)

"பால்உண் குழவி பசுங்குடர் பொறாதெனை—நோயுண் மருந்து தாய் உண்டாங்கு - மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்பத் - திருமண் சாயல் திருந்திழை காணச் சிற்சபை பொலியத் திருநடம் புரியும் அற்புதக் கூத்த" என்பர் குமரகுருபரர் (சிதம்பர மும்மணிக்கோவை. 2).

**வைதிக சமயம் ஒன்றுபட விழைதல்**

இந்து சமயத்தின் இருகண்களான சைவம், வைணவம் ஆகிய இரண்டிலும் தல புராணங்கள் பல உள்ளன. பொதுவாக,

வைணவத் தலபுராணங்கள் அத்தலத்திலுள்ள சிவத் தலங்களைப் பற்றிக் கூறுவதில்லை. அதே போன்று சைவத் தல புராணங்களும் அத்தலத்திலுள்ள வைணவத் தலங்களைப் பற்றிக் கூறுவதில்லை. ஆயின், இதற்கு மாறாகப் பழைய காஞ்சிப் புராணமாகிய இக் கம்பர் புராணத்தில் அரிதிருமுற்றச் சருக்கத்தில் அத்திகிரி அருளாளன் வரலாற்றைக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக, சைவ சித்தாந்திகள் பகவத்கீதையை மதிப்பதில்லை. அதற்கு உடன்படுவதுமில்லை. சித்தியாரே,

"பார்த்தனார் இரதம் ஏறிப்
　　படைதனைப் பார்த்துச் சார்பைக்
கூர்த்தஅம் பாலே எய்து
　　கொன்று அரசாளேன் என்னத்
தேர்த்தனில் இருந்து மாயை
　　செய்துமால் கொல்லச் செய்யும்
வார்த்தைநூல் ஆக்கிக் கொண்டாய்
　　புறம்கொள் நூல்மதித்திடாயே."

என்று பேசுகின்றது.

ஆயின், காழிக்கண்ணுடை வள்ளல் மரபினர் கீதையைப் போற்றிப் பரவுவர். 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்னும் வாக்கிற்கேற்ப வள்ளல் சந்தானம் பகவத்கீதையைப் பிரமாண நூலாக மேற்கொண்டுள்ளது. சிவஞான வள்ளலார் சத்திய ஞான போதத்தில், 'அருச்சுனர்க்காக அமரிடை இருந்தாங்கு-உணர்மெய்ஞ்ஞானம் உரைத்தவன் எவனோ அவனே பிரமம் என்று அறி மனனே' (2ம் காண்டம். 6) என்று கூறினர். அவர் மரபில் வந்த இக் கச்சாலையாரும்,

"அரிதிருப் பதக் கடகமாம் பாடகம் அதையே
இருகையிற் பிடித்து எமரையான் கொலை செய்தற்
　　　　　　　　　　　　　　　　கிசையேன்
கருணை உற்றருள் என்றதும் உண்மைநூற் கருத்தைத்
தெருள் உறுத்தி மால் இருந்திடும் தலம் அது செப்பின்"
　　　　　　　　　　　　　　　　(பா. 644)

என்று பாடி வைதிக சமயம் ஒன்றுபட்டு உயர வழிகாட்டுகின்றார். 'உண்மை நூற் கருத்தைத் தெருள் உறுத்தி' என்று ஆசிரியர் கீதையின் சிறப்பை இணைத்துப் பாராட்டுவது குறிக்கத்தக்கது.

இத்தகைய சிறப்புக் கூறுகளைப் பலரும் எடுத்துக் கூறின் இந்துசமயம் ஒன்றுபட்டு உலக சமயமாகவே மாறி அமையலாம்.

**உண்மை வெறும் புகழ்ச்சியில்லை**

பல கோவில்கள், பல பெயர்கள், பல தீர்த்தங்கள், பல புதுமைகள், பல தருமங்கள், உயர்ந்துள்ள காஞ்சி மாநகரில் இறைவி பல பல தவங்கள் செய்து பூசை செய்தனள். இதனால் இத்தலத்தின் சிறப்பை அறியாதவர்களும் இத்தலத்தை அடைந்தால் முக்தி அடைவார்கள். இது, **சரத உண்மைச் சத்தியம்** என நூலாசிரியர் உறுதிபடப் பேசுவர்.

“பலபல கடவுள் தானம் பலபல வியல்சேர் நாமம்
பலபல சிவதீர்த் தங்கள் பலபல புதுமை மற்றும்
பலபல தரும மோங்கும் பதியத னிடையே யம்மை
பலபல தவமே செய்து பலபெரும் பூசை யாற்றும்”

“இத்தல மித்தன் மைத்தென் றெண்ணினு மெண்ணாரேனும்
அத்தலத் துறுவா ராகில் அருடரு பெருமா னன்பான்
முத்தியை யடைவர் யாரும் மொழியிது **சரத வுண்மைச்**
சத்திய மீன மீளச் சாற்றினன் தெளிவு கூர்ந்தே”.
(பாயிரம். 59, 60)

இவ்வாறு இந்நூல் முழுமையும் காஞ்சி மாநகரின் பெருமையும், கச்சி ஏகம்பரின் சிறப்பும் மிக அழகாகவும் சுவை படவும் பாடியுள்ளமை குறிக்கத்தக்கதாகும்.

சேக்கிழார் பாடிய திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில் தொண்டை நாட்டைப் பற்றி மட்டும் 110 பாடல்களில் விவரிப்பர். இவ்விரிவுக்குக் காரணமாயமைந்தது காஞ்சிபுரம் என்னும் திருத்தலமே. இந்த 110 பாடல்களே காஞ்சிப்புராணத்திற்கு மூல வித்துக்கள் என்பர்.

**கடல் கடந்து வந்த தலபுராணம்**

டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் பால்பேரன்பு கொண்ட பிரஞ்சு நாட்டு வின்சோன் துரை தம் மாணாக்கரான பொன்டெனூர் என்பவரை ஐயர் அவர்களைக் கண்டு பேசி வரும் படி அந்நாளில் (1902) அனுப்பியிருந்தார். பொன்டெனூ அவர்கள் தாம் போகும் மகா சபையில் ஏதேனும் ஒரு பழைய தமிழ் நூலைப் பற்றிய கட்டுரை ஒன்றைத் தாம் வாசிக்க விரும்புவதாகவும், அதற்கேற்ற பழைய நூற்பிரதி ஒன்றை

வழங்கி உதவுமாறும் ஐயரவர்களைக் கேட்டுக் கொண்டார். ஐயரவர்களும் தாம் அரிதின் முயன்று தேடி வைத்திருந்த பழைய காஞ்சிப் புராணப் பிரதியை அவருக்கு அனுப்பி வைத்தனர். அவரும் அதனைப் பயன்படுத்திக் கொண்டு ஐயரவர்களுக்குத் திருப்பி அனுப்பி வைத்தார். டாக்டர் ஐயர் அவர்கள் நினைவு மஞ்சரியில் (முதற்பாகம்) 'கடல் கடந்த தமிழ்' என்னும் தலைப்பில் வரைந்த கட்டுரையில் இதைப் பற்றிக் குறித்துள்ளார்.

"வில்லைப் புராணத்தையும், பழைய காஞ்சிப் புராணத்தையும் ஐயரவர்கள் கடல்கடந்து சென்று வந்த தலபுராணங்களாக எண்ணி மகிழ்வர்.

"வில்லைப் புராணத்தையும் பழைய காஞ்சிப் புராணத்தையும் பார்க்கும்போதெல்லாம் பிரெஞ்சு தேசத்துத் தமிழாசிரியரையும் தமிழ் மாணவரையும் நினைக்கிறேன். அவ்விரண்டு நூல்களுள் காஞ்சிப்புராணம் இன்னும் வெளிப்படவில்லை.

"ஜூலியன் வின்ஸோன் இப்பொழுது இருந்தால் அதனை (பழைய காஞ்சிப்புராணம்) வெளிப்படுத்த வேண்டும் என்று நூறு கடிதங்களாவது எழுதியிருப்பார். அவர் இல்லை. ஆனால் அவர் அன்போடு எழுதிய கடிதங்கள் இருக்கின்றன" என்று ஐயரவர்கள் மகிழ்வோடு நினைவு கொள்ளும் வகையில் இப் பழைய காஞ்சிப்புராணச் சுவடி அவரிடமே இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். வில்லைப் புராணத்தை மட்டும் ஐயரவர்கள் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள். இப்பழைய காஞ்சிப் புராணத்தை அவர் பதிப்பிக்க வில்லை. இப்புராணம் 1983இல் பதிப்பாசிரியர் எஸ்.கே. இராமராஜன் (கம்பராமன்) அவர்களால் பதிப்பிக்கப் பெற்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடாக வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**காஞ்சிப் புராணம்**

இப்புராணம் இரண்டு காண்டங்களையுடையது. முதற் காண்டத்தைப் பாடியவர் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து திராவிட மாபாடிய கர்த்தராகிய சிவஞான முனிவராவார். இரண்டாம் காண்டத்தைப் பாடியவர் சிவஞான முனிவரின் தலையாய மாணாக்கராகிய கச்சியப்ப முனிவராவார்.

முதற்காண்டத்தில் மட்டும் 65 படலங்களும் 2743 பாடல்களும் உள்ளன. இவற்றுள் அநேகதங்காவதம், கச்சபேசம், கச்சி மயானம், குமரகோட்டம், திருநெறிக்காரைக்காடு, திருமேற்றளி, திருவோணகாந்தன்தளி, திருமாற்பேறு போன்ற பல தலங்களுக்குரிய வரலாறுகளும் தனித்தனி படலங்களில் விளக்கப் பெறுகின்றன.

இரண்டாம் காண்டத்தில் 7 படலங்களும் 2113 பாடல்களும் உள்ளன.

சிவஞான முனிவர் காஞ்சிப் புராணத்தை ஆக்கிய முறை மிகவும் போற்றற்குரியதாகும். முதற்கண் நாட்டுப் படலம் நகரப் படலங்களை மிக அழகுபடச் செய்து, பின்பு, தலவரலாறுகளை, கிழக்குத் திசையில் ஞானசம்பந்தர் திருப்பாடல் பெற்ற திருத்தலமாகிய திருநெறிக்காரைக் காட்டிலிருந்து தொடங்கி முறைப்பட வலமாகக் கூறிச் சென்று முடிவில் திருவேகம்ப வரலாற்றையும், அம்மையார் வழிபட்டு வெள்ளங்கண்டு வெருவி இறைவனைத் தழுவிக் கொள்ள, இறைவன் திருமேனி குழைந்து காட்டிய வரலாற்றையும் கூறி, பின்னர்த் திருமணம் மொழிந்து, அதன் பிறகு காஞ்சியம்பதிக்கண் இன்றியமையாது கூறவேண்டிய சிறப்பாகிய அற்புதங்களையும், அதன் பிறகு புராணம் கேட்டற்குப் பயன் ஒழுக்க நெறியில் நிற்றலே யாதலால் அவ்வொழுக்கத்தையும் விளக்கி, அவ்வொழுக்கத்திற்குப் பயனும் இறைவன் திருவடிப் பேற்றிற்கு முடிந்த சாதனமும் புண்ணியமே யாதலால் அதனை இறுதியிற் கூறி இனிது முடித்துள்ளார்.

ஒவ்வொரு தலங்கட்கும் ஒவ்வொரு படலம் அமைத்து, மிகச் சுருங்கிய வரலாறுடைய தலங்களை அவற்றிற்கு அணிமையிலுள்ள விரிந்த வரலாறுடைய தலப் படலத்தில் இரண்டொரு செய்யுட்களால் கூறிச் செல்கின்றனர். திருவேகம்பத்தில் கச்சி மயானம் நீங்கலாக உள்ள தலங்களில் வாலீச்சரம், வெள்ளக் கம்பம், கள்ளக் கம்பம். நல்ல கம்பங்களைத் திருவேகம்பப் படலத்திலும், ஏனையவற்றைத் தழுவக் குழைத்த படலத்திலும் கூறியிருக்கின்றனர். கங்கணேசம், கடகேசம், யுகேசம் என்பவைகள் மாத்திரமே வரலாற்றியைபு பற்றி முறையே தழுவக் குழைத்த படலத்திலும், சிவபுண்ணியப் படலத்திலும் வைக்கப் பட்டன. ஏனையவெல்லாம் அவ்வத் தலங்கள் அமைந்துள்ள இடமுறை பற்றியே கூறப்பட்டுள்ளன.

திருமுறைகளின் பொருளை யறிதற்குப் பெரிய புராணம் இன்றியமையாதவாறுபோல, மெய்கண்ட நூல்களின் பொருளை யாவரும் எளிதில் விளங்க அறிவதற்கும், உபநிடதம் முதலிய வடநூல்களுக்கு உண்மைப் பொருள் காண்டற்கும் இக்காஞ்சிப் புராணம் இன்றியமையாததாகும்.

ஆசிரியர் சிவஞான சுவாமிகள் தாம் வடமொழியில் உப நிடதங்களிலும் புராணங்களிலும் கண்ட அரிய கருத்துக்களை யும், சிவாகமப் பொருள்களையும், சைவ முறைகளையும் இப் புராணத்துள் நிறைத்து வைத்திருக்கின்றனர். பல உபநிட வாக்கியங்களையும், புராண வசனங்களையும் உண்மைப் பொருள் விளங்க மொழிபெயர்த்தும், பல வடசொற்களுக்குச் சொல் மூலங்களும், அவற்றிற்குப் பொருள்களும் இதன்கண் கூறியுள்ளார். சில மந்திரங்களுக்கும் பொருள் உரைத்திருக் கின்றனர். வடநூல் வழக்குப் பற்றிப் பல வடசொற்களுக்கு வியாகரணப்படி பலவகைப் பொருள் கூறுகின்றார். பாஞ்ச ராத்திரிகள் முதலியோர் சிவபரத்துவத்தை மறைத்தற்கு வட மொழி வாக்கியங்களுக்குக் கூறும் பொருள்களை மறுத்து உண்மைப்பொருள் கூறிச் சைவத்தை நிலைநாட்டுதல் வேண்டு மென்பது ஆசிரியர் இப்புராணத்தை இயற்றிய நோக்கங்களில் முக்கியமானதொன்றாகும். இதனை இந்நூல் கற்பார் எளிதில் அறியலாம்.

இரு நூலாசிரியர்கள் இயற்றிய இந்நூலில் புனைந்துரை களும் உவமை முதலிய அணிகளும், சொல்லணிகளும் சித்திரக் கவிகளும் சேர்ந்து இலக்கியச் சுவைக்கும் இப்புராணம் ஓர் ருவூலமாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**காஞ்சியில் பிற கோயில்கள்**

காஞ்சிபுரத்தில் சிறப்புமிக்க கயிலாய நாதர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில், கச்சபேசம் முதலிய எண்ணற்ற கோயில்கள் உள்ளன. இருப்பினும் பாடல்பெற்ற திருமுறைத் தலங்கள் எனப்படுபவை ஐந்தேயாகும். அவை, திருவேகம்பம், திருமேற்றளி, ஓணகாந்தன்தளி, கச்சிநெறிக் காரைக்காடு, அநேகதங்காவதம் என்பன. இவற்றுள் 'பெரிய கோயில்' என்று அழைக்கப்பெறும் கச்சித் திருவேகம்பத்தைச் சிறப்பித்து எழுந்ததே காஞ்சிப்புராணம். காஞ்சியின் சிறப்பு முழுவதும் இந் நூலில் சிறப்பிக்கப் பெறுவதால் மற்றுமுள்ள நான்கு பாடல்

பெற்ற சிவத்தலங்களுக்கும் தனியே தலபுராணங்கள் இயற்றப் பெறவில்லை என்று தோன்றுகிறது.

இவற்றுள், திருக்கச்சிமேற்றளி என்னும் திருமேற்றளீசுவரர் கோயில் திருமால் தவமிருந்து, சிவசாரூபம் பெற்ற வரலாற்றுச் சிறப்புடையது. நூற்றெட்டு ருத்திரர்களும் இங்குப் பூசித்துப் பேறு பெற்றுள்ளனர்.

ஓணகாந்தன்தளி என்னும் தலத்தில் வாணாசுரனுடைய சேனாதிபதிகளான ஓணன், காந்தன் என்னும் இருவரும், சலந்திரனும் வழிபட்டதாகக் கூறுவர். இம்மூவரின் பெயரிலும் இத்தலத்தில் சிவலிங்கங்கள் உள்ளன.

கச்சி அனேகதங்காவதம் என்னும் தலத்தில் விநாயகர் சிவலிங்கத் திருமேனியை வைத்து வழிபட்டதாகக் கூறுவர். அனேகதம்—யானை. யானை முகத்தையுடைய விநாயகர் வழிபட்ட தலம். குபேரனும் இங்கு வந்து வழிபட்டுள்ளான்.

கச்சிநெறிக்காரைக்காடு என்பது இப்பொழுது திருக்காலி மேடு என வழங்குகிறது. சம்பந்தர் காலத்தில் காரை முட் செடிகள் நிறைந்ததும் காஞ்சிக்குச் செல்லும் வழியாகவும் இருந்ததால் கச்சிநெறிக் காரைக்காடு என்று பெயர் பெற்ற தாகக் கூறுவர். இந்திரன் வழிபட்டதால் இந்திரபுரி என்றும் இதற்குப் பெயர். புதனும் இங்குப் பூசித்துப் பேறுபெற்றதாகக் கூறுவர்.

இந்நான்கு தலங்களுக்கும் தனியே புராணங்கள் பாடப் பெறவில்லை.

## குரங்கணில் முட்டப் புராணம்

காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசி செல்லும் பாதையிலுள்ளது குரங்கணில் முட்டம் என்னும் சிவத்தலம். இங்கு, வாலி குரங்கு வடிவிலும், இந்திரன் அணில் வடிவிலும், எமன் காகம் (முட்டம்) வடிவிலும் வழிபட்டதால் இப்பெயர் பெற்றுள்ளது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

இத்தலச்சிறப்பைக் கூறும் குரங்கணில் முட்டப் புராணம் ஒன்று இயற்றப் பெற்றதாகத் தெரிகிறது. மற்ற விவரங்கள் அறியக் கூடவில்லை.

### திருவோத்தூர்ப் புராணம்

காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள ஒரு சிவத்தலம் திருவோத்தூர். இறைவன் வேதத்திற்குப் பொருள் சொன்ன இடமாதலின் ஓத்தூர் எனப்பெற்றது. திருவத்திபுரம், செய்யாறு என இப்பொழுது வழங்கப் பெறுகிறது. சேயாற்றின் கரையில் உள்ள இத்திருத்தலம் சம்பந்தர் பாடல் பெற்றது. இப்பெருமான் அருளால் ஆண்பனை, பெண் பனையான தலம்.

இத்தலத்தில் நடைபெற்ற புராண வரலாற்று நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுவதே திருவோத்தூர்ப் புராணம் ஆகும், கருணாகரக் கவிராயர் என்பவர் இதை இயற்றியுள்ளார். இந்நூலில் 28 சருக்கங்களும் 1016 பாடல்களும் உள்ளன.

### திருப்பனசைப் புராணம்

காஞ்சிபுரத்திலிருந்து பெருங்கட்டூர் செல்லும் பாதையில் உள்ளது திருப்பனங்காடு என்னும் வன்பார்த்தான் பனங்காட்டூர். பனை மரங்கள் அடர்ந்த இடமாதலால் இப்பெயர் பெற்றது. தல மரமும் பனை மரமே. சுந்தரர் பாடல் பெற்ற தலம்.

சுந்தரரிடம் இறைவன், நான் பனங்காட்டிற்கும் வன்பாக்கத்துக்குமாய் இருப்பவன்' என்றருளியமையாலும். நடுநாட்டிலுள்ள புறவார் பனங்காட்டூரினின்றும் வேறு பாடறியவும் இத்தலத்தை வன்பார்த்தான் பனகங்காட்டூர் என்றனர்.

அகத்தியர், புலத்தியர், கண்வமுனிவர் ஆகியோர் பூசித்துப் பேறு பெற்ற தலம் என்னும் சிறப்புடையது.

திருப்பனசைப் புராணம் என்னும் இத்தலபுராணம் திரு அ. நாராயணசாமி முதலியார் மற்றும் எல்லப்ப முதலியார் ஆகியோரால் இயற்றப் பெற்றுள்ளது. இந்நூலில் 19 படலங்களும் 1137 பாடல்களும் உள்ளன.

### திருவல்லம் தலபுராணம்

தொண்டை நாட்டில் வேலூருக்கு அருகில் ஆற்காட்டிலிருந்து ராணிப்பேட்டை வழியாகக் காட்பாடி செல்லும் வழியில் உள்ளது திருவல்லம் என்னும் சிவத்தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம். அவர் திருவல்லம் என்றே இத்தலத்தைக் குறிக்கின்றார். அருணகிரிநாதரின் திருப்புகழில் திருவலம் என்று குறிப்பர். இப்பொழுது திருவலம் என்றே வழங்குகிறது. ஒரு காலத்தில் இப்பகுதி வில்வக் காடாக இருந்ததால் வில்வவனம்—

வில்வாரண்யம் என்றும் வழங்கப் பெறுகின்றது. இங்குள்ள இறைவன் பெயர் வில்வநாதீசுவரர் என்பதாகும். தலமரமும் வில்வமே.

இத்தலத்தினருகிலுள்ளது 'கஞ்சன்கிரி' என்னும் மலை. இம்மலையிலிருந்தே ஆதியில் இக்கோயிலுக்குத் தீர்த்தம் கொண்டு வரப்பெற்றது என்றும், அப்பொழுது அங்கிருந்து கஞ்சன் என்னும் அசுரன் அதைத் தடுத்தான் என்றும், மக்கள் இறைவனிடம் முறையிடவும் நந்தியம்பெருமான் சென்று கஞ்சனுடன் போரிட்டு அவனை அடித்து அழித்தார் என்றும் கூறுவர். அவ்வாறு அழித்தபோது அவ்வசுரனின் லலாடம், சிரசு, வலக்கால், தென்கால், மணிக்கட்டு, மார்பு ஆகியவை வீழ்ந்த இடங்கள் முறையே லாலாபேட்டை, சீகராஜபுரம், வடகால், தென்கால், மணியம்பட்டு, குகையநல்லூர் என்னும் ஊர்களாக வழங்கப் பெறுவதாகவும் கூறுவர். இந்நிகழ்ச்சியின் காரண மாகவே நந்தி, காவலுக்காகக் கிழக்கு நோக்கியுள்ளார் என்பர். கஞ்சன்கிரியில் அசுரனின் குருதிபட்ட இடத்திலெல்லாம் இறைவனருளால் சிவலிங்கங்கள் பல உண்டாக்கப் பெற்றன என்பது வரலாறு.

"எரித்தவன் முப்புரம் எரியின் மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்சடைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறுவேறு
தெரித்தவன் உறைவிடம் திருவல்லமே".

எனச் சம்பந்தரும் இத்தலச் சிறப்பினைக் கூறுவர்.

சிவானந்த மூர்த்தி என்பவர் வல்லம் தலபுராணம் இயற்றி யளித்துள்ளார்.

**திருமாற்பேறு புராணம்**

காஞ்சிபுரம் அரக்கோணம் இடையே உள்ள ஒரு சிவத்தலம் திருமாற்பேறு. திருமால் வழிபட்டுப் பேறுபெற்ற தலம் என்பதால் மாற்பேறு என்னும் பெயர் பெற்றது. இன்று திருமால்பூர் என்று வழங்குகிறது.

திருவீழிமிழலைக்குரிய வரலாறு இத்தலத்திற்கும் சொல்லப் படுகின்றது. திருமால் நாள்தோறும் ஆயிரம் தாமரை மலர்கள் கொண்டு சிவனை அருச்சித்து வழிபட்டார் என்றும், ஒரு நாள் ஒருமலர் குறைய, தம் கண்ணையே பறித்து மலராக இட்டு

அருச்சித்து அருள்பெற்றார் என்றும், அதனால் தம் சக்கராயுத மான சுதர்சனத்தைத் திரும்பப் பெற்றார் என்றும் கூறுவர். இதனால் இத்தலத்திற்கு அரிச்சக்கரபுரம் என்றும் பெயர்.

சந்திரன் வழிபட்ட இத்தலத்தில் சம்பந்தர், அப்பர் ஆகியோரும் சென்று பதிகம் பாடியுள்ளனர்.

இத்தல புராணத்தைப் பானுகவி அடிகள் இயற்றியுள்ளார்.

**திருவூறல் தலபுராணம்**

சென்னையிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் பாதையில் உள்ளது திருவூறல் என்னும் தலம். இப்பொழுது தக்கோலம் என வழங்குகிறது. தக்கன் தலையைக் கொய்த தலம் என்பர். தக்கன் அழிவுகருதி ஓலமிட்டதால் இப்பகுதி தக்கோலம் எனப் பெயர் பெற்றதாகக் கூறுவர். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

"கறுத்த மனத்தினொடுங் கடுங்காலன் வந்தெய்துதலுங் கலங்கி
மறுக்குறு மாணிக்கருள மகிழ்ந்தானிடம் வினவில்
செறுத்தெழு வாள்அரக்கன் சிரந்தோளும் மெய்யுந்நெரிய அன்று
ஒறுத்தருள் செய்தபிரான் திருவூறலை உள்குதுமே"

எனச் சம்பந்தரும் இத்தலச் சிறப்பை எடுத்துரைப்பர்.

சித்தாந்த சரபம் அட்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியார் இத்தல புராணத்தை இயற்றியளித்துள்ளார்.

**திருக்கூவப் புராணம்**

காஞ்சிபுரத்திலிருந்து திருவள்ளூர் செல்லும் வழியில் உள்ளது திருவிற்கோலம் என்னும் தலம். இறைவன், மேரு மலையை வில்லாகக் கையில் பிடித்த கோலம் என்பதால், திரு வில்கோலம் என இப்பெயர் வந்தது என்பர். இப்போழுது கூவம் என வழங்குகிறது,

திருவிற்கோலநாதர், திரிபுராந்தகேசுவரர் என்னும் பெயர் களுடன் இறைவர் விளங்குகிறார். தலமரம் தனியே இல்லை. இத்தலமே 'நைமிசாரண்ய சேத்திரம்' என்று கூறப்படுகிறது.

இங்குள்ள அக்கினி தீர்த்தம் அச்சிறுகேணி என்றும், கூபாக்கினி தீர்த்தம் என்றும் கூறப்பெறும். புத்திரப்பேறு கிடைக்க இத்தீர்த்தத்தில் மூழ்கி வழிபடுவர் என்பது வழக்கு. இவ்வூருக்குக் கூபாக்கினபுரி என்றும் பெயர்.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இத்தல புராணம் பாடியுள்ளார்.

பாயிரம், நைமிசாரணியச் சருக்கம், திருத்தலச் சருக்கம், திரிபுரதகனச் சருக்கம், சந்தானகிரி சந்தானச் சருக்கம், அடிமுடி தேடிய சருக்கம், செந்நெல் வைத்த சருக்கம், தாருகன் வதைச் சருக்கம் என்னும் 7 சருக்கங்களும் 703 செய்யுட்களும் இந்நூலில் உள்ளன.

வடமொழிக் காந்த புராணம் சனற்குமார சங்கிதையில் காளிகா காண்டத்திலிருந்து மொழிபெயர்த்து இவர் தமிழில் பாடியுள்ளதாகக் கூறுவர். (பாயிரம். 14, நைமி. 58-60).

இத்தலச் சருக்கத்தில் தொண்டை நாட்டின் சிறப்பு, அங்குப் பாயும் பாலாற்றின் பெருமை, கூவம் என்ற நகர் ஆகியவற்றைப் பாராட்டிக் கூறுகிறார்.

திரிபுரதகனச் சருக்கத்தில் இத்தலத்தின் பெயர்க் காரணம் விளக்கப் பெறுகிறது. அரக்கர்களின் முப்புரங்களையும் அழிக்கச் சென்ற சிவபெருமானின் தேர் அச்சினை (கூவரம்) விநாயகர் உடைத்தாரென்றும் அவ்வாறு அச்சிறுத்த இடத்தில் அச்சிறுகேணி என்னும் குளம் தோன்றிற்று என்றும் கூறுவர். (பா. 135)

விநாயகர் அச்சிறுத்ததால் கூவம் என்றும், ஊர் நடுக் கிணற்றை மக்கள் நாடுவதுபோல மூவுலகும் வந்து சிவனை வணங்கியதால் கூவம் என்றும் பெயர் பெற்றது என்று விளக்குவர்.

"ஓவிலொண் பதிநடுக் கூவ மொப்பவே
மூவுல கங்களு முன்னி வந்தரோ
தாவிலின் பெய்துறு தன்மை யாவெழித்
கூவமென் றொருபெயர் கொண்ட தந்நகர்". (136)

அடுத்து, சந்தான கிரியில் தேவருக்கு உண்மைப் பொருளை உபதேசித்தது; மாலும் அயனும் காணமுடியாத தழல் தூணாக விளங்கியது; தருமசீலர் என்னும் அடியாருக்குப் பஞ்சகாலத்தில், நாள்தோறும் ஒரு குடம் செந்நெல் வைத்தது; தாருகனை அழிக்கத் தன் மிடற்று நஞ்சில் காளியைத் தோற்றுவித்தது ஆகியவை கூறப்பெறுகின்றன.

மூவரக்கர்களையும் முப்புரங்களையும் எரித்த முக்கண்ணனின் செயலைத் தத்துவக் கருத்துக்களோடு விளக்குவதே இந்நூலாசிரியரின் நோக்கமாக உள்ளது.

"மருளை ஒத்தன முப்புரம் அப்புரம் மருவும்
இருளை ஒத்தனர் அவுணரவ் விருளினை யிரிக்கும்
அருளை ஒத்தனன் முகுந்தனவ் வருளினை யுடைய
பொருளை ஒத்தனன் அப்பொரு ளாகிய புராரி". (126)

மாயையே (மருள்) முப்புரங்கள்; ஆணவமே (இருள்) அவுணர்கள்; ஆணவ இருளை அழிக்கும் அருளே திருமாலாகிய அம்பு; அவ்வருளினையுடைய மெய்ப்பொருளே சிவபெருமான் என்னும் தத்துவக் கருத்தை மிக எளிமையாக இவர் கூறுவர்.

மேலும், இலிங்க வழிபாட்டின் மாண்பு, பதிபசுபாசம் இவற்றின் இயல்பு, செல்வத்தின் நிலையாமை, இல்லற ஒழுக்கங்கள் போன்றவற்றை இத்தலச் சிறப்போடு எடுத்துக் கூறும் பாங்கு இந்நூலாசிரியரின் தனிச் சிறப்பாகும்.

**திருவாலங்காட்டுப் புராணம்**

அரக்கோணத்திலிருந்து திருவள்ளூர் செல்லும் வழியில் உள்ளது திருவாலங்காடு என்னும் திருத்தலம். வடாரண்யம் என்றும் கூறப்பெறும். இறைவன் காளியுடன் நடனமாடிய தலம். நடராசப் பெருமானின் ஊர்த்துவ தாண்டவத் தலம். பஞ்ச சபைகளுள் இரத்தின சபையாக விளங்குவது.

காரைக்காலம்மையார் தலையால் நடந்து வந்து நடராசப் பெருமானின் திருவடிக் கீழிருந்து சிவானந்த இன்பம் கண்ட தலம் இதுவே. இங்குக் கார்க்கோடகன், சுநந்த முனிவர் போன்றோரும் வழிபட்டுள்ளனர். மூவர் பாடல் பெற்ற தலம்.

"கேடும் பிறவியும் ஆக்கினாரும் கேடிலா
வீடு மாநெறி விளம்பினார்எம் விகிர்தனார்
காடுங் கடலையும் கைக்கொண்டு அல்லில்கணப் பேயோடு
ஆடும் பழையனூர் ஆலங்காட்டுஎம் அடிகளே"

என்னும் சம்பந்தர் தம் பாடலில் பழையனூர் ஆலங்காடு என்றே குறிப்பிடுவர். இத்தலத்திற்கு வெகு அருகிலுள்ளது பழையனூர். இதைச் சுட்டியே சம்பந்தர் பாடியுள்ளார். "பழையனூர் மேய அத்தா ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே" என்று பாடுவார் சுந்தரர்.

இத்தல வரலாறுகளைக் கூறுவதே திருவாலங்காட்டுப் புராணம். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இதில் 18 சருக்கங் களும் 726 பாடல்களும் உள்ளன.

**திருப்பாச்சூர்ப் புராணம்**

சென்னையிலிருந்து திருவாலங்காடு வழியாக அரக்கோணம் செல்லும் வழியில் உள்ளது திருப்பாசூர். இன்று திருப்பாச்சூர் என வழங்குகிறது. அம்பாள் வழிபட்ட தலம். சந்திரன், திருமால் ஆகியோரும் பூசித்துப் பேறுபெற்ற தலம். கரிகாலன் இக்கோயிலைக் கட்டியதாகக் கூறுவர். சம்பந்தரும் அப்பரும் பதிகம் பாடியுள்ளனர்.

"சிந்தையிடையார் தலையின் மிசையார் செஞ்சொல்லார்
வந்துமாலை வைகும் போழ்தென் மனத்துள்ளார்
மைந்தர் மணாளர் என்ன மகிழ்வாரூர் போலும்
பைந்தண் மாதவி சோலை சூழ்ந்த பாசூரே".

"கண்ணின் அயலே கண்ஒன்று உடையார் கழல்உன்னி
எண்ணுந் தனையும் அடியார் ஏத்த அருள்செய்வார்
உண்ணின்று உருக உவகை தருவாரூர் போலும்
பண்ணின் மொழியார் பாடல் ஓவாப் பாசூரே"

எனச் சம்பந்தர் இத்தலச் சிறப்புரைப்பர்.

'பந்திச் செஞ்சடைப் பாசூர் அடிகளே' என்றும், 'பத்தர் களுக்கு இன்னமுதாம் பாசூர்மேய பரஞ்சுடர்' என்றும் அப்பர் இத்தல இறைவரைக் குறிப்பர்.

திரு சே. கந்தசாமி முதலியார் என்பவர் திருப்பாச்சூர்ப் புராணம் பாடியுள்ளார். இதில் 17 படலங்களும் 595 பாடல் களும் உள்ளன.

**திருக்காளத்திப் புராணம்**

திருக்காளத்தி என்பது தொண்டை நாட்டில் தேவாரம் பெற்ற சிவதலங்களுள் குறிப்பிடத்தக்கதாகும். தொண்டை நாட்டில் இருபத்துநான்கு கோட்டங்களுள் ஒன்றாகிய வேங்கடக் கோட்டத்துத் தொண்டைமான் பேராற்றூர் நாட்டு மும்முடிச் சோழபுரமென்றும் சிலாசாசனங்களில் இதன் பெயர் காணப் பெறுகின்றது.

இத்தலத்திற்குத் தென் கயிலாயம், திருக்காளத்தி, சீகாளத்தி, சிவாநந்தகிரி. சிவாநந்தைகநிலயம், விஞ்ஞான

க்ஷேத்திரம், கண்ணப்பபுரம், மும்முடிச்சோழபுரம் முதலிய வேறு காரணப் பெயர்களும் உண்டு.

மகாபுராணங்களுள்ளும், உபபுராணங்களுள்ளும், மற்ற தலபுராணங்களுள்ளும் இத்தல மகிமையைச் சொல்லாதவை பெரும்பாலும் இல்லை என்றே கூறலாம்.

மெய்யன்பையே திருவுருவமாகக் கொண்ட கண்ணப்ப நாயனார் இடையீடின்றி வழிபட்டு ஆறுநாட்களில் முத்திபெற்ற பெரும்புகழ் வாய்ந்த தலம் இது. இன்னும், விராட்புருடனுடைய விசுத்தி ஸ்தானமென்றும், பிரமதேவனுடைய அநாகத ஸ்தானமென்றும், பஞ்சபூதத் தலங்களுள் வாயுத்தலம் என்றும், பஞ்சாட்சர செப சித்தியை விரைவில் தந்தருளுவது என்றும், சிவஞானத்தை அளிக்கவல்ல தலங்கள் நான்கனுள் (காசி, சிதம்பரம், விருத்தாசலம், காளத்தி) ஒன்றென்றும், ஒரு நாளேனும் நியமத்துடன் வசிப்பவர்களுக்குக் கலியின் பீடையை மாற்றிப் பிறவித் துயரை நீக்கவல்ல தலங்கள் இரண்டனுள் (காசி, காளத்தி) ஒன்றென்றும் நூல்களுள் பாராட்டப் பெற்றது இத்தலமேயாகும்.

ஸ்ரீ-காளம்-அத்தி- சிலந்தி-பாம்பு-யானை ஆகிய இவை மூன்றும் வழிபட்டுப் பேறுபெற்ற சிறப்புடைய தலம் இது வென்றும் கூறுவர்.

இத்தலம் 'ராகு, கேது சேத்திரம்' என்றும் அழைக்கப் பெறும். சுவர்ணமுகி எனப்படும் பொன்முகிலி ஆற்றின் கரையில் உள்ள தலம் இது. இங்கு இவ் ஆறு வடக்கு முகமாகப் பாய்ந்து ஓடுவதால் உத்தரவாகினியென்று இவ்விடம் சிறப்பாகச் சொல்லப்படுகிறது.

'அட்டமா சித்திகள் அணைதரு காளத்தி' எனச் சிறப்பிக்கப் பெறும் இத்தலத்தில் நக்கீரர், முசுகுந்தன், பரத்வாஜ மகரிஷி, சிவகோசரியார், அருச்சுனன் போன்றோர் வழிபட்டுப் பேறு பெற்றதாகக் கூறுவர்.

தட்சிண கைலாயம், அகண்டவில்வாரண்யம், பாஸ்கர சேத்திரம் என்றெல்லாம் புகழப்படும் இத்தலத்தில் நுழைவதே முத்தி (ஸ்ரீ காளத்தி பிரவேசமுத்தி) என்பர்.

இத்தலம் மூவர் பாடல் பெற்றது. வெண்பாக்கம் வழிபட்ட சம்பந்தர் காளத்தியை அடைந்து பாடிப் பரவினார். இங்கிருந்த வாறே கயிலாயம், கேதாரம், கோகர்ணம், திருப்பருப்பதம்,

இந்திரநீலப் பருப்பதம் முதலியவற்றைப் பாடித் தொழுதார் என்றும்; ஆலங்காடு வணங்கிய அப்பர் காளத்தி வந்து தொழுது வடகயிலை நினைவுவர, கயிலைக்கோலம் காண எண்ணிப் பயணத்தைத் தொடங்கினார் என்றும்; திருவல்லம் தொழுத சுந்தரர் காளத்தி வந்து இறைவனடி துதித்து, இங்கிருந்தவாறே திருப்பருப்பதம், திருக்கேதாரம் முதலிய தலங்களைப் பாடிப் போற்றினார் என்றும் கூறுவர்.

"செண்டாடும் விடையாய் சிவனே என்செழுஞ் சுடரே
வண்டாருங் குழலாள் உமைபாக மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்கும் கணநாதன் எங்காளத்தியாய்
அண்டா உன்னை யல்லால் அறிந்தேத்த மாட்டேனே"

எனக் காளத்திநாதரைப் புகழ்ந்துரைப்பார் சுந்தரர்.

திருக்காளத்தியின் பழைய வரலாறுகளைத் தெரிவிக்கும் நூல்கள், வடமொழியில் ஷடத்தியாயி, ஸ்ரீகாளஹஸ்தி மாஹாத்மியம் (இது 96 அத்தியாயம் உள்ளது), தக்ஷிண கைலாஸ மாஹாத்மியம், ஸ்வர்ண முகரீமாஹாத்மியம், சூதசம்கிதையிலுள்ள மூன்று அத்தியாயங்கள் அடங்கிய புத்தக மொன்று, வாஸிஷ்டலைங்கத்திலுள்ள பன்னிரண்டு அத்தியாயங் களடங்கிய புத்தகமொன்று ஆகிய இவைகளும், தெலுங்கில் வழங்குகிற தூர்ச்சடிகவி செய்த புராணமொன்றும் ஆகிய இவைகளாம். இவை இப்போதும் கிடைக்கின்றன.

இவற்றையன்றி வடமொழியிற் பர்வதமாஹாத்மிய மென ஒன்று உண்டென்று சொல்லுகின்றனர். அது கிடைக்கவில்லை.

**ஆனந்தக் கூத்தர்**

ஸ்வர்ணமுகரீ மாஹாத்மியத்தில் பதினெட்டு அத்தியாயங் கள், சூதசம்கிதையில் மூன்று அத்தியாயங்கள், வாஸிஷ்டலைங் கத்தில் பன்னிரண்டு அத்தியாயங்கள் ஆகிய இவற்றின் மொழி பெயர்ப்பே தமிழில் ஆனந்தக்கூத்தர் செய்த திருக்காளத்திப் புராணம் ஆகும். இம்மூன்று நூல்கள் மட்டுமே இவருக்குக் கிடைத்ததாக இந்நூலின் புராணநூல் வரலாற்றுப் பகுதியால் அறியலாம். இக்காலத்திற் காணப்படும் இத்தலம் தொடர்பான வேறு வடமொழி நூல்கள் இந்நூலாசிரியருக்குக் கிடைக்க வில்லை என்றே தெரிகின்றது. இவருக்கு வடநூலை மொழி பெயர்த்தளித்தவர், வீரவநல்லூரிலிருந்த பௌராணிராகிய சங்கரநாராயணரென்னும் ஒரு வேதியர் என்பர்.

பரிமளகவிராயர் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப் பெறும் இந்நூலாசிரியர் ஆனந்தக்கூத்தர் பாண்டி நாட்டில் வீரவநல்லூரிற் பிறந்தவர். இவருடைய ஞானாசிரியரது பெயர் சத்தியஞானி அல்லது சத்திய ஞானதேசிகர் என்பது. பாபநாசத் தலபுராணம் பாடிய நூலாசிரியருடைய ஞானாசிரியர் பெயரும் சத்தியஞானி யென்று காணப்படுகின்றது. அவரும் இவரும் ஒருவரோ வேறோ என விளங்கவில்லை என்பர் டாக்டர் உ. வே. சா. (திருக்காளத்திப் புராணம். முகவுரை பக். 6).

திருக்காளத்திப் புராணத்தில் 33 அத்தியாயங்களும் 1736 பாடல்களும் உள்ளன. நூலின் பாயிரப் பகுதி, அவையடக்கம் உள்பட 33 பாடல்கள் கொண்டதாகும். மூவர், வாதவூரடிகள், சத்தியஞானி, யாதவ வேந்தன், தமிழாசிரியர், வடநூலை மொழிபெயர்த்துணர்த்திய சங்கரநாராயணன் என்ற விரைவாழ் புராணிகர் ஆகியோரையும் இப்பகுதியில் துதிக்கக் காணலாம். பதிகம் என்ற பகுதியில் நூலின் உள்ளடக்கம் முறையாகச் சொல்லப் பெறுகின்றது.

அவையடக்கத்தில் 'எச்சில்' என்ற சொல்லை நயமாகப் பயன்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

> "நானினையுஞ் செழுங்கழுதும் நாவாணர் சொல்லாகும்
> யானினியிங் கென்செய்கேன் எச்சிலாய்ப் போனவெலாம்
> ஆனதால் எச்சிலுமிவ் வண்ணலார்க் கமிர்தன்றோ?
> கானவன்தன் எச்சிலையுங் கனியமிர்தாக் கொளலாலே"

என்று தம் நூல் கண்ணப்பருடைய எச்சில் போலாகும் என்று கூறுமுகமாக, இறைவனுக்கு உகந்தது என்றும் தெரிவிக்கிறார்.

இரண்டாம் அத்தியாயமாகிய பாரத்துவாச தரிசனம் என்பதில் ஐந்திணை வளங்களையும் விவரிப்பர். நகரையும் தனியே வருணிப்பர். இப்பகுதிகளை நாட்டுப் படலம், நகரப் படலம் என்றே அமைத்ததாகத் தெரிகிறது. காளான், அத்தி முத்தியடைந்த அத்தியாயத்தில் அவர்கள் துதிப்பதாகப் பதினாறு பாடல்கள் உள்ளன.

> "உயர்வுறு முழுதுல குடையாய் சயசய,
> மயிலியன் மடமொழி மதிநுத லுமையவள்
> கயல்விழி மலைமகள் கணவா சயசய,
> தயவுடை யடியவர் தாயே சயசய",

"நீயே வினைமுதல், நீயே கரணமும்,
நீயே காரணம், நீயே காரியம்,
நீயே தருபவன், நீயே சான்றொரு
நீயே இவையினுள் நீங்கினை, சயசய"

என இப் பாடல்கள் அனைத்தும் சயசய என்றே முடிவன.

சிவமான்மிய அத்தியாயத்தில் சமய தத்துவங்கள் பல கூறப் படுகின்றன. பிற அத்தியாயங்களில் பஞ்சாக்கர மகிமை, தான மகிமை, திருநீற்றின் மகிமை, உருத்திராக்க மகிமை, பிரணவ மகிமை ஆகியவை கூறப்படுகின்றன. தல விசேடம், தீர்த்த விசேடம், வருணாசிரம தருமங்கள், ஒழுக்கம், தீவுகளின் இயல்பு, உலகத் தோற்றம், கலியுக தருமங்கள் போன்றனவும் விரிவாகக் கூறப்படுகின்றன.

பதின்மூன்றாம் அத்தியாயத்தில், அம்மை கேட்கச் சிவபெருமான் கூறுவதாக வாழ்க்கைக்குரிய நல்லொழுக்கங் களைக் கூறுவர். 32 பாடல்கள் கொண்ட இப்பகுதி தனியே ஓர் நல்லாசார நூல் போலவே அமைந்துள்ளது.

தலமகிமையைக் கூறுமிடத்து, பன்னிரு மாதங்களிலும் பொன்முகரியில் படிந்து சிறப்பாகக் காளத்திநாதரை வழிபடு வதற்குரிய நாள்களைக் கூறுவர். சித்திரைச் சித்திரை, வைகாசி விசாகம், ஆனி மூலம், ஆடி உத்திரம், ஆவணி ஓணம், புரட்டாசி, ஐப்பசி அச்சுவதி, கார்த்திகைக் கார்த்திகை, மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம் என்னும் இவற்றில் சில இன்று வழக்கில் இல்லாதன.

ஞானயோகம் கூறும் அத்தியாயத்தில் ஆசனம் முதலான ஆறும் விரிவாகக் கூறுவர். சிறப்புடைய தலங்கள் பலவும் அங்கங்கே விளக்கப் பெறுகின்றன. வாழ்த்துப் பாடலுடன் நூல் நிறைவடைகிறது.

மேற்கூறிய புராணத்தில் கண்ணப்பர் வரலாறு இல்லை பின்னால் கண்ணப்பர் சிவகோசரியார் முத்தியடைந்தார் என்ற தலைப்போடு 88 பாடல்கள் ஐயர் அவர்களால் அனுபந்தமாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இதுபற்றி அவர்கள் கூறுவது; "இந்த அத்தியாயம், கிடைத்த கையெழுத்துப் பிரதிகளுள் ஒரே பிரதியில் மட்டும் இருந்தமையாலும் இந்த நூலின் முதனூலாகிய வடமொழிப் புராணத்தில் இந்தச் சரித்திரம் காணப்படாமை யாலும், இந்த அத்தியாயச் செய்யுள் நடை இந் நூலாசிரிய

குடைய செய்யுள் நடையைச் சிதைக்கும் ஒவ்வாமையாலும், பத்திமானாகிய யாரோ ஒருவர் இடையே இயற்றிச் சேர்த்திருக்கலாம் என்று எண்ணுதற்கிடமாக இருந்தமையாலும், இது தனியே பதிப்பிக்கும்படி நேர்ந்தது" என்பதாகும்.

இவ்வாறு புது அத்தியாயம் சேர்த்ததற்குப் பொருந்த, முன் இரு அத்தியாயங்களை ஒன்றாகச் சேர்த்தும் இடையில் சில பாடல்களின் சொற்களை மாற்றியும் ஏடுகள் காணப்படுகின்றன என்பது ஐயர் அவர்கள் குறிப்பு.

### சீகாளத்திப் புராணம்

பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமியும் அவர் தம்பியர் இருவராகிய வேலையர், கருணைச் சிவப்பிரகாசர் ஆகியோரும் இயற்றியதே இத்தல புராணம். ஒன்பது சருக்கங்களும் 1031 செய்யுள்களும் இதில் உள்ளன.

### கருணைச் சிவப்பிரகாசர் பாடியவை

பாயிரப் பகுதியில் 21 திருவிருத்தங்கள் உள்ளன. இறைவர், இறைவி ஆகியோருடன் நால்வர், காரைக்காலம்மையார் சேரமான் பெருமாள் நாயனார் காடவர்கோன் நாயனார், பொய்யடிமையில்லாப் புலவர், குரு தேவர், சிவப்பிரகாச சுவாமிகள் ஆகியோருக்கும் துதிகள் கூறப்படுகின்றன. இங்குத் தமிழ்த் தெய்வத்திற்கென வணக்கம் கூறியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

"மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டில் இலக்கணஞ் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை அனைத்தும்வென் றாரி யத்தோடு
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை உள்நினைந் தேத்தல் செய்வாம்" (14)

என்பது தமிழ்த் தெய்வ வணக்கப் பாடலாகும்.

அவையடக்கத்தில், இந்நூலைப் பாடுவதற்குத்தான் எந்தத் தகுதியுமில்லாதவன் என்று கூறித் தொடங்குகிறார் ஆசிரியர்.

"நூற்றுறை பயின்று பெற்ற நுண்ணுணர்வுடைய நல்லோர்
சாற்றுமிப் போலிச் செய்யுள் சான்றவை இகழ்தல் செய்யார்

மேற்படு முனைர்வின் மூத்தோர் மென்னடைச் சிறுவர் செவ்வாய்ப்
பாற்கடி கமழு மென்சொற் பழிப்பவ ருலகி லுண்டோ. (19)

என்னும் இப்பாடலில் பால் மணங்கமழும் பாலகரின் வாயொழு கலைப் போன்றது இப்பாடல்கள் என்று கூறி, கண்ணப்பரின் எச்சிலை ஏற்ற இறைவன் இவற்றையும் ஏற்பார் அதனால் அனைவரும் ஏற்கவேண்டும் என்னும் குறிப்பை அமைத்திருக்கக் காணலாம்.

விடசங்கமச் சருக்கம், முதலாவதாக அமைகின்றது. இதில், தொண்டை நாட்டில் நாராயணபுரத்திலேயிருந்த யாதவ மகாராசா என்பவரை ஆட்கொண்ட இத்தல இறைவர் இந்தத் தலவரலாற்றைக் கூறுவதாக அமைக்கப் பெற்றுள்ளது. இத்தலத்திலே சித்தி பெற்றோர் வசிட்டர், அகத்தியர், பிரம தேவர், சிலந்தி, பாம்பு, யானை, கண்ணப்ப நாயனார், சிவகோசரியார், நக்கீரர், சுன்னியர் இருவர் ஆகியோர் என்று கூறுவர்.

"மாசில் காட்சி வசிட்ட னகத்தியன்
வாச மாமலர் வந்தோன் சிலந்திபாம்
பாசில் யானை புளிந்த னருட்சிவ
கோசன் கீரன் குவளைக் கருங்கணார்"

"ஆதி யாக அளவில ருண்டவண்
தீது தீர்ந்தவர் அவ்வத் திருக்கதை
ஓத வேண்டின் உகம்பல செல்லுமக்
காதை யுட்சில காவல கூறுவேம்" (88, 89)

எனச் சிவபெருமானே இக்கதைகளைக் கூறுவதாக அமைந்துள்ள பாடல்கள் குறிப்பிடத்தக்கன. புளிந்தன்—வேடன்—கண்ணப்ப நாயனார்.

தென்கயிலாயச் சருக்கம், பொன்முகரிச் சருக்கம், நான்முகச் சருக்கம், சீகாளத்திச் சருக்கம் ஆகிய இவற்றைச் சிவப்பிரகாச சுவாமிகளின் இளவலாகிய கருணைப் பிரகாசர் இயற்றி முடித்துள்ளார்.

"ஓதினஞ் சிலம்பாம் பொருத்த லின்கதை
காதுவில் வேட்டுவன் கதைவி ளம்புதும்
யாதவ மனனமர்ந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான்"

(சீகாளத்திச் சருக்கம் 42)

என்னும் பாடலுடன் இவர் முடித்து, இனி அடுத்து வேடனாகிய கண்ணப்பர் கதையைக் கூறுவதாகவும் சொல்லியுள்ளார். ஆயின், அவர் மறைந்ததால், சிவப்பிரகாச சுவாமிகளே தொடர்ச்சியைப் பாடியுள்ளார்.

**சிவப்பிரகாசர்**

அடுத்துவரும் கண்ணப்பச் சருக்கம் 178 பாடல்களையும், நக்கீரச் சருக்கம் 137 பாடல்களையும் ஆக 315 பாடல்களைச் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியுள்ளார்.

> "நீதறு கவிவரன் செயலு ரைத்தனம்
> கோதையர் கயிலைசேர் கொள்கை கூறுதும்
> யாதவ மனையமர்ந் தினிது கேளென
> மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான்"
>
> (நக்கீரச் சருக்கம், 137)

என இவர் இப்பகுதியை முடித்து, இனி கன்னியர்கள் தென் கயிலாயத்தைச் சேர்ந்த வரலாற்றைச் சொல்ல விரும்புதாகவும் அமைத்துள்ளார்.

**வேலையர்**

இதன் பின்பு வரும் பகுதிகளை வேலைய சுவாமிகள் இயற்றி நிறைவேற்றியுள்ளார். எட்டாவது சருக்கமாகிய கன்னியர்ச் சருக்கத்தை இவர் தொடங்கும் முன்பு காப்பும் அவையடக்கமும் பாடிய பின்பே தொடங்குவது குறிப்பிடத்தக்கது.

> "பின்னவனு முன்னவனும் பேசு கதைநிறுப்பத்
> தன்னைநிகர் காளத்தி தன்னில்வாழ்—முன்னவனென்
> நெஞ்சந் தியங்காமல் நீயென் னுளத்திருந்தே
> அஞ்சந்தி யானே அருள்"

என்னும் காப்புச் செய்யுளில், பின்னவனாகிய கருணைப் பிரகாசர் தொடங்கி விட்டதைத் தொடர்ந்து பாடிய முன்னவரான சிவப்பிரகாசர் பாடி முடிக்காத இந்தப் புராணத்தைத் தாம் நிறைவு செய்ய காளத்திவாழ் ஐஞ்சந்தி விநாயகரை வேண்டுவர் வேலையர். இதில் 'தன்னைநிகர் காளத்தி' என்றது தனக்கு நிகராவதோர் தலமில்லை என்றதாகும்.

கன்னியர்ச் சருக்கம், சிலந்திமுதல முற்கதைச் சருக்கம் ஆகியவற்றை இவர் எழுதி நிறைவு செய்துள்ளார்.

இம்மூவரும் பாடியுள்ள இப்புராணம் சிவனடியார் பெருமை கூறும் சிறந்ததொரு சமய நூலாக அமைந்துள்ளது போன்றே சிறந்த இலக்கியச் சுவைகளையும் வரலாற்றுச் செய்திகளையும் கொண்டுள்ளது. இனிய பல அணி நயங்களுடன் கூடிய இந் நூலின் பாடல்கள் யாவும் கலித்துறை, கலிவிருத்தம், ஆசிரிய விருத்தம், வஞ்சித்துறை எனப் பல யாப்புகளிலும் அமைந் துள்ளன.

"இனைய தாகிய தென்கயி லாயம்வாழ்
இறைபெரும் புராணத்தை
மனம கிழ்ந்துநன் றோதினர் கேட்டவர்
மாறில்வண் பொருள்சொன்னோர்
மனையும் மைந்தரும் மாநிதி வளத்தொடு
மாநிலந் தனில்வாழ்ந்து
தனைநி கர்த்திடும் இறைவன்வாழ் கயிலையிற்
சார்ந்தினி திருப்பாரால்".

இத்தகைய சிறப்புமிக்க சீகாளத்திப் புராணத்தை ஓதியவர் களும் கேட்டவர்களும், இவ்வுலக வாழ்வில் மாநிதியும் பல்வள மும் பெற்று வாழ்ந்து வீடுபேறும் அடைவர் என்று கூறி இந் நூலை நிறைவு செய்துள்ளார் வேலைய சுவாமிகள்.

இம் மூவர் இயற்றிய சீகாளத்திப் புராணத்துடன் ஆனந்தக் கூத்தர் இயற்றிய திருக்காளத்திப் புராணம் ஒப்பிட்டு ஆராயத் தக்கதாகும்.

### திருவொற்றியூர்த் தலபுராணம்

சென்னையிலுள்ள ஒரு திருத்தலம் ஒற்றியூர். ஆதிபுரி என்றும் இத்தலம் அழைக்கப் பெறும். சுந்தரர் சங்கிலியாரை மணந்துகொண்ட சிறப்புடையது. கலிய நாயனார் அவதாரஞ் செய்த தலம். பட்டினத்தடிகள் முத்தி பெற்ற தலமும் இதுவே யாகும். இங்குப் பிரமன் பூசித்துப் பேறுபெற்றான் என்று கூறுவர்.

"விடையவன் விண்ணும் மண்ணும் தொழநின்றவன்
வெண்மழுவாட்
படையவன் பாய்புலித் தோலுடை கோவணம் பல்கரந்தைச்
சடையவன் சாமவேதன் சசிதங்கிய சங்க வெண்தோடு
உடையவன் ஊனமில்லி உறையுமிடம் ஒற்றியூரே"

என்பார் சம்பந்தர்.

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் என்பவர் இத்தல புராணத்தை இயற்றியுள்ளார். இவர் கமலை ஞானப்பிரகாசரின் மாணவராவார். இப்புராணம், வடமொழிப் பதுமம் பிரமாண்டம் ஆகிய புராணங்களிலிருந்து மொழிபெயர்த்துத் தமிழில் இயற்றப்பெற்றதாகக் கூறுவர்.

இப்புராணத்தில் 116 சருக்கங்களும் 599 பாடல்களும் உள்ளன, தலச்சருக்கம் இத்தலப் பெயர்க் காரணங்களைக் கூறுகிறது. பிரளயத்தை ஒற்றிய காரணத்தால் ஒற்றியூர் என்றாயிற்று. நினைக்க முத்தி தருவது இத்தலம் என்பர்.

பலவகை விரதங்களும் துதிப்பாடல்களும் இந்நூலில் கூறப் பெறுகின்றன. வேதங்கள் வந்து பூசித்தது, பாணினி இங்கு பூசித்து வியாகரணம் செய்யத்தக்க பெருமை பெற்றது, வால்மீகி பேறு பெற்றது, வாசுகி முத்தி பெற்றது, ஆதிசேடன் வழிபட்டு வரம் பெற்றது, கற்பகத் தருக்கள் ஐந்தும் இங்கு வந்து மகிழ மரமாயிருப்பது, அகத்தியருக்குத் திருமணக் கோலங் காட்டியது, தொண்டைமான் இங்குவந்து திருப்பணி செய்தது, சீவல மன்னன் இராசசூய யாகம் செய்தது, மாந்தாதா தீர்த்தத்தில் நீராடி இளமை பெற்றது. இரண்டு பிராமணர் பாடித் தியாகம் பெற்றது, ஏலேல சிங்கர் இரத்தினத்தைத் தியாகமாக வழங்குவது ஆகிய வரலாறுகள் இப்புராணத்தில் விளக்கப்பெறுகின்றன.

இப்புராணத்தை உரைநடையாக எழுதிய திரு. சின்னப்பாவு முதலியார் 1881 இல் வெளியிட்டுள்ளார். அதில், சங்கிலி நாச்சியார் இங்கு அவதாரம் செய்து சுந்தரரைத் திருமணம் செய்து முத்திபெற்ற வரலாறும். பட்டினத்தடிகள் திருவருள் பெற்ற வரலாறும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் செய்த இத்தலபுராணம் அல்லாது மற்றொரு திருவொற்றியூர்ப் புராணம் டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகத்தில் உள்ளது.

**வடதிருமுல்லைவாயிற் புராணம்**

சென்னைக்கு அருகிலுள்ள தலம் திருமுல்லைவாயில். சண்பகாரண்யம் என்றும் பெயர். முருகன் பூசித்த தலம் தொண்டைமான் என்னும் மாமன்னன் தன் யானைக் காலைச் சுற்றிக்கொண்ட முல்லைக் கொடிகளை வாளால் வெட்டிய போது இறைவன்மீது பட்டதாகவும், பிறகு அம்மன்னனுக்கு அருளினார் என்பதும் வரலாறு. சுந்தரர் பதிகம் பாடியுள்ளார்.

திருமயிலை சண்முகம் பிள்ளையவர்கள் இத் தலபுராணத்தை இயற்றியளித்துள்ளார்கள்.

**திருவேற்காட்டுப் புராணம்**

சென்னை - பூந்தமல்லிக்கருகே உள்ளது திருவேற்காடு என்னும் தலம். நான்கு வேதங்களும் வேல மரங்களாய் நின்று இறைவனை வழிபட்டதால் இத்தலம் வேல்காடு — வேற்காடு என்று பெயர் பெற்றதென்பர். அகத்தியருக்கு இறைவன் திருமணக் கோலக்காட்சி அருளிய தலம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம். சூரனை வென்ற பின்பு முருகப்பெருமான் இத் தலத்திற்கு வருகை தந்ததாகத் தலபுராணம் கூறுகிறது. இத்தல புராணம் 15 சருக்கங்களைக் கொண்டதாகும்.

**திருமயிலைத் தலபுராணம்**

சென்னை மாநகரின் நடுவண் அமைந்துள்ள சிவத்தலம் மயிலை ஆகும். இறைவி மயில் வடிவில் இருந்து வழிபட்டமையால் மயிலாப்பூர் எனப்பெயர் பெற்றது. வாயிலார் நாயனார் அவதரித்த தலம். திருவள்ளுவர் மயிலையில் பிறந்ததாக வரலாறு. திருஞான சம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கிய (பூம்பாவை) திருத்தலம். அவர் இத்தலத்திற்குப் பதிகமும் பாடியுள்ளார். திருமயிலைக் கபாலீச்சரம் என இத்தலம் புகழ்பெற்றதாகும்.

இத்தலத்திற்குரியதாக மூன்று தலபுராண நூல்கள் இயற்றப் பெற்றதாக அறிகிறோம். அவை ; 1. திருமயிலைத் தலபுராணம் என்னும் மயிலை மூதூர்ப் புராணம். இதை இயற்றியவர் அமிர்தலிங்கத் தம்பிரான். இதில் 13 சருக்கங்களும் 600 பாடல்களுமுள்ளன. 2. திருமயிலைத் தலபுராணம் என்னும் இந்நூலை இயற்றியவர் புராண ரத்னாகரம் மயிலை நாதமுனி முதலியார் ஆவார். இதில் 12 படலங்களும் 580 பாடல்களும் உள்ளன. மேலும் 8 சரித்திரங்களும் 226 பாடல்களும் சேர்ந்து 806 பாடல்கள் உள்ளன. 3. திருமயிலைப் புராணம் என்னும் பெயரில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஒரு நூல் பாடியதாகவும் அது இப்பொழுது கிடைக்கவில்லை என்றும் கூறுவர்.

**அமிர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய திருமயிலைத் தலபுராணம்**

திருவண்ணாமலை ஆதீனத்தைச் சேர்ந்த அமிர்தலிங்கத் தம்பிரான் அவர்கள் இயற்றிய இத்தலபுராணம் முதலில் தோன்றியதாகும்.

வடமொழியிலுள்ள சைவ புராணத்திலும் காந்த புராணத்திலும் தனித்தனியே சொல்லப்படுகிற திருமயிலை என்னும் தலத்தின் சிறப்பைச் சிவனருளால் மொழிபெயர்த்துப் பாடியுள்ளதாக ஆசிரியர் முதலில் கூறுகிறார்.

திருமயிலைக்கு முதலில் வடமொழியில் மட்டுமே புராணம் இருந்தது என்றும், மயிலை மக்கள் கட்டளையிட்டதன் காரணமாகத் திருமயிலைத் தலபுராணத்தைத் தமிழில் பாடியதாகவும் ஆசிரியர் கூறுகிறார்.

"இன்னசீர் படைத்து மேவுமெழின் மயிலையில்வாழ் சைவ
மன்னவர் மறையோ ரெம்மூர் வளர்கதை யதனைத் தேர்ந்தே
அன்னதைத் தமிழி னாலே அறையென அவர்கள் பாதப்
பொன்னல ரெனதுட் கொண்டே புகலுவான்
தொடங்கிப்புக்கேன்"
(நகர. பா. 27)

இந்நூலில் பாயிரச் சருக்கம், நாட்டுச்சருக்கம், நகரச் சருக்கம், பொதிய மாமலைச் சருக்கம், தலவிசிட்டச சருக்கம், பார்வதியார் சாபச்சருக்கம், பார்வதியார் அருச்சனைச் சருக்கம். வேதம் பூசித்த சருக்கம், சுக்கிரன் பூசித்த சருக்கம், தீர்த்தச் சருக்கம், திருவிழாச் சருக்கம் எனப் பதின்மூன்று சருக்கங்கள் உள்ளன. புராணக் கதையை அகத்தியர் முனிவர்களுக்குக் கூறுவதாக ஆசிரியர் அமைத்துள்ளார்.

**தலபுராணம் தோற்றுவாய்**

பெரும்பாலான தலபுராணங்களில் நேமிவன முனிவர்கள் கேட்கச் சூதமுனிவர் கூறுவதாகவே புராணங்கள் அமையும். இதற்குமாறாகத் திருமயிலைத் தலபுராணத்தில் பொதியமலையில் வீற்றிருக்கும் அகத்தியரிடம், முனிவர்கள் சென்று கதை கேட்பதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஒரு சமயம் முனிவர்கள் ஒன்றுகூடி பிரமனிடம் தாங்கள் தங்கித் தவமிருக்க இடம் கேட்டனர். பிரமன் ஒரு சக்கரத்தை உருவாக்கி நிலத்தின் மீது உருளவிட்டு அது சென்று தங்குமிடத்தில் தவம் செய்யுமாறு கூறினான். அவ்வாறு அச்சக்கரம் சென்று தங்கிய இடம் நேமிவனம் எனப்பட்டது. அவ்வனத்திற்குச் சூத முனிவர் எப்பொழுதாவது வந்தால் முனிவர்கள் அவரை வரவேற்று உபசரித்துத் தமக்கு வேண்டிய புராணத்தைச் சொல்லுமாறு கேட்பர். இதுவே புராணம் சொல்லும் முறை

யென வடநூலார் பின்பற்றுவதைத் தமிழிலும் பின்பற்றிப் பல புராணங்களை அமைத்துக் கொண்டனர். ஆயின், இம்முறை யிலிருந்து திருமயிலைத் தலபுராணம் மாறுபட்டு அகத்தியர் கூறு வதாகவும், பொதியமாமலையில் இருந்து கூறுவதாகவும், ஆறுமுகக் கடவுள் அகத்தியருக்குக் கூறியதை அவர் முனிவர் களுக்குக் கூறுவதாகவும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இத்தலபுராணத்தில் பல கற்பனை நயங்களையும், திருக்குறள் கருத்துக்களையும், அறவொழுக்கங்களையும், பாவ புண்ணியங்கள் பற்றியும் இவர் பாடியளித்துள்ளார்.

**கற்பனை நயம்**

பார்வதியார் சாபச் சருக்கத்தில், மயிலைத் தடாகத்தில் இயல்பாக நடைபெறும் இயற்கைச் செயலில் கற்பனையைக் கலந்து அழகானதொரு கவிதையைப் பாடுகிறார் இந் நூலாசிரியர் அமிர்தலிங்கத் தம்பிரான் அவர்கள்.

மாலை நேரத்தில் இயல்பாகத் தடாகத்தில் உள்ள தாமரை மலர்கள் குவிகின்றன. அப்படிக் குவிகின்ற இதழ்களிடையே கரிய வண்டுகள் அகப்பட்டுக் கொண்டன. இதை இரவில் சந்திரன் தாமரை மலரில் உள்ள மணத்தைக் கவரா வண்ணம் முத்திரையிட்டது போல் வண்டுகள் இருக்கின்றன என்பதாகக் காட்டுகிறார் ஆசிரியர்.

"முட்டிய தாமரை முகஞ்சு ருங்கவே
கட்டிய முகையினி விருக்கும் காரளி
வட்டவெண் மதியதில் மணங்கொ ளாத்தில்
இட்டமுத் திரையென இரவில் தோன்றுமே" (பா. 18)

என்னும் இப்பாடல் கற்பனை நயம் மிக்கதாகும். இவ்வாறு பல பாடல்கள் இந்நூலில் அமையக் காணலாம்.

திருமயிலைக்குப் புராணம் பாடவந்த ஆசிரியர் அத்தலத்தில் வாழ்ந்த திருவள்ளுவரின் கருத்துக்களைக் கொண்டு பாடல்களை அமைத்திருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இப்புராணத்தில் சுக்கிரன் அருச்சனைப் படலத்தில் மாபலிச் சக்கரவர்த்தி வாமனருக்கு மூன்றடி மண் தாரை வார்த்துக் கொடுக்க முயன்றபோது சுக்கிராச்சாரியார் வண்டு உருவெடுத் துத் தடுக்க முயன்றார். அந்த நிகழ்ச்சியைக் கூற வந்த ஆசிரியர்,

"கொடுப்ப ரருகிருந்து குற்றமே சொலுமன் னோரைக்
கெடுத்திடுந் தெய்வமென்று கிளத்திடும் வசனம் பொய்யோ
வெடுத்த கூராழி யங்கை யிறைவருக் களிக்குந் தானந்
தடுத்தசுக் கிரனு நாட்டந் தானிழந் திட்டா னம்மா" (8)

என வருணிக்கின்றார். இப்பாடலில்,

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். (குறள். 166)

என்னும் குறளின் கருத்து வெளிப்படக் காணலாம்.

திருமயிலைக்குரிய இந்நூலில் மயிலையில் தோன்றிய திருவள்ளுவரின் கருத்துக்கள் பல பொதிந்திருக்க வேண்டுமென்ற நோக்கிலேயே இவ்வாறு பல குறள் கருத்துக்களை ஆசிரியர் படைத்துள்ளார்.

**பாவச் செயல்கள் இவையிவை என்று கூறுதல்**

கலிங்க தேசத்து அரசன் தருமன் என்பவனின் மகன் சாம்பவன் பெரும் பாவங்கள் செய்தவன். அவன் திருமயிலையில் ஒரு வேதியரைச் சந்தித்த போது தான் செய்த பாவங்களைக் கூறுகிறான். அவை, செல்வச் செருக்கால் பிறர் மனைவியைப் புணர்தல், விலைமாதர்களைச் சேருதல், கற்புடைப் பெண்டிரின் தோள்களைத் தழுவ நினைத்தல், அந்தணர்களுக்குத் துன்பமிழைத்தல், அந்தணர்தம் பொருளைக் கவர்ந்து அவர்களைக் கொன்று அவர் மாதரைத் தழுவுதல், இரவில் பிறர் மனை புகுந்து திருடுதல், கள் குடித்தல், பொய்ச் சொல் கூறுதல். ஊன் உண்ணுதல், வழிப் போக்கர்களை அம்பெய்து கொல்லுதல் போன்றவையாகும்.

**பாவம் செய்தவர் பெறும் தண்டனைகள் பற்றிக் கூறுதல்**

பாவம் செயதவர்கள் நரகம் அடைவர். அங்கு அவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்படும். அது யமதண்டனை என்றும் கூறப்பெறும். அது நம்நாட்டில் மரபாகக் கூறப்பெறும் கருத்தாகும். இவ்வாறே பாவச் செயல் புரிந்த சாம்பவனிடத்தில் அந்தணர் யம தண்டனைகளைப் பற்றிக் கூறுகிறார்.

யம தூதர்கள் கால பாசத்தாற்கட்டி, நஞ்சையும் இரும்பையும் பாகுபோலக் காய்ச்சி வாயிலே ஊற்றுவரர்கள். நெருப்பில் காய்ந்த சூலத்தினாலும் சுடு போடுவார்கள். அளவிறந்த பதினாயிரம் கற்ப காலம் வரையில் பற்களிலே மலைபோல

அக்கினியைச் சொரிவார்கள். மார்பிலும் தலையிலும் தோளிலும் இரும்புச் சலாகையைப் பாய்ச்சுவார்கள். சூழன்று கொண்டிருக்கும் செக்கில் வைத்தாட்டுவார்கள் என இவ்வாறு பாவச் செயல்களைப் புரிவோர் பெறும் தண்டனைகள் பற்றித் தீர்த்தச் சருக்கத்தில் (பா. 12-18) கூறுவர்.

இவ்வாறு பல நீதிநூற் கருத்துக்கள் இத்தல புராண வரலாறுகளோடு கூட்டியுரைத்திருப்பது இந்நூலாசிரியரின் தனிச் சிறப்பாகும்.

### நாதமுனி முதலியார் இயற்றிய திருமயிலைத் தல புராணம்

திருமயிலையிலிருந்த புராணரத்னாகரம் நாதமுனி முதலியார் இயற்றிய இத்தல புராணத்தில் மேலும் பல புராண வரலாறுகள் சேர்த்துப் புதிதாக உருவாக்கப் பெற்றுள்ளது. இதில், பாயிரம், அகத்தியர் படலம், கூத்தாடு விநாயகர் படலம், நாட்டுப் படலம், உமாதேவியார் சாபம் நீங்கிய படலம், சிங்கார வேலர் சக்திவேல் பாசுபதாத்திரம் பெற்ற படலம், வெள்ளீசர் படலம், வாலீசர். படலம், அங்கம்பூம்பாவைச் சரித்திர படலம், திருவள்ளுவநாயனார் பிரபாவப் படலம் என்னும் பன்னிரு படலங்களுக்கு 580 செய்யுட்கள் உள்ளன. இவற்றை யடுத்து, முண்டகக் கண்ணம்மை சரித்திரம், இந்திரன் கரமுகமான சரித்திரம், மல்லீசர் சரித்திரம், காரணீசுரர் சரித்திரம் விருபாட்சீசர் சரித்திரம், ஸ்ரீராமர் பூசை செய்தது, தீர்த்த பாலீசர்சரித்திரம், வாயிலார் சரித்திரம் என்னும் எட்டுச் சரித்திரங்களுக்கு 225பாடல்களும், வாழி விருத்தம் ஒன்றுமாக 805 திருவிருத்தங்கள் அமைந்துள்ளன.

### நாட்டுச் சிறப்பு

தொண்டை நாட்டின் சிறப்புக்களையெல்லாம் இங்கு எடுத்துக் கூறுவர். இத்தொண்டை நன்னாட்டின் திருத்தலங்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் கூறுமிடத்து அத்தலத்தில் நிகழ்ந்த புராண வரலாறுகளையும் இணைத்துக் கூறுகிறார். இவை பல தலபுராணங்களுள் சுருக்க விளக்கமாகவும் அமைந்துள்ளமை குறிக்கத்தக்கதாகும். காட்டாக ஒருசில பாடல்களைப் பின் வருமாறு காணலாம்.

“பூமகட்கொரு கோயிலாய்ப் பொருவறப் பொலிந்து
நாமகட்கொரு நாடகச் சாலையாய் நயந்து
சேமமெய்துவான் சேர்குநர் எவர்க்கும் வெஞ்செஞ்மத்
தோமறுத்துணை யாவதித் தொண்டை நன்னாடே.

இருவ கைத்தவாந் தவங்களும் பொருள்களு மிலங்க
மருவு மன்பனைத் தமக்கிதே மகிழ்வுறு நாடென்று
ஒருவ குத்தமு மின்றியே வளந்தரந் குரித்தாய்த்
திருவி ளங்கிடத் திகழ்வது தொண்டை நன்னாடே

(காஞ்சி)

அம்மைதனக் குறிநீண்ட அன்புடனே கம்பைநதி
இம்மையிலே காண்போர்கள் ஏழுலகம் நடுநடுங்க
விம்மிதமாய்ப் பெருகிவர வேல்விழியால் இருகரத்தால்
தம்மைவிட்டு நீங்காது தழுவிய காஞ்சியு முளதால்.

(திருவெண்பாக்கம்)

காணிற் போகமுங் கேட்குறின் மோக்கமுங் கருத்தாற்
பேணிற் செல்வமும் பேசிடின் மைந்தரும் பெறலாற்
சேணில் விண்ணவர் துதிக்குமிச் செழும்பதி யதனை
வாணி வாழ்திரு வெண்பாக்க மொருபுடை மானும்.

(திருப்பாசூரம்)

எந்தநாட்டினும் இல்லதொ ரதிசய மெல்லாம்
இந்த நாட்டினில் உண்டென யாவர்கொ விசையார்
சிந்தை யாரவோர் தரமிதன் சீர்சொலி னிதுவே
பந்தம் நீக்கிடும் பாசூரம் பதியெனப் பகர்வாம்.

(திருவாலங்காடு)

சத்தியத்தைத் தவறாத சான்றோர்கள் புகன்றபடி
சித்திபெறா வணிகனுயிர் சேயிழையால் மாண்டசெயல்
எத்திசைவாழ் வேளாளர் எழில்குண்டந் தனில்வீய்ந்த
அத்தியுரித் தான்வாழும் ஆலங்கா டிங்குளதால்.

(திருமுல்லைவாயில்)

கண்ணிற் காணொணா அதிசயம் விளைத்திடுங் கருத்தால்
விண்ணில் தேவரும் புகழ்ந்திட விரும்புமிப் பதியை
நண்ணு மண்ணுல கோரெலாம் நயந்திட விருக்கும்
வண்ண மார்ந்தநல் திருமுல்லை வாயிலும் சிவனும்.

(திருவொற்றியூர்)

ஞான நாயகன் சுந்தரர் தூதனாய் நயந்து
போன வேதியன் தன்பதி நீங்கிடும் புலர்வாள்
வான மோங்கிய மகிழடி சேர்வையி னுண்மை
ஏனை விண்ணவர்க் கருளிய வெற்றியீங் கிலகும்.

(திருவான்மியூர்)

கால்பாயும் பெரும்பனையுங் கனுப்பாயுஞ் செங்கரும்புஞ்
சேல்பாயுஞ் செந்நெல்லுஞ் சேண்டவழ்முந் திரியுமுறப்
பால்பெருகு பசுக்கணிரை பரமர்நடங் காட்டவிது
வால்மீகி பூசித்த வான்மியூர்ப் பதிமாணும்

(திருக்கழுக்குன்றம்)

வழுக்க லைந்தே யருள்பெற்று வளர்வேத கிரியதன்மேல்
புழுக்கண் முதற்பிர மன்வரைப் புகழுடைய முத்திதரும்
மழுக்க ரத்தோன் அணியாக மன்னியுறை கோயிலிலே
கழுக்கள் வந்துநிதஞ் சூழுங் கழுக்குன்று மீதாகும்.

(திருக்கச்சி)

மருந்தின்றிப் பிணிதீர்க்கும் மன்னுலகி லுயிர்த்தொகைகள்
புரிந்தகொடு வினைதீர்க்கும் புகழ்ப்பதியென் றெந்நாளும்
தெரிந்துபசி தீர்க்கவெனத் திருவுளங்கொள் சுந்தரற்கு
விருந்திட்ட திருக்கச்சி வியன்பதியும் இங்குளதால்.

(திருவோத்தூர்)

பாம்பாட்டிச் சித்தரெனப் பரமசிவன் பேரெடுக்கத்
தீம்பாலை யுண்டவர்நல் தேவாரம் ஓதியதால்
நாம்பாடி நிதம்பரவ நல்லருள்செய் சித்தனார்
ஓம்பாதோர்க் கழுவேற்றும் ஓத்தூரும் இங்கொளிரும்.

(திருவூறல்)

கருவூறல் நீக்குபவர் கயிலாய பதியென்றே
திருமாலும் இந்திரனும் தினந்தினமே வலம்வந்து
பருவரல்கள் நீங்கிடவே பதம்பணிந்து பூசிக்கும்
திருவூறல் பதியின்சீர் செப்பரிதாய் நின்றிலங்கும்.

(திருவேற்காடு)

தம்பெருமை யறியாத தமிழ்முனியைத் தெக்கணத்தில்
நம்பெருமா னுய்த்திடலும் ஞாலமது சரிவரவே
உம்பரெலாம் மணங்காண ஒருவனை நீக் குவதழகோ
எம்பெருமா னெனக்காட்டும் எழில்வேற்கா டிங்குளதால்.

(திருவிற்கோலம்)

திரிபுரத்தை யெரித்திடவே சிவனேறுந் தேரதனை
மருப்பொன்றால் அச்சிறுத்த மைந்தனையே பூசித்து
விருப்பமுடன் தேரேறி வீரனென வெதிர்நின்று
கருத்துமுற்ற நகைத்தெரித்த கனவிற்கோ லமுறிகழும்.

(திருக்காளத்தி)

வன்றனைச் சிலந்தியுடன் வாரணமு மத்திருமே
பன்றனைச் சிவபூசை பரிவளித்த பெருமானும்
புண்ணியனார் துணையாகிப் பூவையரைக் கொண்டருளிக்
கண்ணப்பர்க் கருள்புரிந்த காளத்தி பதியிலேயும்

(முப்பத்திரண்டு பதிகள்)

திருக்கச்சி மேற்றளியுந் திருவோணக்
காந்தமொடு திருமாற் பேறும்
மருவுகுரங் கணில்முட்டம் மாகரலும்
வல்லமுடன் மயிலாப் பூரும்
பொருவிலாக் கச்சிநெறி காரைக்கா
டெனப்போற்றும் பனங்காட் டூரும்
கருவினிலே வாராது தடைசெயிலும்
பையங்கோட்டூர் கமழ்ந்து நிற்கும்.

ஐங்கரனார் ஆக்கிரத்த அக்கிரயாக்
கரசிலியும் வமரி ருழ்வை
தங்குபுகழ் மாகாளந் தளங்குதிரு
விளச்சரமுந் தழைத்த வாக்கை
பொங்குகச்சி யனேகதங்கா வதமுடனே
திருக்கள்ளில் புகழ்பெற் றோங்கும்
மங்கலமாம் பாடியெனும் பதிகண்முப்பா
னிரண்டெனவே மன்னு நாடே. (பா. 3-20)

என இவ்வாறு தொண்டை நாட்டில் பாடல் பெற்ற சிவத் தலங்களையெல்லாம் இவர் பட்டியலிட்டுரைக்கக் காணலாம். தொண்டை நாட்டுத் திருப்பதிகள் தோத்திரக் கோவை போன்ற நூல்களுக்கும் இதுபோன்ற பாடல்கள் துணையாயின எனலாம்.

**நகரச் சிறப்பைக் கூறல்**

திருமயிலை நகரின் சிறப்பை எடுத்துக் கூற வந்த இந்தல புராண ஆசிரியர்,

“உலகமாந் தைய லாளும் ஒருபெருந் தவமியற்றித்
தலமதாந் தொண்டை நாட்டைத் தனக்கொரு
மகவாய்ப்பெற்றாள்
அலகிலாப் புகழினம்மா தருந்தவந் தெடுநாட் செய்து
திலகமாய் மயிலை தன்னைத் திருமகத் தனியாய்ப்
பெற்றாள்”

எனக் கூறித் தொடங்குகிறார்.

தொண்டை நாட்டின் தம் கைகளைப் பெற்ற அத் தாயானவள் நெடுநாள் தங்கி செய்து அம்பிகையை மாநகரைத் தன்னுடைய திருமுகத்துத் திலகமாய் அணிபெற்று செய்தாள் என்று விளக்கும் ஆசிரியர் அந்நகரின் வீதியின் சிறப்பை யெல்லாம் நிரல்பட எடுத்துக் கூறுவர். வேதியர்கள், ஆட்சி யாளர்கள், வணிகர், வேளாளர் என்போர் நீதியுடனும் நேர்மை யுடனும் விளங்கி நிற்பதை எடுத்துக் கூறுவர்.

**வயிசியர் கொள்விலைக்கேற்ப லாபம் கொள்கை**

வயிசியர்கள் நேர்மையோடு லாபம் கொள்வதை,

"வயிசியர் வீதி யெல்லாம் வாய்ந்திடும் பொருளைக் கொள்ள
வயில்பொரு படைவேற் கண்ணார் அன்பொடு விலைகள்
கேட்கக்
குயில்மொழி மொழிக்கி ரங்கிக் கொள்விலைக் கேற்ப லாபம்
அக்கயிறுபோல் பெற்று விற்றுக் கடன்படா நிலையில்
வாழ்வார்" (9)

என விளக்குவர்.

மயிலை நகரில் வணிகரெல்லாம் உயர் விலை வைத்து விற்க மாட்டார்கள். இன்று வாங்கினால் குறைவு, இதே பொருளை நாளை வாங்கினால் மிகுதி எனக் கூறி நயமாக விற்பார்கள்.

"உத்தம வணிக ரெல்லாம் உயிர்விலை கூறா ராகிப்
பத்தினி மார்க்கேற்ற பண்டங்கள் காட்டிக் காட்டி
இத்தினம் இவ்வி லைக்கே ஈந்திடும் பொருள்கள் நாளைக்
கொத்தைக்கேற் இரட்டை யென்ன உபாயமாய்க் கூறி
விற்பார்" (நகரம். 10)

என வணிகரின் உத்தம குணத்தை எடுத்துக் கூறுவர்.

**செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்து நிற்கும் மாந்தர்கள்**

திருமயிலையில் வாழும் மாந்தர்கள் சிறந்த சிவ பக்தர்கள். சிவனடியார்களைச் சிந்தையில் மறவாதவர்கள். வான் நோக்கி வாழும் பயிர்களைப் போல வருவிருந்து நோக்கி வாழும் பண்பு கொண்ட மக்கள் அவர்கள்.

"வந்தவர்க்கு விருந்திட்டும் வருவோருக்
கெதிர்பார்த்தும் வழியச் சென்று
சிந்தையினி லெந்நாளுஞ் சிவனைநினைத்
தேவியர்ச் சிந்தைப் செய்து

பந்தமறுத்தவ ரடியை யெதிர்பணிந்து
மனைக்கொண்டு பரிவினோடு
முந்தவவர் மனமகிழ வமுதளிப்பர்
அந்தகரின் முறைதேர் மாந்தர்"

"அருந்தினர்கண் முன்போக வருந்துகின்றோர்
மகிழ்வடை வசனத் தோடு
பொருந்தியநெய் பாற்பெய்து புக்கவரை
உண்பிக்கும் புகழே யன்றி
விருந்தினரைக் காணாது வீதி யெல்லாந்
தான்தேடி விருப்பி னில்லத்
திருந்தவித்தை வயல்விசிப் பெய்மழையை
நோக்குவர்போல் இலைந்து நிற்பர்". (15,16)

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல் விருந்து வானத் தவர்க்கு" என்னும் குறள் (86) கருத்தை மறவாத மயிலை மக்களின் விருந்தோம்பலை இவ்வாறு சிறப் பித்துக் கூறுகிறார் இந்நூலாசிரியர்.

**திருமயிலையைப் போற்றுவோர் பெறும் பயன்**

திருமயிலையில் திருஞானசம்பந்தரின் தமிழ் வேதத்தால் 'உருவமிலங்கம் பெண்ணா யுதித்தநற் காட்சி தன்னால், இத்தலம் மற்றெல்லாத் தலங்களிலும் சிறந்ததாம்.

"திருமயிலையெனப் புகல்வோ ரெந்நாளுந்
தீவினைகள் தீரப் பெற்றோர்;
திருமயிலையெனப் புகல்வோ ரெந்நாளுந்
திருவரனை அடையப் பெற்றோர்;
திருமயிலையெனப் புகல்வோ ரெந்நாளும்
தேவருடன் செழித்து வாழ்வார்;
திருமயிலையெனப் புகல்வோ ரெந்நாளுஞ்
சிவனோடு சேர்ந்து வாழ்வார்". (20)

"மயிலையென வாழ்த்துவர்கள் மாதர்கரு வாரார்
மயிலையென வேபுகல்வர் மறலிபயம் நீப்பார்
மயிலையெனப் போற்றுமவர் மாதவசி யாவார்
மயிலையினில் வாழ்பவர்கள் மாண்கலை சேர்வார்". (32)

"ஒருதரம் நினைத்தவர்கள் உம்பர்பதி யாவார்
இருதரம் நினைத்தவர்கள்இனியகதி கொள்வார்

அருமையொடு மூன்றுதரம் அன்புற நினைப்போர்
பெருமையை எடுத்தெவரும் பேசல ரிதம்மா". (33)

"இறந்ததால் முத்திநல்கும் எழிற் பெறுகாசி யென்பர்
பிறந்ததால் முத்திநல்கும் புகழ்பெறு கமலை யென்பர்
சிறந்திடு மயிலையின்தன் திண் புகழ்கேட்போர்க் கெல்லாம்
வறந்திடப் பாவமஃது வள்ளற் சாருபம் நல்கும்". (35)

"விண்ணவர் புகழுமிந்த வியன்பதி விழாக்காண் போர்க்கு
நண்ணுறு கற்பார் பெண்டு நலந்தரு புதல்வப் பேறும்
பண்ணவர் பரவி வாழும் பத்தியு முணர்வு மேன்மைத்
தண்ணளி யோடு வாழ்வுந் தந்திடும் மயிலை தானே". (38)

"அத்தனா ருரைத்த வேதம் அதைத்தமிழ்க் குறளாய்ச் செய்த
வித்தக நாய னாரும் விழைந்தவித் தலத்தை யோர்த்து
சத்திய லோகம் விட்டுச் சார்ந்தனர் தேவ ரென்றால்
எத்தல மிதற்கொப் பாக இயம்பலாந் தகைமைத் தம்மா".
(31)

என இவ்வாறு மயிலையின் தனிச்சிறப்பை எடுத்துக் கூறுவர் இந்நூலாசிரியர்.

திருமயிலைக்கு மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய புராணம் கிடைக்கவில்லை, மேற் கூறிய இரண்டு புராணங்களே கிடைக்கின்றன. இவ்விரு நூல்களிலும் பல ஒற்றுமைகளும் வேறுபாடுகளுமுள்ளன. அவற்றை ஈண்டு நோக்குவோம்.

## இரண்டு புராணங்களுக்குமுள்ள வேறுபாடுகள்

அமுர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய தலபுராணத்தில் உள்ள தல விசேடச் சருக்கம், வேதம் பூசித்த சருக்கம், பிரமன் பூசித்த சருக்கம், தீர்த்தச் சருக்கம், திருவிழாச் சருக்கம் ஆகிய பகுதிகள் நாதமுனி முதலியார் இயற்றிய புராணத்தில் இல்லை. ஆயின், திருவிழாச் சருக்கத்தில் தம்பிரான் கூறும் கதையை ஸ்ரீராமர் பூசை செய்தது என்னும் தலைப்பில் நாதமுனி முதலியார் தம் நூலில் குறிப்பிடுவதைக் காணலாம்.

இவற்றுக்கு மாறாக நாதமுனி முதலியார் புதிதாக சில பகுதிகளைச் சேர்த்திருக்கிறார். அவை கூத்தாடும் விநாயகர் படலம், வாலீசர் படலம், அங்கம் பூம்பாவை சரித்திரப் படலம், திருவள்ளுவ நாயனார் பிரபாவப் படலம் என்னும் படலங்களும்,

முண்டகக் கண்ணம்மை சரித்திரம், இந்திரன் கரமுகமான சரித்திரம், மல்லீசர் சரித்திரம், காரணீசுரர் சரித்திரம், திருபாட்சேசர் சரித்திரம், தீர்த்த பாலீசர் சரித்திரம், வாயிலார் சரித்திரம் என்னும் சரித்திரங்களும் புதிதாக இப்புராணத்தில் சேர்க்கப் பெற்றுள்ளன. இவை அமுர்தலிங்கத் தம்பிரானின் புராணத்தில் இல்லை.

அமுர்தலிங்கத் தம்பிரானின் தலபுராணம் பழைய புராண அமைப்பிலுள்ளது. நாதமுனி முதலியாரின் தலபுராணம் புதிய செய்திகளுடன் எளிய நடையில் அமைந்துள்ளது.

அமுர்தலிங்கத் தம்பிரானின் திருமயிலைத் தலபுராணத்தில் பாயிரச் சருக்கத்திலுள்ள அவையடக்கப் பாடல்கள், நூலுக்கு ஒரு நல்ல முன்னுரையாக அமைந்துள்ளன. தவம், வேள்வி, துதி ஆகியவற்றால் இறைவன் மகிழ்கிறான் என்பனவற்றைக் கதைகள் மூலம் விளக்குவர். குமரவேள் அருச்சனைச் சருக்கத்தில் கந்தபுராணக் கதைகளும், திருவிழாச் சருக்கத்தில் இராமாயணக் கதைகளும் கூறப்பெறுகின்றன. பல தீர்த்தங்களின் சிறப்பும் திருமயிலையின் பெயர்க் காரணம் போன்றவையும் சிறப்பாக விளக்கப் பெறுகின்றன.

நாதமுனி முதலியாரின் திருமயிலைத் தலபுராணம் ஒரு வரலாற்று நூல் போல் அமைந்துள்ளது. பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக, அக்காலத்திலுள்ள பல புதிய செய்திகளும் இதில் சேர்க்கப் பெற்றுள்ளன. பழைய தலபுராணத்தில் கூறப்பெறாத, மயிலையிலுள்ள கோயில்களின் வரலாற்றையெல்லாம் விளக்கியிருப்பது இப்புராணத்தின் தனிச் சிறப்பாகும். கூத்தாடும் விநாயகர், திருவள்ளுவர், பூம்பாவை ஆகியோரின் வரலாற்றை விளக்கத் தனித்தனிப் படலங்கள் அமைந்திருப்பது புதுமையானதும் குறிப்பிடத்தக்கதுமாகும். இவை திருமயிலையின் மாண்புக்கு மேலும் அணிசேர்ப்பன எனலாம்.

முன்னர் எழுந்த தலபுராணங்களில் அத்தலம் பற்றி விடுபட்ட வரலாறுகளையெல்லாம் புதிதாக இயற்றும் தலபுராணத்தில் சேர்த்துப் படைக்கும் மரபினை முன்னோர் கொண்டதற்கு இம்மயிலைப் புராணங்களும் சான்றாகும்.

## திருவான்மியூர்ப் புராணம்

சென்னைப் பெருநகரின் தென்கோடியில் உள்ள தலம் திருவான்மியூர். வான்மீகி முனிவருக்கு இறைவன் நடனக்

காட்சியருளிய தலம். காமதேனு பால் சொரிந்து வழிபட்ட சிறப்புடையது. அகத்தியருக்கு மூலிகைகளைப் பற்றி இறைவன் உபதேசித்தருளிய சிறப்புத் தலம். இதனால் இறைவனுக்கு மருந்தீசர் என்று பெயர்.

தேவர்கள், சூரியன், பிருங்கி முதலியோரும் இத்தலத்தில் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். சம்பந்தரும் அப்பரும் பதிகம் பாடியுள்ளனர். இப்புராண நூலை கவிராஜசந்திர முதலியார் அவர்களால் இயற்றியளிக்கப் பெற்றுள்ளது.

## திருக்கச்சூர் ஆலக்கோயில் புராணம்

சென்னைக்கருகில் சிங்கப்பெருமாள் கோயிலிலிருந்து திருப்பெரும்புதூர் செல்லும் வழியில் உள்ளது கச்சூர். அமுதம் திரண்டு வருவதற்காகத் திருமால் ஆமையாக இருந்து வழிபட்டவராதலின் திருக்கச்சூர் (கச்சபம்-ஆமை) எனப் பெயர் வழங்குகிறது. கச்சபவூர் எனும் பெயரே நாளடைவில் கச்சூர் என்றாயிற்று. இங்குள்ள தலமரம் 'ஆல்' ஆதலால் ஆலக் கோயில் என்னும் பெயர் எய்தியது. சுந்தரர் பாடல் பெற்றது.

சுந்தரர் திருக்கழுக்குன்றம் வழிபட்டுத் திருக்கச்சூரை அடைந்து, ஆலக்கோயில் இறைவனைத் தொழுது, மதிற் புறத்தே பசியுடன் அமர்ந்திருக்க, இறைவன் அந்தணர் வடிவில் வந்து, சுந்தரரை அங்கேயே இருக்கச் செய்து; இவ்வூரிலுள்ள அடியார்கள் வீடுதோறும் சென்று, உணவு பெற்று வந்து அவர் பசியைப் போக்கினார் என்பது வரலாறு.

இத்தலபுராணத்தை இயற்றியவர் திரு வேலுச்சாமிப் பிள்ளை ஆவார்: இதில் 608 பாடல்கள் உள்ளன.

## திருக்கழுக்குன்றப் புராணம்

செங்கற்பட்டிலிருந்து மாமல்லபுரம் செல்லும் வழியில் உள்ளது திருக்கழுக்குன்றம். வேதமே மலையாக இருப்பதாகக் கூறுவர். வேதாசலம், கதலிவனம் என்றும் இத்தலத்தை அழைப்பர். மார்க்கண்டேயர் வழிபட்ட தலம். மாணிக்கவாசகருக்கு இறைவன் குருவடிவாய்க் காட்சி தந்தருளிய தலம் இதுவே என்பர். மூவர் பாடல் பெற்ற சிறப்புமுடையது.

இத்தலபுராணத்தை அந்தகக்கவி வீரராகவ முதலியார் அவர்கள் இயற்றியுள்ளார்கள். இதில் 22 சருக்கங்களும் 832 பாடல்களும் உள்ளன.

### அச்சிறுபாக்கத் தலபுராணம்

மதுராந்தகத்தை அடுத்துள்ள ஊர் அச்சிறுபாக்கம் ஆகும். விநாயகரை வணங்காது, திரிபுரம் எரிக்கச் சென்ற இறைவனுடைய தேர் அச்சு முறிந்த இடம் (அச்சு இறு பாக்கம்) ஆதலின் இப்பெயர் பெற்றது. இறைவன் இத்தலத்தில் விநாயகருக்கு அருள் புரிந்து, தொடர்ந்து சென்று திருவதிகையில் அசுரரை வென்றதாக வரலாறு கூறுவர். சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

இத்தலபுராணத்தின் ஆசிரியர் போன்ற பிற விவரங்கள் அறியக்கூடவில்லை.

### திருவக்கரைப் புராணம்

திண்டிவனத்திலிருந்து மயிலம் வழியாக பாண்டிச்சேரி செல்லும் வழியில் இருப்பது திருவக்கரை என்னும் தலம். வக்கரன் வழிபட்ட தலம் ஆதலால் வக்கரை என்றும், வலிய கரையையுடைய இடமாதலின் (கோயிலைச் சுற்றிலும் கற்பாறைகள்) வற்கரை-வக்கரை ஆயிற்று என்றும் கூறுவர். மரங்கள் கற்களாக மாறியிருக்கும் விந்தை மிக்க ஊர். சம்பந்தர் பாடல் பெற்ற திருத்தலம்.

குண்டலினி முனிவர் வம்சத்தில் வந்த வக்கிராசுரன் இப் பகுதியை ஆண்டதாகவும், அவனையழிக்க, காளி இறைவனை வழிபட்டு, அவனுடன் போர் புரிந்து வெற்றி பெற்றதாகவும் தலபுராண வரலாறு கூறுவர்.

இத்தலபுராணத்தை இயற்றியவர் வணிகசேர் நல்லய்யன். இதில் 27 படலங்களும் 519 பாடல்களும் உள்ளன.

### திரு அரசிலிக்காதை

தொண்டை நாட்டுத் திருப்பதிகள் முப்பத்திரண்டனுள் ஒன்று திரு அரசிலி. ஒழுந்தியாம்பட்டு என்று வழங்கப்பெறும் இத்தலம் புதுச்சேரியிலிருந்து திண்டிவனம் போகும் வழியில் உள்ளது. இரும்பைமாகாளத்திலிருந்து ஒட்டன்பாளையம் வழியாக இத்தலத்தை யடையலாம்.

வாமதேவ முனிவர் பூசித்த இத்திருத்தலத்திற்குத் திருஞான சம்பந்தரும் பதிகம் பாடியருளியுள்ளார்.

'பாடல் வண்டறை கொன்றை பால்மதி பாய்புனல் கங்கை
கோடல் கூவிள மாலை மத்தமுஞ் செஞ்சடைக் குலாவி

வாடல் வெண்தலை மாலை மருவிட வல்லியம் தோள்மேல்
ஆடல் மாசுணம் அசைத்த அடிகளுக் கிடம்அர சிலியே'

எனத் தொடங்கும் பதிகத்தில் 'அல்லிநீள்வயல் சூழ்ந்த அரசிலி அடிகள்' என்றே இவர் சிவபெருமானை அழைக்கக் காணலாம்.

இத்தகைய திருத்தலத்தின் வரலாற்றை விளக்குமுகமாக எழுந்ததே திருஅரசிலிக் காதை என்னும் தலபுராணமாகும். தமிழில் 'காதை' என்ற பெயருடன் எழுந்த தலபுராணம் இது ஒன்றேயாம். இக் காதையின் ஆசிரியர் திரு அடிகளாசிரியர் அவர்கள் இதனைப் புதுமையாகவும் படைத்துள்ளார்.

**தனித்தன்மை**

இக்காதை ஏனைய தலபுராணங்களைப் போன்றதாயினும் இதன் அமைப்புத் தனிப்பட்டதாகும். சூத புராணிகள் திருவாய் மலர்ந்தருளச் சௌனகாதி முனிவர் கேட்டனர் என்பன போன்றவை இதில் இடம்பெறவில்லை. நகரப் படலத்தே அந்தணர் முதலான குலப் பிரிவினைகள் கூறப் பெறவில்லை. வாமதேவர் வழிபடுபடலம் என்பதில் சமயத்தின் பரந்த நோக்கம் எங்ஙனமிருக்க வேண்டும் என்று கூறப் பெற்றுள்ளது. பெண்களின் உயர்வைப் பற்றியும், அவர்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதக் கூடாதென்பது பற்றியும் சுந்தரி சிவம் பெறு படலம் என்னும் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

பாயிரப் பகுதியில் அரசிலி இறைவன், அரசிலி இறைவி, மூத்த பிள்ளையார், இளைய பிள்ளையார், தமிழ், நால்வர், அப்பூதி அடிகள், சிவஞானபாலய சுவாமிகள், வாழி, காரணமும் அவையடக்கமும் கூறியுள்ளார். பின்னர், நாட்டுப் படலம், நகரப் படலம், வாமதேவர் வழிபட்ட படலம், சத்திய விரதப் படலம், சுந்தரி சிவம்பெறு படலம், ஞானசம்பந்தர் வழிபடு படலம் என ஆறு படலங்களும் புறவுரையாக நான்கு பாடல்களும் சேர்ந்து மொத்தம் 392 செய்யுள்களால் மிக எளிய இனிய நடையில் இக் காதையினை அமைத்துள்ளார் ஆசிரியர்.

**தொண்டை நாட்டுச் சிறப்பு**

ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர் பலரை ஈன்றளித்திடும் நாடாகிய தொண்டை நாட்டுச் சிறப்பை இனிய உவமைக் காட்சிகளால் எடுத்துரைக்கின்றார் இந்நூலாசிரியர்.

"ஆன்றமிழ்த் திருக்கோவை
[illegible] நாளும்
மூன்றெனும் பொருள்முடித்து
முதல்வனா ரடியைப் போற்றும்
சான்றவர் பலரைக் கொண்டு
சகமெலாம் புகழப் பெற்ற
ஏன்றிடு தொண்டை நாட்டை
எளியனேன் இயம்பப் போமோ" (1)

என வியப்புடன் விளக்கப்புகும் இவ்வாசிரியர், "தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்னும் ஔவை மூதாட்டியின் திருவாக்கையே முதலாக வைத்துப் பாடுகின்றார். இந்நாட்டுப் படலத்தில் வரும் உவமை நயங்கள் பல குறிப்பிடத்தக்கன. ஆசிரியர் தம் தமிழறிவும் இலக்கணப் புலமையும் இவற்றால் நன்கு விளங்கும்.

### அகப்பொருள் இன்பம்

குறிஞ்சிவளம் கூற வந்த புலவர் அங்கே அகப்பொருள் இன்பங்களையெல்லாம் அழகாகக் காட்டுகின்றார். மலையிலைத் திரியும் பெண்மைநல்லாரை நயம்படப் பாராட்டுவார்.

"இருள்படப் பொதுளா நின்ற
எண்ணருஞ் சோலை யெல்லாம்
தெருள்படப் பொருந்தி யாடும்
தெரிவிலும் பெண்மை நல்லார்
மருள்படு மனமும் கண்ணும்
மன்னுறச் சுழல்வ போல
மருள்படும் சுரும்ப ரீட்டம்
மணமுறச் சுழலும் மாதோ" (2)

என்னும் பாடலில், பெண்மை நல்லாரின் மனமும் கண்ணும் காதலரோடும் கூடும் மணத்தை நாடிச் சுழல்வது போலச் சுரும்பரீட்டம் மலர் மணத்தை அடையச் சுழலும் என்னும் நயம் பாராட்டத்தக்கது.

இத்தகைய காதலர்கள் 'கந்தனும் வள்ளியும்' போன்றே விளங்குகின்றனர் என்றும் வடந்தமிழ் இன்பமாகிய 'அகப் பொருள் இன்பம்' அமைக்கின்றனர் என்றும் குறிஞ்சியின் சிறப்பை விளக்கியுள்ளார்.

"சந்தனம் தேக்கு வேங்கைச் சார்பறத் தொலைத்த வேடர்
செந்தினை தோரை வித்திச் செய்தநற் புனத்தின் பாங்கர்
'கந்தனும் வள்ளி போன்றே' காதலர் பலருங் கூடிப்
பைந்தமிழ் இன்பந் துய்த்துப் பாவலர் திகழ்த்தா ரன்றே" (10)

என அக்காதலர்களின் இன்ப விளையாட்டை விளக்கிய ஆசிரியர், அக்குறிஞ்சி நில மக்கள் நடுநல் யாமத்தே நான்மறை பயிலுவதாகவும் கூறுவது குறிப்பிடத்தக்கது.

"தேன்நிறை வரையெலாம் தெளிவில் வெள்ளமா
வான்மறை புயலெலாம் வந்து பெய்யவும்
கோன்முறை தவறிடாக் குறிஞ்சி மக்களும்
நான்மறை பயிலுவர் நடுநல் யாமத்தே". (11)

இவர் இங்கு நான்மறை என்று கூறுவன இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் என்ற நான்கு. இயற்கைப் புணர்ச்சி முதல் மூன்றும் இளவேனிற் பகற்பொழுது நிகழ்வன; பாங்கியிற் கூட்டம் இரவுக் குறியே கூதிர் இடையாமத்து நிகழ்வது. ஆயினும் இவ்விடை யாமப் புணர்வு நிகழ்வழி ஏனைய மூன்றையும் எண்ணுதலின் "நான்மறை பயிலுவர் நடுநல் யாமத்தே" என்று கூறினார். "காமப்புணர்ச்சியும் இடந்தலைப்பாடும் பாங்கொடு தழாஅலும் தோழியிற் புணர்வுமென்றாங்க நால் வகையினு மடைந்த சார்பொடு மறையென மொழிதல் மறையோ ரகறே" என்ற தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பாவில் (486) கூறியதற்கேற்ப இந்நான்கும் நான்மறை என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது.

பாலையை விளக்க வந்த ஆசிரியர் அதிலே பிரிவு நிகழ்வுகளைக் குறிப்பிடுவர். தலைவனானவன், கல்வி, நாடு; காவல், தூது, உற்றுழி உதவல், பொருள் தேடல் இவை ஐந்தின் காரணமாகப் பிரியும் ஐவகைப் பிரிவு நிலைகளையும் பொருள்பட எடுத்துரைப்பர்.

**பிரிவும் கடமையும்**

காதல் நிறைந்ததும் கலவி நிகழ்ந்தது. கலவி நிகழ்ந்ததும் காதல் நிறைந்தது என இவ்வாறு காதலர்கள் இன்ப விளையாட்டிலேயே ஈடுபட்டிருந்தாலும் தலைவனுக்குப் பொறுப்புணர்வுகள் மேலோங்குகின்றன. நல்லறிவு தரும் கல்வியின் மேல் ஆவல்

கவனம் சென்றதும் அவளைவிட்டுப் பிரிந்து சென்று கற்று வல்லவனாகின்றான்.

“மால்தரு மாதரார் கலவி மாற்றியே
நூல்தரு கல்வியை நுகர்தல் நீக்கினால்
சால்தரு அறிவெலாஞ் சற்று மின்றியே
மேல்தரு கதியிடை மேவும் என்பரால்”. (20)

என இதை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

“காதலும் காமமும் கரைபு ரண்டிட
மாதரைக் கூடியே மனையில் வைகினால்
ஈதலும் துய்த்தலும் இயற்று நன்பொருள்
ஆதலும் கூடுமோ அறிமின் என்பரே”. (24)

என்னும் இப்பாடலில் பொருள் தேடச் செல்வதற்காகப் பிரியும் ஆண்மகனைச் சுட்டுவர்.

உவமை நயம்

கல்வி கற்கவும், நாடு காக்கவும், தூது போகவுமெனப் பிரிந்து சென்ற சில ஆண்மக்களைப் போலவே பிறருக்கு உதவுவ தற்கென்றே சில ஆண்மக்கள் செல்வர். உற்றுழிஉதவும் அவர் களின் சிறப்பு அளப்பரியது. இதை,

“வேல்புரை கண்ணியர் வெகுண்டு நிற்பினும்
‘மால்வரும் உடைநெகிழ் மகளிர் கையென’
மேல்வரு செயலெலாம் விலக்கி மிக்கதோர்
சால்பினைப் பெற்றவர்க் குதவல் சால்பென்பார்”. (23)

எனவரும் பாடலில் விளக்குவர். இதில் ஆசிரியர் கூறும் உவமை அறிந்து இன்புறத்தக்கது.

“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு” (குறள். 788) என நட்புக்கு இலக்கணம் வகுப்பார் வள்ளுவர். உற்றுழி உதவல் என்பதும் அதுவே. ஆயின், இங்குப் பெண்களை முதன்மைப்படுத்திக் கூறுகிறார் இந்நூலாசிரியர். ஆண்களைக் காட்டிலும் பெண்களே நாணத்திற் சிறந்தவராதலின், உடை நெகிழின் ஆடவரைக் காட்டிலும் மிக விரைந்து போற்றக் கூடியவர் பெண்களே; ஆதலின், ‘உடைநெகிழ் மகளிர் கை போல, என இங்கு இவர் கூறினார்.

அடுத்து முல்லையைப் பாடும்போதும் இத்தகைய உவமைச் சிறப்புக்கள் பலவற்றைக் காணலாம்.

"பொருளிலான் இளமைபோல்" புல்லென் கானமும்
"அருளிலான் வாழ்க்கைபோல்" அழிந்த சோலையும்
"அருளிலான் தவமென" மலிய மாமழை
"வெருளிலான் மொழியென" விளங்கப் பெய்ததே". (27)

என முல்லையில் மழைவளம் பற்றிப் பாடும் ஆசிரியர் பல உவமைகளையும் அடுக்கிக் கூறுவர். 'அச்சமும் மருளு மில்லாதவன் பேச்சைப் போன்று மழை பெய்தது' என்னும் நயம் பாராட்டத்தக்கதாகும்.

'செல்வர்களுக்குத் தீய நாள் இல்லை' என்பது பழமொழி. வற்றா வயலும் ஏரியும் பொய்கையும் நிறைந்த மருத நிலத்தின் மாண்பினை விளக்கும் ஆசிரியர் இப்பழமொழியையே மருத நிலத்திற்கு உவமையாக்குகின்றார்.

"வெள்ளிகண் மாறலால் விசும்பு பொய்ப்பினும்
கொள்ளியல் நீரறாக் குளங்கள் மன்னுவ
"தெள்ளிய தீயநாள் திருவர்க் கில்லெனும்"
ஒள்ளிய நன்மொழிக் குவமை யாகுமால்". (41)

என்பது பாடல்.

நெய்தல் நிலத்தில் வீசும் வாடைக்காற்று தலைவியரின் வருத்தத்தை மேலும் மிகுவிக்கும். புன்னையும் தாழையும் பொருந்திக் காணும் நெய்தல் நிலத்தையும் பல உவமைகளால் விளக்குவர்.

"குழைத்த புன்னையுட் குளிர்மதி எறித்திடு நிலவால்
"இழைத்த வெள்ளியின் தகடென" இலையெலாம் இலங்கும்
மழைத்த நற்கடல் "மல்லிகைத் தாரெனச்" சுழலும்
தழைத்த வெண்டிரை தன்னொடு பொலிவுறத் தயங்கும்". (56)

என இவ்வாறு விளங்கும் நெய்தல் நில மடவார் தங்கள் தலைவனைக் காணாது வாடுவதையும் அரற்றுவதையும் அழகிய காட்சியால் எடுத்துரைக்கின்றார்.

"திங்களுண் முயலே! எங்கள் திருத்தகு கொழுநர் மன்னித்
தங்குறு கலத்தைக் கண்டுத் தகைபெற வரவு கூறின்
இங்குறு இளம்புல் லெல்லாம் எடுத்துனக் களிப்பு மென்றே
மங்கைய ரிரங்கி நிற்ப மதிநிலா விரிக்கு மன்றே". (57)

என்னும் பாடல் இதை விளக்கும்.

இவ்வாறு நாட்டுச் சிறப்பைக் கூறவந்த ஆசிரியர் தம் இலக்கணப் புலமை வளத்தால் பாடல்தோறும் பொருளிலக்கணச் சிறப்புக்களையும் பெய்து பாடியிருக்கக் காணலாம்.

**நகர்வளம்**

தொண்டை நாட்டின் சிறப்பை எடுத்துரைத்த ஆசிரியர், அத்தொண்டை நாட்டின்கண் அரசிலிநகர் இருக்கும் இடத்தையும் அழகுபடக் கூறுகின்றார்.

> "தொண்டை மண்டிலக் காஞ்சிநா டெனுமொரு துறையில்
> வெண்டி ரைப்புனல் விளங்குவே லூரெனுங் கோட்டம்
> மண்டி லத்தினில் சிறந்ததோர் மரைமலர் அதனுள்
> அண்ட ரும்புகழ் அரசிலி பொலன்பொகு டம்மா". (1)

தொண்டை மண்டலத்தின் அரிய பெரும் துறையாக விளங்குவது காஞ்சி மாநகர். அதனருகேயுள்ள வேலூர்க் கோட்டம் என்பது அத்துறையில் பூத்த சிறந்ததோர் தாமரைப் பூ. அம்மலரின் அழகிய பொகுட்டாக விளங்குவது அரசிலி நகர் எனக் கூறும் விளக்கம் அருமையானதும் நயமானதுமாகும்.

**மக்கட் சிறப்பு**

இத்தகைய அரசிலி நகரத்தில் வாழும் மக்கள் தமக்கென வாழாத் தகைமையாளர்; தமக்குறு செல்வம் ஈட்டி மற்றவர்க்கு அளித்த பின்பு உண்ணும் அருமையாளர்; இந்நகர மக்களால் நகரமே எழில் கொள்கின்றது. அருள்மிகு கோயிற் சிறப்பும் இந்நகரத்தே பொலிகின்றது.

> "அன்பெலாம் விளைத்து நாளும்
> அருளெலாம் தோற்றி என்றும்
> இன்பெலாம் அடியர்க் காக்கும்
> எழில்பெறு கோயிற் கண்ணே
> நன்பெலாம் நிறைந்த நாதன்
> நளிரடி வணங்கி யன்பார்
> என்பெலாம் உருகி நைவார்
> இணைவிழிப் புனலி னோடே". (10)

என்னும் பாடல் இறையடியாரின் அன்புருகும் அன்பினைக் காட்டும்.

**சைவ சமயக் கொள்கை**

வாமதேவர் வழிபட்ட படலத்தில் ஆசிரியர்தம் சைவ சமயக் கருத்துக்களை எடுத்தோதுகின்றார். உயர்ந்த

சமயமாகிய சைவ சமயத்தின் கொள்கையைப் பற்றி இவர் விளக்குவது சமயப் பற்றுடையார் அனைவருக்கும் பயனுடையதாகும்.

"ஒழுக்கங் கல்வி உயரறி வின்றியே
இழுக்க மேபயில் ஏழைய ரியாவரும்
செழுக்க வாழ்ந்து சிவம்பெறச் செய்தலே
வழுக்கில் சைவ வளம்பெறு கொள்கையால்". (107)

"தூய நீறு துலங்கல ராயினும்
ஆய அன்பின ராகில் அவர்களை
நேய சைவர் எனக்கொளு நேர்மையே
பாய சைவ பரப்புறு கொள்கையால்". (108)

என இவர் சைவ சமயக் கொள்கையின் சாரத்தையே பிழிந்து தருவதுமல்லாமல், உண்மையான சைவர் இவரெனவும் அறுதியிட்டுக் கூறுகின்றார்.

"அன்பு கொண்டே அருளும் வளருற
இன்பு கொண்டே இலங்க உலகெலாம்
முன்பு கொண்டே முதிர்தொண் டியற்றுவோர்
தென்பு கொண்ட சிவசம யத்தரே". (109)

"நானென் பற்றும் நசிக்க அறிவினுள்
தேனும் பாலும் திகழ இனிக்குமோர்
கோனின் ஆரருள் கூட உயிர்க்கெலாம்
ஆன நற்பணி ஆக்குவோர் சைவரால்". (110)

"சாதி வேற்றுமை சாடி உயிரெலாம்
ஆதி தங்குமோ ராலய மென்னவே
பாதித் திங்கள் பரமன் அருளினால்
நீதி செய்வர் நிகழ்பெருஞ் சைவரே" (111)

என வரும் பகுதிகளில் உண்மைச் சைவர் இவர் என்னும் விளக்கம் தெளிவுறும்.

இத்தகைய பல சிறப்புக்கள் பொருந்திய திருஅரசிலிக் காதையை மயிலம் சிவஞான பாலய சுவாமிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மிகவும் செறிவுடனும் அழகுடனும் இக் கால நடைமுறைக் கேற்பவும் பாடித் தமிழ்த் தலபுராண இலக்கியத்திற்கு மேலும் வளம் சேர்த்துள்ளார் இந்நூலாசிரியர் திரு. அடிகளாசிரியர் அவர்கள்.

## புராணம் கிடைக்கப் பெறாத தலங்கள்

தொண்டை நாட்டிலுள்ள 32 பாடல் பெற்ற தலங்களுள் 21 தலங்களுக்குத் தனித்தனியே புராணங்கள் கிடைக்கின்றன. மற்றுமுள்ள 11 தலங்களுக்குத் தனியே தலபுராணங்கள் கிடைக்கவில்லை. இவற்றுள் முன்பு கூறிய காஞ்சிபுரத்திலுள்ள நான்கு தலங்களைத் தவிர மற்றுமுள்ள ஏழு தலங்கள் இங்குக் குறிப்பிடத்தக்கன.

### திருமாகறல்

காஞ்சிபுரத்திலிருந்து உத்திரமேரூர் செல்லும் வழியில் உள்ளது மாகறல் என்னும் தலம். இராசேந்திர சோழனுக்கு இறைவன் பொன் உடும்பாகத் தோன்றி, அவன் துரத்த, புற்றில் ஓடி ஒளிந்து பின் சிவலிங்க வடிவமாக வெளிப்பட்டதால் இப்பெயர் உண்டாயிற்று. மாகறல் என்பது உடும்பு ஆகும். இறைவன் பெயர் மாகறலீசுவரர் என்றே அழைக்கின்றனர்.

இந்திரன் போன்றோர் வழிபட்டதாகக் கூறுவர். சம்பந்தர் பதிகம் பாடியுள்ளார். இப்பதிகம் 'வினைதீர்க்கும் பதிகம்' என்றே போற்றப்பெறுகிறது.

இத்தகைய தலத்திற்குப் புராணம் எதுவும் கிடைக்க வில்லை.

### இலம்பையங்கோட்டூர்

திருவிற்கோலம் என்னும் கூவம் தலத்தின் அருகில் உள்ளது இவ்வூர். அரம்பையர் முதலானோர் வழிபட்ட தலம். ரம்பையங்கோட்டூர் என்பதே இலம்பையங்கோட்டூர் என்றா யிற்று. என்பர் .இப்பொழுது எலுமியன் கோட்டூர் என வழங்கு கிறது.

ஞானசம்பந்தர் இப்பக்கத்தே வந்த காலத்து, இறைவன் ஒரு சிறுபிள்ளை போலவும், பின் ஒரு முதியவர் போலவும் வழி மறித்து இக்கோயிலை உணர்த்தினார் என்றும், உடன்வந்த அடியார்கள் உணர்ந்து கொள்ளாது இருந்தனர் என்றும், பின்பு வெள்ளைப் பசு வடிவில் வந்து ஞானசம்பந்தரின் சிவிகையை முட்டி நிற்க, அப்போது சம்பந்தர் வியந்து அப்பசு காட்டிய குறிப்பின் வழி செல்ல, இத்தலத்தினருகில் வந்ததும் பசு மறைந்தது என்றும் வரலாறு கூறுவர். சம்பந்தரும் தம் பதிகத்தில் இவ்வரலாற்றைக் குறிப்பிடுகிறார்.

"பாலனாம் விருத்தனாம் பசுபதி தானாம்
பண்டுவெங் கூற்றுதைத்து அடியவர்க் கருளும்
காலனாம் எனதுரை தனதுரை யாகக்
கனல்எரி அங்கையில் ஏந்திய கடவுள்
நீலமா மலர்ச்சுனை வண்டுபண் செய்ய
நீல்மலர்க் குவளைகள் தாதுவிண் டோங்கும்
ஏலநாறும் பொழில்இலம் பையங் கோட்டூர்
இருக்கையால் பேணிஎன் எழில் கொள்வ தியல்பே".

இவ்வாறு தாம் திருவல்லம் பணிந்து இத்தலத்தை அடைந்து பெருமானைக் கண்டு மகிழ்ந்த வரலாற்றை இவர் குறிப்பர்' இத்தல புராணம் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

## திருவெண்பாக்கம்

குசஸ்தலையாற்றின் கரையில் திருவிளம்பூரில் ஒரு பழைய கோயில் இருந்தது. அது பத்ரிகாரண்யம் என்று அழைக்கப் பெற்றது (இலந்தை மரக் காட்டுப்பகுதி). சுந்தரருக்கு ஊன்று கோலை இறைவன் அருளிய தலம் இதுவே என்பர். 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கோயில் பல கல்வெட்டுக்களையும் கொண்டிருந்தது என்பர். 1942ஆம் ஆண்டில் இப்பகுதியில் அணைகட்ட முற்பட்டபோது இக்கோயில் அங்கிருந்து எடுக்கப் பெற்று, இப்பொழுதுள்ள பூண்டி நீர்த்தேக்கம் அருகில் நிறுவப் பெற்றுள்ளது. இவ்விடமே வெண்பாக்கம் எனப் படுகிறது.

சுந்தரர் திருமுல்லைவாயில் பணிந்து இங்கு வந்தார். அடியார் சூழ ஆலயம் சென்று 'கோயில் உளாயோ' என்று விண்ணப்பிக்க, இறைவன் ஊன்றுகோலை அருளிச் செய்து 'யாம் உளோம் போகீர்' என்றான். அது கேட்ட சுந்தரர் 'பிழையுளன பொறுத்திடுவர்' என்னும் பதிகம் பாடினார். அதில் 'ஊன்றுவதோர் கோல் அருளி உளோம் போகீர் என்றானே' என்றே விளக்குவர். பின்னர் இங்கிருந்து பழையனூர் சென்றார் என்பது வரலாறு.

இத்தகைய பழைய கோயிலின் வரலாறு கூறும் தலபுராணம் எதுவும் தனியே எழவில்லை.

## திருக்கள்ளில்

சென்னையிலிருந்து பெரியபாளையம் செல்லும் வழியில் உள்ளது கள்ளம் என்னும் சிவத்தலம். இப்பொழுது திருக்

கண்டலம் என வழங்குகிறது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம். கோயில் பழையதாயினும் பராமரிப்பில்லாமல் உள்ளது. இக்கோயிலின் சிறப்பும் வரலாறும் உரைப்பார் இன்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**திருவலிதாயம்**

சென்னைக்கருகே உள்ள பாடி என்னும் இடமே திருவலிதாயம் என்னும் தலமாகும். பரத்வாஜர், இராமர், அனுமார், சூரியன், சந்திரன், இந்திரன், வலியன் (கருங்குருவி) முதலானோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம். பரத்வாஜ முனிவர் வலியனாக (கருங்குருவியாக) சாபம் பெற்று, இங்கு இத்தலத்திலிருந்து பூசித்துச் சாபம் நீங்கப் பெற்றதால் இப் பெயர் உண்டாயிற்று என்பர். பிரம்மாவுக்குக் கமலை, வல்லி என இரண்டு பெண்கள் தோன்றினர் என்றும் அவர்களை விநாயகர் இங்கு மணந்தார் என்றும் கூறப்படுகிறது. சம்பந்தர் பதிகம் பெற்ற தலம். திருவலிதாயப் புராண வசனம் ஒன்றை பூவை. கலியாண சுந்தர முதலியார் இயற்றியுள்ளார். செய்யுள் நடையிலான புராண நூல் கிடைக்கவில்லை.

**திருஇடைச்சுரம்**

செங்கற்பட்டிலிருந்து திருப்போரூர் போகும் வழியில் உள்ள தலம். திருவடிசூலம் என வழங்குகிறது. கௌதமரிசியும் சனற்குமாரரும் வழிபட்ட தலம். இறைவி பசு வடிவில் வந்து பால் சொரிந்து வழிபட்ட தலம் என்றும் வரலாறு கூறுவர். சம்பந்தர் பதிகம் பெற்ற தலம். பழைய வரலாறு கூறும் புராணம் எதுவும் இத்தலத்திற்குரியதாக இல்லை. திருவிடைச்சுரம் தேவத்தான வரலாறு சில சுவடிகளில் உள்ளது.

**திருஇரும்பை மாகாளம்**

திண்டிவனத்திலிருந்து பாண்டிச்சேரி செல்லும் வழியில் உள்ளது இரும்பை என்னும் தலம். கடுவெளிச்சித்தர் இங்குத் தவமிருந்தார் என்பர். சம்பந்தர் பாடல் பெற்ற தலம். இருப்பினும் இக்கோயில் நல்ல பராமரிப்பில் இப்பொழுது இல்லை. தெளிவான வரலாறுகள் தெரியவில்லை. தலபுராணமும் இல்லை.

மேற்கூறிய ஏழு திருத்தலங்களுக்கும் பல செவிவழிச் செய்திகள் கூறப்பெறினும், தனியே தலபுராணங்கள் கிடைக்காதது குறிக்கத்தக்கது. அவை தோன்றியும் மறைந்

திருக்கலாம். இருக்கள்ளில், இரும்பை மாகாளம் போன்ற தலங்கள் பலகாலமாகப் பராமரிப்பு இன்றி இருப்பதும் சுட்டத் தக்கது. தேவாரப் பாடல்களே இத்தலங்கள் பழமையானவை என்பதைச் சுட்டி நிற்கின்றன. தலபுராணங்கள் தனியே உள்ள கோயில்கள் இருக்கும் சிறப்புநிலை இத்தலபுராணம் கிடைக்காத கோயில்களுக்கும் இல்லை என்ற உண்மையும் உணரத்தகும்.

**பிற தலபுராணங்கள்**

தொண்டை நாட்டில் பாடல் பெற்ற தலங்களேயல்லாமல் எண்ணற்ற கோயில்கள் பல உள்ளன. இங்குள்ள பல தலங்களுக் குரிய புராணங்கள் கிடைப்பதும் குறிக்கத்தக்கதாகும். எடுத்துக் காட்டாக ஒரு சிலவற்றை மட்டும் இங்கே நோக்குவோம்.

**தணிகைப் புராணம்**

திருத்தணிகைத் தலச்சிறப்பைப் பலபட விரித்துரைக்கும் இப்புராணம் சுவை நலம் பயக்கும் சிறந்த தமிழ்ப் புராணங் களில் ஒன்றாகும். தொண்டை மண்டலத்திலுள்ள திருத் தணிகையம்பதியிலேயே தோன்றிய கச்சியப்பமுனிவர் இயற்றிய இப்புராணம் மிகவும் செறிவுடையதாகும். இந்நூலில் 19 படலங்களும் 3161 பாடல்களும் உள்ளன. 1876ஆம் ஆண்டு முதல் பல பதிப்புகள் வெளிவந்துள்ளன.

காப்பு, கடவுள் வாழ்த்து, அவையடக்கம் என முற்பகுதி அமைந்து, நாட்டுப்படலம், நகரப்படலம் எனத் தொடர்ந்து படலங்கள் அமைகின்றன. இப்படலங்களில் மிகுதியான பாடல்களைக் கொண்டது களவுப் படலம். இதில் 643 பாடல் கள் உள்ளன. மிகக் குறைவான பாடல்களைக் கொண்டது நாகம் அருள்பெறு படலம். இதில் 10 பாடல்கள் உள்ளன. காப்புப் பகுதியில் கடவுளருக்கு வணக்கம் கூறுவது தவிர நூலினுள்ளே ஏழு படலங்களின் தொடக்கத்தில், சிவபெருமான், முருகப் பெருமானைக் குறிக்கும் வாழ்த்துப் பாடல்களையும் அமைப்பர்.

வடமொழி காந்த புராணத்தில் சங்கர சங்கிதையின் பிற்பகுதியில் கூறப்பெறும் தணிகை மலையின் பெருமையைத் தமிழில் மொழி பெயர்த்துக் கூறுவதாகவும் குறிப்பிடுவர். புராண வரலாற்றுப் படலத்தில் தணிகையின் பெயர்க் காரணங்களைக் கூறுவர். (பா. 59—61). தணிகையின் இருப்பிடம், சிறப்பு ஆகியவற்றைக் குறிப்பதும் சுட்டத்தக்கது.

"தெண்டிரைக் கங்கைக் காசிமா நகர்க்குத்
தெனாதியோ சனையிரு நூற்றின்
வண்டமிழ்க் காஞ்சி வடாதிரண் டனிற்கீழ்
வளைகடன் மேற்றிசை யைந்தில்
தொண்டர்சூழ் விரிஞ்சை வடகிழக் கெல்லை
மூன்றினிற் றுலங்குகா ளத்தி
அண்டர்சூழ் வரைக்கு நிருதிமூன் றரையின்
அரசுவீற் றிருப்பதக் குன்றம்" (62)

என்று தணிகை மலையிருப்பிடம் கூறித் தொடர்ந்து அங்குள்ள சிறப்புக்களையும் கூறுகிறார்.

வீராட்டகாசப் படலத்தில் முருகன் பெருமைகளை யெல்லாம் பலபட எடுத்துரைப்பர்.

"தனக்குத்தா னேமக னாகிய தத்துவன்
தனக்குத்தா னேயொரு தாவருங் குருவுமாய்த்
தனக்குத்தா னேயருள் தத்துவங் கேட்டலும்
தனக்குத்தா னிகரினான் றழங்கிநின் றாடினான்" (118)

என இவ்வாறு வரும் பாடல்கள் பல சிறப்புடையன.

நந்தியுபதேசப் படலத்தில் காணப்படும் பதி, பசு, பாசம் பற்றிய சைவ சித்தாந்தக் கருத்துக்களும், அகத்தியர் உபதேசப் படலத்தில் கூறப்படும் சைவ சமயத்தார்க்குரிய ஒழுக்க நூலாகக் கருதப்படும் சிவதருமோத்திர நூலின் கருத்துக்களும் குறிப்பிடத்தக்கன.

சீபரிபூரண நாமப் படலத்தில் முருகப்பெருமானது அவதாரமும் சூரபன்மன் போர் நிகழ்ச்சிகளும் கூறப்படுகின்றன. போர் நிகழ்ச்சிகளைக் கூறுகையில், தமிழ்மொழியின் புறப் பொருள் இலக்கணத்தில் கூறப்படும் பல்வேறு துறைகளுக்கேற்ற செய்யுட்களை அமைத்துத் துறைகளை விளக்கிச் செல்லும் முறை மிகவும் பாராட்டத்தக்கது.

**தனிச்சிறப்பு**

களவுப் படலத்தில் முருகன் வள்ளியம்மையைத் தினைப் புனத்தில் கண்டு, களவொழுக்கத்தில் கூடி மகிழ்ந்த செய்தியைப் பாடும்பொழுது தமிழிலக்கண முறைப்படியே பாடியுள்ளார் ஆசிரியர். இப்படலத்திலுள்ள 643 பாடல்களில் 580 பாடல்கள் ஒரு முழுக்கோவை நூல் போலவே அமைந்துள்ளன. இது மற்ற தலபுராணங்களில் இல்லாத ஒரு சிறப்பாகும். மேலும்,

சங்க நூல்கள், திருக்குறள், கல்லாடம், சிலப்பதிகாரம், சிந்தாமணி, நாலடியார் போன்ற நூல்களின் கருத்துக்களும் செறிந்து, இந்நூல் முழுமையும் கற்போர் கருத்தைக் கவரு வதாக அமைந்துள்ளது.

**தணிகாசல புராணம்**

திருத்தணிகைக்குரிய மற்றொரு தலபுராணம் இதுவாகும். கந்தப்பையர் அவர்கள் இயற்றியுள்ள இந்நூலில் 14 படலங்களும் 426 பாடல்களும் உள்ளன.

தணிகையைப் பற்றிய இவ்விரு நூல்களும் ஒப்பிட்டறியத் தக்கன.

**திருவிரிஞ்சைப் புராணம்**

வடஆர்க்காடு மாவட்டத்தில் வேலூருக்கு அருகே யிருப்பது விரிஞ்சிபுரம் என்னும் சிவத்தலம். இதற்கு, சைவ எல்லப்ப நாவலர் அவர்கள் இயற்றியதே இப்புராணம். இதில், பாயிரம், நைமிசாரணியம், கௌரிபுரி, விண்டுபுரி, விரிஞ்சபுரி, வழித் துணை, பரலோகம், பாலனுக்குத் திருமுடி வளைத்தது ஆகிய எட்டுச் சருக்கங்களும் 370 பாடல்களும் உள்ளன.

அம்மை பூசித்ததால் கௌரிபுரி; திருமால் பூசித்ததால் விண்டுபுரி; கரன் என்ற கழுதை முக அசுரன் பூசித்தமையால் கரபுரி; விரிஞ்சனாகிய பிரமன் பூசித்தமையால் விரிஞ்சிபுரம் ஆயிற்று என்பர். இது வைப்புத்தலம்.

இறைவன் மிளகு வணிகனுக்கு வழித்துணை சென்றமை யால் வழித்துணை நாதர், மார்க்கசகாயர் என்று அழைக்கப் பெறுகிறார். இளம் பிள்ளையாகிய ஒரு சிவவேதியக் குழந்தை பூசை செய்யும் பொருட்டு இறைவன் இத்தலத்தில் அவனுக்கு எட்டத்தக்கவாறு முடிவளைந்தார் என்பது வரலாறு.

இந்நூலாசிரியர் எளிய சொற்களால் இனிய சந்தங்களைப் பாடுவதில் வல்லவர். இவருடைய கவியழகை முருகன் துதி முதலாகவே காணலாம்.

"அந்திப் போதழகுறவே நடித்தருளும்
வழித்துணைவர் அருளுங் கோவை
வந்திப்போர் நினைத்தபடி மயிலேறி
அயிலெடுத்து வருஞ்செவ் வேளைச்

சந்திப்போம், மலர்சொரிவோம், புகழ்ந்திடுவோம்,
அவன் கமலத் தாளுந் தோறும்
சிந்திப்போம்; ஆதலினால் நமதுபழ
வினைகளெல்லாம் சிந்திப் போமே''

இந்நூலாசிரியர் பாயிரப் பகுதியில் மூவருக்கும் வணக்கம் கூறிய பின்னே, நந்திதேவர் மாணிக்கவாசகர் சண்டேசர் ஆகிய மூவருக்கும் வணக்கம் கூறுவது ஒரு தனிச்சிறப்பாகும். அம்முறையை இந்நூலிலும் காணலாம். அவையடக்கப் பாடலில் தாம் அருணை மாநகர் சிறப்புரைத்தமை கூறுகிறார்.

"உற்ற செய்யுளா லருணை மாநகர் சிறப்புரைத்தேன்
குற்ற மானது குணத்த வர்பொறுத் துளங்கொண்டார்
இற்றை நாளுமச் செருக்கி னாலி தனையுமிசைத்தேன்
கற்ற மாந்தருக் கனைத்தை யும்பொறுப் பதுகடனால்''.

## அன்பருக்குப் பணியும் இறைவன்

பாலனுக்குத் திருமுடி வளைத்த சருக்கத்தில் அப்பாலன் துதிப்பதாக வரும் பாடல்கள் குறிப்பிடத்தக்கன. பூசை செய்ய வந்த பாலன் நம்முடைய இரண்டு கைகளால் இறைவருடைய திருமுடியைத் தொடுவது நமக்கு அரிதென்று கருதி மனம் நொந்து வருந்தினான். அப்போது மார்க்கசகாயராகிய சிவபெருமான் தன் திருமுடியை வளைத்தார் என்பது இத்தல வரலாறு.

'அலைவ ளைந்திடும் புவியிடத் துடலுயி ரனைத்துந்
தலைவ ளைந்தன வளைந்தன இமையவ ருருவுஞ்
சிலைவ ளைந்திடுஞ் செயலெனத் திசைதிசை செறிந்த
மலைவ ளைந்தன வழித்துணை யவர்முடி வளைக்க''.

"என்புநெக்கு நெக்குருக வென்னிதயத்தி லிருப்பான்
மன்பதைக்கெ லாமுயிரு மாயுணர்வு மாய்வளர்ப்பான்
அன்பருக்கெ லாம் நினைத்திடும் வரத்தையு மளிப்பான்
வன்பருக்கெ லாங்கொடியவன் திருமுடி வளைத்தான்''.

(32, 33)

என இவ்வரலாற்றை இவர் விளக்குவர்.

இறைவன், அன்பருக்கு இதயத்திலிருப்பதுவும், வன்பருக்குக் கொடியவனாக விளங்குவதும், தம்மை வேண்டிச் சரணடைந்தவருக்குத் தன் முடியையே தாழ்த்துபவன் என்றும் இவர் குறிப்பிடுவது சுட்டத்தக்கதாகும்.

இவ் விரிஞ்சையின் வரலாற்றை 'மாக்கதை' என்றே போற்றுவர். இதைப் படித்தவர்களும் கேட்டவர்களும் வீரத்தில் கந்தவேளைப் போலவும், அழகில் மன்மதனைப் போலவும், அறிவில் அகத்தியரைப் போலவும் வாழ்வார்கள் என இவர் கூறுவது அறியத் தக்கது.

"இந்த மாக்கதை படித்தவர் செவிகளி லேற்றோர்
கந்த வேளெனக் கழைசிலை வேளெனக் கலையிற்
கந்த னாசல முனியென வுறைவரித் தலத்தின்
ஐந்து மாமுகன் பதவியிற் சிவனுடன் அணைவர்". (40)

என இவ்வாறு நூற்பயன் கூறுவது சிறப்பாகும்.

தலபுராணங்களைப் பாடுவதில் வல்லவரான சைவ எல்லப்ப நாவலரின் புலமைக்கு இப்புராணம் மற்றுமொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இத்தலத்திற்கு முத்துதாசர் என்பவரும் ஒரு புராணம் பாடியிருப்பதாகத் தெரிகிறது.

**வில்லைப் புராணம்**

தொண்டை நாட்டின் புதுச்சேரி அருகேயுள்ளது வில்வ நல்லூர் என்னும் தலம். இதுவே, வில்வவனம் என்றும் கூறப் பெறும். வில்வம் – வில்லம் – வில்லையாயிற்று. தேவாரத்தில் வில்வேச்சுரமென்றும் வைப்புத் தலமாகிய இது இப்பொழுது வில்லியனூர் என்று வழங்கப்பெறுகிறது. இறைவன் பெயர் வில்வவனேசர். இறைவி பெயர் கோகிலாம்பிகை.

இத்தலத்தில் ஆதிசேடன், இந்திரன், காமன், கோவிந்த னென்னும் பிராமணன், சகலாங்க சௌந்தரி என்னும் தாசி, தருமபாலனென்னும் சோழன், நரசிங்கமூர்த்தி, பிரமதேவன் போன்றோர் வழிபட்டுப் பேறு பெற்றனர் என்பர்.

இத்தல புராணத்தை வீரராகவக்கவி என்பவர் இயற்றி யுள்ளார். இதில் 9 சருக்கங்களும் 495 பாடல்களும் உள்ளன. டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் இந்நூலினைப் பதிப்பித்துள்ளார்கள். அதில், இப்புராணம் வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப் பெற்ற விதத்தையும், தாம் இப் புராணத்தை எவ்வாறு பதிப்பித்தார் என்ற வரலாற்றையும் விளக்குவர்.

இந்தத் தமிழ்ப் புராணம் வடமொழியிலுள்ள புராணத்தி லிருந்து மொழிபெயர்க்கப் பெற்றது. இது காந்தபுராணத்திலே

நாகர காண்டத்துள் சொல்லப்பட்டதென்று இந்நூல் கூறும் (12-3,309). அக் காண்டத்துள் 33 முதல் 38 முடியவுள்ள ஆறு அத்தியாயங்களுள் உரைக்கப்பட்டதென்று வடமொழிப் புராணம் சொல்லும். இவ்வடமொழிப் புராணம் 1877 ஆம் வருடம் ஆடி மாதம் அ. குருசாமி குருக்கள், சுப்பு, அருணாசல குருக்கள், கொ.வரதாசாரியார் என்பவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பெற்றது.

**வடமொழி—தமிழ்ப் புராணம் வேறுபாடு**

வடமொழிப் புராணத்துக்கும் இத்தமிழ்ப் புராணத்துக்கும் உள்ள வேறுபாடுகளை ஐயரவர்கள் தம் பதிப்பு முகவுரையில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்கள். வடமொழிப் புராணம் ஆறு அத்தியாயங்களையுடையது. இப்புராணத்தில் ஒன்பது சருக்கங்கள் உள்ளன. பாயிரச் சருக்கம், நைமிசாரணியச் சருக்கம், தருமபாலச் சருக்கம் என்பன இதில் மிகுதி.

இந்தத் தலவரலாற்றைச் சிவபெருமான் முருகக் கடவுளுக்கும், அக்கடவுள் வியாசமுனிவருக்கும், அவர் சூதமுனிவருக்கும் கூறியதாகத் தமிழ்ப்புராணம் உரைக்கும். வடமொழிப் புராணம், சிவபெருமான் உமாதேவியாருக்குச் சொல்ல அப்போது முருகக் கடவுள் கேட்டு அகத்திய முனிவருக்குக் கூற, அவர் வியாசருக்கும் வியாசர் சூதமுனிவருக்கும் உரைத்ததாகச் சொல்லும். அன்றியும் இத்தல வரலாறு உருத்திர சம்கிதையில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளதென்று அப்புராணம் உரைக்கும்.

இப்புராணத்தில் வரும் சகலாங்க சௌந்தரியின் பெயர் சர்வாங்க சுந்தரி யென்றும், தெய்விக னென்னும் அந்தணன் பெயர் தெய்வஞ்ஞனென்றும் வடமொழிப் புராணத்திற் சொல்லப்பட்டுள்ளன. பஞ்சநதி சங்கமத்தில் அந்நதிகள் மேலெழுந்து அழிக்காமல் இருக்கும் பொருட்டுப் பிரமதேவன் வில்வ வனத்தை உண்டாக்கினானென்பது அதிற் காணுமொரு செய்தியாகும். திருமால் ஆதிசேடனுக்குத் தருமபாலச் சோழனது சரித்திரத்தைக் கூறியதாக இரண்டு புராணங்களும் கூறும். இத்தமிழ்ப் புராண ஆசிரியர் அவ்வரலாற்றை விரித்துத் தருமபால சருக்கமென ஒன்று தனியே இயற்றி அதில் தருமபாலன் திரேதா யுகத்தின் முற்பகுதியிற் பூசித்துச் சிவாலயமும் நகரமும் நிர்மாணம் செய்தானென்று அமைத்துள்ளார். வடமொழிப் புராணம் ஆதிசேடன் திரேதாயுக் முழுதும் பூசித்ததாக உரைக்கும். ஆதிசேடன் சிவபிரான்

திருக்கழுத்திலுள்ள நஞ்சின் தன்மையை அறிய அதனைத் தின்றுடினானென்றும் அதனால் நோயுற்றானென்றும் தமிழ்ப் புராணங்கூற வடமொழிப் புராணமோ, அந்த விஷத்தில் ஏகதேசத்தைச் சர்ப்பங்களோடு ஆதிசேடன் உண்டான். அதனால் சர்ப்பதோஷம் உண்டாயிற்று' என்று குறிக்கும்.

தமிழ்ப் புராணத்தில் இந்திரச் சருக்கத்தில் நிருபமுனி, தவமுனி, சரமுனி என்றுமுள்ள மூன்று முனிவரின் பெயர்கள் ராஜரிஷி, தபரிஷி, ஜனரிஷி என்று வடமொழியில் உள்ளன. கோவிந்தனென்னும் அந்தணன் வரலாறு வடமொழியிற் சிறிது விரிவாகக் காணப்படுகின்றது என்பர்.

வடமொழிப் புராணத்தையும் இப்புராணத்தையும் பார்க்கும்போது இந்நூலாசிரியர் அதிலிருந்து செய்திகளை அறிந்து தமது கற்பனைத் திறத்தினால் அழகுபடுத்தித் தமிழ்ச் சுவை பெற அமைத்திருக்கிறாரென்பது புலப்படும் என்பர் டாக்டர் ஐயரவர்கள்.

**கடல் கடந்து வந்த தலபுராணம்**

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் வடக்குபட்டு ஸ்ரீமான் ராவ்பகதூர் சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் பொருளுதவியால் வில்லைப் புராணத்தை 1940 ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இப்புராணம் ஐயரவர்களுக்குக் கிடைத்த செய்தியையும் பிரான்சிலிருந்த ஜூலியன் வின்ஸோன் அவர்களுடைய ஆர்வத்தையும் இவர்தம் பதிப்பு முகவுரையில் காணலாம். அப்போது வெளிவந்த கலைமகள் இதழிலும் 'கடல் கடந்த தமிழ்' என்னும் வரலாற்றில் இதை அவர் எழுதி வெளிப்படுத்தியுள்ளார்.

இப்புராணத்தைப் பற்றி அவர் அறிந்த விதம், படியெடுத்தது, தலத்தைத் தேடிக்கண்டது, பிற சுவடிகளைத் தேடியலைந்தது போன்ற சுவையான பல செய்திகள் சுட்டத் தக்கன.

**சுவடி கிடைத்தது**

"பிரான்சின் தலைநகராகிய பாரிஸிலுள்ள சர்வகலா சாலையில் தமிழாசிரியராக விளங்கியவரும் என் அரிய நண்பருமான ஸ்ரீமான் ஜூலியன் வின்ஸோன் என்பவர் அந்த நகரத்துப் பெரிய புத்தகசாலையில் (Biblothique Nationale) ஓராயிரந் தமிழ்க் கைபெழுத்துப் புத்தகங்கள் உள்ளனவென்று 1891 ஆம்

வருஷம் மே மாதம் எனக்கு எழுதினார். அங்குள்ள நூல்கள் சிலவற்றின் பெயர்களையும் என் விருப்பத்தின்படி அப்பால் எழுதியனுப்பினார். அந்தப் பெயர் வரிசையில் வில்லைப் புராணம் என்ற பெயரைக் கண்டு அந்த நூலைப் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கும்படி எழுதினேன். அவர் அதில் 494 செய்யுட்கள் உண்டென்றும் இன்ன இன்ன சருக்கங்களுள்ளன வென்றும் பதில் விடுத்தனர். பிறகு அந்நூல் முழுவதையும் நான் கேட்டுக் கொண்டபடி தம் கைப்படவே 1902 ஆம் வருஷம் பிரதி செய்தும் அனுப்பினார். அதன் தலைப்பில் சிவலிங்கத்தின் உருவமும் நந்தி யுருவமும் வரைந்திருந்தார். கடல் கடந்து வந்த அப்புராணத்தைப் போற்றிப் பாதுகாத்து ஒரு பிரதி செய்வித்துக் கொண்டு மீட்டும் அவருக்கே அவருடைய பிரதியை அனுப்பிவிட்டேன்''.

**வில்வவனம்**

''இப்புராணத்தை அதுகாறும் நான் படித்ததில்லை; கேட்டதுமில்லை. இப்புராண ஏடுகளும் என்னுடைய ஆராய்ச்சியில் அகப்படவில்லை. இதைச் சிறிது படித்துப் பார்த்தேன். வில்வ வனமென்ற ஒரு தலத்தின் புராணம் என்று தெரிய வந்தது. ஆயினும், வில்வ வனமென்பது எந்தத்தலம் என்று ஆலோசித்தேன். தமிழ்நாட்டிலே எவ்வளவோ வில்வ வனங்கள் உள்ளன. இதில் கூறப்பட்ட வில்வ வனம் யாது என்று துணிய முடியவில்லை. இதைப் பற்றி விசாரித்துக் கொண்டே யிருந்தேன்''.

**குயிலம்மை**

''கடவுள் வாழ்த்துச் செய்யுட்களிலிருந்து இத்தலத்தின் சிவபெருமான் திருநாமம் காமீச ரென்றும் அம்பிகையின் திருநாமம் குயிலம்மையென்றும் தெரிய வந்தது. வில்வவனம், காமீசர், குயிலம்மை என்னும் திருநாமங்களைப் பலமுறை நினைத்தும் சொல்லியும் அவற்றைப் பற்றிப் பல அன்பரை விசாரித்தும் வந்தேன். ஒருசமயம்,

''பக்குவ மாகக் கவிநூறு செய்து பரிசுபெற
முக்கர ணம்மெதிர் பல்காலும் போட்டு முயன்றிடினும்
அக்கட போவெனும் லோபரைப் பாடி யலுத்துவந்த
குக்கலை யாண்டருள் வில்வ வனத்துக் குயிலம்மையே''.

என்ற தனிப்பாடல் ஞாபகத்துக்கு வந்தது. அதில் வில்வ வனமும் குயிலம்மையும் ஒருங்கே காணப்பட்டபோது ஒரு புதிய

உலகத்தைக் கண்டு பிடித்தவனைப் போன்ற மகிழ்ச்சியை யடைந்தேன். அந்தப் பாட்டினாலும் வில்வவனம் எங்குள்ள தென்ற விஷயம் விளங்கவில்லை. மறுபடியும் பழைய மயக்கத்தில் ஆழ்ந்தேன்.

நெடுநாட்களுக்குப் பிறகு வில்வவனத்தைக் கண்டு பிடித்தேன். புதுச்சேரிக்கு அருகிலுள்ள வில்வநல்லூர் அம்பிகையின் பெயர் கோகிலாம்பிகையென்று தெரிந்தது. கோகிலாம்பிகையே குயிலம்மை யென்றும் வில்வநல்லூரே வில்வவனமென்றும் ஊகித்தேன்; பின்பு புராண முழுவதும் நன்றாக ஆராய்ந்து படித்தேன். வில்வநல்லூருக்குச் சென்று தரிசனம் செய்து விஷயங்களை விசாரித்து அறிந்தேன். இப் புராணப் பிரதிகள் வேறு கிடைக்குமாவென்று தேடச் செய்தேன். வில்வ நல்லூரிலுள்ள ஸ்ரீ லக்ஷ்மி நாராயணைய ரென்னும் அன்பர் இரண்டு பிரதிகளைத் தம்முடைய மருகரும், சிலகாலம் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியராக இருந்தவரு மாகிய சி. பி. வேங்கடராமையர் மூலமாக அனுப்பினார். 1910ஆம் வருஷம் அவற்றை வைத்துக் கொண்டு ஒருமுறை முதற்பிரதியைச் செப்பஞ்செய்து கொண்டேன். பிறகு வட மொழிப் புராண வசனமும், வில்லை முத்துக் குமாரர் பிள்ளைத் தமிழ்க் கையெழுத்துப் பிரதியும் கிடைத்தன. வில்வ நல்லூரி லிருந்து கிடைத்த புராணப் பிரதி ஒன்றில் 422 ஆம் செய்யுள் அதிகமாகக் காணப்பட்டது".

என இவ்வாறு தாம் பெற்ற இவ் வில்லைப் புராணம் பதிப்பான செய்தியை விளக்கியிருக்கும் ஐயரவர்கள், "என்னுடைய பழைய நண்பராகிய ஜூலியன் வின்ஸோன் துரை இப்பதிப்பைக் கண்டால் அடையும் சந்தோஷத்திற்கு அளவே இராது. அவர் இப்போது இல்லை. அவருடைய அன்பின் ஞாபகக் குறியாகவே இப்புராணத்தை நான் கருதியிருக் கிறேன்" எனக் குறிப்பிடுவது சுட்டத்தக்கது.

## நூலாசிரியர்

இப்புராணத்தின் ஆசிரியர் இன்னாரென்பது இந்நூற் சுவடி களிலேனும் இந்நூற் செய்யுட்களிலேனும் காணப்படவில்லை. ஆயினும் இத்தலத்து முருகக் கடவுள் பேரில் அருணாசல கவி என்பவர் பாடிய வில்லை முத்துக்குமாரர் பிள்ளைத் தமிழ் என்னும் பிரபந்தத்தில் அம்புலிப் பருவத்திலுள்ள எட்டாம்

செய்யுளில் "சந்திரனு வீரரா கவனுரைபு ராணமொடு நலமகத் துவமுமருணா சலனுரைசெய் வரகவிதை யானையின் னைத்தமிழ் தனைக்கேட்டு மனமகிழலாம்" என்ற அடிகளைக் கொண்ட இந்நூலாசிரியர் பெயர் வீரராகவர் என்று ஐயரவர்கள் தேடிக் கண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவர் அந்தகக்கவி வீரராகவ முதலியாருடைய பரம்பரையினரென்று கருதவும் இடமுண்டு என்றும் இவர் கூறுவர்.

பழைய தலபுராணங்களை ஏட்டிலிருந்து பதிப்பிக்கும்போது, அத்தலம் இருக்குமிடம், தலவரலாறு, நூலாசிரியர் ஆகிய வற்றை ஆராய்ந்து காண்பதில் உள்ள சிக்கல்களையும் அருமைப் பாடுகளையும் இத்தகைய பதிப்புகளால் நன்கு அறியலாம்.

**காமகேர்ப் புராணம்**

தமிழகத்தில் ஜவ்வாதுமலைக்குக் கிழக்கிலும் சேயாற்றுக்கு வடக்கிலும், அகத்திய முனிவர் பிரதிட்டை செய்து பூசித்துப் பேறு பெற்ற முள்ளிக் காட்டிற்கு மேற்கிலும் (இது இப்போது முள்ளிப்பட்டென்று வழங்குகின்றது.) பாலாற்றுக்குத் தெற்கி லும் கமண்டல நதிக்கரையில் உள்ள சிறப்புமிக்கதொரு தலம் காமபுரி என்பதாகும். இத்தலத்தில் எழுந்தருளி விளங்கும் சிவலிங்கப் பெருமான் தானாயுண்டானவர் என்றும், இத்தலத்தை நினைத்த மாத்திரத்தில் நீண்ட ஆயுள், போகம், வீடுபேறு இவற்றைக் கொடுக்கும் என்றும், பாபம், நோய், பயம் இவை நீங்குமென்றும் புராண வரலாறு கூறுகிறது.

குமார தீர்த்தம், வீராவிளித் தீர்த்தம், அர்ச்சுன தீர்த்தம், பாபநாசத் தீர்த்தம், கமண்டல தீர்த்தம் ஆகிய ஐந்து தீர்த்தங் களும் மிகவும் சக்தி வாய்ந்தனவெனக் கூறப் பெறுகின்றன.

இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைச் சந்திரன், குமாரக்கடவுள், விவஸ்வான் இரதிதேவி போன்றோர் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர்.

இப்புராணத்தில் கடவுள் வாழ்த்து, புராண வரலாறு நீங்க லாக, சந்திரன் பேறு பெற்ற சருக்கம், குமாரக்கடவுள் அருள் பெற்ற சருக்கம், விவஸ்வான் வலம்புரிந்த சருக்கம், இரதிதேவி வரம் பெற்ற சருக்கம், அத்தி மலர்ந்த சருக்கம், அர்ச்சுனன் பாவந் தீர்த்த சருக்கம், சோழச் சருக்கம், காமக்கோட்டி சருக்கம், அமணச் சருக்கம் என்னும் ஒன்பது சருக்கங்கள் உள்ளன. எளிய உரைநடையில் அமைந்துள்ள இத்தலபுராணத்

திற்கு மூலமாக செய்யுள் நடையில் புராணம் இருந்திருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது.

ஆரணி ஜாகீர் காமக்கூர் மங்களக் கவிராயர் கந்தபிள்ளையவர்கள் எழுதி வைத்திருந்த ஏட்டுப்பிரதியிலிருந்து இப்புராணம் பல ஆண்டுகட்குமுன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இன்று கிடைப்பது அரிதாகவுள்ளது. இந்நூலின் ஆசிரியர் பற்றிய விவரம் ஏதும் அறியக்கூடவில்லை.

காமக்கோட்ட புராணம், காமநகர்ப்புராணம் என்பன முறையே திரு சுந்தர முதலியார், திரு. ஆ. மா. சிவஞானம் ஆகியோரால் இயற்றப் பெற்றதாக இரண்டு புராணங்கள் பெயர்கள் கிடைக்கின்றன. அவை எத்தலம் பற்றியது என்ற விவரங்களை அறியக்கூடவில்லை.

**அயன்புரத் தலபுராணம்**

சென்னையிலுள்ள அயனாவரம் என்னும் தலத்திலுள்ள பரசுராமலிங்கேசுவரர் வரலாறுகளைக் கூறுவது இத்தல புராணம். அருட்கவி தி. வெ. தணிகைவேள் பாரதியார் அவர்கள் இத்தலபுராணத்தை இயற்றியுள்ளார். இதில் 8 படலங்களும் 376 பாடல்களும் உள்ளன. இன்னும் அச்சாக வில்லை.

**காங்கேய நல்லூர்ப் புராணம் வேலூர்ப் புராணம்**

இதே போன்று, திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் தாம் பிறந்த தலமாகிய காங்கேய நல்லூருக்கும், வேலூர் ஜலகண்டேசுவரர் கோயிற் புராணம் இயற்றியிருப்பதாக அறிகிறோம். இவையும் இன்னும் அச்சில் வெளிவரவில்லை.

**பிற தலபுராணங்கள்**

அச்சான தலபுராணங்களுள் களத்தூர்ப் புராணம், குடியேற்ற நல்லூர்ப் புராணம், குளத்தூர்ப்புராணம், கொரட்டைத் தல மான்மியம் (திருப்பத்தூர்), சிந்தாமணித் தலபுராணம் (திருவொற்றியூர் வடக்கு), சென்னை செல்வக் கந்தநாதர் தல புராணம், திரிசூலகிரிப்புராணம், திருக்கலசைப் புராணம் (தொட்டிக் கலை), திருப்பத்தூர்ப் புராணம், திருப்போரூர்ப் புராணம், திருவேட்டீசுவரர் புராணம், பினாகி என்னும் பெண்ணை நதிப்புராணம், புதுவைத் தலபுராணம், புதுவை வடபாலீசர் புராணம், பொன்னேரி திருவாய்ப் பாடிப் புராணம்,

மகாதேவமலைப் புராணம், மயிலாசலப் புராணம், திருமுல்லை வாயிற் புராணம், வடபுதுவைத் தலபுராணம், வில்விவாக்கப் புராணம், வில்வாரண்யத் தலபுராணம் (நல்லூர்) போன்ற இருபதுக்கும் மேற்பட்ட தலபுராணங்கள் கிடைக்கப் பெறு கிறோம். இவற்றுள் பல கிடைப்பது அரிதாக உள்ளன.

### வைணவத் தலபுராணங்கள்

தொண்டை நாட்டில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற வைணவத் தலங்கள் 22. இவற்றுள் காஞ்சி புரத்தில் மட்டும் 14 தலங்கள் உள்ளன. மற்றுமுள்ள 8 தலங் களும் சென்னைக்கு அருகிலேயே உள்ளன.

### காஞ்சிபுரத்திலுள்ள வைணவத் தலங்களும் புராணங்களும்

திருஅட்டபுயகரம், திருஊரகம், திருக்கச்சிஅத்திகிரி, திருக்களவனூர், திருக்காரகம், திருக்கார்வானம், திருத்தண்கா (தாப்புல்), திருநிலாத்திங்கள் துண்டம், திருநீரகம், திருப்பரமேச்சுர விண்ணகரம், திருப்பவள வண்ணம், திருப் பாடகம், திருவெஃகா, திருவேளுக்கை ஆகியன ஆழ்வார் பாடல் பெற்ற தலங்களாகும்.

### அத்திகிரி

இவற்றுள், திருக்கச்சி—அத்திகிரி என்னும் வரதராச கோயில் பற்றிய புராண நூல்கள் மட்டுமே கிடைக்கின்றன. ஐராவதமே மலையுருவில் எம்பெருமானைத் தாங்கியதாகை யால் இத்தலம் அத்திகிரி (வேதகிரி) என்று அழைக்கப் பெறு கிறது. பிரம்மா செய்த யாகத்திற்கு உகந்து எம்பெருமான் வரம் தந்ததினால் வரதராசன் என்று அழைக்கப்படுகிறார். பிரம்மாவினால் இங்கு யாகம் செய்யப் பெற்றதால் காஞ்சி ஆயிற்று என்பர். (க-பிரமனால், அஞ்சிதம்-பூஜிக்கப்பட்டது).

சுவாமிதேசிகன் அவதார தலம் இது. பூதத்தாழ்வார். திருமங்கையாழ்வார், ஆளவந்தார், திருக்கச்சி நம்பி, இராமானுசர், சுவாமிதேசிகன், மணவாள மாமுனிகள் ஆகியோர் மங்களா சாசனம் செய்துள்ளனர்.

அத்திகிரிமகாத்மியம், அத்திகிரிமான்மியம் போன்ற உரைநடை நூல்களே கிடைக்கின்றன. வேதாந்த தேசிகரின் அத்திகிரி மான்மியம் 29 பாடல்களுடன் மணிப்பிரவாளநடையில் அமுதப் பெற்றதாகும்.

இவை தவிர காஞ்சிபுரத்திலுள்ள மற்ற தலங்களுக்குத் தல புராணம் எதுவும் கிடைக்கவில்லை.

**சென்னைக்கு அருகேயுள்ள வைணவத்தலங்களும் புராணங்களும்**

திருஇடவெந்தை, திருஎவ்வுள், திருக்கடன்மல்லை, திருக்கடிகை, திருநின்றவூர், திருநீர்மலை, திருப்புட்குழி, திருவல்லிக்கேணி ஆகிய எட்டுத் தலங்களுள் திருநின்றவூர்த் தல புராணம் மட்டுமே கிடைக்கின்றது. திருநீர்மலை, திருப்புட்குழி நீங்கலாக மற்றவற்றிற்கு உரைநடையிலான புராணங்கள் கிடைக்கின்றன.

**திருநின்றவூர்த் தலபுராணம்**

இத்தலம், சென்னை—அரக்கோணம் பாதையில் உள்ளது. தின்னனூர் என்று அழைக்கப் பெறுகிறது. எம்பெருமான் பெயர் பக்தவச்சலப் பெருமாள். என்னைப் பெற்ற தாயார் என்பது பிராட்டியின் பெயர். வருணன், தருமத்துவசன், புரந்தரன் ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்றதாக வரலாறு.

இத்தலபுராணம் இயற்றிய ஆசிரியர் பெயர் அறிய இயலவில்லை. இந்நூலில் 4 அத்தியாயங்களும் 130 பாடல்களும் உள்ளன.

**திருஇடவெந்தைப் புராணம்**

சென்னை கோவளம் வழி, மகாபலிபுரம் செல்லும் வழியில் உள்ளது திருஇடவெந்தை என்னும் தலம். எம்பெருமான் இடப்புறத்தில் பிராட்டியைக்கொண்டுள்ள படியால் திருஇடவெந்தை எனப் பெயர் பெற்றது. காலவ மகரிசியின் 360 பெண்களையும் பகவான் ஒரே கன்னியாக்கி மடியில் வைத்துக் கொண்டு 360 கன்னிகளை 360 நாள் கல்யாணம் செய்து கொண்டதாகச் சொல்வதால் நித்திய கல்யாணம் என்று அழைக்கப் பெறுகிறார். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்த திருத்தலம்.

இந்நூலைத் திரு மு. இராகவையங்கார் இயற்றியளித்துள்ளார்.

**திருஎவ்வளூர் மான்மியம்**

சென்னைக்கருகே திருவள்ளூர் என்னும் தலத்தில் எழுந்தருளிய பெருமாளின் பெயர் வீரராகவப்பெருமாள். திருமால் சாலிஹோத்திர முனிவருக்குக் காட்சியளித்து "உறைவதற்குரிய

உள்ளவ்வுள்" என்று வினவியதால் இத்தலத்திற்குத் திருஎவ்வுள் என்று பெயராயிற்று. இங்கு, மூலவராகிய வீரராகவன் தனது வலது திருக்கையை அம்முனிவரின் தலைமீது வைத்தபடியும் நான்முகனுக்கு வேதங்களை உபதேசிக்கும் வண்ணமாக இடது கையில் ஞான முத்திரையோடு எழுந்தருளியுள்ளார். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார்.

திரு சி. துரைசாமி முதலியார் இந்நூலை இயற்றியளித்துள்ளார்.

**திருக்கடன்மல்லை மான்மியம்**

மகாபலிபுரம் என்னும் இத்தலம் கடலோரப் பகுதியில் உள்ளது. எம்பெருமானுக்கு உலகுய்ய நின்றான் (ஸ்தல சயனத் துறைவார்) என்று பெயர். திருமங்கையாழ்வார். பூதத்தாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளனர். இம்மான்மியம் இயற்றியவர் பெயர் அறிய இயலவில்லை.

**திருக்கடிகாசல மகத்துவம்**

சோளசிங்கபுரம் என்றும் சோளங்கிபுரம் என்றும் அழைக்கப் பெறும் தலமே திருக்கடிகை. இவ்வூரில் சிறிது நேரம் தங்கியிருந்தாலே மேலுலகம் கிடைக்கும். ஆகவே கடிகாசலம், திருக்கடிகை என்ற பெயர்கள் வந்தன என்பர். சுமார் 500 அடி உயரத்திலுள்ள பெரிய மலையில் யோக நரசிம்மர் எழுந்தருளியுள்ளார்.

நரசிம்ம அவதாரத்தை வழிபட விரும்பிய சப்த முனிவர்கள் இவ்விடத்தில் தவம் செய்யத் தொடங்கி ஒரு நாழிகைக்குள் அவர்கள் பயன்பெற்ற காரணத்தினால் கடிகாசலம் என்ற பெயர் பெற்றது என்பது வரலாறு.

22 அத்தியாயங்களில் அமைந்த இந்நூலின் ஆசிரியர் போன்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.

**திருவல்லிக்கேணி மகாத்மியம்**

சென்னையில் உள்ள புகழ்பெற்ற வைணவத் தலம் திருவல்லிக்கேணி. அழகிய அல்லி மலர்கள் நிரம்பிய குளத்தை உடைய ஊர் என்ற காரணத்தால் இப்பெயர் வழங்குகிறது. பிருந்தாரண்ய சேத்திரம் என்றும் வழங்கும்.

எம்பெருமான், வேங்கட கிருஷ்ணனாக ருக்மிணி பிராட்டியுடன், பலராமன், சாத்யகி, அநிருத்தன், பிரத்யும்னன் இவர்

களோடு நின்ற திருக்கோலம் கொண்டுள்ளார். பார்த்தசாரதி என்பது திருநாமம். எம்பெருமான் சுமதி என்னும் துண்டீர மண்டலாதிபதிக்குப் பாரதப் போரிலே அருச்சுனனுக்குச் சாரதியாக இருந்த திருக்கோலத்துடன் காட்சியளிக்கிறேன் என்று வாக்களித்தபடி, ஆத்ரேய மகரிசியைக் கொண்டு பிரதிட்டை செய்ததாக வரலாறு.

கிருஷ்ணன் குடும்பமாக எழுந்தருளி இருப்பது இத்தலத்தில் மட்டுமே என்பர்.

பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோர் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

திருவல்லிக்கேணி மகாத்மியம், என்னும் பெயரில் திரு கிருட்டிணமாச்சாரியார், திரு வைத்தியநாதன் ஆகியோர் தனித் தனியே இரண்டு நூல்களை இயற்றியளித்துள்ளனர்.

மேற்கூறிய வகையில், தொண்டை நாட்டில் ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த 22 தலங்களில் திருநின்றவூர் தவிர மற்ற தலங்களுக்குரிய செய்யுள் நடையிலான தலபுராணங்கள் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**பிற வைணவத்தல புராணங்கள்**

தொண்டை நாட்டில் ஆழ்வார்களின் பாடல்கள் கிடைக்காத வைணவத் தலங்கள் பல உள்ளன. அவற்றுள் பல பழமைச் சிறப்புடையன.

**கோலாசல தலபுராணம்**

செஞ்சி மலையில் எழுந்தருளியுள்ள எம்பெருமானின் புகழைக் கூறுவது இத்தலபுராணம். இதில் 33 படலங்களும் 675 பாடல்களும் உள்ளன. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

தேவேந்திரன் முதலாகிய தேவர்கள் அசுரர்களால் துன்பமடைவதும், பதவியிழப்பதும், கோலாசலத்தையடைந்து திருமாலை வழிபட்டு வேண்டுவதும், திருமால் அவ்வசுரர்களை அழித்துத் தேவர்களுக்கு இழந்த பதவி முதலானவற்றை அருளித் துன்பம் போக்குவதுமாகிய வரலாறுகளைக் கூறுவது இத்தல புராணம். இதில் 33 அத்தியாயங்களும் 675 பாடல்களும் உள்ளன.

கடவுள் வாழ்த்தில், திருமால், இலக்குமி, நம்மாழ்வார், மற்ற ஆழ்வார்கள் போன்றோருக்கு வணக்கம் கூறுகின்றார்.

கோலாசலத்தில் எழுந்தருளியிருக்கும் திருவரங்கரின் தேவி யாகிய கோலாசல அரங்கநாயகியைத் துதிக்கும் பாடல் மிக அருமையானதாகும்.

"கரும்புயலிற் குழலாளைக் கதிர்மதிபோல்
முகத்தாளைக் கருணை வெள்ளப்
பெருங்கடலின் விழியாளைப் பேரருளா
லுலகனைத்தும் பெற்ற தாயை
மருங்கடருந் தனத்தாளை மலர்க்காந்தட்
கரத்தாளை மலர்மேல் வைகு
நெருங்குமிரு பதத்தாளை நெடுங்கோலா
சலத்தாளை நெஞ்சுள் வைப்பாம்".

முதனூல் வழிநூல் செய்த காரணத்தைக் கூறுமிடத்து வடமொழி இலிங்க புராணத்தில் ஈற்றொன்றாம் அத்தியாயம் தொடங்கி முப்பத்திரண்டு அத்தியாயமாகக் கூறப்பெறுகின்ற இந்த வராகத்தல மகிமையும் திருவவதார வரலாறுகளும் இதில் தமிழ்மொழியில் மொழிபெயர்த்துக் கூறுவதாக விளக்குகிறார்.

இப்புராணத்தின் சுருக்கமான பொருளைப் 'புராண சங்கிரக மணி' என்னும் பகுதியில் நான்கு பாடல்களில் உரைக்கின்றார் ஆசிரியர்.

கோலாசலம், சிம்மபுரம், சஞ்சீவிபுரம் எனப் பலவாறு அழைக்கப் பெறும் இத்தலம் செஞ்சிக்கோட்டை மலையில் உள்ள அரங்கநாயகர் கோயில் என்றே தெரிகிறது. இந்நூலை இயற்றியவர் பெயர் முதலானவை தெரியவில்லை. நூல் மூலமும் உரையும் இருவரே எழுதியதாகத் தெரிகிறது. ஓலைச் சுவடியில் இருந்த இந்நூலை அரசினர் சுவடிநூலகத்தினர் அச்சிட்டுள்ளனர்.

## ஸ்ரீ பெரும்புதூர் மகாத்மியம்

சென்னையிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் வழியில் உள்ளது திருபெரும்புதூர். இராமாநுசர் பிறந்த தலம் என்னும் சிறப் புடையது. இது ஸ்ரீ வைஷ்ணவ அபிமானத் தலமாகும். ஆதி கேசவப் பெருமாள், கிழக்கே நின்ற திருக்கோலத்தில்எழுந்தருளி யுள்ளார்.

ஸ்ரீபூதபுரி என்னும் இத்தல மகாத்மியத்தைத் திரு இரா. ரங்காச்சாரி அவர்கள் இயற்றியளித்துள்ளார்.

இதே போன்று, இத்தொண்டை நாட்டில் உள்ள பல வைணவத் தலங்களுக்குரிய தல வரலாறுகள் உரைநடையாக வெளிவந்துள்ளன.

தொண்டை நாட்டில் காஞ்சி மாநகரில் மட்டும் சிவத்தலங்களும் வைணவத் தலங்களும் மிகுதியாக அமைந்திருக்கக் காண்கிறோம். ஒருகாலத்தில் இந்நகரில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோயில்கள் இருந்தன என்று கூறுவர். இன்றுள்ள தலங்கள் பலவற்றிற்கும் வெகு காலத்திற்கு முன்பே ஆழ்வார்களும் நாயன்மார்களும் சென்று துதித்துப் பாடியருளியுள்ளனர். அதன் தொடர்ச்சியாக பல தலபுராணங்களும் இயற்றப் பெற்றிருக்கின்றன.

காஞ்சிக்கு மட்டும் நான்கு பெரிய தலபுராணங்கள் இயற்றப் பெற்றதாக அறிகிறோம். இப்புராணங்களுள் காஞ்சியிலுள்ள வேறு சில தலவரலாறுகளும் இணைத்து இயற்றப் பெற்றிருப்பதால் அத்தலங்களுக்குத் தனியே புராணங்கள் எழவில்லை என்பது குறிக்கத்தக்கது.

காஞ்சி தவிர மற்றுமுள்ள இருபதிற்கும் மேற்பட்ட பாடல் பெற்ற தலங்களுக்குரிய புராணங்கள் கிடைக்கின்றன. திருக்காளத்திக்கும் திருவொற்றியூருக்கும் இரண்டிரண்டு தல புராணங்கள் இயற்றப் பெற்றுள்ளன. திருமயிலைக்கு மட்டும் மூன்று புராணங்கள் உள்ளன. திரு அரசிலி என்னும் திருத்தலத்திற்கு இந்த நூற்றாண்டில் அண்மையில் இயற்றப்பெற்ற புராணம் கிடைப்பதும் குறிப்பிடத்தக்கது. அரசிலிக்காதை என்னும் இந்நூல் தமிழ்த் தலபுராணங்களுள் 'காதை' என்ற பெயரில் வழங்கும் ஒரே நூல் என்னும் சிறப்புடையது.

இவ்வகையில் பாடல்பெற்ற சிவத்தலங்களுக்குரியதாக 22 தலபுராணங்கள் கிடைக்கின்றன. இவற்றுடன் தணிகைப் புராணம் முதலான 20 தலபுராணங்கள் பிற தலங்களுக்குரியனவாகக் கிடைக்கின்றன.

தொண்டை நாட்டில் ஆழ்வார்கள் பாடல் பெற்ற திருப்பதிகள் இருபத்திரண்டினுள் திருநின்றவூர் ஒன்றினுக்கு மட்டுமே தலபுராணம் கிடைக்கிறது. மற்ற தலங்களுக்குரியதாக உடை

நடை நூல்களே கிடைக்கின்றன. இத்துடன், கோலாசலத் தல புராணம் என்னும் மற்றொரு வைணவத் தலபுராணம் கிடைக்கின்றது. ஆக, இரண்டு வைணவத் தலபுராணங்களே இத் தொண்டை நாட்டிற்குரியதாக கிடைக்கின்றன.

இவ்வாறு இத்தொண்டை நாட்டிற்குரியதாக நாற்பத்தி நான்கு தல புராணங்களும் பல உரைநடை நூல்களும் கிடைப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# நடுநாட்டுத் தலபுராணங்கள்

சோழ நாட்டுக்கும் தொண்டை நாட்டுக்கும் நடுவில் உள்ள நாடு நடுநாடு எனப்படும். தென் ஆற்காடு மாவட்டம் வட ஆற்காட்டில் சில பகுதிகள் அடங்கிய பகுதி நடுநாடு எனப்படும்.

நடுநாட்டிலுள்ள பாடல்பெற்ற சிவத்தலங்கள் இருபத்திரண்டு. சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் இந்நடு நாட்டுலுள்ள தலங்களுக்கு வந்து பல அற்புதங்கள் நிகழ்த்தியுள்ளனர். இங்குள்ள ஏழு சிவத்தலங்கள் தவிர பதினைந்து தலங்களுக்குத் தலபுராணங்கள் கிடைக்கின்றன.

நடுநாட்டில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற வைணவத் தலங்கள் திருக்கோவலூர், திருவயிந்திரபுரம் ஆகிய இரண்டு. திருக்கோவலூர்ப் புராணம் ஒன்று மட்டுமே கிடைக்கின்றது.

கல்வெட்டுச் செய்திகளால் அறியலாகும் தலபுராணங்களுள் இறைவாச நல்லூர்ப்புராணம் மற்றும் கன்னிவன புராணம் ஆகிய இந்நடுநாட்டிலுள்ள தலங்கள் பற்றியவேயாம். இவற்றுள் கன்னிவன புராணம் இன்று கிடைக்கவில்லை. தமிழ்த் தல புராணங்களில் மிகப்பழமையானது என்ற சிறப்பும் இத்தல புராணத்திற்கு உண்டு.

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் இன்று வரையில் எழுதப் பெற்ற தலபுராணங்களுள் இந் நடுநாட்டிற்குரியதாக சுமார் இருபது தமிழ்த் தலபுராணங்கள் கிடைக்கின்றன. அவற்றை ஈண்டு நோக்குவோம்.

**அருணாசல புராணம்**

நடுநாட்டிலுள்ள சிறப்புமிக்கதொரு தலமாகிய திருவண்ணா மலைக்கு அருணாசலம் என்று பெயர். நெருப்பின் செந்நிறம் பொருந்திய மலை என்பது பொருள். பஞ்சபூதத் தலங்களுள் நெருப்புக்குரிய தலம். நினைக்க முத்தி தரும் நெடும் பதியாகிய இத்தலத்திற்கு அருணகிரி, சோணகிரி, சோணாசலம் என்ற பெயர்களும் உண்டு.

விசுவாமித்திரர், பதஞ்சலி, வியாக்கிரபாதர், அகத்தியர் போன்றோர் வழிபட்ட இத்தலமே அருணகிரிநாதரின் வாழ்வில் அருள் திருப்பம் காரணமாக இருந்த பதியாகும். சம்பந்தரும், திருநாவுக்கரசரும், மாணிக்கவாசகரும் இன்னும் பலரும் இத் தலத்தின் பெருமையைப் பலபடப் பாராட்டியுள்ளனர்.

"உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார் வினைவழுவா வண்ணம்
அறுமே"

என்பார் சம்பந்தர்.

"ஓதிமா மலர்கள் தூவி உடையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கும் எண்தோள் சுடர்மழுப் படையினானே
ஆதியே அமரர் கோவே அணிஅணா மலையு ளானே
நீதியாய் நின்னை யல்லால் நினையுமா நினைவி லேனே"

எனப் பாடுவார் அப்பர்.

"கண்ணால் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்"

எனத் தன் அனுபவத்தை விளக்குவார் மாணிக்கவாசகர்,

இத்தலத்திற்கு அளவற்ற இலக்கியங்களும் தோத்திரப் பாடல்களும் தோன்றியுள்ளன. அருணகிரிப் புராணம், அருணால புராணம் ஆகிய தலபுராணங்களும் எழுந்துள்ளன. சைவ எல்லப்ப நாவலரின் அருணாசல புராணமும், மறைஞான சம்பந்தர் இயற்றிய அருணகிரிப் புராணமும் இன்று கிடைப்பன. புராணத் திருமலைநாதர் ஓர் அருணகிரிப் புராணம் இயற்றிய தாகக் கூறப்படுகிறது. அது இன்று கிடைக்கவில்லை.

பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய சைவ எல்லப்ப நாவலர் இயற்றிய அருணாசல் புராணம் இரண்டு பகுதிகளைக்

கொண்டது. மொத்தம் 12 சருக்கங்களும் 586 பாடல்களும் கொண்டது. முதல் பகுதியில் பாயிரம், திருநகரச் சருக்கம், திருமலைச் சருக்கம், பார்வதியார் திருஅவதாரச் சருக்கம், திருக்கண்புதைத்த சருக்கம், பார்வதி இடப்பாகம் பெற்ற சருக்கம், வச்சிராங்கத பாண்டியன் சருக்கம் ஆகிய ஆறு சருக்கங்களில் 451 பாடல்கள் உள்ளன. இப்பகுதியை வடமொழிச் சிவபுராணத்திலுள்ள ருத்திர சங்கிதையிலிருந்தும், பின் பகுதியை இலிங்கபுராணத்திலிருந்தும் பாடியுள்ளதாக ஆசிரியர் கூறுவர். இரண்டாம் பகுதியில், தீர்த்தச் சருக்கம் திருமலை வலம்புரி சருக்கம், ஆதித்தச் சருக்கம், பிரதத்தராசன் சருக்கம், பாவம் தீர்த்த சருக்கம், புலகாதிபச் சருக்கம் ஆகிய ஆறு சருக்கங்களில் 137 பாடல்கள் உள்ளன.

விநாயகர் காப்புடன் தொடங்கும் பாயிரப் பகுதியில் சபாபதி, பரமசிவம், அருணாசலேசர், உண்ணாமுலையம்மை, சுப்பிரமணியர், சைவசமயாசாரியர், திருத்தொண்டர்கள் ஆகியோருக்குத் துதிகள் உள்ளன. இவற்றுள் பல சந்தப் பாடல்கள்.

> "முதிருஞ் சுவை மதுரம்பெற மொழியுந்தமிழ் விரகன்புகழ்
> பதிகம்புனை பவனம்பினர் பவபஞ்சன னமலன்கதிர்
> உதிரும்படி பகிரண்டமு முடையும்படி இலகும்படி
> அதிரும்படி நடனம்புரி அதிருங்கழல் அதிருங்கழல்"

என்னும் சபாபதி வணக்கம் சிறப்பானதாகும்.

இங்குள்ள பரசிவ வணக்கம் சந்தக்கலி விருத்தத்தில் அமைந்ததாகும்.

> "உறவொடு பகையகல் ஒருமுத லவனெவன்
> இறுதியி லுலகருள் இறையவ னவனெவன்
> மறைமுடி வினில்தடம் வளர்பவ னவனெவன்
> அறிவினி லறிபவன் அடியிணை தொழுதனம்"

என்னும் இப்பாடல் நம்மாழ்வாரின்,

> "உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்
> மயர்வற மதிநல மருளினன் யவனவன்
> அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
> துயரறு சுடரடி தொழுதெ ழென்மனனே

என்னும் திருவாய்மொழியின் முதற் பாசுரத்தை நினைவுறுத்தும்.

உண்ணாமுலையம்மை வணக்கத்தில் ஒழுகுறல் என்ற சொல்லும் கருத்தும் பாட்டும் முழுமையிலும் ஒழுகி வரும்படி அமைந்துள்ளதும் குறிக்கத்தக்கதாகும்.

"காரொழுகுங் குழலாளைக் கருணைவழிந் தொழுகுமிகு
கடைக்கண் ணாளை
மூரலின நிலவொழுகப் புழுகொழுக அழகொழுகும்
முகத்தி னாளை
வாரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித் தெரியாத
மருங்கு லாளைச்
சீரொழுகும் பதத்தாளை அருணையுண்ணா முலையாளைச்
சிந்தை சேர்ப்பாம்"

என்னும் இப்பாடலும், அருணாசலேசர் துதியாகிய 'ஒரு மானைக் கரத்தினில் வைத்து' என்ற பாடலும் பலரும் அறிந்தவை.

**நூல் வரலாறு**

இப்புராணத்தின் தொடக்கத்திலேயே அவையடக்கத்தினை யடுத்து இந்நூல் எழுந்த வரலாற்றினை ஆசிரியர் இரண்டு பாடல்களில் விளக்குவர்.

முதலில் பரமசிவன் நந்திகேசுரருக்கு அருள்புரிய, நந்திகேகரர் மார்க்கண்டேயருக்கருள் செய்ய, மார்க்கண்டேயர் வேதங்களை யொழுங்கு செய்த வியாசருக்கு அருள்செய்ய, வியாசர் சூத முனிவற்குச் சொல்ல, சூதர் ஒருவழிப்பட்ட மனதையுடைய சவுனகாதி ரிசிகளுக்கு அருள் செய்த சிவ புராணம் கோடியாகும். அவைகளில் முக்கியமாகிய ஸ்காந்தத்தில் ருத்திர சங்கிதையிற் சொல்லிய அருணாசல தல மகிமையைச் சொல்லத் தொடங்கினேன் என முதற் பாடலில் கூறுவர்.

"கருத்துருக விறைவநந்திக் கருள்புரிய
நந்தியுமார்க் கண்டற் கோத
விருத்திமறை வியாதமுனிக் கவனுரைக்கச்
சூதனுக்கு வியாதன் சொல்லப்
பொருத்தமன விருடியருக் கருட்சூதன்
மொழிந்தசிவ புராணங் கோடி
உருத்திரசங் கிதையுரைத்த வருணகிரி
வனத்தினையா னுரைக்க லுற்றேன்"

என்பது பாடல்.

அடுத்து, இப்புராணத்துள் கூறப்பெறும் முக்கிய செய்திகளையும் முன்னுரையாக எடுத்துரைப்பர்.

> "அருணைநகர் வளமையுமா லயனகந்தை
> விடவழல் வெற்பான வாறும்
> பொருவின்மக மழித்ததுவு மரனுமையை
> மணந்ததுங் கண்புதைத்த வாறும்
> வருமகிடற் றொலைத்ததுவு மிறைவியிடங்
> கலந்ததுவும் வயிரப் பூணான்
> இருவினையை யகற்றியதும் வடகலைதென்
> கலைவிதியா லிசைக்க லுற்றேன்".

அருணாசல தல மகிமையும், பிர்மா விட்டுணுவுடைய கர்வங்கெட அக்கினி மலையான வரலாறும், ஒப்பில்லாத தக்கனுடைய யாகத்தை அழித்துப் போட்டதும், பரமசிவன் பார்வதியைக் கலியாணஞ் செய்ததும், அப்பார்வதி சுவாமியினுடைய கண்களை மூடியதும், மகிடாசுரனை உமாதேவி கொன்றதும், அப்பார்வதி இடப்பாகத்திற் சேர்ந்ததும், வச்சிராங்கத பாண்டியனுடைய பாவத்தை நீக்கினதும் ஆகிய சரித்திரங்களைச் சொல்லுகின்ற புராணத்தைத் தமிழ் மொழியினாலே சொல்லத் தொடங்கினேன் என்று ஆசிரியர் விளக்குவர்.

திருநகரச் சருக்கத்தில் 15 நதிகளை ஒரு பாடலில் கூறுவர். காசி, ஆரூர். சிதம்பரம், முதுகுன்று, கேதாரம். பருப்பதம், காளத்தி, கச்சி, விரிஞ்சை ஆகிய தலங்களைத் தனித்தனிப் பாடல்களில் கூறுவர். பூந்தராய், ஐயாறு, இடைமருது, குடந்தை, ஆனைக்கா, சிராமலை, வாட்போக்கி இவற்றை ஒரு பாடலில் கூறுவர். அடுத்து, மதுரை, இராமேச்சுரம் இவை ஒரு பாடலில் கூறப்பெறும். இவற்றுள் பாடல்பெற்ற தலங்களோடு விரிஞ்சிபுரத்தையும் ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார். இவரே பின்பு விரிஞ்சிபுரத்திற்குத் தலபுராணம் பாடியிருப்பதும் இவண் எண்ணத்தக்கது. அருணையில் மலையே இலிங்கம் என்றும் இதுவே தென் கயிலை என்றும் கூறுவர் ஆசிரியர்.

திருமலைச் சருக்கத்தில் பிரமனும் திருமாலும் அடிமுடி தேடிய வரலாறு கூறுவர். இதிலுள்ள 88 பாடல்களும் சந்தத் தொடர்களும் முரண் தொடைகளும் கொண்டவை. ஏழுநாளும் மலைவலம் வரும் பலனைத் தனித்தனியே உரைப்ப. அணியண்ணாமலை என்ற தலமும் சொல்லப்படுகிறது.

இப்புராணத்தின் இரண்டாம் பகுதிக்கு தனியே ஒரு கடவுள் வாழ்த்தினை அமைத்துள்ளார் ஆசிரியர். இப்பாடல் விநாயகர், முருகன், அருணாசலேசர், அம்மை ஆகியோரைத் துதிப்பது.

“செருமலையும் களிற்றுமுகப் பிள்ளையதும்
போற்றிதிரு வாயால் முத்தம்
தருமலையும் ஒருமலையும் தொலைத்தமலை
கிழவன்இரு சரணம் போற்றி
பொருமலையும் இரங்கலையும் அடியார்க்கு
ஒழிக்கஅழற் பொருப்பாய் நின்றென்
கருமலையும் செம்மலையும் பச்சைமலை
மடந்தையையும் கருத்துள் சேர்ப்பாம்”

என்பது அப்பாடலாகும்.

**வல்லாள மகாராசன் கதை**

அருணாசல புராணம் முதல்முதலில் மழவை மகாலிங்க ஐயர் அவர்களால் 1855 இல் பதிப்பிக்கப் பெற்றது. அதில், வல்லாள மகாராசச் சருக்கம் என 61 பாடல்கள் இடையில் சேர்த்து பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இது இடைச் செருகல் என்பது திரு மு. அருணாசலம் அவர்கள் கருத்தாகும்.[1]

இப்புராணம் பல ஏட்டுப் பிரதிகளாகப் பல இடங்களிலும் உள்ளன. அவற்றில் இக்கதை குறிப்பிடப் பெறவில்லை என்பர் இவர். வல்லாள ராசன் அக்கினி குலம் என்று அந்தச் சருக்கம் கூறுகிறது. அது பற்றியே அக்கினி குலத்தார் இந்நூலை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர் என்பர். ஆயின் தமிழ் நாட்டில் சோழநாட்டுப் பகுதியில் சைவவேளாளர் அனைவர் வீடுகளிலும் நெடுநாட்களாகவே அருணாசலபுராணம் மிகுதி யாகக் காணப்படும் என்றும் கூறுவர்.

வல்லாள மகாராசன் அருணாசலத்தில் ஆட்சி செய்தவன். மகப்பேறு இல்லாதிருந்தபோது, யாருக்கும் எதையும் தருவதாக முரசறைவித்தான். அவனுக்கு அருள்செய்யும் நோக்கத்தோடு சிவபெருமான் ஒரு சங்கமர் வடிவில் அரசனையடைந்து தாம் சிற்றின்பம் நுகர்வதற்கு ஒரு பெண் வேண்டும் என்றார். அரசன் கணிகையரை அனுப்பிக்க, அப்போது கணிகையர் எல்லோர் வீடுகளிலும் ஒவ்வொரு சங்கமர் இருக்கக் கண்டான்.

1. தமிழ் இலக்கிய வரலாறு, 16ம் நூ. ப. 229-231, 235, 236.

அரசன் வருந்தியிருந்த நிலையில், எல்லமாதேவி என்ற அவனது இளைய மனைவி தாம் சங்கமர் கருத்துக்கு இசைவதாய்க் கூறி. அவரை நெருங்கித் தொட்டவுடன், அவர் ஓர் இளம் குழந்தை யாக மாறினார். குழந்தையின் பொலிவைக் கண்டு அரசனும் அரசியும் மகிழ்ந்திருக்க, குழந்தை மறைந்து இடப வாகனத்தில் சிவபெருமான் ஆகக் காட்சியளித்தார். வல்லாளன் முடிவுக் காலத்தில் புத்திரனாக வந்து செய்யத்தக்க கிரியைகள் எல்லாம் செய்து முத்தியளித்தார் என்பது இக்கதையாகும்.

இக்கதை பெரிய புராணத்தில் கூறுகின்ற இயற்பகை நாயனார் வரலாற்றுடன் ஒப்புநோக்கத்தக்கது. நாயனார் தமது மனைவியைப் போலி அடியவருக்குக் கொடுத்துவிட்டார் இக்கதை பல மொழிகளில் பரவியுள்ளது. கன்னட நாட்டில் இவருக்குச் சிந்துபல்லாளன் என்று பெயரிடப்பட்டுள்ளது. இங்கு சிவபெருமான் ஒரு சங்கமர் வடிவந்தாங்கி ஒரு விடனாக வருகிறார். கூர்ஜர நாட்டில் சிந்து கடகம் என்ற பகுதியில் பல்லண்ணன் என்ற அரசன் ஆட்சி புரிகின்றான். கேட்டதை யெல்லாம் பெறலாம் என்று அரசனிடத்தில் அனுமதி பெற்றுக் கொண்டு, அவர் அவனுடைய மனைவியையே கேட்டுப் பெறுகிறார். பெற்றவுடனே, அவள் தீண்டவும் அவரே ஒரு குழந்தையாக மாறிவிடுகிறார்.

மேற்காணும் இவ்வரலாறே அருணாசல புராணத்தில் சொல்லப்பட்ட வல்லாள மகாராசன் கதை. வல்லாளன் என்பது போசள மன்னர் பலருக்கு இருந்த பெயர். இம்மன்னர் திருவண்ணாமலையில் மிக்க ஈடுபாடு கொண்டு இருந்தார். பிற்காலத்தில் போசள வம்சம் அழிந்து போயிற்று. அதன்மேல் சந்ததியில்லாமல் இறந்த அரசனுக்காக, நன்றியுடைய திருவண்ணாமலைச் சமுதாயம் அவனுக்கு ஒரு சிராத்தத்தைக் கற்பித்து, அண்ணாமலையாரே பிள்ளையாக வந்து சிராத்தம் செய்தார் என்ற கதையையும் தோற்றுவித்திருக்கிறது என்பர்.

சங்கமர், எல்லமாதேவி என்பன வீரசைவப் பெயர்கள். சிறந்த சைவராகிய எல்லப்ப நாவலர் இவ் வீரசைவச் சார்பான கதையைப் பாடியிருக்க முடியாது என்றே கூறுவர்.

மேலும் கி. பி. 1800 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் வீரணப் புலவர் அருணாசல புராணத்தையொட்டி, அதிலுள்ள சருக்கங் களை அமைத்தே 'அருணாசல கீர்த்தனை' என்ற நூலை

இயற்றியுள்ளார். இது 1856 இல் அச்சாகியுள்ளது. இந்நூலில் வல்லாள மகாராசன் கதை இல்லை. எனவே, 1800 ஆம் ஆண்டிற்குப் பிறகே இக்கதை எழுதிச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பர். பின்னால், இக்கதை பற்றி நாடகம், கும்மி நூல்கள் எழுந்துள்ளன.

**அருணகிரிப் புராணம்**

திருவண்ணாமலையின் தலவரலாற்றைக் கூறும் மற்றொரு தலபுராண நூல் இது. சிதம்பரம்-கண்கட்டி மறைஞான சம்பந்தர் இதை இயற்றியளித்துள்ளார். 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த இவர் கமலாலய புராணம் என்னும் திருவாரூர்ப் புராணமும் இயற்றியுள்ளார்.

அருணகிரிப் புராணத்தில் 8 சருக்கங்களும் 613 பாடல்களும் உள்ளன. பாயிரப்பகுதியிலுள்ள 35 பாடல்களில் விநாயகர் காப்பாக மூன்று பாடல்கள் உள்ளன. அண்ணாமலையார், பராசக்தி உண்ணாமுலையம்மை, சபாநாதர், அண்ணாமலை நாதர், அதிகார நந்தி, நந்தி, மாகாளர், இடபதேவர், முனிவர், காரைக்காலம்மை, நால்வர், மாளிகைத்தேவர் மெய்கண்டார், சிவபக்தர், நாயன்மார் ஆகியோருக்குத் தனித்தனியே துதிகள் கூறப்படுகின்றன.

பதிகம் என்ற பகுதியையும் பாயிரத்துட் சேர்த்தே கூறுகிறார் ஆசிரியர். நூல், நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்பு என்ற அங்கங்களோடேயே தொடங்குகிறது. நாட்டுச் சிறப்பில் அருணைநாடு, அருணைத்தேசம் என்றே எல்லாப் பாடல்களும் முடிகின்றன.

அருணாசலோதயச் சருக்கத்தில் ஆயன். திருமால் ஆகிய இருவருடைய உளச் செருக்கை அருணைச்சோதி தோன்றித் தீர்த்த வரலாறு சொல்லப்படுகிறது. அருந்தவச் சருக்கத்தில், உமையாள் கயிலையில் திருக்கண் புதைத்து அந்தக் குற்றம் நீங்கக் காஞ்சியில் சென்று அருச்சித்து இங்கு வந்து தவம் செய்த வரலாறு கூறப்படுகிறது. இங்கு, தொண்டமண்டலம் என்று முடிகின்ற நான்கு பாடல்களில் இம்மண்டலத்தின் சிறப்பும், காஞ்சி என்று முடிகின்ற ஏழு பாடல்களில் காஞ்சியின் சிறப்பும் கூறப்படுகின்றன. இடையில் மகிடன் என்ற அசுரனை துர்க்கை வதைத்த போர் வரலாறு சொல்லப்படுகிறது.

வலம்புரிச் சருக்கத்தில், கரிமுகவன், சிவபிரான், உமை ஆகியோருக்கு வணக்கம் கூறியபின்பு வரகிரிவலம், ஆலயவலம், ஆலயதரிசனம் செய்வார் நிற்கும் எல்லை, பணியும் முறைமை, சாதிகளின் உற்பத்தி, பூசை செய்யும் முறை என்பன கூறப்படு கின்றன.

ஆலயத்தொடு புரியாக்கிய சருக்கத்தில், முன்பு போலவே மூவருக்கும் வணக்கம் கூறிய பின்பு சிற்பிகள் இங்கு ஆலயம் அமைத்த செய்தி சொல்லப்படுகிறது. இறுதியில் தராபதி புழுகு சாத்திய சருக்கம். இதிலும் முன்பு போலவே துதிகள் கூறியபின்பு ஒருபுழுகுப்பூனை புழுகுசாத்தி முத்தி பெற்ற வரலாறு சொல்லப்படுகிறது.

மேற்காணும் ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் அமையும் பாடல்களில் துதிகள் கூறப்படுவது ஒரு சிறப்பு. அத்துடன் இறுதியிலுள்ள பாடல்கள் கடை மடக்காகவும் முடிகின்றன. இந்நூல் முழுமையும் பக்திச் சுவை நிரம்பிய சந்தப் பாடல்கள் பல உள்ளன. அனைத்தும் சொல்நயமும் பொருள் நயமும் கொண்டவை.

"நாலாகிய மறையாகமம் நாலேழையும் நவின்றே
மேலாகிய வழிதன்னையும் விரித்தானுய எவரும்
ஆலாகிய விருவர்க்கரு மருந்தானவன் வாமப்
பாலாகிய உண்ணாமுலை பாதம்பணி வாமே"

என்னும் இத்தகைய பாடல்கள் பல சைவப் பெரியோர்களால் போற்றப் பெறுபவையாகும்.

**திருவரத்துறைப் புராணம்**

நடுநாட்டிலுள்ள 22 பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று, திருநெல்வாயில் அரத்துறை. இது திருவரத்துறை, திருவட்டுறை என்னும் கூறப்பெறும். ஊர்–நெல்வாயில் கோயில்-அரத்துறை ஆகும்.

இத்தலம் நிவாநதி எனப்படும் வெள்ளாற்றின் வடகரையி லுள்ளது. ஆதித்துறை (காரியனூர்), திருவாலந்துறை திருக்கைத்துறை என்றும் ஏழு துறைகளையும் ஏழு முனிவர் களும் பூசை செய்ய வேண்டி 'நீவா' என்று அழைத்தனர் என்றும் அது நிவா என மாறியது என்றும் கூறுகின்றனர். நிவா–வெள்ளாறு. இந்நதிக்கரையில் உள்ள இத்திருவரத்துறை

யில்தான் திருஞானசம்பந்தருக்குச் சிவபெருமான், முத்துப் பல்லாக்கும் முத்துக்குடையும், முத்துச் சின்னங்களும் கொடுத் தருளினார்.

வான்மீகி முனிவர், அரவான் ஆகியோர் வழிபட்ட இத்தலச் சிறப்பை மூவரும் பாடியருளியுள்ளனர்.

"எந்தை ஈசன் எம்பெருமான் ஏறமர் கடவுள் என்றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லால் சென்று கைகூடுவ தன்றால்
கந்த மாமலர் உந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம்
அருளே"

என ஞானசம்பந்தரும்,

"புன்லொப் பானைப் பொருந்தலர் தம்மையே
மினலொப் பானை விண்ணோரும் அறிகிலார்
அனலொப் பானை அரத்துறை மேவிய
கனலொப்பானைக் கண்டீர்நாம் தொழுவதே"

என அப்பரும்,

"கல்வா யகிலுங் கதிர்மா மணியும்
கலந்துந் திவருந் நிவாவின் கரைமேல்
நெல்வாயில் அரத்துறை நீடு றையும்
நில வெண் மதிசூ டியநின் மலனே
நல்வாயில் செய்தார் நடந்தார் உடுத்தார்
நரைத்தார் இறந்தார் என்றுநா னிலத்தில்
சொல்லாய்க் கழிகின் றதுஅறிந் தடியேன்
தொடர்ந்தேன் உய்யப்போ வதோர்சூழல் சொல்லே"

எனச் சுந்தரரும் இத்தல இறைவனைப் போற்றியுரைக்குமிடத்து இவ்வூர்ச் சிறப்புக்களையும் எடுத்துரைப்பர்.

இத்தகைய சிறப்புமிக்க தலத்திற்குரிய திருவரத்துறைப் புராணம் என்னும் தலபுராணத்தைத் திரு அரங்கசாமி ஐயங்கார் அவர்கள் இயற்றியளித்துள்ளார்கள். இதில் 399 பாடல்கள் உள்ளன. 1911 ஆம் ஆண்டில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது. திரு இராமசாமி ஐயங்கார் எழுதி வெளியிட்டுள்ள திருநெல் வாயில் அரத்துறைத் தலவரலாறு என்னும் நூல் 1955 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது.

**திருக்கடந்தைப் புராணம்**

திருக்கடந்தை என்பது பெண்ணகடம் என்னும் பாடல் பெற்ற தலமாகும். இப்பொழுது இது பெண்ணாடம் என்று அழைக்கப்படுகிறது. இவ்வூரில் ஆறாயிரம் கடந்தையர்கள் (வீரமக்கள்) வாழ்ந்ததால் கடந்தைநகர் என்று பெயர் பெற்ற தென்பர்.

தேவகன்னியரும், காமதேனு என்னும் பசுவும், வெள்ளை யானையும் வழிபட்டதால் (பெண், ஆ, கடம்) பெண்ணாகடம் எனப்பட்டது. இக்கோயிலுக்குத் 'தூங்கானை மாடம்' (கஜப்பிரஷ்டம்) என்று பெயர்.

இந்திரனின் பூசைக்காக மலர்களைப் பறிக்க வந்த தேவ கன்னியர் இத்தலத்து இறைவனைக் கண்டு மகிழ்ந்து வழிபா டியற்றி வாழ்ந்தனர். மலர்வாராமை கண்டு இந்திரன் காமதேனுவை அனுப்ப அது வந்து நிலையறிந்து, தானும் இறைவனை வழிபட்டு நின்றது. காமதேனுவைத் தேடிச் செல்லுமாறு இந்திரன் தன் வெள்ளை யானையை அனுப்ப, அதுவும் வந்து, நிலைகண்டு, இறைவனை வணங்கி, இங்கேயே நின்றுவிட்டது. சென்றவர்கள் திரும்பாத காரணத்தை அறிய இந்திரன் தானே புறப்பட்டுத் தேடிவந்து, நிலையறிந்து அவனும் வழிபட்டான் என இத்தல வரலாறு கூறப்படுகிறது. எனவே, மேற்கூறிய மூவரும் வழிபட்ட தலமாகியதால் பெண்ணாகடம் எனப் பெயர் பெற்றதென்பர்.

ஐராவதம் வழிபட்டதால் 'தயராசபதி' என்றும்; ஆதிநாளில் மலர் வனமாக இருந்ததால் 'புஷ்பவனம்' 'புஷ்பாரண்யம்' என்றும்; இந்திரன் வழிபட்டதால் 'மகேந்திரபுரி' என்றும்; பார்வதி வழிபட்டதால் 'பார்வதிபுரம்' என்றும்; நஞ்சுண்ட இறைவனின் களைப்பைத் தீர்த்த தலமாதலின் 'சோகநாசனம்' என்றும்; இறைவனுக்கு உகந்த பதி ஆதலால் 'சிவவாசம்' என்றும் இத்தலத்திற்குப் பல்வேறு பெயர்களைக் கூறுவர்.

அப்பர் பெருமான் தேவாரம் பாடித் தம் தோள்களில் இடபக்குறியும் சூலக்குறியும் பொறித்தருளப் பெற்ற திருத்தலம் இதுவே. பணியாளே சிவனடியாராக வரக்கண்டு, நீர் வார்க்கத் தாமதித்த மனைவியின் கையை வெட்டிய கலிக்கம்ப நாயனார் வாழ்ந்து வீடுபேறு பெற்ற ஊர். மெய்கண்ட தேவரின் தந்தை அச்சுத களப்பாளர் வாழ்ந்த ஊர்.

இத்தல இறைவருக்குக் கைவழங்கீசர், பிரளயங்காத்த ஈசர் என்றும் பெயர்களுண்டு.

கலிக்கம்ப நாயனாரால் வெட்டுண்ட அவர் மனைவியின் கை மீண்டும் துளிர்க்க அருளிச் செய்தமையால் 'கைவழங்கீசர்' என்றழைக்கப் பெற்றார்.

ஆழிபுரண்டக்கால் அசையாது அதிகார நந்திமூலம் பிரளய கால வெள்ளத்தைத் தடுத்தார் ஆதலால் 'பிரளயங்காத்த ஈசர்' என்றழைக்கப் பெற்றார்.

இத்தலத்து இறைவனை அப்பரும், சம்பந்தரும் போற்றிப் பாடியுள்ளனர்.

"ஒடுங்கும் பிணிபிற விகேடன்றிவை
உடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம்
அடங்கும் இடங்கருதி நின்றீரெல்லாம்
அடிகளடி நிழற்கீ ழாளாம்வண்ணம்
கிடங்கும் மதிலும் சுலாவியங்குங்
கெழுமனை கள்தோறும் மறையின்ஒலி
தொடங்குங் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கா னைமாடம் தொழுமின்களே"

என்னும் பாடலில், இக்கடந்தை நகரிலுள்ள மனைகள்தோறும் மறையின் ஒலி கேட்கப்படுவதையும், இப் பிறவிப்பிணி ஒழிய இத்தல இறைவனையே தொழ வேண்டும் என்றும் போற்றி யுரைப்பார் சம்பந்தர்.

இத்தகு சிறப்புமிக்க தலத்திற்குச் சிவஞானப்பரன் பிள்ளை என்பவர் திருக்கடந்தைப் புராணம் என்னும் தலபுராணத்தை இயற்றியுள்ளார். இதிலுள்ள துதிப்பாடலிலேயே இத்தல இறைவரைப் 'பிரளயங்காத்த வள்ளல்' என அழைக்கக் காணலாம்.

"திருமருவு நாரணனும் பிரமன் ஆதித்
தேவருடன் யாவருந்தந் தெளிவி னாலும்
பெருகுபல மறையாலும் அளக்க வொண்ணாப்
பெரியபரா பரமெங்கும் பிறக்குஞ் சோதி
அருள்பரை யினுடன்கூடிப் புவனந் தந்தும்
அதைக்காத்தும் அழிக்கின்ற கடந்தை யண்ணால்
மருவுபிர ளயங்காத்த வள்ள லாகும்
மாதேவன் திருவடியை வழுத்தி வாழ்வோம்".

நாரணனும் நான்முகனும் காணவொண்ணாத வகையில் 'பராபரமெங்கும் பிறங்குஞ்சோதி'யாகத் திகழ்ந்தார் என்பது 'சுடர்க்கொழுந்தீசர்' என்னும் இத்தல இறைவன் பெயருக் கேற்ப அமைத்துப் பாடியதாகும்.

சிவபெருமான் உமையுடனிருந்து இப்புவனத்தை உண்டாக்கியும், காத்தும், அழித்தும் அருளுகின்றார் என்பதை எடுத்துக்காட்டவே பிரளயகாலத்து வந்து காத்தார் என்பதை விளக்குவதுடன் 'பிரளயங்காத்த வள்ளல் என்றே' போற்றப் படுவது இத்தல வரலாற்றைச் சுட்டி விளக்குவதாக அமை

இத்தல இறைவியாகிய கடந்தை நாயகிக்கு அழகிய காதலி என்றும் ஒரு பெயருண்டு. 'அருள்பொழியும் அழகிய காதலி' என்றே இப்புராண ஆசிரியர் துதிக்கின்றார்.

மேலும், இத்தலத்தைச் சேர்ந்த கலிக்கம்ப நாயனாரைத் துதிக்கும் பாடலில் அவர் வரலாற்றைக் கூறுவதும் குறிப்பிடத் தக்கதாகும்.

"செய்யதிருக் கடந்தையினில் வணிகர் தங்கள்
திருமரபில் அவதரித்துச் சிவனை நாடி
மெய்யடியார்க் கமுதளிப்பார் பண்டு தம்பால்
வினையேவல் செய்யொருவர் மேவக்கண்டு
துய்யதாள் விளக்குதற்கு நீர்வி டாத
துணைவிகரந் தனைத் துணித்துத் துணித்து தாமே
கையதனா லுபசரித்துக் கயிலை சேர்ந்த
கலிக்கம்பர் பதமலரைக் கருதுவோமே"

என்னும் பாடல் இந்நாயனார் கயிலை சேர்ந்த வரலாற்றைக் கூறும்.

மெய்கண்டாரின் தந்தையான அச்சுதகளப்பாளர் பெயரில் இக்கடந்தை நகருக்கு மேற்கில் 'களப்பாளர் மேடு' என்னும் இடமுள்ளது. அங்குச் சிறிய கோயில் மெய்கண்டாருக்கு உள்ளது. இக்கடந்தை நகரில் தோன்றிச் சிவஞான போதம் சாற்றியருளிய மெய்கண்டாரையும் மறவாமல் போற்றுகிறார் இப்புராண ஆசிரியர்.

"ஓங்குபுகழ்த் திருக்கடந்தை நகரில் வேளாண்
உயர்குலஞ் செய்பெருந்த வமோருரு வுற்றாங்கு
வாங்குதிரைக் கடலுலகில் வந்து தோன்றி
மாதேவன் திருவடியை மறவா நெஞ்சில்

பாங்குறு நற் பரஞ்சோதி முனிவர் கூறும்
பதிபசுபா சத்திறனிப் பாரோர் தேர்ந்து
தீங்ககலச் சிவஞான போதஞ் சாற்றும்
செய்யமெய் கண்டார்தாள் சிரசில் வைப்பாம்".

இத்தகைய மெய்கண்டாரின் பரம்பரையில் வந்த மறைஞான சம்பந்தர் பிறந்த தலமும் இக்கடந்தை நகரே யாகும். இவர் பெயரில் தனி மடம் ஒன்று இந்நகரில் உள்ளது. இப்பரம்பரையை மறவாத இப்புராண ஆசிரியர் மறைஞான சம்பந்தரையும் போற்றிப் பாடுகிறார்.

"வாய்ந்தபுகழ் மெய்கண்ட தேவருக்கு
மாணாக்கர் அருணந்தி தேவர் தம்பால்
ஆய்ந்தபல கலையோதித் தமைய டைந்த
அருள்பெருகு கொற்றவன் குடியில் வாழும்
காய்ந்தபவத் துமாபதிதே வருக்கு ஞானம்
கவினவுரைத் தருள்செய்யுங் கடந்தை வந்த
ஏய்ந்ததவத் துயர்ந்தமறை ஞான தேவர்
இணைமலர்த்தாள் எஞ்ஞான்றும் இறைஞ்சுவாமே"

சிவஞான போதம் அருளியவர் மெய்கண்டார். அவருடைய மாணாக்கரான அருணந்தி சிவாசாரியரிடம் பல கலைகள் பயின்ற இம் மறைஞான சம்பந்தரிடம் பயின்றவர் கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியர் என இவ்வாறு திருவாவடுதுறை ஆதீன பரம்பரையை விளக்குவதாக இப்புராண நூலாசிரியர் தம் துதிப்பாடல்களை அமைத்திருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

**திருக்கூடலையாற்றூர்ப் புராணம்**

நடுநாட்டில் மணிமுத்தாறும் வெள்ளாறும் கூடும் இடத்தில் உள்ளது கூடலையாற்றூர் ஆகும். சுந்தரர் பாடல் பெற்ற தலம்.

கும்பகோணத்தை யடுத்த திருப்புறம்பயத்திலிருந்து சுந்தரமூர்த்தி நாயனார் விருத்தாசலத்துக்குச் செல்ல இவ்வழியாக வந்தபொழுது வழியில் ஓர் அந்தணர் வடிவில் சிவபெருமான் நின்றான். அவரை விருத்தாசலத்துக்குச் செல்ல வழி கேட்டபோது அவர் இந்தக் கூடலையாற்றூர் வழியாகத்தான் செல்ல வேண்டும் என வழிகாட்டிமுன்னே சென்று இங்கு வந்தவுடன்

மறைந்து விட்டார். உண்மை உணர்ந்த சுந்தரர் இவ்வூர் இறைவன்மீது பதிகம் பாடி வழிபட்டுத் தங்கிப் பின்பு விருத்தாசலம் சென்றார் என்பது வரலாறு. இதன் காரணமாக இத்தல இறைவருக்கு 'நெறிகாட்டுநாதர்' என்றே ஒரு பெயர் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கரியமலை சந்திரசேகர நாயகர் என்பவர் திருக்கூடலையாற்றூர்ப் புராணம் பாடியுள்ளார். இதில் 12 சருக்கங்களும் 562 பாடல்களும் உள்ளன.

பாயிரப் பகுதியில் விநாயகர், நிருத்தனவல்லபர், ஞானபரா சக்திகள், சபாபதி, தட்சிணாமூர்த்தி, அமுதவிநாயகர், சுப்பிரமணியர், இலக்குமி, கலைமகள், நந்திதேவர், நால்வர், சண்டேசுரர், நாயன்மார்கள் ஆகியோருக்கு வணக்கம் கூறிய பின்னர் நூல் வந்தவழியும் காரணமும் கூறுகிறார் ஆசிரியர்.

வடமொழியிலுள்ள சிவரகசியத்தில் கூறப்பெறும் திரிவேணியின் மகிமை என்னும் பகுதியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதாகக் கூறுவர். (பா. 15-17).

இத்தலத்தின் சிறப்பைக் கூறும் தலமகிமைப் படலம் மிகவும் குறிப்பிடத் தக்கதாகும்.

"அகரமுத லக்கரமூன் றருள்வடிவாம்
பிரணவமா யமைந்த வாபோற்
சிகரமுறு மத்தலத்திற் திரிவேணி
செறியுமிடஞ் சென்று தோய்ந்து
மகரமுறு மாதமெலா மலங்கடிந்து
சிவபூசை மகிழ்ந்து செய்யில்
பகரமுளை யாரவரே பதியுருவிற்
பதிந்திலங்கிப் பரமாய்க் காண்பர்" (20)

இத்தலத்தில் (வெள்ளாறும் மணிமுத்தாறும் கூடும் இடம்) சங்கமத் தீர்த்தமாகிய திரிவேணியில் மூழ்கி நாளும் சிவபூசை செய்யில் பரமசிவனைக் காணலாம் என்று இப்பாடல் கூறும். சைவசமயத்தின் விளக்கமும் அமைந்திருப்பது அருமையாகும்.

அடுத்து, அரியயன் அடிமுடி தேடியது, பிரமன் வரம் பெற்றது, நந்தி வரம் பெற்றது. அகத்தியர் வரம் பெற்றது. காத்தியாயனர் வரம் பெற்றது, திருமால் திருமணம் புரிந்தது

ஆகிய வரலாறுகள் தனித்தனியே விளக்கப்படுகின்றன. முதலில் திரிவேணிப் படலம் கூறி, இறுதியில் தீர்த்தமகிமைப் படலம் தனியே கூறப்பட்டுள்ளது. இத்தல இறைவருக்கு நர்த்தன வல்லபேசுரர் என்ற பெயர் வந்த வரலாறுகள் திருநிருத்தனப் படலத்தால் அறியலாம்.

"இத்தல புராணந் தன்னை எழுதினோர் எழுது வித்தோர்
பத்தியாற் படித்தோர் கேட்டோர் பண்புறு மருத்தந் தேர்வோர்
கொத்துறு மலரைக் கொண்டு குயிற்றினர் பூசை கற்குஞ்
சத்தியர்க் குதவி செய்யுஞ் சால்பினை யுடையோ ரெல்லாம்.

"இம்மையிற் பெறுவ தான இயன்மலை மக்க ளோடு
செம்மைசேர் நிதிக ளெல்லாஞ் செறிந்திடப் பெற்றா ராகி
அம்மையி லடிய ருய்ய அருள்நடம் புரியு நாதன்
தம்மைநேர் பாதஞ் சார்ந்து தாவரும் இன்பம் துய்ப்பரர்"
(51, 52)

என இந்நூற்பயன் கூறுவர் ஆசிரியர்.

## திருத்தினைநகர்ப் புராணம்

கடலூருக்கும் சிதம்பரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ளது திருத்தினைநகர். இப்பெயர் தீர்த்தனகிரி என இப்பொழுது மருவி வழங்கப்படுகிறது. இது சுந்தரர் பாடல் பெற்ற தலம்.

பெரியான் என்னும் பள்ளன் தன் நிலத்தை உழுது கொண்டிருந்தபோது இறைவன் அடியவராக வந்து அன்னம் கேட்க; அவன் தன் தொழிலை நிறுத்திவிட்டு உணவு கொண்டு வரத் தன் வீடு சென்றான். அவன் திரும்பி வருவதற்குள் இறைவன் அந்நிலத்தில் தினை விளைந்திருக்குமாறு செய்தார். வந்த பெரியான் திகைக்க இறைவன் அவனுக்குக் காட்சி தந்தார். வியப்படையும்படி தினை விளைந்ததால் இவ்வூருக்குத் 'தினைநகர்' என்று பெயர் வந்தது என்பது வரலாறு. இன்றும் இறைவனுக்குத் தினைபமுது படைக்கப்படுவது இத்தலச் சிறப்பாகும்.

வீரசேன மன்னனுக்கு இங்குள்ள தாமரைக் குளத்தில் மூழ்கி வெண்குட்டம் நீங்கியது என்பர். அவனே இக்கோயிலைக் கட்டினான் என்பது வரலாறு.

இத்தகைய வரலாறுகள் பலவற்றைக் கூறுவது திருத்தினை நகர்ப் புராணம். இதனை இயற்றியவர் குமாரமலை மருந்தா என்பவராவர். இந்நூலில் 16 சருக்கங்களும் 853 செய்யுள்களும் உள்ளன.

### திருச்சோழபுரப் புராணம்

கூடலூருக்கு அண்மையில் ஆலப்பாக்கம் என்னும் ஊருக்கு அருகேயுள்ளது திருச்சோழபுரம். இது சம்பந்தர் பாடல் பெற்ற தலம். சோழபுரம் என்பது மருவி சோபுரம் என்று இப்பொழுது வழங்குகிறது. இன்று இவ்வூர் தியாகவல்லி என்று வழங்குகிறது. முதல் குலோத்துங்க சோழன் மனைவியர் மூவருள் முதல் மனைவியின் பெயர் தியாகவல்லி. அவள் இங்குத் திருப்பணி செய்த காரணத்தால் இப்பெயர் இத்தலத்திற்கு ஏற்பட்டது என்று கூறுவர்.

இங்குள்ள மூர்த்தி அகத்தியரால் பிரதிட்டை செய்யப் பெற்றது என்றும் கூறுவர். இக்கோயிலுக்கு அண்மையில் கடல் உள்ளது. மணற்பாங்கான பகுதியில் கோயில் அமைந் துள்ளது.

இக்கோயில் மிகப் பழங்காலத்தில் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. சுமார் 135 ஆண்டுகளுக்கு முன்னர் இத் தலம் மணலால் மூடப்பட்டிருந்தது என்றும், அப்போது இங்கு வந்த மதுரை இராமலிங்க யோகி என்பவர் மணல் மேட்டைத் தோண்டி, ஊர்மக்கள் துணையுடன் திருப்பணி செய்தார் என்றும் கூறப்படுகிறது. இதனால் இக்கோயிலுக்குத் 'தம்பிரான் கண்ட கோயில்' என்ற பெயரும் வழங்கப்படுகிறது.

"நாற்ற மிக்க கொன்றை துன்று செஞ்சடை மேன்மதியம்
ஏற்ற மாக வைத்து கந்த காரணம் என்னை கொலாம்
ஊற்ற மிக்க காலன் தன்னை யொல்க உதைத்தருளி
தோற்றம் ஈறும் ஆகி நின்றாய் சோபுர மேயவனே"

என்னும் பதிகத்தில் இத்தல இறைவன் கொன்றையைச் சூடியிருப்பதாகக் கூறுகிறார் சம்பந்தர். இன்றும் கோயிலின் வெளிச்சுற்றில் கொன்றை மரம் (இத்தலமரம்) தழைத்து விளங்குவதைக் காணலாம். எனவே, இத்தலத்திற்கு அவர் நேரில் வந்திருத்தல் வேண்டும் என்றே தோன்றுகிறது.

இத்தலத்திற்கு அருகிலுள்ள ஆலப்பாக்கம் என்னுமிடத்தி லிருந்து ஊாகபுகண்டர் இறைவனை வழிபட்டதாகவும் கூறுவர்.

மேலும், இத்தலத்திற்குத் தெற்குப் பகுதியில் அம்பிகையின் கோயில் மண்மேடிட்டுப் புதைந்து இருப்பதாகக் கூறுகின்றனர்.

இத்தலம் பற்றிய வரலாறுகளை விளக்குவது திருச்சோழபுரப் புராணம். இதை இயற்றியவர் திரு சொக்கலிங்கஞ் செட்டியார் அவர்கள். இந்நூலில் 635 பாடல்கள் உள்ளன.

**திருவதிகைப் புராணம்**

நடுநாட்டிலுள்ள பாடல் பெற்ற தலங்கள் இருபத்திரண்டினுள் ஒன்று திருஅதிகை வீரட்டானம். மூவராலும் பாடல் பெற்ற இத்தலம் எட்டு வீரட்டத் திருவூர்களுள் ஒன்று. இறைவன் முப்புரத்தை எரித்து அழித்த திருத்தலம். தேவர்களின் செருக்கு அடங்கப் புன்னகையும், சிவபூசை தவறாத திரிபுரத் தலைவர் மூவரும் உய்யுமாறு தண்ணகையும், சிவபூசை தவறிய முப்புரவாசிகள் மடியுமாறு வெந்நகையும் ஆகிய மூன்றையும் இத்தலச் சிவபெருமானே செய்தனர் என்பர். அப்பர் பெருமானுடைய சூலைநோய் நீங்கப் பெற்றதும், திலகவதியார் திருத்தொண்டு புரிந்ததும், இறைவன் சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருவடி சூட்டியதும் இத்தலத்திலேயேயாகும்.

இத்தகைய பெருஞ் சிறப்பைப் பெற்ற இத் திருத்தலத்திற்கு வாகீச பக்த நாவலரென்னும் அப்பாவையரவர்கள் புராணம் பாடியுள்ளார். 34 படலங்களும் 1037 செய்யுள்களும் அடங்கிய இப்புராணம் முற்றிலும் தமிழினாலேயே செய்யப் பெற்றதாகும். பெரும்பாலான தலபுராணங்களிலும் கூறப்பெறுவது போன்று, வேறு எந்த வடமொழி நூலையும் மூலமாகக் கொண்டு இந்நூல் எழுதப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தல புராணப் பதிப்பின் முன்னுரையில், திருவதிகை பற்றிய கல்வெட்டுச் செய்திகளைச் சுட்டிக்காட்டும் நூலாசிரியர் இத்தலத்தில் சோழ பாண்டியர்கள் வழிபட்டதையும் எடுத்துக் கூறிய பின்னர், "இவர்கள் சரித முதலியவற்றை நன்கு விளக்கத் தக்க நூல்கள் செந்தமிழ் நடையிலும், சமஸ்கிருத நடையிலும் ஒன்றுங் கிடைத்திலது. இச்சோழ பாண்டியர்கள் இங்கண் பூசித்த சரித்திரமுடையார் உலோகோபகாரம் நாடித் தருவரேல் அது எவ்வகைப் பாஷையிலிருப்பினும் மொழி பெயர்த்து திருவதிகைப்புராணம் இரண்டாம் காண்டம் ஆக, இனியொன்று இதனுடன் சேர்த்து அச்சிட்டு வெளிப்படுத்துவாம்" என்று குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும்.

மேலும், தேவார நூல்களில் காணலாகும் வரலாற்றுச் செய்தி களின் அடிப்படையிலேயே இந்நூல் எழுதப் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டுப்படலம், நகரப் படலங்களை முறையாக அமைத்த பின்னர், வீரட்டலிங்கோற்பவம், கெடிலோற்பவும் ஆகிய வற்றைக் கூறி நகரேற்றுபடலம், திருவிழாப்படலம் அமைக் கின்றார். பின்பு, பிரமன் பூசித்தது, திரிபுராதிகள் உற்பத்தி, திரிபுராதிகள் திருவதிகை யடைந்து பூசித்தது, திரிபுராதிகள் அரசாட்சி, திருமால் பௌத்தாவதாரம், தேவர்கள் கைலை யடைந்தது, திரிபுர தகனம், கருடன் பூசித்தது, தருமன் முதலிய ஐவர் பூசித்தது, தல விசேடம், அட்டவீரட்டமூர்த்தி நாம விசேடம், தீர்த்தவிசேடம் திருஞான சம்பந்த மூர்த்தி திருநடங் கண்டது, பஞ்ச கிர்த்தியநடை மகிமை, திருநாவுக்கரசு சுவாமி கட்குச் சூலைநோய் நீங்கியது, சுந்தரமூர்த்தி சுவாமிகட்குத் திருவடி சூட்டியது எனத் தொடர்ச்சியாகப் பல செய்திகள் இதில் விளக்கப் பெறுகின்றன.

இந்நூலில், தருமன் முதலிய ஐவர் பூசித்த படலத்தில் சொல்லணிகளும் சித்திரக்கவிகள் பலவும் அமைக்கப்பட்டுள்ளன. யமகம் இரண்டடிப்பாடக மடக்கு, முற்று மடக்கு, முரசபந்தம், திரிபங்கி, மாத்திரைச் சுருக்கம், மாத்திரை வருத்தனை போன்ற வகையிலமைந்த பாடல்கள் பல உரையுடன் ஆசிரியரால் இயற்றியளிக்கப் பெற்றுள்ளன.

**தலச்சிறப்பு**

எல்லாத் திருவூர்களிலும் அதிகச் சிறப்புடையது என்பதால் 'அதிகை' என்னும் பெயர் இத்தலத்திற்குச் சிறப்பாக ஏற்பட்ட தென்பர்.

> "பன்னு மித்தலம் பெற்றுள பலபெயர்க் கேண்மோ
> மன்னு மாதல மனைத்தி னுஞ்சிறந்ததுல் வழக்கால்
> வன்ன மாவயற் சூழுமித் தலத்தினை யதிகை
> என்ன மாமறை யாதிய நூற்சொலு மின்னும்" (12)

என்னும் தலவிசேடப் படலம் பாடலில் இதை விளக்குகிறார் இப்புராண ஆசிரியர். இவ்வாறே ஆதிமாபுரி, அமிநகர், கொன்றைமாவனப்பதி ஆகிய பெயர்கள் இத்தலத்திற்கு எழுந்த வரலாறுகளையும் குறிப்பிடுகிறார்.

**நூற்பயன்**

"அருமைய தாக வோதும் அதிகையின் புராணங் கேட்போர்
திருவமர் பொருள்நன் காய்வோர் திகழுறப் படிப்போர் பின்னும்
மருவியே படிப்போர் கட்கு மாண்பொரு ளளிப்போ ரிந்த
இருமையும் நல்கு நூலை இயம்புறப் பூசை செய்வோர்.

"இம்மையிற் செல்வ மோடு மனைவியு மக்க ளேனைச்
செம்மைநற் செல்வந் துய்த்துந் திகழுறப் பதமு மேவி
அம்மையின் பங்கட் பெற்று அருட்குறியோடு வோங்கும்
அம்மையன் பாதப் போதை அடைவது மெளிய தாமால்.

"நோய்முதல் மிடியுஞ் சேரா நுவலுங் கீழ்மக்கள் நட்பு
வாயடை யார்கள் தீய மனையடை யார்கள் வஞ்சச்
சேயடை யார்கள் இன்னும் தீயதீங் கொன்று மேவார்
ஆயவிப் புராணங் கேட்டுப் படிப்பவ ரானோ ரெல்லாம்.

"மிகவிரித் துரைப்ப தென்னே மிக்கவிப் புராணந் தன்னில்
புகலுமோர் செய்யுட்பாதம் நான்கினைப் புகலு வோர்க்கு
அகமுறு நான்கு முத்தி அடைவதுந் திண்ண மிந்தப்
பகர்தரு புராண மோங்கும் மனைசெல்வ மோங்கும் பாரில்"

என்பன இந்நூலிறுதியிலுள்ள நூற்பயன் கூறும் பாடல்கள் ஆகும்.

திருவதிகைக்கு ஞானசம்பந்தரும் சுந்தரரும் ஒவ்வொரு பதிகமே பாடியுள்ளனர். திருநாவுக்கரசர் மட்டும் 16 பதிகங்கள் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அவர் சூலைநோய் நீக்கியதும், சமணத்திலிருந்து சைவத்துக்கு மாறியதும் இத்தலத்திலேயே என்பதால் அவருக்கு இத்தலத்தின் மீது அளவற்ற பற்று உண்டாயிற்று எனலாம். அத்தகைய அப்பர் பெருமான் மீது அளவற்ற காதல் கொண்டவர் இப்புராண நூலாசிரியர் அப்பாவையர் அவர்கள். 'வாகீசபக்த நாவலர்' என்றே இவர் அழைக்கப் பெறுபவர்.

**"நாவினுக் கரசாகிய நவிலரும் பெரியர்**
**மேவிச் சூலையை நீங்கிடப் பெறுதலில் மெய்யிற்**
**தாவுநோ யகற்பரவை வேளூரெனச் சார்த்து**
**பூவித் திருவதிகையும் புகழுறப் படுமால்" (தலவிசேடம் 6)**

என இத்தலச் சிறப்பினைக் கூறும்போதும் நாவுக்கரசரையும் அவர் நோய் நீங்கப் பெற்றதையுமே முன்னிறுத்திப் பாடுவர் இவர். எனவே, மேற்காணும் நூற்பயன் கூறும் பாடல்களிலும் இப்புராணத்தைப் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் நோய் முதலான தீமைகள் நீங்கும் என்பதையே இவர் முன்னிறுத்திப் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**திருநாவலூர்ப் புராணம்**

சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்த திருவூர் திருநாவலூர் ஆகும். திருநாம நல்லூர் என இப்பொழுது மருவி வழங்குகிறது. நாவல் மரங்கள் நிறைந்த ஊரானதால் நாவலூர் என வழங்கியிருக்கலாம். தலமரம் இங்கு நாவல் என்பது குறிப்பிடத்தக்கது.

"கோவல னான்முகன் வானவர் கோனுங் குற்றேவல் செய்ய
மேவலர் முப்பு ரந்தீ யெழுவித் தவன்ஓர் அம்பினால்
ஏவல னார்வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை யாளுங் கொண்ட
நாவல னார்க்கு இடமாவது நந்திருநாவ லூரே"

என்னும் பதிகத்தினைச் சுந்தரர் இத்தலத்தில் பாடியருளியுள்ளார்.

இத்தலச் சிறப்புகளையும் வரலாறுகளையும் விளக்குவது திருநாவலூர்ப் புராணம். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த இராசப்ப நாவலர் அவர்கள் இதனை இயற்றியுள்ளார். இதில் 9 படலங்களும் 514 பாடல்களும் உள்ளன. இந்நூல் 1889 ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றது.

**திருமுதுகுன்றத் தலபுராணம்** (விருத்தாசலப் புராணம்)

திருமுதுகுன்றம் என்பது விருத்தாசலம் என்னும் தலத்தின் தமிழ்ப் பெயராகும். இங்கு மலை ஏதும் இல்லையாயினும் பூமியினடியில் அமிழ்ந்திருப்பதாகக் கூறுவர். எல்லா மலைகளும் தோன்றுவதற்கு முன்னரே இம்மலை தோன்றி மறைந்தமையால் இதற்குப் பழமலை—முதுகுன்றம் என்று பெயர் வந்தது. விருத்தாசலம் என்பது வடமொழிப் பெயர். விருத்தம்—பழமை. அசலம்—மலை.

இத்தலத்திற்கு 'விருத்த காசி' என்றும் பெயருண்டு. பண்டை நாளில் இத்தலத்துள்ளோர் காசிக்குச் செல்வதில்லை

என்ற மரபு இருந்ததாகத் தெரிகின்றது. இத்தலத்தில் இறப்பவர்களுக்கு இறைவன் அவ்வுயிரைத் தன் தொடை மீது கிடத்தி மந்திர உபதேசம் செய்ய, இறைவி தம் ஆடையால் விசிறி இளைப்பாற்றுகின்றாள் என்பது வரலாறு.

> "தூசினால் அம்மை வீசத் தொடையின்மேற் கிடத்தித் துஞ்சும்
> மாசிலா உயிர்கட் கெல்லாம் அஞ்செழுத் தியல்பு கூறி
> ஈசனே தனது கோலம் ஈந்திடும் இயல்பா லந்தக்
> காசியின் விழுமி தான முதுகுன்ற வரையும் கண்டான்"

என்பது கந்தபுராணத்தில் வழிநடைப்படலப் பாடலாகும் இதனால் இத்தலம் காசியினும் மிகுதியானது என்று கூறுவர்.

பிரமனும் அகத்தியரும் வழிபட்ட பெருமையுடைய இத்தலத்தை மூவரும் பாடியுள்ளனர். சம்பந்தர் மட்டும் ஏழுபதிகங்கள் பாடியுள்ளார். சுந்தரர் மூன்று பதிகங்களையும் அப்பர் ஒரு பதிகமும் பாடியுள்ளனர்.

சுந்தரர் இத்தலத்தில் பரவையாருக்காகப் பெருமானை வேண்டிப் பொன் பெற்று அப்பொன்னை இங்குள்ள மணி, முத்தாற்றில் இட்டுத் திருவாரூர்க் கமலாலயத்தில் எடுத்துக் கொண்டார் என்பது வரலாறு.

மூவர் பாடலுடன் அருணகிரியாரின் திருப்புகழும், குமார தேவரின் பதிகமும், குருநமசிவாயரின் சேத்திரக் கோவையும், சிவப்பிரகாசரின் பழமலையந்தாதியும், இன்னும் பல நூல்களும் இத்தலச்சிறப்பை எடுத்துரைக்கின்றன. பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஞானக்கூத்தர் திருமுதுகுன்றத் தலபுராணத்தைத் தமிழில் பாடியுள்ளார். இது விருத்தகிரிப்புராணம் அல்லது விருத்தாசலப் புராணம் என வழங்குகிறது. இதில் 18 சருக்கங்களும் 438 பாடல்களும் உள்ளன. நூல் அச்சிடப்பட்டுள்ளது.

## திருக்கோவலூர் வீரட்டேசுவரர் புராணம்

திருக்கோவலூரில் கீழூரில் இருக்கும் சிவாலயம் அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. அந்தகாசுரனை அடர்த்த திருத்தலம். சம்பந்தரும் அப்பரும் பதிகம் பாடியுள்ளனர். கபிலர் பாரி மகளிரைத் திருமுடிக்காரிக்குத் திருமணம் செய்வித்து அதன் பின்பு வடக்கிருந்து உயிர்விட்ட இடம் இத்தலமே என்பர்.

இத்தகைய இத்தலச் சிறப்பினையும் வீரட்டேசுவரர் வரலாறுகளையும் விளக்குவதே திருக்கோவலூர் வீரட்டேசுவரர் புராணம் ஆகும். இதில் 17 சருக்கங்களும் 550 பாடல்களும் உள்ளன.

## திருவிடையூர்த்தல புராணம்

திருக்கோயிலூரிலிருந்து திருவெண்ணெய் நல்லூர் வழியாக அரசூர் செல்லும் பாதையில் உள்ளது இடையாறு என்னும் தலம். சுந்தரர் பாடல் பெற்ற திருவூர் இது. சுகர் முனிவர் வழிபட்ட திருவூர் என்றும் கூறுவர்.

இத்தலம் பற்றி, அசலாம்பிகையம்மாள், குழந்தைவேலுப் பிள்ளை என்பவர்கள் திருவிடையூர்த் தலபுராணம் இயற்றி யுள்ளனர். இதில் இரண்டு காண்டங்களும் பல படலங்களும் உள்ளன.

## திருவருட்டுறைப் புராணம்

திருவெண்ணெய் நல்லூர் என்னும் திருத்தலத்திலுள்ள கோயிலின் பெயர் திருவருட்டுறையாகும். சிவபெருமான் வல்வழக்கிட்டுச் சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட திருத்தலம். 'பித்தா பிறை சூடி' என்ற சுந்தரர் பாடல் பெற்ற திருவூர் இதுவே.

சிவபெருமான் முன்பு ஆலகாலம் என்னும் நஞ்சினை உண்டார் என்றகாரணத்தால் உமையம்மை பசுவின் வெண்ணெ யினால் கோட்டை மதில் எழுப்பி, அதன் இடையில் நெருப்பின் மீதிருந்து தவம் செய்கின்றார். அக்காரணத்தால் வெண்ணெய் நல்லூர் என்று பெயர் வந்தது என வீரசிங்காதன புராணம் கூறுகின்றது.

இத்தலச் சிறப்புகளையும் வரலாறுகளையும் கூறுவது திருவருட்டுறைப் புராணம் ஆகும். திரு வடிவேல் முதலியார் அவர்கள் இதை இயற்றியுள்ளார். இதில் 709 பாடல்கள் உள்ளன.

## திருமாணிகுழித் தலபுராணம்

திருப்பாதிரிப்புலியூரிலிருந்து திருவகிந்திரபுரம் செல்லும் வழியில் உள்ளது. திருமாணிகுழி என்னும் தலம். தட்சிண கங்கை எனப்படும் கெடில ஆற்றின் தென்கரையில் இவ்வூர் உள்ளது. சம்பந்தர் பாடல் பெற்றுள்ளது.

திருமால் பிரம்மசாரியாக வந்து மாவலிபால் மூன்றடி மண் கேட்டு அவனையழித்த பழிதீர இங்கு வந்து வழிபட்டாராதலின் இக்கோயில் மாண்குழி எனப் பெயர் பெற்றது. மாணி—பிரம்ம சாரி. இத்தலத்திற்கு வாமனபுரி, இந்திரலோகம், பீமசங்கர சேத்திரம் என்ற பெயர்களும் உண்டு.

இத்தலச் சிறப்பை உரைப்பதே திருமாணிகுழித்தலப் புராணம். சிவஞான முனிவரின் மாணவர் ஒருவர் இதை இயற்றியுள்ளார்.

திருமால் இங்கு வழிபட்ட செய்தியைப் பெரியபுராணமும் தலபுராணமும் கூறுகின்றன.

"மந்தமலர் கொண்டுவழி பாடுசெயு மாணியுயிர் வவ்வ
மனமாய்
வந்தஒரு காலனுயிர் மாள உதைசெய்த மணிகண்டன் இடமாம்
சந்திினொடு காரகில் சுமந்து தடமாம லர்கள்கொண்டு கெடிலம்
உந்துபுனல் வந்துவயல் பாயுமண மாருதவி மாணி குழியே"

என்னும் சம்பந்தர் பாடலில் இத்தல விளக்கம் கிடைக்கின்றது. சம்பந்தர் இத்தலத்தித 'உதவிமாணிகுழி' என்றே கூறுகிறார், இதற்குச் சான்றாக. சோழ, பாண்டிய, விசய நகர மன்னர்கள் காலத்திய கல்வெட்டுகளிலும் இத்தல இறைவர் பெயர், உதவி நாயகர், உதவி மாணிகுழிகோ தேவர் என்றே பொறிக்கப் பட்டுள்ளது.

வடநாட்டு வணிகன் அத்ரி என்பவன் இப்பகுதியில் வந்து கொண்டிருந்த போது திருடர்கள் கொள்ளையடிக்க முற்பட, இறைவன் அவ்வணிகனைத் திருடர்களிடமிருந்து காத்து 'உதவி' புரிந்தார் என்பது புராண வரலாறு. இதனால் இத்தலம் 'உதவி' என்றும், இறைவர் 'உதவி நாயகர்' என்றும், இறைவி 'உதவி நாயகி' என்றும் அழைக்கப் பெறுவதாகக் கூறுவர்.

'மணிகொண்ட இம்புரிக்கோட்டு இங்கரம்நால்
வாய்மும்மை மதம்வாய்ந் தோங்கும்
கணிகொண்ட கூவிளமும் நறைஇதழிப்
பூந்தொடையும் கலந்து சூடிப்
பணிகொண்டவ் வுயிர்களையும் இகம்பரம்விடு
இவைஉதவிப் பாரின் மீதே
அணிகொண்ட வாமனூர்ச் செல்வவிநா
யகன்திருத்தாள் அகத்துள் வைப்பாம்"

என்பது இத்தலபுராணத்திலுள்ள செல்வ விநாயகர் துதி, 'வாமனலூர்' என இத்தலம் இதில் குறிக்கப்படுவதும் 'உதவி' என்ற சொல் குறிக்கப்படுவதும் சிறப்பாகும்.

"சீர்பூத்த நீலகிரி திருமாணிக் குழிவளரும் தெய்வக் கோயில்
வார்பூத்த சளபமுலை மோகினிமா தினைத்தடந்தோள் மகிழப் புல்லும்
கார்பூத்த சுந்தரமுக் கண்ணான் காந்திங்கட் கங்கைவேணி
ஏர்பூத்த **வாமனே சுரனுதவி நாயகனை** ஏத்தி வாழ்வாம்"

என்பது இத்தலபுராணத்திலுள்ள 'உதவிநாயகர்' ஆகிய சிவபெருமான் துதி. இதில் வாமனேசுவரன் உதவி நாயகன் ஆகிய இறைவர் பெயர்கள் குறிக்கப் பெறுவதும். 'விநாயகன்' என அமைத்துள்ளமையும் நயம்மிக்கதாகும்.

அடுத்துவரும் இத்தல இறைவியாகிய அம்புஜாட்சி (உதவி நாயகி) துதியிலும் இவ்வாறே அமைக்கக் காணலாம்.

"தருணநறை மலர்க்கோயில் பூமகளும்
நாமகளும் சார்ந்து போற்றக்
கருணைபுரி **வாமனே சுரனுதவி**
**நாயகனைக்** கலந்து வாழும்
பொருள் நிறைந்து வளந்தரும் பூஞ்சோலை
வாமனபு ரத்துப்புள கக்கங்கை
அருணமலர் வதன உமைஅம்புயாட்சி
மலர்த்தாள் அகத்துள் வைப்பாம்"

என்னும் இப்பாடலில் வாமனபுரம் என இத்தலத்தைச் சுட்டுவர். இவ்வாறே இப்புராணத்திலுள்ள பாடல்கள் இனிமையும் நயமும் பொருந்தியிருக்கக் காணலாம்.

**திருப்பாதிரிப்புலியூர் புராணம்**

கடலூரின் ஒருபகுதி கூடலூர் புதுநகரம் எனப்படுவது. இதுவே திருப்பாதிரிப்புலியூர் ஆகும்.

புலிமுனிவர் என்னும் வியாக்கிரபாத முனிவர் பூசித்த காரணத்தால் இதற்குப் புலியூர் (வடபுலியூர்) என்று பெயர் வந்தது. (தென்புலியூர்—சிதம்பரம்). இவ்வூருக்கு, கடை ஞாழல், கன்னிவனம், பாடலபுரம், ஆதிமாநகர், உத்தாரபுரம் பாதிரிப் பதி, புலிசை என்ற பெயர்களும் கூறப்படுகின்றன. கடை ஞாழலூர் என்பது மருவி 'கடலூர்' ஆயிற்று என்பர். இத்தலத்

திற்குரிய மரம் பாதிரி (பாடலம்) ஆகும். பாடலேசுவரர் என்றும், தோன்றாத்துணை நாதர், கன்னிவனநாதர், சிவக்கொழுந்தீசர், உத்தாரநாதர் கரையேற்றும் பிரான் என்று பல பெயர்களும் இத்தல இறைவருக்கு வழங்குவர். சம்பந்தரும் அப்பரும் பதிகம் பாடியுள்ளனர்.

திருநாவுக்கரசரைச் சமணர்கள் கல்தூணில் கட்டிக் கடலில் இட்டபோது “சொற்றுணை வேதியன்” என்னும் பதிகம் பாடி அக்கல்லையே தெப்பமாகக்கொண்டு கரையேறினார். இதனால் தோன்றாத் துணைநாதர் என்றும், கரையேறவிட்ட நாதர் என்றும் போற்றப்பட்டார். அவர் கரையேறிய இடம் இப்பொழுதும் ‘கரையேறவிட்ட குப்பம்’ (வண்டிப்பாளையம்) என்று வழங்கப்படுகிறது. அங்கு அப்பர்குளம் என்று ஒரு குளமும் உள்ளது.

மங்கண முனிவர் என்பவர், சாபத்தினால் முடங்கிய காலும் முயலுருவமும் நீங்க இவ்வூர் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றார் என்பது வரலாறு. சூரியனும் கங்கையும் இங்கு வழிபட்டதாகக் கூறுவர்.

திருவாவடுதுறை ஆதீனம் இலக்கணம் சிதம்பர முனிவர் இத்தலம் பற்றி இயற்றியதே திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம் ஆகும். இது பாடலேசுவரர் தலபுராணம் என்றும் கூறப்படும். இந்நூலில் 18 சருக்கங்களும் 987 பாடல்களும் உள்ளன.

“பூமேவு பாதிரியின் படர்ந்த கன்ற
மணிக்கோயில் பொலிய மேவி
மாமேவு மாலயனும் மூவிலை
வேலம் மானும் வணங்கி யேத்தத்
தாமேவு தொழிலைந்தும் பரையி யற்ற
அனைத்துயிரும் தழைப்ப வைகும்
காமேவு புகழ்ப்புலிசைப் பாட லேச்சுரன்
பதத்தைக் கருதி வாழ்வாம்”

என்னும் இப்புராணத்தின் இறைவன் துதிப்பாடலில், பாதிரி மரங்கள் நிறைந்த தலத் திறைவனாதலால் பாடலேச்சுரன் என அழைப்பதும், புலிசை எனத் தலத்தைக் குறித்துப் புலிசைப் பாடலேச்சுரன் என்று அழைப்பதும் சுட்டத்தக்கதாம். அடுத்து, இவ்வூர் இறைவியாகிய பெரியநாயகியைத் துதிக்குமிடத்து,

"உரையேறு சைவநெறி வளர்ந்தேறச்
சமணரெலாம் உட்கி மாழ்கிப்
புரையேறக் கண்டவர்கள் ஆனந்தக்களிப்
பேறப் புகழ்நா வேந்தைக்
கரையேறக் விட்டபிரான் ஒருபாகம்
வளர்கருணைப் பிராட்டி யான
தரையேறு புகழ்புலிசைப் பெரியநா
யகிசரணம் தலைமேற் கொள்வாம்".

இப்பாடலில் இறைவன் சமணர்கள் வெட்கப் படும்படியாக நாவுக்கரசருக்கு அருளியது கூறப்பட்டது. இதில், 'புகழ் நாவேந்தைக் கரையேற விட்டபிரான் ஒருபாகம் வளர்கருணைப் பிராட்டி' என்றே இறைவியை அழைக்கக் காணலாம்.

இத்தலத்தில் நிகழ்ந்த இவ்வரலாற்றைக் குறித்து 'கரையேற விட்ட நகர்ப் புராணம்' என்னும் நூலைத் திரு கா. ரா. சிவசிதம்பர முதலியார் அவர்கள் இயற்றியளித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**கன்னிவன புராணம்**

திருப்பாதிரிப்புலியூர்ப் பாடலேசுவரர் கோயில் மேற்குத் திருமதிலில் காணப்பெறும் மூன்று பாடல்களில் இப்புராணம் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. விரைத்தலைவன் பரசமய கோளரி மாமுனி என்பவர் இப்புராணத்தைப் பாடியதாக இக் கல்வெட்டு கூறுகிறது.[1] அப்பாடல்கள் வருமாறு :

ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 41:

திருவாழுங் கறைஞாழற் கிளைமருதம் ..
. சாசனந்தென் மருதம் பாகைக்
கருவாழ வருங்கமலா லயற்குக் கன்னி
வனபுரா ணம்பாடிப் பரிசில் ..
மருவாரும் நாடகமும் செய்தாற்குச் சிறப்பாம்
மாலையூரினி விருப்பூவும் விளையும் பாரில்
.. ஒருமா நன்நில பருங்கொழுகிளையினேர்டும்
ஊழிதொறு மிறையிலியே யுரைத்தானே.

1. சாஸனத் தமிழ்க் கவி சரிதம், பக்.61, 62.

மாங்கொல் லையிரண்டு மாவொருமா முக்காணி
ஓங்கு மறப்பெருஞ் செல்வி யொரு காணி ..
பூவமர் காணியினிற் பூம்புலியூர் நாடகம்செய்
நாவலன் பெற்ற நிலம்.

ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 49 :

தழைத்ததிருப் பாதிரிப் புலியூரான் வீரைத்
தலைவனிரும் பைப்பரசமய கோளரிமா முனிக்கு
கொழித்த அஷ்டாதச புராணங்க ..
.. தானங் கன்னிவன புராணம்
வழுத்தபடி காட்டுதலா னந்தருமவ் விருத்தி
பாலையூரு மிரு பூ விளையு நி...
பழுத்துமறை தனமாயுள் ளளவு முன்னை
விறையிலியாம் வகைதந்தோம் இரண்டு மாவே.

குலோத்துங்க சோழனுடைய ஆட்சி யாண்டுகள் 41, 49 முறையே கி. பி. 1111, 1119 ஆகும். இக்காலத்தில், இரும்பை என்னும் ஊரினைச் சேர்ந்த இப்புலவர் கன்னிவன புராணம், அட்டாதச புராணம், பூம்புலியூர் நாடகம் என்பன பாடினார் என்றும், இவற்றின் பொருட்டு அரசன் இவருக்கு இறையிலியாக நிலங்கள் அளித்தான் என்ற செய்திகள் இதனால் அறியலாகும்.

கன்னிவனம், பூம்புலியூர் என்பன திருப்பாதிரிப்புலியூரினைக் குறிக்கும் பெயர்களாகும். கடைஞாழல், பாடலிபுரம், பாதிரிப் பதி, புலிசை என்பனவும் இத்தலப் பெயர்களாகும். இங்குள்ள இறைவருக்குப் பாடலேசுவரர், கன்னிவன நாதர் என்பன பெயர்களாகும். எனவே, கன்னிவன புராணம் என்பது இத் தலத்திற்குரிய புராணமாகலாம். இன்று இது கிடைக்காததால் பிற விவரங்களை அறிய இயலவில்லை. இதுபோன்றே அட்டாதச புராணமும் பூம்புலியூர் நாடகமும் கிடைக்கவில்லை. எனவே அவை பற்றிய பிற விவரங்களையும் அறிய இயல வில்லை. அக்காலத்தில் நாடகநூல் இருந்தது என்பதும், அது நடிக்கப் பெற்றது என்பதும் சிறப்புச் செய்திகளாகும். இம் மூன்று நூல்களும் திருப்பாதிரிப்புலியூர் பற்றியதே என்பது தெளிவு.

இவற்றை இயற்றிய புலவர் மாமுனி என்றமையால் இவர் துறவியும் மடாதிபதியுமாக இருந்தார் என்பர். வீரைத்தலைவன் என்ற அடைமொழியும் இவர் தலைவராக வாழ்ந்தமையைப்

புலப்படுத்தும். பரசமய கோளரி என்றமையால் சமய வாதத்தில் மிகவும் வல்லவராயிருந்து பிற சமயத்தாரை அடக்கினார் என்று கருதலாம். பரசமய கோளரி என்று திருஞானசம்பந்தப் பெருமானைச் சேக்கிழார் பாடுவது, பின்னும் சில காலம் கழித்து இக்குலோத்துங்கன் பேரனான இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலாகும். நம்பியாண்டார் நம்பி இத்தொடரைக் குறிப்பிடுகிறார் என்பர்.[1]

## திருவாமாத்தூர்ப் புராணம்

விழுப்புரத்திற்கு வடமேற்கே பம்பை என்னும் சிற்றாற்றின் வடகரையில் உள்ள தலம் திருஆமாத்தூர் ஆகும். நந்தி, காமதேனு தவமிருந்து கொம்புகளைப் பெற்ற சிறப்புடைய தலம். இதனால் 'கோமாத்ருபுரம்' என்று பெயர். உயிர்களுக்கு-பசுக்களுக்கு இறைவன் தாயாக இருந்து அருளும் தலம். இராமர் வழிபட்ட தலம் என்றும் கூறுவர். மூவர் பதிகம் பெற்ற சிறப்புடைய தலங்களில் இதுவும் ஒன்று.

இறைவியின் வசைமொழியால் பிருங்கு முனிவர் வன்னி மரமானார். பின்னர் அவர் இத்தலத்தில் வந்து இறைவியை வழிபட்டு அவ்வசை நீங்கப் பெற்றார். வன்னி மரமும் கொன்றை மரமும் இங்குள்ளன.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அவர்களின் சமாதி இத்தலத்தில் உள்ளது. பல்லாயிரக்கணக்கான பாடல்கள் பாடிய இவரே இத்தலச்சிறப்பை விளக்கித் திருவாமாத்தூர்ப் புராணம் என்னும் தலபுராணத்தையும் இயற்றியருளியுள்ளார். இதில் மொத்தம் 1010 பாடல்கள் உள்ளன.

முதல்நூல் ஆதாரமுள்ள செய்திகளைப் பூருவ காண்டம் என 703 பாடல்களாலும், இடைக்காலத்தில் உண்டான செய்திகளை உத்தரகாண்டம் என 255 பாடல்களாலும், இறுதியில் தன்னநுபவப்படலம் என்னும் பகுதியில், மாதைப் பெருமான் தமக்கருளிய குறிப்புக்களை 42 பாடல்களாலும் இந்நூலாசிரியர் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் இப்புராணத்தை வடமொழி மகா ஸ்காந்தத்தில் நாகர காண்டத்திலிருந்து மொழிபெயர்த்து இயற்றியதாகக்

1. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 12ஆம் நூ., பக். 87.

கூறுவர். வடமொழி நூலிலிருந்து தமிழாக்கம் செய்து உதவியவர் ஆமாத்தூர் அருகிலுள்ள வெங்கந்தூர் கணபதி சாஸ்திரி என்பவராவார்.

பாயிரப் பகுதியில் விநாயகர், அழகிய நாதர், முத்தாம்பிகை தலவிநாயகர், சபாநாதர், தட்சிணாமூர்த்தி, முருகர், தண்டீச் சுரர், இராமர், சரசுவதி, அடியார் ஆகியோருக்குத் துதிகள் கூறுகிறார்.

**இராமர் துதி**

இராமேச்சுவரத்தில் சிவனை வழிபட்ட இராமர் இத்தலத்து இறைவராகிய ஆமாத்தூர் ஈசரையும் வழிபட்டு வணங்கினார். இதை 102 பாடல்களால் தனியொரு படலமாகவே இந்நூலா சிரியர் படைத்துள்ளார். இருப்பினும், பாயிரத்தில் கடவுளர் துதிப்பாடலில் இராமரையும் துதித்துப் பாடுகிறார். இது இவர் தம் சமயப் பொதுமை யுணர்வைக் காட்டும்.

"நந்தியாய் உமையவனாய் நாகவிற்கோர்
கணையாகி ஞாலங் காப்பான்
வந்திரா கவனாம்மால் ஒருக்காற்போற்
றியசேது வருந்த அன்பால்
அந்திவான் அனையசிவன் தனைஇருக்காற்
றொழுந்திருவா மாத்தூர்ச் சீர்த்தி
சிந்தியா நுவன்றிடும்நான் அவற்பரவா
விடில்மனமும் சிரிக்கும் அன்றே"

என்னும் பாடல் இவர் உணர்வை விளக்கும்.

**அவையடக்கம்**

"வணங்கினரை இகழ்வாரும் வைதாரை நன்கு
மதிப்பாரும், சிற்சிலர்இம் மாநிலத்தில் இருப்பார்
மணங்கமழ்சந் தனக்கிரிமா முனிவன்நுவல் கவிக்கும்
வழுப்பகர்வார் உளரெனுமோர் வார்த்தையும்கேட்
டுளனால்
அணங்கொருபா கத்துடையார் ஆமாத்தூர்ச் சரிதம்
அதுகுறித்துயான் எங்ஙனம் ஈண்டு அவையடக்கம்
பகர்வேன்
இணங்குமறிவு அளவில்எவர் இகழ்ந்தாலும் புகழ்ந்திட்டு
இன்புறினும் எனக்காகாது எவையமைப்பாற் காமே"

இதில், இந்நூலை ஆமாத்தூர்ப் புராணம் என்று கூறாமல், 'ஆமாத்தூர்ச் சரிதம்' என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்க தாகும்.

**தன் வரலாறு**

முதலில், நூல் தோன்றிய வரலாற்றை 11 பாடல்களில் ஒரு பதிகம் போலவே பாடுகின்றார். இதில், இவருடைய வரலாற்றி னையும் விவரிப்பது சுட்டத்தக்கது.

"செந்தமிழ்ப் பாண்டி நாட்டுத் திருநெல்வே லியிலேவார் சேயாய்
வந்தனன் என்பேர் மூன்று வகைபட உலகம் சொல்லும்
கந்தவேள் அருளால் வேதம் கழறும்நன் னெறிஓ ராளும்
சொந்தமாப் பெற்றுப் பற்பல தலந்தொறுந் துதித்துச் சூழ்ந்தேன்"

என இவ்வாறு தொடங்கி இவர் நூல் பாடிய வரலாற்றையும் விளக்குகிறார். இவ்வாறு தன்வரலாற்றை விளக்கும் போக்கு, மற்ற தலபுராண ஆசிரியர்களிடம் காண்பது அரிதாகும். அதனாலேயே பல புராண ஆசிரியர்களின் வரலாறுகள் நமக்குக் கிடைப்பதும் அரிதாகவுள்ளன.

**பழமையும் புதுமையும்**

புராணங்கள் சூதமுனிவரின் கூற்றாக வைத்துப் பாடுவது முன்னோர் மரபு. அதே பழைய மரபில் இந்நூலை அமைத் தாலும் தானும் இதில் சில புதுமைகளைப் புகுத்தியிருப்பதையும் குறிப்பர்.

"எப்புரா ணமும்முன் சூதன் எழில்கொள்நே மியங்கா னத்தில்
ஒப்புர வுடைய மேலோர்க்கு ஓதல்என் றுரைக்கை தொன்மை
அப்புகழ் இதற்கு முண்டுண்டு, ஆதியாம் காந்தம் தன்னுட்
செப்புநா கரகாண் டத்தில் தெரிதரும் பாற்ற தாமே".

என்னும் இப்பாடலில், இந்நூலுக்கு அடிப்படையான வட மொழி மூலத்தையும் குறிப்பர். இவ்வாறு இந்நூலின் மூலம் வட மொழியிலிருந்து வந்தது என்றாலும் இடையிடையே தம் கருத்துக்களையும் இவர் கூறிச் செல்கின்றார்.

நாட்டுச்சிறப்பு, நகரச் சிறப்புகளிலும் பிறவிடங்களிலும் மலை, கடல், நகர், வயல், வாவி, மகளிர்ஆடல், பாடல், முதலிய வற்றை வருணித்துக் கூறும் கற்பனைகளைத் தமது நூலில்

கொண்டாள்வதற்கு இவர் விரும்பிலர். கருணை, பத்தி, ஞானம், உபாசனை, சித்தி, முத்தி ஆகிய ஆன்மீக நலங்களைச் சமயம் நேர்தவிடமெல்லாம் கூறிப் பயில்வோர்க்கு நன்னிலை அறிவிப்பதே இவர் கொள்கையாகும்.

"முந்துகா வியத்தி னோரோர் முறைகொடே
மொழிந்து னாருன்
வெந்துணல், கள்ளுண் டாடல், மிகச்சொலல்,
சுருங்கக் கூறல்,
செந்துநோ விரித்தல், ஆதித்தீமையும்,
உலந்தார் பல்லோர்
இந்துநேர் திறத்தி னாள்எற்கு ஈந்தவா
றிசைக்கின் றேனே" (11)

என்னும் இப்பாடலில் முன்னோர் பலருடைய நூல்களில் கூறிய வாறு ஊன் உண்ணல், கள்ளுண்ணல், பலவகை உயிரினங்கள் பட்ட துன்பங்களைக் கூறுதல் ஆகியவற்றை யெல்லாம் கூறாமல் இந்நூலை அமைத்துள்ளதாகக் கூறுவது புதுமையாகும். பழைய தலபுராணங்களில், குறிப்பாக வடமொழித் தல புராணங்களில் பலியிடுதல் விரிவாகப் பேசப்பட்டிருப்பதாகக் கூறுவர். இது தமிழ்ச் சைவநெறிக்கு ஏற்றதல்ல வென்பதால் இவர் இவற்றை மறுத்தார் என்பதும் புதுநெறி கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கன.

## பூர்வகாண்டம்

பூர்வகாண்டமாகிய முதற்பகுதியில் முதலில் நாட்டுச் சிறப்பு என்பது தொடங்கி நகரச் சிறப்பு, தலச்சிறப்பு ஏழுமுனிவர் வழிபட்டது, முருகப் பெருமான் வழிபட்டது என இவ்வாறே அமைப்பர். எதிலும் சருக்கம், படலம், அத்தியாயம் என்ற பெயர் வைப்பு இல்லை. நூலை ஒரு வரலாறாகக் காட்ட வேண்டுமென்பதே ஆசிரியரின் நோக்கமாகலாம்.

## நடுநாட்டுச் சிறப்பு

நடுநாட்டின் சிறப்பை இவர் சொல்வதுபோல இதற்கு முன் எவரும் தம் புராணநூலில் எடுத்துச் சொல்லவில்லை என்றே கூறவேண்டும். தொண்டை மண்டலத்தின் அணியாகத் திகழும் நடுநாடு என்பது பெயர்ப்பொருள் பொதிந்தது என்று இவர் கூறிஇறார்.

"நடுவெ னுந்தொடர் புடையதே நாடெனு நாமம்
கொடுவி ளங்குதற் குரியதாம், ஏனை கொள்ளல்
கடுவின் மாய்ந்திலான் ஈசு ரப்பெயர், கொடும்காரி
கெடும்இ ராவணன் முதலினர் பெறல்புரை கிறியே" (4)

நடு என்ற தொடர்பு கொண்டே நாடு என்று நீட்டிக் கூறும் பண்பினைக் கொண்டது நடுநாடு ஒன்றேதான். ஏனைய நாடுகள் நாடு என்ற பெயர் கொண்டது எத்தன்மைத் தெனில் சனி-ராவணன் என்ற இருவரும், சனீச்சுரன், இராவணேச்சுரன் என்ற ஈச்சுரப் பெயரைக் கொண்டுள்ளது போல, கேலக்குரியது. ஈச்சுரன் விடமுண்டும் மாயாதவன், இவ்விருவரும் விடம் போன்ற கொடியவர் என்ற கூற்று சிறப்பானதாகும்.

உறுதியும் மாறுபடாததுமான பல சிறப்புகளை தன்னிடத்து நடத்தகுந்தது நடு(ம்) நாடு என்ற தன்மையி லமைந்தது நடுநாடு ஆகும். மற்றைய நாடுகள் நாடு என்ற பெயர் பெற்றது. பொற்குடத்தின் சிறப்புக்கு மண்குடம் நாணுவது போலாகும் என மேலும் ஒருசிறப்பை அடுத்த பாடலில் (5) கூறுவர்.

பிரமனும் திருமாலும் போரிட்ட சமயம் நெருப்புமலையாய் (திருவண்ணாமலை) உலகுய்யுமாறு வான் நடுவே நின்றதும் இந் நடுநாட்டில்தான் என்பர். (7) திருமால் உலகளந்திட மூன்றடி மண் பெற வந்த நாடு, மெய்ப்பொருள் நாயனார் இருந்த நாடு, சுந்தரரைத் தடுத்தாட் கொண்ட நாடு, திருநாவுக்கரசர் தோன்றிய நாடு, சிபிச்சக்கரவர்த்தி வீடு பெற்ற நாடு என இந் நாட்டில் நிகழ்ந்த வரலாறுகளையும் புண்ணியத் தலங்களையும் ஒவ்வொன்றாக இப்பகுதியில் விளக்கக் காணலாம்.

**திருவாமாத்தூர்ச் சிறப்பு**

திருவாமாத்தூர் என்னும் திருநகரச் சிறப்பை 51 கவிகளில் எடுத்துரைக்கும் ஆசிரியர் பல்வகை வளங்களையெல்லாம் புதுமையான நயங்களுடன் எடுத்துரைக்கின்றார். காட்டாக,

"முத்தமிழ்ப் பனுவற் கூட்டில் முதலொலி யலந்தா தித்கே
ஒத்தது; தெய்வங் கட்குள் உமைகண் வணையே போன்றது;
உத்தம நெறிகள் தம்முள் உயிர்கொலா விரதம் ஏய்த்தது;
அத்தமா தியமுச் சீரும் அவிர்தரு திருவா மாத்தூர்"

என்னும் முதற்பாடலில். திருவாமாத்தூரானது தமிழ்ப் பிரபந்தங்களில் முதன்மையான ஒலியலந்தாதி போன்றது.

கடவுளர்களில் உமைமணவன் (சிவபெருமான்) போன்றது, உயர்வான நெறிகள் புலவற்றுள் கொல்லாமை விரதம் போன்றது, அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றும் கொடுப்பது என்று கூறுவார்.

இங்கு, தமிழ்ப் பிரபந்த வகைகளை 'முத்துதமிழ்ப் பனுவற் கூட்டம்' என்கிறார். தமிழ்ப் பிரபந்தங்கள் தொண்ணூற்றா றனுள் சிறப்பானது ஒலியலந்தாதி. இது, வண்ணம் என்ற சந்தப் புரட்டு முப்பது கொண்டு அறுபத்துநான்கு கலையுடைய தாய் அந்தாதித் தொடர்பிற் பாடப் பெறுவது. இதுவரை அரிதின் இயல்பது. இந்நூலாசிரியர் அந்த நூலை முதலொலியலந் தாதி, பேரொலியலந்தாதி என இரண்டு பாடியுள்ளனர். இதன் அருமை கருதியே முதன்மை என்றனர். பிரபந்தத்தில் ஒலியலந்தாதி சிறப்பிடம் பெற்றதுபோல, தலங்களுள் திருவாமாத்தூர் சிறந்தது என்றார்.

"பிறந்தவர்க்கே வீடுதவும் திருவாரூர்;
கண்டுதொழப் பெற்றார் கட்கே
சிறந்தமுத்தி தரும்தில்லை; அருணைநினை
வார்களையே சேர்க்கும் வானில்;
இறந்தவர்க்கே இனிப்பிறவா நிலையளிக்கும்
வடகாசி; இந்த நான்கும்
அறந்தழைக்கும் திருவாமாத் தூர்செயுமால்
இதன் பெருமை அறிவார் யாரே".
(தலச்சிறப்பு-3)

திருவாரூரும் தில்லையும் திருவருணையும் வடகாசியும் தரும் பேறுகளை யெல்லாம் இத்திருவாமாத்தூர் ஒன்றே கொடுக்கும் எனக்கூறும் ஆசிரியர், இத்தலத்தின் எல்லை, சிறப்பு, வழிபட்டோர் வரலாறு என விளக்குவர். இவற்றையெல்லாம் உணராதவர்கள் மூடர் என்றே கூறுவர்.

"பத்திநெறி தனிற்சென்று பரகதிவேட்
கையராகிப் பாவம் நீங்கிச்
சித்திபெற முயல்வோர்க்கே திருவாமாத்
தூர்மகிமை சிறிது தோன்றும்;
நித்தியமும் அழகேசர் தேர்வலியும்
மலிதன்மை நிலைக்கும் மூடப்
புத்தியுளார்க் கெத்தனைசொன் னாலுமென்ன
பயன்படுமோ பெரும்பாணப் பூரே" (4)

என்னும் பாடல் தலபுராணங்களைப் பற்றி இழிவாகப் பேசுபவர்களைச் சுட்டிக் கூறியதாகும்.

தீர்த்தச் சிறப்பும், மூர்த்திச் சிறப்பும் கூறியபின்பு திருவட்டப் பாறைச் சிறப்பினைக் கூறுகிறார். பிறகு இத் தலத்தில் பசுக்கள் பூசித்தது, அம்பிகை, முனிவர், ஏழுமுனிவர், விநாயகர், முருகப்பெருமான், நாரதர், உரோமசர், பிரிங்கி முனிவர், மதங்கமுனி, நான்முகன், பன்னிரண்டு சூரியர்கள், அட்டவசுக்கள், மகாகாளன், இராமபிரான், ஆகியோர் வழிபட்ட வரலாறுகளைத் தனித்தனியே விரிவாக விளக்குகிறார்.

### தெளிவு

அடுத்து இருபத்திரெண்டாவதாக அமைவது 'தெளிவு' (ஞானப்பகுதி) என்னும் பகுதி. ஆசிரியர் இப்புராணத்தை இயற்றத் தொடங்கிய மறுநாள் திருமால் இவரது மனவெளியில் வைணவ வேதிய வடிவாகத் தோன்றி இப்படலச் சிறப்பினைக் கூறினார் என முதற்பாடலிலேயே குறிப்பர். தாம் கூறுவது பொய்யல்ல என்பதை விளக்க இவர் கலைமகளையே சாட்சியாகவும் குறிப்பிடுவர்.

"பூரமெனும் வாகனத்தில் ஏறிப் போய்ப்போய்
புலவர்தம்நாத் தொறும்உலவும் புனித வாணி
சீர்வீர்செங் கமலமலர்த் துணையே போலும்
திருவடிகள் நன்கறியச் செப்பு கின்றேன்
மாரனைச்சுட் டெரித்தபிரான் மாதைச் சீர்த்தி
வண்டமிழாற் சொலத்துவக்கும் மறுநாள் என்னுள்
ஓரருமை வயிணவன்போல் திருமால் தோன்றி
ஒளிருமிந்தப் படலவண்மை உரைத்த துண்டே". (1)

சைவ, வைணவ சமய வேறுபாடுகளை அறவே நீக்கி, ஒன்றே என்ற உறுதியான உண்மையை விளக்குவதால் இப் பகுதிக்குத் 'தெளிவு' என்ற பெயரமைத்தனர் ஆசிரியர். தெளிவு என்னும் இந்த ஞானப் பகுதியைக் கூறிமுடிக்கும்போது,

"செவ்வரிக்கட் கலைமகளைக் கொஞ்ச மேனும்
தெரிந்த வர்க்கே என்கவிகள் தித்திப் பாகும்" (32)

என்று கூறி முடித்திருப்பது அறியத்தக்கதாகும்.

### உத்தர காண்டம்

இவற்றை யடுத்து இரண்டாம் பகுதியாகிய உத்தர காண்டத்தில், இலக்குமி, சரசுவதி வழிபட்டது, திருநாவுக்கரசு

சுவாமிகள், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி இவர்கள் அருள் பெற்றது, இரட்டைப் புலவர் முத்தியுற்றது, சதானந்தர் தன்மை, வினோதஆடலின் சிறப்பு, ஆளுகைச் சிறப்பு, ஆசிரியர் தன் அனுபவம் கூறுதல் ஆகியவற்றுடன் நூல் நிறைவடைகிறது.

## ஆளுகைச் சிறப்பு

இறுதியிலுள்ள ஆளுகைச் சிறப்பு என்னும் பகுதியில், இக்கலியுகம் தொடங்கியது முதலாக ஆசிரியருடைய காலமான ஆங்கிலேயர் ஆட்சி வரையில் இங்கு வந்து ஆட்சி செய்தோர் இக்கோயிலுக்குச் செய்த திருப்பணிகளையெல்லாம் கூறுகிறார். வடநாட்டார், தெலுங்கர்கள், நாயகர்கள், துலுக்கர்கள் எனத் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களெல்லாம் இக்கோயிலுக்குப் பணி செய்து உதவியுள்ளனர். ஆனால், முகமதியர்களை அடுத்து வந்த ஆங்கிலேயர்கள் ஆட்சியில் திருப்பணி ஏதும் நடைபெறாதது ஆசிரியர் உள்ளத்தைத் துன்புறச் செய்தது என்பதை இறுதியிலுள்ள பாடல்களால் அறியலாம்.

"அவர்தம் அரசை வெள்ளை
அங்கி லியர்கைக் கொண்டார்
இவணிந் நாள்அன் னவர்பேர்
இறைமை நடக்கின் றமையால்
விவரம் பலவும் கவியால்
விளம்பும் கடமை யில்லை
உவரிக் கலைசூழ் இந்த
உலகோ ரொருங்கோர் குவரே" (25)

"பொருளே மிகச்சேர்ப் பவர்க்கும்
பொய்யிற் பெரியார் தமக்கும்
மருளேய்ந் துழலும் பிழைதோய்
மதவா தருக்கும் மகிழ்வாய்
அருளே கருதும் தவர்க்கும்
அறங்கள் செயவேட் டவர்க்கும்
தெருளே யுடைச்சீ ரியர்க்கும்
சிந்தைச் சலிப்புற் றதுவே". (26)

"இந்த அரசே உலகம் இறுமட் டுறுமோ வேறுசுண்டு
எந்த அரசா யினும்வந் திதனைச் செறுமோ அறியேன்
அந்த உண்மை முதலாம் அனைத்தும் அறியும் ஒருவன்
சந்த மணியும் மாதைத் தலத்தில் தழைக்கின் றவனே". (28)

ஆசிரியர் காலத்திலிருந்த ஆங்கிலேயர் அரசாட்சியில் தாம் ஒன்றும் கூறுவதற்கில்லை என்கிறார். வெள்ளையர் ஆட்சி என்று முடியுமோ என அவர் வேதனைப் பட்டிருக்கிறார். அவ்வாட்சி உலகம் அழியும்மட்டும் இருக்குமோ அல்லது வேறு அரசர்கள் வந்து அவர்களை வெல்வார்களோ என்று வேதனை யுடன் பாடுகிறார். முடிவு என்ன ஆகும் என்பதைத் திருவாமாத்தூர் முதல்வனே அறிவான் என இறைவனிடமே தம் குறையை விட்டுவிடுகிறார் இவர். ஆங்கிலேயருக்குப் பின் இங்கு வேறு எவரும் ஆட்சி செலுத்த வரவில்லை. அவர்களே விட்டு விலகிச் சென்றனர். அகிம்சா வழியில் அறப்போராட்டம் நிகழ்த்தி ஆங்கிலேயரை இந்நாட்டைவிட்டுச் செல்ல மகாத்மா காந்தியடிகள் வழிகாட்டி வெற்றி பெற்றார். இது, இப்புராண ஆசிரியராகிய தண்டபாணி சுவாமிகள் போன்றோரின் உண்மை வேண்டுதல்களாலேயே நிகழ்ந்தது எனலாம்.

ஆசிரியர் தன் அனுபவம் கூறிய இறுதிப் பகுதியில் இப் புராணப்பயன் கூறுகிறார்.

"பழுதில்சீர் மலியும் மாதையம் பதியிற்
பரமர்தம் புராணநூல் முழுதும்
எழுதினோர் படித்தோர் கேட்டவர் வீட்டில்
ஏட்டைவைத் திருந்தவர் தாமும்
வழுதியும் வளவன் தானுமே போலும்
வாழ்வடைந் தருமைசால் மகப்பெற்று
இழுதிடும் படைக்கைக் காலனு தரைவென்று
இமையவர் ஊர்புகு வாரே". (40)

"எந்தநன் மனையில் மாதைநா யகன்தன்
எழிற்சரித் திரத்தின்ஏ டுறுமோ
அந்தவீட் டினிற்பேய் பில்லிசூ னியங்கள்
அணுத்துணை யேனும்வந் தணுகா
கந்தநாள் மலர்கொண் டருச்சனை புரிந்தாற்
கயிலைதன் காணியாம் என்று
முந்தநூல் உரைத்த வியாசனும் சூத
முனிவனா தியரும்ஓ தினரே". (41)

இச்சிறப்புமிகு புராணத்தை ஆசிரியர் தம் கைப்பட ஓலைச் சுவடியில் எழுதி வைத்ததும், பிறகு அவர் காலத்திலேயே (1875 இல்) அச்சில் பதிப்பித்து வெளியிட்டதும், பின்பு இத்

தலத்திலேயே ஞானசமாதி (5-7-1898) கொண்டதும் குறிப்பிடத் தக்கதாகும்.

"எத்தலம்மங் களக்ரம்சேர் கோவிலெங்கள்
இடர்நீங்கி இன்பம் எய்தும்
அத்தலமே தலம், அதனின் மான்மியமே
மான்மியம்,அம் மான்மி யத்தை
இத்தலம்நன் குணரும்வண்ணம் இயற்றினன்கைம்
மாறறியா எழிலி போல்வான்
கைத்தலஞ்சங் காழிகொண்டு கலைழவனத்தே
வந்தபெருங் கருணை யானே".

"ஆதலின்இம் மான்மியத்தை அழுக்காறு
முதல்அனர்த்தம் அனைத்தும் நீக்கிக்
காதலினாற் படிப்போர், கேட் போர்,
எழுதி மைக்காப்புக் கவினச் செய்வோர்,
பூதலத்திற் பெருஞ்செல்வம் புத்திரப்பேறு
ஒளிவீசும் புகழ்மை யாதி
ஓதரிய பேறுபதி னாறும்எய்திப்
பேரின்பத்து ஓங்கு வாரே".

என்னும் இப்பாடல்கள், கௌசைப்புராணம் இயற்றிய கந்தசாமி சுவாமிகள் அவர்கள் இத்திருவாமாத்தூர்த் தலபுராணத்திற்கு அளித்துள்ள சாத்துக் கவிகளாகும். இதில், இப்புராணத்தை ஏட்டில் எழுதி மைக்காப்பிட்டுப் பாதுகாப்பவர் பேறு பெறுவர் என்று கூறியிருப்பதைக் கொண்டு இந்நூல் பலராலும் ஓலைச் சுவடியில் பெயர்த்தெழுதி வைக்கப்பட்டதென்றும் அறியலாம்.

### கிடைக்காத தலபுராணங்கள்

மேற்கண்ட வகையில் நடுநாட்டிலுள்ள பதினைந்து சைவத் தலங்களுக்குரிய தலபுராணங்கள் கிடைக்கும் நிலையில் மற்றுமுள்ள ஏழு சைவத் தலங்களுக்கும் தலபுராணங்கள் இருந்திருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. அத்தலவரலாறுகளை நோக்க இது புலனாகும்.

### திருஅறையணி கண்ட நல்லூர்

திருக்கோவலூருக்கு எதிர்க்கரையில் பெண்ணையாற்றின் கரையில் உள்ளது அறையணி கண்ட நல்லூர்என்னும் தலமாகும். அரகண்ட நல்லூர் என வழங்கப்படுகிறது. கோயில் ஒரு சிறிய பாறை மேலே கட்டப்பட்டுள்ளது. இங்கிருந்து பார்த்தால்

திருவண்ணாமலையின் திருமுடி காணப்படும். அருகில் கபிலர் மேடும், வீரட்டேசுவரர் கோயிலும் தெரியும். இங்கு ஞான சம்பந்தர் வந்து கண்டு பதிகம் பாடியுள்ளார்.

நீலகண்ட முனிவர், கபிலர், பாண்டவர்கள் ஆகியோர் வழிபட்ட தலம் இது. ரமணமகரிசிக்கும் ஞானானந்தகிரி சுவாமிகளுக்கும் அருள் கிட்டிய தலமும் இதுவே.

இத்தலம் பற்றி, அறையணி கண்டநல்லூர்த் தல மகாத்மியம் என்ற பெயரில் உரைநடை நூல் மட்டுமே கிடைக்கின்றது. இத்தலத்திற்குரிய தலபுராணம் இருந்திருத்தல் வேண்டும். அது இப்பொழுது கிடைக்கவில்லை.

சமணர்கள் முன்பு இத்திருக்கோயிலின் மூலவாயிலை அடைத்துவிட்டதாகவும், சம்பந்தர் இங்கு வந்து பாடித்திறந்து, சமணர்களைக் கழுவேற்றினர் என்பது வரலாறு. அவ்விடம் இப்பொழுதும் 'கழுவன் குளம்' என்று வழங்கப்படுகிறது. இத்தகு சிறப்புமிக்க தலத்திற்குரிய தலபுராணம் கிடைக்க வில்லை. இதன் வரலாறுகளை மக்கள் மிகுதியாக அறியாததால் கோயிலும் மண்டபங்களும் மிகவும் சிதைந்துள்ளன. இவ்வாறே இத்தலம் பற்றிய நூல்களும் அழிந்தன போலும்.

### திருஎருக்கத்தம் புலியூர்

விருத்தாசலம் என்னும் திருமுதுகுன்றத்துக்குத் தெற்கே ஜயங்கொண்டம் பேருந்துச்சாலையில் உள்ள தலம் இராஜேந்திரப்பட்டணம் ஆகும். புலிக்கால் முனிவர் வழிபட்டதாலும், வெள்ளெருக்கைத் தலமரமாகக் கொண்டுள்ளதாலும் எருக்கத்தம்புலியூர் எனப் பெயர் பெற்றுள்ளது.

புலிக்கால் முனிவர் (வியாக்கிரபாதர்) வழிபட்ட தலங்கள் 'புலியூர்' என்ற பெயருடன் விளங்குகின்றன. அவற்றுள் இத்தலமும் ஒன்று. மற்றவை, பெரும்பற்றப் புலியூர் (சிதம்பரம்-தென்புலியூர்), திருப்பாதிரிப்புலியூர் (வடபுலியூர்), ஓமாம்புலியூர், பெரும்புலியூர் என்பன.

உருத்திரசன்மர் சிவனை வழிபட்டு ஊமைத்தன்மை நீங்கப் பெற்ற பெருமையுடைய தலம். திருநீலகண்ட யாழ்ப்பாணர் பிறந்த தலம். சம்பந்தர் பாடல் பெற்ற திருஊர்.

'விண்ணோர் பெருமானே விகிர்தா விடையூர்தி
பெண் ஆண் அலியாகும் பித்தா பிறைசூடி

எண்ணார் எருக்கத்தம் புலியூர் உறைகின்ற
அண்ணாஎன வல்லார்க்கு அடையா வினைதானே"

என இத்தலத்தின் சிறப்பைப் போற்றுவர் சம்பந்தர்.

இத்தகைய சிறப்புகளுடைய இத்தலத்திற்குப் புராணம் பாடப்பெற்றிருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது. ஆயினும் கிடைக்கவில்லை.

**திருநெல்வெண்ணெய்**

உளுந்தூர்ப்பேட்டையிலிருந்து வடமேற்கே உள்ள ஒரு சிவத்தலம் திருநெல்வெண்ணெய். இப்பொழுது 'நெய்வெணை' என்று வழங்கப்படுகிறது. சம்பந்தர் பதிகம் பெற்ற தலம். இங்கு இறைவரின் பெயர் வெண்ணெயப்பர், நெய்வெண்ணெய் நாதர் ஆகும். வெண்ணெய் உண்ணும் கண்ணனாகிய திருமால் வழிபட்டதால் இப்பெயர் பெற்றதாகத் தெரிகின்றது. "அன்றகத்தின் நல்வெண்ணெய் உண்டொளித்த நாரணன் வந்தேத்துகின்ற நெல்வெண்ணெய் மேவுசிவ நிட்டையே" எனப் பாடுவார் வள்ளலார். இங்குக் கோயிலினுள்ளே திருமால் திருமகளுடன் காட்சியளிக்கிறார்.

சனகர் சனற்குமாரர் ஆகியோர் வழிபட்ட தலம்.
இத்தலத்திற்குரிய புராணம் ஏதும் கிடைக்கவில்லை.

**திருத்துறையூர்**

விழுப்புரம்—கடலூர் இவற்றினிடையே உள்ள தலம் திருத்துறையூர். திருத்தளூர் என இப்பொழுது வழங்கப்படுகிறது. சுந்தரர் பாடல் பெற்ற தலம். இவர் தவநெறி வேண்டிப் பெற்ற தலம் இதுவே.

இத்தலத்தில் நாரதர், வசிட்டர், அகத்தியர், வீமன், சூரியன் ஆகியோர் வழிபட்டதாகக் கூறுவர். சிவஞானசித்தியார் என்னும் சாத்திர நூலை இயற்றிய சகலாகம பண்டிதர் என்னும் அருணந்தி சிவாச்சாரியர் பிறந்து வீடுபெற்ற திருவூர்.

இவ்வாறு பல சிறப்புகள் பெற்ற இத்தலத்திற்குரிய தலபுராணம் கிடைக்கவில்லை.

**திருவடுகூர் (ஆண்டார்கோயில்)**

விழுப்புரத்திலிருந்து பாண்டிச்சேரி செல்லும் வழியிலுள்ளது திருவடுகூர். இப்பொழுது புதுச்சேரி மாநில எல்லைக்குட் பட்டுள்ளது. திருவாண்டார் கோயில் என வழங்கப்பெறுகிறது.

முண்டகன் என்னும் அசுரனைக் கொன்ற பழிதீர வடுக பைரவர் இங்கு வழிபட்டதாதலின், வடுகூர் என்று அழைக்கப்பட்டது. ஆண்டவரார் கோயில் என்பது கோயிலுக்குப் பெயர் இங்குள்ள இறைவர் பெயர்கள், வடுகீசுவரர், வடுகநாதர், வடுகூர்நாதர் என்பன. இது, சம்பந்தர் பதிகம் பெற்ற தலம்.

இத்தகைய சிறப்புமிக்க தலத்திற்குரிய தலபுராணம் எதுவும் கிடைக்கவில்லை.

**திருமுண்டீச்சரம்**

பெண்ணையாற்றின் தென்கரையிலுள்ள தலம் இது. இவ்வூரைக் 'கிராமம்' என்று அழைக்கின்றனர். இறைவனின் காவலர்களாகிய 'திண்டி', 'முண்டி' என்பவர் வழிபட்ட தலம். இந்திரனும் பிரமனும் பூசித்துப் பேறுபெற்றதாகவும் கூறுவர். அப்பர் இத்தலப் பதிகம் பாடியுள்ளார்.

சொக்கலிங்க மன்னன் என்பவன் வேட்டைக்கு வந்தபோது குளத்தில் ஓர் அதிசயமான தாமரை மலரைக் கண்டான். அதனைப் பறித்து வருமாறு ஆளை ஏவினான். ஆனால் அம் மலர் அவன் கைக்கு அகப்படாமல் சுற்றி வரலாயிற்று. அது கண்ட மன்னன், அதன்மீது அம்பு எய்த, அக்குளம் முழுவதும் செந்நிறமாயிற்று. அதைக் கண்ட மன்னன் மயங்கி அருகே சென்று பார்த்தபோது அம்மலரில் இலிங்கம் இருக்கக் கண்டான். பிறகு அதை எடுத்து வைத்து ஆலயம் எழுப்பினான் என்று வரலாறு கூறுவர்.

அம்மன்னன் அம்பு எய்திய காரணத்தால் இன்றும் இலிங்கம் மீது அம்புபட்ட தழும்புள்ளது என்றும், 'முடீசுவரர்' என்ற பெயர் வந்தது என்றும் கூறுவர். இப்பெயரே கல்வெட்டில் 'மௌலி கிராமம்' என்று குறிக்கப்பட்டது. நாளடைவில் மௌலி என்பது மறைந்து வெறும் கிராமம் என்பதே இவ்வூர்ப் பெயராயிற்று என்பர்.

வீரபாண்டியன் என்னும் மன்னனுக்கு இத்தல இறைவன், திருநீற்றுப்பை (பொக்கணம்) தந்தார் எனவும் அதனால் இவ்விறைவன் 'பொக்கணம் கொடுத்த நாயனார்' எனவும் கல்வெட்டுகளில் குறிக்கப் பெறுகிறார். கோயில் ஆற்றின் கரையிலுள்ளது (ஆற்றுத்தளி) என்பதால் இறைவன் ஆற்றுத் தளிப் பெருமாள, ஆற்றுத்தளி மகாதேவர் என்றும் குறிக்கப் பெறுகிறார்.

இக்கோயில் கி. பி. 943 இல் சேரன மன்னனான வெள்ளங் குமரன் (முதற்பராந்தகன் காலத்தில்)என்பவரால் கருங்கல்லால் கட்டப்பட்டதாகக் கல்வெட்டும் தெரிவிக்கிறது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இத்தலத்தைப் பற்றிய தலபுராண நூல் எதுவும் கிடைக்கவில்லை.

**திருப்புறவார் பனங்காட்டூர்**

விழுப்புரத்தை அடுத்துள்ள முண்டியம்பாக்கம் அருகிலுள்ள தலம் பனையபுரம் ஆகும். இதுவே புறவார் பனங்காட்டூர் என்பதாகும். பனை மரத்தைத் தலமரமாகக் கொண்டுள்ள தலங்களுள் இதுவும் ஒன்று. மற்றவை, வன்பார்த்தான் பனங் காட்டூர் (தொ.நா.), திருப்பனந்தாள் (சோ.நா.), திருவோத்தூர் (தொ. நா.), திருப்பனையூர் (சோ. நா.) என்பனவாகும். இத்தகைய பிற தலங்களினின்றும் வேறுபாடறிவதற்காகவும், காடுகளால் சூழ்ந்த பகுதியாக விளங்குவதாலும், (புறவு—சோலை, காடு) புறவார் பனங்காட்டூர் என்றழைக்கப்பட்டது.

சூரியன் வழிபட்ட திருவூர் என்று கூறுவர். சிபி மாமன்னன் தான் புறாவிற்கு அடைக்கலம் கொடுத்தபோது தன் கண்ணைப் பறித்துக் கொண்டவுடன் புறாவின் எடை சரியானது. பின்னர் இறைவன் நேரே காட்சி கொடுத்தருளினார். அதனால் அவருக்குக் 'கண்பறித்தருளிய கடவுள்' என்று பெயர் வந்ததாகவும் கூறுவர். இத்தலத்திற்குச் சம்பந்தர் பதிகம் பாடியுள்ளார்.

இத்தகைய சிறப்புகள் பல கூறப்பெறினும் இத்தலம் பற்றிய தலபுராணம் எதுவும் கிடைக்கவில்லை. பனங்காட்டூர், திருப்பனந்தாள், திருவோத்தூர் ஆகிய பனைமரம் தலமரமாக உள்ள பிற தலங்களுக்கான புராணங்கள் கிடைக்கின்றன என்பது இவண் சுட்டத்தக்கதாகும்.

**மூவர் பாடல் கிடைக்காத தலத்திற்குரிய புராணங்கள்**

நடுநாட்டிலுள்ள மூவர் பாடல்பெற்ற தலங்கள் இருபத்திரண்டையும் மேற்கண்டவாறு நோக்கிய நிலையில், பதினைந்திற்கும் மேற்பட்ட தலபுராணங்கள் இருப்பது தெரிகிறது. இவ்வாறே, இந்நடுநாட்டில் மூவர் பாடல் கிடைக்காத தலங்கள் சிலவற்றிற்கும் தலபுராணங்கள் பாடப் பெற்றுள்ளதாக அறிகிறோம். இவ்வகையில் ஆதிபுரத் தலபுராணம் மற்றும் இளசைப் புராணம் என்னும் இரண்டு தலபுராணங்கள் கிடைக்கின்றன.

## ஆதிபுரத் தலபுராணம்

நடுநாட்டிலேயுள்ள அதிகாபுரி என்னும் திருவதிகைக்குக் கிழக்கில், மாணிகாத புரமென்னும் திருமாணிக்குழிக்கும் கெடில நதிக்கும் வடக்கேயுள்ளது எய்தனூர், சந்தானபுரி என வழங்கும் ஆதிபுரம் என்னும் தலம். இது கூடலூர் தாலுகா நெல்லிக்குப்பத்தையடுத்துள்ளது. இங்குள்ள இறைவர் பெயர் ஆதிபுராதீசுரர். இறைவி பத்மதளநாயகி. இங்கு வைகுண்ட நாதரும் எழுந்தருளியுள்ளார். ஆதிபுராதீசுரருக்குச் சந்தான நகராதிசுரர் என்றும், விட்டுணு வல்லபர் என்றும் பெயருண்டு.

இத்தலத்தில் வாலி, பிரமன், சூரியன், சரசுவதி, சப்தரிசிகள், தேவர்கள் பூசித்துப் பேறு பெற்றுள்ளனர். இத்தலத்தில் முறைப்படி பூசை செய்வோர் ஆயிரம் அசுவமேத யாகம் செய்த பலனை அடைவார்கள் என்பர்.

இத்தலத்திற்குரிய இப்புராணம் பண்ணுருட்டி த. க. சுப்புராய செட்டியார் அவர்களால் இயற்றப்பட்டது. இந்நூலில் 9 அத்தியாயங்களும் 385 பாடல்களுமுள்ளன. வடமொழியி லுள்ள பிரமாண்ட புராணத்தின் உத்தரபாகத்துள் சேத்திர வைபவ காண்டம் 68வது அத்தியாயத்தில் 9 அத்தியாயங்களாக வுள்ளதை மொழிபெயர்த்து இத்தமிழ்ப் புராணம் இயற்றப் பெற்றுள்ளது.

பாயிரப் பகுதியில் விநாயகர் முதலான கடவுளர்களுக்குத் துதிகள் கூறியபின், மூவருக்கும் துதிகள் கூறி, வாழ்த்து, புராண வரலாறு, அத்தியாய வகை, அவையடக்கம் கூறி முடிக்கிறார். இப்பகுதியை அடுத்து, "உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளிச் செய்த பெரியபுராணசார தற்சிறப்புப் பாயிரம்" என இரு பாடல்களும், அதன்பின்னே, "உமாபதி சிவாசாரியாரருளிச் செய்த திருத்தொண்டப் பெரியபுராணசார பாயிரம்" என சுந்தரமூர்த்தி முதலாக உள்ள அறுபத்துமூவருக்கும் அடியார் களுக்குமாகிய பாடல்கள் பாயிரமாகச் சேர்க்கப்பட்டுள்ளமை இந்நூலின் சிறப்பாகும். அத்துடன், இப்பாயிரத்தைச் சேர்த்த காரணத்தையும் இப்பதிப்பில் சுட்டியுள்ளனர்.

"குருலிங்க சங்கமங்களால் முத்திபெற்ற சமயாசாரியர் களாகிய அறுபத்து மூவர்கள் முதல், பொய்யடிமையில்லாத புலவர்கள், பக்தர்கள், தனித் தொண்டர்களாகிய எண்பத் தெண்மர்களும், சந்தானாசாரியர்களாகிய அறுவரோடுள்ள

நாற்பத்தொன்பதின்மர்களும் மற்றையவர்களும் சைவ சமய திருநெறி வழாதோங்க சீர்திருத்தியவர் ஆதலால் சுந்தரமூர்த்தி நாயனார், உமாபதி சிவாசாரியார் இவர்களால் ஆதிசைவ மரபு விளங்கியதாலும், பன்னிரு திருமுறையோடுள்ள இவர்கள் திருமுறையும் ஆதிபுர தலபுராணத்திற்கு மேற்கோளும் பாயிரமுமாயிற்று" எனச் சுட்டிக்காட்டியிருப்பது அறியத்தக்க தாகும்.

ஆதியில் மூவராலும் பாடப்பெற்ற தேவாரத் திருப்பதிகத் தொகை இலட்சத்து மூவாயிரம் என்றும், இப்பொழுது கிடைப்பன 797 பதிகங்களே என்றும் இக்குறிப்புடன் சேர்த்துக் கூறியிருப்பதும் சுட்டத்தக்கதாகும். ஆதிபுரம் என்னும் இத் தலத்திற்கு மூவர் தேவாரம் இருந்திருக்க வேண்டும் என்பதாக இப்பதிப்பாசிரியர் எண்ணியே இதைக் கூறியுள்ளார் எனலாம்.

முதலில் சேத்திர வைபவ காண்டத்தில், சிவதல அத்தியாயம் கூறப்படுகிறது. அடுத்து, திருவதிகை வீரட்டான லிங்கோற்பவம் கூறப்படுகிறது. பின்னர், தலமகிமை, தீர்த்த மகிமை, மூர்த்தி மகிமை கூறி முதற்பகுதி முடிவடைகிறது.

இரண்டாவது திரிபுராதிகள் சிவபூசாவிதி அத்தியாயம் என அமைந்துள்ளது. அடுத்து; திரிபுராதிகள் சிவபூசாவிதி ஏனாதிபதி நாயனார் புராணம், வாலி சிவபூசாவிதி, பிரமனார் சிவபூசாவிதி, சூரியபகவான் சிவபூசாவிதி, சரசுவதி சிவபூசாவிதி பத்மதள நாயகியார் திருநாமம் எனத் தொடர்ந்து கூறி இறுதியில் பிரதட்சண விதி அத்தியாயம் கூறி நூல் முடிவடைகிறது.

இந்நூல் காப்பிய மரபுக்கேற்ப அமைந்ததாகத் தெரிய வில்லை. வேறு சுவடிகளோ, அச்சு நூல்களோ கிடைப்பின் இந்நூல் பற்றி விரிவாக ஆராயலாம்.

**இறைவாச நல்லூர்ப் புராணம்**

தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவலூர் வட்டத்தி லுள்ள எலவானாசூர் என்ற ஊருக்கு இறைசை, இறைவாச நல்லூர் என்னும் பெயர்களும் கூறப் பெறுகின்றன. இங்குள்ள கோயிற் சிவபிரானுக்குப் புராணம் ஒன்று சகவருடம் 1432 (கி.பி. 1510) இல் திருமயிலைநயினார் சந்திரசேகரர் என்ற புலவராற் பாடப் பெற்றதென்பது, அவ்வூர்க் கோயில் முதல் பிரகாரம்

மேலைச்சுவரில் உள்ள கல்வெட்டொன்றால் தெரியவருகிறது.[1] இந்தப் புராணத்தைப் பாடியதற்காக இவருக்கு இவ்வூர் ஆனந்த தாண்டவன் வீதியில் வீடுகட்ட மனையும், நிலமும் தானம் செய்யப்பட்டதையும் கல்வெட்டால் அறிகிறோம்.[2] இத்தலத் திற்குரிய மூவர் பதிகம் எதுவும் கிடைக்கவில்லை.

சிதம்பர புராணம் பாடிய புராணத் திருமலைநாதரே இப் புராணத்தையும் பாடியுள்ளார் எனத் தெரிகின்றது. இவரே திருமலைநாதர், திருமலை நயினார் சந்திரசேகரர், திருமலை நாயகர் என அழைக்கப் பெற்றார் என அறிகிறோம். புராணங் கள் பலபாடியதால் 'புராண' என்னும் அடையுடனே அழைக்கப் பெற்றார் என்பர்.

இப்புராணம் இன்னும் அச்சாகவில்லை. பலரும் அறியாத இப்புராணம் காகிதப் பிரதியாக டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையத்தில் உள்ளதை திரு மு. அருணாசலம் அவர்கள் தம் நூலில் குறிப்பர்.[3] இப் பிரதியிலுள்ள இந்நூல் மூலமும் உரையுமாக உள்ளது. திருமுதுகுன்றம் வீர சைவ சுப்பராய தேசிகர் என்பவர் உரை எழுதியுள்ளார். இந்நூலில் சருக்கங் களும் 376 பாடல்களும் உள்ளன. வடமொழி பிரமாண்ட புராணத்தை மூலமாகக் கொண்டு இது இயற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பாயிரப் பகுதியில், பரமசிவம், நடராசர், அரசவனத்தரன்' ஊர்பாகங்கொண்டவர், சிகர சிகாமணிநாதர், பெரியநாயகி யம்மை, கணபதி, வேலோன், நால்வன், சண்டேசர் ஆகியோர் பெயரில் துதிகள் உள்ளன.

பெண்ணை நாட்டுச் சிறப்புரைக்குமிடத்து, புருடாமிருகத் திற்கு வனவாசத்தின் போது தருமன் வீமனுடைய பாதியுடலை வழங்கியது. திருநாவுக்கரசர் சுந்தரர் வரலாறுகள் நிகழ்ந்தது. இராமனுக்கும் சுக்கிரீவனுக்கும் நட்பு நிகழ்ந்தது. வேளாளர் விளக்கீடு (கல்யாணம்) செய்வது ஆழ்வார் மூவரும் வெண்பாத் தீபம் ஏத்தியது, பாண்டவர் வனவாசம் செய்தது, அவ்வைக்குப் பனந்துண்டம் கனி தந்தது, தெய்வீகன் மணம் புரிந்தது ஆகியன

1. சாசனத் தமிழ்க்கவி சரிதம், பக். 151, 152.
2. 1937—38, பக். 54, 109—110.
3. தமிழ் இலக்கிய வரலாறு, 16 நூ. பக். 438—448.

இந்நாட்டில் நடந்தவை என்னும் வரலாறுகளை எட்டுப் பாடல் களில் கூறுவர் ஆசிரியர். இவ்வாறே, நகரச் சிறப்பும் எட்டுப் பாடல்களில் கூறுவர். இதன் இறுதிப்பாடல் ஆசிரியர் பெயரைக் கூறுகிறது.

"அப்பதியில் அரனடியார் அனைவோரும்
விருத்தபாப் பதனால் என்றும்
ஒப்பரிய புகழிறையா புரிபுரா
ணந்தமிழால் உரைப்பா யென்ன,
பொய்ப்பணகலின் அருணகிரி புராணத்தைத்
தமிழ்நூலாப் புகன்ற நாவோன்
செப்பரும்இப் புராணத்தைத் திருமலைநா
யகன்தமிழாற் செப்பி னானால்".

இப்பாடலில், இத்தலப்பெயர் இறையாபுரி எனக் கூறப்படு கிறது. மேலும், இப்புராணத்திருமலைநாதரே திருவண்ணா மலைக்கு 'அருணகிரிப் புராணம்' என ஒரு தலபுராணம் இயற்றி யுள்ளார் என்னும் புதிய செய்தியும் கிடைக்கிறது. அப்புராணம் இன்று கிடைக்கவில்லை.

அருச்சனைச் சருக்கம், காருண்டன் உற்பவச் சருக்கம், தெய்விகன் உற்பவச் சருக்கம், காருண்டன் வதைச் சருக்கம், நீரேற்ற சருக்கம் ஆகிய ஐந்து சருக்கங்களிலும் இத்தலம் சார்ந்த வரலாறுகள் கூறப்பெறுகின்றன.

தெய்விகன் உற்பவச் சருக்கத்தில் முருகன் இத்தலத்தின் பெருமையைக் கூறுவதாக ஏழு பாடல்கள் உள்ளன.

"ஆரூரிற் பிறந்தோர்கள், அம்பலத்தைக் கண்டோர்கள்
அருள்காசிக்கண்
சீரூர இறந்தோர்கள், கேதாரம் நீராடிச்
சிறந்துள் ளோர்கள்,
பேரூரும் அருணகிரி நினைந்தோர்கள், அரசவனம்
பிரியா தின்பாய்
ஏரூர இருந்தோர்கள் கதிபெறுவ ரென்றுரைத்தான்
இகல்வேற் கந்தன்"

என்னும் இப்பாடலில் கூறப்பெறும் அரசவனம் என்னும் தலம் இந்த இறைவாச நல்லூரேயாகும்.

இவ்வாறு வேறு சில சைவத் தலபுராணங்கள் நடுநாட்டில் தோன்றி இருந்திருக்கலாம் என்றும் தோன்றுகிறது.

## வைணவத் தலபுராணங்கள்

நடுநாட்டில் முதல் ஆழ்வார்கள் மூவரும் வந்து தலங்களை வணங்கியுள்ளனர். வைணவ ஆசாரியராகிய சுவாமி தேசிகன் வாழ்ந்து வைணவ சமய எழுச்சியை உண்டாக்கியதும் இந்நடு நாடே. இங்கு ஆழ்வார்கள் மங்களாசாஸனம் செய்துள்ள தலங்கள் இரண்டு உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அவை திருக்கோவலூர், திருவகீந்திபுரம் என்பன.

## திருக்கோவலூர்ப் புராணம்

பெண்ணையாற்றின் தென்கரையிலுள்ள ஓர் ஊர் திருக்கோவலூர். திருக்கோயிலூர் என்றும் வழங்குவர். மெய்ப்பொருள் நாயனார் அரசு செய்து வீடுபெற்ற திருவூர். இராசராச சோழன் பிறந்த ஊர். இது, மேலூர் என்றும் கீழூர் என்றும் இரண்டு பாகமாக உள்ளது. மேலூரே இப்பொழுது திருக்கோவலூர் என வழங்குகின்றது. கீழூரில் சிவாலயம் உள்ளது. மேலூரில் இருப்பது திரிவிக்ரம பெருமாள் கோயில். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமங்கையாழ்வார், மணவாள மாமுனிகள் ஆகியோரால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திவ்விய தேசம் இது. வாமன திருவிக்கிரம அவதாரத் தலமாக வைணவர்கள் கொண்டாடுவர். பஞ்ச கிருஷ்ணாரண்ய சேத்திரங்களில் இதுவும் ஒன்றாகும்.

முதலாழ்வார் மூவரின் வரலாற்று நிகழ்ச்சி இடம்பெற்ற தலம் இதுவே. இம்மூவரும் ஓரிரவில் இடைகழியில் சந்தித்து, பெருமாளையும் பிராட்டியையும் நேரில் இருட்டில் நெருக்கிய படி சேவித்து மூன்று திருவந்தாதிகளையும் பாடினர் என்பது வரலாறு. 'ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம்' என்ற நிகழ்ச்சி இத்தலத்தில் நடந்ததே என்பர்.

மாவலியின் கர்வத்தை அடக்கி ஆட்கொண்ட இப் புண்ணியத்தலத்தில் வேதாந்த தேசிகர் தேஹளீசஸ்துதி இயற்றி யருளியுள்ளார். தமிழில் சௌந்தரராச உடையார் என்பவர் திருக்கோவலூர்ப் புராணம் இயற்றியுள்ளார். இதில் 24 படலங் களும் 1725 பாடல்களும் உள்ளது. இந்நூல் 1901 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது.

திருக்கோவலூர் திவ்யதேச வைபவம் என்னும் நூலை இராகவாச்சாரியார் இயற்றியளித்துள்ளார். திருக்கோவலூர் திருவிக்கிரமப் பெருமாள் தேவஸ்தானத்தல மகாத்மியம் என்னும் பெயரில் சுவடியும் உள்ளது.

**திருவகீந்திரபுரம்**

திருப்பாதிரிப்புலியூருக்கு அருகிலுள்ளது திருவகீந்திரபுரம் என்னும் வைணவத் தலமாகும். ஆதிசேடன் அமைத்த தலம் ஆனதால் திருஅஹீந்தரபுரம் என்ற பெயர் பெற்றது. திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம் செய்த திருத்தலம்.

வைணவ ஆசாரியரான சுவாமி தேசிகன் இங்கே தவம் செய்து கருடன் அருளையும் அயக்ரீவன் அருளையும் பெற்றார். இவர் தம்மைப் போலவே தன்னுடைய திருக்கரத்தாலேயே ஒரு சிலை செய்து போட்டியில் வென்ற இடம் இது. இவர் சுமார் நாற்பது ஆண்டு காலம் இந்த ஊரில் வசித்த திருமாளிகையும், அவர் திருக்கரத்தால் கட்டிய கிணறும் இன்றும் சேவிக்கப் படுகின்றன.

இத்தலத்தின் அருகிலுள்ளது திருக்கோவலூர் என்னும் வாமன திருவிக்கிரம அவதாரத்தலம். திரிவிக்ரமன், ஆயனார், கோவலன் (கோபாலன்) என்பன இங்குள்ள திருமாலின் பெயர் களாகும்.

"ஆங்குமா வலிவேள்வி யிலிரந்து
    சென்றக லிடமளந்துஆயர்
பூங்கொடிக் கினவிடை பொருதவனிடம்
    பொன்மலர் திகழ் வேங்கை
கோங்குசெண் பகக்கொம்பினில் குதிகொடு
    குரக்கினமி ரைத்தோடி
தேன்கலந்த தண்பலங்கனி நுகர்தரு
    திருவயிந் திரபுரமே"

(பெரிய திருமொழி 3-1-5)

என திருமங்கையாழ்வார் இத்தல விளக்கத்தையும் சிறப்பையும் கூறுவர்.

அரங்கராகவாசாரியர் என்பவர் திருவகீந்திரபுரத்தல மான்மியம் என்ற நூலை இயற்றியுள்ளனர். வேறு தலபுராணங் கள் எதுவும் கிடைக்கவில்லை.

நடுநாட்டிலுள்ள தலங்கள் பல மிகப் பழமையானவை என்பது இத்தலபுராணங்கள் தரும் செய்தியாகும். இந்நடு நாட்டில் சைவத் தலங்களே மிகுதி. சைவத்தல புராணங்களே மிகுதியாகக் கிடைக்கின்றன. மிக முற்பட்ட காலத்தில்

தோன்றிய திருவண்ணாமலை என்னும் திருத்தலத்துக்கு மட்டும் மூன்று தலபுராணங்கள் இயற்றப் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று இன்று கிடைக்கவில்லை. மற்றுமுள்ள இரண்டும் அறியாத சைவ மக்களே இல்லை என்னுமளவிற்கு அவை மிகவும் புகழ் பெற்றவையாகும். அருணாசல புராணம் இல்லாத நூலகமோ, சைவ இல்லங்களோ இல்லை என்பதே அண்மைக்காலம் வரை இருந்த நிலையாகும். அத்தகைய பெருஞ் சிறப்பினைப் பெற்றது இத்தலபுராணம். சுவடி நூலகங்களில் இன்று கிடைக்கக்கூடிய தலபுராணச் சுவடிகளிலும் இத்தலபுராணமே மிகுதியாக உள்ளது. இது தவிர, நடுநாட்டில் மூவர் பாடல்பெற்ற தலங் களுக்குரிய பதினைந்து தலபுராணங்கள் இப்பொழுது கிடைக் கின்றன. மற்றுமுள்ள ஏழு தலங்களுக்கும் புராணம் பாடப் பெற்றிருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது.

இந்நடுநாட்டில் தலபுராணம் பெற்றுள்ள ஆதிபுரம், இறை வாச நல்லூர் ஆகியவற்றிற்குரிய மூவர் பதிகங்கள் எதுவும் கிடைக்காதது வியப்பான செய்தி. மறைந்தொழிந்த பதிகங் களில் அவையும் இருந்திருக்கலாம். அல்லது இனியும் கிடைக்க லாம். இறைவாசநல்லூர்ப் புராணம் கல்வெட்டுச் செய்தி யொன்றால் அறியபெற்றதேயாம். இது இன்னும் அச்சாக வில்லை. இவ்வாறே நடுநாட்டிலுள்ள கல்வெட்டு ஒன்றால் அறியலாகும் கன்னிவன புராணம் இன்று கிடைக்காதது குறிப் பிடத்தக்கது. இதுவே முதன்முதலாக அறியப்படும் தமிழ்த் தல புராணம் என்பதும் இந்நாட்டின் சிறப்பாகும். இவையனைத் தும் சைவத் தலங்களுக்குரியவை என்பதும் சுட்டத்தகுவதாகும்.

# கொங்கு நாட்டுத் தலபுராணங்கள்

தமிழகத்தில் பெரும்பாலை மலையை வடக்கிலும், குளிர் தண்டலை என்னும் குளித்தலையைக் கிழக்கிலும், வைகாவூர் என்னும் பழனிமலையைத் தெற்கிலும், வெள்ளியங்கிரி மலையை மேற்கிலும் எல்லையாக உடையது கொங்குநாடு. சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடுகளுடன் கொங்கு நாட்டையும் தொண்டை நாட்டையும் சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து பிரிவுகளை உடையது என்பதைத் தண்டியலங்கார மேற்கோள் பாடலும், திருமந்திரமும் விளக்குகின்றன. இக் கொங்கு நாடு பற்றிய பல குறிப்புக்கள் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன. கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், ஓலைப் பட்டயங்களும், தனிப் பாடல்களும், இலக்கியங்களும், கொங்கு நாட்டின் வரலாற்றையும் தனிச் சிறப்பையும் எடுத்துரைப்பதைக் காணலாம்.

கொங்கு நாடெங்கும் சிவாலயங்களும் முருகன் ஆலயங்களும் பிற கடவுளர் ஆலயங்களும் நிறைந்து காணப்பெறுகின்றன. இத்தகைய திருத்தலங்கள் சிறப்பை நாயன்மார்களும், அடியார்கள் பலரும் பாடிப் பரவி பலவகை இலக்கியங்களையும் படைத்துள்ளனர். அவற்றுள், இன்று கிடைக்கும் தலபுராணங்களைப் பற்றி ஈண்டு நோக்குவோம்.

கொங்கு நாட்டில் மூவர் பாடல் பெற்ற தலங்கள் ஏழு ஆகும். அவை, திருஅவிநாசி, திருமுருகன் பூண்டி, திருநணா (பவானிமுக்கூடல்), திருக்கொடிமாடச் செங்குன்றூர் (திருச் செங்கோடு), திருவெஞ்சமாக்கூடல், திருப்பாண்டிக் கொடுமுடி, திருக்கருவூர் ஆனிலை என்பன. இவை கொங்கேழு தலங்கள்

என்றே போற்றப் பெறுகின்றன. இந்த ஏழு தலங்களுக்கும் தமிழில் தலபுராணங்கள் பாடப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க தாகும்.

இக்கொங்கு நாட்டில், திருப்பேரூர், குரக்குத்தளி, சேவூர் ஆகிய தலங்கள் வைப்புத் தலங்களாகும். இவையல்லாமல், திருத்துடிசை, பழநி, அப்பிரமேயம், திருவெள்ளூர், சேலம், தீர்த்தகிரி, கரபுரம், சிவமலை, தென்சேரிகிரி, தாராபுரம், திரிமூர்த்திமலை, அன்னியூர், கோயிற்பாளையம், காரமடை, சென்னிமலை, பூந்துறை ஆகிய தலங்களும் புகழ்பெற்று விளங்கு கின்றன. இத்தலங்கள் அனைத்துக்கும் தமிழில் தலபுராணங்கள் இயற்றப் பெற்றிருப்பதும் அறியத்தக்கது.

**அவிநாசித் தலபுராணம்**

திருப்புக்கொளியூர் அவிநாசி என்பது கொங்கு நாட்டில் தேவாரத் திருப்பதிகம் பெற்ற ஏழ்தலங்களுள் ஒன்று. திருப்புக் கொளியூர் என்பது தலப்பெயர். அவிநாசி என்பது இறைவர் பெயர். அவிநாசி—விநாசமில்லாதது எனப் பொருள்படும். அவிநாசி என்னும் இறைவர் பெயரே கோயில் பெயராயிற்று. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம் பாடி முதலைவாய்ப் பிள்ளையை அழைத்தருளிய தலம் இது.

பிரமன், அயிராவதம், தாடகை, நாககன்னி, வியாதர், சங்ககன்னன், தெய்வ அரம்பை, காகம், எக்ஞகுத்தன், தரும சேனன் ஆகியோர்—இத்தலத்தில் வழிபட்டுப் பேறு பெற்றதாகக் கூறுவர்.

இத்தலபுராணத்தை இயற்றியவர் இளையான் கவிராயர், இற்றைக்கு நானூறு ஆண்டுகட்கு முற்பட்டவர். வடமொழி யிலுள்ள இத்தல மான்மியத்தை அப்பொழுது சீகாழியிலிருந்த திருஞானசம்பந்தமூர்த்தி என்னும் சைவ முனிவர் ஒருவர் இவரிடம் கொடுத்து இதைத் தமிழிற்பாடுமாறு பணித்ததா கவும், அதன்படியே இவர் இந்தப் புக்கொளியூர்ச் சைவசிவ புராணத்தைப் பாடியதாகவும் கூறுவர்.

"நாற்றிசையு மடியர்குழாம் அருகிருப்பப்
புறத்திருந்த நாயி னேனைத்
தேற்றமுற அருள்சுரந்து திருநோக்கால்
வரவழைத்துத் தென்னற் கீந்த

நீற்றொளியை நுதலழுத்தி இத்தலமேன்
மையைத்தமிழால் நிகழ்த்து கென்று
சாற்றிமுறை யேடளித்தான் அம்முறை
அவனருளும் தலைமேற் கொண்டு.''

''வேதபா ரகரமர்ந்த பேரவைசென் றேபரவி (28)
விளம்ப வன்னோர்
பூதலரா லறிவருமப் பொருளைவிரித் தருள்வது
புந்தி தேக்கி
நாதவோ தையில்விளங்கும் வெண்கமலச் சகலகலா
ஞான வாணி
போதமே தரப்புகன்றேன் புக்கொளியூர்ச் சைவசிவ
புராண மென்ன. (29)

இந்நூலில் 13 சருக்கங்களும் 1020 செய்யுட்களும் உள்ளன. திருப்புக்கொளியூர் லிங்கேசுவரர் வரலாறுகளும் சைவ சமயக் கருத்துக்களும் நிறைந்ததொரு தல புராணமாக இது விளங்குகிறது.

கடவுள் வாழ்த்துப் பகுதியில் 30 பாடல்கள் உள்ளன. இவற்றுள் தலக்கடவுளரேயன்றி, முதலையும் அதன் வாய்ப் பிள்ளையையும், அகத்தொண்டு செய்வோரையும் துதிப்பது குறிப்பிடத்தக்கது.

புராண வரலாறு கூறியபின்னர், தலவுற்பத்தி கூறுகிறார். பின்பு பிர்மார்ச்சனை, அயிராவதம், தாடகை, நாககன்னி, வியாதன், சங்கன்னன், தெய்வரம்பை, எஞ்ஞகுத்தன், தருமசேனன் ஆகியோர் வழிபட்ட வரலாறுகள் தனித்தனியே கூறப்படுகின்றன.

இறுதியாக அமையும் சுந்தரச் சருக்கம் மிக நீண்டதாகும். 340 பாடல்களில் அமைந்த இப்பகுதி தனியே ஒரு புராணமாவதற்குரியதாகவே அமைந்துள்ளது.

''படியவர்க் கமுத மென்னப் பதிகமுத் தமிழைப் பாடி
நெடியவற் கரிதாஞ் சைவ நிலைசெய்து நிலவுண் டிங்கள்
முடியவர்க் கன்ப ராய முப்பதிற் றிரட்டி மூவர்
அடியவர்க் கடிமை சாரும் அடிகள் பொன் னடிகள்போற்றி'

என்னும் ஒரு தனிப்பாடலில் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் போற்றி வணங்கிய பின்பே இச்சருக்கம் தொடங்கப் பெறு

கின்றது. இப் பகுதியில் கூறப்பெறும் சுந்தரர் வரலாறு பெரிய புராண வரலாறுகளுடன் ஒப்பிட்டு ஆராயப் பயனுடையதாகும்.

## திருமுருகன் பூண்டித் தலபுராணம்

கொங்குநாட்டில் அவிநாசியிலிருந்து சிறு தொலைவிலுள்ள தலம் திருமுருகன்பூண்டி. முருகப் பெருமான் வழிபட்ட தலம் இது. அகத்தியர், மார்க்கண்டேயர், துர்வாசர் ஆகியோரும் இத்தலத்தில் வழிபட்டனர் என்பர். துர்வாசர் கற்பவுலகிலிருந்து மாதவிமரத்தை (குருக்கத்தியை) இங்குக் கொண்டு வந்து வைத்ததால் இத்தலம் மாதவிவனம் என்றும் பெயர் பெறும். சுந்தரர் இவ்வழியே வந்தபோது, இறைவன் தன்னுடைய பூதகணங்களை வேடர் வடிவில் ஏவிச் சேரமான் பெருமாள் சுந்தரருக்கு அளித்த செல்வங்களைப் பறிக்கச் செய்தார். பின்னர் இறைவன் அருளால் அப் பொருள்கள் சுந்தரர்க்கு மீண்டும் கிடைத்தன. இத்தகைய சிறப்புமிக்க வரலாறுகள் நிகழ்ந்த தலம் இது.

"கொடுகு வெஞ்சிலை வடுகவேடுவர் விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறை கொண்டா
றலைக்குமிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ்முருகன் பூண்டிமா நகர்"
"முல்லைத்தாது மணங்கமழ் முருகன்பூண்டி மாநகர்"
"மோறை வேடுவர் கூடிவாழ் முருகன்பூண்டி மாநகர்"
"மொட்டலர்ந்து மணங்கமழ் முருகன்பூண்டி மாநகர்"
"மோத்தை யோடு முழக்கறா முருகன் பூண்டி மாநகர்"
"முந்தி வானவர் தாந் தொழு முருகன் பூண்டி மாநகர்"

என இத்தலத்தின் சிறப்பைச் சுந்தரர் தம் பதிகத்தில் எடுத்துரைக்கக் காணலாம்.

இத்தலத்திற்கு, செட்டிபாளையம் வித்துவான் வாசுதேவ முதலியார் அவர்கள் பாடியதே திருமுருகன் பூண்டித் தலபுராணம் ஆகும். இந்நூல் 11 சருக்கங்களையும் 618 செய்யுள்களையும் கொண்டதாகும்.

## பவானி கூடற் புராணம்

திருநணா என்னும் தலம் கொங்கேழ் தலங்களுள் ஒன்று. இதுவே பவானி எனப்படும். பவானி, பவானிகூடல், பவானி முக்கூடல், வதரிகாசிரமம் ஆகிய பெயர்களும் இதனையே

குறிக்கும். பவானி ஆறு காவிரியில் கூடும் இடத்தில் இத்தலம் அமைந்துள்ளது.

இவ்வூர் ஐந்து மலைகளால் சூழப்பெற்றது. அவை பத்மகிரி நாககிரி (திருச்செங்கோடு), சங்ககிரி, மங்கலகிரி, வேதகிரி என்பன.

இத்தலத்தை நேரில் கண்டு வழிபட்டோர்க்கு ஒரு தீங்கும் நண்ணாதவாறு காக்கும் திருவூர் ஆதலால் நண்ணாவூர்—நணா—திருநணா எனப்பெற்றது.

குபேரன், விசுவாமித்திரர், பராசரமுனிவர் ஆகியோர் வழிபட்ட தலம் என்ப .

"பந்தார் விரல்மடவாள் பாகமா நாகம் பூண்டு ஏற தேறி
அந்தார் அரவணிந்த அம்மானிடம் போலும் அந்தண் சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டு பாடச்
செந்தேன் தெளிவொளிரத் தேமாங்கனி யுதிர்க்குந்
திருநணாவே"

எனப் பாடுவார் ஞானசம்பந்தர்.

இத்தகைய சிறப்புமிக்க பவானி என்னும் திருநணாவின் வரலாற்றை, செட்டிப்பாளையம் வித்துவான் வாசுதேவ முதலியார் அவர்கள் பவானி கூடற் புராணம் எனப் பாடியுள்ளார். இந்நூல் 18 சருக்கங்களையும் 901 செய்யுள்களையும் கொண்டதாகும்.

## திருச்செங்கோட்டுப் புராணம்

கொடிமாடச் செங்குன்றூர் என்னும் திருச்செங்கோடு திருமுறைத் தலங்களுள் ஒன்றாகும். அர்த்தநாரீசுவரத் தலம் என்றும் கூறுவர். சிவத்தலமாயினும் இது முருகப் பெருமானுக்கு மிகவும் விருப்பமான தலமாகும். மலைமீது கோயில் உள்ளது. மேலமாட வீதியிலிருந்து பார்த்தால் இம்மலை நாகம் போன்றிருப்பதால் நாகாசலம் அல்லது நாககிரி என்றும் பெயர் பெறும். 'நாகாசல வேலவன்' என்றே கூறுவார் அருணகிரிநாதர். மலை. சிவந்த நிறமாக இருப்பதால் செங்கோடு என்றும் பெயர் தெய்வத் திருமலை, உரசகிரி போன்ற பிற பெயர்களும் இத் தலத்திற்கு உண்டு.

விறன்மிண்ட நாயனார் பிறந்து பேறுபெற்ற இத் திருவூரினைப் புகழ்ந்து சம்பந்தரும் பதிகம் பாடியுள்ளார்.

"வெந்த வெண்ணீ றணிந்து விரிநூல் திகழ் மார்பி னல்ல
பந்தணவும் விரலாள் ஒரு பாகம் அமர்ந்தருளிக்
கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன் றூர் நின்ற
அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பவரே"

என இத்தலத்திறைவரை வழிபட்டவர் எல்லாத் துன்பங்களையும் அறுப்பர் எனப் பாடுவர் சம்பந்தர். இவர், கொங்கு நாட்டுத் தலங்களில் முதலில் இப்பதியை வணங்கிவிட்டு. பின்பு சிவ தலங்களுக்குச் சென்றுவிட்டுத் திரும்பவும் இங்கு வந்த போது, அவருடன் வந்த அடியார்களை 'நளிர் காய்ச்சல்' என்னும் நோய் பற்றியது. உடனே அவர்,

"அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லுமஃதறுவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக்கு ஊன மன்றே
கைவினை செய்தெம் பிரான் கழல்போற்று றுதுநா மடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீல கண்டம்"

என்னும் திருப்பதிகம் பாடி அந்நோயினை அடியார்களிடமிருந்து மட்டுமன்றி அவ்வூரினின்றே போக்கியருளினார் என்பர்.

"நாகாசல வேலவ நாலுகவித் தியாகா" எனக் கந்தர் அநுபூதியிலும், "சேலார் வயல்பொழில் செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரங்கண் படைத்திலனே அந்த நான்முகனே" எனக் கந்தர் அலங்காரத்திலும் அருணகிரிநாதர் இத்தல முருகனை ஏத்திப் பாடுவர்.

இத்தகைய தலத்திற்குரிய வரலாற்றை வீரகவிராச பண்டிதர் என்பவர் திருச்செங்கோட்டுப்புராணம் என்றபெயரில் இயற்றியளித்துள்ளார். சென்ற நூற்றாண்டில் வெளிவந்த இந் நூலில் 45சருக்கங்களும் 1223 செய்யுட்களும் உள்ளன. திருமுருகன் சிறப்புக்கள் பலவற்றை இத் தலபுராணத்தால் அறியலாம்.

**திருவெஞ்சமாக்கூடற் புராணம்**

வெஞ்சமன் என்னும் வேட்டுவ மன்னன் வழிபட்ட ஊர் வெஞ்சமாக்கூடல். அமராவதியின் கிளையான சிற்றாறு அமராவதியுடன் கூடுமிடத்தில் உள்ள ஊர் ஆனதாலும் வெஞ்ச மாக்கூடல் என்று இத்தலம் பெயர் பெற்றுள்ளது.

சிவபெருமான் தம்மிடம் பற்றுமிகுந்த ஒரு கிழவியிடம் தம் பிள்ளைகளை ஈடுவைத்துப் பொன் பெற்றுச் சுந்தரருக்கு

அளித்தார் என்ற செய்தியைக் கொங்கு மண்டலச் சதகச் செய்யுள் தெரிவிக்கிறது. இவ்வரலாறு பெரியபுராணத்துள் இல்லை.

இத்தலத்திற்கு வந்த சுந்தரர் பாடிய பதிகத்தில் தலச்சிறப் புக்களை உரைக்கக் காணலாம்.

கொங்கு மண்டலச் சதகப் பதிப்பிலுள்ள மேற்கோள் கொண்டு இத்தலத்திற்குரிய தலபுராணம் இருப்பதாக அறிய முடிகிறது. ஆயினும் அது அச்சானதாகத் தெரியவில்லை.

### திருப்பாண்டிக் கொடுமுடிப் புராணம்

கொங்கு நாட்டில் மூவர் பாடல்பெற்ற தலம் திருப்பாண்டிக் கொடுமுடி ஒன்றேயாகும். இப்பொழுது கொடுமுடி என்றே அழைக்கப் 'பெறும். ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் நடந்த போட்டியில் ஆதிசேடன் சுற்றிய மேருவின் ஆயிரம் சிகரங்களுள் ஒன்று, ஐந்து மணிகளாக உடைபட்டுச் சிதறியது. அவற்றுள் சிவப்புமணி திருவண்ணாமலையாகவும், மரகதம் ஈங்கோய் மலையாகவும், மாணிக்கம் திருவாட்போக்கியாகவும், நீலம் பொதிகையாகவும், வைரம் கொடுமுடியாகவும் ஆயின என்பர். மேரு மலையின் ஒரு கொடுமுடி (சிகரம்) இங்கே வீழ்ந்தமையால் இப்பெயர் வந்தது என்பது வரலாறு. பாண்டிய மன்னனின் விரல் வளர்ந்து குறை தீர்ந்த தலமாதலின் 'பாண்டிக்கொடுமுடி' (அங்கவர்த்தனபுரம்) என்றாயிற்று.

இத்தலத்தை வழிபட்டால் சிவன், திருமால், பிரமன் ஆகிய மூவருடைய அருள் கிடைக்கும் என்பதால் இதனை மும்மூர்த்தித் தலம் என்றும் கூறுவர்.

சம்பந்தரும் அப்பரும் சுந்தரரும் பாண்டிக்கொடுமுடி நாதரைப் பாடிப் போற்றியுள்ளனர், இத்தகைய சிறப்புக்களை யெல்லாம் எடுத்துக்கூறுவதே திருப்பாண்டிக் கொடுமுடிப் புராணம் ஆகும். சாமக்குளம் வேங்கடரமணதாசர் என்பவர் இதை இயற்றியுள்ளார். இந்நூலில் 12 சருக்கங்களும் 819 செய்யுட்களும் உள்ளன.

### கருவூர்ப் புராணம்

கொங்கு நாட்டிலுள்ள பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று கருவூர். கரூர் என்பதும் இதுவே. காமதேனு வழிபட்டுப் படைத்தல் தொழிலைப் புரிய வரம் பெற்றது. பின்னர்

அனைத்தையும் படைத்தது. அதனால் இத்தலத்திற்குக் ‘கருவூர்’ என்றும் இறைவர்க்குப் ‘பசுபதி’ என்றும், கோயிலுக்கு ‘ஆனிலை’ என்றும் பெயர்கள் தோன்றின.

புகழ்ச் சோழ நாயனார் வேந்தராய் உலகாண்டு திருவடிப் பேறெய்தியதும் எறிபத்த நாயனார் பேறு பெற்றதும் இத் திருவூரேயாம்.

சோழ நாட்டின் தலைநகராக இருந்த கருவூர் வரலாற்றுப் புகழ் பெற்றது. வஞ்சி, ஆனிலை முதலிய பல பெயர்கள் இதற்கு உண்டு. 1800 ஆண்டுகட்கு முன்பு இவ்வூரில் கவியரங்கேறிய 13 சங்கப் புலவர்களின் பாடல்கள் சங்க நூல்களில் காணப்படு கின்றன. ஞானிகள் பலரும், சித்தர்களும் கருர்த் தேவரும், கருவூராரும் கர்ப்பபுரிவாசரும் இக்கருவூரில் பிறந்தவர்களே.

கருவூர்ப் புராணம் பாடியவர் பெயர் தெரியவில்லை. தமது குருநாதர் பெயரைச் சத்தியஞானி என்று குறிப்பிடுகிறார் இந் நூலாசிரியர். இந்நூல் கி.பி. 1618 இல் அரங்கேற்றம் செய்யப் பெற்றதாக அறிகிறோம். இதில் 21 சருக்கங்களும் 1131 பாடல் களும் உள்ளன.

கருவூர்த் தலச் சிறப்பும், ஆனிலையப்பரை வழிபட்டுக் கதி பெற்ற மேலோர்களையும், முக்கியமாகப் புகழ்ச் சோழர், எறிபத்தர், கருவூர்த்தேவர் முதலியோர்களைப் பற்றியும் இப் புராணத்தில் விளக்கப் பெற்றுள்ளது. கருவூர்த்தேவரின் விரிவான வரலாறு இதுவரை வேறு எந்த நூலிலும் கூறப்பெற வில்லை, இந்தச் சிவயோகி, தமது சித்தி நெறியால் நிகழ்த்திய அற்புதச் செயல்களை இதில் காணலாம். இப்புராணத்தின் மூலமாக, கருவூர்ச் சித்தரின் வரலாறு நமக்குக் கிடைக்கின்றது.

ஆசிரியர் இப்புராணத்தைக் கற்பக மரமாக உருவகம் செய்கின்றார். இந்தக் கற்பக மரம் வடமொழி என்னும் விதை யிலிருந்து முளைத்து, தமிழ்க் கவிதை என்னும் கிளைகளை ஏந்தி யுள்ளது. ஞானம் என்னும் கொம்புகளைப் பெற்றுள்ளது. ஒளியைப் பூத்துள்ளது. இம்மரம் வஞ்சிவனத்தில் உள்ளது. இம்மரத்துக்கு ஆனிலை நாதனே வேலியாக உள்ளான் என்பது அற்புதமான கற்பனையாக அமைந்துள்ளது.

இந்த நூல்தரு வடசொல் வித்துழி
அங்குரித்து எனது நாவின் எய்தும்
சந்தமார் தமிழ்க்கவி தைப்பணை ஏந்தி
மெய்ஞ் ஞானச் சாகை தாங்கி

அந்த நாதாந்த ஒளி ஆனிலை நாதன்
கருணை அணிதாப் பாக
வந்துநீர் வஞ்சி வனத்து ஒளிபூத்த
புராணமென வளர்ந்தது அன்றே. (பாயிரம். 25)

முதலிலுள்ள வராககிரிச் சருக்கத்தினை யடுத்து, ஆம்பிராவதி நதிச் சிறப்பு கூறப்படுகிறது. காமதேனு வராககிரி நதி தீரத்துத் தலங்களை அங்கங்குச் சென்று வழிபட்டு தவம் புரிந்தமையால் ஆன்பொருனை எனவும் இந்நதி அழைக்கப் பெற்றது. வராககிரியில் தோன்றிய இந்நதி திருமுக்கூடலில் காவிரியுடன் கலக்கின்றது. முக்கூடல் தீர்த்தச் சிறப்பும், இத் தீர்த்தத்தில் பல புண்ணிய நாட்களில் நீராடினால் பெறும் பயனும் இச்சருக்கத்தில் கூறப் பெற்றுள்ளன.

சராசரச் சருக்கத்தில் சைவசித்தாந்த நெறியில் நின்று உலகு தோன்றிய முறை கூறப்பெற்றுள்ளது. இங்கு, காமதேனு பூசித்ததும் இறைவனுக்குப் பசுபதி நாயகன், எம்மை யாளுடையான், கருணேசன் என்னும் முப்பெயர்கள் வந்த வரலாறும் கூறப் பெறுகின்றன.

அலங்காரவதிச் சருக்கத்தில் வஞ்சுளாரணியம் என்ற கருவூரில் வஞ்சி ஆநிலை நாதனை, இறைவியும் திருமகளும் வாணியும் பிற வித்யாதர மகளிரும் வழிபட்ட நிகழ்ச்சிகள் உள்ளன. இவ்வாறே பிரமன், வியாசர், திக்குபாலகர், திருமால், முருகன், சூரியன், சந்திரன், நவக்கிரகங்கள், வசிட்டர், தாடகை, மூவேந்தர், அகத்தியர், வருணன் போன்றோர் வழிபட்ட வரலாறுகள் விரிவாகக் கூறப்படுகின்றன.

கருவூரில் உள்ள சிறப்பான ஆறு தீர்த்தங்களும் கூறிய பின்னர், நியமச் சருக்கம் கூறுமிடத்து அடியார்தம் பொதுவான வாழ்க்கை முறைகள் பற்றி விளக்குவர். தலமகிமைச் சருக்கத்தில், உலகிற் சிறந்த ஒன்பது தலங்களில் இக்கருவூரும் ஒன்று என்பர்.

"கயிலைவரை மந்தரம் மதுரை காசி காஞ்சி பிரயாகை
நயிமிசார ணியம்சேது நதிசூழ் வஞ்சுளா ரணியும்
செயிர்தீர் தரும்ஒன்பது தலனும்செய்து காணில்
சிவபெருமான்
பயில்வார் முத்தவிட்டின்பம் நுகர்வார் நுகரார்
பலயோகம்" (4)

என்னும் பாடல் ஒன்பது சிறந்த தலங்களைக் கூறும்.

"பகர்ந்த பதிஒன் பதனுள் வஞ்சிப்
பதியில் அணுகிப் பசுபதியை
உகந்து ஒன்பதுநாள் இறைஞ்சிடின் மற்று
ஒழிந்த பதிகள் எட்டினும்போய்
முகந்து கொளும்மே லாய பலன்
முழுதும் எய்தும்இது உண்மை
அகந்தை பேசினோம் அல்லேம்
ஆசான் அறைந்த படியாமால்" (5)

எனக் கருவூரின் சிறப்புரைப்பர்.

இக்கருவூருக்குப் பாஸ்கரபுரம், ஷண்மங்கல க்ஷேத்திரம் என்னும் பெயர்கள் வந்த வரலாறுகளையும் இப்பகுதியில் காணலாம். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்பும் கொண்டு நான்முகனால் கற்பந்தோறும் பூசிக்கப் பெறும் கருவூர் நகரச் சிறப்பு தனியே கூறப்படுகிறது.

சோழ மன்னராகிய புகழ்ச்சோழர் எறிபத்தரை வணங்கிய வரலாறும், அதியனைக் கொன்ற பாவத்திற்காக இங்கு வழி பட்டதுமான வரலாறும் தனித்தனியே விளக்குவர். இறுதியில் கருவூர்த் தேவர் கதிபெறு சருக்கம் அமைகின்றது. இதில், கருவூர்த் தேவர் காசி முதல் பல தலங்களுக்கும் சென்றது, திருப்புடைமருதூரில் திருவிசைப்பா இசைத்தது, தஞ்சையில் ராஜராஜ சோழன் நிறுவிய ஆலயத்தில் பெருவுடையாரைப் பிரதிட்டை செய்ய உதவியது, திருவரங்கத்தில் மங்கைக்காக மாணிக்க மாலையை எடுத்தது போன்ற பல வரலாறுகள் கூறப் பெறுகின்றன. இறுதியில் கருவூரில் அந்தணர்கள் இவரைக் கொல்ல நினைத்ததும் இவர் பசுபதிநாதருடன் இரண்டறக் கலந்ததுமாகிய வரலாறுகள் சொல்லி நூலை நிறைவு செய் துள்ளார் இந்நூலாசிரியர்.

## பேரூர்ப் புராணம்

கொங்கு நாட்டிலே உள்ள தேவார வைப்புத் தலங்களிலே ஒன்று பேரூர். இத்தலத்திற்குத் தட்சிண கைலாசம், பிப்பிலா ரணியம், மேலைச் சிதம்பரம், ஆதிபுரி, தவசித்திபுரம், பத்தி புரம், ஞானபுரம், வன்மீகபுரம், மேருபுரம், தேனுபுரம், பசுபதிபுரம், குருசேத்திரம், பிறவாநெறித்தலம் போன்ற பல தெய்வீகமான காரணப் பெயர்களும் உள்ளன.

இத்தலத்தில், உமாதேவியார், இந்திரன், சுமதி, அந்தணன், முசுகுந்தன், கரிகாலன், ஆலாலசுந்தரர், தில்லைவாழ்ந்தணர், வியாசர், விசுவாமித்திரர், இயமன், பிரமன், அங்கிரன், குலசேகரன், குசத்துவன், திரிலோகச்சோழன், நாரதர், காலவர், காமதேனு, அத்திரி, கோமுனி, அகத்தியர், ஆனந்தி, தும்புரு போன்ற பலரும் வழிபட்டதாகக் கூறுவர்.

பேரூர்த் தலபுராணத்தைத் தமிழில் இயற்றியவர் கச்சியப்ப முனிவர் ஆவார். இவரியற்றிய பிற தலபுராணங்கள் பூவாளூர்ப் புராணம், திருவானைக்காப் புராணம், தணிகைப் புராணம், காஞ்சிப் புராணம் (இரண்டாம் பகுதி) என்பன.

பேரூர்ப் புராணத்தில் 36 படலங்களும் 2220 திருவிருத்தங் களும் உள்ளன. இப்புராணம் வரலாற்றுச் செய்திகளுடன் காப்பிய மரபுகளையும் கொண்டு விளங்குகிறது. ஆசிரியர் வாக்கிலே சைவ நூற்கருத்துக்கள் மிகுதியாக இருப்பதைக் காணலாம். கந்தபுராணச் செய்திகளும், சுந்தரமூர்த்தி நாயனார் வரலாறு, முசுகுந்தன் வரலாறு போன்ற வரலாறுகள் படித்து இன்புறத்தக்கன. இதிலுள்ள துதிப்பாடல்கள் இறையன்பர் களுக்குப் பெரிதும் உதவுவன. பிறதல வரலாற்று ஆய்வுக்குத் துணைபுரியும் பலசெய்திகள் இந்நூலில் குறிக்கப் பெற்றுள்ள தைக் காணலாம்.

பாயிரப் பகுதியைத் தொடர்ந்து அவையடக்கமாக 5 பாடல்களைப் பாடுகிறார் ஆசிரியர்.

"அருவருப் புடைய துடலமென் றறிந்தும்
அரும்பய னுறுநரு முறாரும்
ஒருவருந் திறத்தி னுரிமைமற் றதன்பால்
உறுத்துவர் மதுரமென் கிளவி
மருவரி திதுவென் றறிதுமென் பாடல்
மாட்டுவை யகத்துளா ரெவரும்
பொருவருந் திறத்தி னுரிமைபூ ணுவராற்
பொறியிலே னிடத்துறு மகிழ்வால்". (4)

உடல் அருவருக்கத்தக்கதென்று உணர்ந்தும் உடலாற் பயன்கொள்வாரும், அல்லாதாரும் அதனைத் தம் விருப்பப்படி விடமாட்டாமையால் அதன்மாட்டு உரிமை பாராட்டுவர். அதுபோல இந்நூல் இனிய சொற்களால் இயற்றியதன்று என்றறிந்தும் அறிவிலியாகிய என்மாட்டு வைத்த அன்பால் உலகவர் என் பாடலிலும் உரிமை கொண்டாடுவர் என இவ்வாறு இவர் அவையடக்கமாகப் பாடியுள்ளமை குறிப்பிடத் தக்கன.

திருநாட்டுப் படலத்திலே கொங்குநாட்டுச் சிறப்பினைப் பலவாறு எடுத்துரைப்பர். மலையமான் நாடும், பாண்டிய நாடும், சோழ நாடும், கப்பமாகப் பொருள்களை நிரம்ப தினமும் வழங்குவதால், யானை முதலிய எல்லாவற்றாலும் சிறந்து விளங்குவது கொங்குநாடு என்று கூறி அந்நாட்டிலுள்ள குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நிலங்களை 75 பாடல்களில் விளக்குகிறார். இக் கொங்கு நாட்டிலுள்ள பேரூரின் சிறப்புப் பற்றித் திருநகரப் படலத்தில் 96 பாடல்களில் விளக்குவர்.

நைமிசப் படலத்தையும் புராண வரலாற்றுப் படலத்தையும் அடுத்துப் பேரூரிலே வழிபட்டோர் வரலாறுகள் தனித்தனியே கூறப்படுகின்றன. நாரதர், காலவன், காமதேனு, சுதமதி, முசுகுந்தன், இந்திரன், கரிகாற்சோழன், சுந்தரர், வியாதன், விசுவாமித்திரன், அந்தகன், அங்கிரன், கௌரி, குசத்துவசன், குலசேகரன், திரிலோக சோழன் ஆகியோர் இத்தல இறைவனை வழிபட்டுப் பேறுபெற்றதை ஒவ்வொரு படலமாக அமைத்து விரிவாக விளக்குகிறார் ஆசிரியர். பள்ளுப் படலத்தில் சுந்தரர் வரலாறு கூறுவதும், கௌரி திருமணம் மற்றும் தெய்வயானை திருமணம் ஆகியவற்றைக்கூறும் படலங்களும் சுவையான பாடல்களைக் கொண்டவை.

இத்தலத்திலுள்ள தீர்த்தங்களின் சிறப்புகள் தனியே தீர்த்தப் படலத்தில் கூறுவர். தலவிசேடப் படலத்தில் இத்தலம் பெற்றுள்ள பெயர்களின் காரணத்தை விளக்குவர். இங்குள்ள இறவாப் பனையின் (தலமரம்) சிறப்பும் எடுத்துரைப்பர். 'நினைத்தார்க்கினிக்கும் பேரூர்' (தலவிசேடப் படலம். 3) என்றும், 'பிறவா நெறியென் றுலகேத்தும் பேரூர்' (10) என்றும், 'புலவரெல்லாம் மெச்சும் மேலைச் சிதம்பரம்' (27) என்றும் இத் தலம் பலவாறு விளக்கப்பெறும்.

**பேரூர்ப் பட்டிப் புராணம் என்கிற பிறவா நெறிப்புராணம்**

பேரூர்த்தலம் பற்றிய இப்புராணம் இன்னும் அச்சியற்றப் பெறவில்லை. ஆசிரியர் பெயரும் விவரங்களும் தெரியவில்லை. 342 திருவிருத்தங்களாலான இப்புராணத்தில் பிப்பிலாவனச் சருக்கம், காமதேனுச் சருக்கம், திருநடனச் சருக்கம், பிறவா நெறிச் சருக்கம், தீர்த்த சருக்கம், இடபகோபச் சருக்கம் ஆகிய 6 சருக்கங்களுள்ளன. இது சுமார் 380 ஆண்டுகட்குமுன் சகம் 1530 இல் (கி. பி. 1608) இயற்றப்பட்டுள்ளது. இதன் ஒரு ஏட்டுப்

பிரதி மட்டும் கூள்ளதாகத் திருப்பேரூர்ப்புராணப் பதிப்பாசிரியர் திரு சி. கே. சுப்பிரமணிய முதலியாரின் குறிப்பிலிருந்து அறிகிறோம்.

### குரக்குத்தளிப் புராணம்

பெரியபாளையம் என்று அழைக்கப்பெறும் தலம் குரக்குத் தளி. இது குறும்பு நாட்டிலுள்ளது. இத்தலம் பற்றிய தல புராணம் அச்சானதாகத் தெரியவில்லை. நூலாசிரியர் பற்றியும் பிறவும் அறியக்கூடவில்லை.

### சேலூர்ப்புராணம்

கொங்கு நாட்டிலுள்ள சேலூர் என்னும் தலத்தைப் பற்றி கொடுமுடி சிவஞானதேசிகர் பாடிய புராணம். இப்புராணமும் இப்பொழுது கிடைப்பதில்லை.

### திருத்துடிசைப் புராணம்

கணேச்சுரபுரம், அகத்திய நல்லூர், கந்தபுரி, திருத்துடிசை எனப் பலவாறு அழைக்கப் பெறும் இத்தலம் மிகவும் பழமை வாய்ந்ததென்பர். விநாயகர், அகத்தியர், கந்தமாமுனி, குருவ விருடி முதலானவர்கள் பூசித்துப் பேறு பெற்ற தலம். சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு வேடனாய்க் காட்சி கொடுத்தது இந்தத் தலத்தில் என்றும், அவருக்குக் காட்டு முருங்கைக்கீரை அமுதாக அளிக்கப்பட்ட தலம் என்றும், இத் தலத்தின்கண் உள்ள குருவவிருடி தீர்த்தம் அல்லது சிவதீர்த்தம் சகலவித நோய்களையும் தீர்க்கக் கூடியதென்றும்; அத்தலத்தின் கண் எழுந்தருளியுள்ள எம்பெருமாட்டியாகிய உருப் பெருவழகி யார் (விஸ்வநாயகி அம்மன்) மிகுந்த கருணையுள்ள தெய்வமென் றும், வேண்டுவார் வேண்டுவதே ஓயாமல் அன்புடன் அளிக்கும் தேவி என்றும் கூறுவர். இத்தகைய சிறப்பு மிக்க தொரு தலத்திற் கான புராணத்தை ஏட்டுப் பிரதியினின்றும் மிகவும் அரிதின் முயன்று திரு துடிசைகிழார் அ. சிதம்பரனார் அவர்கள் 1913இல் பதிப்பித்து அளித்துள்ளார்கள். நூலில் 15 சருக்கங்களும் 516 செய்யுட்களும் உள்ளன.

இப்புராணமானது ஏட்டுப்பிரதிகளினின்றும் கையெழுத்துக் காகிதப் பிரதியாகச் செய்யப்பட்டது சுமார் 1873 இல் இருக்கலா மெனத் தெரிகிறது: இதில் இப்புராணம் பாடினார் இன்னா ரெனத் தெரியவில்லை. காலமும் தெரியவில்லை.

இப்புராணத்திலிறுதியில் புராணிகர் வாழி சொல்லு மிடத்து, 'வடிவுபெறு குலோத்துங்கள் வாழி, செங்கோல் வாழியவே' என்று கூறியிருக்கின்றார். எனவே, குலோத்துங்கச் சோழன் காலத்திலிருந்த ஒரு புலவரால் பாடப் பெற்றிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. ஆயின் அக்குலோத்துங்கன் யார் என்ற விவரமும் தெரியவில்லை.

முதல் குலோத்துங்கன் (1070—1118), இரண்டாம் குலோத்துங்கன் (1143—1153), மூன்றாம் குலோத்துங்கன் (1178—1216) ஆட்சியிலிருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதைக் கொண்டு நோக்குமிடத்து, இறுதியிலிருந்த குலோத்துங்கன் காலம் என்றாலும் இப்புராணம் சுமார் 775 ஆண்டுகட்குமுன் பாடப்பெற்றது என ஊகித்தறியலாம்.

திருத்துடிசையம்பதிக்குத் தெற்கேயுள்ள சுக்கிரன் பாளையத்திலிருந்த ஒரு புலவரிடத்திலிருந்த சில பாடல்களைக் கொண்டும், சில பட்டயங்களைக் கொண்டும் ஆராய்ந்த இப் புராணப் பதிப்பாசிரியர் கூற்றின்படி, திருத்துடிசையம்பதி யானது சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு நெருங்கிய காடு களால் சூழப்பட்டிருந்தென்றும்; அவ்வழியாகச் சுந்தரர் வரும் போது வழிதப்பிப் போய்விட்டாரென்றும்; அம்மையும் அப்பனும் வேடனும் வேடிச்சியுமாகப் போய்ச் சுந்தரரை அழைத்துவந்து விருந்தூட்டினரென்றும் அவ்விருந்தில் காட்டு முருங்கையிலைக் கறி முக்கியமாக இருந்ததென்றும்; எம்பெருமான் சுந்தரர்க்கு விருந்து மாத்திரம் செய்தாரே யொழிய பொன் அவ்விடத்தில் கொடுக்கவில்லையென்றும்; திருத்துடிசையம்பதிக் கோவிலில் திரிசந்தியாபூசை மிகுவிமரிசை யாக நடந்துவந்ததென்றும்; அதற்காக மிகுந்த மானியங்கள் விடப்பட்டிருந்தன வென்றும் அறியக் கிடக்கின்றது.

இத்துடிசையம் பதியைப் பற்றி அவிநாசிப்புராணம் சுந்தரச் சருக்கத்தில்,

"மட்டில குமவ ரவிழ்ந்தனை
  கனைறுசெழுந்து திருவாயில் சார்ந்து
விட்டகட ரொளியிலகு புக்கொளி
  யாணடி பரவி விடைபெற் றேகி

நெட்டிசையின் தமிழ்முனி பூசனையுகந்த
துடிசையில் வாழ் நிமலற்போற்றி
அட்டில் விளைப் புனமுருங் கையடகவி
நல்லமுது விருந்தளிக்க உண்டார்''

எனக் கூறக் காணலாம்.

சுந்தரமூர்த்தி நாயனாரும் தமக்குத் திருத்துடிசையம்பதியில் இறைவன் வேடவடிவாக வந்து காட்சிதந்த மகிமையைத் தமது திருவாழ்கொளிபுத்தூர் திருத்தேவாரத்தில் எடுத்துக் கூறுகின்றார்.

''திருவி னாயக னாகிய மாலுக்
கருள்கள் செய்திடும் தேவர்பி ரானை
உருவி னானை யொன்றாவறி யொண்ணா
மூர்த்தியை விசயற்கருள் செய்வான்
செருவி லேந்தியோர் கேழற்பின் சென்றுஞ்
செங்கண் வேடனா யென்னொடும் வந்தும்
மருவி னான்தனை வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத்தை மறந்தென் னினைக் கேனே''. (6)

இத் திருப்பாசுரத்தில் விசயற்கு வேடனாய் வந்தருள் செய்த தன்மையையும் தனக்குச் செங்கண் வேடனாய் வந்தருள் செய்த தன்மையையும் விவரமாகக் கூறியிருக்கின்றார் சுந்தரர். இத்தகைய திருவிளையாடல் நடந்த திருத்துடிசைத் தலத்திற்குத் தனித்தேவாரம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. தேவாரம் இருந்து பின் அது மறைந்து போயிருக்க வேண்டுமென்பது இப் பதிப்பாசிரியரின் கருத்தாகும்.

இன்னும் கொங்கு நாட்டில் உள்ள திருஅன்னியூர், திருச்சேவூர், திருநாகேஸ்வரம், தாராபுரம், திருப்பேரூர் முதலிய பல பழைய தலங்களுக்குரிய தேவாரங்கள் கிடையா. அவை யாவும் 1008 சிவாலயங்களில் சேர்ந்தவை. அவற்றிற்கெல்லா மிருந்த தேவாரங்களெல்லாம் இறந்தும் மறைந்தும் போயின வென்றே இப்பதிப்பாசிரியர் கூறுகின்றார்.[1]

**தீர்த்தகிரிப் புராணம்**

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஊற்றங்கரை வட்டத்தி லுள்ளது தீர்த்தகிரி என்னும் தலம். இத்தலத்திலுள்ள இறைவ

1, துடிசைகிழார் அ. சிதம்பரனார், திருத்துடிசைப் புராணம், தந்துரை;

னைப் பற்றியும் தீர்த்தங்களைப் பற்றியும் சைவ எல்லப்ப நாவலரால் இயற்றப்பட்டதே இந்தத் தீர்த்தகிரிப் புராண மாகும். இந்நூலில் 14 சருக்கங்களும் 445 பாடல்களும் உள்ளன.

பாயிரப் பகுதியில் பரமசிவன், உமையவள், விநாயகர், முருகர் ஆகியோருக்குத் துதிகள் கூறிய பின்னர் சமயாசாரியர் முதல் மூவரை மூன்று பாடல்களால் துதிக்கின்றார் ஆசிரியர். பின்பு அகத்தியர், சூதர், வியாசர், சண்டேசர் ஆகியோர் அனை வருக்கும் வணக்கம் சொல்வது காணத்தக்கது.

இராகவன் சரிதம் பாடிய வான்மீகி இப்புராணத்தை பரத்து வாசருக்குச் சொன்னதாக வரலாறு கூறப்படுகிறது. ஆசிரியர், அருணாசல புராணம் உரைத்தபின் இந்தத் தீர்த்தகிரிப் புராணத்தை உரைத்தார் என்பதைப் பாயிரத்தில் கூறக் காணலாம்.

"உற்ற செய்யுளா லருணைமாநகர்ச் சிறப்புரைத்தேன்
குற்ற மானவை குணத்தவர் பொறுத்துளங் கொண்டார்
இற்றை நாளுமச் செருக்கினா லிதனையு மிசைத்தேன்
கற்ற மாந்தர்க ளனைத்தையும் பொறுப்பது கடனே".
(பாயிரம், 11)

பதினான்கு சருக்கங்களுள் தண்டகவனச் சருக்கம், பருப்பதச் சருக்கம், திருநாமச் சருக்கம், சுவேதகேதுச் சருக்கம் என்ற நான்கையும் தவிர ஏனைய 10 சருக்கங்களும் தீர்த்தப்பெயர் கொண்டுள்ளன. அவை, வசிட்டதீர்த்தம், அகத்தியம், உமை, தீர்த்தம், இந்திரம், யமம், வருணம், கந்தம், அக்கினி, இராமம் என்பன. முதல் சருக்கமாகிய தண்டகவனச் சருக்கத்தின் தொடக்கத்தில் இரண்டு பாடல்கள் நூலுக்குப் பதிகம் போல அமைந்துள்ளன.

தண்டக வனத்தை வருணிக்கும்போது தமது தமிழ் இலக்கண அறிவைப் புலப்படுத்துகிறார் ஆசிரியர்.

"அங்குறிஞ்சி யகப்புறப் பாட்டினால்
சங்கமுந் தமிழுக்குத் தலைமையால்
துங்கமான செய்யுட்டளை தோய்தலால்
பொங்கு வாணி புலவரை யொத்ததே"

இராகவன் அகத்திய முனிவரிடம் இத்தீர்த்தகிரிக்கு எத்தனை திருநாமம், உருவம், சித்தி, இதிலுள்ள தீர்த்தம்

எத்தனை என வினவியபோது அவர் கூறியதாக 13 பெயர்கள் இத்தீர்த்தகிரிக்குக் குறிப்பிடக் காணலாம். பஞ்சபூதகிரி, சிவசைலம், தீர்த்தகிரி. கங்காகூடம், புனற்சடிலம், சித்தனி வாசம், நிரந்தரம், வியாதிநாசம், துரிதஹரம், தவசாரம், சோகஹரம், இராமேட்டம், சுவாமிசிங்கம் என்பன அப்பெயர் களாம்.

"கருது பஞ்ச பூதகிரி சிவனசலந்
தீர்த்தமலை கங்காகூடம்,
விரவு புனற்சடிலஞ் சித்தனிவாசஞ்
நிரந்தரமே வியாதிநாசம்
துரித ஹரந்தவ சாரஞ் சோகஹரம்
ராமேட்டஞ் சுவாமி சிங்கம்
மருவு மிந்தப்பதின் மூன்றுபெயரு
மந்தமலைக் கிமையோர் வகுத்தபேரே" (பா. 56)

இந்நூலில் சந்தப் பாடல்களே மிகுதி. துதிப்பாடல்கள் பல உள்ளன.

"உயிரினூ டொளித்திருப் பைப்புரியப் பாலில்
வெண்ணெய்போல்
தயிரி னூடு காண நின்ற தன்மை தாப தற்குநீ
வெயிலி னூடு புனல்பரந்து வெயிலினூடு புலர்தல்போல்
மயல நாத சகலமுன் னிடத்தில் வந்து மாயுமே'.

என்னும் இப்பாடல் உமாதேவியார், இராமன் முதலியோர் துதிக்குமிடத்திலமைந்ததொரு பாடலாகும். இவ்வாறே இராமன் தீர்த்தம் அருளுமாறு அருள்க தீர்த்தமே என்று ஆறு பாடல்களில் துதிப்பது சொல்லப்படுகிறது.

இத்தலத்தின் பெயர் தீர்த்தகிரி என்று இருப்பதற்குப் பொருத்தமாகத் தீர்த்தங்களின் சிறப்பையே இந்நூலில் மிகுதி யாக அமைத்திருக்கிறார் ஆசிரியர்.

**உத்தம சோழபுரம் கரபுரநாதர் புராணம்**

சேலம் மாவட்டம் வேம்படிதாளத்திற்கு அருகே உள்ளது உத்தமசோழபுரம். இத்தலம் கரபுரம் என்றும் அழைக்கப் பெறும். சிறந்த சிவத்தலமாக விளங்கும் இப்பதியில் கரன் என்பவன் வழிபட்டுப் பேறு பெற்றதால் கரபுரம் என்றே பெயர் பெற்றுள்ளது. உத்தமசோழன் ஏற்படுத்திய நகரமாதலால் உத்தமசோழபுரி என்று பெயர் பெற்றுள்ளது.

இத்தலத்தில் கரன், ஔவையார், உத்தமசோழன், கஞ்ச மலைச்சித்தர், சித்தர்கள் பலர், சிவசீலன், வசிட்டர், துர்க்கை போன்ற பலரும் வழிபட்டுப் பேறு பெற்றனர் என்பர்.

இத்தலத்திற்கு மூவர் பாடல் ஏதும் கிடைக்கவில்லை. ஆயினும் உத்தம சோழபுரம் கரபுரநாதர் புராணம் என்னும் தலபுராணம் கிடைக்கின்றது. இதன் ஆசிரியர் பற்றிய விவரம் ஏதும் தெரியவில்லை.

இத்தல புராணத்திற்குத் திரு. சு. அர்த்தநாரீச நாயகர் அவர்கள் பொழிப்புரை எழுதிச் சேர்த்து சென்ற நூற்றாண்டில் வெளியிட்டுள்ளனர். இப்பதிப்பில் உரைச்சிறப்புப் பாயிரம் தனியே 21 பாடல்களில் உள்ளது. உரை வரலாறு தனியே 8 பாடல்களில் அமைந்துள்ளது. கஞ்சமலைச் சித்தருக்கும் இதில் துதி கூறப்பட்டுள்ளது.

இந்நூலில் பாயிரம் உட்பட 12 சருக்கங்களும் 520 செய்யுட்களும் உள்ளன. பாயிரப் பகுதியில், விநாயகர், கரபுரேசர், சித்தேசர், பாலேசர், சோழேசர், பெரியநாயகி, முருகன், வினை தீர்த்த விநாயகர், வீரபத்திரர், நாமகள், நந்திதேவர், சபா நாயகர், சிவகாமவல்லி, தட்சிணாமூர்த்தி, நால்வர், மார்க்கண்டேயர், காரைக்காலம்மை, உபமன்யுபகவான், சண்டேசர், அறுபத்து மூவர் ஆகியோருக்குத் தனித்தனியே துதி கூறுகிறார் ஆசிரியர். அடுத்து, நான்கு பாடல்களில் புராண வரலாறு கூறியபின் பாயிரம் நிறைவடைகிறது. தனியே நைமிசப் படலம் மற்றும் நாட்டுப்படலம் இவை இல்லை.

நகரச் சருக்கம் 46 பாடல்களைக் கொண்டது. இதில், இத் தலத்தில் கரன் என்பவன் தவமியற்றியதும், அவன் பொருட்டு இறைவன் அவனுக்குக் காட்சி கொடுத்ததும் ஆகிய வரலாறுகள் கூறப்படுகின்றன. தன்னுடைய தவத்தால் சிவபெருமான் நேரில் வந்து காட்சியளித்தது போலவே இவ்வுலக மக்களும் பயனுற வேண்டுமென அவன் வேண்டுகிறான்.

"நிற்குணநி ரஞ்சனநி ராலம்ப நிர்விடய நிர்வி கார
சிற்குணசு தந்தரப ராபரவி ரவிகோடி தேசா வுன்னைச்
சற்குணமா கியநெஞ்சன் தரிசிக்க வெளிதிலே காட்சி தந்தாய்
நற்குணமி லாக்கொடியேன் பெற்றபே றெய்துவரோ
ஞாலத்தோரே". (12)

என்பது அவனுடைய விண்ணப்பமாகும். அவ்வாறே அருளிய இறைவனுக்கு அவன் ஆலயம் அமைத்து வழிபட்டான்.

**தலச்சிறப்பு**

கிரேதாயுகத்தில் கரபுரம் என்றும், திரேதையில் சித்தபுரி என்றும், துவாபரத்தில் பாலபுரி என்றும், கலியுகத்தில் சோழபுரி என்றும் கூறப்பெறும் இத்தலத்தின் சிறப்புக்கள் தொடர்ந்து விளக்கப்படுகின்றன.

"பூமி மகுடஞ் சிவதலங்கள் புகலிற் சுற்று மணியாக
வாம மிகுந்த சோழபுரம் வயங்க வைத்த சிகாமணியாங்
காமர் மாலை நதியாகக் கவின்செய் ¦பதியா மத்தலத்திற்
சோமன் கதிரோன் பலதேவர் முனிவோர் நிதமுந்
தொழுவாரே". (34)

பூவுலகமானது மகுடமாகவும், அதிலுள்ள சிவத்தலங்கள் யாவும் அதிலுள்ள இரத்தினங்களாகவும், அவற்றுள் சோழபுர மென்னும் இந்நகரே நடுநாயகமான மணியாகவும், திருமணி முத்தா நதியே அம்மகுடத்தில் அணிந்த மாலையாகவும் அமைந்து அழகுபெற்று விளங்குவது இப்பதி. இங்கு சூரியன், சந்திரன், தேவர்கள், முனிவர்கள் ஆகியோர் நாளும் வணங்கி மகிழ்வர் என்பர்.

வரங்களையெல்லாங் கொடுக்கும் தெய்வம் எதிரில் தோன்ற அதை வணங்காமல் அத்தெய்வத்தை நாடி வேறிடம் செல்வாரைப் போலும், இத்தலத்தை விட்டு வேறு தலம் செல்வாரைக் குறை கூறுகிறார். 'கனியிருக்கக் காய் கவர்ந்த' செயலை இதற்கு உவமையாகவும் கூறுவர்.

"வரத்தைக் கொடுக்குந் தெய்வமுன்னே
வந்து நிற்க வணங்காமற்
கரத்தைக் குவித்தப் பாற்செல்வார்
கருத்தே போன்மாங் கனியொழித்தோர்
மரத்துக் காய்க்கேங் குவர்போல
மருவுஞ் சோழ புர நீங்கித்
தரைக்கண் வேறு தலந்தேடிப்
போவாரருளைச் சாராரே". (35)

இவ்வாறு, வேறு தலத்தில் சென்று அடையக்கூடிய நற்பயன் களையெல்லாம் இத்தலத்திலேயே பெற்று இம்மையிலும் மறுமையிலும் பயன்பெறலாம். இறப்பையும் பிறப்பையும் நீக்கலாம் என உறுதிபடக் கூறுகிறார்.

"மற்றோர் தலத்திற் செய்யும்பாவ
மாய்க்கு மிந்தத் தலவாசம்
உற்றோர் பயனுக் குற்றோராம்
உறாதோர் பயனுக் கயலாரே
பெற்றோர் பெற்ற பெரும் பேறாய்
பிரமன் படைப்பும் நமன்தொழிலும்
அற்றோர் அவர்சா ரூபத்தை
அடைவார் அடைவார் அதுதிண்ணம்" (37)

என இத்தலப் பெருமையை விளக்குவர். மேலும்,

சிவனுக்கொப்பான தெய்வமில்லை; மணி முத்தாறுக்கு ஒப்பான நதியுமில்லை; கரபுரத்துக்கு ஒப்பான தலமுமில்லை; கஞ்சமலைக்கு ஒப்பான மலையுமில்லை என்று ஒருபாடலில் விளக்குவர்.

"சீத நிலவு முடிபொறுத்த சிவனுக் கொப்பாந் தெய்வமிலை
ஆதி நதியா மணிமுத்தா றதனுக் கொப்பா நதியுமிலை
ஓது கின்ற கரபுரத்துக் கொப்பா மகிமைத் தலமுமிலை
மாதி ரத்திற் புகழ்கஞ்ச வரைக்கொப் பான வரையுமிலை".
(40)

இத்தகைய தலத்தில் ஔவையார் வந்து தங்கியிருந்தபோது இத்தல மகிமையைச் சோழனுக்கு அவர் எடுத்துரைத்ததாகப் பின்வரும் பாடல் அமைகின்றது.

"குரைபுனற் பஞ்சாக் கரநதி மேற்பாற்
கோமள வல்லிதன் பாகன்
அருளினாற் சுயம்புலிங்க மாய்த் தோன்றும்
ஐவகைத் தலங்களுண் டதன்பேர்,
கருணைசேர் கிள்ளை வனங்கர புரமே
கருதுவீ ரட்டம்வீ மேசம்
பொருவிலாத் திருவேலிப்பதி யென்னப்
புகன்றிடும் புராணநூல் விதியே". (43)

சிவபெருமான் சுயம்புலிங்க மூர்த்தியாகத் தோன்றியருளும் ஐந்து தலங்கள், பஞ்சாட்சர நதியென்னும் திருமணி முத்தாற்றின் மேற்கரையிலுள்ளன. அவற்றுள் ஒரு தலம் கரபுரம், மற்ற நான்கு: சுகவனம், வீரட்டம், வீமேசம், திருவேலிப்பதி என்பன. இது புராணநூல் விதிப்படியே கூறப் பெற்றதென்பர்.

**நதிச்சிறப்பு**

அடுத்து வரும் நதிச் சருக்கத்தில் இப்பஞ்சாக்கர நதியின் வரலாறும் சிறப்பும் கூறப்பெறும். இந்நதிக்கு ஆதிநதி, போதநீர் நதி, திருமணிமுத்தநதி, வரநதி ஆகிய பெயர்கள் தோன்றிய காரணங்கள் விளக்கப்படுகின்றன. இந்நதியைப் பற்றிச் சிவ பெருமானே பெருமை கொள்கிறார். பார்வதி தேவிக்கு இதன் சிறப்பை அவர் உரைக்குமிடத்து, "பஞ்சாட்சரம் என்னும் ஐந்தெழுத்தே எமது உருவம்; எமக்கு முகங்களும் ஐந்து; ஒவ்வொரு பக்கத்திலும் கரங்களும் ஐந்து; சக்திகளும் ஐந்து; குழந்தை கணபதியும் ஐந்து கரங்களையுடையவன்; ஆபரணமோ ஐந்து தலைகளுடைய நாகம்; எனவே, இப் பஞ்சாக்கிர நதியும் எமக்குரிய ஐந்து என்னும் இலக்கத்திற் பொருந்துவதாகும்" என்று பெருமையுடன் கூறுகிறார்.

'அஞ்செ ழுத்துரு வாயினேம் அஞ்சுமா முகங்கள்
அஞ்சு கைகளோர் பக்கலாஞ் சத்திக ளைந்தாம்
அஞ்சு கைப்பிளை பெற்றனம் ஐந்தலைப் பணிபூண்
அஞ்செ னுந்தொகைக் காகும்பஞ் சாக்கர நதியே". (24)

என்னும் பாடல் எண் கணித ஈடுபாடு இறைவனுக்கும் இருந்ததைக் காட்டும்.

**மூலிகைகள்**

கஞ்சமலைச் சருக்கத்தில் சித்தர்கள் பற்றியும் சித்திதரும் மூலிகைகள் பற்றியும் பல செய்திகள் உள்ளன. கோரக்கர், கருவூர்ச்சித்தர், கொங்கணர், அலைவாய்மலைச் சித்தர், நவநாத சித்தர், அகப்பைச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், ஆதியூர்ச் சித்தர் ஆகிய சித்தர்கள் இறையருளால் மூலிகைகளைத் தேடிச் சேர்த்த விவரங்கள் கூறப்படுகின்றன. இம்மலையிலுள்ள மரங்களின் இலைகள் பூமியில் உதிர்வதில்லை. கருநெல்லிமரமும், வெள்ளைச் சாரைச் செடியும் பாதங்களில் பூசுவதால் ஆகாய கமனஞ் செய்விக்கும் மூலிகையும், உயிரைப் பிற உடலில் செலுத்தும் மருந்துகளும், பெரிதாகும் சோதி மரங்களும்; ரோமத்தருக்களும், சுணங்கத் தருக்களும், சஞ்சீவி மூலிகைகளும்; வேலாலுண்டான காயத்தை ஆற்றும் சல்லியகரணி என்னும் மூலிகையும், முறிந்த உறுப்புக்களை ஒன்று சேர்க்கும் சந்தான கரணி யென்னும் மூலிகையும், புண்களை ஆற்றும் சாவல்யகரணி என்னும் மூலிகையும், உடலை விட்டுச் சென்ற உயிரை மீட்கச் செய்யும் மிருதசஞ்சீவி என்னும் மூலிகையும் என இவ்வாறு

பற்பல சித்தகரப மூலிகைகளும் இம்மலையிலுள்ளன (பா. 9–12) என்பர். இச்செய்திகள் மருத்துவர்களுக்கு மிகவும் பயனுடையதாகும்.

இதன் காரணமாகவே இம்மலைக்குக் கஞ்சகிரி, சஞ்சீவி மலை, சித்த வெற்பு, கருமலை என்ற பெயர்கள் தோன்றின என்பர். பின்னொரு காலத்தில் அதிகமானென்னும் சேர வேந்தன் காய சித்தியடையவெண்ணி, கருங்காட்டுச்சித்தரை வழிபட்டு ஓர் கருநெல்லிக் கனியைப் பெற்று அதனைத் தனதுடன் பிறந்த ஔவை பிராட்டிக்கு அளிக்க, அவ்வம்மை அதன் சிறப்பை அம்மன்னனுக்கு எடுத்துரைத்து அதனை ஏற்க மறுத்து நீக்கி, கரபுர நகரையடைந்து மூர்த்தியைப் பூசித்துப் பேறடைந்த வரலாறுகளும் இதில் கூறப்படுகின்றன.

**சித்தர்கள்**

சித்தச் சருக்கத்தில், இக்கஞ்சமலையில் வந்து தங்கிய சித்தர் வரலாறுகள் கூறப்பெறும். கஞ்சமலைச் சித்தருடன் கோரக்கச் சித்தர் போன்றோர் நட்பு கொண்ட வரலாறும் அதிகமான் என்னும் மன்னனுக்கு கருநெல்லிக்கனி அளித்த வரலாறும் இப்பகுதியில் உள்ளன. இதில், அதிகமானுக்கு இம்மலையிலுள்ள மருந்துகளைப் பற்றிக் கஞ்சமலைச் சித்தர் கூறும் பாடல்கள் குறிப்பிடத்தக்கன.

"வனசம் போல முகமலர்ந்து மருந்து திருப்பாய்
மனர்ந்துரைப்பார்
கனக மாகச் செம்பினுள் களிம்பு நீக்கு மோர்மருந்து
மனமெமத் தூரம் நினைத்தாலுங் கணத்திலங்கே வந்திருக்கப்
புனையு முடிமன் னவகேட்டி போகச் செய்யு மோர்மருந்து"

"முதிர்ந்த யாக்கை நரைதிரையை முடுக்கு விக்கு மோர் மருந்து
பதிந்த சித்து விளையாடப் பண்ணு விக்கு மோர்மருந்து
சிதைந்த புண்ணா விறக்கின்ற சீவ னெழுப்பு மோர்மருந்து
வதிந்த நோயாற் குற்றுயிர்க்கு வாணாள் வயர்க்கு
மோர்மருந்து"

"கூடு விட்டோர் கூடதனிற்
புகுதக் கூட்டு மோர்மருந்து
நாடிப் புலியா னையையழைத்தா
னுகச் செய்யு மோர்மருந்து
வாடும் பயிர்க்கு மழைமறுத்தால்
மழைபெய் விக்கு மோர்மருந்து
தேடக் கிடையா விதைமெல்லாங்
கருங்காட் டகத்திற் சேர்ந்திருக்கும்" (30-32)

தாமிரத்தைத் தங்கமாக்கவும், மனம் நினைத்த தொலைவை உடனே அடையவும், நரைதிரையைப் போக்கவும், சித்திகளைச் செய்யவும், சாகும் உயிரைக் காக்கவும், கூடுவிட்டு மற்றொரு கூடு புகுவதற்கும், யானையும் புலியும் வாவென்றால் வரச்செய்யவும், மழையைப் பொழிவிக்கவும் வெவ்வேறு மருந்துகள் இக்கருங்காட்டில் உள்ளன. அவற்றுள் உமக்கு எந்த விதமான மருந்து வேண்டுமெனக் கேட்கின்றார் கஞ்சமலைச் சித்தர். இவற்றுள் 'வாழ்நாள் வளர்க்கும் மருந்து' என்றும், இறக்கின்ற சீவனை எழுப்பும் மருந்து' என்றும் உயிர் காக்கும் மருந்துகளைக் கூறி, இவை வேறு எங்குமே கிடைக்காதன என்றும் கூறுகின்றார். 'வாடும் பயிர்க்கு மழை யில்லையானால் மழை பெய்விக்கவும்' இச்சித்தர் மருந்து கண்டிருந்தார் என்பது வியப்பிற்குரியதாகும்.

### சிவசீல பாலனுக்கு முடிசாய்த்தது

சிவசீலனென்னும் பாலன் சிவலிங்க பூசை செய்ய எட்டாததால் அவனுக்காக கரபுரநாதர் தமது முடியை வளைத்துக் கொடுத்த வரலாறும், உத்தமச் சோழன் வரலாறும், கரபுரத்திற்கு உத்தமசோழபுரி எனப் பெயர் வந்த வரலாறும் தொடர்ந்து கூறப்படுகின்றன. இங்கு, சேர மன்னன் ஏற்படுத்தியது சேலநகரம் (சேலம்) என்றும்; பாண்டியமன்னன் ஏற்படுத்தியது வீரபாண்டி நகரம் என்றும்; உத்தமசோழன் ஏற்படுத்திய நகரம் இவ்விரண்டினிடையே அழகாக அமைந்து உத்தம சோழபுரி எனப் பெயர் பெற்றது என்றும் கூறும் பகுதிகள் குறிப்பிடத்தக்கன. இதில் கொங்குநாட்டு ஊர்கள் பல குறிப்பிடப்படுகின்றன.

### வினைதீர்த்த விநாயகர்

இவ்வாறே வேடச் சருக்கம், வதிட்டச் சருக்கம், கரடிச் சருக்கம் ஆகியவற்றில் பல வரலாறுகளைக் கூறிய பின்னர் விநாயகர் பெருமைகளைக் கூறுகிறார். வைத்தீச்சுவரன் கோயில் என்னும் புள்ளிருக்குவேளூரிலேயிருந்த வினைதீர்த்த விநாயகர் ஒருசமயம் மகிழ்ச்சியற்று இருந்தார். இதனையறிந்த முனிவர் ஒருவர் விநாயகரின் கோபத்திற்கான காரணத்தைக் கேட்டார். அப்பொழுது விநாயகர் அத்தலத்திலுள்ளவர்கள் தம் தாயையும் தந்தையையும் தம்பியாகிய முருகனையுமே கொண்டாடுகிறார்கள், தம்மை மறந்து விட்டனர் என்றார். பின்பு அவர் அத்தலம் விட்டு இக்கரபுரத்திற்கு வந்து சேர்ந்தார், அதுமுதல்

அவர் சோழ வேந்தனாலும் அத்தல மக்களாலும் போற்றப் பட்டு வருகிறார். இப்பகுதியில் அம்முனிவர் கூறும் விநாயகர் துதிப்பாடல்கள் இனிமையும் பொருள் பொதிந்ததுமான பாடல் களாக உள்ளன. காட்டாக,

'பார தத்தைப் பருப்பதந் தீட்டியே
பார தத்தை விளக்கிய பண்ணவா
பார தத்தைப் பெறுமரன் பாலகா
பார தத்தை யகற்றும் பரமனே". (12)

என்னும் பாடலில் சொல்லணி பயின்றுள்ளதைக் காணலாம்.

ஐந்தாம் வேதமென்னும் பாண்டவர் வரலாறு கூறும் இதிகாசத்தை வியாசர் சொல்ல மேருகிரியில் கொம்பாலெழுதிக் குவலயத்தில் தர்மத்தை நிலைநாட்டிய தயாபரா! தேவர்களால மைந்த இரதத்திலேறிய சிவபெருமான் பயந்த செல்வமே! மேதினித் துன்பம் நீக்கியருளும் மேலோனே! என்பது இதன் பொருளாகும். இத்தகைய நயம்மிக்க பாடல்கள் பல இந் நூலெங்கும் காணலாம்.

### மகிடனை வதைத்தல்

துர்க்கைச் சருக்கத்தில் அம்மை மகிடாசுரனை வதைத் ததும், கரபுர நகரில் கோயில் கொண்டதும், சோழ மன்னன் வேண்டியவாறு பகைவர்களை வெட்டிப் 'படை வெட்டி யம்மை' எனப் பெயர் பெற்றதும் விளக்கப்படுகின்றன.

"கரகரப் புராணக் காதை கற்பவர் செவியிற் கேட்போர்
வரைபவர் புத்த கத்தில் மனையிடை வைத்திருப்போர்
ஒருவருக் கெழுதி ஈவோர் உவகையா யுலகில் வாழ்ந்து
திரமுறக் கயிலை வெற்பிற் சிவபுரஞ் சேர்வார் திண்ணம்."

கரபுரப் புராணம் என்னும் இந்நூலைக் கற்பவர், கேட்பவர், புத்தகத்தில் எழுதுபவர், இல்லத்தில் வைத்திருப்பவர், மற்றவர் களுக்கு எழுதி அளிப்பவர் ஆகியோர் யாவரும் இவ்வுலகில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருந்து மறுமையில் வீடுபேறு அடைவர் என்று நூற்பயனையும் கூறி முடிப்பர் ஆசிரியர்.

### சென்னிமலைத் தலபுராணம்

கொங்கு நாட்டில் முதன்மையுற்று விளங்கும் மேல்கரைப் பூந்துறை நாட்டின்கண் ஈரோட்டிலிருந்து கோவை செல்லும் வழியிலுள்ளது சென்னிமலை. இம்மலை குறிஞ்சி நிலக்

கடவுளாகிய செங்கேழ் முருகன் காதலித்தமர்ந்த வான் தங்கிய வரை சூழலாகிய குன்றுதோறாடல் திருப்பதிகளில் ஒன்று. திருப்புகழ்ப் பாடல் கேட்டு அருணகிரிநாதருக்கு முருகன் படிக்காசு நல்கிய தலம் இதுவேயென்பர். இத்தலம் மலைநிலைத்திற் குரிய இயற்கை வளங்கள் பலவும் பெற்றுத் திகழ்வது.

சென்னிமலையின் தோற்றமும் சிறப்பும், அத்தலத்திலுள்ள முருகக் கடவுளின் சிறப்பும் விளக்குவது சென்னிமலைத் தல புராணம். இந்நூல் காப்புச் செய்யுள் முதலாக 207 செய்யுட்களையும், செப்பேடு கண்ட மான்மியம், சிரகிரி மான்மியம், புட்பகிரி மான்மியம், இடும்பனுக்கு வழிகாட்டிய மான்மியம், காட்சி மான்மியம், ஆலயங்கண்ட மான்மியம் என்னும் ஆறு பெரும் பிரிவுகளையுடையது. பாடல்கள் எளிய நடையினை யுடையன. இந்நூல் உவமை முதலிய அணிகளும், சைவ சித்தாந்தக் கொள்கைகளும், திருமுருகாற்றுப்படை, கந்த புராணம் முதலிய பிறநூற் கருத்துக்களும். நாடு, நகர், மலை முதலியவற்றின் வருணனைகளும், முருகக்கடவுளின் தோற்றமும் சிறந்த தோத்திரங்களுமுடையதாய்ச் சொல்நயம், பொருள்நயம் சிறந்து, சென்னிமலையின் தோற்றம் முதல் ஆலயம் எடுத்துத் தேர்ப்பணி செய்து விழாவியற்றியது ஈறாகவுள்ள பலவகையான செய்திகளையும் கற்பனையின்றி இயல்பாக விளக்குகிறது.

**நூலாசிரியர்**

கி.பி. 1216 ஆம் ஆண்டில் வாழ்ந்தவராகக் கருதப்பெறும் சரவண முனிவர் என்பவர் இத்தலபுராணத்தை இயற்றியுள்ளார். இந்நூலாசிரியர் காஞ்சிவாழ் மறையவர்களிடமிருந்து அறிந்த செய்திகளும் முருகக் கடவுள் தனக்கு அருள் செய்ததும், சிகரகிரியில் தான் நேரில் அறிந்தனவும், தான் ஆலயமியற்றியதும் முதலாகிய தன்னோடு தொடர்புடைய செய்திகளைத் தான் பாடிய இந்நூலின்கண் அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இது, சேர முனிவராகிய இளங்கோவடிகள் தாம் சாத்தனார் பாலும், குன்றக் குறவர்பால் கேட்டறிந்தனவும்,வஞ்சி நகரத்தில் தாம் நேரில் அறிந்தனவும், தேவந்திகை மேல் தெய்வம் தோன்றித் தம்மைப் பற்றிச் சொல்லிய தம்மோடு தொடர்பு டையனவுமாகிய செய்திகளமைந்த சிலப்பதிகாரம் பாடியதை ஒத்து அமைந்துள்ளது.

புண்ணியங்களில் சிவபுண்ணியம் சிறந்ததென்றும், சிவ புண்ணியங்களிலும் ஆலயப் பிரதிட்டை சிறந்ததென்றும்,

ஆலயப் பிரதிட்டையினும் தலபுராணப் பிரதிட்டை சிறந்த தென்றும் கூறுவர். சென்னிமலைத் தலபுராண ஆசிரியர் இவை யனைத்தையும் ஒருசேரப் பெற்ற சிறப்புடையவர். இத்தல புராணம் செய்ததுடன் இவர் முருகனுக்கு ஆலயங்களையும் அமைத்து வழிபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**செப்பேட்டிலிருந்து கண்டது**

சரவண முனிவர் சென்னிமலையையடுத்துள்ள திருவிருந்த புரத்தில் சிவமறையோர் குலத்தில் பிறந்து சத்திய ஞானியைக் குருவாகக் கொண்டவர். துறவியாகிய இவர் சென்னிமலையின் வரலாற்றை யறிய விரும்பித் திருவாவினன்குடியை யடைந்து சிவகிரியை வலமாகச் சுற்றி முருகக் கடவுளை வழிபட்ட பொழுது, முருகக் கடவுள் அவர் கனவில் தோன்றியருளியவாறு காஞ்சிபுரம் சென்றார். அங்குவாழ் மறையவர்களிடம் செப்பேட்டிலிருந்து சிரகிரி வரலாற்றை யறிந்து அதனை வேறு செப்பேட்டில் எழுதிக் கொண்டு சென்னிமலைக்கு வந்து, அதிலுள்ள சென்னிமலை மகிமைகள் அத்தனையும் அம்மலை யில் இருக்கக் கண்டு மகிழ்ந்தார். பின்பு சென்னிமலையில் முருகனுக்குக் கோவிலெடுப்பித்தார். முருகக் கடவுளுக்குத் திருத்தேர் செய்து விழாவியற்றி மகிழ்ந்த சரவணமுனிவர் சென்னிமலையிலிருந்து கொண்டு இப்புராணத்தைப் பாடியருளி யுள்ளார்.

வியாச முனிவர் சூதமுனிவருக்குச் சொல்லிய பதினெண் புராணங்கள் முழுவதையும் முனிவர்கள் இந்த கலியுகத்தில் அழிந்து போகாமலிருக்கும்படி செப்பேடுகளில் எழுதிக் காஞ்சிபுரத்திலுள்ள கோவிலறை ஒன்றனுள் வைத்தனர் என்றும், அவற்றுள் இந்தச் சென்னிமலைப் புராணமும் இருப்பதை யறிந்த இந்தப் புராண ஆசிரியர், காஞ்சிபுரம் சென்று அங்கிருந்த பெரியோர்கள் சொல்லக்கேட்டறிந்தார் என்றும் வருவது ஓர் அரிய செய்தியாகும்.

இவ்வாறு புராணங்கள் செப்பேடுகளில் எழுதப்பட்டிருந்தன என்பதும், அவை 1216 ஆம் ஆண்டுக்கு முன்பே காஞ்சிபுரத்தில் இருந்தன என்பதும் வேறு எங்கும் காணக்கிடைக்காத செய்தி யாகும்.

"போதமுடன் சூதமுனி வர்க்குரைத்த
மூவாறு புராண முற்றும்
மாதவரிக் கலியுகத்திற் சிதையாது
செப்பேட்டில் வரைந்து காஞ்சிச்

சேதிமத்தில் அமைந்தவற்றுட் சிரகிரிமான்
மியந்தனைச்செஞ் செவியால் மாந்தி
ஆதரவி னத்தலத்தின் மூதறிவோர்
தமியேனுக் கருளி னாரால்". (பா. 14)

என இந்நூலாசிரியரே இப்புராணம் எழுந்த வரலாற்றைக் குறிப்பிடுகின்றார்.

காஞ்சிவாழ் முனிவர்கள் சொல்லிய புராண உண்மைகளைச் சரவண முனிவர் காதிற் கேட்டு மகிழ்ச்சி கொண்டு, செப்பேட்டிலிருந்தபடியே அக்காஞ்சி மறையவர்களைக் கொண்டே மாறு பாடு இல்லாமல் வேறு செப்பேட்டில் இச்செய்திகளையெல்லாம் எழுதி வாங்கிக் கொண்டு கொங்கு நாடு வந்து சேர்ந்து இப் புராணம் எழுதத் தொடங்கினார் என்ற அகச்சான்றும் குறிப்பிடத்தக்கதாகும்.

"தகைபெறச் சொற்ற வாய்மை
சரவண முனிவன் கேளா
வகமகிழ்ந் தோங்கிச் செப்பேட்
டிருந்தவா றவரைக் கொண்டே
இகலற வேறு செப்பேட்
டிவையெலாம் எழுதி வாங்கி
மிகவிடை பெற்று மீண்டான்
வேதியர் குலத்தின் மிக்கோன்".
(க. இடும்பனுக்கு வழிகாட்டிய மான்மியம், பா. 33)

என்னும் பாடலில் ஆசிரியர் இச்செய்தியை விளக்குவர்.

இதன் பிறகு, இத்தலபுராண ஆசிரியரான சரவண முனிவருக்கு முருகன் காட்சி நல்கியதும், முனிவர் முருகனுக்கு இத்தலத்தில் ஆலயத் திருப்பணிகள் செய்ததும் ஆகிய வரலாற்றுச் செய்திகளை ஆசிரியரே நூலில் விளக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

**பூந்துறைப் புராணம்**

பழம்பெரும் கொங்கு நாடு, தென்கொங்கு, வடகொங்கு, மேல்கொங்கு, (மீகொங்கு, குடகொங்கு), கீழ் கொங்கு (பழ கொங்கு) என்ற நான்கு பெரும் பகுதிகளாகவும், 24 உள்நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்ததாகும். அவற்றுள், பூந்துறை நாடு முதல் குறுப்புநாடு வரையிலான 24 நாடுகளில் வரலாற்றுச்

சிறப்பு மிக்கதும் தொன்மையானதுமான நாடு பூந்துறை நாடு ஆகும்.

கொங்குநாட்டில் மக்கள் முதலில் 'புகுந்து உறைந்த நாடு' பூந்துறை நாடு ஆயிற்று என்பர். உமையின் தவத்தைப் போற்றி அருளவந்த சிவபெருமானின் திருமேனி பூவண்ணமாகத் தோன்றியதால் அவ்விடத்திற்குப் 'புட்பவனம்' என்றும், இறைவனுக்குப் 'புட்பவனநாதர்' என்றும் பெயராயிற்று. நாளடைவில் அப்பெயர் பூந்துறை என்ற ஊருக்கும் பெயரா யிற்று என்று பலவாறு கூறுவர்.

சங்க காலத்தில் 'புன்றுறை' என்றவேளிர் தலைவன் ஒருவன் கொங்கு நாட்டில் வாழ்ந்ததாக அகநானூறு 44ஆம் பாடல் கூறுகிறது. அவன் பெயராலேயே 'புன்றுறை' என வழங்கிப் பின்னர் பூந்துறை ஆயிற்று என்பர். பூந்துறை என்பதே கொங்கு நாட்டு வேளிர் தலைவன் பெயர். புன்றுறை என்று தவறாக ஏட்டில் எழுதப்பட்டுவிட்டது என்றும் கல்வெட்டறிஞர் கூறுவர்.[1]

பூந்துறைசை, பூந்துறையூர் எனவும் இவ்வூர் அழைக்கப் பெறும். அட்டகோணப்பட்டணம் என்று அழைக்கப்பெறும் இப்பூந்துறை என்னும் தலத்தினைச் சிறப்பித்து இத்தலத்து வாழ்ந்த காளியண்ணப் புலவர் பாடியதே இத்தலபுராணம். 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்திருந்த இவருடைய பூந்துறைப்புராணம் 228 பாடல்களைக் கொண்ட சிறியதொரு தலபுராணமாகும். இது பாயிரம், திருநாட்டுச் சருக்கம், திரு நகரச் சருக்கம், புராண வரலாற்றுச் சருக்கம், உமைதவச் சருக்கம், சலந்தராசுரச் சருக்கம், தேவர்கள் பூசைச் சருக்கம், கரிகாற்சோழச் சருக்கம், சேரமான் வரலாற்றுச் சருக்கம், குமாரச் சருக்கம் என்னும் பத்துச் சருக்கங்களைக் கொண்ட தாகும்.

**பாயிரம்**

நூல் சிறியதானாலும் பாயிரப்பகுதி நீண்டு 30 பாடல் களில் அமைந்திருக்கக் காணலாம். பொதுவாக விநாயகருக்கு வணக்கம் கூறியபின், வலம்புரி விநாயகர், காடை விநாயகர், செல்ல விநாயகர் ஆகிய மூவருக்கும் தனித்தனியே துதிகூறு

---

1. புலவர் செ. இராசு. பூந்துறைப் புராணம் பதிப்பு, முன்னுரை பக்.

கிறார் ஆசிரியர். அடுத்து, புட்பவனநாதர், பாகம்பிரியாள், தான்தோன்றி லிங்கர், விசுவேசர், விசாலாட்சி, தட்சிணா மூர்த்தி, அர்த்தநாரீசர், சபாநாயகர், தாமோதரப் பெருமாள், இலக்குமி, பிரமன், வாணி, சுப்பிரமணியர், சென்னிமலை வேலவர், வீரபத்திரர், வயிரவர், சண்டேசர், நந்திதேவர், அங்காளம்மை, காளி, துர்க்கை, மாரியம்மை, ஐயனார், அடியார் ஆகியோருக்குத் தனித்தனியே துதிகள் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றுள், தல இறைவன் இறைவிக்குத் தனியே கூறியபின், சபாநாயகர், சுப்பிரமணியர் துதி கூறினும் திருமாலுக்கும் பிரமனுக்கும் வாணி இலக்குமி ஆகியோருக்கும் துதி சொல்வது புதுமையாகும். காளி, துர்க்கை, மாரியம்மை, அங்காளம்மை, ஐயனார் போன்ற சிறு தெய்வங்களுக்கும் துதி சொல்வதும் மற்ற புராணங்களில் காண்பதரிதாகும். மேலும் அடியார் வணக்கத்தை இரண்டு பாடல்களில் கூறுகிறார் ஆசிரியர்.

"அலைநாட்டும் கருங்கடலில் கலைமிதக்கச்
செய்தோனை அகத்தில் வாழ்த்தி
விலைகாட்டி நரிபரியாய்ச் செய்தோன்தன்
செழுங்கழலும் மிகவும் போற்றி
கலைநாட்டிச் சமணர்களைக் கழுவேற்றும்
தமிழ்முனிவன் கழலும் வாழ்த்தி
மலைநாட்டில் முதலையுண்ட மகவழைத்தோன்
செஞ்சரணம் மனதுள் கொள்வாம் (27)

என்னும் இப்பாடலில் முதலில் திருநாவுக்கரசரையும் அடுத்து மாணிக்கவாசகரையும், திருஞானசம்பந்தரையும், சுந்தரரையும் கூறுவது கவனிக்கத்தக்கது. இவர்களின் பெயர்களைக் கூறாமல் இவர்தம் செயல்களாலேயே குறிப்பதும் சுட்டத் தக்கது.

"வேத வேதியர் சாத்திரர் சைவமா விரதர்
ஓதும் மாதவர் புராணிகர் வைணவர் உயர்ந்தோர்
நீதி யாளர்நன் மடாதிபர் கவிஞர்கள் நிகழ்த்தும்
பாத பங்கயம் என்தலை மேற்கொளப் பணிவாம்" (28)

என்னும் பாடலில் வேதியர், சாத்திரர், சைவர், புராணம் ஓதுபவர், வைணவர், சான்றோர், நீதியானர், மடாதிபதிகள்,

கவிஞர்கள் அனைவரையும் துதித்துப் பாடியிருப்பது அறியத் தக்கது.

### நாட்டுவளம்

அவையடக்கம் இரண்டு பாடல்களில் கூறியபின் திருநாட்டுச் சிறப்பு உரைக்கின்றார். கொங்குநாட்டு மலைச்சிறப்பும், மழை வளமும், பயிர் வளமும், ஆலயங்களும், கலைவளமும், பிறவும் இப்பகுதியில் கூறப்பெறும்.

"முப்பழச் சாறு பாய்ந்து முதிர்ந்திடும் சாலி முன்நாள்
ஒப்பிலா மாயன் போலும் ஓங்கிவான் நிமிர்ந்தே ஈன்று
தப்பிலாக் குலத்தி போலத் தலையினைக் குனிந்து கல்வி
செப்புவார் உள்ளம் போலச் சிவந்தன வயல்கள் எங்கும் (45)

என்னும் பாடல் பயிர் வளத்தைக் குறிக்கும். இதில், ஓங்கி வளர்ந்த நெற்கதிர்களுக்கு உவமையாக உலகளந்த திருமாலையும், கதிர்கள் முற்றியபின் கவிழ்ந்து நிற்கும் தன்மைக்குக் கற்புடைப் பெண்டிரையும், செம்மைக்குக் கற்றவர் உள்ளத்தையும் கூறியிருப்பது நயமானதாகும்.

அன்ன சத்திரம், ஆலயம், கோபுரம், சித்திர மண்டபம், மாடம், மாளிகை, மன்னர் மண்டபம் இவற்றுடன் பட்டி மண்டபமும் இந்நாட்டில் மிகுந்துள்ளதாகக் கூறுவர். (பா. 50)

"காடெல்லாம் சந்தனமே கடல்எல்லாம் சந்தனமே
நாடெல்லாம் தேமாவே நகர்எல்லாம் தேமாவே
கோடெல்லாம் அஞ்சுகமே குளம்எல்லாம் அஞ்சுகமே
வீடெல்லாம் திருமாதே மெய்ப்புகழ்பூந் துறைநாடே" (55)

என்னும் இப்பாடலில் சந்த இனிமையும் பொருள் நயமும் மிகுந்துள்ளதைக் காணலாம். இதில் இருபொருள் தரும் சொற்கள் வருவது குறிப்பிடத்தக்கது. சந்தனம்—சந்தன மரம், சந்து அனம்—தூது செல்லற்குரிய அன்னப் பறவை; தேமா இனிக்கும் மாம்பழத்தைத் தரும் மரம், தேம் ஆ—இனிய இசை. அஞ்சுகம்—கிளி, அம்சுகம்—அழகிய தண்ணீர் என இவ்வாறு சொல் நயம் அமைத்துப் பாடியுள்ளது சுட்டத்தக்கது. இவ்வாறு பல பாடல்கள் இந்நூலில் உள்ளன.

### மலைவளம்

கொங்கிலுள்ள இருபத்துநான்கு நாடுகளுள் உயர்ந்ததான இப்பூந்துறை நாட்டிலுள்ள பதினேழு மலைகளையும் ஒரே பாடலில் குறிப்பர்.

"சங்ககிரி மதிதகிரி அரவகிரி மகவைத்
தான்கொல்லி கிரிபெருமான் கிரிஅகத்ய கிரியும்
மங்கலகிரி வராட்சி கிரிதிண்டல் கிரியும்
வளர்கன்னி கிரிசெண்ப கக்கிரிவெண் கிரியும்
துங்கமிகும் கனககிரி நாககிரி பொதிகை
சூழ்அணிஅ ரங்ககிரி ரத்னகிரி யுடனே
புங்கவர்சூழ் சென்னிகிரி மேலோங்கி வாழும்
புண்யகிரி பதினேழ்சூழ் பூந்துறைநல் நாடே." (64)

## பார்வதி இடப்பாகம் பெற்ற தலம்

திருநகரச் சருக்கத்தை 11 பாடல்களில் அமைத்த பின்னர் புராண வரலாற்றுச் சருக்கத்தை அமைக்கிறார். பார்வதி தேவியார் பலகாலம் தவமிருந்து இறைவனின் இடப்பாகம் பெற்ற திருத்தலம் இதுவே என்று சூதமுனிவர் கூறுவதாக இப்பகுதி அமைகிறது.

உமைதவம் செய்தது பற்றிய சருக்கத்தில் 42 பாடல்கள் உள்ளன. கயிலையில் சிவபெருமானுடைய முக்கண்களை விளையாட்டாக உமையவள் மூடியதன் காரணமாக இறைவன் கூறியபடி அவள் இப்பூமியில் மூன்று இடங்களில் தவம் செய்கின் றாள், முதலில் காஞ்சிபுரத்திலும், பின்பு திருவண்ணாமலை யிலும். இறுதியாக இப் பூந்துறை நாட்டிலும் தவம் செய்து, வணங்கிய பின்னரே அவள் முக்கண்ணை மூடிய பாவம் தீர்ந்து இறைவனின் இடப்பாகம் பெற்றாள் என்பதான வரலாறுகள் இப்பகுதியில் சுவையாகக் கூறப்படுகின்றன.

அடுத்து, சலந்தராசுரனைக் கொன்றதும், தேவர்கள் பூசை புரிந்ததும் கூறுவர். கரிகாற்சோழச் சருக்கத்தில் சோழநாட்டில் நிகழ்ந்த செவ்வந்திப் புராணக் கதையைக் கூறுகிறார். சேரமான் வரலாற்றில், சுந்தரர் வரலாறும், வேளாளர் வரலாறும் விளக்கமுறுகின்றன. இங்கு வேளாளர்கள் கவுண்டர் பட்டம் வைத்துக்கொண்டு மறைந்து வாழ்ந்த வரலாற்று நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன.

## முருகன் அவதாரம்

இறுதியிலுள்ள குமாரச் சருக்கம் மிகவும் சுவையானது. கைலையில் பரமசிவன் பார்வதிக்குப் பிரணவ மந்திரத்தை உபதேசித்தபோது அதனை முருகன் வண்டு வடிவமெடுத்துக் கேட்டார். அதனால் சிவபெருமான் கோபித்து மண்ணுலகில்

பிராமண, சத்திய, வைசிய, சூத்திரர் குலத்தில் பிறக்குமாறு சாபமிட்டார்.

முதலாவதாக முருகன் சீர்காழியில் ஞானசம்பந்தராக அவதாரம் செய்து, சமணரை அழித்து எலும்பைப் பெண்ணாக்கிப் புகழுடன் வாழ்ந்தார்.

இரண்டாவதாக உக்கிரகுமார பாண்டியனாக மதுரையில் அவதாரம் செய்து, கடலை வற்றச் செய்து இந்திரனை மான பங்கம் செய்து வாழ்ந்தார்.

மூன்றாவதாகச் சுவாமிமலையில் வைசியர் குலத்தில் சுவாமிநாதன் என்னும் பெயருடன் பிறந்து, கண்ணில் கண்ட கன்னிகள், விதவைகட்குக் கரு உண்டாகச் செய்து சித்து விளையாடி வாழ்ந்தார்.

நான்காவதாகக் கொங்கு நாட்டு முத்தூரில் வேளாளர் குலத்தில் செல்லப்பனுக்கு மகவாகத் தோன்றிச் செல்வக் குமாரன் என்று பெயர் பெற்று, பூந்துறை வந்து பசுக்களைக் காத்து, சேமூரில் தங்கி அன்னம் நீக்கிப் பால் அருந்தி மக்கள் துன்பம் நீக்கி வாழ்ந்தார்.

இவ்வாறு குமரக்கடவுளின் அவதாரச் சிறப்புக்களை இப் பகுதியில் கூறக் காணலாம்.

இறுதியில் வாழி கூறியமைவதுடன் சோபனமும் பாடுகிறார். இதில், சென்னிமலை வேலவர்க்கும் வள்ளி தெய்வானைக்கும், புட்பவனநாதருக்கும், பாகம்பிரியாளுக்கும், கல்லைப் பெண்ணாகச் செய்த தாமோதரனுக்கும், நான்முகனுக்கும், பூந்துறை சேர்ந்த முப்பத்திரண்டு ஊர்களுக்கும் சோபனம் கூறிப் பாடுகிறார் ஆசிரியர்.

கொங்குநாட்டு வரலாற்றை யறியவும், கொங்கு வேளாளர் சிறப்பறியவும், முருகனின் பெருமைகளை யறியவும், தமிழகத் தலவரலாறுகளை யறியவும் இச்சிறுநூல் துணையாக அமையும் விதத்தில் காளியண்ணப்புலவர் இதை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 1917இல் தி. அ. முத்துசாமிக்கோனார் அவர்கள் இப்புராணத்தை அச்சிட்டுள்ளார். அதையும் பிற சுவடிகளையும் ஒப்புநோக்கி அண்மையில் 1990ஆம் ஆண்டில் புலவர் செ. இராசு மற்றும் டாக்டர் கா. அரங்கசாமி ஆகியோர் பதிப்பித்துள்ள இத்தலபுராணம் பூந்துறைப் புட்பவனநாதர்

கோயில் குடமுழுக்கு மண்டலாபிடேக நிறைவு நாளில் (16-8-1990) வெளியிடப்பட்டுள்ளது.

**கௌசைப் புராணம்**

தமிழ்த் தலபுராணங்களுள் மிகக்குறைந்த பாடல்களாலான புராணங்களில் குறிப்பிடத்தக்கது இது, கௌசை என்னும் தலம் கௌசிக முனிவர் யாகம் செய்தமையால் பெயர் பெற்றது. இப்பொழுது இத்தலம் சாமக்குளம் கோயிற் பாளையம் என வழங்கப் பெறுகிறது. சிரவணபுரம் கௌமார மடாலயம் கந்தசாமி சுவாமிகள் இத்தலம் பற்றி இயற்றியுள்ள இத்தல புராணத்தில் மொத்தம் 193 பாடல்களே உள்ளன.

முதலில் பாயிரப் பகுதியில் கற்பக விநாயகர், காரகாலேசர், கருணாகரவல்லி, நடராஜர், சண்முகக் கடவுள், தட்சிணா மூர்த்தி, கரிவரதராசர், சரசுவதி, கௌசைகாளி, சற்குரு இவர்களின் பேரில் துதியும், அவையடக்கமும் கூறியபின்னர் நாட்டுப் படலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய வருணனைகள் கூறப் பெறுகின்றன. அடுத்துவரும் நகரப்படலத்தில் புடைநகர், இடைநகர், உண்ணகர், திருக்கோயில்கள் ஆகியன விளக்கப் பெறு கின்றன. பின்பு இயமதருமன் வழிபடுபடலம், கௌசிகமுனிவர் யாகப்படலம், கரிகாற்சோழன் திருப்பணிப் படலம் முதலியன கூறியதும் நூற்பயனும் வாழ்த்தும் சொல்லி நூல் நிறைவேறி யுள்ளது.

"திருவளம் பொலி கோயிற்பா ளையமெய்க் கௌசிகப்பேர்
வருவளம் பொலி தலபுரா ணத்தினை வழுத்தப்
பெருவளம் பொலி கற்பக விநாயகர் பிரச
மருவளம் பொலி தாள்மலர் மணமுடி வைப்பாம்"

என்னும் விநாயகர் காப்பில் இத்தலத்திற்குரிய கோயிற் பாளையம், கௌசை என்ற பெயர்களைச் சுட்டுவர்.

**கொங்குநாட்டுத் தலங்கள் சிறப்பு**

"முழுதுணர் புலவ னான முருகவே ளமரர் வேண்டப்
பழுதுறு மசுரர்ச்செற்ற பவநிலைத் திரங்கி யன்பால்
மழுவணி கரத்தெம் பெம்மான் மலரடி யருச்சித் தேத்துஞ்
செழுமைகாண் முருகன் பூண்டி திகழ்வது கொங்கு நாடு"
(நாட்டுப் படலம், 2)

என இவ்வாறு கொங்கு நாட்டுச் சிறப்புரைக்குமிடத்து அங்குள்ள திருமுருகன் பூண்டி, திருச்செங்கோடு, திருப்புக்

கொளியூர், பேரூர் முதலான புகழ்பெற்ற தலங்களின் சிறப்பை யெல்லாம் எடுத்துரைப்பர்.

"அரனுமை பள்ளன் பள்ளி ஆகிநெல் வித்தி ஆரூர்ப்
புரவலர் காண நட்டம் புரிந்துதில் லையினும் போற்றும்
வரமளித் துறிப்பி றப்பின் மாண்பினை புளிகொண் டோங்கும்
உரமிகும் பேரூர் தன்கண் உறத்திகழ் கொங்கு நாடு" (6)

என்பதில், சிவபெருமானும் உமையும் பள்ளன் பள்ளியாக வந்து ஆரூரருக்குக் காட்சி கொடுத்த பேரூர்ப் புராண வரலாறுகள் கூறப்படுகின்றன. இத்தகைய சிறப்புமிக்க இந்நாட்டை,

"பருவர லுற்று மற்றைப் பதியினின் றடைந்தார்க் கெல்லாம்
திருவரு ளுதவும் பெட்பாற் சிவனுதல் விழிக்கு லஞ்சால்
பொருவரு சேர னாட்சி பொருந்தலாற் கருணைச் சீலக்
குருபர விகர்ப்ப தம்மா; கோதில்சீர்க் கொங்கு நாடு" (9)

என மிகவும் பக்தியோடு போற்றுவர் ஆசிரியர்.

நகரப் படலத்தில் இத்தலத்தில் உள்ள கோயில்களில் சிறப்புக் களைக் கூறுகிறார். பின்னர், இத்தலத்தின்கண் இயமதருமனாற் பிரதிட்டை புரிந்து பூசிக்கப் பெற்ற காலகண்டேசுவரர் கோயில் தோன்றிய வரலாறுகள் கூறப்படுகின்றன. கரிகாற்சோழன் செய்த திருப்பணி வரலாறுகள் இறுதியில் அமைந்துள்ளன. இப் படலத்தின் இறுதியில்,

"பொருப்பணி மாடக் கௌசைப் புரக்கால காலே சற்காந்
திருப்பணி யியற்றுந் தொண்டிற் சிறந்தவிக் கரிகாலன்போல்
விருப்பணி யன்பி னாலே விளக்குமெய்ச் செல்வர் கேழன்
மருப்பணி யிறைவ னின்ப வாழ்வினுக்குரியர் மெய்யே".(39)

எனக் கோயில் திருப்பணி செய்வோர் பெறும் பயனைத் தனியே கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

### பழநித்தல புராணம்

கொங்கு நாட்டில் மிகவும் புகழ்பெற்ற முருகன் தலமாகிய பழநியின் பெருமையைக் கூறும் நூல் பழநித் தலபுராணமாகும். பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த பாலசுப்பிரமணிய கவிராயர் என்பார் இதை இயற்றியுள்ளார். மொத்தம் 23 சருக்கங்களும் 987 பாடல்களும் கொண்ட இத்தலபுராணம் முருகன் அவதாரச் சிறப்பும் பெருமைகளும் கூறும் நூல்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

### அப்பிரமேயத் தலபுராணம்

அப்பிரமேயம் என்னும் தலம் தாராபுரம் வட்டத்தில் அமராவதிக் கரையிலுள்ளது. இத்தலபுராணத்தை இயற்றியவர் இளையான் கவிராயர் ஆவார். இந்நூலில் 10 சருக்கங்களும் 490 செய்யுட்களும் உள்ளன. அப்பிரமேயத் தலத்தீசரைப் புகழ்ந்து பாடும் இந்நூல் சொற்சுவை மிகுந்ததாகும்.

### திருவெள்ளூர்ப் புராணம்

கொங்கு நாட்டிலுள்ள சிறப்புமிக்க தலங்களுள் ஒன்று திருவெள்ளூர். அட்டாவதானம் சொக்கலிங்கப் புலவர் இயற்றியுள்ள இத்தலபுராணத்தில் 13 சருக்கங்களும் 653 பாடல்களும் உள்ளன.

### பாவநாசப் புராணம்

சேலம் என்னும் ஊரே பாவநாசம் ஆகும். இத்தலம் பற்றிய புராணத்தை அட்டாவதானம் சொக்கலிங்கப்புலவர் அவர்களே 12 சருக்கங்களும் 672 பாடல்களும் கொண்டு அமைத்துள்ளார். இதில் பாவநாசத்திலுள்ள மூர்த்தி, தீர்த்தம், தலச்சிறப்புகள் விளக்கப் பெறுகின்றன.

### சிவமலைத் தலபுராணம்

கொங்கு நாட்டிலுள்ள சிறப்பான மலையிடங்களில் ஒன்று சிவமலை. இத்தலச் சிறப்பும் இறைவன் சிறப்பும் குறித்து அம்பலவாணக் கவிராயர் என்பவர் இயற்றியதே சிவமலைத் தலபுராணம் ஆகும். 14 சருக்கங்களும் 497 செய்யுட்களும் கொண்ட இப்புராணம் இனியசந்தப் பாடல்கள் நிறைந்ததாகும்.

### தென்சேரிகிரிப் புராணம்

இந்நாட்டிலுள்ள குறிப்பிடத்தக்க மலையிடங்களில் ஒன்றாகிய தென்சேரிகிரியைப் பற்றி அம்மையப்பர் என்பவர் இயற்றியதே இத்தலபுராணம். இதில் 12 சருக்கங்களும் 225 பாடல்களும் உள்ளன.

### தாராபுரத் தலபுராணம்

கொங்கு நாட்டில் புகழ்பெற்ற தலங்களுள் ஒன்று தாராபுரம். வேலாயுத பண்டிதர் என்பவர் இவ்வூர்த் தல புராணத்தைப் பாடியுள்ளார். இதில் 243 பாடல்களே உள்ளன.

### திரிமூர்த்திமலைப் புராணம்

சிவன், திருமால், பிரமன் ஆகிய மூவருக்கும் உகந்த தலமாக விளங்குவது திரிமூர்த்தி மலை. இத்தல வரலாறுகளை விளக்குவது இப்புராணமாகும். வேலாயுத பண்டிதர் என்பவரே இந்நூலையும் இயற்றியுள்ளார். இதில் 18 படலங்களும் 963 பாடல்களும் உள்ளன.

### அன்னியூர்த் தலபுராணம்

கொங்கு நாட்டிலுள்ள திருஅன்னியூர் என்னும் திருத்தலத்தின் சிறப்பைக் குறித்து, சிரவணம்பட்டியில் வாழ்ந்திருந்த கந்தசுவாமி சுவாமிகள் இயற்றியதே இப்புராணம். இதில் 10 படலங்களும் 339 செய்யுட்களும் அமைந்துள்ளன. திருஅன்னியூரின் சிறப்பும் இத்தலச் சிறப்பும், இந்நூலில் சுவைபட விளங்கக் காணலாம்.

### காரமடைப் புராணம்

கொங்கு நாட்டிலுள்ள வைணவத் தலங்களுள் குறிப்பிடத்தக்கது காரமடை. இத்தலம் பற்றி இராமாநுச நாவலர் என்பவர் ஒருபுராணம் பாடியிருப்பதாக அறிகிறோம்.

இவ்வாறு கொங்கு நாட்டில் பாடல் பெற்ற தலங்கள் ஏழுக்கும் தலபுராணங்கள் இயற்றப்பட்டிருப்பதும், இவை தவிர வேறு 19 கொங்குநாட்டுத் தலங்களுக்கும் தலபுராணங்கள் கிடைப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சிவன், முருகன், திருமால் எனப் பல தெய்வக் கோயில்களின் வரலாறுகளை அறிவிக்கும் இத்தல புராணங்கள் இந்நாட்டு வரலாறுகளை அறியவும் இலக்கிய வரலாறுகளை அறியவும் மிகவும் துணையாக உள்ளன என்பது அறியத்தக்கது.

### கொங்கு வரலாற்று ஆய்வில் தலபுராணங்கள்

கொங்கு நாட்டின் வரலாற்றினை ஆராய்வதற்குக் கல்வெட்டுச் சான்றுகளும் பிறவும் இருக்க நூல்வழிச் சான்றுகளைத் தேடியும், தேவாரம் மற்றும் தலபுராணங்கள் வழியே சான்றுகளைப் பெற்றும் இந்நாட்டின் வரலாற்றுச் சிறப்பைக் கடந்த எழுபது ஆண்டுகளுக்கு முன்பே திரு சி.எம். இராமச்சந்திர செட்டியார் அவர்கள் கோவைத் தமிழ்ச் சங்கம் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார்கள். தலபுராணங்கள் எந்த அளவுக்கு வரலாற்று ஆய்வுக்குப் பயன்படும் என்பதை இவற்றால் காணலாம்.

சைவசமயாசாரியரில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார் சைவ சமயம் பரவச் செய்வதற்காகத் தலங்கள் தோறும் சென்று தேவாரங்கள் அருளிச் செய்தபோது மூன்று முறை கொங்கு நாட்டிற்கு எழுந்தருளியுள்ளார். அப்போதைய இவருடைய பயணங்கள் மிகவும் முக்கியமாகக் கருதப்படுகின்றன. இப் பயணங்களின்போது நடந்த நிகழ்ச்சிகளைச் சேக்கிழார் பெருமான் தம் பெரியபுராணத்தில் எடுத்துரைக்கின்றார். பின்பு, பேரூர்ப் புராணம், அவிநாசிப் புராணம், திருத்துடிசைப் புராணம், திருமுருகன் பூண்டிப் புராணம் போன்ற தலபுராணங் களிலும் இவ்வரலாறுகள் காணப் பெறுகின்றன. இவற்றை ஒப்புநோக்கும்போது பல உண்மைகள் நமக்குப் புலனாகக் கூடும்.

**காலம்**

கொங்கு நாட்டிற்குச் சுந்தரமூர்த்தி நாயனார் எழுந்தருளிய காலம் கி. பி. 850 என்பர். அப்பொழுது மதுரையில் வரகுண பாண்டியனும் கொடுங்கோளூரில் (சேரர் நகர்) சேரமான் பெருமாள் நாயனாரும் சேதி நாட்டில் நரசிங்க முனையரும் அரசாண்டிருந்தனர். அக்காலத்தில் தென்னிந்தியா மிகுந்த குழப்பம் அடைந்திருந்தது. காஞ்சியில் பல்லவர்கள் வலிமை குன்றியிருந்தனர். சோழர் ஆதிக்கம் தொடங்கவில்லை. பாண்டியன் சிறிது வெற்றியடைந்தும் பின்னடைந்திருந்தான். ஆயின், வடக்கே சாளுக்கிய அமோகவூர்ஷன் சிறப்போடு அரசாண்டான். அவன் ஆதரவால் கொங்கு நாட்டை ஆண்டு வந்த தலைக்கோட்டுக் காங்கேயர்கள் (கங்க பல்லவர்) அமைதியுடன் வாழ்ந்து வந்தனர். ஆகையால் சுந்தர மூர்த்தியாரின் கொங்குநாட்டுப் பயணங்கள் அமைதியாகவே நடந்தன என்பர்.

**பெரிய புராணம்**

திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதரித்தது முதல், அவர் மணக்கோலம் கொண்டதும், சிவபெருமான் அவரைத் தடுத்தாட் கொண்டதும், 'பித்தா பிறை சூடி' எனத் தொடங்கும் திருப் பதிகம் முதலாகப் பல தேவாரப் பதிகங்களைத் தலங்கள்தோறும் சென்று பாடியதும், திருவாரூரில் பரவை நாச்சியாரை மணந்ததும், பின்னர் திருத்தொண்டத்தொகை பாடியதும், சோழநாட்டுத் தலங்களையும் திருப்பைஞ்ஞீலி முதலான

தலங்களையும் வணங்கித் திருஈய்கோய் மலையைப் பணிந்து பின் அங்கிருந்து காவிரி தாண்டிக் கொங்குநாடு சென்றதையும் சேக்கிழார் தம் பெரியபுராணத்துள் முறையாக விளக்கு கின்றார்.

**முதல் தலப் பயணம்**

கொங்கு நாட்டில் காவேரிக்குத் தென்கரையில் கறையூர் எனப் பெயர் கொண்ட திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் தலத்திற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலில் செல்கிறார்.

அங்குள்ள சிவனை வணங்கி,

"மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனினிப் பிறவாத
தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே"

என்று தொடங்குவதாகிய பஞ்சாட்சரத் திருப்பதிகத்தை அருளினார். பின் அந்நகரை விட்டு நீங்கிப்,

"பாங்கு நற்பதிகள்
பலவுமுன் பணிந்து பரமர்தாள் போற்றிப்
போந்துதன் பணிமலர் படப்பை
குலவுமீ கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர்
குறுகினார் முறுகுமா தரவால்"
(பெரியபுராணம், ஏயர்கோன்—88)

என்றபடி கொங்கு நாட்டுத் திருப்பதிகள் பலவும் சென்று திருப்பேரூரை அடைந்தார்.

பேரூரிலே, சிவபெருமான் தில்லைக் கனகசபையில் நடனம் செய்யும் அற்புதத் திருக்கோலத்தைத் தமக்குக் காட்டக் கண்டு பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கினவராய் உள்ளம் மகிழ்ந்து தேவாரம் பாடியருளினார். பின் சிதம்பரம் செல்ல எண்ணினா ராய்ப் புறப்பட்டுச் சுரங்களும் நதிகளும் பல பல கடந்து திருப்பதி கள் பல பணிந்து பாடல்கள் பாடி வெஞ்சமாக்கூடலைச் சேர்ந்தார். அங்கே ஈசனைப் பணிந்து,

"எறிக்கும் கதிர் வேய்உதிர் முத்தம் ஓடு ஏலம் இலவங்கம்
தக்கோலம் இஞ்சி
செறிக்கும் புனலுள் பெய்து கொண்டு மண்டித்திளைத்
சிற்றாறதன் கீழ்கரைமேல் (தெற்று
முறிக்கும் தழைமா முடப்புன்னை ஞாழல் குருக்கத்தி
கண்மேற் குயில் கூவலறா
வெறிக்கும் கலைமா வெஞ்சமாங்கூடல் விகிர்தா
அடியேனையும் வேண்டுதியே"

எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடியருளியபின், சோழநாடு புகுந்து பல பதிகளை வணங்கிச் சிதம்பரம் அடைந்தார். அங்கே சபாநாயகரை வணங்கித் தாம் பேரூரிலே கண்ட நிலையைச் சிறப்பித்து 'மடித்தாடும் அடிமைக்கண்' என்னும் பதிகத்தில்,

"பாருரு மரவல்கு லுமைநங் கையவள்
பங்கன் பைங்க ணேற்றன்
ஊரூரன் தருமனார் தமர்செக்கி
விடும்போது தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் தம்பிரா னாரூரன்
மீகொங் கிலணி காஞ்சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்
பலத்தே பெற்றா மன்றே"

எனப் பாடியருளினார்.

## இரண்டாவது தலப்பயணம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமிழ்நாட்டுத் திருப்பதிகள் பல சென்று பதிகங்கள் பாடித் திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்து அவ்விடம் சிலகாலம் இருந்து வாழ்ந்தார். பின்னர் திருவாரூரை நினைந்து புறப்பட்டார். அவ்வாறு செல்கையில் தாம் சபதம் தவறிய காரணத்தால் கண்கள் இழந்தார். பின், காஞ்சியில் ஒரு கண்ணும், திருவாரூரில் மற்றொரு கண்ணும் அருளப் பெற்றார். அங்கு, பரவை நாச்சியாருடைய ஊடலை ஈசனருளால் நீக்கப்பெற்று, பல தலங்கள் வணங்கிவிட்டுப் பின்பும் அங்கேயே தங்கியிருந்தார். அப்பொழுது சேரநாட்டுக் கொடுங்கோளூரில் அரசு புரிந்து கொண்டிருந்த சேரமான் பெருமாள் நாயனார் நட்பினைப் பெற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவருடன் சேரநாடு நோக்கித் தம்முடைய தலப் பயணத்தை மேற்கொண்டார். இடையில், திருவையாற்றில்

காவிரி நீர் பிரிந்து தமக்கு வழிவிடும்படி சுந்தரமூர்த்திகள் திருப்பாடல் பாட அவ்வண்ணமேயாகக் காவிரி கடந்து மேற்றிசை நோக்கிக் கொங்குநாடு புகுந்தனர். அந்நாட்டைக் கடந்து தலைநாடு செல்லவே அங்குள்ளார் அவர்களை எதிர் கொண்டு வணங்கி வேண்டவும் கொடுங்கோளூர் சென்றனர், அங்கே சிலகாலம் தங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் பின், சேரமான் பெருமாள் நாயனார் பெரும்பொருள் தரப்பெற்று அவரிடம் விடைபெற்று மலைநாடு விட்டுப் புறப்பட்டார். வழியில் கற்சுரங்களையும் கான்யாறுகளையும் நெடுங்கானல் களையும் கடந்து கொங்கு நாட்டுத் திருமுருகன்பூண்டியின் வழியே சென்றார். அப்பொழுது, சிவபெருமான் ஏவலினால் கணங்கள் வேடுவராய் வந்து சுந்தரரின் பொருள்களைப் பறித்துச் சென்றார்கள். சுவாமிகள் உடனே திருமுருகன் பூண்டி யடைந்து அங்கிருந்த இறைவனை வணங்கி,

> "கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
> விரவ லாமை சொல்லித்
> திடுகு மொட்டெனக் குத்திக் கூறை
> கொண்டா றலைக்கு மிடம்
> முடுகு நாறிய வடுகர் வாழ்முருகன்
> பூண்டிமா நகர்வாய்
> இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடு
> மெத்துக் கிருந்தீ ரெம்பிரா னீரே"

எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடியருள கடவுள் திருவருளால் அவ்வேடுவராகிய கணங்கள் பறித்த பொருள்களையெல்லாம் அக்கோயில் வாயிலிற் கொண்டு வந்து குவித்தனர். பிறகு சுந்தரமூர்த்தி சுவாமிகள் அந்நகர் நீங்கிக் கொங்குநாடு கடந்து திருவாரூர் சென்று வாழ்ந்திருந்தார்.

**மூன்றாவது தலப்பயணம்**

பின்னர்ச் சில காலங் கழித்து, சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள் நாயனாரைக் காண ஆவல் கொண்டு, மலைநாடு செல்லக் கருதிப் புறப்பட்டார். வழியில் திருப்புக் கொளியூர் அவிநாசித் தலத்தைச் சேர்ந்தார். அங்கேதான் முதலையுண்ட பாலனை உயிர்ப்பித்த அற்புத நிகழ்ச்சி நடை பெற்றது. எம்பெருமான் மீது 'எற்றான் மறக்கேன்' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார். "திருப்புக்கொளியூர் அவிநாசியில் வாழ்கின்ற சிவபெருமானே, முதலையுண்ட

பிள்ளையைத் தரும்படி காலனுக்குக் கட்டளையிடுவாயாக" என்ற நான்காம் திருப்பாட்டு முடிவதற்குள் மடுவிலிருந்த முதலை முன் விழுங்கின பிள்ளையை அன்றுவரை சென்ற வயதும் நிரம்பக் கரையில் உமிழ்ந்தது. பிள்ளையைத் திரும்பப் பெற்ற பெற்றோர் சுவாமிகளின் பாட்டுக்கு இறைவன் இணங்கியதைக் கண்டு போற்றித் துதித்தனர். பின்னர் மலைநாடு சென்ற சுவாமிகள், சேரமான் பெருமாள் நாயனாருடன் சில காலம் இருந்து அதன்பின்னர் இருவரும் திருக்கைலாசம் அடைந்தனர்.

மேற்கூறிய இம்மூன்று வரலாறுகளையும் உள்ளடக்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாற்றைச் சேக்கிழார் சுவாமிகள் (கி. பி. 1053–1117 காலத்தில்) தம்முடைய பெரியபுராணத்தில் குறிப்பிட்டுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இருந்த காலத்திற்குச் சுமார் முந்நூறு ஆண்டுக் காலத்துள்ளே இவ்வரலாறு எழுதப் பெற்றுள்ளது. சேக்கிழார் பெருமான் அநபாய சோழ மன்னரின் அமைச்சராக அமைந்திருந்த காரணத்தினால் அவர் அரிதின் முயன்று தொகுத்த இறையடியார்கள் வரலாறுகள் பெரும்பாலும் உண்மை வரலாறுகளே என்பதால் மேற்கூறிய சுந்தரரின் கொங்குநாட்டுத் தலப் பயணக் குறிப்புக்களும் உண்மை வரலாறுகளே என்பர்.

**தலபுராணங்கள் கூறும் வரலாறு**

மேற்கூறிய வரலாறுகளை அப்படியே விளக்கும் கொங்கு நாட்டுத் தலபுராணங்கள் சிலவற்றில் சில புதிய செய்திகளும் குறிப்பிடக் காணலாம். எடுத்துக்காட்டாக, பேரூர்ப் புராணத்தில் ஆசிரியர் கச்சியப்ப முனிவர் சில புதிய செய்திகளைக் கூறுகின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் கொங்கு நாட்டுத் தலங்களைத் தரிசித்து வரும்பொழுது, பேரூரை அடைந்த காலத்தில் சிவபெருமான் ஒரு திருவிளையாட்டைப் புரிந்ததாக இவர் கூறுவர். உயர்ந்ததும் இழிந்ததும் ஆனவெல்லாம் தானே என்று மறை ஓதுவதை நிரூபிக்க முன்னர் வேதியனாய் வந்தது போலத் தானே இப்போது ஒரு பள்ளனாகவும் தேவியார் ஒரு பள்ளியாகவும் உருவெடுத்து. உழுதல் நடுதல் முதலிய மழவர் தொழிலைப் புரிந்தனர் (பேரூர். பள்ளுப்படலம்—24). சுந்தர மூர்த்தி சுவாமிகள் அவ்வயலிடத்தே அவர்களைச் சந்தித்து வணங்கினர். இறைவனும் வெள்ளியம்பலத்தில் திருநடனம் புரிந்தனர்.

அதனைத் தரிசித்து மகிழ்ந்த நாயனார் பொன்தரும்படி கேட்கவும், தொடாமல் சிவபிரான், "உனது பாட்டிற்கு நமது ஆட்டே பரிசு, இது முத்தித் தலம், ஆகையால் மற்றைய தலங்களில் பொன் தருவோம்; சேரமானுக்கு உனது செய்தி தெரிவித்தோம்; அவன் தருவான்" என அருளிச் செய்தனர்.

பேரூர்ப் புராணத்தில் கூறப்பெறும் இச் செய்திகள் பெரிய புராணத்தில் கூறப் பெறவில்லை. ஆயின், பேரூரில் இத் திருவிளையாடல் ஓர் திருவிழாவாகத் தொன்றுதொட்டு நடந்து வருவதுடன் கோயிலிலும் ஒரு தனியாலயம் இதற்கென அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பேரூர்ப் புராண ஆசிரியர் கச்சியப்ப முனிவர் அவர்கள் இவற்றை நேரில் கண்டே இதைத் தம்முடைய தலபுராணத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இத்தலத்தின் பெருமையை விளக்க வந்த அடியார்கள் இத்தகைய திருவிளையாடலைப் பிற்காலத்தில் சேர்த்து வழிபட்டிருக்க வேண்டுமெனவும் தோன்றுகின்றது. பெரிய புராணத்தில் கூறப்பெறாத இச் செய்தியை இத் தல புராணத்தின் வாயிலாக நாம் அறிவது குறிப்பிடத்தக்கதாகும்.

## அவிநாசிப் புராணம்

இளையான் கவிராயரால் பாடப்பெற்ற இப்புராணத்தில் சுந்தரர் சருக்கத்தில் சுந்தரமூர்த்திகள் சரித்திரத்தில் சில புதிய செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. பெரியபுராணம் மற்றும் தேவாரத் திருமுறைகளேயல்லாமல் சில கர்ணபரம்பரைக் கதைகளைத் தழுவியும் இப்புராணம் சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிடக் காணலாம். காட்டாக,

பேரூர்ப் புராணத்தில சொல்லிய பள்ளவேடத் திருவிளையாடல் சுந்தரரின் கடைசி கொங்குப் பயணத்தின் போது நடந்ததாக இப்புராணம் கூறுகிறது.

சேரமான் பெருமாள் ஆம்பிரநதிக் கரையிலுள்ள வஞ்சியடைந்ததும் சுந்தர மூர்த்திகள் திருமுருகன் பூண்டியினருகில் பறி கொடுத்த பொன்னைக் கோயில் கணக்கன் மூலமாய்ப் பெற்றதும் புதிதாக இந்நூல் கூறுகிறது.

சுந்தரமூர்த்திகள் அவிநாசிக்குப் போகும் வழியில் மூருகேசம் (திருமுருகன் பூண்டி) அடைந்ததும் அங்கு பசி உண்டாகச்

சிவபிரான் வேதியனாய் வந்து பொதிசோறு கொடுக்கத் தான் உண்டு கல்லில் கை துடைத்ததும் முதலான கதைகள் இப் புராணத்தில் கூறப் பெறுகின்றன. பழைய புராணங்களில் இவை இல்லை. ஆனால் அருணகிரிநாத சுவாமிகள் தமது திருப் புகழில் (திருப். 925-அவிநாசி) இச்செய்தியைக் குறிப்பிடுவதி லிருந்து இவ்வரலாறுகள் சுமார் அறுநூறு ஆண்டுகளாக செவி வழியாக வழங்கி வந்து அதையே இப்புராண ஆசிரியர் குறிப் பிட்டுள்ளார் எனலாம்.

சுந்தர மூர்த்திகள் அவிநாசியை விட்டு துடிசை சென்று முருங்கைக் கீரை உண்டு பின் பேரூர் போனதும் இதில் புதிதாக உள்ள செய்திகள். இவை முந்திய புராணங்களில் இல்லை.

எனவே இப்புராண ஆசிரியர் காலத்து வழங்கிய செவிவழி வரலாறுகளின் அடிப்படையில் இவ்வரலாறுகளை எடுத்துக் கூறினார் என்பது பொருந்தும்.

**திருத்துடிசைப் புராணம்**

இந்நூலில் சுந்தரமூர்த்தி பூசனைச் சருக்கத்தில் சுந்தரரின் வரலாறுகள் கூறப் பெறுகின்றன. இந்நூல் வரலாறும் அவிநாசிப் புராண வரலாறும் வெகுவாய் ஒத்துள்ளன. ஆயினும், இந் நூலின்படி கொடுமுடி, திருமுருகன் பூண்டி, அவிநாசி, துடிசை, பேரூர் இவைகட்கெல்லாம் ஒரே தடவையில் சுந்தரமூர்த்திகள் பயணம் சென்றதாகக் காண்கிறோம். அவிநாசியில் முதலை வாய்ப் பிள்ளை யுமிழ்ந்த அற்புதமும், திருமுருகன் பூண்டியில் பறிகொடுத்த செய்தியும் இப்புராண ஆசிரியர் குறிப்பிடவில்லை. எனவே இப்புராணம் தேவாரம், பெரிய புராணம் வரலாறுகளை மட்டுமே கொள்ளாது கர்ணபரம்பரைச் செய்திகளையே அடிப் படையாகக் கொண்டு எழுதியதாகத் தோன்றுகின்றது.

**திருமுருகன் பூண்டித் தலபுராணம்**

இந்நூலில் வேடுபறிச் சருக்கத்தில் கொங்கு நாட்டில் சுந்தர மூர்த்திகள் நிகழ்த்திய செய்திகள் கூறப்பெறுகின்றன. இவை பெரியபுராணம், பேரூர்ப் புராணம் இவற்றை ஒட்டியே அமைந் திருந்தாலும் சில புதிய நிகழ்ச்சிகளையும் குறிப்பிடக் காணலாம். காட்டாக,

சுந்தரர் கொங்குநாடு கடந்து திருவஞ்சைக்களம் சேர்ந்து சேரமான் பெருமானிடம் பேரருள் பெற்று முல்லைவனமாகிய மாதவி வனத்தின் வழிவந்தார். சிவபிரான் தன் கணங்களை ஏவி

வேடர் உருவெடுத்துப் போய் அப்பொருளைக் கவரச் சொல்ல, அவர்களும் அவ்வாணையை மேற்கொண்டு அப்பொருளைக் கவர்ந்து சென்றனர். அப்போது அதை நோக்கிய பிள்ளையார் கூகூ என்று கதறவே, அதனால் களவை வெளிப்படுத்தியதற்காக ஈசன் பிள்ளையாரை அடித்து, அந்தப் பசிய மரத்தடியிலேயே இரக்கத்துடன் இருக்கும்படி சபித்துச் சென்றார். அதனாலே அன்று முதல் அப்பிள்ளையாருக்கு கூப்பிடு பிள்ளையார் என்று நாமம் உண்டாயிற்று என்பதாக இப்புராணம் கூறுகிறது. இச் செய்தி மற்ற நூல்களில் இல்லாததொரு புதிய செய்தி.

இப்போதும் திருமுருகன் பூண்டியில் கூப்பிடு பிள்ளையாரும் அவருக்கு ஓர் ஆலயமும் இருப்பதைக் காணலாம். இப்புராணம் கூறும் முல்லைவனம் இப்போது இல்லை. ஆயின், 'முல்லைத்தாது மணங்கமழ் முருகன் பூண்டி மாநகர் வாய்' (திருமுருகன்—தேவாரம். 2) என்னும் சுந்தரர் தேவாரத்தின்படி முற்காலத்தில் இருந்திருக்கலாமெனத் தெரிகின்றது. அதைக் கருத்தில் கொண்டே இப்புராண ஆசிரியர் இதைக் குறித்திருத்தல் வேண்டும்.

**பிற தல புராணங்கள்**

சுந்தர மூர்த்திகள் சென்று தேவாரம் பாடிய பிற கொங்குத் தலங்கள் திருப்பாண்டிக் கொடுமுடியும் வெஞ்சமாங் கூடலூருமே. இவற்றில் கொடுமுடித் தல புராணம் வேங்கட ரமணதாசரால் பாடப் பெற்றுள்ளது. ஆயின், அதில் சுந்தரர் வரலாறு ஏதும் குறிப்பிடப் பெறவில்லை. இத்தலத்திற்கு ஒரு பழைய புராணம் இருந்ததாகவும் அது அழிந்து போகவும் சில ஏடுகள் மாத்திரம் தமக்குக் கிடைத்ததாகவும் அவற்றைத் தம் புராணத்தில் சேர்த்துக் கொண்டதாகவும் இந்த ஆசிரியர் தம் முகவுரையில் கூறுகின்றார். எனவே அழிந்துபோன பழைய புராணத்தில் இவ்வரலாறுகள் இருந்திருக்கலாம்.

வெஞ்சமாங்கூடலூரின் தலபுராணம் இப்பொழுது கிடைக்கவில்லை. கொங்கேழு தலங்களில் மற்றுமுள்ள பவானி (திருநணா), திருச்செங்கோடு (கொடி மாடச் செங்குன்றூர்) இவற்றிற்குச் சுந்தர மூர்த்திகள் பயணம் செய்யாததினால் அவர் தேவாரமும் கிடைக்கவில்லை. அவற்றின் தலபுராணங்களிலும் அவர் வரலாறுகள் கூறப்பெறவில்லை.

இவ்வாறு கொங்குநாட்டுத் தலபுராணங்களை அனைத்தும் ஒன்றாகத் தொகுத்து நோக்கின் பல வரலாறுகள் தெளிவடையும் என்பது திண்ணம்.

## மலைநாட்டுத் தலபுராணங்கள்

மலைநாட்டிலுள்ள திருஅஞ்சைக்களம் என்னும் ஒரு தலம் மட்டுமே பாடல் பெற்ற தலமாகும். சுந்தரர் பதிகம் பாடியுள்ளார். பரசுராமர் தம் தாயைக் கொன்ற தீவினை தீரும் பொருட்டு இங்கு வழிபட்டார் என்று கூறுவர்.

இத்தலத்திற்குரியதாகப் புராணம் ஏதும் கிடைக்கவில்லை.

மலைநாட்டில் திருவனந்தபுரம் முதலான 13 வைணவத் தலங்கள் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்றவை. இத்தலங்களுக்குரியதாகத் தமிழ்ப் புராணம் எதுவும் கிடைக்கவில்லை.

## துளுவ நாட்டு தலபுராணங்கள்

கர்நாடக மாநிலத்தில மேற்குக் கடற்கரையில் உள்ளது திருக்கோகர்ணம் என்னும் தலம். துளுவ நாட்டிலுள்ள ஒரே திருமுறைத்தலம் இது. கோ—பசு, கர்ணம்—காது. இறைவன் பசுவின் காது போலக் குழைந்து காணப்படுவதால் இத்தலம் இப்பெயரைப் பெற்றது. பிரமன், அகத்தியர், காமதேனு, மார்க்கண்டேயர். சரசுவதி, வசிட்டர், இராவணன், நாகராசன் முதலிய பலரும் இங்கு பூசித்துப் பேறு பெற்றதாகக் கூறுவர். சம்பந்தரும் அப்பரும் பதிகம் பாடியுள்ளனர்.

இத்தல வரலாறுகளைக் கோகர்ணபுராண சாரம் என்னும் பெயரில் திரு. வ. சு. சண்முகம் பிள்ளை அவர்கள் இயற்றி வெளியிட்டுள்ளார்கள். எனவே, இதற்குரிய செய்யுள் நடையிலான புராணம் இருந்திருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது.

இத்துளுவ நாட்டிலுள்ள பிற தலங்களுக்குரியதாக வேறு புராணங்கள் எதுவும் கிடைக்கவி[illegible]

தமிழில் தலபுராணங்கள் முதற்பகுதி முற்றிற்று.

# சிறப்புப் பெயர் அகராதி

(எண் ; பக்க எண்)


அக்கினி 12, 58, 71, 75, 86, 257
அக்கினி புராணம் 13
அக்கினி மலை 299
அக்கினிசம் 128
அகண்ட வில்வாரண்யம் 244
அகத்திய சேத்திரம் 181
அகத்திய நல்லூர் 356
அகத்தியபுரம் 135
அகத்திய முனிவர் 286
அகத்தியர் 68, 69, 70, 71, 75, 87, 118, 119, 123, 125, 130, 131, 134, 136, 141, 172, 179, 182, 190, 195, 238, 249, 252, 253, 255, 257, 265, 296, 309, 311, 316, 334, 347, 352, 354, 356, 388.
அகத்தீச்சுரம் 179
அக நகர் 117
அகப்பைச் சித்தர் 364
அகலிகை 131
அகிலாண்டநாயகி மாலை 59
அகோர தேவர் 121, 141
அங்கம் பூம்பாவை 257
அங்கவர்த்தனபுரம் 350
அங்காரகபுரம் 96
அங்காரகன் 96
அங்கிரன் 354
அச்சிறுகேணி 240
அச்சிறுபாக்கம் 266
அச்சுத களப்பாளர் 80, 305
அச்சுதப்ப நாயக்கர் 84
அசலாம்பிகையம்மாள் 317
அசலாம்பிகையம்மை 26
அசுவமேத யாகம் 337
அசுவினி தேவர் 75
அட்டவசுக்கள் 59, 329
அட்டாதச புராணம் 322
அடிகளாசிரியர் 273
அடியார்க்கு நல்லார் 22
அடியார்கள் 265
அடைக்காய் 101
அண்ணாமலை 33
அணிகள் 193
அணியண்ணாமலை 299
அணை 215
அத்தி 246
அத்திகிரி 288
அத்திரி 68, 134, 318, 354
அதர்வணம் 8
அதர்வண வேதம் 7
அதருமம் 35
அதிகமான் 365
அதிகை 313
அதிபுராணங்கள் 11, 13
அதியன் 353
அதிவீரன் 179
அந்தகக்கவி வீரராகவ முதலியார் 265, 286
அந்தகாசுரன் 316
அந்தணர் 265, 354
அநபாயன் 44
அநாதிமூர்த்தஸ்தலம் 197
அநிருத்தன் 290
அநுமன் 138
அப்துல் காதிறு நாவலர் 121
அப்பர் 17, 74, 140, 312.
அப்பாவையர் 312
அப்பிரமேயம் 378
அப்பூதி நாயனார் 67
அபிராமி அந்தாதி 124
அம்பரீடன் 204
அம்பலவாணக் கவிராயர் 378
அம்பலவாண தேசிகர் 127
அம்பலவாண நாவலர் 189
அம்பலவாணப் புலவர் 65
அம்பலவாண முனிவர் 138
அம்பன் 133
அம்பாசமுத்திரம் 137
அம்பாசூரன் 133
அம்பான் 243
அம்பிகாபுரம் 96
அம்பிகை 59, 69, 96, 135, 202, 312, 329
அம்புஜாட்சி 319
அம்மை 279
அம்மையப்பர் 378
அமர்நீதி நாயனார் 130, 140
அமலம் 50
அமிர்தலிங்கத்தம்பிரான் 253, 263
அமுதம் 265
அயக்ரீவன் 342

அயனாவரம் 287
அயிராவதம் 345
அர்ச்சுனன் 130, 286
அர்த்த சாத்திரம் 8
அர்த்த நாரீச நாயகர், சு. 361
அர்த்த நாரீசுவரத்தலம் 348
அர்த்த வேதம் 8
அரங்கசாமி ஐயங்கார் 304
அரங்கநாயகர் கோயில் 292
அரங்கம் 145
அரங்கராகவாசாரியர் 342
அரச மரபு 22
அரசர் 107
அரசவனம் 135, 185
அரசன் 7
அரசிலி 266, 272
அரத்துறை 303
அரதனாசலம் 134
அரம்பை 126
அரம்பையர் 274
அரம்பைவனம் 71
அரவான் 304
அரிச்சக்கரபுரம் 240
அரிச்சந்திரன் 179
அரிசமயதீபம் 26
அரித்துவசன் 203
அரிநகர் 313
அரிப்பிரசாத சாஸ்திரி 10, 13
அரியலூர் 37
அருக தேவன் 16
அருங்கலச் செப்பு 28
அருச்சுனன் 74, 79, 127, 139, 179, 244
அருணகிரி 296
அருணகிரிநாதர் 296
அருணந்தி சிவாசாரியர் 308
அருணாசலக் கவிராயர் 58, 92, 196, 212
அருணாசலக் குருக்கள் 282
அருணாசலம் 296
அருணாசலம் மு. 22, 300
அல்பெருனி 9
அலைவாய்மலைச் சித்தர் 364
அவ்வை 339
அவிநாசி 345, 383
அவைதிகர் 110
அழகிய காதலி 307
அழகிய நம்பி 105
அளகை 219
அளகைச் சம்பந்தர் 100
அற்புதம் 50
அறையணிகண்ட நல்லூர் 332
அன்பாயி அம்மை 179
அன்னத்துவசன் 179
அன்ன விநோதன் 165
அன்னியூர் 379
அனதாரியப்பர் 153, 157
அனல்வாதம் 152
அனுமன் 176
அனுமார் 276
அஜகஜேஸ்வரர் 179
ஆக்கியானங்கள் 7
ஆகமம் 5
ஆகாச நகரம் 138
ஆகாய கங்கை 66
ஆகாயத்தலம் 48
ஆங்கிலேயர் 330
ஆஞ்சநேயர் 65
ஆட்சியாளர்கள் 261
ஆடானை 179
ஆடானை நாதர் 179
ஆண்டார் கோயில் 124
ஆத்திவனம் 126
ஆத்ரேய மகரிசி 291
ஆதிகும்பேசர் 37
ஆதிகேசவப் பெருமாள் 292
ஆதிகைலாசம் 197
ஆதி சிதம்பரம் 202
ஆதிசேடன் 50, 58, 69, 74, 125, 131, 133, 134, 140, 169, 252, 281, 282, 342, 350
ஆதிசேது 141
ஆதித்துறை 303
ஆதித்தேச்சரம் 148
ஆதித்யபுரி 65
ஆதிநதி 364
ஆதிபராசக்தி 99
ஆதிபுராதீசுரர் 337
ஆதிபுரம் 337
ஆதிபுரி 251, 353
ஆதிமகாலிங்கம் 37
ஆதிமாநகர் 319
ஆதிமாபுரி 313
ஆதியப்பனார் 125
ஆதியூர்ச் சித்தர் 364
ஆதிரத்தேச்சுரம் 179

ஆப்பனூர் 165
ஆப்புடையார் கோயில் 165
ஆம்லகவனம் 132
ஆமறியப்பர் 128
ஆமை 265
ஆயனார் 342
ஆயுள் வேதம் 8
ஆரணி 287
ஆரணியகம் 6
ஆராவமுதாசாரியர் 185
ஆரிய மன்னன் 134
ஆரூர் 195, 299
ஆலக்கோயில் 265
ஆலகாலம் 317
ஆலங்காடு 242
ஆலந்துறேசர் கோயில் 37
ஆலந்துறை மகாதேவர் கோயில் 132
ஆலப்பாக்கம் 311
ஆலவாய் 152
ஆலாலசுந்தரர் 354
ஆவர்த்தபுரம் 185
ஆவுடையார் கோயில் 197
ஆழ்வார்கள் 35, 41, 46, 145, 339
ஆளுடையார் கோயில் 197
ஆற்றிடைக்குறை 127
ஆற்றுத்தளிப் பெருமாள் 335
ஆற்றுத்தளி மகாதேவர் 335
ஆறாயிரம்படி 29
ஆறுமுக நாவலர் சரித்திரம் 27
ஆனந்தக் கூத்தர் 245
ஆனந்தி 354
ஆனிலை 351
ஆனைக்கா 299
இடும்பன் 118, 368
இடும்பாவனம் 118
இடைக்காடர் 125, 162
இடைநகர் 117
இடை மருது 137, 299
இடையாறு 317
இதிகாசம் 6
இந்திரபுரம் 172
இந்திரன் 58, 65, 68, 69, 71, 75, 80, 84, 86, 94, 98, 122, 123, 127, 130, 133, 134, 138, 141, 152, 172, 182, 257, 274, 276, 281, 305, 318, 335, 375.
இந்திரபுரீசம் 126
இந்திரபுரி 237
இயக்கர் 87
இயக்கி 87
இயமதருமன் 376
இயமன் 172, 354
இயற்பகை நாயனார் 57, 58, 301
இரகுநாத நாயக்கர் 84
இரசவாதபுரம் 184
இரசவாதம் 184
இரட்டைப்புலவர் 330
இரண்டாம் குலோத்துங்கன் 44
இரண்மய கோசம் 50
இரண்யவன்மன் 51
இரத்தினக் கூடம் 138
இரத்தினகிரி 134
இரத்தினசபை 242
இரத்தின நாதர் 179
இரதிதேவி 286
இராகவன் 359
இராகவாச்சாரியார் 341
இராகவையங்கார், மு. 289
இராகவையங்கார், ரா. 157
இராசசூய யாகம் 252
இராசத புராணம் 12
இராசப்ப நாவலர் 315
இராச பாரம்பரியம் 23
இராச மன்னார் கோயில் 147
இராசராச சோழன் 341
இராசராசபுரம் 140
இராசராசன் 49
இராசேந்திரசோழன் 71, 274
இராதாநல்லூர் 81
இராமச்சந்திர செட்டியார், சி. எம். 379
இராமசாமி ஐயங்கார் 304
இராமநாத சுவாமி 173
இராமநாத முனிவர் 174
இராமபிரான் 329
இராமர் 74, 118, 127, 138, 141, 276, 323
இராமர் பாதம் 176
இராமலிங்கசாமி புராணம் 26
இராமலிங்க யோகி 311
இராமலிங்கேசுவரர் 173
இராமன் 16, 173, 175, 219, 339, 360

இராமாநுச நாவலர் 379
இராமாயணம் 10, 16
இராமானுச நாவலர், ஏ. வே. 144
இராமானுஜர் 9, 292
இராமேச்சுரம் 173, 299
இராமேட்டம் 360
இராவணன் 388
இராஜராஜசோழன் 353
இராஜாதித்த சோழன் 148
இராஜேந்திரப் பட்டணம் 333
இருக்கு 8, 96
இருதய கமலம் 98
இரும்புச் சலாகை 257
இரும்பை 276, 322
இரேவணச் சித்தர் 133, 139, 140
இலக்கியக் கலை 2
இலக்கியச் சுரங்கம் 193
இலக்கியம் 1, 39
இலக்குமணன் 127
இலக்குமி 66, 70, 75, 130, 169, 176, 182, 329,
இலக்குமிபுரம் 138
இலக்குவன் 138, 176
இலட்சுமிபுரம் 184
இலந்தை மரக்காடு 119
இலந்தைவனம் 202
இலம்பையங் கோட்டூர் 274
இலிங்கபுராணம் 116
இலிங்கம் 335
இலுப்பை 97
இளங்கோவடிகள் 16
இளையான் கவிராயர் 345, 378, 385
இறவாப் பனை 355
இறைசை 338
இறைபாபுரி 340
இறையிலி 322
இறைவாச நல்லூர் 338
ஈங்கோய் மலை 68
ஈசன்பதி 177
ஈசான தேசிகர் 119
உக்கிர குமார பாண்டியர் 159, 375
உக்கிர பாண்டியன் 161, 218
உக்கிரன் 213
உத்தம சோழபுரம் 360
உத்தம சோழபுரி 360
உத்தம சோழன் 360
உத்தார நாதர் 320
உத்தார புரம் 319
உத்தாலம் 127
உத்தாலவனம் 127
உதங்க முனிவர் 118
உதவி 318
உதவி நாயகர் 318
உதவி நாயகி 318
உதவி மாணிகுழி 318
உதவி மாணிகுழி கோ தேவர் 318
உபதேச காண்டம் 25
உபதேச ஸ்தலம் 197
உபநிடதம் 6, 34
உபபுராணங்கள் 11, 12
உபமன்யு 48
உபமன்யு முனிவர் 58
உபரிசரவசுல் 145
உம்பர் 50
உமாதேவி 70, 71, 97, 141, 299
உமாதேவியார் 257, 354, 360
உமாபதி சிவம் 49
உமாபதி சிவாசாரியார் 49, 56, 308
உமை 133, 136
உமையம்மையார் 127
உமையவள் 374
உமையாள் 392
உரசகிரி 348
உருத்திரசன்மர் 333
உருத்திரர் 182
உருத்திரன் 10, 106
உருத்திராக்கம் 178
உருப்பெருவழகியார் 356
உருவசி 206
உரையாசிரியர் 16
உரோமசர் 179, 329
உலக நாதர் 76
உலகநாதன் 60
உலகளந்த பெருமான் 144
உலகுய்ய நின்றான் 290
உலோபா முத்திரை 88
ஊர் 96
ஊர்த்துவ மகிமை 124
ஊர்வசி 204
ஊற்றுமலை 241
எக்குருத்தன் 345

எகினம் 159
எதிர்கொள்பாடி 129
எம்மையாளுடையான் 352
எமதூதர்கள் 94
எமன் 118, 123
எய்தனூர் 337
எருக்கத்தம்புலியூர் 333
எல்லப்ப நாவலர் 81, 122, 123, 126
எல்லப்ப முதலியார் 238
எவ்வமா தேவி 301
எலவானாசூர் 338
எழுமியன் கோட்டூர் 274
எழுமுனிவர் 128
எறிபத்தர் 351, 353
எறும்பியூர் 68
எறும்பீசம் 138
எறும்பு 138, 139
என்னைப் பெற்ற தாயார் 289
ஏமசபாநாத மான்மியம் 54
ஏமரிசி 120
ஏயர்கோன் கலிக்காமர் 71
ஏரண்டபுரம் 57
ஏரண்ட முனிவர் 133
ஏலேல சிங்கர் 252
ஏழு கன்னியர் 134
ஏழைப் பங்காளன் 161
ஏனாதிபதி நாயனார் 338
ஐயம் பேட்டை 121
ஐயர் மலை 134
ஐயாறப்பர் 83
ஐயாறு 299
ஐராவதம் 58, 69, 121, 126, 172, 182, 305
ஐராவதேச்சுரம் 126
ஒப்பிலாமணிப் புலவர் 121
ஒப்பிலாமுலையாள் 129
ஒலியலந்தாதி 327
ஒழுந்தியாம்பட்டு 266
ஓங்காளீசம் 128
ஓங்குகோயில் 172
ஓணகாந்தன்தளி 237
ஓணன் 237
ஓமக் குளம் 129
ஔவை 365
ஔவையார் 361,363
கங்கா கூடம் 360
கங்கை 125, 182, 320
கங்கைகொண்ட சோழேச்சரம் 68
கச்சபலூர் 265
கச்சாலை அங்கணர் 225
கச்சாலையர் 225
கச்சி 299
கச்சி அனேகதங்காவதம் 237
கச்சி நெறிக் காரைக்காடு 237
கச்சியப்ப சிவாசாரியர் 26
கச்சியப்ப முனிவர் 59, 225, 277, 354
கச்சியப்பர் 35, 64
கச்சூர் 265
கஞ்சகிரி 365
கஞ்சமலை 363
கஞ்சமலைச் சித்தர் 361
கஞ்சன் 239
கஞ்சன்கிரி 239
கஞ்சாரண்யம் 71
கடந்தை நகர் 305
கடந்தையர்கள் 305
கடபுரி 123
கடம்பந்துறை 119
கடம்பர் கோயில் 119
கடம்பவனம் 152
கடல் தங்குகுடி 129
கடலங்குடி 129
கடலூர் 319
கடவுள் 4
கடிகாசலம் 290
கடுவாய்க் கரைப்புத்தூர் 124
கடுவெளிச் சித்தர் 276
கடை ஞாழல் 319
கடை ஞாழலூர் 319
கப்பிஞ்சி நாடு 154
கண்டக சேதனன் 191
கண்டம் 26
கண்டன் 219
கண்ணப்ப நாயனார் 244
கண்ணப்பபுரம் 244
கண்ணப்பர் 249
கண்ணுவ முனிவர் 119, 159, 238
கண்ணுவர் 182
கண்பறித்தருளிய கடவுள் 336
கண்வர் 125
கணபதி [illegible] 324
கணம்புல்ல நாயனார் 48

கணிகையர் 300
கணேச்சுரபுரம் 356
கத்துரு 119
கதலிவனம் 71, 265
கதிரவன் 83, 84, 134
கதிராமங்கலம் 129
கந்தசாமி சுவாமிகள் 332, 376
கந்தசாமிப் புலவர் 165, 185
கந்தசாமி முதலியார் 243
கந்தப்பையர் 279
கந்தபிள்ளை 287
கந்தபுராணம் 25
கந்தபுரி 96, 356
கந்தமாதனம் 175
கந்தமாமுனி 356
கந்தர்வர் 132
கந்தருவ கன்னியர் 203
கந்தருவ வேதம் 8
கந்தன் 268
கபாலபுரம் 125
கபால முனிவர் 125
கபாலீச்சரம் 253
கபித்தன் 137
கபிலர் 152, 316, 333
கபிலர் மேடு 333
கபிலை கதை 105
கம்பகரபுரம் 66
கம்பர் 35, 113
கம்பர் புராணம் 36
கமண்டல நதி 286
கமலாலயச் சிறப்பு 99
கமலாலயம் 99, 102
கமலாலய மாஹாத்மியம் 99
கமலை 276
கமலை ஞானப்பிரகாசர் 59
கமலைஞானப்பிரகாச தேசிகர் 75
கயநோய் 218
கயமுகாசுரன் 126
கயிலாயம் 90
கர்ப்பபுரி 124
கர்ப்பபுரிவாசர் 351
கரண்டவியூகம் 9
கரபுரம் 360
கரபுரி 279
கரன் 139, 279 360, 361
கரிகாலன் 243, 354
கரிகாற் சோழன் 86, 374, 376
கருகாவூர் 124
கருங்காட்டுச் சித்தர் 365
கருங்குருவி 276
கருச்சிதைவு 124
கருடபுரம் 148
கருட புராணம் 13
கருடன் 94, 119, 120, 140, 169, 313
கருணாகரக் கவிராயர் 238
கருணைப் பிரகாசர் 248
கருணேசன் 352
கருத்துமன் 145
கருநெல்லிக்கனி 365
கருநெல்லி மரம் 364
கருப்பறியலூர் 65
கருமலை 365
கருவூர் 351
கருவூர்ச் சித்தர் 364
கருவூர்த் தேவர் 353
கருவூரார் 351
கரூர் 350
கரூர்த் தேவர் 351
கரையேறவிட்ட குப்பம் 320
கரையேற்றும் பிரான் 320
கல்யாணபுரம் 138
கல்யாண மாநகர் 70
கல்வாழை 133
கல்வெட்டு 156, 275, 318, 321, 335, 339
கலவி 269
கலிக்கம்ப நாயனார் 305
கலிக்காமர் 101
கலிகாலம் 106
கலித்த வனபுரம் 125
கலிய நாயனார் 251
கலியன் 147
கலியாண சுந்தர முதலியார் 276
கலியுகராம பாண்டியன் 74
கலைமகள் 283, 329
கலைய நல்லூர் 120
கவ்வைக் கடல் 185
கவிராச நாயகம் பிள்ளை 58
கவுண்டர் பட்டம் 374
கவுதமன் 182
கவுந்தி 16
கவுற்சன் 191
கழுகுகள் 132

கழுவன் குளம் 333
கள்ளிக்காடு 126
களத்தூர் 287
களந்தைக் குமரன் 134
களப்பாள் 147, 148
களப்பாளர் மேடு 307
களரி 125
கற்குடி மாமலை 68
கற்பகத் தருக்கள் 252
கற்பகவனம் 125
கற்பகவிநாயகம் பிள்ளை ச. 93
கறையான் 98
கறையூர் 381
கன்ம நாசபுரி 65
கன்னிவன நாதர் 320, 322
கன்னிவனம் 319, 322
கனக சபை 48
கஜாரண்யம் 135
கஜேந்திர வரதபுரம் 148
காக புசுண்டர் 68, 202, 311
காகம் 345
காங்கேய நல்லூர் 287
காங்கேய பூபதி 82
காசநோய் 128
காசி 48, 134, 299, 353
காசி காண்டம் 25
காசி நாடன் 193
காசிப முனிவர் 124
காசிபர் 69, 125
காசிபன் 204, 206
காஞ்சி 272, 288
காஞ்சி ஆனந்தன் 218
காஞ்சி ஞானப்பிரகாசர் 53
காஞ்சிபுரம் 223, 369
காண்டம் 26
காண்டீபவனம் 125
காதல் 269
காதலர்கள் 268
காதை 267
காந்த சம்மிதை 11
காந்தன் 237
காந்தாரம் 181
காந்தி புராணம் 27
காந்தியடிகள் 331
காப்பியம் 20
காமதகனபுரம் 66
காமதேனு 74, 121, 123, 181, 265, 305, 323, 350, 354, 388
காமபுரி 286
காமன் 128, 281
காமாட்சியம்மை 128
காமீசர் 284
காமுகன் 159
காமேசம் 128
காயத்திரி 176
கார்க்கோடகன் 94, 119, 242
காரணீசுரர் 257
காரமடை 379
காரியனூர் 303
காரிநாயனார் 124
காரியார்155
காரைக்காலம்மையார் 242
காலநேமி 204
கால பைரவர் 125
காலவ மகரிசி 289
காலவர் 179, 354
காவியம் 6, 35
காவிரி 66, 68, 75, 86, 88, 112, 125, 127, 383
காளத்தி 299
காளமேகப் புலவர் 59
காளாகருவனம் 125
காளான் 246
காளி 58, 68, 75, 128, 133, 182, 266
காளியண்ணப்புலவர் 371
காளையார் கோயில் 181
காற்றுக் கடவுள் 134
கானப்பேர் 155
கானப் பேரூர் 181
கானப்பெரெயில் 181
கானவன் 213
கிராமம் 335
கிரிகன்னிகை வனம் 131
கிருதமாலை 205
கிருபானந்தவாரியார் 287
கிருஷ்ணமாச்சாரியார் 291
கிருஷ்ணன் 291
கிள்ளிச்சோழன் 94
கிரன் 162
கீழ்த்தளி 140
கீழ்ப்பரசலூர் 132
கீழ்வேளூர் 119
கீழூர் 341
கீவளூர் 119
கீழைப் பழுவூர் 37

குகை 50
குகைய நல்லூர் 239
குங்கிலியக்கலய நாயனார் 69, 123
குசத்துவன் 354
குசஸ்தலையாறு 275
குட்ட நோய் 218
குடந்தை 299
குடமல்லிகை 121
குடமுருட்டி 124
குடமுனி 191
குடமூக்கு 120
குடவாசல் 120
குடவாயில் 120
குடியேற்ற நல்லூர் 287
குண்டலினி முனிவர் 266
குந்தவனம் 197
குப்த பரம்பரை 14
குப்தர்கள் 16
குபேரன் 219, 237, 348
கும்பகோணம் 37, 120
குமரக் கடவுள் 286
குமாரபுரம் 138
குமாரமலை மருந்தா 311
குமாரிலர் 9
குமுதவல்லி 145
குயிலம்மை 284
குரக்குத்தளி 356
குரங்கணில் முட்டம் 237
குரு 58
குருக்கத்திவனம் 179
குருசாமி குருக்கள் அ. 282
குருசேத்திரம் 353
குருடன் 101
குருந்தவனம் 197
குருபரம்பராப் பிரபாவம் 26
குருவ விருடி 356
குலசேகர பாண்டியன் 156, 159
குலசேகரன் 154, 354
குலாலர்புராணம் 27
குலிசன் 104
குலோத்துங்க சோழன் 322, 357
குலோத்துங்கன் 33
குழந்தைவேலுப் பிள்ளை 317
குழித்தலை 119
குளத்தூா 287
குற்றாலம் 127, 190
குறுக்கை 65
குறுமுனைப்பாலி 129
குறுமுனி 87
குன்றக்குடி 217
குன்றத்தூர் 37
குன்னம் 37
கூடல் 152
கூடலூர் புது நகரம் 319
கூடலையாற்றூர் 308
கூத்தாடு விநாயகர் 257
கூபாக்கினபுரி 240
கூவம் 240
கூவிளம்புதூர் 125
கூவிளவனம் 125, 217
கூற்றுவ நாயனார் 48, 148
கூன்பாண்டியன் 152
கூனன் 101
கெடில ஆறு 317
கேதாரம் 299
கேது 58, 244
கைசிக ஏகாதசி 106
கைசிகப் பண் 105
கைலாசநாதக் குருக்கள் 39
கைலாயம் 87
கைவல்ய ஞானபுரம் 172
கைவழங்கீசர் 306
கொகுடி முல்லை 65
கொங்கணர் 136, 364
கொட்டாரம் 121
கொட்டையூர்ப் புராணம் 57
கொடிக்கவி 49
கொடுங்குன்றம் 169
கொடுங்கோளூர் 383
கொடுமுடி 350
கொரட்டை 287
கொல்லிமழவன் 70, 75
கொள்ளாம்புதூர் 125
கொள்ளிக்காடு 126
கொற்றவன்குடி 51
கொன்றைமரம் 311
கொன்றை மாவனப்பதி 313
கோகழி 135
கோகன்னன் 103, 104
கோகிலாம்பிகை 281
கோச்செங்கட்சோழன் 58, 59, 123, 125, 130
கோட்டாறு 121

கோட்டூர் 126
கோடை 184
கோடீச்சுவரம் 57
கோடீசுவரர் 57
கோதாவரி 113
கோபி சந்தனம் 178
கோமதியம்மை 211
கோமாத்ருபுரம் 323
கோமுத்தி 129
கோமுத்தி சேத்திரம் 135
கோமுத்தி நகர் 135
கோமுனி 354
கோயில் திருமாகாளம் 133
கோரக்கர் 364
கோலாசலம் 291
கோவலன் 342
கோவிந்தராசப் பெருமாள் 141
கோவிந்தன் 281
கோமுத்தீச்சுரம் 179
கோயில் 48
கோயில்கள் 31
கோழி 119
கோழியூர் 119
கோவிந்தசாமி நாயக்கர் 144
கோவிந்த தீட்சதர் 84
கோவிந்த பிள்ளை 147
கௌசிக முனிவர் 276
கௌவை 376
கௌதமர் 124, 127, 140, 141, 179, 188
கௌதமரிஷி 276
கௌரி 355
கௌரிபுரி 279
கௌரி மாயூரம் 141
சக்கரப்பள்ளி 121
சக்கரம் 138
சக்கரவாளப் பறவை 121
சக்திபீடம் 152
சக்தி புரீசம் 126
சக்தி வனம் 133
சகலாங்க சௌந்தரி 281
சகுனப்பிரமம் 34
சங்க இலக்கியம் 3
சங்க கன்னன் 345
சங்க கிரி 348
சங்கம் 152
சங்கமர் 390
சங்கர குமார முனிவர் 123
சங்கர சேவகச் சோழன் 117
சங்கர சேவகன் 100
சங்கர நயினார் கோயில் 211
சங்கர நாராயணர் 211
சங்கரர் 9
சங்கரலிங்கம் 211
சங்காரணியம் 123
சங்கிதை 26
சங்கிலி நாச்சியார் 252
சங்கீதம் 35
சங்கு 123
சங்கு தீர்த்தம் 123
சங்குவனம் 123
சஞ்சீவி 97
சஞ்சீவிபுரம் 292
சஞ்சீவிமலை 365
சஞ்சீவி மூலிகை 364
சடகோப திவ்விய சரிதம் 26
சடாயு 96, 122, 127
சடாயுபுரி 96
சடையன் 208
சண்டேசனார் 83
சண்டேசுரன் 182
சண்பகவனம் 131
சண்பகாரணியம் 137, 252
சண்மங்களதலம் 138
சண்முகம்பிள்ளை, வ.சு. 388
சத்தர் புண்டரீகம் 9
சத்தி 50
சத்திபுரம் 137
சத்திமுத்தம் 126
சத்தி முற்றம் 126
சத்தியஞானி 246, 351
சத்யகிரி 141
சத்து 50
சதானந்தர் 185
சதுர்வேதிபுரம் 197, 202
சநதனாசாரியர் 48
சந்தானகரணி 364
சந்தான நகராதிகூறு 337
சந்தானபுரி 337
சந்தியா வந்தனம் 109
சந்திரசேகர நாயகர் 309
சந்திரசேனன் 188
சந்திரபீடகோமுன் 72, 74

சந்திரன் 58, 68, 69, 71, 75, 124, 132, 172, 218, 240, 243, 276, 286, 352, 362
சப்த கன்னியர் 71, 141
சப்த முனிவர் 290
சப்த ரிசிகள் 122, 123, 337
சப்தவிடங்கம் 130
சபாபதி நாவலர் 56
சபை 50
சம்பந்தர் 17, 90
சம்பந்த முனிவர் 111
சம்புமுனிவர் 58
சமணர் 91, 140
சமணர்கள் 152, 321, 333
சமய இலக்கியம் 3
சமய சாத்திரம் 6
சமயம் 4
சமஸ்கிருதம் 6
சமுத்திரராசன் 88, 176
சமுத்திரன் 88
சயந்தன் 121, 134, 213
சர்வாங்க சுந்தரி 282
சரக்கொன்றை 170
சரசுவதி 216, 176, 329, 337, 338, 388
சரசுவதிமகால் 199
சரபமூர்த்தி 206
சரமுனி 283
சரவண முனிவர் 368
சல்லியகரணி 364
சலந்தராசுரன் 374
சலந்திரன் 237
சனகர் 70
சனற்குமாரர் 276
சனற்குமாரன் 113
சனி 132
சனித்தோடம் 126
சனிபகவான் 131
சாக்கனூர் 219
சாக்கை 219
சாக்கைக் கோட்டை 219
சாட்சிநாதர் 70
சாத்திரம் சாமிநாதமுனிவர் 135
சாத்துவிகப்புராணம் 12
சாத்யபதி 290
சாந்தி புராணம் 18
சாம்பவன் 256
சாமம் 8
சாமிநாத தேசிகர் 179
சாமிநாத முனிவர் 198
சாமிநாதையர் உ.வே. 36, 137, 198, 225, 281
சாரதி 291
சாரமா முனிவர் 122
சாலிநகர் 194
சாலிவாடி 194
சாலிவேலி 194
சாலிஹோத்திர முனிவர் 289
சாவல்யகரணி 364
சாளக்கிராமம் 178
சாஸ்திரம் 8
சிக்கல் 121
சிகண்டிபுரம் 141
சிங்கவர்மன் 51
சிங்காரவேலர் 257
சிங்காரவேற்பிள்ளை, ப. 131
சித்தணிவாசம் 360
சித்தபுரி 362
சித்தர்கள் 122
சித்த வெற்பு 365
சித்தாந்த ரத்னாவளி 52
சித்தாய்மூர் 122
சித்திரக்கவி 29
சித்திரக்கவிகள் 210, 313
சித்திரக்கவிமாலை 19
சித்திர குத்தர் 178
சித்திரசபை 190
சித்திரத்துவசன் 188
சித்திரம் 35
சித்திரரூபன் 188
சித்திரா பௌர்ணமி 97
சித்தோசி 127
சிதம்பர சபாநாத புராணம் 49
சிதம்பர தேசிகர் 224
சிதம்பரம் 33, 48, 50, 154, 299
சிதம்பரனார், அ. 356
சிதம்பர முனிவர் 320
சிதலைப்பதி 127
சிதாகாசத்தலம் 48
சிந்தாமணி 28, 287
சிந்து கடகம் 301
சிந்து பல்லாளன் 301
சிநேகவல்லி 179
சிபி 167
சிபிச்சக்கரவர்த்தி 327

சிபிமாமன்னன் 336
சிம்மபுரம் 292
சிரகிரி 368
சிராத்தம் 10
சிராமலை 299
சிலந்தி 58, 59, 249
சிலப்பதிகாரம் 16, 28
சிலாசாசனம் 243
சிலாத முனிவர் 85,90,91
சிவக்கொழுந்தீசர் 320
சிவக்கொழுந்து தேசிகர் 57, 68, 137
சிவகருமம் 178
சிவகாமிப் பரதேசி 215
சிவகோசரியார் 244, 249
சிவசிதம்பரமுதலியார், கா.ரா. 321
சிவசீலன் 361, 366
சிவசைலம் 360
சிவஞான தேசிகர் 356
சிவஞானப்பரன்பிள்ளை 306
சிவஞான பாலைய சுவாமிகள் 273
சிவஞான போதம் 307
சிவஞானம், ஆ.மா., 287
சிவஞான முனிவர் 234
சிவஞான யோகிகள் 224, 225
சிவத்தலங்கள் 42
சிவதருமோத்தரம் 25, 278
சிவதீர்த்தம் 356
சிவப்பிரகாச சுவாமிகள் 241, 248
சிவபுரம் 101, 135, 197
சிவபுராணம் 16
சிவபெருமான் 301, 307, 356,
சிவமலை
சிவயோகாநந்தர் 80
சிவயோகிநாதர் 80
சிவரகசியம் 309
சிவராசதானி 152
சிவராத்திரி விரதம் 159
சிவராமலிங்கம் பிள்ளை 213
சிவலிங்கம் 178
சிவவாசம் 305
சிவன் 12
சிவாசாரியர் 86
சிவாநந்தகிரி 243
சிவாதந்தைதக நிலையம் 243
சிவாயமலை 134
சிவானந்த மூர்த்தி 239
சிவானந்தையர் 56
சிற்பம் 35, 39
சிற்றம்பலவையா 137
சிற்றாய்மூர் 122
சிற்றிலக்கியம் 22
சின்னப்பாவு முதலியார் 252
சீகராஜபுரம் 239
சீகாழி 58
சீகாளத்தி 243
சீத்தலைச் சாத்தனார் 17
சீராம விண்ணகரம் 144
சீவக சிந்தாமணி 18
சீவல்லபபாண்டியன் 206
சீவலமன்னன் 252
சீவமாறபாண்டியர் 211
சுக்கிரன் 138
சுக்கிரன் பாளையம் 357
சுக்கிராச்சாரியார் 255
சுக்கிரீவன் 339
சுகந்தகேசி 182
சுகப்பிரம்மரிசி 140
சுகர் 48, 317
சுகவனம் 363
சுகுணபாண்டியன் 219
சுசீலை 219
சுடர்க்கொழுந்தீசர் 307
சுணங்கத்தரு 364
சுத்தம் 50
சுதர்சனம் 240
சுதர்மன் 94
சுந்தரநகர மான்மியம் 130
சுந்தரபாண்டிய தேவர் 172
சுந்தரபாண்டியம் 153
சுந்தரபாண்டியன் 172
சுந்தர முதலியார் 287
சுந்தரலிங்க முனிவர் 199
சுந்தரமூர்த்தி 83, 308, 330, 356, 380
சுந்தரர் 44, 70, 71, 101, 184, 190, 265, 275, 316
சுநந்த முனிவர் 242
சுப்பிரமணிய ஐயர் 133, 169, 182
சுப்பிரமணிய கவிராச மூர்த்திகள் 124, 131
சுப்பிரமணியம் 217

சுப்பு 282
சுப்புராய செட்டியார், த.க. 337
சுப்பையசாமி, சி 57
சுமதி 219, 291, 354
சுமித்திரை 129
சுரநோய் 152
சுவர்ணவல்லி 182
சுவாமிலிங்கம் 360
சுவாமிநாதன் 375
சுவாமிமலை 375
சுவேதகானம் 138
சுவேதகிரி 71
சுழிகாபுரி 185
சுழிகை 185
சுழுனாவழி 50
சுஹ்ருத் சம்மிதை 11
சூடாமணி 12, 19
சூத்திரர் 107
சூத்திரர்கள் 108
சூத முனிவர் 29
சூதர் 7, 8
சூதவனம் 138, 141
சூது விளையாடல் 136
சூரபத்மன் 97
சூரபன்மன் 278
சூரியபகவன் 338
சூரியன் 10, 12, 58, 68, 69, 71, 75, 96, 106, 120, 123, 127, 131, 132, 139, 172, 179, 265, 276, 320, 334, 336, 337, 352, 362,
சூரியன் கோயில் 139
சூலபுரம் 185
சூலைநோய் 314
செங்கட்சோழர் 136
செங்கல்வராய பிள்ளை, க. 283
செஞ்சடை வேதிய தேசிகர் 69
செஞ்சி 291
செஞ்சிக்கோட்டைமலை, 292
செப்பேசர் 85
செப்பேடு 368
செவ்வீபேச்சரம் 86
செம்மொழி 6
செய்யாறு 238
செய்யுள் இலக்கியம் 3
செல்லப்பன் 375
செல்விநகர் 154
செல்வக் குமரன் 375
செல்வநம்பி 206
செல்வி 192
சென்னிமலை 368
சென்னை 287
சேக்கிழார் 26, 35, 37, 44, 49, 53, 64, 131, 178, 222, 323, 380, 384
சேது அணை 138
சேந்தனார் 48, 49
சேயூர் 375
சேரமான் 374
சேரமான் பெருமாள் நாயனார் 83, 136, 382
சேல்நகரம் 366
சேலம் 378
சேவூர் 356
சேற்றூர் 122
சையமலை 88
சைவ எல்லப்ப நாவலர் 279, 296, 359
சைனர் 18
சொக்கலிங்கச் செட்டியார், ராம. சொ. 138, 170, 313
சொக்கலிங்கப் புலவர் 378
சொக்கலிங்கம் 26
சொக்கலிங்க மன்னன் 335
சொன்னவாறறிவார் 129
சோகநாசனம் 305
சோகஹரம் 360
சோணகிரி 296
சோணாசலம் 296
சோதிவனம் 181
சோபுரம் 311
சோமநாதன் 182
சோமயாகம் 133
சோம சேகரம் 128
சோமசேகரன் 128
சோமாசிமாற நாயனார் 133
சோழமன்னன் 225
சோமாஸ்கந்தர் 102
சோமேசலிங்கம் 217
சோழபுரி 362
சோழாந்தகன் 165
சோழீசம் 128
சோரணக்கிபுரம் 290

சோளசிங்கபுரம் 290
சௌந்தர பாண்டியன் 172
சௌந்தரராச உடையார் 341
சௌரிராஜன் 147
சௌனகாதி முனிவர் 267
ஞானக்கூத்தர் 84, 91, 316
ஞானசம்பந்தர் 68, 274, 375
ஞானசுகோதயம் 50
ஞானப்பிரகாசர் 252
ஞானபுரம் 197, 353
ஞானம் 106
ஞானானந்த கிரி சுவாமிகள் 333
ஞீலிவனம் 71
தக்கணை 213
தக்கன் 78, 131, 132, 136, 240, 299
தக்கன் யாகம் 132
தக்கோலம் 240
தசபுராணம் 17
தசரதன் 127
தசலக்கணம் 10
தஞ்சை 353
தட்சபுரம் 132
தட்சிண கயிலாயம் 202
தட்சிணகாசி 138
தட்சிண காளிபுரம் 181
தட்சிண கைலாசம் 353
தட்சிண கைலாயம் 244
தட்சிண சிதம்பரம் 172
தட்சிண மேரு 49
தட்சிணா வர்த்தம் 133
தடாதகை 152, 158, 206
தண்டபாணி சுவாமிகள் 26, 213, 323
தணிகாசலம் 33
தணிகைமலை 277
தணிகைவேள் பாரதியார் 287
தபரிஷி 283
தம்பிரான்கண்ட கோயில் 311
தமிழ் 1
தயராசபதி 305
தரளகிரி 71
தராதலம் 30
தராபதி 303
தருமசாத்திரம் 6
தருமசாமி 191
தருமசீலர் 241
தரும சேனன் 345
தருமத்துவசன் 289
தருமபுத்திரர் 123
தருமநகர் 135
தருமபாலன் 281, 282
தருமபுரம் 122
தருமம் 35, 107
தருமன் 256, 313, 339
தருமி 162
தருவனம் 125
தலைஞாயிறு 65
தலைச்சங்காடு 123
தலைச்செங்கானம் 123
தலைமருது 137
தவசாரம் 360
தவசித்திகரம் 181
தவசித்திபுரம் 353
தவமுனி 283
தன்மநிட்டை 112
தனுர்வேதம் 8
தக்ஷிண கைலாசம் 122
தாசி 281
தாடகை 69, 345, 352
தாடகேச்சுவரம் 69
தாடாளன் 144
தாயுமானவர் 122, 141
தாயுமானவர் கோயில் 37
தாமரை 335
தாருக முனிவர்கள் 50
தாருகன் 241
தாருகாவனம் 194
தாராபுரம் 378
தாலப்பிய முனிவர் 120
தாலவனம் 69, 76
தானம் 10, 106
திக்கு பாலகர் 352
திசைப் பாலகர் 130
திண்டி 335
திணை மயக்கம் 117
தியாகராசப் பெருமான் 117
தியாகராசர் 99, 102
தியாகராசலீலை 99, 100
தியாகராஜகவிராயர் 173
தியாகவல்லி 311
தியானம் 106
திரிகூடமலை 190
திரிகூடராசப்பக் கவிராயர் 190

திரிசிரன் 122
திரிசிராப்பள்ளி 122
திரிசிராமலை 68, 159
திரிசூலகிரி 287
திரிசூலபுரம் 187
திரிபங்கி 313
திரிபதேசுவரர் 217
திரிபாகநாதர் 217
திரிபு 29
திரிபுராதிகள் 313, 338
திரிபுராந்தகேசுவரர் 240
திரிமூர்த்திபுரம் 197
திரிமூர்த்திமலை 379
திரிலோகச்சோழன் 354
திரிவிக்ரமன் 342
திரிவேணி 309
திருஅங்கமாலை 32
திரு அதிகை 312
திரு ஆமாத்தூர் 323
திரு ஆனைக்கா 58
திரு இடவெந்தை 289
திரு இடைச்சுரம் 276
திரு உத்தரகோச மங்கை 202
திரு எறும்பியூர் 138
திருக்கடந்தை 305
திருக்கடவூர் 123
திருக்கடன்மல்லை 290
திருக்கடிகை 290
திருக்கடையூர் 123
திருக்கண்டலம் 275
திருக்கண்ணபுரம் 147
திருக்கருகாவூர் 124
திருக்கலசை 287
திருக்கழுக்குன்றம் 265
திருக்களர் 125
திருக்களாவூர் 124
திருக்காலிமேடு 237
திருக்காளத்தி 48, 243
திருக்காறாயில் 125
திருக்காறைவாசல் 125
திருக்குருகூர் 207
திருக்குருகைப் பெருமாள் கவிராயர் 208
திருக்கோகர்ணம் 388
திருக்கோழம்பம் 129
திருக்கோவலூர் 316, 341
திருக்கோவையார் 44
திருக்கூடாசலம் 190
திருச்சாய்க்காடு 57, 88
திருச்சித்திரக்கூடம் 143
திருச்சிற்றேமம் 122
திருச் சுழியல் 182, 185
திருச்செங்காட்டாங்குடி
திருச்செங்கோடு 348
திருச்சோழபுரம் 311
திருச்சோற்றுத்துறை 126
திருஞான சம்பந்தர் 43, 144, 152, 168, 262, 304, 330
திருஞானசம்பந்த மூர்த்தி 345
திருடர்கள் 318
திருத்தணிகை 277
திருத்தளி 169
திருத்தளிநாதர் 169
திருத்தளியாண்டார் 172
திருத்தலூர் 334
திருத்தாண்டகவேந்தர் 33
திருத்தினை நகர் 310
திருத்துடிசை 356
திருத்துருத்தி 127
திருத்துறையூர் 334
திருத்தெங்கூர் 130
திருநணா 347
திருநல்லூர் 130
திருநள்ளாறு 130
திருநாகேசுவரம் 37, 131
திருநாவலூர் 315
திருநாவுக்கரசர் 32, 33, 44, 67, 130, 320, 327, 329, 339
திருநாளைப்போவார் 48
திருநின்றவூர் 289
திருநீலகண்ட யாழ்ப்பாணர் 123, 333
திருநீலகண்டர் 48
திருநீற்றான் மதில் 63
திருநீற்றுப்பை 335
திருநெல்வெண்ணெய் 334
திருநெல்வேலி 194
திருப்பத்தூர் 287
திருப்பரங்கிரி 166
திருப்பரங்குன்றம் 166
திருப்பல்லாண்டு 44
திருப்பறியலூர் 132
திருப்பனங்காடு 238
திருப்பனந்தாள் 69
திருப்பாசூர் 243

திருப்பாண்டிக் கொடுமுடி 350, 381
திருப்பாதிரிப்புலியூர் 319
திருப்புடைமருதூர் 353
திருப்புத்தூர் 156, 172
திருப்புறம்பயம் 70
திருப்புன்கூர் 70
திருப்புனவாசல் 172
திருப்பூவணம் 184
திருப்பெருந்துறை 197
திருப்பைஞ்ஞீலி 71
திருப்போரூர் 287
திருமகள் 99, 102, 215, 352
திருமங்கையாழ்வார் 144, 147
திருமணஞ்சேரி 129
திருமணிமுத்தா நதி 364
திருமந்திரம் 44
திருமயிலை 253
திருமயிலை சண்முகம் பிள்ளை 253
திருமயிலை நயினார் சந்திர சேகரர் 338
திருமலை 33, 213
திருமலைநாதர் 55, 339
திருமலை நாயகர் 339
திருமருகர் 133
திருமழுவாடி 75
திருமறைக்காடு 141
திருமாணிகுழி 317
திருமால் 9, 58, 66, 69, 75, 79, 87, 106, 121, 130, 132, 133, 136, 138, 139, 140, 169, 172, 204, 215, 219, 265, 279, 289, 291, 309, 313, 318, 327, 329, 334, 352
திருமால் கருமம் 178
திருமாளிகைத்தேவர் 136
திருமாற்பேறு 239
திருமுதுகுன்றம் 315
திருமுடிக்காரி 316
திருமுருகன் பூண்டி 347, 383
திருமுருகாற்றுப்படை 3, 41, 167
திருமுல்லைவாயில் 253, 288
திருமுறைகள் 43, 81, 187
திருமூலநகரம் 216
திருமூலர் 17, 44, 136,
திருமேற்றளீசுவரர் 237
திருவக்கரை 266
திருவகீந்திரபுரம் 342
திருவஞ்சைக்களம் 386, 388
திருவட்டுறை 303
திருவடிசூலம் 276
திருவடுகூர் 334
திருவண்ணாமலை 48, 296, 340
திருவத்திபுரம் 238
திருவம்பர் மாகாளம் 133
திருவம்பலவன் 85
திருவரங்கம் 353
திருவரத்துறை 303
திருவருட்டுறை 317
திருவல்லம் 238, 274
திருவல்லிக்கேணி 290
திருவலஞ்சுழி 133
திருவலம் 238
திருவிதாயம் 276
திருவள்ளுவ நாயனார் 257
திருவள்ளுவர் 31, 253
திருவள்ளூர் 289
திருவாசகம் 16, 44
திருவாசி 70
திருவாசிராமம் 70
திருவாஞ்சியம் 133
திருவாடானை 178
திருவாண்டார் கோயில் 334
திருவாய்ப்பாடி 287
திருவாரூர் 48, 98, 116
திருவாலங்காடு 129, 242
திருவாலி திருநகரி 144
திருவாவடுதுறை 129, 135
திருவாளப்புத்தூர் 79
திருவாளொளிப்புற்றூர் 79
திருவான்மியூர் 264
திருவானைக்கா 48, 59
திருவிசைப்பா 44, 353
திருவிடை மருதூர் 37, 137
திருவிருத்தபுரம் 369
திருவிருந்தான் 157
திருவியலூர் 79
திருவிழா 263
திருவிளநகர் 137
திருவிளம்பூர் 275
திருவிற்கோலநாதர் 240
திருவீழிமிழலை 239
திருவுசாத்தானம் 138
திருவூறல் 240

திருவெண்காடு 80, 82
திருவெண்ணெய் நல்லூர் 317
திருவெள்ளூர் 378
திருவெறும்பிபுரம் 138
திருவேங்கடம் 33
திருவேட்டீசுவரர் 287
திருவேடகம் 168
திருவேளிப்பதி 363
திருவேற்காடு 253
திருவையாறு 86, 382
திருவொற்றியூர் 251, 287
திருவோத்தூர் 238
திரேதா யுகம் 282
தில்லை 48
தில்லை வனம் 48
தில்லை வாழந்தணர் 354
திலகவதியார் 312
திலதர்ப்பணபுரி 127
திலதைப்பதி 127
திவாகரம் 12
திவ்விய சூரி சரிதம் 26
தின்னனூர் 289
தினைநகர் 310
தீட்சதர்கள் 49
தீர்த்தகிரி 358, 360
தீர்த்தங்கரர் 19
தீர்த்தபாலீசர் 257
தீர்த்தம் 10, 40
தீர்த்தவாகு 65, 68
தீர்த்தனகிரி 310
துச்சகன் 54
துண்டீர மண்டலாதிபதி 291
தும்புரு 354
துர்க்காதேவி 148
துர்க்கை 74, 75, 123, 361
துரிதஹரம் 360
துருவன் 147
துருவாசர் 104, 125, 132, 179
347
துரைசாமி முதலியார் சி. 290
துலுக்கர்கள் 330
துவாரகாசக்கரம் 178
துறைசை 135
துன்மதன் 54, 164
தூங்கானை மாடம் 305
தூலகன்னன் 218
தெய்வ அரம்பை 345
தெய்வகுஞ்சரன் 282
தெய்வத் திருமலை 348
தெய்வ யானை 168, 355
தெய்விகன் 282
தெய்வீகன் 339
தெலுங்கர்கள் 330
தென் கயிலாயம் 122, 141, 243
தென் கயிலை 299
தென்காசிப் பாண்டியர் 195
தென்கால் 239
தென்கைலை 197
தென்சேரிகிரி 378
தென்தளி 140
தென் திருமுல்லைவாயில் 93
தென்மயிலை 141
தென்னகம் 87
தென்னை 130
தேசிகன் 288
தேசுவனம் 197
தேங்கூர் 130
தேனுபுரம் 353
தேரழுந்தூர் 128
தேவ கன்னியர் 305
தேவ சேனன் 182
தேவதாசன் 182
தேவதாருவனம் 125, 147, 148,
181
தேவர்கள் 40, 75, 84, 121, 123,
138, 265, 337, 362
தேவாசிரியம் 102
தேவாரம் 45
தேவிவனம் 139
தேவேந்திரன் 74, 291
தொட்டிக்கலை 287
தொண்டமண்டலம் 302
தொண்டைமான் 252
தொல்காப்பியம் 19
தொழுவாலங்குடி 128
தோத்திரக்கோவை 260
தோத்திரம் 6
தோன்றாத் துணைநாதர் 320
தௌமிய முனிவர் 122
நக்கீரர் 152, 160, 167, 215, 244,
249
நடராசப் பெருமான் 143
நடனம் 35
நண்டு 68
நண்ணாலூர் 348
நந்தனார் 71

நந்தி 86, 239, 309, 323
நந்திதேவர் 85
நந்திநகர் 135
நந்திபுரம் 140
நந்தியெம்பிரான் 95
நந்தீசுவரர் 136
நம்பாடுவான் 106
நம்பியாண்டார் நம்பி 49
நமச்சிவாய தேசிகர் 64
நமிநந்தி அடிகள் 101
நர்த்தன வல்லபேசுரர் 310
நரகங்கள் 104
நரசிங்கச் சோழன் 117
நரசிங்கம் 206
நரசிங்க மூர்த்தி 281
நரசிங்கர் 74
நல்லறங்கள் 103
நல்லூர் 288
நவக்கிரகங்கள் 123, 130, 352
நவகோடி சித்தர் 136
நவகோடி சித்திபுரம் 135
நவநாத சித்தர் 364
நவவீரர் 167
நளன் 97, 130, 176, 203
நளிர் காய்ச்சல் 349
நன்ஞானம் 28
நாககன்னி 345
நாககன்னிகை 69
நாக கிரி 348
நாகப்பட்டினம் 131
நாகர்கள் 131
நாகர கண்டம் 99
நாகராஜன் 147, 169, 388
நாகலிங்கம் பிள்ளை சி. 127
நாகலிங்க முனிவர் 139, 224
நாகாசலம் 348
நாகை 131
நாகைக் காரோணம் 131
நாடகம் 6
நாத்திகம் 109
நாத முனி முதலியார் 253, 257, 263
நாயகர்கள் 330
நாயன்மார் 35, 41
நாரதர் 141, 199, 329, 334, 354
நாராயணசாமி ஐயர் 118, 126
நாராயணசாமி நாயக்கர் 140, 147
நாராயணசாமி முதலியார் அ. 238
நாராயணர் 88
நால்வர் 136
நாவுக்கரசர் 17
நான்மறை 269
நான்மாடக் கூடல் 152
நான்முகன் 123, 290, 329
நித்தியகல்யாணம் 289
நித்துவர் 124
நிபந்தம் 33
நியமம் 68
நியாயம் 8
நிரஞ்சனநாதர் 132
நிரந்தரம் 360
நிரம்ப அழகிய தேசிகர் 84, 167, 174, 194
நிருபமுனி 283
நிவாநதி 303
நினைவு மஞ்சரி 234
நீநீர் 68
நீதி பரிபாலனம் 7
நீலகண்ட முனிவர் 333
நீலமேகப் பெருமாள் 147
நெடுங்களம் 68
நெய்வெண்ணெய் நாதர் 334
நெய்வெணை 334
நெல்முடிக்கரை 184
நெல்லிக்கா 132
நெல்லிக்காவல் 132
நெல்லூர் 194
நெல்வாயில் 57, 303
நெல்வேலி 194
நெற்கழனி 194
நெறிகாட்டு நாதர் 309
நேத்திரார்ப்பணபுரம் 138
நேமிவனம் 254
நைமிசாரண்ய க்ஷேத்திரம் 240
நைமிசாரண்ய முனிவர் 139
நைமிசாரணியம் 29
பக்தவச்சலப் பெருமாள் 289
பக்தி இலக்கியம் 3
பக்தி மார்க்கம் 34
பகீரதன் 215
பஞ்சபூதகிரி 360
பஞ்சலக்கணம் 10
பஞ்ச லட்சணம் 27
பஞ்சலிங்கம் 97
பஞ்சாக்கர உபதேசம் 51

பஞ்சாக்கரபுரம் 138
பஞ்சாசத் 223
பஞ்சாட்சரபுரம் 125
பசு 104
பசுக்கள் 329
பசுபதி 351
பசுபதி கோயில் 132
பசுபதி நாதர் 353
பசுபதி நாயகன் 352
பசுபதிபுரம் 353
பசுபதீச்சுரம் 123
பட்டயங்கள் 357
பட்டர்பிரான் 204, 207
பட்டாசாரியன் 206
பட்டி 139
பட்டினத்தடிகள் 81
பத்திபுரம் 353
பத்மகிரி 348
பத்மதள நாயகி 337
பத்ரயோகி முனிவர் 57
பத்ரிகாரண்யம் 202, 275
பதஞ்சலி 48, 50, 71, 143, 155 296
பதரிகாரண்யம் 119
பதிகம் 28
பதுமபுரம் 179
பம்பை 323
பரகாலன் 145
பரஞ்சோதி 82
பரஞ்சோதி முனிவர் 141, 153, 156
பரஞ்சோதியார் 23, 160
பரசமய கோளரி 156, 186
பரசமய கோளரி மாமுனி 321
பரசுராமர் 69, 388
பரணர் 152
பரத்துவாசர் 179
பரத்தை 94
பரத்வாஜ மகரிஷி 241
பரத்வாஜர் 276
பரத முனிவர் 129
பரப்பிரமம் 50
பரம் 50
பரம்பொருள் 134
பரமசிவன் 98, 299
பரமபதநாதன் 209
பரவையார் 316
பராந்தக சோழன் 148
பராசக்திபுரம் 197
பராசக்தித்தலம் 99
பராசர முனிவர் 125, 208, 347
பராசரர் 59, 75, 131, 134, 169
பரிச்சேபன் 128
பரிதி நியமம் 139
பரிதிபுரி 96
பரிபாடல் 41
பருத்தியப்பர் கோயில் 139
பருப்பதம் 299
பலராமன் 290
பவானி 347
பவானிகூடல் 347
பவானி முக்கூடல் 347
பவித்திர மாணிக்கம் 197
பழநி 33, 377
பழநியப்பன் சேர்வைக்காரர் 138
பழமண்ணிக்கரை 97
பழமலை 315
பழூர் 69
பழையனூர் 242, 275
பழையாறை 139, 140
பள்ளன் 310
பறம்புமலை 169
பன்னிரண்டு சூரியர்கள் 329
பனகாரண்யம் 138
பனசாரண்யம் 125
பனையபுரம் 336
பனையூர் 154
பாகவதம் 25
பாஞ்சசந்யம் 123
பாடலபுரம் 319
பாடலம் 320
பாடலேசுவரர் 320
பாடி 276
பாண்டவர் 97, 131, 339
பாண்டியன் 187
பாணபத்திரர் 160
பாணர் 9
பாணி 143
பாணினி 252
பாதிரி 320
பாதிரிப்பதி 319
பாபவிமோசன புண்ணிய வர்த்தம் 123
பாம்பாட்டிச் சித்தர் 364
பாம்பாறு 172
பாம்பு 249

பார்த்தசாரதி 290
பார்ப்பதியார் 94
பார்வதி 141, 185, 202, 299
பார்வதிபுரம் 305
பாரி 169
பாரிமகளிர் 316
பாரிஜாதவனம் 124, 179
பாலகிருட்டிண தீட்சிதர் 124
பாலசுப்பிரமணிய கவிராயர் 377
பாலபுரி 362
பாலன் 280
பாலாறு 286
பாவங்கள் 104
பாவநாசம் 378
பானுகவி அடிகள் 240
பாஸ்கர சேத்திரம் 244
பாஸ்கரபுரம் 184, 353
பாஸ்கரபுரீசம் 126
பிங்கலம் 12, 30
பிதுர்மோட்சபுரம் 184
பிப்பிலாரணியம் 353
பிப்பிலீச்சரம் 138
பிரத்யும்னன் 290
பிரதாபமுதலியார் 224
பிரபந்தம் 22
பிரபந்த மரபியல் 22
பிரபு சம்மிதை 11
பிரம்மசாரி 318
பிரம்மரிஷி 139
பிரம்மா 10, 129, 276, 288
பிரமகத்தி 137, 187
பிரமதேவர் 134, 249, 281
பிரமபுரம் 125, 135, 138, 141, 172, 184, 202
பிரமரந்திரத்தலம் 123
பிரமராக்கதன் 105
பிரமரிஷி 122
பிரமவனம் 125
பிரமவிருந்தபுரம் 194
பிரமன் 12, 58, 59, 66, 68, 69, 70, 71, 78, 87, 97, 106, 113, 118, 120, 122, 123, 124, 130, 131, 132, 133, 139, 141, 167, 169, 172, 184, 216, 251, 263, 279, 309, 313, 316, 327, 335, 337,345, 352, 354, 388
பிரமோத்தரகாண்டம் 25
பிரளயங்காத்த ஈசர் 306
பிரளயங்காத்த வள்ளல் 306
பிரளயங்காத்த விநாயகர் 70
பிரளயம் 185
பிரளய வெள்ளம் 70
பிராண தார்த்திகரர் 85
பிராமணம் 6
பிரான்மலை 169
பிரிவு 269
பிருகத்குச நாயகி 37
பிருங்கி 140, 265, 323, 329
பிருகு 68, 120, 125, 203
பிருதிவி தலம் 98
பிருது 206
பிருந்தாரண்ய சேத்திரம் 290
பிள்ளையார் 152
பிள்ளைலோகஞ்ஜீயர் 29
பிறவா நெறித்தலம் 353
பின்பழகிய பெருமாள் ஜீயர் 29
பினாகி 287
பீமசங்கர சேத்திரம் 318
பீமன் 75
புகழ்ச்சோழ நாயனார் 351
புகழ்ச் சோழர் 353
புங்கமரம் 70
புட்பகந்தன் 191
புட்பகிரி 368
புட்பவன காசி 184
புட்பவன நாதர் 371
புட்பவனம் 371
புண்டரிகம் 50
புண்டரீகபுரம் 48
புண்டரீக முனிவர் 131
புண்ணியபூமி 30
புத்தர் 9
புதன் 237
புதுத்துறை 144
புதுவை 287
புரந்தரன் 289
புராண இலக்கணம் 10
புராணங்கள் 4, 6, 8
புராண சாகரம் 18
புராணத் திருமலை நாதர் 23, 296
புராண லட்சணம் 28
புராணன் 17
புராதனபுரம் 80

புராதனம் 5
புராதனன் 79
புராதனேசர் 80
புருடா மிருகம் 75, 339
புருடா மிருகர் 75
புரூரவன் 206
புரோகிதர்கள் 7
புலத்தியர் 70, 123, 238
புலி 104
புலிக்கால் முனிவர் 48, 333
புலிசை 319
புலியூர் 319
புலிவலம் 118
புழுகுப்பூனை 303
புள் 96
புள்ள மங்கை 132
புள்ளிருக்கு வேளூர் 96
புற்றுமண் 212
புறத்திரட்டு 18
புறநகர் 117
புறவார் பனங்காட்டூர் 336
புறா 131
புன்றுறை 371
புன்னாகவனம் 70
புனல்வாதம் 152
புனற்சடிலம் 360
புஷ்பவனம் 305
புஷ்பாரண்யம் 305
பூகைலாசம் 138
பூண்டி 275
பூதங்கள் 167
பூந்தராய் 299
பூந்துறை 370
பூத்துறைசை 371
பூந்துறையூர் 371
பூம்பாவை 253
பூம்புலியூர் 322
பூம்புலியூர் நாடகம் 322
பூமிதேவி 187
பூலோக கயிலாயம் 48, 152
181, 197
பூவனூர் 140
பூவை கலியாணசுந்தர
முதலியார் 240, 265
பெண்ணாடகம் 305
பெண்ணாடம் 305
பெண்ணை நதி 287
பெரியநாயகி 320
பெரிய புராணம் 26
பெரியான் 310
பெருங்காப்பியம் 20
பெரும்பற்றப்புலியூர் 48
பெரும்பற்றப்புலியூர் நம்பி 153
பெருமணம் 68
பெருவேள் 140
பெருவேளூர் 140
பேய்கள் 182
பேரூர் 353
பொக்கணம் கொடுத்த
நாயனார் 335
பொண்டெனூா 233
பொதியமாமலை 255
பொன் உடம்பு 274
பொன்முகலி 244
பொன்னம்பலவாணத் தம்பி
ரான் 203
பொன்னனையாள் 184
பொன்னேரி 287
போசள மன்னர் 301
போதநீர் நதி 364
பௌத்தாவதாரம் 313
மகாகாளபுரம்181
மகாகாளன் 329
மகாகாளேசன் 182
மகா தாண்டவம் 136
மகாபலிபுரம் 290
மகாபாரதம் 8, 10
மகா புராணங்கள் 11, 25
மகாலிங்கத்தலம் 137
மகாவஸ்து 9
மகாதேவ மலை 288
மகிடன் 302
மகிடாசுரன் 299, 367
மகிழவனம் 68
மகேந்திரபுரி 305
மகோதர முனிவர் 169
மங்கண முனிவர் 320
மங்கல கிரி 348
மங்கலபுரி 203
மங்களக்கவிராயர் 287
மங்களபுரி 202
மங்களாம்பிகை 37
மங்கைபாகக் கவிராயர் 169
மடக்கு 29, 313
மண்டல புருடர் 19
மண்ணியாறு 97

மணக்கால் ஐயம்பேட்டை 140
மணவாளநாதர் 129
மணிப்பிரவாளம் 19
மணிமங்கலம் 172
மணிமுத்தாறு 316, 363
மணிமேகலா தெய்வம் 16
மணிமேகலை 14, 30
மணியம்பட்டு 239
மணிவாசகர் 30, 265
மத்தியார்ச்சுனம் 37, 137
மதங்கமுனி 329
மதுரை 33, 152, 299
மதுரைத் தமிழ்ச் சங்கம் 157
மதுவனபுரம் 138
மதூகவனம் 97
மந்தாரவனம் 181
மந்திரபுரீசம் 126
மந்திரம் 35
மநு 179
மயன் 202
மயிலம் 273
மயிலாசலம் 288
மயிலாடுதுறை 141
மயிலாப்பூர் 253
மயிலை 261
மயூரகிரி 217
மரபு வரலாறு 6
மருங்காபுரி 154
மருத்துவம் 124
மருதவனம் 137
மருது பாண்டியர் 181
மருதுபூபன் 218
மல்லிகைவனம் 121
மல்லீசர் 257
மலைக்கோயில் 138
மலைமகள் 131
மலையத்துவசன் 159, 204
மழபாடி 75
மழவர்பாடி 75
மழவை மகாலிங்க ஐயர் 300
மழுவாடீசுவரர் 75
மறைஞானசம்பந்தர் 99, 115, 296, 302, 308
மறைவனம் 141
மன்மதன் 65
மன்று 50
மாகறல் 274
மாகறலீசுவரர் 274
மாகாள முனிவர் 133
மாடக்கோயில் 123
மாணிக்கம் 134
மாணிக்கமலை 134
மாணிக்கவாசகர் 16, 44, 48, 67, 152, 155
மாத்திரைச் சுருக்கம் 313
மாத்திரை வருத்தனை 313
மாதவிமரம் 347
மாதவி வனம் 124
மாதைப் பெருமான் 323
மாந்தாதா 97, 141 179, 252
மாபலிச் சக்கரவர்த்தி 255
மாமரம் 228
மாயனார் 91
மாயூரம் 141
மார்க்க சகாயர் 279
மார்க்கண்டபுரம் 129
மார்க்கண்டர் 179
மார்க்கணடேயபுரம் 179
மார்க்கண்டேயர் 57, 75, 122, 123, 131, 265, 347, 388
மால்பதி 177
மாலினி 188
மாலை மாற்று 19
மாவலி 141, 341
மானாபரணன் 172
மானாமதுரை 217
மிதிலேசன் 137
மிருகண்டு 68, 202
மிருதசஞ்சீவி 364
மிளகுவணிகன் 279
மீமாம்சை 8
மீனாட்சி சுந்தரம்பிள்ளை 59, 66, 79, 97, 100, 116, 119, 121, 127, 131, 133, 139, 141, 198, 201, 219, 253, 263
மீனாட்சிநாதர் 165
முக்கீச்சுரம் 118
முகம்மதியர் 56, 330
முசுகுந்தச் சக்கரவர்த்தி 136
முசுகுந்தச் சோழன் 74
முசுகுந்தன் 130, 141, 179, 244, 354
முடித்தழும்பர் 134
முடிகொண்ட சோழபுரம் 140
முடிவழங்கு சோழ சதுர்வேதி மங்கலம் 148

முடிவழங்கு சோழவிண்ணகரம் 148
முடீசுவரர் 335
முண்டகக் கண்ணிம்மை 257
முண்டகன் 335
முண்டி 335
முத்தி 50
முத்தித் தலம் 68
முத்திபுரம் 179, 185
முத்திமா நகர் 187
முத்துக்கவிராயர் 211
முத்துக்குடை 304
முத்துச் சின்னம் 304
முத்துசாமிக் கோனார். தி.அ. 375
முத்துதரசர் 281
முத்துப் பல்லாக்கு 304
முத்தூர் 375
முதல் குலோத்துங்க சோழன் 311
முதலாம் இராசராசன் 44
முதுகுன்றம் 315
முதுகுன்று 299
முந்நீர் 66
முந்நூற்றுவர் 219
மும்முடிச் சோழபுரம் 244
மும்மூர்த்தித் தலம் 350
முயலகன் 70
முரசபந்தம் 313
முருகதாசக் கவிராசர் 213
முருகப் பெருமான் 166, 329
முருகம்மை 216
முருகவல்லி 215
முருகன் 58, 66, 68, 75, 96, 97, 119, 136, 140, 152, 167, 252, 278, 340, 347, 352, 374
முருகேசம் 385
முருங்கைக் கீரை 356
முல்லைவனம் 65, 124
முழுதுங்கண்ட ராமக்கோன் 194
முள்ளிக்காடு 286
முற்றுமடக்கு 313
முனிமரபு 22
முனிவர்கள் 40, 362
முனீசம் 128
முனையடுவார் நாயனார் 68
முனையதரையர் 147
மூங்கில் 194
மூர்க்க நாயனார் 120
மூர்த்தி 10, 40
மூர்த்தி நாயனார் 152
மூர்த்தியார் 155
மூலிகை 265
மூவர் மண்டபம் 184
மூவேந்தர் 352
மூவேந்த வேளான் 172
மெய்கண்ட தேவர் 305
மெய்கண்டார் 81, 307
மெய்ஞான மாமுனிவர் 70,138
மெய்ப்பதம் 50
மெய்ப்பாத புராணிகர் 71
மெய்ப்பொருள் நாயனார் 327 341
மேகன் 145
மேருபுரம் 353
மேருமந்தரர் 19
மேலூர் 341
மேலைக்காழி 65
மேலைச்சிதம்பரம் 71, 353
மேலைத் திருக்காட்டுப்பள்ளி 68
மேற்றளி 140
மைதரணி 104
மோகினி 140
மோட்சப்பிரதம் 181
மௌனகுரு 122
மௌரிய பரம்பரை 14
மௌனி கிராமம் 335
யமகம் 29
யமதண்டனை 256
யமன் 103
யயாதி 104
யஜுர் 8
யாகம் 288
யாதவ மகாராசா 249
யாப்பருங்கல விருத்தி 18, 19
யானை 58, 59, 119 237, 249
யானைமலைக் கதை 206
யுகங்கள் 106
யோக நரசிம்மர் 145, 290
யோகீசபுரம் 66
ரங்காச்சாரி, இரா. 292
ரதி 66
ரம்பையங் கோட்டூர் 274
ரமண மகரிஷி 333

ராகு 58, 131, 244
ராமன், மு. கோ. 193
ராய் சௌத்திரி 38
ராஜரிஷி 283
ருக்மிணி 290
ருத்திரர்கள் 237
ருட்சாயணர் 199
ரோமத்தரு 364
ரௌரவம் 104
லலித விஸ்தரம் 9
லாலாபேட்டை 239
லோமஹர்ஷணர் 8
வக்கரன் 266
வக்கிராசுரன் 266
வச்சணந்தி மாலை 21
வச்சிரதம்பேசுவரர் 75
வச்சிரவனம் 172
வச்சிராங்கத பாண்டியன் 299
வசிட்டபுரம் 148
வசிட்டர் 65, 68, 69, 75, 78, 121, 123, 125, 131, 141, 172, 179, 249, 334, 352, 361, 388
வஞ்சி 351
வஞ்சுளாரணியம் 352
வடகால் 239
வடதளி 140
வடநாட்டார் 330
வடமலை நாரணக்குடை மன்னர் 69
வடநூல் 9
வடபாலீசர் 287
வடபுதுவை 288
வடமொழி 1
வடமொழிப் புராணங்கள் 99
வடாரண்யம் 242
வடிவேல் முதலியார் 317
வடுகநாத தேசிகர் 94
வடுகநாதர் 335
வடுக பைரவர் 335
வடுகீசுவரர் 335
வடுகூர்நாதர் 335
வண்ககனம் 50
வண்டிப்பாளையம் 320
வண்டு 79, 374
வணிகர் 107, 261
வதரிகாசிரமம் 347
வயலூர் 185
வயிரியர் 261
வரதராசன் 288
வரதராச கோயில் 288
வரதாசாரியார், கொ. 282
வரநதி 364
வரகுண பாண்டியர் 181
வரகுண பாண்டியன் 125, 136, 137, 152, 182
வரகுணராம பாண்டியர் 116
வராகம் 159
வருணபுத்திரன் 179
வருணன் 128, 152, 161, 179, 289, 352
வருணீசம் 128
வல்லாளராசன் 300
வல்லி 276
வரியன் 276
வழித்துணைநாதர் 279
வள்ளலார் 334
வள்ளி 268
வன்மீகபுரம் 98, 353
வன்னிவனம் 179
வனப்பு 19
வனிசேர் நல்லய்யன் 266
வாகீச பக்த நாவலர் 312
வாகீசர் 86
வாசுகி 123, 191, 252
வாசுதேவ முதலியார் 347
வாசுதேவானந்தர் 215
வாட்போக்கி 68, 134, 299
வாணாசுரன் 202
வாணி 352
வாதவூரடிகள் 154, 160
வாமதேவ முருகபட்டாரகர் 26
வாமதேவ முனிவர் 266, 272
வாமதேவர் 125
வாமனபுரம் 319
வாமனபுரி 318
வாமனலூர் 319
வாமனர் 255
வாமனேசுவரன் 319
வாயிலார் 257
வாயிலார் நாயனார் 253
வாயு 74, 86
வாயுசங்கிதை 25
வாயுதேவன் 134
வால்மீகி 252
வால்மீகி முனிவர் 65
வாலி 84, 337, 338

வாலீசர் 263
வாளீசர் 257
வான்மீகி 304, 359
வானரச்சேனை 218
வானரவீர மதுரை 217
வானவர் 191
வானாதிராயர் 217
விக்கிரம சோழன் 182
விசுவாமித்திரர் 70, 138, 139, 141, 296, 348, 354
விஞ்ஞான க்ஷேத்திரம் 243
விட்டுணு 10
விட்டுணு வல்லபர் 337
விண்டு சித்தன் 206
விண்டுபுரி 279
வித்தியாவதி 159
வித்தைகள் 8
வித்யாதர மகளிர் 352
விநாயகர் 125, 126, 237, 276, 329, 356, 366
விநாயகன் 136
விபீடணர் 147
விபூதிலிங்க மூர்த்தி 216
விமலாரண்யம் 71
வியாக்கிரசூரன் 74
வியாக்ரபாதர் 48, 50, 71, 143, 296
வியாக்ரபுரம் 202
வியாக்ரபுரி 71
வியாசர் 11, 12, 48, 58, 68, 69, 169, 352, 354, 367
வியாதர் 345
வியாதிநாசம் 360
வியாழபகவான் 141
விரதம் 10
விரதானுட்டானங்கள் 7
விரிஞ்சன் 279
விரிஞ்சிபுரம் 279, 299
விரிஞ்சை 299
விருட்சம் 40
விருத்தகாசி 172. 315
விருத்தாசலம் 33, 308, 315
விருபாட்சிசர் 257
வில்லிபுத்தூரார் 35
வில்லியநல்லூர் 129
வில்லியனூர் 281
வில்லிவாக்கம் 288
வில்லை 281
வில்லை முத்துக்குமாரர் 285
வில்வநல்லூர் 281, 285
வில்வ வனம் 79, 125, 179, 217, 238, 284
வில்வவனேசர் 80, 281
வில்வாரண்யம் 57, 127, 145, 239, 288
வில்வேச்சுரம் 281
விவஸ்வான் 286
விழல்நகர் 137
விளம்பனம் 19, 20
விறன்மிண்ட நாயனார் 71. 348
விறன்மிண்டர் 101
வின்ஸோன் 233, 283
வினைதீர்த்தான் கோயில் 97
விஸ்வநாயகி அம்மன் 356
விஷ்ணு தருமோத்தரம் 9
வீதிவிடங்கர் 99
வீமநாத பண்டிதர் 153, 163
வீமன் 334
வீமேசம் 363
வீரகவிராச பண்டிதர் 349
வீரசேகரச் சோழன் 219
வீரசேன பாண்டியன் 182
வீரசேன மன்னன் 310
வீரசேனன் 213
வீரட்டம் 363
வீரட்டேசுவரர் கோயில் 333
வீரபத்திரர் 169
வீரபாண்டி நகரம் 366
வீரபாண்டியன் 335
வீரராகவக் கவி 281
வீரராகவப் பெருமாள் 289
வீரராகவர் 286
வீரவநல்லூர் 246
வீரவனம் 219
வீரவாதித்தன் 119
வீர விருக்ஷம் 219
வீரன் 219
வீராசாமி, த. வே. 64
வீரைத் தலைவன் 322
வீழிமிழலை 138
வெங்கடரமணதாசர் 387
வெஞ்சமாக்கூடல் 349, 381
வெஞ்சமன் 349
வெண்குட்டம் 310
வெண்ணாவல் 58

வெண்ணெயப்பர் 334
வெண்ணோய் 136
வெண்பாக்கம் 275
வெண்மணி 37
வெள்ளாறு 303
வெள்ளாங்குமரன் 336
வெள்ளீசர் 257
வெள்ளைச்சாரை 364
வெள்ளையர் 331
வெள்ளை யானை 80, 121, 305
வேகவதி 205
வேங்கடகிருஷ்ணன் 290
வேங்கடராமையர், சி. பி. 285
வேட்டக்குடி 139
வேடன் 83, 191, 356
வேணுவன நாதர் 194
வேணுவனம் 194
வேணுவனலிங்கம் பிள்ளை 163
வேதகிரி 288, 348
வேதங்கள் 141
வேதசர்மா 194
வேதபுரி 96
வேதம் 5, 8, 96, 263
வேதமித்திரன் 203
வேதவனம் 141
வேத வியாசர் 9, 202
வேதாங்கம் 8, 18
வேதாசலம் 265
வேதாந்த சுப்பிரமணிய பிள்ளை 217
வேதாந்த தேசிகர் 288, 341
வேதிகை 124
வேதியர் 110, 261
வேலாயுத பண்டிதர் 378, 379
வேலுச்சாமிப் பிள்ளை 139
வேலூர் 287
வேலூர்க் கோட்டம் 272
வேலைய தேசிகர் 83
வேலையர் 69, 248
வேள் 96
வேள்வி 106
வேளாளர் 261, 374
வேளாளர் விளக்கீடு 339
வைகாலூர் 83
வைகுண்டநாதர் 337
வைகை 113
வைசியர் 108
வைணவர் 90
வைத்தியநாததேசிகர் 130, 134
வைத்தியநாத முனிவர் 203
வைத்தியநாதர் 75
வைத்தியநாதன் 291
வைத்தீசுவரன் கோயில் 97, 366
வையை 205
வைரத்தூண் நாதர் 75
ஐப்பியேசுவரம் 85
ஐம்புகேசுவரம் 37, 58
ஜமதக்னி 65
ஜலகண்டேசுவரர் 287
ஜனரிஷி 283
ஜாம்பவான் 138
ஜீலியன் வின்ஸோன் 283
ஜீவரத்தினம் 73
ஸ்ரீசைலம் 137
ஸ்ரீபுராணம் 19, 29
ஸ்ரீபூதபுரி 292
ஸ்ரீமூலநாதர் 216
ஸ்ரீரங்கம் 37
ஸ்ரீராமர் 257, 263
ஸ்ரீலக்ஷ்மி நாராயணையர் 285
ஷண்மங்கல க்ஷேத்திரம் 353
ஹர்ஷ சரித்திரம் 9

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 14 | தைந்தூறு | தைந்நூறு |
| 2 | 17 | மளத்தை | மனத்தை |
| 5 | 1 | இல்லாதனை | இல்லாதவை |
| 5 | 13 | முதவ் | முதல் |
| 6 | 20 | உபநிடம் | உபநிடதம் |
| 6 | 31 | hiterogeneous | heterogeneous |
| 7 | 26 | தூச | றாச |
| 8 | 8 | அப்போதைய | இப்போதைய |
| 10 | 30 | shouid | should |
| 10 | 34 | dynastics | dynasties |
| 10 | 36 | Bramhma | Brahma |
| 11 | 17 | கஹ்ருத் | சுஹ்ருத் |
| 12 | 4 | விட்னு | விட்ணு |
| 12 | 25 | நாருதியம் | நாரதியம் |
| 13 | 8 | முத்தல | முத்கல |
| 13 | 10 | கிருஷ்ணாவதரக் | கிருஷ்ணாவதாரக் |
| 14 | 12 | பிஷ்யோத்தரம் | பவிஷ்யோத்தரம் |
| 14 | 11 | மார்க்வெண்டேய | மார்க்கண்டேய |
| 15 | 10 | தப்தி | தபதி |
| 16 | 26 | பொருளிாலயே | பொருளிலேயே |
| 16 | 26 | கைசயாளப் | கையாளப் |
| 17 | 2 | தொடங்குவான் | தொடங்குவாள் |
| 19 | 9 | கைனருடைய | சைனருடைய |
| 22 | 4 | அமைந்துல்ளது | அமைந்துள்ளது |
| 22 | 6 | பாடல் | பாடப் |
| 22 | 30 | ஓாற்றாண்டில் | நூற்றாண்டில் |
| 22 | 32 | பிள்ளளக்கவி | பிள்ளைக்கவி |
| 23 | 14 | பதிப்பித்துல்ள | பதிப்பித்துள்ள |
| 26 | 3 | சம்ஹறைதை | சம்ஹிதை |
| 26 | 35 | தண்பாணி | தண்டபாணி |
| 27 | 31 | மன்வந்தராணி | மன்வந்தராணிச |
| 28 | 5 | இவை | இதை |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 30 | 33 | சுற்றுயே | சுற்றுய |
| 32 | 7 | நமிழ்நாட்டில் | தமிழ்நாட்டில் |
| 33 | 1 | பணிந்தபின் | பணிந்தபின் |
| 34 | 13 | சகுனப் | சகுணப் |
| 34 | 21 | வரப்போக்கிலான் | வரல்போக்கிலான் |
| 37 | 20 | தகராகாயத்திற்கு | தகராகாசத்திற்கு |
| 39 | 25 | ருருக்கள் | குருக்கள் |
| 42 | 27 | கரங்கருணைத் | பெருங்கருணைத் |
| 42 | 29 | குலலிங்க | குருலிங்க |
| 44 | 32 | குறப்பாகத் | குறிப்பாகத் |
| 45 | 10 | உவகியற் | உலகியற் |
| 45 | 36 | சூழ | சூழு |
| 47 | 6 | ஓணாடும் | ஏணாடும் |
| 50 | 1 | நடபாசச் | நடராசச் |
| 50 | 16 | காமருங் | காதமருங் |
| 51 | 12 | -லந்து | வந்து |
| 52 | 8 | சாத்தம் | சாத்தல் |
| 53 | 2 | பகர்வார்கிர் | பகர்வார்சிர் |
| 53 | 20 | பாடிமைப் | படிமைப் |
| 53 | 25 | கருதியுடன் | சுருதியுடன் |
| 58 | 25 | ஆனை | ஆணை |
| 59 | 2 | கோச்செகங்கட் | கோச்செங்கட் |
| 60 | 28 | பாத்ம | பத்ம |
| 66 | 8 | அரிதசிவனம் | அரிதகிவனம் |
| 67 | 18, 17, 26, 27 | அரிதசி | அரிதகி |
| 67 | 19 | தசி | தகி |
| 67 | 30 | எரியபல் | எரியழல் |
| 68 | 24 | திருநீர்த் | திருநீடூர்த் |
| 68 | 25 | அருகிலுள்ள | அருகிலுள்ளது |
| 69 | 14 | கவித்தலம் | கபித்தலம் |
| 70 | 25 | செய்வித்தார் | செய்துவித்தார் |
| 72 | 29 | துடர்க்கொத் | சுடர்க்கொத் |
| 72 | 31 | சாவேரியை | காவேரியை |
| 76 | 3 | வயிரத்தானே | வயிரத்தூணே |
| 76 | 31 | அறிவினால் மிக்க | அறிவினால் தவத்தால் மிக்க |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 78 | 22 | திகழுனே | திகழுவே |
| 80 | 2 | வில்வுனேசர் | வில்வவனேசர் |
| 80 | 4 | ஒன்னும் | என்னும் |
| 85 | 20 | அன்னோள் | அன்னோன் |
| 89 | 7 | வசித்தனேனும் | வசித்தானேனும் |
| 95 | 14 | தந்தையை | தந்தையனை |
| 95 | 32, 33 | செந்நீர் | செற்றீர் |
| 99 | 15 | அஜபாஹஸ்யம் | அஜபாரஹஸ்யம் |
| 99 | 15 | சூடகேச்வர | ஆடகேச்வர |
| 100 | 34 | தழுவானை | தருவானை |
| 104 | 11 | கோசன்னன் | கோகன்னன் |
| 104 | 20 | முனிவருக்கும் | முனிவருக்குப் |
| 104 | 26 | ஊட்டி | ஆட்டி |
| 105 | 18 | ஏற்றொருவர்க்கு | மற்றொருவருக்கு |
| 108 | 5 | யுற்றிடற் | யுற்றிடிற் |
| 109 | 18 | உணர்விழிந் | உணர்விழந் |
| 112 | 33 | மங்கப் | மங்கலப் |
| 114 | 8 | கூறுங் | கூனுங் |
| 115 | 1 | செய்வது | செய்வதும் |
| 115 | 16 | கள்ளுண் | கள்ளூண் |
| 115 | 33 | கமலாய | கமலாலய |
| 117 | 16 | தழுக்கிடு | தழுத்திடு |
| 118 | 27 | உறையூர் | உறையூர்ப் |
| 119 | 8 | உறுப்புக்கெல்லாம் | உறுப்புக்களை யெல்லாம் |
| 124 | 23 | இன்னும் | இன்றும் |
| 125 | 30 | கிடைக்காடர் | இடைக்காடர் |
| 128 | 8 | சோரீசம் | சோழீசம் |
| 129 | 19, 23 | திருமஞ்சேரி | திருமணஞ்சேரி |
| 130 | 18 | இதில் | இது |
| 132 | 17 | தலமாதவில் | தடுமாதவின் |
| 134 | 32 | வைத்திய தேசிகர் | வைத்தியநாத தேசிகர் |
| 138 | 17 | கேட்டறிந்து | கேட்டறிந்த |
| 143 | 18 | அமணிமாடக்கோயில் | மணிமாடக்கோயில் |
| 147 | 21 | கோவிந்த | கோவிந்த |
| 147 | 25 | குணசேகரன் | குணசேகரம் |
| 150 | 13 | புராணங்கள் | புராணங்களின் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 153 | 27 | இந்நூவில் | இந்நூலில் |
| 155 | 30 | புவிபுகழ் | புவிபுகழ் |
| 162 | 36 | படவம் | படலம் |
| 165 | 36 | சண்டீசர் | சண்டீசர் |
| 166 | 5 | ஞ்தமுனிவர் | சூதமுனிவர் |
| 166 | 11 | சந்திரசேன | சந்திரசேண |
| 170 | 9 | என்கிந்தை | என்சிந்தை |
| 170 | 19 | விட்டுணு | விட்டுணு |
| 171 | 34 | வரிவர் | வதிவர் |
| 172 | 32 | பாதினான்கு | பதினான்கு |
| 173 | 22 | ஜோதி | ஜோதிர் |
| 176 | 35 | ஒருபுதமே | ஒருபதமே |
| 180 | 4 | சருகாதி | சநகாதி |
| 182 | 13 | ஆசானை | ஆடானை |
| 182 | 16 | முனுப்பா | முறுப்பா |
| 182 | 19 | திகழ்ந்த | நிகழ்ந்த |
| 182 | 20 | கண்டேசுரன் | சண்டேசுரன் |
| 189 | 3 | தாமிருப்பது | நாமிருப்பது |
| 191 | 29 | கருதுசீர்த் | கருதுகீர்த் |
| 195 | 32 | இடமருது | இடைமருது |
| 199 | 22 | ருட்சாயணர் | ருட்சாயணர் |
| 204 | 26 | பகுதியும் | பகுதியுள் |
| 206 | 27 | அரசான | அரசாள |
| 207 | 32 | செல்கின்றார் | செய்கின்றார் |
| 207 | 35 | திருக்ருருகூர் | திருக்குருகூர் |
| 209 | 22 | ஆசியாற் | ஊசியாற் |
| 211 | 13 | மேற்கூறிவ | மேற்கூறிய |
| 211 | 26 | இன்னும் | இன்றும் |
| 214 | 4 | மலநிலை | மலதிலை |
| 214 | 16 | செய்தருளில் | செய்தருளிப் |
| 214 | 31 | கழுத்து | பழுத்து |
| 215 | 28 | அமைந்து | அமைத்து |
| 216 | 1 | யென்னுஞ் | யென்றுஞ் |
| 216 | 2 | துகறை | துகளற |
| 218 | 11 | ஆனந்கம் | ஆனந்தன் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 221 | 2 | திரிப்புத்தூர் | திருப்புத்தூர் |
| 223 | 33 | பிரபாவய | பிரபாவங் |
| 223 | 34 | காமசட்சி | காமாட்சி |
| 224 | 19 | வாலியூர் | வாவியூர் |
| 228 | 17 | பராமர | பராபர |
| 230 | 2 | தோற்றி | தோற்றிய |
| 230 | 11 | புகன்றதா இருக்கும் | புகன்றதங்கிருக்கும் |
| 231 | 23 | பிணிக்கின்ற | பிணிக்கீன்ற |
| 240 | 30 | நைமிசாண்ய | நைமிசாரண்ய |
| 255 | 22 | விருக்கும் | விருக்கும் |
| 256 | 33 | அளவீறந்த | அளவிறந்த |
| 258 | 3 | வளந்தரந் | வளந்தரத் |
| 258 | 29 | சிவனும் | சிவணும் |
| 260 | 8 | காநமொடு | காந்தமொடு |
| 260 | 17 | தனங்கு | தயங்கு |
| 261 | 21 | உயிர்விலை | உயர்விலை |
| 263 | 6 | பாவம்ஃது | பாவமஃது |
| 266 | 33 | மத்தலிஞ் | மத்தமுஞ் |
| 267 | 28 | எலிய | எளிய |
| 271 | 3 | அருளிலான் | மருளிலான் |
| 275 | 6 | நீல்மலர் | நீர்மலர் |
| 275 | 13 | சூசஸ்தலை | குசஸ்தலை |
| 280 | 2 | தோறும் | தோளும் |
| 281 | 8 | கந்த | சந்த |
| 281 | 21 | வில்லியனூர் | வில்லியனூர் |
| 286 | 3 | கொண்ட | கொண்டு |
| 290 | 33 | ருக்மிலி | ருக்மிணி |
| 296 | 21 | ளாளே | ளானே |
| 296 | 24 | கண்ணால் | கண்ணாத் |
| 297 | 11 | புலகாதிப | புளகாதிப |
| 298 | 1 | ஒழுகுறல் | ஒழுகுதல் |
| 298 | 20 | நத்திகேகரர் | நத்திகேசுரர் |
| 302 | 14 | பாடல்கள் | பாடல்கள் |
| 303 | 27 | என்னும் | என்றும் |
| 303 | 27 | தெல்வாயில் | நெல்வாயில் |
| 303 | 28 | கோயில் | கோயில் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 305 | 26 | லழிபட்டதரல் | வழிபட்டதால் |
| 308 | 34 | என் | என |
| 313 | 13 | நடை | நடன |
| 316 | 24 | திருமுருகுன்றத் | திருமுதுகுன்றத் |
| 318 | 3 | மாண்குழி | மாணிகுழி |
| 325 | 11 | ஒரானும் | ஓராறும் |
| 326 | 10 | உலந்தார் | உவந்தார் |
| 327 | 5 | திட்டி | நீட்டி |
| 335 | 3 | ஆண்டவரார் | ஆண்டவனார் |
| 336 | 1 | வெள்ளங் | வெள்ளாங் |
| 339 | 29 | நால்வன் | நால்வர் |
| 341 | 31 | உள்ளது | உள்ளன |
| 354 | 27 | றறிதுமென் | றறிந்துமென் |
| 360 | 7 | சிவனசலந் | சிவசைலந் |
| 360 | 21 | நாத | றாத |
| 362 | 33 | சிறப்பையும் | இறப்பையும் |
| 365 | 29 | வயர்க்கு | வளர்க்கு |
| 367 | 18 | மகிடாசுரனை | மகிடாசுரனை |
| 368 | 19 | தோப்பணி | தேர்ப்பணி |
| 370 | 31 | பழகொங்கு | மழகொங்கு |
| 372 | 29 | விரதர் | விரதர் |
| 376 | 11 | காரகாலேசர் | காலகாலேசர் |
| 376 | 25 | மணமுடி | மனமுடி |
| 379 | 17 | அறிதிறோம் | அறிகிறோம் |
| 380 | 32 | பிறைறகுடி | பிறைறகுடி |
| 381 | 22 | போந்துதன் | போந்துதண் |
| 386 | 5 | 925 | 928 |
| 387 | 23 | குறிப்பிடந் | குறிப்பிடப் |



தொண்டை வளநாட்டில் வடஆர்க்காடு மாவட்டம் வேலூரில் ஐம்பது ஆண்டுகளாக சைவம் மற்றும் வைணவ ஆன்றோர்ப் பெருமக்களையும், இயல், இசை, நாடகத் துறைகளைச் சார்ந்த சான்றோர்களையும் பெருமைப் படுத்தி, ஆன்மீகப் பணிகள் பல புரிந்திருந்த இசைப்பேராசிரியர் சங்கீத கலா விசாரத வேலூர் எம். இராமமூர்த்தி அவர்களின் இளைய மகனாகத் தோன்றியவர் டாக்டர் வே. இரா. மாதவன் எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி., அவர்கள்.

சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆறு ஆண்டுகள் சிறக்கப் பணிபுரிந்த பின்னர்த் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சுவடிப் புலத்தில் கடந்த ஒன்பது ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் இவர் அரிய தமிழ் இலக்கியச் சுவடிகளையும் மருத்துவச் சுவடிகளையும் ஆராய்ந்து பதிப்பித்து வெளியிட்டு வருகின்றார்.

தமிழ், அறிவியல், கல்வியியல், சுவடியியல், சித்த மருத்துவம், ஓவியம் போன்ற பல துறைகளிலும் ஈடுபாடு கொண்ட இவர் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியளித்திருப்பதுடன் முப்பதுக்கு மேற்பட்ட நூல்களையும் பதிப்பித்து வழங்கியுள்ளார்.

தமிழ் நூல் ஆய்வுப் பதிப்புப் பணிக்கு இவர் ஆற்றிவரும் தொண்டினைப் பாராட்டிய கோவை கௌமார மடாலய மகா சன்னிதானம் தவத்திரு சுந்தரசுவாமிகள் ‘கவிக்காவலர்’ என்னும் பட்டம் வழங்கி இவரைச் சிறப்பித்துள்ளார்கள்.

‘நற்பதிப்பாசிரியர்’ என்னும் சிறப்பினைப் பெற்றுள்ள இவருடைய நூல்களான கண் மருத்துவம் மற்றும் சித்திரக் கவிகள் ஆகிய இரண்டிற்கும் தமிழக அரசின் முதற்பரிசுகள் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சைவ, வைணவ நூல்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர், தமிழிலுள்ள தலபுராண நூல்களின் சிறப்பையும் தேவையையும் நன்கு ஆராய்ந்து இந்நூலை உருவாக்கியுள்ளார். இவ்வகையில் இதுவே முதன்மையானதாகும். இரண்டு பகுதிகளாக வெளிவரப் பெற்றுள்ள இந்நூல், திருக்கோயில் வழிபாட்டினை மேற்கொண்டொழுகும் ஆன்மீகப் பெருமக்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் ஒரு பெருவிருந்தாகும்.

—பரவை வெளியீட்டகத்தார்